யோகசுவாமிகள்

வாழ்க்கையும் வழிகாட்டுதலும்



சிவதொண்டன் நிலையம்,
செங்கலடி.

294.561
யோகசு

PUBLIC LIBRARY
JAFFNA

சிவமயம்

பொதுசன நூலகம்
-5 MAY 1998
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம்

யோகசுவாமிகள்

வாழ்க்கையும், வழிகாட்டுதலும்

140589

ஆக்கம்:
'சிவதொண்டர்'

சிவதொண்டன் நிலையம்
செங்கலடி - இலங்கை

முதற் பதிப்பு 1991

விலை: ரூபா 65/-

வெளியீடு:

அ. செல்லத்துரை,
இலதொண்டன் நிலையம்,
செங்கலடி.

அச்சுப்பதிப்பு:

கீன் அச்சகம்,
முனை வீதி,
மட்டக்களப்பு.

உள்ளுறை

பகுதி I

ஆசான் அருளால் ஆளப்பெற்றோர்

சற்குரு தரிசனத்துக்குப் பக்குவராதல் 1
குருவும் சீடரும் 11
ஞானதேசிகன் 47

பகுதி II

அப்பரும் அடியார்களும் 59

தாயினும் நல்ல தலைவர் 61
தோன்றுத் துணையாயிருந்தனன் தன்னடியோங்கட்கே 74
என்னைக் கணமும் பிரியா இறைவன் 88
மண்மேல் மலரடிவைத்தோன் காண்க 98
பழங்குடில் தோறும் எழுந்தருளிய பரனே 104
ஒழிவற நிறைந்த ஒருவர் 116
முழுதுமாய் நின்ற முதல்வன் 131
சென்றடையாத திருவுடையான் 141
என்னைப் பணிகொண்ட குருமாமணி 151
அன்பருக்கு அன்பன் 162
அவரவர்க்கு அதுஅதுவாய் இருக்கின்ற தெய்வம் 180
பொன்னும் மெய்ப்பொருளும் தருவான் 194
தன்னைத் தந்து ஆண்டு கொண்டான் 207

பகுதி III

ஞானத்தின் நிருவுருவும் நமையாண்ட அருள் உருவும் 223

ஒப்புர ஒழுகிநின்றுன் எங்கள் குருநாதன் 224
விண்ணும் மண்ணுமாகி நின்றுன் எங்கள் குருநாதன் 231
சித்தத்துள் நிகழுகின்றுன் எங்கள் குருநாதன் 237
தத்துவாதிதனனன் எங்கள் குருநாதன் 245

பகுதி IV

சிவதொண்டு 257

சிவதொண்டன் நிலையம் 259
திருவாய்மொழிகள் 267
சிவதொண்டன் இதழ் 277
நிருவடி வழிபாடு 283
சிவராத்திரி 287
பாதயாத்திரை 292
சைவத்திருமுறை 298
புராணபடனம் 304
சிவதொண்டு 307
சிவத்தியானம் 310
மகாவாக்கியங்கள் 314

ஓம் சிவம்

பதிப்புரை

சுவாமியினது ஆளுகைக்கு உட்பட்ட ஆரம்ப நாள்களிலேயே அவரது வரலாற்றை எழுதவேண்டும் எனும் எண்ணம் உதித்தது. இவ்வெண்ணத்துடன் வேண்டும் குறிப்புகளைச் சேகரித்து வந்ததும் உண்டு. அந்நாள்களில் ஒருநாள் சுவாமியோடு உரையாடியிருந்த அடியவர் ஒருவர்★ தான் சுவாமியினது வரலாற்றை எழுத விரும்புவதாகவும் அதற்கு வேண்டும் குறிப்புக்களைப்பெற எம் உதவியை நாடலாமோ எனவும்கேட்டார். சுவாமி அதற்குத் தலையசைத்துச்சம்மதம் அளித்தார் போலவே தோன்றியது. ஆனால் அவ்வடியவர் சென்றபின்னர் எம்மை நோக்கி ''எங்களைப்பற்றி எழுதக்கூடியவர்கள் இன்றும் இல்லை; என்றும் வரப் போவதும் இல்லை'' என்று அருளினர்கள். இவ்வாக்கு எமது ஊக்கத்தைத் தளரச் செய்தது. சுவாமியின் உண்மைநிலை உரை உணர்வு இறந்தநிலை அது எவராலும் ஏட்டில் எழுதிக் காட்டவொண்ணுதது.

ஆயினும் குருபரனின் ஆருமறியாமல் அந்தரங்கமாக அருள் சொரியும் பெருங்கருணைக்கு ஆளான அன்பரொருவர், அச்சிந்தனைக்கரிய சிவகுருவையே தமது சிந்தனைக் குரியவராகக் கொள்வதும், அப்பேச்சிறந்த குருமாமணியையே பேச்சுக்கு இலக்கிதமாகக் கொள்வதும் இயல்பேயன்றே! சிந்தனை நின்தனக்காக்கி, வாக்கு உன் மணிவார்த்தைக்காக்கி என்றுங்கு எமது சிந்தனையும், வாக்கும் சுவாமிக்கென்றே அமையச் சுவாமி திருவருள் பாலித்தார். குருநாதனைக் கண்ட உண்மை அன்பர்கள் ''காந்தங்கண்ட உளி போன்றும் தலையிற்றீப் பிடித்தவர் வேறு எதனையும் நாடாது நீரினைத்தேடியோடல் போன்றும், தலைவனைக் கண்டுழி தன்வயமிழக்கும் உழுவலன்புப் பதிவிரதை போன்றும்'' ஈர்ப்புண்டு செல்வர் எனக் கூறப்பெற்றிருக்கிறது. இவ்வாசகம் மெய்ம்மொழியே என்பதைச் சுவானுபவமாக

★ இலங்கைப் பல்கலைக்கழகத்து வரலாற்று விரிவுரையாளராக இருந்த திரு. S. மகேந்திரன் அவர்கள்.

உணர்ந்திருந்த சுவாமியினது அன்பர் பலரை நாம் அறி வோம். ஞானியரின் சந்நிதான மகிமைக்கு எடுத்துக்காட் டாகச் சுகஇருஷி★ யைக் கூறுவது வழக்கம். சுவாமியின் திருமுன்னிலை சுகஇருஷியின் சந்நிதான மகிமையை நினை ஊட்டுவதாயிருந்தது. வீரசாந்தம் தவழவீற்றிருக்கும் சுவா மியின் தெய்வீகப் பேரழகுக் கவிவுக்கு உட்பட்டோர் யாவ ரும் சித்தவிகாரக் கலக்கம் எதுவுமின்றி நிருமலமாயிருந்த னர். அடியவர் சிலர் தாம் குறையிரந்து வேண்டுதற்கென எண்ணியிருந்தவற்றையும், கேட்டுத் தெளிதற்கென ஆயத் தம் செய்து வந்த ஐயங்களையும் மறந்தவராய் சுவாமியின் திருமுன்னிலையில் உபசாந்தமுடன் இருந்துவிட்டுச் சென்ற னர். சுவாமியின் நிலை ஞானிகரம் எனக்கூறக்கூடிய உயர்ந் ததிலை. முண்டக மலர்ப்பாதம் கண்டேன் என்றும், சிட்டாய சிட்டறுக்கே திருவிருந்தானேனடி என்றும் பாடியுள்ளவாறு அவர் கடவுளைக் கண்டு களிப்பவராக இருந்தார். ஆயினும் அவர் 'அண்டர்கோன் இருப்பிடம் அறிந்துணர்ந்த ஞானிகள் கண்ட கோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே' என்றவாறும் ஒழுகவில்லை. அவர் திருவடிக்கலப்புறுவதற் குச் சிலவாரங்கள் முன்னரும் தாமாகவே பழம், பாக்கு, வெற்றிலை முதலிய பூசனைப் பொருட்களைக் கொணர்ந்து ''இவற்றைக் கொண்டு தையல்நாயகிக்கு பூசை செய்யுங் கள்'' என்று கூறினர். தமது மடியிலிருந்து போதுமளவு காசு எடுத்து நீட்டி 'இதனைக் கொண்டு நல்லூரானுக்கு அபிஷேகம் செய்யுங்கள்' என்று அருளினர். சுவாமிக்குச்

★ பிறவிச் சந்நியாசியாகிய சுகர் அம்பணக் கோலத்திலேயே திரியும் இயல்பினர். அவர் இளவயதினராக இருக்கும் போது ஒருநாள் குளக்கரைவழியே சென்றார். குளத்தில் நீராடிக்கொண்டிருந்த மங்கையர் எவ்வித மனவிகற்பமு மின்றி நீராடினர். ஆனால் பின்னல்வந்த வியாசமுனி வரைக்கண்டதும் நாணுற்றனர். விரைந்து கரையேறி ஆடையால் போர்த்து நின்றனர். வியாசர் இதுபற்றி வினவியபோது சுகமுனிவரைக் கண்டபோது தங்களுக்கு எவ்வித மாறுபாடான எண்ணமும் தோன்றவில்லை யெனக் கூறினர்.

சமய தத்துவச் சின்னம் ஏதும் சூட்டுவதாயின் அவரை ஒரு வைதிக சைவர் எனவும், சுத்தாத்துவித சைவசித்தாந்தி எனவும் அழைத்தற்குரிய தெளிவான அடையாளங்கள் அவரிடம் தெரிந்தன. ஆனால் அவர் சகலசமயத்துக்கும் சம்மதம் கொடுப்பவராயிருந்தார். சுசநாக வீரப்பெரும ★ முதலாய பௌத்த அறிஞர்கள் அவரைத் தரிசித்துச் சென்ற னர். நீதியரசர் அக்பர் போன்ற சூபிநெறியினர் சுவாமி யின் சிறந்த பக்தராயிருந்தனர். திருவாளர் ரும்ஸ்போதம் முதலாய மேற்கு நாட்டுக் கிறித்தவர்கள் சுவாமியின் சிட ராயினர். அவர்களையெல்லாம் அவரவர் மார்க்கம் சொல் லும் வழியினிற் செல்லுமாறு வழிப்படுத்தியதுடன், அவர் கள் போற்றும் வேதநூல்களிலுள்ள வாசகங்களைக் கொண் டே போதனையும் செய்தார். அவர் ஒரு சமயியாகவும், சமரசநன்னிலை பெற்றவராயும் இருந்ததுடன் சமயாதிதராக வும், தத்துவாதிதராகவும் திகழ்ந்தார். சுவாமிதமது குருபர னைச் 'சகதிசமயமில்லான் எங்கள் குருநாதன்' என்றும் 'தத்துவாதிதனென் எங்கள் குருநாதன்' என்றும் போற் றினர். இவ்வாசகங்கள் சுவாமிக்கும் பொருந்துவதே. அவ ரவர்க்கு அதுவதுவாயும் அப்பாலுமாய் நின்ற இத்தன்மை களைச் சிந்தை செய்யச் செய்யச் சுவாமி மேல்வரும் சிவஞான சித்தியார் பாடலுக்கோர் விளக்கமாகத் திகழ்ந்தார் என் பதை உணர முடிந்தது:-

'அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய்வேறும் குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங் கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்பனுகிச் செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்'

சுவாமியிடம் பட்டினத்தடிகளின் பூரணதுறவும், கண்ணப் பன் ஒப்பதோர் அன்பும், சம்பந்தப்பெருமானின் ஞான வீறும், திருமூலரின் திறங்கொள் யோகசித்தியும் ஒருங்கே அமைந்திருந்தன. அவர் திருமுருகாற்றுப் படை சித்திரிக் கும் தமிழ் முனிவர் போன்றும், உபநிடதங்களை மொழிந்த ஈரநெஞ்சினரான இருடிகள் போன்றும் தோன்றினர். அவர் நீங்காத நின்மலநிட்டையினராயிருந்ததுடன் குற்றம்

★ Homage to Yogaswamy எனும் நூலை எழுதியவர்.

உணர்ந்திருந்த சுவாமியினது அன்பர் பலரை நாம் அறி வோம். ஞானியரின் சந்நிதான மகிமைக்கு எடுத்துக்காட் டாகச் சுகஇருஷி★ யைக் கூறுவது வழக்கம். சுவாமியின் திருமுன்னிலை சுகஇருஷியின் சந்நிதான மகிமையை நினை வூட்டுவதாயிருந்தது. வீரசாந்தம் தவளவீற்றிருக்கும் சுவா மியின் தெய்வீகப் பேரலைக் கவிவுக்கு உட்பட்டோர் யாவ ரும் சித்தவிகாரக் கலக்கம் எதுவுமின்றி நிருமலமாயிருந்த னர். அடியவர் சிலர் தாம் குறையிரந்து வேண்டுதற்கென எண்ணியிருந்தவற்றையும், கேட்டுத் தெளிதற்கென ஆயத் தம் செய்து வந்த ஐயங்களையும் மறந்தவராய் சுவாமியின் திருமுன்னிலையில் உபசாந்தமுடன் இருந்துவிட்டுச் சென்ற னர். சுவாமியின் நிலை ஞானசிகரம் எனக்கூறக்கூடிய உயர்ந் தநிலை. முண்டக மலர்ப்பாதம் கண்டேன் என்றும், சிட்டாய சிட்டருங்கே திருவிருந்தானெனடி என்றும் பாடியுள்ளவாறு அவர் கடவுளைக் கண்டு களிப்பவராக இருந்தார். ஆயினும் அவர் 'அண்டர்கோன் இருப்பிடம் அறிந்துணர்ந்த ஞானிகள் கண்ட கோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே' என்றவாறும் ஒழுகவில்லை. அவர் திருவடிக்கலப்புறுவதற் குச் சிலவாரங்கள் முன்னரும் தாமாகவே பழம், பாக்கு, வெற்றிலை முதலிய பூசனைப் பொருட்களைக் கொணர்ந்து ''இவற்றைக் கொண்டு தையல்நாயகிக்கு பூசை செய்யுங் கள்'' என்று கூறினர். தமது மடியிலிருந்து போதுமளவு காசு எடுத்து நீட்டி 'இதனைக் கொண்டு நல்லூரானுக்கு அபிஷேகம் செய்யுங்கள்' என்று அருளினர். சுவாமிக்குச்

★ பிறவிச் சந்நியாசியாகிய சுகர் அம்பணக் கோலத்திலேயே திரியும் இயல்பினர். அவர் இளவயதினராக இருக்கும் போது ஒருநாள் குளக்கரைவழியே சென்றார். குளத்தில் நீராடிக்கொண்டிருந்த மங்கையர் எவ்வித மனவிகற்பமு மின்றி நீராடினர். ஆனால் பின்னல்வந்த வியாசமுனி வரைக்கண்டதும் நாணுற்றனர். விரைந்து கரையேறி ஆடையால் போர்த்து நின்றனர். வியாசர் இதுபற்றி வினவியபோது சுகமுனிவரைக் கண்டபோது தங்களுக்கு எவ்வித மாறுபாடான எண்ணமும் தோன்றவில்லை யெனக் கூறினர்.

சமய தத்துவச் சின்னம் ஏதும் சூட்டுவதாயின் அவரை ஒரு வைதிக சைவர் எனவும், சுத்தாத்துவித சைவசித்தாந்தி எனவும் அழைத்தற்குரிய தெளிவான அடையாளங்கள் அவரிடம் தெரிந்தன. ஆனால் அவர் சகலசமயத்துக்கும் சம்மதம் கொடுப்பவராயிருந்தார். சுசநாக வீரப்பெரும ★ முதலாய பௌத்த அறிஞர்கள் அவரைத் தரிசித்துச் சென்ற னர். நீதியரசர் அக்பர் போன்ற சூபிநெறியினர் சுவாமி யின் சிறந்த பக்தராயிருந்தனர். திருவாளர் ரும்ஸ்போதம் முதலாய மேற்கு நாட்டுக் கிறித்தவர்கள் சுவாமியின் சிட ராயினர். அவர்களையெல்லாம் அவரவர் மார்க்கம் சொல் லும் வழியினிற் செல்லுமாறு வழிப்படுத்தியதுடன், அவர் கள் போற்றும் வேதநூல்களிலுள்ள வாசகங்களைக் கொண் டே போதனையும் செய்தார். அவர் ஒரு சமயியாகவும், சமரசநன்னிலை பெற்றவராயும் இருந்ததுடன் சமயாதீதராக வும், தத்துவாதீதராகவும் திகழ்ந்தார். சுவாமிதமது குருபர னைச் 'சகதிசமயமில்லான் எங்கள் குருநாதன்' என்றும் 'தத்துவாதீதனான எங்கள் குருநாதன்' என்றும் போற் றினர். இவ்வாசகங்கள் சுவாமிக்கும் பொருந்துவதே. அவ ரவர்க்கு அதுவதுவாயும் அப்பாலுமாய் நின்ற இத்தன்மை களைச் சிந்தை செய்யச் செய்யச் சுவாமி மேல்வரும் சிவஞான சித்தியார் பாடலுக்கோர் விளக்கமாகத் திகழ்ந்தார் என் பதை உணர முடிந்தது:-

'அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய்வேறு குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங் கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்பனுகிச் செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்'

சுவாமியிடம் பட்டினத்தடிகளின் பூரணதுறவும், கண்ணப் பன் ஒப்பதோர் அன்பும், சம்பந்தப்பெருமானின் ஞான வீறும், திருமூலரின் திறங்கொள் யோகசித்தியும் ஒருங்கே அமைந்திருந்தன. அவர் திருமுருகாற்றுப் படை சித்திரிக் கும் தமிழ் முனிவர் போன்றும், உபநிடதங்களை மொழிந்த ஈரநெஞ்சினரான இருடிகள் போன்றும் தோன்றினர். அவர் நீங்காத நின்மலநிட்டையினராயிருந்ததுடன் குற்றம்

★ Homage to Yogaswamy எனும் நூலை எழுதியவர்.

சிறிதும் இல்லாத நற்றவயோகராய்த் தருமநெறி பிசகாது உலகோடு ஒட்டி வாழ்பவராயும் திகழ்ந்தார். இஃது சகச ஸ்திதியினரான ஞானியரது இயல்பாகும். இத்தகைய சுவாமியினது எண்ணில் பல்குணங்கள் சிந்தனையை வந்து ருக்கும் சீர்மையவாயிருந்தன.

சுவாமி எம்மை ஆட்கொண்ட நாள் முதலாய்த் தம் மோடு உடனுறையும் பாக்கியத்தை ஈந்தனர். அந்நாள்க ளிலே பொருந்திய போதெல்லாம் செல்லப்பர் தமக்கு ஞானவித்தை புகட்டிய முறையை நேசத்தோடு நினைவு கூர்வார். அவற்றை எமக்கோர் படிப்பினையாகவே அருளி னராதலால் அவையெல்லாம் நெஞ்சிற் பதிந்தன. அவற் றிலே குருபீட முறைமை பற்றிய நுட்பங்கள் செறிந்திருந் தன. குருநெறிச் செல்லும் ஆன்மீகப்பயணி ஒருவரின் அடிச்சுவடுகள் சிலவும் தெளிவாய்த் தெரிந்தன. அவற் றைக் குறித்துவைப்பது வீட்டு நெறியில் நாட்டங்கொண்டு சாதனபயிலும் சிவதொண்டர்க்குச் சிறந்த வழித்துணையா குமே எனும் எண்ணம் எம்முள்ளத்தில் இடையிடையே தோன்றியது.

யாம் சில ஆண்டுகள் சிவதொண்டன் இதழின் பொறுப்புக்களையும் கவனிக்கவேண்டியிருந்தது. அக்காலத் திலே சுவாமியின் அன்பர் சிலர் தமது சுவாமி நினை வுகளைக் குறித்து அனுப்பினர். அவை சிவதொண்டன் இதழுக்கு இயைந்த விடயங்களாயிருந்தன. ஆகவே சுவாமி சரிதப்பகுதிகள் சில வெளியாவதற்கு ஓரியல்பான சூழல் வாய்த்தது. அக்குறிப்புகள் ''தோன்றாத்துணையாமி ருந்தனன் தன்னடியோங்கட்கே'', ''நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' எனும் திருமுறைவாசகங்களைத் தலை யங்கமாகச் சூடிச் சுவாமியின் திருவடிக் கலப்புக்கு முன் னமேயே சிவதொண்டன் இதழில் மலர்ந்தன. இவற்றைப் படித்து நயந்த சுவாமியின் பழைய அடியார் சிலர் தம்மி டமிருந்த நினைவேடுகளையும் எமக்குத்தந்தனர். அவ்வடி யார்கள் தாம் பக்குவமாய்ப் பேணிவந்த நினைவேடுகளை

எம்மிடம் ஒப்படைப்பதை எவ்வாறு தங்கடன் என எண் ணினரோ, அவ்வாறே அவற்றை வெளியீடு செய்வது எங் கடன் எனும் ஓர் எண்ணமுந் தோன்றியது. அன்றியும் அடியவர் பலரதும் நினைவுக்குறிப்புகளை ஒருங்கு சேர்த்து நோக்கும் போது ஒரு சிறப்பியல்பு தெரியலாயிற்று. அஃது என்னெனிற் கூறுதும்:- சுவாமி எத்தகையோராலும் முழு மையாகத் தரிசித்தற்கியலாத நோக்கரிய நோக்கினர். அவரை ஒவ்வொருவரும் தத்தம் பார்வை சென்ற அள வுக்கே பார்த்தனர். ஆயினும் ஒருவர் தரிசிக்கத் தவறிய இயல்பு இன்னெருவர் தரிசனத்தில் நிறைவு செய்யப்படுவ தால் ஒருவரின் நீண்ட நூலினும் பலரின் நினைவுக்குறிப் புக்கள் பயன்மிகுந்தன என்பதே அஃது. ஆதலால் இத் நினைவுக்குறிப்புக்களை ஒருங்கு திரட்டி 'அப்பரும் அடியார் களும்' எனும் தொகுதியாக வெளியிடுதல் ஒரு நற்கருமமாகும் எனும் எண்ணம் தோன்றியது.

சுவாமி பார்த்தால் உலகத்தவர் போன்றே திரிந்தார். ஆனால் ''அங்கும் இங்கும் எங்கும் நான், அதையறியும் விச ரன் நான்'' எனவும் ''அண்டமும் பிண்டமு மாயிருந் தேனே'' எனவும் கூறியுள்ளவாறு அவர் விண்ணைப் போன்ற வியாபகமுடையவர். சுவாமியோடு கூடிவாழ்ந்த காலத்தில் நாம்பெற்ற அனுபவங்கள் அவரைச் ''சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வம்'' என நம்பச்செய்தன. அவ ரது நிச்சொரூபமோ இவற்றையெல்லாம் அற்பமென எண் ணுமளவு நன்மோன நிறைவா யிருந்தது. அவர் தானன தன்னிலையில் தனியே இருந்தார். அவரது சோதிசொரூபம்

தேவருந் தேடியே தேராத் திருவடியை
ஏவருங் காணவே இவ்வுலகில் - பூவார்
கொழும்புத் துறையில் குருவாக வந்து
தொழுதுய்யச் செய்தாய் துணை, என்று போற்றுதல் செய்யும்படியாயிருந்தது. இதில் வியப்பதற் கொன்றுமில்லை. ''குருவே சிவம் என கூறினன் நந்தி''. சுவாமி மூலியிலி ருந்த எம்மை முற்றத்தில் விட்ட சாலப் பெரியர். அவர் சொரிந்த கைமாறில்லாத பெருங்கருணைக்குச் செய்யும் சிறியதொரு காணிக்கை அவரது நிசசொரூபத்தைப் பல

ரும் அறியுமாறு குறிப்புணர்த்துவதே எனும் ஓர் எண்ணமும் எழலாயிற்று.

சிவதொண்டன் நிலையம் நிறுவப்பெற்று ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலத்தை எட்டிக் கொண்டிருக்கிறது. இந்நீண்டகாலத்திலே, சுவாமி ஆற்றிய சிவதொண்டின் பொருளுணர்ந்து திட்டவட்டமான ஒழுங்கு அமைப்பைக் கொண்ட சீரியநடைமுறைகள் சிலவற்றைச் சிவதொண்டன் நிலையம் பேணிவருகிறது. இந்நடைமுறைகள் காலநீட்சியால் மரபுகளாய்த் தெளிவு பெற்றுள்ளன. ஆதலால் சுவாமி புரிந்த சிவதொண்டின் உள்ளுறைப் பொருள், நடைமுறை என்பனபற்றி மேற்போக்காகவேனும் எடுத்துரைத்தலும் எமது பணியாகிறது.

இவையெல்லாம் சேர ஆசான் அருளால் ஆசானுயினர், அப்பனும் அடியார்களும், ஞானத்தின் திருவுருவும் நமையாண்ட அருள் உருவும், சிவதொண்டு எனும் நான்கு பகுதிகளைக் கொண்டு இந்நூல் இயல்வதாயிற்று. இச்சிவப்பணியிலே வடக்கிலும், கிழக்கிலுமுள்ள இரு சிவதொண்டன் நிலையங்களிலும் சாதனபயிலும் தொண்டர் சிலரும் பங்கு கொண்டனர். அவர்கள் சுவாமி வரலாற்றில் பயில்வதைத் தமக்கோர் ஞானசாதனையாகவே கொண்டனர். இதனால் சுவாமி வாக்குப்பற்றிய அச்சத்தோடேயே இந்நூலை எழுதி வெளியிடுதற்கான வாய்ப்பினைத் திருவருள் கூட்டி வைத்துளது.

இந்நூலின் அச்சுப்பதிவுச் செலவின் முழுத்தொகையையும் மனமுவந்தளித்த வைத்தியகலாநிதி. செல்வி. ஜெயதேவி முத்துலிங்கசுவாமி அவர்களுக்கும், எஞ்சியவேறு செலவினைத் தந்துதவிய ஏனைய சிவனடியார்க்கும் அடியேன் நன்றியுடையேன். நூலின் விற்பனை வருமதியாவும் சிவதொண்டன் சபைக்கே உரியதாகும்.

உள்நாட்டமைதியின்மை, இடைக்கால மின்வெட்டு, அச்சகங்கள் நிலையாக இயங்கமுடியாமை, அஞ்சல் நிலைய

ஒழுங்கீனங்கள், போக்குவரத்து வசதிக்குறைவு, மனவமைதியின்மை போன்ற மேலும்பல தடைகள் நிறைந்த இன்றைய சூழ்நிலையில், இப்படி ஒருநூல் வெளிவரத் துணையாயிருந்த திருவருளுக்கும், குருவருளுக்கும், ஒத்துழைத்து செவ்வனே சரவை பார்க்க முடியாதவிடத்தும் இயன்ற அளவு திருத்தமாக அச்சிட்டுத் தந்த மட்டுநகர் கீன் அச்சக உரிமையாளருக்கும், ஊழியர்களுக்கும் எமது உளங்கனிந்த தன்றி உரித்தாகுக.

''நன்றியை நாங்கள் மறந்திட மாட்டோம்
நாடெங்கும் சென்று சிவதொண்டு செய்வோம்''

''குற்றங் களைந்து குணம்பெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்''.

சிவதொண்டன் நிலையம், ''சிவத்தியானி.''
செங்கலடி.





பகுதி I

ஆசான் அருளால் ஆசானுயினர்

சிவயோக சுவாமிகளது நெறி குருநெறி. செல்லப்பதேசிகர் அவரது ஞானகுரு. செல்லப் பதேசிகரைச் சிவயோக சுவாமிகள் இன்ப சாகர மோனம் எனும் வடிவாகக்கண்டார். மோன முனிவரான செல்லப்பர் சிவயோக சுவாமிகளைச் சாலம் செய்து தன் வசமாக்கி னர். சதுர்வித உபாயத்தாலும் தாளுகச்செய் தனர். ஆசான் அருளால் ஆசானுகிய சிவ யோகக்குருமணி அரைநூற்றாண்டு காலமாக இச்சிவ பூமியிலே ஞானதேசிகராய் நடமாடி னர்.



1 சற்குரு தரிசனத்துக்குப் பக்குவராதல்

இளமை

யோகசுவாமிகள் தம்மு குருநாதரைத் தரிசித்து ஞான முதிர்ச்சி பெறுவதன் முன்னர் எங்கே வளர்ந்தார்? எப்படி வாழ்ந்தார்? என்பன போன்ற விடயங்களை நிரல்பட எழுதக்கூடிய ஆற்றல் எவரிடத்திலும் இல்லை. சுவாமிகளிடம் இவ்விடயங்களை நேர்முகமாகக் கேட்கக் கூடியதாகவும் இருக்கவில்லை. ஏனெனில் அவர்களோபெருந்துறவிகளாவார். அநுபூதி பெறுத துறவிகளிடத்தும் அவர்கள் பூர்வாச்சிரம விடயங்களைக் கேட்பது இந்துக்களாகிய எமக்குப் பண்பா காமை யாவரும் அறிவர். இஃது இவ்வாறுயின் உண்மை ஞானமே வடிவாக விளங்கிய மெய்ஞ்ஞானத்துறவியாகிய சுவாமிகளிடம் அவர் பூர்வாச்சிரம் வரலாற்றினை யார்தான் விபரமாகக் கேட்க முடியும்!

நேரே தரிசனத்துக்குச் செல்பவர்களெல்லாரும் சுவாமி களைச் சிவமாகவே பாவித்தும், பரவியும், பணிந்தும் வந் தார்கள். அப்படியாயிருக்கையில் அவர்கள் சுவாமிகளைச் சாதாரண மனிதனுகநினைக்கமாட்டார்களன்றே! சாதாரண மனிதனுக நினைப்பவர்கள் சுவாமிகளின் தரிசனத்துக்குச் செல்லவும் மாட்டார்கள். சுவாமிகளின் சந்நிதானத்தில் இவ் வகையான வினுக்கள் எவருக்கும் எழுந்ததில்லை. சுவாமிக ளின் சமாதியின் பின்பே அவர்கள் வரலாற்றை வரைய முற் படும் யாவரும் இவற்றை ஆராய்கின்றனர். அவ்வாராய்ச் சிகளெல்லாம் இங்கும் அங்குமாகச் சேர்த்துப் பொருத்திய தொடர்பேயன்றி, எதுவும் உண்மைத் தொடர்பாய் இருக்க முடியாது.

ஒருவர் சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் சதாசிவம் என்பர். இன்னெருவர் யோகநாதன் என்பர். வேறொருவர்

தம்பிஐயா என்பர். இவ்வாறு ஒவ்வொருவரும் தாம்தாம் கேள்விப் பட்டதற்குத்தகக் கூறினுரேயன்றி, எவராவது சுவாமிகளிடத்து நேர்முகமாகக் கேட்டறிந்ததை நாமறி யோம். 'வளர்த்தமாமியார் இப்படிக்கூறினர்', கூடித்திரிந்த விதானையார் இப்படிக் கூறினர்' என்றறிகிருமேயன்றி, உண்மையைத் திட்டவட்டமாய்க் கூறுவார் எவருமிலர். இந் நிலையில் சுவாமிகளின் சிறுவயதுக்கால வரலாறு இருள் சூழ்ந்த ஒன்றுகவே என்றும் இருக்கும். எனினும் சுவாமிகள் கூறியதாக நிலவும் சிலகதைகளிலிருந்து அவர்கள் பூர்வாச் சிரமத்தை மேல்வருமாறு திரட்டிக் கூறலாம்.

வளம் நிறைந்த ஈழத்திருநாட்டின் வடபகுதியில் யாழ்ப்பாணம் எனும் சிறப்புடையதொரு நகரம் உளது. இந்நகரின் எல்லைக்குட்பட்டதாகக் கொழும்புத்துறை என் னும் ஓர் ஊர் உளது. இவ்வூரின் பழங்குடிமக்கள் சைவப் பண்பில் சாலச்சிறந்து விளங்கினர். இவ்வூரே பல்லாண்டு களாக எங்கள் குருநாதனின் வசிப்பிடமாகப் பொலிந்து விளங்கியது. தொன்மைமிக்க கந்தகோட்டம் விளங்கும் மாவிட்டபுரத்தில் தவத்திரு சின்னச்சிப்பிள்ளை என்ற திருப் பெயரையுடைய இவரது அன்னையார் பிறந்தார். அவர்களின் சந்ததி உறவினர் இன்றும் அக்கிராமத்திலுள்ளனர். அவர் களுள் அண்மையிற் காலஞ் சென்ற யமன் அப்புக்குட்டி என்பவரைத் தமது மாமனர் என்று சுவாமிகள் கூறியது எமக்குத் தெரியும். தாயாரின் பிறப்பிடமாகிய மாவிட்ட புரமே சுவாமிகளினதும் பிறப்பிடமாகும்.

இவர்களது தந்தையார் பெயர் அம்பலவாணர் என்ப தாகும். தந்தையார் பிறப்பிடமும் மாவிட்டபுரத்துக்கு அண்மையிலுளதாகும் என்பர் சிலர். உண்மை யாதென இற்றை வரை அறிகிலோம். என்றுவது அறியவருமோ என்பதும் ஐயத்துக்கிடமேயாம். இஃது அத்தியாவசியமுமா காது. இவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி விரிவாக அறி கிலோம். இவர்கள் மஸ்கேலியாப் பகுதியில் வியாபாரம் செய்து வாழ்ந்தமையால் கொழும்புத்துறையிலுள்ளார்க்கும் ஏனையோர்க்கும் இவர்களைப்பற்றி ஏதும் விரிவாக அறிந்

திருக்க முடியவில்லைப் போலும். சுவாமிகளின் சிறிய தகப்பனர் பெயர் சின்னையர். இவர் பிற்காலத்தில் கத் தோலிக்க கிறித்தவமதத்தைத் தழுவியிருந்தார். அம்பல வாணர் சகோதரியாகிய முத்தும்பிள்ளை அம்மையாரிடமே சுவாமிகள் தமது சிறு பிராயத்தில் வளர்ந்து வந்தார். தகப்பனர் முதுசொமாகத் தமக்குச் சுன்னகம் பூதவராயர் கோவிலடியில் ஒரு பனை வளவு இருப்பதாகச் சுவாமிகள் ஒரு முறை எமக்குக் கூறியுள்ளார். தந்தையாருடன் இவர் சிறுவயதில் கொழும்புத்துறையிலேயே வசித்து வந்தார். கொழும்புத்துறையிலுள்ள துண்டி என்று அழைக்கப்படும் பகுதியில் வாழ்ந்து வந்தார். அவர்கள் வளவில் குலதெய்வ மாக ஒரு வைரவ மூர்த்தியை வைத்து வணங்கி வந்தனர். பின்சுவாமிகளின் உறவினர் துண்டியை விட்டு கச்சேரி யடிக்கு மாறிவிட்டார்கள். காரணம் யாதென அறிகிலோம். அப்படி மாறிய காலத்தில் அந்த வைரவ மூர்த்தியையும் எடுத்து வந்து விட்டார்கள். துண்டியில் சுவாமிகளின் பௌவனகாலம் கழிந்தது. அக்காலத்தில் தாங்கள் துண்டி வெளியில் விளையாடியதாகக் கூறினர்கள். ஒருமுறை சுவாமி கள் மற்றுஞ் சிறுவருடன் விளையாடிக் கொண்டிருக்கையில் யாரோ ஒரு கரையூர்வாசி இவர்களை அதட்டிப் பயமுறுத்தி னராம். அப்போது சுவாமிகள் பக்கத்தே நின்றவோர் பூவரசமரத்தில் கம்பு பிடுங்கி அவரைத் துரத்திக் கொண்டு போய் வெகு தூரத்தில் விட்டுவந்ததாகக் கூறினர்கள். அக்காலத்தில் சுவாமிகளை அம்பலவாணர் மகனெனவே அறிமுகம் செய்வார்களாம்.

மிகச் சிறுவயதிலேயே அன்னையார் சிவபதம் அடைந்து விட்டார் என்பர். ஆயினும் சுவாமிகள் எமக்கும் வேறு பல அன்பர்க்கும் அடிக்கடி கூறிய மேல்வரும் சம்பவங் களிலிருந்து ஏறத்தாழ இவரது பத்தாவது வயது வரை யாவது அன்னையார் சீவித்திருக்கின்றார் என ஊகிக்க இட முண்டு. ஒரு நாள் தாம் சாப்பிட்ட சட்டுவத்துடன் சோற்றினைக் கொண்டு போய் வெளியில் வீசியபோது தம் அன்னை ''நீ பிச்சையெடுத்துத் தான் சீவிப்பாய்'' என்று கூறியபடி என்றும் ஒரு பிச்சைக்காரனுகவே தாம் வாழ்ந்து

வருவதை மிகவும் இறும்பூதுகொண்டு சொல்லி மகிழ்வார். ''தாய் சொல்லைத் தட்டாதே'' எனும் ஔவை மொழியை அடிக்கடி உணர்த்தவும் இச்சம்பவத்தைக் கூறுவார் அன்றியும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிற் தேர்த் திருவிழாவுக்குத் தமது அன்னையார் கையிற் பிடித்துக் கூட்டிச் சென்றதாகவும், ஒரு முறை நல்லூர் முருகன் கோயிற்றிரு விழாவுக்குத் தாயாருடன் செல்லும் பொழுது இருபகுதி மக்கள் கலகம் செய்து கல்லெறிபட்டதாகவும், தமது காலொன்றில் ஒரு கல்லுப்பட்டுத் தாம் வருந்தியதாகவும் கூறியுள்ளார்.

தமது அன்பர்களுக்குக் கதையோடு கதையாகக் கூறிய வற்றிலிருந்து இவர் பிறந்த காலத்தை ,ஆங்கீரசவருடம் வைகாசி மாதம் பதினெட்டாந் தேதி புதன்கிழமை காலை அவிட்ட நட்சத்திரக் கடைக்கூறு நாலாம் பாதம் எனத் தமிழ்ப்பஞ்சாங்கக் கணக்கின்படி ஒருவாறு ஊகித்துக் கணக் கிட்டிருக்கின்றனர். இது ஆங்கிலேயர் கணக்கின்படி 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29ம் தேதிக்குச் சரியாகும். இக் குறிப்பின்படி சந்நியாச யோகமே விசேட பலனுகும். எனவே அம்பலவாணருக்கும் சின்னச்சிப்பிள்ளை அம்மையாருக்கும் அருந்தவக் குழந்தையாக 1872ம் ஆண்டு யோகநாதன் அவதரித்தார் எனநாம் நிச்சயம் செய்யலாம்

கல்வி

சுவாமிகள் கல்விகற்றபாடசாலை கொழும்புத்துறையில் அந்நாளில் இருந்த கத்தோலிக்கப்பாதிரிமாரின் ஒருநிறுவன மாகும். அக்காலத்தில் கிறித்தவப் பாடசாலைகளில் சேர்க் கும் சைவப்பிள்ளைகளுக்கும் ஒரு கிறித்தவப் பெயரை முன்வைத்தே பாடசாலைப்பதிவேடுகளில் பதியும் வழக்கம் இருந்தது. அதற்கியையப் பாடசாலையில் ஜோன் எனும் நாமம் இடப்பட்டதாக அறிகிறோம். அதற்குமுன் அவர் களின் பிள்ளைத்திருநாமம் எது என்பதை அறிவார் எவ ரும் ஈண்டிங்கில்லை . பாடசாலையில் படிக்கும் போதும் மிகுந்த துடிப்பும், வீரமும் விளங்கிய ஒரு பாலகனுகவே

காணப்பட்டார். ஆரம்ப பாடசாலைப்படிப்பின்பின் சிறியதந் தையார் உதவியுடன் யாழ்ப்பாணம் சம்பத்தரிசிரியார் கலா சாலையில் (St. patricks, College) சேர்ந்து ஆங்கிலமும், தமிழும் படித்தார். இத்துடன் அவரது பாடசாலை வாழ்வு நிறைவுற்றது.

இயற்கையழகும் இறை நினைவும்

பாடசாலைப்படிப்பு முடிந்ததும் தந்தையார் மைந்தனை அழைத்துக்கொண்டு தாம் தொழில் செய்யும் இடமான மஸ்கேலியாவுக்குச் சென்றனர். அங்கே மைந்தன் தம்மோ டிருந்து தொழில் பயில வேண்டுமென்பதே தந்தையின் விருப்பமாயிருந்தது. ஆனல் மைந்தரோ பசுமையும், குளிர் மையும் நிறைந்த மலைப்பிரதேச அழகிலே மனம் பறிகொ டுப்பவராயிருந்தார். நுண்துமி சிந்தும் வேளைகளிலும் சட் டையும் அணியாமல் பிடித்தமான ஓரிடத்து அமர்ந்து வெ றித்த பார்வையினராயிருப்பார். பலநிறமான பாக்குக் லைகளுடன் நீண்டு வளர்ந்து நிற்கும் கமுகமரங்களில் அவர் நெடுமாலைக்கண்டனரோ? பட்சிகளின் தீங்குரலினிமையில் கண்ணனின் புல்லாங்குழலிசை நினைவு வந்ததோ? மலைச் சாரலில் கிளைத்தோங்கி நிற்கும் தனிமரம், ஆடும்மயிலை யும் அம்மயிலிலேறிவரும் குன்றுதோறுடும் குமரனையும் ஞா பகமூட்டியதோ? இருந்தபடியே இருக்கும் மலைகளும், அம் மலைகளில் தவழ்ந்து விளையாடும் மேகமும் பேசும் மௌன மொழியின் சுகம் புரிந்ததோ! எழிலார்ந்த இயற்கைக்கோ லங்களாய்ப் பொலிந்து தோன்றுவது இறைவனின் இன் னருளேயென்பதை நுணுக்கமாய்க் கண்டனரோ? இவ்வாறு தனிமையில் இட்டகால் இட்டகையனை அமர்ந்து பேயே போன்றிருக்கும் இயல்பு,இலாபத்திற் கண்ணுயிருக்கும் வியா பாரத்தொழிலுக்கு ஏற்றதல்ல என்பதைத் தந்தையாரறி வார். ஆதலால் மைந்தனை மஸ்கேலியாவிலிருந்து கொழும் புத்துறைக்கு அனுப்பிவைத்தார்.

வணக்கம் மணக்கும் வேலை

கொழும்புத்துறையைச் சேர்ந்த சிறிதுகாலத்தில் கிளி

நொச்சியிலே இரணமடுக்குளத் திட்டத்தில் வேலைக்குருவிக் களஞ்சியப் பாதுகாவலர்எனும் உத்தியோகம் அவருக்குக் கிடைத்தது. இவ்வுத்தியோகம் அவருக்கு மிகவும் உவப் பாய் அமைந்தது. காலையில் வேலைத் தலத்திற்குச் செல் வோருக்கு வேண்டிய கருவிகளை எடுத்துக் கொடுப்பதும் மாலையில் அவற்றைப் பெற்றுப் பக்குவமாக வைப்பதும் ஆய இவையே அத்தொழிலின் வேலைகள். எனவே இது ஒரு சோலியற்ற ஆறுதலான தொழில். குடிமனைகள் குறைந்த தும் மயிலாலுஞ் சோலைகளையுடையதுமான ஆரணியச் சூழ லிலே வாய்த்த இந்த ஆறுதலான தொழில் அவர் எண் ணிய வண்ணம் வாழ ஏற்றதாயமைந்தது. அவர் தமது கடமையைக் கவனமாகச் செய்தார். தம்முடைய உத்தி யோகக் கடமைக்கு மேலாக அலுவலகச் சூழலிலே கனி தரும் மரங்களை நட்டு கவனமாகப் பராமரித்து வந்தார். அவ்வாறு அவர் பராமரித்து வளர்த்த மாமரம் ஒன்று இன் றும் 'சாமியார் மரம்' எனும் பெயருடன் கிளிநொச்சியி லுள்ளது. (இதன் வித்துக்களின் மூளைத்த கன்றுகளில் ஒன்று வளர்ந்து, கிழக்கே செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் நின்று கனி உதவுகின்றது. கிளிநொச்சியில் அந்த மாமரம் இருக்கும் காணியும் சிவதொண்டன் சபையாரின் உபயோ கத்துக்கென உறுதி முடிக்கப்பட்டுள்ளது). அவர் தம்மோடு பணிபுரிபவர்களுடன் அன்பார்ந்த உள்ளத்தினராய்ச் சந் தோஷமாகப் பழகினர். பண்போடு வாத்தையாடி னர். பணப்பற்றுச் சிறிதும் இல்லாதவராயிருந்தனர். தாம் அந்த அந்த மாதச் சம்பளத்தை அந்த அந்த மாதங் களிலேயே செலவழித்துவிட்டு அடுத்த மாதத்துக்கென எது வும் சேகரியாதிருக்கும் பழக்கத்தைப் பேணி வந்ததாகப் பின்னர் தன் அன்பர்களிடம் கூறினர். தமக்கு வேண்டியது போக மீதியைக் கோயில் கருமங்களுக்கும், உற்றார் உறவி னருக்கும், ஏழை எளியவர்க்கும் கொடுத்து வந்த னர். அவரது சொல்லும் செயலும் அவருள்ளே நிறைந்து கிடக்கும் அதிமானுடத்தைப் பறை சாற்றி நின்றமையை அவரோடு பழகியோர் பலரும் அறிந்தனர். அவர்கள் இயல் பாகவே சுவாமிகளை உயர் நிலையில் வைத்து மிகுந்த மரியா

தையோடு பழகினர். பின்னாளில் துறவு மனப்பான்மை முதிர்ந்து உத்தியோகத்தினின்றும் விலகும் எண்ணத்தைத் தெரிவித்த பொழுது மேலதிகாரியாக இருந்த வெள்ளைக் காரத் துரை சிறந்த ஊழியரொருவரை இழப்பதற்கு விரும்பாமையால் அவ்வெண்ணத்தை மாற்றிக் கொள் ளுமாறு மீண்டும் மீண்டும் சுவாமிகளிடம் வேண்டினர். சுவாமிகள் தம்முடிவில் நிலையாய் நிற்பதைக் கண்டதும் ''நீங்கள் வேலையைவிட்டு விலகுவதானால் உங்களுக்கு விருப் பமான ஒருவரை இவ்வேலையில் சேர்த்து விட்டாதல் செல் லுங்கள்'' என சுவாமிகளிடம் வேண்டிக் கொண்டார். இததகவலை இவ்வேற்பாட்டின்படி வேலையிற் சேர்ந்து கொண்ட சுவாமிகளை வளர்த்த மாமியாரின் மகனை வைத் திலிங்கம் என்பார் எமக்குக் கூறினர்.

ஞானியர் நாட்டம்

சுவாமிகள் கிளிநொச்சியில் தொழில் புரியும் காலத் திலேயே சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் நிகழ்ந்தது (1897). அப்பெரியாருக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் சுவாமிகளும் உற்சாகத்து டன் பங்குபற்றினர். கோட்டையிலிருந்து இந்துக் கல்லூரி வரை சென்ற ஊர் வலத்திலும், பின்னர் கல்லூரியில் நடை பெற்ற பொதுக் கூட்டத்திலும் சுவாமிகள் கலந்து கொண் டனர். பின்னாட்களில் அவர் தம் அன்பர்களிடத்து ''விவேகானந்தர் மேடையின் இருபக்கங்களிடையேயும் சிங் கக் குட்டி போல் உலாவிக் கொண்டு பேசினார்'' எனவும், அவர் பேசினர் என்பதிலும் சிங்கம் போல் கர்ச்சித்தார் என்பதே சரி'' எனவும் கூறி மகிழ்வார். அவர் பேசிய முதல் வசனத்தைப் பல தடவைகளில் அன்பர்களுக்குக் கூறியிருக்கிறார். ''விடயம் பெரிது நேரமோ குறுகியது'' (The subject is Vast but time is short.) என்பதே அவ்வாசகமாகும். விவேகானந்தருடைய வருகை தொடர் பாகச் சுவாமி உற்சாகமாகக் கூறியவிடயங்கள் இளமைக் காலத்திலே அவரிடத்தில் மண்டிக் கிடந்த ஞானியர் நாட் டத்தை ஒருவாறு உணர்த்துவனவாயிருந்தன.

கோயில் வழிபாடு

அன்னையின் கையைப் பிடித்துக் கொண்டு நல்லூருக்குச் சென்ற பிள்ளைப் பராயந் தொட்டு நல்லூரான் அவர் சிந்தையிற் குடி கொண்டிருந்தான். நல்லூர் வீதியை வலம் வருவதும், வீதியில் விழுந்து கும்பிடுவதும் அவருக்கு உருக்கமான அனுபவங்களாய் அமைந்தன. சண்பக மரத்தடியில் நிற்கும் சாதுக்கள் கூட்டத்தை அவதானித்து நிற்பதில் அவர் மகிழ்ச்சி கண்டார். வகைவகையான பச்சையரிசி, வாழைக்குலை, தேங்காய் முதலிய பூசனைப் பொருள்களை உவகையுடன் கொண்டு வந்து உதவும் அன்பர்களைக்கண்டு ஐம்புலன் அடங்கி நிற்கும் அனுபவங்கள் அவருக்கு ஏற்பட்டன அவர் அந்தணர்கள் அஞ்சலுக்குத் தீபம் முதல் அடுக்கடுக்காய் தீபங் காட்டத் தரிசனந் தந்து நிற்கும் ஜோதி சொரூப வேலனைத் தரிசித்துக் கண்கள் பனியரும்புதிர நின்றனர். ஆகையால் நல்லூர்த் திருவிழாக் காலத்தில் விடுமுறை எடுத்துக் கொண்டுவந்து எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினர். திருவிழாக் காலங்களில் அங்கப் பிரதட்டினம் செய்து நல்லூர்வீதியை வலம் வருவது அவரது நியமமாயிருந்தது. ஒரு முறை கொழும்புத்துறையிலிருந்து நல்லூருக்கு அங்கப்பிரதட்டினம் செய்தனரென முன்னர் குறிப்பிட்ட வைத்திலிங்கம் என்பவர் கூறினர்.

ஞான நூற்பயிற்சி

வைத்திலிங்கம் என்பார் கூறிய இன்னொரு முக்கிய விடயம் சுவாமி அந்நாட்களில் நீண்டநேரத்தை சமயநூல்களை வாங்கிப் பாடமாக்குவதில் போக்கினர் என்பதாகும். ஆறுதலும், ஓய்வும் நிறைந்த அவ்வுத்தியோகம் நூல்கள் படிப்பதற்கு வாய்ப்பானதொன்றே. அவர் பெரும்பாலான சமயத் திருநூல்களைக் கற்றனர். தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலும் உள்ளஞானநூல்கள் பலவற்றை

யும் கற்றனர். அவையெல்லாம் சிரமப்பாடெதுவுமின்றி அவருக்கு மனனமாயின. அவருடைய உள்ளம் பளிங்கு போல் தூயதாயிருந்தமையால் இவ்வாறு இலகுவில் மனனமாவது இயல்பாயிற்று. சைவத்திருமுறையையும் தமிழ் மறையாம் திருக்குறளையும் ஆர்வத்தோடுபடித்தார். இப்பொழுது சிவதொண்டன் நிலையத்தினர் தொகுத்து வெளியிட்டிருக்கும் சைவத்திருமுறைத்திரட்டுஎன்னும் நூலிலுள்ள பாடல்கள் யாவும் சுவாமி அவ்வப்போது தம் நினைவினிருந்து சொன்ன பாடல்களே என்பது பலருக்கு வியப்பாக இருக்கும். பெரும்பாலான திருக்குறளும், ஔவைமொழியும் அவருக்கு மனனமாயிருந்தன. தாயுமானர்பாடல்களையும், பட்டினத்தடிகளின் திருநூல்களையும், சித்தர்பாடல்களையும் கற்றனர். அக்காலத்தில் திருவிழாக்காலங்களிலே ஏராளமான சிறுநூல்கள் விற்பனையாவது வழக்கமாயிருந்தது. அவற்றுட் சிறந்த ஞானநூல்களாயுள்ளவற்றை ஆர்வத்தோடு வாங்கிப்படித்தனர். அவ்வாறான நூல்களுள் குரு நமசிவாயர் என்பார் பாடிய நமசிவாயமாலை ஒன்று என்பதையும், அந்நூல் முழுவதும் சுவாமிகளுக்கு மனனமாயிருந்தது என்பதையும் நாமறிவோம். பின்னர் சுவாமியின் பணிப்பின்படி அந்நூலைத்தட்டச்சுச் செய்து பலரும் படித்துப் பயனடையுமாறு வெளியிட்டோம். சுவாமி தாமும் குருநமசிவாயர் பாடியதைப்போன்று ஒரு நமசிவாயமாலை பாடினர். அந்நாட்களில் பிரபலமாயிருந்த ஒரு ஞானநூல் தத்துவராய சுவாமிகள் பாடிய 'பாடுதுறை' என்னும் நூலாகும். அந்நூல் குருநெறிச்சென்று பெற்ற அநுபூதிஞானத்தைப் பயிலுந்தமிழிலும் எளிமையானமெட்டிலும் இனிமையாகக் கூறுவது. பரந்த தமிழ் நூற்பரப்பிலே சுவாமிகள் பாடியது போன்ற ஒரு 'பல்லிப்பாட்டு' 'பாடுதுறையில்' மட்டுமேயுள்ளது. சிறந்ததத்துவ நூற்புலவரான தத்துவராயரது 'பாடுதுறை' யைச் சுவாமிகள் நன்றாக மனதிற்பதித்துக்கொண்டனர். பகவற்கீதை, முதன்மையான உபநிடதங்கள், சங்கராச்சாரியாரது பிரமசூத்திரபாஷ்யம் முதலிய வடமொழியிலுள்ள ஞானநூல்களையும் கற்றுத்தேர்ந்தனர். விவிலியவேதத்திலுள்ள திருவசனங்கள் பல அவருக்கு மன

னமாயிருந்தன. பிற்காலத்தில் சுவாமியை அண்டிவாழ்ந்த வரான சந்தசுவாமி விவிலியவசனங்கள் பலவற்றின் உட் பொருளைச் சுவாமிகளின் வாய்மொழிகளிலிருந்தே தெளி வாக விளங்கிக்கொண்டதாகக் கூறினர். குணங்குடி மஸ் தான் சாகிபு பாடல்களும், இஸ்லாமியத் திருமறையான குர்ஆனின் வசனங்கள் பலவும் அவருக்கு மனனமாயின. பின்னுட்களில் தன்னையண்டி வந்த நூலறிவாளர் பலரை யும் தன் காலடியில் மண்டியிட்டுக் கிடக்கச்செய்யும் கலை ஞானத்தை இந்நாட்களில் சுவாமிகள் ஈட்டிக்கொண்டனர்.

கிளிநொச்சியில் பணிபுரியும் காலத்திலே பிரமசரிய விரதம் பூண்டிருந்த சுவாமிகள் ஒழுக்கத்தால் வைரித்த வாழ்வு, வணக்கம் மணக்கும் வேலை, கடவுட்பக்தி, ஞானி யர்நாட்டம், ஞானநூற்பயிற்சி என்னும் இயல்புகள் முதிர்ந்து ''இறைகளோடிசைந்த இன்பம், இன்பத்தோடி சைந்த வாழ்வு'' வாழ்வதற்குத் தகைமையான ஒருவராய் மலர்ச்சி பெற்றிருந்தார். இவற்றையெல்லாம் சுவாமிகளின் அலுவலகத்தலைவராகப் பதவிவகித்த பிறௌனி (BROWNE) எனும் ஆங்கிலேயர் கூறிய வசனம் திரட் டித்தருகிறது. அவர் ''நீர் ஒரு தெய்வீக மனிதர் (you are a God - Fearing man)'' எனச் சுவாமிகளை நோக்கிக் கூறியதாகக் கதையோடு கதையாகச் சுவாமிகளே எமக்குக் கூறினர்.

''குருபரன் அடியிணை ஏத்துதல் இன்பம்
குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள்வாக் காக்கிடும் இன்பம்
குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பமே.''

— நற்சிந்தனை —

2 குருவும் சீடரும்

செல்லப்பரின் பூர்வாச்சிரமம்:-

''ரிஷிமூலம், நதிமூலம் பாராதே'' என்பார்கள். யோக முனிவருடைய குருவின் பூர்வாச்சிரமத்தைப் பற்றி யும் நாம் அதிகம் பொருட்படுத்தத் தேவையில்லை. அவர் நல்லூர்ப் பதியில் தோன்றினர். நாட்டிலே அவருக்கு வழங்கிய நாமம் செல்லப்பன் என்பது ஆகும். அவருடைய மூதாதையர் வட்டுக்கோட்டைப் பகுதியிலிருந்து விவசாயம் செய்தற்பொருட்டு நீர்வளம் நிலவளம் குறையாத நல்லூர்ப் பதியில் வந்து குடியேறினர். அவருடைய தந்தையார் பெயர் வல்லிபுரம். அவரை ஈன்று வளர்த்த பேற்றினாலே 'தொல்லை யின்பத்திறுதி' கண்ட அன்னை, பொன்னம்மா எனும் அம்மையாராவார். செல்லப்பர் சிறிதுகாலம் யாழ்ப்பாணம் கச்சேரியில் ஆராய்ச்சியாகப் பணிபுரிந்தனர் எனவும் கூறுவர். ஆனால் அவர் வெகுவிரைவிலேயே இந்த ஊர், பேர், தந்தை, தாய், தொழில் முதலிய உலகிய லான அபிசங்க ளெல்லாவற்றையும் தாம் பூண்ட விசர்க் கோலத்தால் பொருளற்றதாக்கி விட்டார். உலகோர் பார் வையில் அவரோர் உன்மத்தராகத் திரிந்தார்.

செல்லப்பதேசிகரின் குருபரம்பரை

செல்லப்ப தேசிகரின் ஞானத்தந்தையாராகக் கடையிற் சுவாமியைக் கூறுவோரும் உளர். ''கடையிற் சுவாமி ஒரு கடலைக் காரியிடமிருந்து ஒரு ரூபா பெற்று அதை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்துச் செல்லப்பாசாமியிடம் கொடுத்து. அவரின் தலையிலே தம் குடையை வைத்து அசைத்துவிட்டு ஓடும்படி விரட்டினர். இதுவே செல்லப்பா சுவாமிகளுக்கு தீக்கையாக அமைந்து ஞானோதயம் ஏற் படுவதற்குக் காரணமாயிற்று'' என ஒருவர் எழுதியுள்ளார். கடையிற் சுவாமி பெரியமகான், சிவயோக சுவாமி கடை

யிற் சுவாமியைப்பற்றிக் கூற வேண்டி ஏற்பட்ட சந்தர்ப் பங்களிலே ''அவர் தெருவிலே செல்லும் பெண்ணைத் தாய்மையால் முலைசுரக்கச் செய்து குழந்தையாய்ப் பால் அருந்த வல்லவர். இது புத்தர், இயேசு என்போருக்கும் கிடையாத பேறு எனப்புகழ்வார். கடையிற் சுவாமி ஒரு முறை நல்லூர் வீதியிற் சென்ற போது விசரரென விலங் கில் போடப்பட்டிருந்த செல்லப்பருக்குக் கிட்டச் சென்று உற்று நோக்கிப் பின் அங்கு நின்றவர்களைப் பார்த்து ''முற்றி விட்டது; அவிழ்த்து விடுங்கள்'' எனக் கூறினர். செல்லப்பரிடம் முதிர்ந்திருந்த தெய்வீகப்பித்தைத் தெ ளிவாகக் கண்டபின்னரே அவர் அவ்வாறு கூறினர். செல் லப்பரும் கடையிற் சுவாமி பெரியமகான் என நினைந்து அவர் மீது மிகுந்த மரியாதையுடையவராயிருந்தனர். ஒருநாள் செல்லப்பர் தாந்திரீக ஒழுக்கத்தினரான கடையிற் சுவாமியைக் கண்ணியப்படுத்துவதற்காக ஒரு மது பானப்போத்தல் வாங்கி மறைவிடத்தில் வைத்து அவர் வரும் தருணத்தை எதிர்பார்த்து நின்றனர். அவரைக் கண்டதும் மதுபானப் போத்தலை எடுக்க ஆர்வத்தோடு சென்றனர். அங்கே போத்தல் வெறுமையாயிருப் பதைக் கண்டு திகைத்து நிற்கும்போது ''அது எப்போதோ முடிந் துவிட்டது.'' என ஒலித்த கடையிற் சுவாமியின் குரலைக் கேட்டுத் தெளிவடைந்தார். தமது காணிக்கையை அன் போடு ஏற்றுக்கொண்ட கடையிற் சுவாமிகளின் சித்தினை எண்ணி மகிழ்ந்தார். இந்திகழ்வுகள் தெய்வீகப் பித்துக் கொண்ட இளைஞனை செல்லப்பரிடம் கடையிற் சுவாமி அன்புடையவராயிருந்தார் என்பதையும் செல்லப்பர் கடை யிற்சுவாமியிடம் மிகுந்த மரியாதையுடைய வராயிருந்தார் என்பதையும் விழங்குவதற்குப் போதியன. ஆனல் பெரி யாரொருவரை மரியாதை செய்வதிலும் குருவின் ''செம் பொற்பாதம் சிரமிசைச் சுமந்து திரிவது வேறுபட்டதாகும். அது போலவே பெரியா ரொருவர் ஞான நாட்டங் கொண்ட அன்பரொருவரிடத்து விருப்பமாயிருப்பதிலும் குருமணி ஒருவர் தன் கண்மணியான சீடனைத் தானுகச் செய்யும் ஞானவித்தை புகட்டுதல் வேறுகும். செல்லப்பர்

தனியானவர். கடையிற் சுவாமியினின்றும் வேறுபட்டு நிற்கும் சிறப்பியல்புகள் அவரிடம் விளங்கின. இதனைச் சிவயோக சுவாமி ஒருசமயம் தெளிவாகக் குறிப்பிட்டார். அது

''மற்றவர்களை வசியம் பண்ணுவதும் ஒரு மயக்கம். கடையிற் சுவாமியும் அகப்பட்டுக் கொண்டார். ஆனல் செல்லப்பர் பெரிய மகான். இப்படி மயக்க வில்லை; 'ஆரறிவார்' 'எப்பவோ முடிந்தகாரியம்' என்று சொல்லிக்கொண்டு திரிவார். யாராவது அவரை விழுந்து கும்பிடுவதற்கு வந்தால் உடனே விரைந்து சென்று சலங்கழிக்கும் இடங்களில் நிற்பார்.'' என்பதாகும்.

கடையிற் சுவாமியிடம் சித்துவல்லபம் இருந்தது. அவ் வல்லபத்தாலே இரும்பைத் தங்கமாக்குதல் போன்ற காரி யங்களை அவர் செய்து வந்தார். இக்காரியங்களால் வசீ கரிக்கப்பட்ட மக்கள் அவரைப் போற்றுதல் செய்தனர். செல்லப்ப தேசிகரோவெனின் ''நாமறியோம்'' எனும் நல்லறிவுவாய்த்த மெய்ஞ்ஞானமான மோனபண்பா யிருந்தார். அவர் காரியங்கள் எப்பவோ முடிந்துவிட்டன எனக்கூறியவராய் மாயவித்தைகாட்டும் மயக்கத்தினின்றும் விடுபட்டிருந்தார். வையகமும், வானகமும் வந்து பணிந் தாலும், ஆட்சி செய்யக் கருதாது சாட்சி மாத்திரமாய் இருந்தார். இவ்வியல்புகள் செல்லப்ப தேசிகரைக் கடையிற் சுவாமியிடமிருந்து வேறுபடுத்தும் இயல்புகளாயிருந்தன. இன்னும் கடையிற் சுவாமியிடத்து தாந்திரீக நெறியினர்க் குரிய ஆசாரங்கள் தெளிவாய்த் தெரிந்தன செல்லப்ப தேசிகரோ எந்த நெறியிலும் அகப்படாதவர்; நெறியில் லாதவர்; எதிலும் தட்டாது முட்டாது நின்றவர். மேலும் கடையிற் சுவாமியின் திருக்கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத் தில் நின்று நிலவுகிறது. இத்திருக்கூட்டத்துடன் செல்லப்ப தேசிகரோ அன்றி அவரது ஞானப் புதல்வரான சிவயோக சுவாமிகளோ ஒட்டி உறவாடித் திரிந்ததாக நாமறியோம்.

கடையிற் சுவாமியின் சமாதிக்கோயில் நல்லூருக்கும், சிவதொண்டன் நிலையத்திற்கும் கிட்டிய தூரத்திலேயே உள்ளது. ஆயினும் மட்டுவில் பன்றித் தலைச்சியம்மன் கோயிலுக்குப் பொங்கலிடுவதற்காகச் சென்ற செல்லப்ப தேசிகரும், யோகசுவாமிகளும் கடையிற்சுவாமி கோயிலுக்கும் பொங்கல் பூசையேதும் செய்யவில்லை.

செல்லப்பதேசிகர் சமாதிவைக்கும் முறையிலும் அகப்படாதவராயிருந்தார். யோகசுவாமிகள் கடையிற் சுவாமியின் திருக்கூட்டத்துடன் ஒருறவும் இல்லாதிருந்ததுடன் அக்கூட்டத்தினரிடமிருந்து விலகியிருப்பதையே நன்றெனக் கருதினர் என்பதற்கான ஒரு குறிப்புள்ளது. ஒருமுறை அந்நாட்களில் பிரபலமாயிருந்த தவமூதாட்டியான செல்லாச்சியம்மையாரைத் தம் கூட்டத்திற் சேர்த்துக்கொள்ளும் எண்ணத்துடன் கடையிற் சுவாமியின் கூட்டத்தினர் வந்தனர். அப்பொழுது யோகசுவாமியும் செல்லாச்சியம்மையாரது தவச்சாலையில் இருந்தனர். வாமாசாரத்தைப் பேணும் அக்கூட்டத்தாருடன் செல்லாச்சியம்மையார் சேர்வதைச் சிவயோகசுவாமி விரும்பவில்லை. ஆதலால் செல்லாச்சியம்மையாரைத் தியானத்தில் மூழ்கியிருக்குமாறு செய்தார். செல்லாச்சியம்மையார் தியானம் கலைந்து எழுவார் என்று வெகுநேரம்வரை காத்துக்கிடந்த கடையிற் சுவாமியின் கூட்டத்தினர் தமது எண்ணம் நிறைவேறுமலேயே திரும்பிச் செல்லவேண்டியதாயிற்று. இக்குறிப்பு செல்லப்பதேசிகரின் ஞானபரம்பரை கடையிற் சுவாமியின் மரபினின்றும் பிரிந்து நிற்குமொன்று என்பதற்கான ஒரு சிறுகுறிப்பாகும்.

மேலும் எமக்கு எல்லாம் சொன்ன எழில்சேர்குரு 'செல்லப்ப தேசிகரின் குரு கடையிற் சுவாமி' என ஓரிடத்தும் கூறவில்லை, மாறுகச் செல்லப்பர் எவரையும் கும்பிட்டு நில்லாதவர் எனக் கூறியிருக்கிறார். அவர் தாம் கும்பிடுவதற்குத் தமக்குமேல் ஒருவன் இல்லாதவராக இருந்தார். மணிவாசக சுவாமிகள் ஆட்கொள்ளக் குருந்தமரத்தடியில் வந்து பரமாசிரியராக வீற்றிருந்ததும், அப்பரடிகளுக்குச் சமணர் செய்த ஆபத்துக்களைத் தீர்த்ததும், மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால் உதைத்ததும் எப்பரம்பொருளோ அப்பரம்பொருளே தேர்முட்டிப்படியிலே செல்லப்ப தேசிகராகவும் வீற்றிருந்தது. பரம்பொருளாகிய மாசற்ற சோதியினின்றும் பிரிந்து நில்லாத மலர்ச்சுடரே செல்லப்ப தேசிகர். அவர் குணாதீதர்; குருசீட முறையொன்றுமில்லாதவர்; அவருக்குக் குருபரம்பரை எதனையும் கற்பித்துக் கூற வேண்டியதில்லை.

செல்லப்பரின் விசர்க் கோலம்

செல்லப்ப மூர்த்தம் தினமும் நல்லூர்த் தேர்முட்டிப் படியிலே வீற்றிருந்தது. ஆயினும் வெறித்த பார்வையும், கறுத்த மேனியுமாயிருந்த செல்லப்ப மூர்த்தியிடத்தில் மூர்த்திகரம் எதுவும் தெரியவில்லை. அவரது முகத்தில் மூர்த்திகரத்துக்குப் பதிலாக முட்டாள்தனமே தெரிந்தது. அவர் மண்போட்டால் மண்விழாதபடி மனிதர்கள் கூடிநிற்கும் திருவிழாக் காலங்களிலும், பஞ்சாக்கரப்படியிலமர்ந்து தன்னிலே முகமலர்ந்து சிரித்தவராய் இருப்பார். சிலவேளைகளில் தேர்முட்டிப் படியிலே சிங்காரமாய்க் கிடப்பார். சில வேளைகளில் வீதியிற் செல்லும் வீணர்களைச் சின்னத்தனமான வார்த்தைகளால் ஏசுவார். அவர்களும் இவரைப் பலவாருக இகழ்ந்து விசரரென ஏசிச் செல்வர். இவரோ இவ்விகழுரைகளால் சிறிதும் சித்தம் கலங்காதவராய் அவர்கள் தம்முடன் மாறுபட்டு ஏசவேண்டும் என்பதற்காக தொடர்ந்தும் வேண்டுமென்றே ஏசிக்கொண்டிருப்பார். சிலவேளைகளில் கந்தைத் துணியணிந்தவராய் கந்தன் திருமுன்றிலினின்று வருவார் போவாரை வாயில் வந்தபடி ஏசுவார். சிலநாட்களில் திருநெல்வேலி, கொழும்புத்துறை என்று ஊர் ஊராய்த்திரிவார். ஊர்தோறும் அலைந்துதிரியும் இவரைக் கண்டோர் உன்மத்தனென்று இகழ்வர். இல்லங்களுக்குச் சென்று பிச்சை கேட்டு நிற்பார். கொ

டுத்ததை வாங்கி உண்பார். சிலநாள்களில் ஒருசோறும் ஒருசுறியும் ஆக்கி உண்பார். அவர் கண்துயில்வது குறைவு; பாதிச் சாமத்தின் பின் கையைத் தலையணையாக வைத்துத் தரைமீது கண்ணுறக்கம் கொள்வார். பாரறிந்த இந்தப் பைத்தியக்காரரிடம் பனையோலை, தென்னையோலை என்பவற்றைக் கொண்டு நூதனமாகப் பொருள்களை இழைக்கும் கைவண்ணம் ஒன்றே அவர் விசரனலலர் எனும் உண்மையை உணர்த்தும் அடையாளமாக இருந்தது ஆனால் பித்த உலகினர் உண்மையைப் புரிந்து கொள்வதற்கு இச்சிறு குறிப் பொன்றும் போதுமோ? இவ்விசரரிடம் பரமாசிரியரொருவருக்குரிய வேடமெதுவுமிருக்கவில்லை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அவர் காவியுடையவில்லை; அக்குமணி அணியவில்லை. நீறணியவில்லை; நெற்றியிலே பொட்டிடவில்லை: சாதியாசாரம், சமயாசாரம் எதனையும் அவர் பேணவில்லை. நாய்போல் திரிவார்; நரிபோலுழல்வார்; எனவே ஆசார சீலர்களான சைவர் பலர் அவரை ஏழனஞ் செய்திருப்பர் என்பதில் ஐயமில்லை. அக்காலத்து மக்கள் பயபக்தியுடன் போற்றிவந்த தாந்திரீகக் கூட்டத்தினர்க்குரிய அடையாளங்களும் அவரிடம் தெரியவில்லை. அவர் வேதாந்த வாதம் புரியவுமில்லை, யோகத் தமரவு மில்லை. ஆதலால் மார்க்க நெறிச்செல்லும் எவரும் அவரை மதிக்கும் மதியற்றவராயினர். யாரேனும் ஒருவர் அறிவறியும் நாட்டங்கொண்டவராய் அவரையண்டி வந்தால் அவர் ''நாமறியோம்'' என்று நகை செய்வார்; ''ஆறறிவார்'' என்று அதட்டுவார். இந்த நல்லறிவு வாசகங்களின் பொருளை யாரே அறியவல்லார்? இவையெல்லாம் செல்லப்பரின் பலருமறிந்த பைத்தியக் கோலங்கள். இக்கோலங்களாலே ''இன்னான் இவன்'' என ஒருவருமறியாதவண்ணம் தன்னை மறைத்துக் கொண்டு அவர் ஒடி உலாவித்திரிந்தார். அக்காலத்திலிருந்த வேதாந்த சித்தாந்தம் கற்ற பண்டிதரும், பாவலரும், நாவலரும், செல்லப்பருடன் பலநாட் பழக்கம்பூண்டோருக்குங்கூட அவரின் அந்தரங்கத்தை அறியமுடியவில்லை. செல்லப்பர் தாம்பூண்ட விசர்க் கோலத்தைச் செம்மையாய் நடித்தனர். இதனைச் சுவாமிகள்

''நாற்பது வருட காலமாகத் தாம் எடுத்த கோலத்தை ஏவரும் சந்தேகப்படாமல் நடித்துக் காட்டி விட்டுப் போனார்''

எனக் கூறினர்.

செல்லப்ப தேசிகரிடம் அமைந்திருந்த சற்குரு இலக்கணம்.

பாரோர் பைத்தியக்காரனின் பண்புகள் எனக்கண்டவை, ஞானநிட்டையாளரின் பண்புகளுமேயாம். ஞானநிட்டையாளர், பாலர், உன்மத்தர், பசாசர் என்போரின் பண்புடையவராய்த் திரிவர் எனச் சமயசாத்திர நூல்கள் கூறுகின்றன.

''ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையில்லை நாடுவதொன் றில்லைச்
சீலமிலைத் தவமில்லை விரதமொ டாச்சிரமச்
செயலில்லைத் தியானமில்லைச் சித்தமல மில்லைக்
கோலமிலைப் புலனில்லைக் கரண மில்லைக்
குணமில்லைக் குறியுமில்லைக் குலமுமில்லைப்
பாலருட னுன்மத்தர் பசாசர் குணமருவிப்
பாடலினே டாடலினை பயின்றிடினும் பயில்வர்''

-சிவஞானசித்தியார்-

பைத்தியக்காரருக்கும், ஞானநிட்டையாளருக்கும் பொதுவான கோலத்திலே செல்லப்பதேசிகர் நடமாடினர். உலகமாயையில் மயக்குண்ட மாருட்டக்காரர்கள் அவரைப் பைத்தியக் காரரெனக்கண்டனர். சதியத்தைக் காண்பதில் தாகங்கொண்டோர் அவரைப் பேரறிவாளனைக் கண்டனர். சிவயோகசுவாமி தன்னைக் காத்தாட்கொள்ளும் தவராசக் குருவடிவமாகக் கண்டார்.

சமயசாத்திர நூல்களிலே ஞானநிட்டையாளரியல்பு பற்றிக் கூறியுள்ளவை செல்லப்பதேசிகரிடம் பொருந்தியிருந்ததுபோலவே குரு இலக்கணம் பற்றிக் கூறியனவும் பொருந்தியிருந்தன. ஆதிசங்கராச்சாரியார் அருளிய விவேகசூடாமணி என்னும் நூலில் குரு இலக்கணம் பற்றிக் கூறப்பட்டிருக்கும் பகுதிமேல்வருவதாகும்:-

''ஞானநூல்களைக் கற்றவனும், பாவசிந்தனையில் லாதவனும், ஆசையாகிய சூறையாலலைக்கப்படாத வனும், தன்னைப்பரம்பொருளிடத்தே கையடை யாகவீந்தவனும், சாந்தனும், நீறுபூத்த நெருப் புப்போல் உலகப்பற்றறுத்தவனும், எல்லை காணுக் கருணையங்கடலாய், மெய்யன்புடன் தன்னடிகளை வணங்குமடியார்க்குத் தண்ணளிகாட்டும் தந்தை யாய் உள்ள'' (விவேகசூடாமணி சுலோகம் 33) இச் சுலோகத்திலே குரு இலக்கணம் பற்றிக் கூறப்படும் வாச கங்களுக்கு இணையானவற்றைச் சிவயோகசுவாமிகள் அருளிய நற்சிந்தனைத் திருநூலிலே, செல்லப்ப தேசிகரை விசேடித் துக் கூறும் பகுதிகளிற் காணலாகும். அவை மேல்வருமாறு:-

வேதம் உணர்ந்த குருநாதன்; நிருமலன், காமக்குரோத மோகம் கடந்தவன்; திருவடிமறவாச் சீருடையா ளன்; மாறுத மௌனத்தியானப்பிரவேசன்; விருப்பு வெறுப்பை வேரறப்பற்றிதோன்; மாறுக் கருணையன்; வந்த பேருக்கு வாழ்வையளிப்பவன்.

பல்படக் கூறுவானேன்? செல்லப்பதேசிகர் 'ஈனப்பி றவி நீக்கும் எழிலே' அறிந்தவர். ஒரு சற்குரவனிடம் அமைய வேண்டிய இதனினும் சிறந்த இயல்பு வேறுள தோ?

யோகமுனிவரின் சற்குருதரிசனம்

செல்லப்பருடன் பலநாட் பழக்கம் கொண்ட சிலர், அவர் ஒரு பெரிய மனிதர் என்பதை உணர்ந்து அவரைத் தரிசித்து வரும் நியமம் பூண்டிருந்தனர். அவர்கள் பெரும் பாலும் கொழும்புத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்த னர். இதனால் செல்லப்பரைக் 'கொழும்புத் துறையாரின் சுவாமி' எனவும் சிலர் கூறினர். அவ்வாறான கொழும்புத் துறை வாசிகளுள், விதானையார் திருஞானசம்பந்தர், துரை யப்பா என்போர் சிலர். ஒரு நாள் செல்லப்பரைத் தரி

சிக்கச் சென்ற இப்பெரியவர்களுடன் இளைஞனை யோக முனியும் சென்றனர். செல்லப்பதேசிகர் தம்மைத் தரிசித்து நின்ற யோக முனியை நோக்கி இடிபோன்ற குரலில் 'யாரடா நீ' என்று அதட்டினர். இக்கர்ச்சனையைக் கேட்டோர் இளைஞனை அந்தப புதிய அடியவரைப் பார்த்துச் சிரித்தி ருத்தல் கூடும். கொழும்புத்துறை விதானையார் முதலியோர் தாம் அழைத்து வந்தபுதியவருக்காக இரங்கியிருப்பர். ஆனல் தேகமே மெய்யென்று பழகிப்போன ஒருவரின் தேகம் முத லிய திரைகளையெல்லாம் விலக்கி 'ஆத்மாவேநாம்' என்ப தை உணர்த்தும் நாதஒலியே அந்த ஞான மொழியாகும். அன்பரின் ஆத்மாவை மறைத்து மூடிக் கிடக்கும் களிம்பு களையெல்லாம் ஒழிக்கும் இரத குளிகையே அந்த வாக்கு அன்பனைக் கண்ட மகிழ்ச்சியிலும் அவசரத்திலும் அப்பொ ழுதை பொழிந்த மறக்கருணையமுதே அம்மந்திர மொழி. இதனை நாளாக நாளாக யோகமுனிவர் உணர்ந்தனர். அதனலேதான்.

''யாரடாநீ யென்று அதட்டினன்
அன்றேயான் பெற்றேன் அருள்''

எனப்பாடினர். இந்த நன் மருந்து அன்பரின் நெஞ்சிலூறி யதும், செல்லப்பதேசிகர் தமக்கியல்பான மாறுக்கருணை பூத்த திருமுகத்தால் நோக்கி ''நல்லதப்பா வா உன்னைப் போன்ற ஆளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என வாக்கியப் பிரசாதம் ஈந்தார். செல்லப்ப மூர்த்தியின் இந்த மங்களகரமான வரவேற்பு புத்தடியார் ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய பெரும்பேறேயாம். அந்த நல்வாக்கு அவ் வடியவர் அடையவிருக்கும் நற்கதிக்கு ஓர் அறிகுறியாகவும் அமைந்தது. இவ்வாறு சிவபுரத்திலே தான் ஊட்ட உண்டு களித்திருந்த பசு, ஏதோவொரு மருளினல் வெருண்டு, சிவபுரத்தை விட்டு நீங்கி உலகக்கானகத்தைச் சென்று உழன்று திரிந்தபொழுது, தன் கண்மணியான அப்பசு வைத் தேடிக் கொண்டுவந்து தேர்முட்டிப்படியில் காத்தி ருந்த கருணைப்பித்தன், கண்டுகொண்டான். இனிச் சற்று பசுவின் போக்கில் செல்லவிட்டுப் பின் மருட்சி நீக்கித் தன்னுடன் அழைத்துக் கொண்டு சிவபுரம் சென்றுவிடுவான்.

தேர்முட்டிப்படியிலே தூண்டில் போட்டுக்கொண்டிருந்த தேசிகர் உறுமீனை சீடரைக் கண்டு விட்டார். இனி இரையைச் சிறிது கொத்தவிட்டு இழுத்தெடுத்து விடுவார். சற்குரவனை தவராசசிங்கம் பக்குவரான அன்பரின் கழுத்தை முறையாகக் கௌவிக் கொண்டது. அப்பிடியினின்றும் அன்பர் நழுவுதற்கில்லை.

தாகத்தையாக்கிவிட்டான் எங்கள்குருநாதன்

சற்குரு தரிசனத்தாற் பெற்ற சகல பாக்கிய சுகங்களுடனும் யோகமுனிவர் கிளிநொச்சியைச் சென்றடைந்தார். அலுவலகத்தில் ஆறுதலாயிருக்கும் போதெல்லாம் தேரடியனுபவம் நினைவுவரலாயிற்று. அவ்வனுபவம் நினைக்க நினைக்க இன்பந்தேக்கும் சுகானுபவமாக இருந்தது. தனக்கும் அத்தவராசசிங்கத்துக்கும் உள்ள உறவு 'இன்று நேற்று வந்த உறவல்ல என்பதும்' அது 'அன்று' தொட்டேயுள்ள உறவு என்பதும் நுணுக்கமாகப் புலப்படலாயிற்று. தாம் கற்றுவந்த ஞானநூல்களின் மறைபொருள்கள் மெல்ல மெல்ல வெளியாகத் தொடங்கின். அப்பேரறிவாளனை அண்டித் தானறிந்துகொள்வதற்கு இன்னும் எத்தனையோ விடயங்கள் உள்ளன என்பது தெளிவாகியது. ஆகையால் செல்லப்பதேசிகரை அடிக்கடி தரிசிக்கவேண்டுமென்ற தாகம் அன்பரிடம் பெருகலாயிற்று. வாய்ப்புவரும் போதெல்லாம் கொழும்புத்துறை செல்வதும் அங்கிருந்து நீராடித் தோய்த்துலர்ந்த ஆடையணிந்து ஆசாரசீலராய்த் தேரடியிற் சென்று தேசிகனைத் தரிசிப்பதும் அவரது பழக்கமாயின.

செல்லப்பரின் சாலம்.

ஆனால் செல்லப்பரோ மருமத்தில் மருமமாய் இருந்தார். அவர் கும்பிட்டு நிற்கும் அன்பரை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். சால அன்புடன் வழிபடச் செல்லும் யோகமுனியைக் காலனென்னக் கறுத்துச் சீறுவார். இவ்

வாருன சீற்றத்துக்காளாகிச் சற்று விலகிச் சென்று யோசனையோடு நிற்கும் போது, வீதியிற் செல்லும் வீணர்களோடு சிரித்துப் பேசிமகிழ்வார். 'வேடிக்கையாக ஏதோபேசுகிறார்' என்று எண்ணிய மாத்திரத்திலே அரியமந்திரவாசகங்கள் வெளிவரும். அண்மையிற் சென்றிடின் தாக்கறமில்லாது தாக்குவார்; அகன்று சென்றிடிலோ ஈர்த்தெடுத்து விடுவார். ''அகலாது அணுகாது நிக்காய்வார் போல'' அவருடன் பழகவேண்டியதாயிற்று. பிற்காலத்தில் தன்னை அண்டி வாழ்ந்த அன்பர்களைப்பார்த்து ''நீங்களாளல் செல்லப்பருடன் ஒரு நாளைக்கும் நின்று பிடிக்கமாட்டீர்கள்' என யோகசுவாமி கூறினர். குருவின் பாதத்தை அண்டி நின்று அவரின் அருட்பணியாற்றுவது சீடனுக்கு ஆறுதலளிக்கும். ஆனல் செல்லப்பரோசெய்னையொன்றுசெய்யவும் விட்டிலர். சிறிதுகாலத்துக்குச் சீடரை அணடியிருக்கவும் அனுமதிக்கவில்லை. கீதைநூல்களிலே, சீடன் குருவினை நெருங்கி நின்று தனக் கெழுந்த ஐயம் யாவையும் தொடர்பாய் வினவுவதும், குரு சீடனின் விவேகம் திறைந்த விளக்களை மெச்சிக்கொண்டே அறிவுரை வழங்குவதுமான ஒழுங்குமுறை பேணப்படும். இவ்வாறு செல்லப்பதேசிகரிடம் கேட்டறிந்துகொள்ள முடியவில்லை. அறியாமையுடைய சீடன் தான் வினவும் வினக்களையும் அறியான். வீட்டின்பவேட்கையாலே அவன் வினவும் வினக்கள் பருவச்சிறுபேதையின் விரசம் மிக்க வார்த்தைகளை ஒத்து நாணத்தகனவாயும் இருக்கும. தன்னையறிந்த தேசிகரே தன் சீடனையும் அறிவார். சீடன் அறிய வேண்டிய அறிவையும், அறியும் முறையையும், அவன் கொள்ளக்கூடிய அறிவின் அளவையும் அத்தேசிகரே அறிவார். ஆதலால் செல்லப்பர் சொல்லும் மணியனைய வாக்குகளை யோகமுனிவர் மிகவிழிப்பாக இருந்து கேட்டறிந்து அவற்றைப் பகுவமாகப் பேணிவந்தார். யோகமுனிவர் செல்லப்பரின் திருமுன்னிலையிலே அமைதியாக அமர்ந்திருந்ததல்லாமல் அவரின் பின்பக்கத்தில் நின்றே அரிய உபதேசங்கள் பலவற்றைப் பெற்றனர். இதனைப் பின்னொருபோது

''செல்லப்பசுவாமிகளிடத்திலே கேட்டிறிந்தாரில்லை; நான் மௌனமாகப் பின்பக்கத்திலே நிற்பேன். பிதற்றல்களோடு இடையிடையே அரிய மந்திரங்கள் கலந்து வரும்'' என சிவயோகசுவாமிகள் மொழிந்தனர். இம்மந்திர மொழிகளும் பெரும்பாலும் பரிபாஷைகளாகவே வெளிவரும்; அப்பரிபாஷைகளின் பொருள்றியாது பாவலரும் நாவலரும் திகைத்துப் போவர். குருவின் குறிப்பறியும் உண்மையன்பனே அப்பரிபாஷைகளின் நுண்பொருளறிவான். நுண்பொருளே உணர்ந்து மகிழும் யோகமுனிவருக்குச் செல்லப்பதேசிகர் செந்தமிழ் நாவலரானர்.

செல்லப்பர் போதித்த முத்திநெறிகள்

செல்லப்பதேசிகர் எனும் நறுமலரை சுற்றிச் சுற்றி வந்து யோகமுனிவர் சேகரித்த தேன்துளிகளைத் தொகுத்தும் வகுத்தும் மேல்வருமாறு கூறலாம். முதலில் செல்லப்பதேசிகர் ஞானநெறியைப் போதித்தனர். முதன்முதலில் ''யாரடா நீ'' எனும் அரியமந்திரத்தை மொழிந்ததை முன்னர் கூறிஞேம். பின்னர் அவ்வரியமந்திரப் பொருளின் விளக்கத்தை, அகமுகமாகி உள்ளே உள்ளே சென்று அறியும் நெறியைத் ''தேரடா உள்'' என உபதேசித்து வழிகாட்டினர். உள்ளே செல்வதற்குத்தடையாக இருக்கும் உலகப்பற்றை ஒழித்தற்காகத் 'நீரடாபற்று' என மொழிந்தார். அகமுகமாகி அருளொளிக்குள்ளே சென்ற பொழுது அங்கு இருள் சூழ்ந்திருப்பதைக் கண்டு பொருளறியாது திகைத்து நின்ற சீடரை நோக்கி ஓர் பொல்லாப்பு மில்லை என ஓதினர் தேசிகர். இருள், வெளி இரண்டிற்கும் சுத்த சுகமான பரவெளியே இடம்; இதிலோர் பொல்லாப்பும் இல்லை எனும் இத்திருமந்திரப்பொருளின் மருமந்தேராது மலைத்து நின்ற யோகமுனியைக் கந்தன் திருமுன்றிலுக்கு அழைத்துச் சென்று திரைவிலகியதும் தோன்றும் ஆழ்ந்தகன்றுயர்ந்திய ஞானவேலைக்காட்டி மாயைநீங்கப் பிரமமொன்றேயுள்ள பொருள் என வேதாந்த உண்மை புகட்டினர். மாயையின் விசித்திரத்தை எண்ணி

வியந்து நின்ற அன்பரிடம் 'அது அப்படியே உள்ளதுகாண்' அதன் மருமத்தை ''ஆரறிவார்'' என்னும் மகாவாக்கியங்களே அருளினர்.

ஞான நெறியைப் போதித்தபின் யோகநெறியைப் புகட்டினர். 'வாசியோகந்தேர்' 'இருவழியையடை' 'கருவழியைக்கட' 'நாசிநுனிநோக்கு' 'காசிதேசம்போ' 'பச்சைப் புரவியிலே பாங்காக ஏறு' 'தச்சன்கட்டா வீட்டிலே தாவு பரிகட்டு' எனப்பலவாறுக யோகமுறையின் நுட்பங்களே யோகநெறிக்குரிய பரிபாஷைகளிலே கல்லாமலே யாவுங்கற்ற செல்லப்பதேசிகர் போதித்தனர். ஒருவர் யோகசாதனபயின்று படிப்படியாக வளர்ந்து செல்லும் போது அவரிடத்துத்தோன்றும் அறிகுறிகளையும், மலர்ச்சியினையும் நற்றவயோகருக்குத் தெளிவுபடுத்தினர். கருவழியைக் கடந்தால் மனம்கட்டுப்படுமெனவும், நாசிநுனிநோக்கு விழித்துக்கொண்டதும் நடனந தெரியுமெனவும், மற்றொரு படியில் மாசிலோசை கேட்குமெனவும் தெளிவுபட விளக்கி உபதேசித்தனர். யோகமுனிவர் முன்னரே பழகியிருந்த பத்திநெறியை விட்டிடாது கைக்கொண்டு வரும்படி ''அக்குமணி அணி'' 'அஞ்செழுத்தை ஓது' ''நெக்குநெக்குருகு'' என்றவாறு கூறி ஊக்கப்படுத்தி வந்தனர். பிற்காலத்தில் சிவதொண்டனுய் மலர்ந்து உலகோருக்கு உய்யும் நெறிகாட்டவிருக்கும் தமது ஞானப்புதல்வன், சாதனமுறைகள் பலவற்றையும் நுட்பமாக அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக, வேண்டிய எல்லாவற்றையும் ஒன்றும் ஒழியாமல் புகட்டினர்.

நற்றவ யோகரின் சாதனை

செல்லப்பரிடம் கேட்டறிந்தவற்றை அமைதியாயிருந்து அசைபோடுவதற்கும், அவற்றைச் சாதனை செய்வதற்கும் ஏற்றதோர் ஆச்சிரமமாகக் கிளிநொச்சி ஆரணியம் அமைந்தது. நீளநினைந்தும், நிட்டைகூடியும், தியானத்திருந்தும், யோகத்தமர்ந்தும் குருமணியிடம் கேட்டவற்றைச் சாதனை

பயின்றனர் நற்றவயோகர். இப்பொழுது தன்னையறிதலே அவரதுமுதன்மையான வேலையாக அமைந்தது.'தன்னுள்ளே விரிந்துகிடந்த புத்தகத்தை'யே விழிப்புடன் படித்து வந்தார். தம்மிடமிருந்த சமயத்திருநூல்களை ஒரொருவேளை மாத்திரம் பொழுதுபோக்காவே பார்க்க முடிந்தது. சாதனை முதிரமுதிர யோகத்தமரும் இன்பமும், தியான சுகமும் அனுபவமாகத் தொடங்கின. வையகமெல்லாம் துயிலில் மூழ்கி மோனத்திருக்கும் நள்ளிரவுப் போதிலே அவர் தியானத்தில் மூழ்கிப் போதைமிகுந்து 'அம்மோ அம்மா' எனப் புலம்புவார். அவ்வேளையில் அவருடன் துயிலும் வெற்றிவேல் விதானையார் திடுக்கிட்டெழுந்து விசாரிப்பார். அப்பொழுது ''நான் என் அலுவலைப்பார்க்கிறேன் நீங்கள் அமைதியாக நித்திரை செய்யுங்கள்'' எனக் கூறி மழுப்பி விடுவார். இறைகளோடிசைந்த இன்பத்தை அனுபவித்தற்குரிய பயிற்சிக் கூடம் போன்றமைந்த காரணத்தால் கிளிநொச்சிப்பகுதியைச் சுவாமி என்றும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார். பிற்காலத்தில் தமது அன்பர்களுடன் அப்பகுதிக்கூடாகப் பிரயாணம் செய்யும் வேளைகளில், தாம் தியானசாதனை செய்த இடத்தைச் சுட்டிக் காட்டி இந்த இடம் தியானம் செய்வதற்குச் சிறந்த இடம்' எனக் கூறுவார். தியானம் செய்வதற்குக் காலம், இடம், போன்ற பொருத்தங்கள் எதுவும் வேண்டியதில்லை என்பதை உணர்ந்திருந்த பிற்காலத்திலே, சுவாமி இப்படிக் கூறியதன் காரணம் முதலில் தாம் தியானசுகத்தில் திளைத்த இடம் அது என்பதனாலேயாகும்.

யோகமுனிவரின் துறவு

காணுத காட்சிகளையெல்லாம் தமக்குக் காட்டிவைக்கத் திருவுளம் பற்றிநிற்கும் கருணைவள்ளலான செல்லப்பதேசிகரிடத்து யோகமுனிக்குப் பேரன்பு பெருகுவதாயிற்று. தமக்கு ஞானநெறி முதலியவற்றை உபதேசித்த தமது

குருமணி ''ஓதாதே வேதம் உணர்ந்த பேரறிவாளன்' என்பதை எண்ணி வியக்கலானர். அவருடைய நாமம் சொல்லச்சொல்ல சுவைபயத்தது. செல்லப்ப மூர்த்தமே அவரது தியான மூலமாயிற்று; அவரது திருவடிகளே பூஜாமூலமாயின; அவரது அமுதமொழிகளே மந்திரமூலமுமாயின. வடதிசைகாட்டும் திசையறிகருவி போன்று எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப்பட்டாலும் தோர்மூட்டிப்படிக்கே அவர்தம் சிந்தனை சென்றது. ஒளியையும் இருளையும் ஒரேநேரத்தில் நாடுவது பொருந்தாதென்பதைத் தெளிந்த யோகமுனிவர் உத்தியோகம் முதலிய உலககருமங்களைத் துறக்கும் திடசித்தமுடையவரானர். 'உற்றார், பெற்றார், உடன்பிறந்தாரிலும் நற்றவத்தாரே நம் துணையாவார்' எனும் உண்மையை உணர்ந்து சுற்றந்துறக்கவும் துணிந்தார். ஆகையால் உத்தியோகம், உற்றார் உறவினர் அனைத்தையுந் துறந்து செல்லப்பரின் சீரடியாளுக நல்லூர்த் தேரடிக்குச் சென்று அவர்தம் திருவடியே சரணெனைக் கிடந்தார்.

செல்லப்ப தேசிகரின் மறக்கருணையும், யோகமுனிவர் பட்டபாடும்

தம்மைத் தஞ்சமென நாடிவந்த அடியவனைக் காத்தாட்கொள்ளத் தவஞானக் குருவடிவம் திருவுளம் பற்றியது. தேகமே மெய்யென வாழ்ந்து பழகிப் போன அடியவனை ஆத்மாவே நானென அறிந்து வாழ்வதற்குப் பழக்குதல் வேண்டும்; (பழக்கம் தவிரப் பழகுதல்) ஐம்பொறிவழியே பொய்நெறிச் சென்ற அன்பனை அருள்வழியே மெய்ந்நெறிச் செல்லப் பயிற்றுதல் வேண்டும்; 'பலபலவாக விரிந்து செல்லும் பாழ் மனத்தை மெல்ல மெல்லவாக அகமுகமாக்கி ஒருமுகமாகச் செல்லச் செய்தல் வேண்டும். இந்த ஞானவைத்தியத்தின் போக்கிலே எதிர்ப்பட்ட துன்பங்களையெல்லாம் அன்பர் பொறுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று; சோதனைகளையெல்லாம் வெற்றிகொள்ளவேண்டிய

தாயிற்று. அன்பரை மேனிலைக்குக் கொண்டுவரச் சதுர்வித உபாயங்களையும் குருமணி கையாண்டனர். சீடர் தன்னைத் தன்னுலேயறிவதற்குப் பலபல சாலங்களைச் செய்தனர் ஞானதேசிகர்.

நன்கு ஊட்டி வளர்ந்த உடலுறுதிபடைத்த அவ்வினத் துறவியைப் பசியால் வாட்டிவதக்கிவிட்டார் செல்லப்பர். அவர் ''சரி வா ஐயனிடம் போய் சாதம் வாங்கி உண்போம்'' எனக்கூறித் தேர்முட்டிப்படியிலிருந்து நல்லூரான் வாசலுக்குச் சீடரையும் அழைத்துக் கொண்டு செல்வார். தற்போது போல நேரந்தவறாது அக்காலத்தில் பூசைநடைபெறுவதில்லை. ஐயரின் நேரவசதிக்கே பூசைநடைபெறும். பூசையாகாமையால் தேரடிக்குத் திரும்புவர். இவ்வாறுய்த் தேரடிக்கும், கோயில் வாசலுக்குமிடையே நடந்து நடந்து அலுத்துப் போய் பொறுக்கமுடியாத வயிற்று நெருப்பால் வருந்தும் சாய் பொழுதில் சீடரிடம் ஒருசதத்தினைக் கொடுத்து ''ஏதேனும் வாங்கி உண்'' எனப்பணிப்பார் செல்லப்பர். ஒருமுறை சாவகச்சேரிச் சந்தையில் ஒரு கத்தரிக்காய் வாங்கி வந்து குருவும் சீடரும் ஒரு சோறும் ஒரு கறியும் சுவையாய்ச் சமைத்தனர். பசியாறுவதற்கு ஆயத்தமாகும் சீடர் பார்த்திருக்கும் பொழுதே செல்லப்பர் சாதமும், கறியமுதும் நிறைந்த பானை சட்டிகளை உடைத்துக் கொட்டிவிட்டு ''இப்பொழுது இதற்குச் சாப்பாடு எதற்கு?'' எனக் கூறிய வண்ணம் தேர்முட்டிப்படிக்குச் சென்று மாறுத மௌனத்தியானத்தில் ஆழ்ந்தனர். பசியாறுவதற்கு வேறுவழியின்றி வெம்பசியிலே வாடிவதங்கிச் சோர்ந்து போய்க் கிடக்கும் நிலையிலே அந்தப்பலவீனத்தையே பலமாகக் கொண்டு யோகமுனி சிந்திப்பார்; ''சாப்பாடு இந்தத் தேகதிற்குத்தானே! நான் தேகமா? நான் தேகமன்று; நான் ஆத்மாவே; ஆத்மாவுக்கு உணவெதற்கு? ஆத்மாவின் உணவு மனப்பாக்கியம் என்னும் சமைக்காத சாதமே.'' சீடர் இவ்வாறுய்ச் சிந்தித்துப் பசியினுல் வாடும் தனது தேகத்தினின்றும் பிரிந்து தேவை எதுவுமற்ற ஆன்மசுகத்தில் பயிலமுடிந்தது.

தேகத்தினின்றும் பிரிந்து துரியமுமிறந்த சுடராய் தேர்முட்டிப்படியில் வீற்றிருக்கும் செல்லப்பவேடம் இவ்வான்மசுகத்தின் கண்ணுற் காணும் சாட்சியாகக் காட்சி தந்தது. யோகமுனி அக்குருமூர்த்தத்தைத் தியான மூலமாகக் கொண்டு, ஆன்ம நிறைவில் ஆழ்ந்து, பொங்கிவரும் போனகத்தை உண்டு சுகித்தார். இவ்வாருய்ப் பொறுமையுடன் பசித்திருந்து தாம் கற்பித்த ஆன்மபாடத்தினைப் புரிந்து கொண்ட யோகமுனிக்கு, அண்ணல் செல்லப்பரே உண்ண உண்ணத் தெவிட்டாத நல்லமுதாயினர்.

யோகமுனி சுடச்சுடநோற்றே சுடர்மிகுந்த அறிவுமணிகளைப் பெற்றனர். சிலவேளைகளில் ஒன்றுக்கொன்று மாறுபாடாயுள்ளதுபோலத்தோன்றும் அறிவுரைகளைச் செவியுறும் போது அன்பர் மிகவும் திணறிப்போவார். ஒருசமயம் 'காண்பதெல்லாம் வீண்பாவனை; அவற்றை விட்டொழி' எனக் கூறுவார். இன்னெருசமயம் 'பார்ப்பதெல்லாம் பரம்; ஆகையால் எங்கும் ஈசனைக்கண்டு இன்புறுக'' எனப் புகட்டுவார். ஒருசமயம் 'உலகமாயையினின்றும் பிரிந்து ஆறுதலாயிரு'' என்பார். மற்றெரு சமயம் 'உலகமாயையாகிய கானகத்தில் சிங்கம்போன்று உலாவித்திரி'' எனத் தூண்டுவார். இவைபோன்று முன்னுக்குப்பின் முரண்படுவன போன்ற கூற்றுக்களின் உண்மையைப் புரியமுடியாது தடுமாறும் போது அவ்வாறு புரியவிடாமற் தடுக்கும் தடைகளை நீக்குவதற்காகச் சீடருக்கு ஏச்சு விழும். ''சின்னத்தனமான வார்த்தைகளைச் செப்பி என் கன்மனசை முற்றும் கரைத்த குருநாதன்'' முதலாயவரிகளை இவ்விதமான ஏச்சுவிழுந்த சந்தர்ப்பங்களை நினைந்தே சுவாமி பாடினர். இவற்றைக் குறித்துக் 'கூறியதைக் கூறன். மாறுபாடாய்ப் பேசிடுவான்' என்றவாறு சுவாமி பின்னர் பாடியது உபசாரமாகவேயாகும். அவற்றுள் ஒரு மாறுபாடுமில்லை. அந்தச்சோடி வாக்கியங்கள் ஒன்றையே கூறின. அப்பக்கம் இப்பக்கம் சாயாது வாள் முனையில் நடப்பது போல் ஒழுகுவதற்காக அவ்வாறு கூறப்பட்டன. 'எங்கும் ஈசனைக் கண்டின்புறுவார்க்கே காண்பதெல்லாம் பொய்' என்பதும் வெளிச்சமாகும். சும்மாவிருக்க வல்லார்க்கே

உல்லாசமாகத்திரிதலும் கூடும். சில வேளைகளில் கீழ்நிலையி னின்றும் மேனிலைக்கு வளர்த்தெடுப்பதற்காகச் செல்லப்ப தேசிகர் முன்னர் கூறியதுடன் முரண்படும் உபதேசங்களைக் கூறுவார். ஒருசமயம் ''காயமே கோயிலாகக் கண்டு பாவனை செய்'' என நேயமுடன் கூறுவார். அப்பாவனையிற் பயின்று முதிர்ந்து வரும் தருணத்திலே ''பாவனையெல்லாம் மனதில் நிகழ்வனவே. சடமான மனத்திலுல் எவ்வாறு இறை வனை உணரமுடியும்? மனமுமிறந்து நினைப்பற நிற்றல் வேண்டும்'' எனக் கூறிப் பாவனையொன்று பண்ணவும் விடார். ''ஒழுக்கம் ஒன்றே உயர்வைத் தரும்; பிற சாதனைகள் எதுவும் வேண்டியதில்லை'' என ஒருமுறை கூறுவார். ஒழுக்கத்தில் உயர்ந்தோனுய் வளர்கையில் 'ஒழுக்கமும் மாயையே; ஒழுக்கமும் கட்டுப்படுத்தாத உயர் நிலையில் நிற்றல் வேண்டும்' என்பார்.

ஒருவன் எத்தனை வித்தை கற்றபோதும் துயராக்கை யின் திண்வலைக்குள் அகப்பட்டுக் கிடக்கும் வரை துயரு றுதல் இயல்பே. யாக்கை என்பது யாது? மாயவிருள், பாசவினை, வஞ்சப்புலன், விலங்கும்மனம் முதலியவற்றுல் யாக்கப்பட்டதே யாக்கை. யாக்கைவலையுளகப்பட்ட, தவத்திலுல் மேம்பட்டோரைக்கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்வன. கலக்கமலமானது கடலலை போன்று ஒன்றன்பின் ஒன்றுய் ஓயாது வந்து மயக்கும். குரங்கு போல் கூத்தாடும் இயல்பினது மனம். தவஞானக் குருவடிவத்தை அண்டி மிகவும் விழிப்போடிருக்கும் யோக முனி மனம் முதலியவற்றின் குறும்புகளால் சிறிது தளம் பிய வேளைகளிலும், சிறுதூசு கண்ணிற்பட்டாலும் பெரும் எரிவு எற்படுவதுபோலப் பெரிதும் வெதும்பினர். ஆசா பிசாசை அகற்றமுடியவில்லையே எனவும், சித்தத்தை 'நில் லடாநிலையில்' என்று நிறுத்த முடியவில்லையே எனவும் மனம் நொந்தனர். வலியற்றுத் தளர்ந்து போனவராய்த் தனது தனித்துணையான குருநாதனை நினைந்து

''செல்வக் குருநாதா செல்வக் குருநாதா
சிந்தை தடுமாறுதடா திருவருளைத் தந்திடடா''என்றும்

''கூத்தாடுதே மனமென்ன கொடுமை
கும்பிட்டேன் குருநாதா நான் உன்அடிமை'' என்றும்

''பாரையனே கடைக்கண்ணுற் பாரையனே'' என்றும் அழுது மன்றுடி வேண்டினர். ஆனல் தவராசக் குருவடி வமோ இவ்வாருன வேளைகளில் அன்பில்லாச்போலப் பரா முகமாகவே யிருந்தது. ''குப்பைகளெல்லாம் கொழுத்தி எரிக்கப்படவேண்டும், அதனல் ஆன்மாவுக்கு ஒன்றும் நேராது'' என்பதைக் குருமணி அறிவார். அரிசி உலை நீருள் கொதிப்பதும், மூடிய பானைக்குள் புழுங்குவதும், பதமான சாதமாகச் சமைவதற்கேயாம்; காலில்தைத்தமுள்ளை எடுப் பதில் நோவுண்டாகும் என்பதற்காக முள்ளை எடுக்கும் முயற்சியை இடையில்விடும் மூடத்தனமான இரக்கம் உடையவரல்லர் செல்லப்பதேசிகர். ஆகையால் அவர் ''வில்லங்கங்கள் வரட்டும்; வில்லங்கத்துள்ளே விளங்கும் நல்லருள்'' எனக்கூறிக்கொண்டு வன்மம் சாதிக்கிறரோ என்றுஎண்ணும்படியாகச்சும்மாயிருப்பார். அவரதுகருணையா னது கண்டிப்பான ஒழுங்கு எனுங்கோலத்திலேயே இவ்வாருன தருணங்களில் வெளிப்படலாயிற்று. இவ்வாருய்த் தேக மாயையைவெல்லும் முயற்சியானது சோதனைகளும், வேதனை களும் நிறைந்ததாய் - அக்கினிமண்டலத்தைத் தாண்டும்- முயற்சியாய் அமைந்தது. சீடரும், நோயின்றிக் குழந்தை பெறமுடியாது; அப்படியாயிருக்கையில் ''அவனியெல்லாம் ஆள - சகல சம்பத்தும்பெற -எவ்வளவு பாடுபடவேண்டும்!' என்பதை உணர்ந்தவராய்த் துன்பங்களையெல்லாம் உறுதியு டன் ஏற்றார். தான்பட்ட பாடனைத்தையும் இரட்டிக்கூறும் சந்தர்ப்பமொன்றுசீடருக்கு ஞானியானபின்னர் வாய்த்தது. கொழும்புத்துறை விதானையாரும், செல்லப்பரின் மற்றைய சீடர் சிலரும் சுவாமியுடன் உரையாடியிருந்த வேளையில் விதானையார் யோகசுவாமியை நோக்கிச் ''செல்லப்பர் எல் லாவற்றையும் உங்களிடத்திலேயே கொட்டிப்போட்டுப்போய் விட்டார்'' எனக்கூறினர். அப்பொழுது சுவாமி கூறியவாச கம் அவர் பட்ட பாடனைத்தையும் உணர்த்துவதாயிருந்தது. அவ்வாசகம் மேல்வருமாறு:- ''சும்மாவா பெற்றேன்! மலையை வெட்டியல்லவா பெற்றேன்''

செந்தண்மை பூண்ட செல்வன்

மெய்ப் பொருளானது செல்லப்பர், மற்றும் சிவயோகர் எனும் இரு வேடங்களைத் தாங்கிக் குருவாகவும், சீடனுகவும் நல்லியில் அளித்த நாடகத்திலே சீடனின் பாடுகளுடன் சற்குரவனின் கடலனைய கருணைப் பெருக்கும் கலந்து கிடக்கின்றது. மலையை வெட்டுவது போன்ற சீடனின் பாடுகள் சமையற் பணிக்குக் காய்பிஞ்சு வெட்டுவதையும், தேங்காய் துருவிக்கொடுப்பதையும், மற்றுஞ் சிற்றாழியஞ் செய்வதையும் போன்றதே. சுவைமிக்க அக்கறியமுதினைக் குருமணியே பாகஞ்செய்கிறார்.

''வன்மந்தாழ்'' எனச் சீடரெண்ணிய தெல்லாம் 'பந்த மறுதருணம்' பார்த்திருக்கும்குருபரனின் பொறுமையையே யாம். கருணை மேகனை குருபரன் தருணம் வாய்த்ததும், அக் கணத்திலேயே பெருகிய அன்புடன் பருவத்தில்மழை பெய் தூற்போலப் பந்தத்தை நீக்கியருளுவார். 'பவப்பிணி'யால் நொந்துநோக்கும் சீடரைப்பார்த்து 'ஒழிக உன்பவம்' என ஆணையுரைப்பார்; மட்டுப்படா மயக்கமெல்லாம்போக்கி யருளுவார். அஞ்சிமிக வழியறியாது அயர்ந்துமனந்துடித்து ஆருக விழிபெருக அலமந்து வாடி தஞ்சமெனவந்து அடியடைந்த ஏழையடியவரை ''அஞ்சல் அஞ்சல்'' என்று பலகாலும் அபய மளித்து இன்பவள நாட்டில் குடியிருத்துவார். நம்பிக்கைக் குறைவால் தடுமாறும் சீடரைத் தைரியத்துடன் நோக்கி ''ஐயம் ஏன் காணும்'' எனக்கூறி உறுதியளிப்பார். 'ஏது நேருமோ' எனப்பலவற்றையும் பலவாறுக எண்ணி அஞ்சி நிற்கும் அன்பனைப்பார்த்து ''எல்லாம் எழுது சித்திரங்களே! சித்திரப்புலிக்காக அஞ்சுகின்றனையே?'' என்றவாறு கூறிச் சீடரை ஓவியம் போலவாக்கி வேகத்தைக் கெடுத்தாள் வார்.

சால அன்பொடு குருவின் பாதத்தைக் கும்பிட உந்தும் குருபத்தியை அன்பர் பெரிதாயெண்ணுவர். அவ்வன்பரது

அன்பினும் கோடிமடங்கதிகமான அன்பேமயமான குருபரன் தம் ஆர்வத்தை உள்ளேவைத்து அடக்கமாக அமர்ந்திருப்பார். செல்லப்பர் என்னுஞ் சீமான் தேர்முட்டிப் படியிலே தமது கண்மணியான சிவயோகச் செல்வரின் வரவை எதிர்பார்த்திருப்பார்! சிவயோகச் செல்வரும் அன்போடுசென்று கிடுகிடெனும் நடுக்கத்துடன் கிட்டநெருங்கி வித்தகத்திருவடிகளை வீழ்ந்து கும்பிட்டு நிற்பார். அப்பொழுது கண்ணப்ப நாயனரின் அன்புக்குருகிய காளத்தி அப்பரின் பேரருளைச் சிறிதேகாட்டும், செல்லப்பதேசிகரின் கருணைபொங்கும் பொன்வண்ணச் சுந்தரவதனத்தைக் கண்ணுற்றுக் கண்ணீர் துளிர்ப்பார். அன்னையிலும்சால அன்புடையவரே செல்லப்பர்.

செல்லப்பர் பங்குனி மாதத்து முதற்றிங்கள் தோறும் மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன் கோவிலுக்குப், பரிவோடு சீடரையும் அழைத்துக்கொண்டு செல்வார். சீடரும் திருவடியினைப் பின்தொடர்ந்து பாதயாத்திரை செய்பவராய் உருகும் உள்ளத்தோடு செல்வார். இருவரும் அம்மன்கோயிலிலுள்ள புனித தீர்த்தத்தில் நீராடி ஆர்வத்தோடு பொங்கலிடுவர். சீடர், சும்மாவிருக்கும் செல்லப்பதேசிகர் சுறுசுறுப்பாய்ப் பொங்கலிடுவதை நோக்கி ஆன்மீகப்பாடமொன்றைக் கற்பார். அம்பானைத் தரிசித்து வழிபட்டு நிற்கும்போது பால்நினைந்து அழுத பன்றிக் குட்டிகளுக்காகத் தாய்ப்பன்றியாகக்கிடந்து பால்சொரிந்த கருணையைநினைந்து மனம் நெகிழ்வார். அன்று காட்டிலே பன்றியாய்க்கிடந்து பாலூட்டிய அப்பரம் பொருளே இன்று நாய்போல் திரிந்தும் நரிபோலுழன்றும் தமக்கு ஞானபோனகம் சொரிகிறதெனும் குறிப்புத்தோன்ற நீராயுருகுவார். சீடன்பொருட்டாக இல்லையெனில் மந்திரமுந் தந்திரமும் வேண்டாத அந்தமகானுக்குப் பொங்கல் பூசையெல்லாம் எதற்கு?

ஒரு சித்திரை வருடப்பிறப்பன்று 'இன்று கீரிமலைக்குச் சென்று நீராடினால் நன்முயிருக்கும்' எனும் எண்ணம் யோகமுனியின் உள்ளத்தில் உதித்தது. அவர் இவ்வெண்ணத்தைத்

தனது அகத்துள்ளே வைத்துக்கொண்டு குருபரனைகும்பிட்டு நின்றார். அப்பொழுது செல்லப்பர் ''சரிஇன்று கீரிமலைக் குச் சென்று தீர்த்தமாடி வருவோம்'' என்று மொழிந்தார். தனது சித்தத்தைப் பிரதிபலிக்கும் அச்சொற்களைக் கேட்ட யோகமுனி ''நினைப்பவர் மனத்துக்கோர் வித்துமாயிருக்கும் நுணுக்கரிய நுண்ணுணர்வே செல்லப்பர்''என வியந்தார். கீரிமலைக்குச் சென்று கேணியை நெருங்கியதும் தீர்த்தநீரிலே நீந்திக்குளிக்கும் ஆர்வங்கொண்ட யோகமுனி வரைப் பார்த்து 'சரி தீர்த்தமாடியாயிற்றுத் திரும்புவோம்' எனத்தீர்க்கமான குரலிலே கூறினர் செல்லப்பதேசிகர். அவரால் தீர்த்தநீருள் இறங்காமலேயே தீர்த்தமாடமுடியும். செல்லப்பதேசிகர் எனும் பேரின்ப வெள்ளத்துள் மூழ்கித் திளைத்துக் குளிர்ந்த உள்ளத்தினராய்த் திரும்பிய யோகமுனிவர் தனையாண்ட தன்சொந்தக் குருமணி இந்தத்தேகத் தளவினரல்லர் என எண்ணலானர். நல்லூருக்கு வரும்வழியிலே மருதடி விநாயகர்தேர்த்திருவிழாவையும் பார்த்தனர். விரைந்த நடையினாலும், மிகுந்த பசியினாலும் வாடிப்போயிருந்த சீடரிடம் இருசதக்காசுகளைக் கொடுத்துப் பிட்டு வாங்கியுண்ணுமாறு செல்லப்பதேசிகர் கூறினர். சீடர் இனியபிட்டினை உண்டு தண்ணீர்ப் பந்தரில் சருக்கரை நீரும் வாங்கிக்குடித்துப் பசியாறியபின் குருநாதரையடைந்தார். மீண்டும் விரைந்தநடை தொடங்கியது. பிட்டும், நீரும் வயிற்றுள் குலுங்கத் தொடங்கின. 'இனி நடக்கமுடியாது' என எண்ணியவராய்ச் சீடர் வீதியின் ஒருகரையில் ஒதுங்கியிருக்க முனைந்தபோது பின்னால் திரும்பிப்பாராமலேயே செல்லப்பர் 'சரிவா வா' எனச்சத்தமிட்டார் . நெற்றியிற் கல்லைவைத்தவர்போன்று விண்ணை நோக்கியவண்ணம் விரைந்து நடக்கும் செல்லப்பர் நிலத்தைப் பாராமலேயே எச்சிலிலும், எறும்பு நிரையிலும் கால்வையாமல் எட்டிக் கடந்து செல்லும் இயல்பினர். அவரால் மேலும் கீழும் முன்னும் பின்னும் பார்த்தல் இயலும். கண்ணுக்குக் கண்ணால் பார்ப்பவராதலால் அவரால் இவ்வாறுசெய்தல் இயல்

பாகிறது என எண்ணமிட்டவராய்ச் சீடர் குருபரனைப் பின் தொடர்ந்து சென்றார்.

இறைவனும் குருவும் ஒருவரே

செல்லப்பர் தம்மை ''இன்னன் இவன்'' என உளவறிந்து கொள்ள வல்லவனுய் வளர்ந்துள்ள யோகமுனிக்குத் தமது உண்மையை மறைக்காமல் உணர்த்தத் திருவுளம் பற்றினர். அப்போதைக்கப்போது தமது அருள் வேடங்காட்டலானர். செல்லப்பமூர்த்தம் தேர்முட்டிப்படியில் மாறுத மௌனத்தியானத்திலிருந்த வேளைகளில் அம்மூர்த்தத்தை நோக்கி உளம் உருகிநின்ற யோகமுனிவர் அக்குருமூர்த்ததை மௌன மொழியாலே அறம் உரைக்கும் தக்ஷிணாமூர்த்தமாகவே உணர்ந்தார். தன்னைடு மாறுபட்டோரை உதைப்பதற்காகக் காலைத்தூக்கி ஓடும் செல்லப்பரின் சாலத்தில் நடராச வள்ளலின் நளின பொற்பாதம் தெரிந்தது. நல்லூர்க்கருவறையிலும், தேரடியிலும் எழுந்தருளியிருப்பவர் ஒருவரே எனுந் தெளிவு சீடரிடம் நிலைத்தது. ''இறைவனே குருவாக வந்துள்ளார்'' எனும உண்மையை உணர்ந்து கொண்ட யோகமுனியின் சித்தத்தைக் காட்ட யோகமுனிவரின் மணிவாசகங்களிலும் சிறந்த சொற்கள் வேறில்லை.

''தேகமே மெய்யென்று சிதடனைய்த் திரிவேனை
மோக மறுத்தாண்ட முழுமுதலே மொய்குழலாள்
பாகம் மறைத்துப் பரிந்துவந்த பாக்கியத்தை
நாகமலர் சொரியும் நல்லூநகர் கண்டேனே''
''இருவினையால் மதிமயங்கி இடர்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினுல் ஆண்டு கொள்ளக் கடவுள் திருவுளங்
கொண்டு
அருள்மேனி தாங்கி அவனியிலே வந்தானைத்
திருவாரும் நல்லூநகர்த் தேரடியிற் கண்டேனே''
அருந்தவ யோகர் தெய்வம் வேறெயுண்டு எனும்

சிந்தையிறந்தவரானர். அவருக்குச் செல்லப்பதேசிகரே கூடவளாவார். செல்லப்பன் என்னும் சீமான் வீற்றிருத்தற் கேற்ற சீரிய சிம்மாசனமாகச் சிவயோகச் செல்வர்தம் இதய மாமலரை மலரச்செய்தார். தமது இதயமாமலரில் செல்லப்பதேசிகரை வீற்றிருக்கச்செய்து ''கண்ணே உறங்கு றங்கு கார்வண்ணு நீயுறங்கு, எண்ணேன் பிறதெய்வம் என்னிதயத்தே உறங்கு'' என்றவாறு சீராட்டித் தாலாட்டிப் போற்றுதல் செய்தார். செல்லப்பதேசிகரும் தேர் முட்டிப்படியிற் சிங்காரமாய்க் கிடந்தது போல அன்பரின் சித்தத்திலும் சிங்காரமாய்க் கிடந்து பஞ்சாமிர்தம் தித்தித்திருந்தார். அன்பர்தன்னை உருத்தெரியாக் காலத் திருந்து அன்னையாய், தந்தையாய், ஆசிரியனுய், ஊனுய், உயிராய், உள்ளும்புறம்பும் எனும் அனைத்துமாய்க் கலந்து நின்று வளர்த்தெடுத்த அப்பொருளே இப்பொழுது கண்களாற் காணுமாறு மண்மேல் மனிதனுக நடமாகிறது என்பதை அணுவும் ஐயத்துக்கிடமின்றித் தெளிந்துகொண்டார். இவ்வாறுய் மருளகன்று தெளிவுபெற்ற 'சிவயோகப்சு' தேர்முட்டிப்படியில் வீற்றிருந்த செல்லப்பதேசிகனை தனது மேய்ப்போனின் தீங்குரலிசையைப் புரிந்து கொண்டது. அவ்விசை முன்னர் சிவபுரத்தில் கேட்டுச் சுகித்த அமுத கீதமேயாகும். ஆதலால் ''சிவயோகப்பசு'' தேசிகனின் திருவடிக்கீழ்க் கிடந்து செவியாட்டாது, வாயசைக்காது அவ்வினிய இசைக்குக் காதுகொடுத்துக் கிடந்தது. எட்டும் இரண்டும் அறியாத ஏழையடியவனுக்குப் பட்டமளிப்பதற்காக, ஏகமாகிய அப்பரம் பொருள் நியாகமாகி, இப்படியோர் கந்தைத்துணியணிந்த பித்தனுய்த் தேர்முட்டிப் படியிலிருக்கும் கருணைக்குச் செய்யும் கைமாறுளதோ? யோகமுனிவர் உடல்பொருளாவியெல்லாம் உன்னதே எனத் தேசிகமூர்த்தியிடம் தன்னை முற்றுக ஒப்புக் கொடுத்து ''ஐயனே நான் உன் அடிமை, உடைமை எனக் கூறியவராய்த் திருவடிக்கீழ்க் கிடந்தார்.

தீக்கை

தன்னை முற்றுய் அர்ப்பணித்த சிடனைத் தீக்கை வைத்தாளத் திருவுளம்பற்றினர் செல்லப்பதேசிகர். அத்தீக்கை பற்றிய குறிப்புகள் நற்சிந்தனையிலே அங்கும் இங்குமாய் உள்ளன. அவற்றைத் திரட்டி மேல்வருமாறு கூறலாம்:- அது திவ்வியமான கிரியைகள் நிறைந்த தீக்கையன்று. அத்தீக்கை குருபரனின் பாவனையாற்றலால் அளிக்கப்பட்டதீக்கையேயாகும். ஒருநாள் செல்லப்பதேசிகர் உவகைபூத்தமுகத்தினராய் தமது ஞானப்புதல்வனை உற்று நோக்கினர். பின்னர் ஒப்பற்ற ஒரு மொழியான மங்கல மந்திரம் ஈந்தனர். அத்திதிக்கும் ஒரு மொழியால் சீடர் சின்மயத்தைக் காணும் தெளிவு பெற்றனர். தம் முன்னே நிற்கும் குருபரனின் அருள் மேனி அண்டபிண்டமெல்லாம் அடக்கிய ஒப்பற்ற பேருருவாய் நிற்பதைச் சீடர் தரிசித்தனர். சீடர் முகமுகமாய்க்கண்ட அப்பேருரு எத்திக்குமாகி நின்றது. பின்னர் தேசிகமூர்த்தி இப்பேருருவுக்கு ஆதாரமான தமது அருளாடலைச் சீடன் கண்டுகளிபெருகும் வண்ணம் காட்டியருளினர். அப்பால் மோனமுதலான செல்லப்பர் இக்காட்சியனைத்திற்கும் சூழ்ச்சிப் பொருளான அந்தம் ஆதியில்லாச் சொரூபத்தைக் காட்டிச் சீடரைச் சும்மா இருக்கும் சூழ்ச்சத்தில் மாட்டி விட்டனர். சீடர் சிவயோகத்தில் பொருந்தினர். கிரமமாக இங்கு கூறப்பட்ட காட்சிகளையெல்லாம், சீடர் ஒரேகணத்தில் தரிசிக்குமாறு செல்லப்பதேசிகர் மாயம் செய்தனர். இன்பதுன்பமெல்லாம் கடந்து சிவசோதியில் மூழ்கித்திளைத்த சிவயோகச்செல்வர் மர்மமெல்லாம் கண்டவராய் மலர்ச்சி பெற்றெழுந்தார். உலகு, உயிர், பரம், எனவொளிர்கின்ற மெய்ப்பொருள்ஒன்றே; அம்மெய்ப் பொருள் அன்று செல்லப்பமூர்த்தமாக இந்திரசாலம் புரிகிறது என்பது அவருகுக் கையில் நெல்லிக்கனிபோல் தெளிவதாயிற்று.

விண்போல் வியாபகம்

செல்லப்பதேசிகர் தமது கண்மணியான ஞானப்புதல்வனுக்கு ''அதுநீஆவாய்'' (தந்துவமலி) எனும் பட்டத்தைச் சூட்டுவதற்காகவே பித்தனுய்த் திரிகிறார். ஆயினும்

நாமதுவெடிநாமதுவெடி'' எனும் மோனசுகத்திலே பொருந்துவதற்கு முன்னர் ''எல்லாம் நாமடி எங்கும் நாமடி'' எனும் விண்போன்ற வியாபகத்தை அறிந்து சீடர் ஆனந்தக் களிப்பில் செப்மாந்து திரியவேண்டும் எனச் செல்லப்பர் திருவுளம் பற்றினர். அவர் சீடரிடம் ''அயலுனக்கில்லை; அனைத்தும் உனக்கு உறவே'' எனவும் ''முன்னிலையில்லை. முழுவதும் உன்னுள்ளே உள்ளன'' எனவும் உபதேசித்தனர். சீடரும் எல்லாரிடத்தும் மரம், செடி, கொடி முதலிய எல்லாவற்றிலும் தம்மை வளர்க்கும் பயிற்சியிலீடுபட்டார். இவ்வாறு அன்னியமில்லாமல் பார்க்கும் ஆன்மசாதனை காட்டை வெட்டியழிக்கும் ஆரம்பகால சாதனைகள் போன்று தகிக்கும் அனுபவங்களாக இல்லாமல் வழிநெடுக நந்தவனத்துக்கூடாகச் செல்வது போன்ற மகிழ்ச்சி நிரம்பிய சாதனையாக இருந்தது. எல்லாரது பலத்தையும், எல்லாரது நலத்தையும் தன்பலமாகவும், தன் நலமாகவும் காண்பது எத்தனைச் சிறப்பானது! 'அவன், அவள், அது எனும் அவையொரு மூன்றும்' சிவனர் லீலையாட்டெனத் தேறி அவற்றோடு தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்வது எத்துணை ஆனந்தமானது! ஆதலால் சீடர், அங்கும், இங்கும், எங்கும் நான், அதை அறியும் விசரன் நான் என ஆனந்தக் களிப்பினுல் ஆடிப்பாடிக் கொண்டு உலகில் ஆன்ம சாதனை பயின்றார். இந்த பயிற்சியாம் ஆன்ம சாதனை திக்குத்தெரியாத காட்டிலே மருண்டுபோய் பொய்நெறிகளிற் சென்ற பசுவை மடக்கி வழிக்குக் கொண்டு வருவது போன்றதாக அல்லாமல், தனது சொந்த இடத்தை மோப்பம் பிடித்துக் கொண்டு நேர்வழியே விரைந்து செல்லும் பசுவின் பின்னே ஆனந்தமாய் வருவதை ஒத்திருந்தது. ஆன்மீகப் பயணத்தின் ஆரம்ப வழியே சிரமமிக்கது போலும்; குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் 'அது இழுத்து எடுத்துவிடும் போலும்; சிவயோகச்செல்வர்

''எல்லார் உருவமும் என்னுரு வாகும்
எல்லார் நலன்களும் என்நல னாகும்
எல்லாச் பலன்களும் என்பல மாகும்
நல்லோர் என்னுரை நயந்துகொள் வாரே''

என்றவாறு தன்னில் எல்லாரையும், எல்லாரிலும் தன்னையும், காணும் சாதனையிலே உயர்ந்து சென்றார்.

சித்து மயக்கம் நீங்கல்

உலகெல்லாம் தனக்கு உறவாகியிருப்பதை உணர்ந்து கொண்ட சிவயோகச் செல்வருக்கு மூவர்களும் (பிரமா, விட்டுணு, உருத்திரன்) ஏவல்செய்யக் காத்திருக்கும் நிலை வாய்த்தது. எசமானன் வீட்டுச் சின்னத்துரைக்குப் பணிந்து ஏவலாளர் நடப்பதுபோல செல்லப்பரின் சிவசோதியைத் தரிசித்துவிட்ட ஞானப்புதல்வனுக்கும் மண்ணும் விண்ணும் ஏவல்செய்யத் தொடங்கின. ஒருநாள் எல்லாம் தன்கைவசமாச்சே என்னும் ஆனந்தக்களிப்புடன் சிவயோகர் நல்லூர் வீதியில் நின்றுகொண்டிருந்தார். அன்று ஒரு திருவிழா நாளாகும். சுவாமி வீதிவலம் வந்துகொண்டிருந்தது. சிவயோகச் செல்வர் ''இன்று சுவாமி நன்றாக நனையப் போகின்றார்.'' எனக்கூறினர். சிவயோகர் இதனைச்சொல்லி முடிப்பதற்குள், இன்னும் தன்னுல் முற்றும் உணரமுடியாதவாறு மருமத்தில் மருமமாயிருக்கும் மகத்துக்களாலும் அறியவொண்ணுத மாதவரான செல்லப்பர் தன்பின்னுல் நின்று ''இந்த நல்லூர்வீதியில் இப்படிச்சொன்னவர் கனபேர்'' என்று உறுமுவதைக்கேட்டார். அவ்வுறுமலைக்கேட்ட சிவயோகர் வெட்கித்துப்போனர். அன்று நிருமலமாயிருந்த வானம்சற்றுநேரத்தில் கறுத்திருண்டு பெருமழைபெய்தது. வீதிவலம்வந்த சுவாமியை நனைத்தது. ஆனால் செல்லப்பர் சிவயோகரிடம் தளிர்விட்ட சித்துக் காட்டும் மயக்கத்தை அப்பொழுதே அகற்றி விட்டார். சித்துக்களில் மயங்குவதற்கு அவற்றில் என்ன விசேடம் உள்ளது? உலகமே செப்படி வித்தை; அந்தச் செப்படி வித்தைக்குள் செய்யும் மற்றொரு செப்படி வித்தையே சித்து. அறிவாளிகள் அரிதிற் பெற்ற ஞானபொக்கிஷத்தை இப்படியும் வீணுகச் செலவு செய்வரோ? இவற்றினின்று விடுபட்டு நிற்பதே ஞானியரியல்பாகும். ஞானதேசிகர் உலகமாயையினின்று முற்றுய்விடுபட்டுத் 'தானேதானுய்' நிற்குமாறு சீடருக்கு உணர்த்தினர்.

தவம்

குருமணி, மூவரையும் ஏவல் கொள்ளக்கூடிய வல்லபத்தில் சிறிதும் மயங்காத தீரனுய் வளர்ந்து விட்ட ஞானப்புதல்வனை மௌனமணிப் பெட்டகத்தைத் திறந்து காண்பதற்கு வாய்ப்பாகச், சிறிது காலம் நல்லூர் தேர் முட்டித் தூணடியிலிருந்து தவமியற்றுமாறு பணித்தார். தமது இன்னெரு சீடரான கதிரவேலு எனும் அடியாரை யும் மற்றெரு தூணடியிலிருந்து தவமியற்றுமாறு பணித் தார். இரு தவசியரும் அவசிய கருமங்களுக்கு எழுந்து செல்லும் நேரம் தவிர மற்றைய நேரமெல்லாம் தூணடி யிலே இருந்தபடியே இருந்தனர். செல்லப்பரின் பழைய அடியவரான கொழும்புத்துறை விதானையார் தவசியருக்கு வேண்டிய சேவைகளைச் செய்து வந்தார். இவ்வாறு நாற்பது நாட்கள் தவம் இருந்தனர் என்பர். சிலர் அதி லும் குறைந்த நாட்கள் என்பர்.

கதிர்காமயாத்திரை

தவம் நிறைவுற்றதும் செல்லப்பர் ''இருயானைகளை ஒரு தறியிற் கட்டமுடியாது'' எனக்கூறி அவர்களைக் கலைத்து விட்டனர். கலைந்துசென்ற கதிரவேலுச் சுவாமியைப் பற்றி ஒருவரும் ஒன்றும் அறிந்திலர். சிவயோகர் அப்போது பல் துலக்கும் குச்சியுடன் நின்றிருந்தார். அவர் தமது சொந்தக் குருமணியைப் பஞ்சபூதத்தாலாய தேக அளவினராகக் கொள்ளமாட்டார். அங்கும், இங்கும், எங்கும் உள்ளவரே தமது குருபரன் என்பதை அவர் நன்கு அறிவார். தான் எங்கிருப்பாரோ அங்கு குருபரனும் கூடவேயிருப்பார் என் பதில் அவருக்கு ஐயமில்லை. தமது உள்ளும், புறம்பும் இருந்துதம்மை ஆள்பவர் அவர். ஆனல் புல்லனயிருந்த தனது புன்மை தவிர்த்து, சகல சம்பத்தும் தந்தது, செல்லப்பர் எனும் அருட்கோலமே என்பதை அவர் முழு மனதோடு நம்பினர். மூலையிலிருந்த தன்னை முற்றத்தில் விட்ட அந்த மாருக் கருணையரைப் பிரியலாகுமோ? உன்னைப் பிரிவேனை உயிர்நான் தரிப்பேனை என்றவாறு உருகிய

உள்ளத்தினராய்க் கால்போன போக்கில் போயினர். அவர் செல்லப்பதேசிகரின் நினைவேயல்லாது வேறெரு நினைவு மில்லாதவராய்ச் சென்றனர் என்பதற்குச் சான்று யமைந்தது ஆனையிறவுவரை அவர் பல்லிடையே இருந்த பல்துலக்கும் குச்சியாகும். அவர் ஆனையிறவிலே உலகியல் உணர்வுதோன்றத், தம்முடைய இந்தப் போக்கின் பொருளை நினைத்துப்பார்த்தார். அப்பொழுது தமது கால்கள் கதிர் காமயாத்திரையை மேற்கொண்டுள்ளன என்பது புரியலா யிற்று. இவ்வாறுதான் நாளைக்கென்ற எவ்வித சிந்தனையு மில்லாத பூரணதுறவொழுக்கத்தையுடைய பரிவிராசகராக அவரது கதிர்காம யாத்திரையமைந்தது. யோகநாதனைச் சிலநாட்களாகக் காணுத உறவினர் செல்லப்பரிடம் சென்று விசாரித்தனர். அப்பொழுது ஈனப்பிறவி நீக்கவல்ல செல்லப்பதேசிகர் ''அவன் செத்துவிட்டான்'' எனக்கூறி னர்.

ஈழத்தின் கிழக்குக் கரையோரமாக யாத்திரை செய்த யோகமுனி கிடைத்ததை உண்டார்; பொருந்திய இடத்தில் கண்துயின்ருர்; தமது திருவடிப்பரிசத்தாலே எதிர்ப்பட்ட தலங்களையெல்லாம் மகிமையுறச் செய்தார். கதிரைமலை செல்லும் வழியில் சித்தாண்டிப்பதியில் சிலநாள் தங்கியிருந்தனர். இதுபற்றிப் பின்னர் ''நான்சித்தாண்டியில் வேலுப்பிள்ளை வீட்டில் மூன்று நாட்கள் தங்கினேன்'' எனத் தம் அன்பரிடம் கூறினர். நல்லூர்த்தலம் போன்ற சித்தாண்டித்திருத்தலம் அவர்மனத்தில் நன்குகப் பதிந்திருந் தது. நல்லூர் என்பதற்குப் பொருள் கொண்டது போலவே சித்தாண்டி என்பதற்கும ஞானப் பொருள் கொண்டனர். சித்தாண்டி, சிற்றுண்டி என்னும் இவ்விருபதங்களையும் சிறு + ஆண்டி = சித்தாண்டி, சிறு + ஆண்டி சிற்றுண்டி என்றவாறு பகுத்துப் பகுத்துக் கூறுவர். இவ்விருசொற்களையும் தாம்சமாதியடைவதற்கு முந்தியசில மாதகாலமாய் இடையிடையே தம்பாட்டில் உச்சரித்துக் கொண்டிருந்தார். அவ்விடத்திலே ஒரு சிவதொண்டன் நிலையம் அமையவேண்டுமெனச் சுவாமி திருவுளம்பற்றினர்.

அவரது திருவுளப்பாங்கின் வண்ணம் சித்தாண்டி-செங்கலடியில் ஒரு மௌனமாயிருந்து இளைப்பாறும் சிவதொண்டன் நிலையம் 1964ல் நிறுவப்பட்டது.

கதிர்காமத்தை நோக்கிப் புனித யாத்திரையை மேற்கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள முஸ்லிம் கிராமமொன்றினூடாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது சிவயோகச் செல்வரின் அந்தரங்கத்தை அறிந்து கொண்ட இஸ்லாமிய சித்தர் ஒருவர், இவருக்குச் சங்கை செய்ய விரும்பினர். 'தகரன்' எனப்பலராலும் அழைக்கப்பட்ட அவ்விஸ்லாமிய சித்தர் சிவயோகச் செல்வரை விருந்துண்பதற்கு அழைத்தார். சிறிது தயங்கி நின்ற சிவயோகரிடம்உங்களுக்கும் இஸ்லாம்என்றுவேறுபாடுளதோ எனக்கேட்டனர். சிவயோகரும், சாதிசமயம் எனும் சங்கடத்துக்குள்ளாகாத தமதுசற்குரவனே நினைந்தவராய் விருந்தயரச் சென்றார். அங்கே இஸ்லாமிய மரபுக்குமாறுக இஸ்லாமியப் பெண்களும் ஆண்களுடன் சேர்ந்து தம்மை உபசரித்ததாகப் பின்னர் கூறினர். அவ்விஸ்லாமியச் சித்தர் சிவயோகச் செல்வரிடம் ஒரு காப்பினைக் கொடுத்து 'இதைக் கையிற் போட்டுச் கொண்டு செல்லுங்கள். ஒரு குறையும் வராது' எனக் கூறினர். பிற்காலத்தில் அக்காப்புப் பற்றிச் சுவாமி மேல்வருமாறு மொழிந்தனர். ''அக்காப்புக் கையிலுள்ளவரை இஸ்லாமியர் மிகுந்த மரியாதை செய்தனர். ஆனல் ஒருநாளிரவு தங்கிய மடத்திலே அந்தக்காப்பைக் கழற்றிவிட்டுச் சென்றேன், எமக்கென்ன தேவை'' கதிர்காம யாத்திரையின் போது காட்டு வழியாகச் சென்றுகொண்டிருக்கும் வேளையில் அவருடன் ஒரு முஸ்லிம் மந்திரவாதியும் சென்றார். அப்போது காட்டெருமை யொன்று வெருண்டு அவர்களை நோக்கி வெறியுடன் பாய்ந்து வந்தது. மந்திர மொழிகளைக் கூறி நின்ற அம்மந்திரவாதி அவ்வெருமை கிட்டநெருங்கிவிட்டதைக் கண்டதும் தன்னைத் தாக்கிக் கொன்றுவிடுமோ எனப்பயந்து உயிர்தப்புவதற்க்காகப் பக்கத்திலிருந்த மரத்திலேறினர். சிவயோகச் செல்வரோ

அவ்விடத்தில் நிலையாக நின்றனர். அவருடைய வீரசாந்தத்தின் முன் காட்டெருமை வேகமடங்கி அமைதியாய்த் திரும்பிச் சென்றது. யோகமுனிவர் தனிவழியே நடந்து சென்ற ஒருநாள் பெருக்கெடுத்தோடும் ஆற்றங்கரையொன்றையடைந்தனர். அந்த ஆற்றங்கரையிலே ஈரமணலை அகற்றிப் பள்ளமாக்கி மூன்று நாட்கள் கிடந்தனர். அன்னகாரமின்றிக்கிடந்த அந்நாட்கள் தேகத்தை மறந்து துரியாதீதத்தில் தூங்கும் நாட்களாயமைந்தன. மூன்றும் நாள்முடிவில்மூங்கிற்கட்டுமரத்திலேறிஆற்றைக் கடந்துவந்த வேடர் சிலர், அவரிடத்திலே தெரிந்த தெய்வீகத்தன்மையைக்கண்டு பயபக்தி பூண்டனர். அவரை ''உபாசக்கார மாத்தயா'' எனும் தமக்குறிந்த சொல்லால் அழைத்து துயிலெழுப்பினர். பக்குவமாய்ச் சமையல் செய்து உணவளித்த பின்னர் கட்டுமரத்திலேற்றி அக்கரையில் விட்டனர். கதிர்காமத் திருப்பதியில் சில நாட்கள் உறைந்தனர். நண்பகலின் பின்னர் சிறிது நேரம் மாணிக்ககங்கை மணலிலே சாய்ந்து ஓய்வு கொள்வதைத் தவிர மற்றைய நேரமெல்லாம் கதிரைமலையிலும், கோயிலிலுமாகக் காலங்கழித்தனர். இரவு முழுவதும் கதிரைமலை யுச்சியிலமர்ந்து தியானசுகத்தில் மூழ்கினர் பகல் வேளையில் கோயில் மண்டபத்திலமர்ந்து சும்மாயிருந்து சுகித்தனர். கதிர்காமத்திலுறைந்து மோனசுகத்தைச் சுகித்த பினனர் மேற்குக் கரையோரமாகக் கொழும்பை நோக்கிச் சென்றனர். கொழும்பிலே வீதிசுத்தம் செய்பவர்களுடன் சேர்ந்து வீதியோரங்களிலே தங்கினர். அவர் வீதிசுத்தம்செய்பவரிடத்தும், வேடரிடத்தும், சித்தரிடத்தும் ஒரு பொருளையே கண்டனர். அவர் பெரியவர் சிறியவர் எனும்பேதைமையைக் கடந்து நின்றனர். சாதிசமயம் என்பன அவரைச் சங்கடப்படுத்தவில்லை. இயற்கை அவர் சொற் கேட்டு நடந்தது. காட்சியைவிட்டுச் சூழ்ச்சியைத் தொட்டு நிற்கும் சாதனையாக அவருக்குக் கதிர்காமப் பாதயாத்திரை அமைந்தது. சிவயோகர் செல்லப்பர் தமது அருகில் வைத்துப் பயிற்றுவித்த உண்மைகளையெல்லாம் இந்நீண்ட பாதயாத்திரையிலே தனது சொந்த அனுபவமாக்கிக் கொண்டார். சிலநாட்களின் பின்

அவரது பயணம் மலைநாட்டை நோக்கியது. கொழும்பிலி ருந்து மாத்தளைக்கு வந்தபொழுது திருவருட்செயல் ஓர் அற்பு தம் நிகழ்த்தியது. மாத்தளையில் 'ஓவசியராகப் பணிபுரிந்த சரவணமுத்து (திரு தில்லையம்பலம் ஓவசியரின் மாமனார்)என் பவரின் கனவிலே ஒரு பெரியார் தோன்றி ''அடியாரொரு வர் பசியோடும், சுந்தைத் துணியோடும் வருகிறார். அவரை எதிர்கொண்டு உபசரி'' எனக் கூறி மறைந்தார். மறுநாட் காலை கனவிற் கண்டபடியே அடியவர் ஒருவரைச் சந்தித்து அவர் இன்னரென அறிந்ததும் மிகவும் மகிழ்சியடைந்தவ ராய் இல்லத்துக்கழைத்துச் சென்றார். இல்லத்திலே நீராடச் செய்து புதுவேட்டி சால்வை அணிவித்து, அமுதளித்து உபசா ரம் செய்த பின் வழியனுப்பி வைத்தார். சிவயோகச் செல்வ ரும் புகையிரதச் சீட்டுக்குரிய பணத்தை மாத்திரம் பெற்றுக் கொண்டு திரும்பவும் நல்லூருக்கு மீளச் சித்தம் வைத்தனர். இவ்வாறுய் ஆண்டியாகக் கருதிர்காம யாத்திரை தொடங்கிய சிவயோகர் புது வேட்டி சால்வை புனைந்து புகையிரதத்தி லேறி யாழ்ப்பாணம் சென்றனர் யோகநாதனைக் கண்ட உறவினர் மகிழ்ச்சியும், ஆச்சரியமுமடைந்தனர். அவர்கள் ''அவன் செத்துப்போனான்'' என்ற செல்லப்பர் சொல்லை நம்பி கருமாதிகளையெல்லாம் முடித்திருந்தனர். ஆதலால் செய்வதறியாது திகைத்தனர். அவர்கள் செல்லப்பரிடம் சென்றுமுறையிட்டனர். செல்லப்பர் ''நாங்கள் பொய்சொல் வதில்லை, அவன் செத்துவிட்டான்'' என மீண்டும் சொன்னார்.

ஆசான் அருளால் ஆசானைக்கண்டிலர்

உலகக்கானகத்தில் திக்குவிசயத்தை முடித்து வெற்றி யோடு மாவீரனாய்த் திரும்பிவந்த சிவயோகச்செல்வர், தான் பண்டுதொட்டு உறவுபூண்டுள்ள பரமசிவமான செல்லப்ப ரைத் தரிசித்து அவர் திருவடிகளில் வீழ்ந்து நீராயுருகிக் கிடந்தனர். சிவகுருவான செல்லப்பரும் தமது கண்மணி யான ஞானப்புதல்வனுக்குப் பட்டமளிப்பதற்குமுன் உயர் ஞானசாதனையை உணர்த்த நாடினார். அவர் சிவயோகச் செல்வரைப்பார்த்து ''எங்காவது வேரை விராயைப்பார்'' என மொழிந்தனர். வேரை விராயைப்பார்ப்பதற்குப் புறப்படு முன் குருமணியின் அடையாளமான எதையேனும் கூட வைத்திருக்கும் ஆசையினாலே செல்லப்பதேசிகரின் அருகி லிருந்த பாத்திரமொன்றை ஆர்வத்தோடு பார்த்தார். அப்பொழுது செல்லப்பர் ''இது உனக்குப் பந்தமோடா'' எனும் இடிக்குரலில் அப்பாத்திரத்தைத் தரையிலெறிந்து உடைத்தார். குருவை வேறுகப் பார்த்துப் பத்திசெய்யும் துவைத பாவனைக்கு எழுந்த முதலடியாக அச்செயல் அமைந்தது. சிவயோகர் குருவாக்கை அவ்வாறே தலைமேற் கொண்டு கொழும்புத்துறைச் சந்தியிலிருந்த இலுப்பைமர வேரிற் போயமர்ந்தனர். அவ்வேரிலேயே மழையையும், வெயிலையும் பாராது அமர்ந்திருந்தார். இரவிற்பகலில் எந்நேரம் சென்றாலும் அவர் நித்திரையை நீக்கி நினைவா யிருந்தமையைக்கண்டோர்கூறுவர். அவரைவெய்யில்சுடாது; மழை நனைக்காது; அவருக்குத் தூக்கமில்லை. தூங்காமல் தூங்குபவரவர். இடையிடையே செல்லப்பர் வந்து சீடரைக் கண்ணுற்றுச் செல்வார். இவ்வாறு தேசிகர் தன்னை நாடி வந்த ஒரு சமயம் சிவயோகர் எழுந்து கும்பிடச் சென்றார். குருமணியோ கும்பிட எழுந்த ஞானப் புதல்வனை இடை மறித்து ''என்ன இரண்டாகப் பார்க்கிறாய்? ஒன்றுகப்பார்'' என்று கூறினார். சிவயோகர் தேசிகமூர்த்தியின் வார்த்தையில் கட்டுண்டு எழுந்தபடியே நின்றார். அவர் இறைவனையும், குருவையும் இரண்டாகப் பார்க்கும் அறி யாமையினின்றும் விடுபட்டிருக்கிறார். சிவபெருமானும் தனது சொந்தக் குருமணியும் ஒருவரே என்பதைக் கையில் நெல்லிக் கனியெனக் கண்டுகொண்டிருக்கிறார். ஆனால் மாதி ருக்கும் பாதியை மறைத்து மனிதர் போலுலாவும் தேசிக மூர்த்தியும் சீடரும் ஒருவராதல் சாலுமோ? மேனிலையடை வதற்குக் குருபதத்தைக் கும்பிட்டுக் கிடக்கும் பாக்கியத்தை யும் கடந்து அப்பால் செல்ல வேண்டுமே? காண்ப தெல்லாம் பொய்யென்றும், அவ்வீண்பாவனையெல்லாம் விட்டொழி யென்றும் பயிற்றிய ஆசான், இப்பொழுது ஆசானுகிய தன்னையும் காணுதிருக்குமாறு கூறுகின்றனரே!

தன் சீடனை ஞானப் பெருவெளியில் குடியிருத்தி வைப்ப தற்காகக் குருசீட முறையையும் கடக்குமாறு கூறும் இக் குருபரன் எத்துணைத் தியாக விநோதராக உள்ளார்; இவ் வாறு சிந்தித்து நின்ற சிவயோகச் செல்வர், தியாகேசரான செல்லப்ப தேசிகரைப் பனியரும்புதிரும் கண்களுடாகப் பார்த்தார். தேசிக மூர்த்தியும் கருணை பூத்த திருமுகத்தால் நேர்நேராய் நோக்கினர்; புன்னகையோடு ''நீயென நானென வேறில்லை; நீயே நான்'' எனக் கூறினர். குருபர னின் நோக்கும், வாக்கும் சிவயோகரின் கண்ணின் நீரை மாற்றின; ஆசான் அருளால் ஆசானையும் காணுதவராயி னர். அவருக்கு நீ நான் இல்லாத நீங்காத நின்மல நிட்டை பலித்தது. தானென தன்னிலையில் தனியே இருந்தார்.

சகசஸ்திதி

ஞான நிட்டையில் நிலைத்த சிவயோகச் செல்வரிடம், தேசிகவேடம் மீண்டும் ஒரு முறை வந்தது. சிவயோகர் வேறொரு பொருளுமில்லாத வெட்ட வெளியிலே ஒன்றையும் காணுதவராய் சும்மாவிருந்தார்: அப்பொழுது செல்லப்ப மூர்த்தம் ''பார், நான் ஒரு குரு வந்து நிற்கிறேன்; பேசாதிருக்கின்றாயே'' என மொழிந்தது. இந்த நாதம் நற்றவயோகரை அருட்டலாயிற்று. அவர் எழுந்து சென்று தேசிக மூர்த்தியின் திருவடிகளிலே கும்பிட்டுக் கிடந்தார். சிவதொண்டனுய் மலர்ந்து சமூகத்தில் வாழ வேண்டிய தமது ஞானப்புதல்வன், தம்மைப் போலப் பித்தனுகத் திரியாது, உலக ஆசாரங்களைக் கவனமாகப் பேணும் பாடறிந் தொழுகும் பண்பாளனுகத் திகழ வேண்டும் என்பதற்காகச் செல்லப்ப மூர்த்தம் இவ்வழகிய ஆடலை நிகழ்த்தியது. இப்பொழுது சிவயோகசுவாமி ஞானவரம்பான மோன சுகத்தில் கணமும் பிரியாது நிலைத்து நிற்பார். அதேவேளை யில் உலகத்தையும் கண்டு கொண்டு உலகாசாரங்களுக்கு இணங்கவும் ஒழுகுவார். அவர் தன்னை மறவாமல் உலக நியமங்களைப் பேணும் சகசஸ்திதியினரான ஞானியாயினர்.

ஞான வித்தையின் முதலும் முடிவுமான மொழிகள்

மெய்ப் பொருளானது செல்லப்பர், சிவயோகர் எனும் இரு வேடங்கள் தாங்கி நல்லையில் அளித்த ஞான நாட கத்திலே செல்லப்பரின் ஆடல் நிறைவுறும் தருணத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. செல்லப்பர் தமது கொட்டி லிலே சுகவீனமாகக் கிடந்தார். சிவயோகர் உலகாசாரத் துக்கமைய அவரைப் பார்த்து வரச் சென்றார். படலையை நெருங்கியதும் ''யாரடா படலையிலே'' எனும் சிம்மகர்ச்சனை கொட்டிலினின்றும் ஒலித்தது. முதன்முதலில் தேரடியிலே கேட்ட ''ஆரடா நீ'' என்பது போன்ற அந்த ஞான வாசகத்தைத் தொடர்ந்து, செல்லப்ப மூர்த்தியின் வேதம் நவின்ற நா, ''பாரடா வெளியில் நின்று'' எனும் முடிந்த முடிபான திருவாய் மொழியை மொழிந்தது. முதலாம் உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த அக்காலத்திலே 'இங்கு எத்தனையோ இராசாக்கள் மாண்டுபோகின்றார்கள்' என எண்ணியவராய்ச் சிவயோகசுவாமி கொழும்புத்துறை சென்று இலுப்பைமர வேரில் அமர்ந்தார்.

செல்லப்பசுவாமிகளின் திருவடிக்கலப்பு

மெய்ப்பொருளானது செல்லப்ப வேடம் தாங்கி, ஏறக்குறைய 55ஆவது வயதுவரை உலகிலே நடமாடி வெம்பந்தம் நீக்கும் வேதாந்த விளக்கை ஏற்றிவைத்த பின்னர் தனது வேடத்தைக் கழித்துக் கொள்ளத் தீர்மா னித்தது. செல்லப்ப தேசிகர் தன்னுடன் இரவிலே உறங்க வரும் அயலவரொருவரிடம் ''இன்று இரவு இங்கு பெரும் புதினம் நடக்கும்; நீ வருவையோ?'' எனக் கேட்ட னர். அந்த அயலவருக்கு அன்றிரவு செல்ல முடியவில்லை. அவர் அடுத்த நாட்காலையில் சென்று பார்த்த பொழுது செல்லப்ப வேடமானது சிறு குழந்தையைப் போன்று விரலொன்றை வாயில் வைத்தவண்ணம் காலொன்று மடிந்து நடராச பாவத்தில் இருக்க விறைத்துக் கிடந்தது.

சிவயோக சுவாமி செல்லப்ப சுவாமிகளின் ஈமக்கிரி யைகளுக்குச் செல்லவில்லை .சுட்டிறந்து நிற்கும் செல்லப்ப சுவாமிகளின் சோதி மயமான நிச சொரூபத்தைக் கையில் நெல்லிக்கனியெனக் கண்டு கொண்டிருப்பதால் அவர் செல்ல வேண்டியிருக்கவில்லை. அறிவுக் கறிவாய் அப்பா லுக்கப்பாலாய் குறிகுணம் அற்றிருக்கும் குருபரனைக் காணக்கண் படைத்து விட்ட சிவயோக சுவாமிகளுக்குச் செல்லப்ப வேடம் கலைந்து போனதால் குறையேதும் உண்டோ?

★

அகரமாம் எழுத்துப்போல அனைத்தினுங் கலந்துநின்றே
இகபரம் இரண்டுமீந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க. 1

ஆணுமாய்ப் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகிக்
காணவே என்முன்வந்த கழலடி யென்றும் வாழ்க. 2

இருவினை நீக்கியெம்மை இன்பமாம் நிலத்தில்வைக்கத்
திருவுருத் தாங்கிவந்த செல்வனின் திருத்தாள் வாழ்க. 3

ஈன்றிடு தந்தைதாயோ டெய்திய சுற்றமாகித்
தோன்றிய குருவுமான துணைவனின் திருத்தாள் வாழ்க. 4

உணர்ந்தார்க்கு முணரவொண்ணு ஒருவனே
என்போல்வந்து
குணங்காட்டி ஆண்டுகொண்ட குருவின்சீர்ப் பாதம்
வாழ்க. 5

ஊசிமே னுனியினின்றே உக்கிர தவத்தையாற்றும்
மாசில்மா தவருங்காணு மலர்ப்பதம் மனத்தில் வாழ்க. 6

என்னைநீ வேறுயெண்ணி இடர்ப்பட வேண்டாமென்று
தன்னைத்தந் தாண்டுகொண்ட சற்குரு தாள்கள் வாழ்க. 7

ஏதுமொன் றறநில்லென்றே யெனக்குநல் லருளைத்தந்த
நீதிலாத் தேசிகன்றன் திருவடி வாழ்க! வாழ்க!. 8

— நற்சிந்தனை —

3 ஞானதேசிகன்

உன்மத்தன் யோகன்

''மரநிழலும், அன்பருள்ளமுமே எமக்கு உகப்பான உறைவிடங்கள்'' எனச் சிவயோகசுவாமி ஒரு சமயம் குறிப்பிட்டார். அவர், அன்பரின் இதயமாமலரில் வீற்றி ருக்கும் தமது உண்மையை உணர்த்துவதன் முன்னர், சிறிது காலம் இலுப்பைமர நிழலில்அமர்ந்திருந்தார். இன்னுமுள்ள அவ்விலுப்பை மரம் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகாலமாக அவர் வாழ்ந்த அவரது சொந்த ஊரில், புகழ் பெற்ற சந்தியொன்றில் இருந்தது. பலரும் வந்து கூடும் நல்லூர்த் தேர்முட்டிப் படியிலே செல்லப்பன் என்னும் சீமான் அமர்ந் திருந்தது போலவே, பலரும் போக்கு வரவுபுரியும் தெருச் சந்தியில் சிவயோகச் செல்வர் அமர்ந்திருந்தார். வீதியிற் செல்லும் வீணர்களைத் தன்னை நெருங்கவிடாது தடுத்தற் பொருட்டு அவருடைய கையிலே எப்பொழுதும் கற்கள் இருந்தன. பலரும் செல்லப்பரை விசரரென நம்பியது போலவே சிவயோகரையும் ஓர்உன்மத்தன் என எண்ணினர்.

கொழும்புத் துறைக் கொட்டில்

சிவயோகர் வீற்றிருந்த இலுப்பைமரத்தின் தென் கீழ்ப் பாலுள்ள வளவிலே, வீதியோரமாக ஒரு கொட்டில் இருந் தது. அக்கொட்டிலிலே முன்னர் நன்னியர் என்பார் கடை வைத்திருந்தார். நன்னியர் செல்லப்ப சுவாமியினது ஒரு முரட்டுப்பத்தர். அவர் ஒரு நாள் ஒருவருக்கும் பிடிகொ டாது திரிந்த செல்லப்ப சுவாமியைத் தனது கொட்டிலின் முன்னலிருந்த ஒரு தறியிற் கட்டிவைத்துவிட்டார். பின் னர் முன்னரே ஆயத்தம் செய்து வைத்திருந்த பால், பழம் பஞ்சாமிர்தம் என்பவற்றால் அவருக்கு அபிடேகம் செய்தார். இவ்வாறு செல்லப்ப தேசிகர் திருமுழுக்காடிய திருவுடை நிலமாக அவ்விடம் அமைந்திருந்தது. மேலும் திறவோர் காட்சியிலே அது ஒரு பாலவனப் பசுந்தரையாகத் தோன் றிய புண்ணிய பூமியாகவும் இருந்தது. (சுவாமி விவேகா

நந்த அடிகள் தமது யாழ்ப்பாணவருகையின்போது கொழும் புத்துறைவீதி வழியாக ஊர் வலமாக அழைத்துச் செல்லப் பட்ட சமயத்தில் அக் கொட்டிலின் முன்பாக நின்று இவ்விடம் ஒரு பாலவனப் பசுந்தரை போன்றுள்ளது எனக் கூறினர்என்பர்.)ஒருநாள் அந்தக்கொட்டிலின் சொந்தக்கார ரான கொழும்புத்துறை திருநாவுக்கரசுவின் தாயார், இலுப் பைவேரிலிருந்த சிவயோகச் செல்வரின் முன்வந்து ''நீ எவ்வ ளவு காலத்துக் கென்று இச்சந்நியில் இருக்கப் போகிறாய்?'' என்று கேட்டார். பின்னர் கொட்டிலைச் சுட்டிக் காட்டி ''இந்தக் கொட்டில் சும்மாதானே இருக்கிறது. இதில் வேண்டிய காலத்திற்கு ஆறுதலாக இருக்கலாமே'' என வெள்ளையுள்ளத்துடன் வேண்டுதல் செய்தார். சிவயோக சுவாமி அவ்வம்மையாரின் தாராளமான மனத்தினை நன்கு அறிவார். பின்னளில் எத்தனையோ பிரமுகர்கள் வந்து சாட்டாங்கமாக வீழ்ந்து கிடத்தற்கேற்ற அத்திருவுடை நிலத்திற்கு அவர் எழுந்தருளத் திருவுளம் பற்றினர்.

கொழும்புத்துறை ஆச்சிரமத்தின் ஆரம்பகாலக் கோலம்

அப்பழங்குடில் ஓலை வேய்ந்த ஒரு மண் குடிசை. நடுவே எழுந்த ஒரு சுவர் அதனை இரு அறைகளாகப் பிரித்திருந்தது. அவ்வறைகளுள் தென்பாலுள்ள அறையில் சுவாமி உறைந்தார். வடபாலிருந்த அறை வெறுமனே கிடந்தது. சுவாமி அக்கொட்டிலுக்கு ஓலைவேய ஒருவரையும் அனுபதிக்கவில்லை. அவரைநன்கு அறித்தசிலர் அவர் வெளி யூர் சென்றிருக்கும் தருணமறிந்து திரும்பிவருவதற்கிடையில் ஓலைவேய்ந்து சென்றனர். அவர் சிறிதுகாலத்திற்குக் கொட் டிலில் விளக்கேற்றவும் விடவில்லை. அவர் உறைந்த அறை மூலையில் சிறிய பாப்புப்புற்று இருந்தது. கொட்டில் முற்றத்திலும் ஆங்காங்கே புற்றுகள் இருந்தன. மூவர்களும் ஏவல்செய்யும் தேவதேவன்சிவயோகசுவாமிகளாக வந்துகுடி புகுந்த திருமாளிகையின் வண்ணம் இவ்வண்ணமாகத்தான் இருந்தது. கொட்டிலின் முன்புறமாக வீதியின் மறுகையில் கோயில் பூந்தோட்டம் ஒன்றிருந்தது. அப்பூந்தோட்ட

மதிற் சுவரிலே பொருத்தமாயமைந்த ஓரிடத்தில் திருவடி வைத்து வணங்கி வந்தார். கொழும்புத் துறையிலிருந்து, செல்லப்பாச்சுவாமிகளிடம் சென்று வந்த அடியார் சிலர் அப்பொழுதும் அங்கே இருந்தனர். அவ்வடியார்கள் செல்லப்ப சுவாமிகள் சிவயோகசுவாமிக்கு சகல சம்பத்துக்களையும் வழங்கியுள்ளார் என்பதற்கான தெளி வான குறிப்புக்களை அறிந்திருந்தனர். ஆதலால் அவர் கள் சிவயோகசுவாமிகளுடன் வெளிப்பார்வைக்கு ஒருசாலை மாணவர் போன்று பழகிய போதும் உள்ளார்ந்த பக்தியு டையவராயிருந்தனர். அவர்கள் செல்லப்பசுவாமிகளிடம் கொண்டிருந்தது போன்ற ஆர்வத்தை உள்ளே வைத்து புறத்தேசுவாமியிடம்நண்பர்போல்பழகி வந்தார்கள், அவர் களுள் துரையப்பா எனும்அன்பர் அவ்வார்வத்தை உள்ளத் தளவில் வைத்திருக்க இயலாதவராளர். அவர் நல்லூர்க் கோவிலிலும், தேர்முட்டிப்படியிலும் இருந்து தேவாரம் ஓதியது போல கொழும்புத்துறைக் கொட்டிலில் அமர்ந்தும் சிவயோகசுவாமிகளின் திருமுன்னிலையிலே தேவாரம் இசைக்கலாயினர். இது ஒன்றே அக்கொட்டிலில் ஓர் நட மாடும் நம்பனின் கோயில் என்பதற்கான ஆரம்பகால அடையாளமாக இருந்தது. ஏனையோரெல்லாம் இலுப்பை மரவேரிலிருந்து தெருவாலே வருவார் போவாரை கல்லெ றிந்து கலைத்துக்கொண்டிருந்த விசரர், இப்பொழுது கொட்டிலில் போயமர்ந்திருக்கிறார் என்றே எண்ணினர்.

சிவயோகசுவாமியின் பரமாசிரியத் திருக்கோலம்

சிறிது காலத்தில் சிவயோகசுவாமியின் போக்கிலே முழு மாற்றந் தெரியலாயிற்று. வைகறைப் பொழுதில் கொட்டில் முற்றத்தினின்றும் கூட்டிப் பெருக்கும் ஓசை எழுந்தது. கொட்டில் பூசிமெழுகித் தூய்மையாய் இருந்தது. பாம்பு குடியிருக்கும் பாழ்மனை என்பதற்கான அடையா ளம் எதுவும் அதில் தெரியவில்லை. கொட்டிலின் வடபக்க அறையில் கோலமலர் சாத்தப் பெற்ற திருவடி எழுந்த ருளியிருந்தது. சிவயோகசுவாமி வீதியில் தோன்றும் போது

அவரது வெண்ணரைமுடி நேர்த்தியாக முடிக்கப் பெற்றி
ருந்தது. அவரது நெற்றியிலே மிதமாகச் சாத்தப்பட்ட
திருநீற்றுப் பூச்சு ஒளிர்ந்தது. தோளில் தரித்திருந்த சால்வை
ஒப்பனையானதொரு கோலத்தில் கிடந்தது. அவரு
டைய கையிலே எல்லாரதும் பாதுகாவலன் என்பதற்கு
அடையாளமான குடையொன்று இருந்தது. அவர் அந்
நாட்களில் பிரபலமாயிருந்த சண்முகநாதன் புத்தகசாலை
யிலே அடிக்கடி தோன்றினர். அங்குவரும் அறிவுப்பசியு
டையோர் அறிவலையே வீற்றிருந்த சுவாமியால் ஆகர்சிக்கப்
பட்டனர். அவர்களுள் பக்குவமானோரை நோக்கிச் சாத்தி
திரக் குப்பையையே கிளறிக் கொண்டிராமல் நெஞ்சப்புத்
தகத்தைத் திறந்து படிக்குமாறு கூறினர். சிவயோகசுவாமி
சில வேளைகளில் கஸ்தூரிமுத்துக்குமார் வைத்தியரின் இல்
லத்துக்குச் சென்று வந்தார். கஸ்தூரி முத்துக்குமார்
வைத்தியர் அவர்கள் தன்னிடம் வரும் ஏழை எளியவரான
நோயாளிகளிடம் பணம் வாங்காதிருந்ததுடன் தூர இடங்
களிலிருந்து வருவோர்க்குப் பிரயாணச் செலவையும்
கொடுக்கும் வழக்கமுடையவர். அங்கு செல்வோர் யாழ்ப்பா
ணத்துப் பிரபலம் பெற்ற வைத்தியரொருவரின் மருந்தை
யும், கருணைபூத்த திருமுகத்தொருவரின் அருளமுதையும்
பெற்றுச் சென்றனர். சிவயோகசுவாமிகள் செல்லாச்சி
யம்மையார் எனும் தவமூதாட்டியாரின் இல்லத்திற்கும்இடை
யிடையே சென்று வந்தார். அம்மையாருடைய உறவினர்
கள் சிலர் துறைபோகக் கற்ற நூலறிவாளராயிருந்தனர்.
அந்நூலறிவாளர்கள் அம்மையாரைத் தமது குடிமுழு
தும் விளக்கம் செய்யும் மலர்ச்சுடராக மதித்துப் பெருமை
கொண்டனர். தாமே அவ்வம்மையாரின் அடியருமாயினர்.
அவ்வடியருள் வித்தியாலய் அதிபராயிருந்த மல்லாகம்
S. அம்பிகைபாகன் அவர்களும் ஒருவராவர். அவர்கள் அம்
மையாரின் அருமை பெருமைகளைத் தமது நண்பர்களான
கலைப்புலவர் க. நவரெத்தினம் முதலானோருக்கு எடுத்து
ரைத்தனர். அந்நண்பர்களும் அடிக்கடி வந்து செல்லாச்சி
அம்மையாரைத் தரிசிக்கும் நியமம் பூண்டவராயினர். இவ்
வாறான கலைஞானியர் கூடும் சமூகத்திலே சிவயோகசுவா

மிகள் சில நாட்களில் பிரசன்னமாவார். செல்லாச்சி
அம்மையார் பெரும்பாலும் வெளிச்சமாயில்லாத இருள்
பரவிய மூலையிலேயே அமர்ந்திருக்கும் வழக்கம் உடையவர்.
சிவயோகசுவாமி வெளியான ஓரிடத்தில் வீரசாந்தம் விளங்க
அமர்ந்திருப்பார். அவர் இடையிடையே மொழியும் மறை
போலும் வாசகங்கள் அங்கு சமூகமாயிருக்கும் நூலறிவா
ளர்களைத் தம்முள்ளே ஆழ்ந்து சிந்தித்துக் களிகொள்ளச்
செய்தன. அந்த நுண்மாண்நுழை புலத்தினர்கள் தாம்
நுணுகியும் அறியாத நூற்பொருள் யாவும் சிவயோகசுவா
மியின் சில சொற்களில் விளக்கமாவதைக் கண்டு வியந்து
நின்றனர். தாம் கற்ற வித்தை எனப்பெருமைப்பட்டிருந்த
வித்துவம் யாவும் சிவயோகசுவாமியின் உயிர்ப்புள்ள
உண்மை வாசகங்களின் முன் வெறும் உள்ளீடற்ற பதராய்க்
கிடப்பதைக் கண்டனர். அவர்கள் தம் முன்னே வீற்றி
ருக்கும் அறிவலின் முன் மண்டியிட்டுக் கிடக்கும் உணர்
வில் பொருந்தினர். இவ்வன்பரெல்லாம் செல்லாச்சியம்மை
யார் சமாதியடைந்த பின்னர் திரளாகச் சென்று சிவ
யோக சுவாமியின் திருவடிகளே சரண் எனக் கிடந்தனர்.
இவ்வாறு தமது அன்பர்களைச் சிவயோக சுவாமிகளிடம்
ஆற்றுப்படுத்திய செல்லாச்சி அம்மையார், பரமசிவத்துடன்
சேர்த்துவைக்கும் திருவருட் சக்தியைப் போன்று அமைந்
தார்.

சிவயோகசுவாமி தாமாக வரமுடியாத அடியவர்களை
அரவணைத்துக் கொள்ளும் பொருட்டே இவ்வண்ணம் ஊர்
கள் தோறும் உலவி அழகிய ஆடலளித்தனர். தாமாக
வரக்கூடிய பக்குவர்களை இருந்த இடத்திலிருந்து கொண்டே
ஈர்த்தெடுத்தனர். அன்பர் சிலர் சிவயோகசுவாமிகளை
நேரிற் காண்பதற்கு முன்னரே கனவிற் கண்டு புளகங்
கொண்டனர். அவர்கள் முதன் முதலிற் சிவயோகசுவா
மிகளைத் தரிசித்தபோது தாம் கனவிற்கண்ட உருவமும்
தம்முன்னே நிற்கும் திருமேனியும் ஒன்றாயிருக்கும் அதிச
யத்தைக் கண்டு ஐம்புலன் அடங்கி நின்றனர். இத்தகைய

அன்பர்கள் நுணுக்கமான ஒரு முறையால் சிவயோகசுவாமியின் அருள் ஒளிக்குள் ஆட்பட்டனர்.

செல்வச் சிவயோகரால் ஊர் தோறும் திரிந்து அரவணைக்கப் பட்ட அடியவர்களும், இருந்த இடத்திலிருந்தே ஈர்த்தெடுக்கப்பட்ட அன்பர்களும் சுவாமியிடம் அமைந்திருந்த சகல கல்யாண குணங்களிலும் ஒன்றிலோ சிலவற்றிலோ பெரிதும் ஈடுபடலாயினர். சிவயோகசுவாமி அகத்தளவில் ஆச்சிரமச்செயல் அனைத்தையும் கடந்த அதி ஆச்சிரமவாசியாக இருந்தார். அவரது பலரும் அறிந்த ஒழுக்கமோ நால்வர் காட்டிய நன்னெறியில் ஒழுகும் சைவ ஒழுக்கமாக இருந்தது. அவர் பொருந்திய இடங்களிலே எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்குமாறுகூறினர். அங்கு நிகழும் அபிடேக ஆராதனைகளை வியந்தார். தாமும் அபிடேகம் செய்வித்தனர். செல்வச்சந்நிதியிலே நிலத்தின்கீழ் கால்வைக்கமுடியாதபடி சிவலிங்கங்கள் நிரம்பியுள்ளன எனவும். தீபங்கள் எரிகின்றன எனவும் கூறினர். சுருங்கக்கூறின அவர் மோனமுடிதரித்து இராசாங்கத்திருக்கும் வைதீக சைவத்தின் சின்னமாகத் தோன்றினர். வாமாசார வழியில் வெறுப்புற்று ஆற்றல் வாய்ந்த சைவப்பிரசாரகரான ஆறுமுகநாவலர் அவர்கள் மறுமலர்ச்சியடையச் செய்த சைவாசாரவழி ஒழுகிய அன்பர்கள் தமக்கு வாய்த்த தக்கதோர் உபதேச மூர்த்தமாகச் சிவயோக சுவாமிகளைக் கொண்டனர். சிவயோகசுவாமிகளிடம் பொருந்தியிருந்த சைவாசாரம் வெறும் வேடத்தளவினதன்று. அது அகத்திற் பொருந்தியிருந்த ஆகம விதிமுறையினின்றும் எழுந்த எளிமையும் உயிர்ப்பும் உள்ள ஒழுக்கமாகும். இந்தத் தாளமேளமில்லாத எளிமையான ஆசாரசீலத்தினாலே பலர் ஈர்க்கப்பட்டனர். ஞானநூல்களிலே ஞானியரை யாழுக்கு ஒப்பிட்டுக்கூறும் ஒரு மரபு உண்டு. யாழ், மீட்டுவோனின் கைவண்ணத்துக்கேற்ப இசை எழுப்புதல் போல ஞானியரும் தம் முன்னேயுள்ளவர்களின் தகவுக்கேற்ப நடந்து கொள்வர். வந்தது போனது மனத்துவையாத சிவயோகசுவாமியும்

தம்முன்னிலையில் உள்ளாரோடு சங்கற்பவிகற்பம் ஏதுமில்லாமல் பழகினர். எண்ணமெல்லாம் விட்டிருக்கும் இவ் வேகாந்தநிலையால் பலர் ஈர்க்கப்பட்டனர். ஞான நூற் பயிற்சியுடையோர் ஞானத்தின் திருவுருவாய் நடமாடிய அவரது நல்லறிவிலே ஈடுபட்டனர். அவரிடத்து ஓரிரு தெய்வீக அனுபவங்களைப்பெற்ற அன்பர்கள் தம்சிந்தனையில் தேனூறிநின்ற அவ்வனுபவங்களைப் போன்றவற்றை மேலும்மேலும்பெற அவரை நாடினர். வேறுசில அன்பர்கள் சிவயோகசுவாமியின் திருமுன்னிலையிலே அமர்ந்திருக்கும்போது கிடைக்கும் உபசாந்தத்திற்காக அவரைச் சூழலாயினர். அவரது அநுபூதி பக்குவர் அனைவரையும் ஈர்த்தது.

கொழும்புத்துறைக் கொட்டிலுக்கு அடியவர் வருகை.

சிவயோகசுவாமிகள் வீற்றிருந்த அந்தத் திவ்வியமான கொட்டிலிலே, சாத்திரஞானமும், சைவாசார சீலமும், சாதனை நாட்டமுமுடைய சைவப்பெரியார் மு. திருவிளங்கம் முதலாய திருவாளர் பலர்வந்து அமைதியாயிருக்கலாயினர். சேர்.பொன். இராமநாதன் முதலிய நாட்டுத்தலைவர்கள் ஆச்சிரம முற்றத்தில் திருக்கதவம் திறக்கும் தருணத்தை எதிர்பார்த்துக் கிடுகிடெனும் நடுக்கத்துடன் நின்றனர். கலைப்புலவர் நவரெத்தினம் உள்ளிட்ட கல்விமான்கள் சிவயோகசுவாமியை முன்னும் பின்னும் தொடர்ந்து திரியலாயினர். வித்துவான் கணேசையர், சோமசுந்தரப்புலவர் முதலாய செந்தமிழ்ப்புலவோர் சுவாமியின் திருமுன்னிலையில் பணிந்து நின்றனர். யாழ்ப்பாணத்திலே அக்காலத்தில் வாழ்ந்த கசடறக்கற்ற பலரும், மற்றும் கல்வியறிவில்லாத தோட்டத்தில் வேலைசெய்யும் ஆச்சிமாரும், வண்டியிழுப்போரும் சுவாமியைச் சூழலாயினர். நாத்திகரும், குடிப்பழக்கம் முதலியவற்றை விடமுடியாதோருங்கூடச் சுவாமியின் திருவடிகளில் மண்டியிட்டுக் கிடந்தனர். கிறிஸ்தவரும், பௌத்தரும், இஸ்லாமியரும் அவரை அண்டிவரலாயினர். அதிகாலைப் பொழுதிலிருந்து அர்த்தசாமம்வரை அத்திவ்வியமான ஆச்சிரமத்தில் அடியவர் வருவதும் போவ

துமாயிருந்தனர். காலை மாலை வேளைகளிலே ஆச்சிரமத்தின் முன்பாக இருந்த வீதியில் மோட்டார் வண்டியும், மாட்டு வண்டியும், இழுவை வண்டியும் நிரையாய் நின்றன. துரை யப்பா அவர்களது பண்ணிசை ஒன்றே கொழும்புத்துறைக் கொட்டிலினின்றும் எழுந்த ஆரம்ப கால அருச்சனை என் பது முன்னர்க்கூறப்பட்டது. அக்காலத்திலே கதிர்காமத் துக்குப் பாதயாத்திரை செய்த அருணசலம் சீமாட்டியார வர்கள் ஆச்சிரமத்தில் திருவிளக்குப் பணி செய்தார். மற் றோர் அதிபத்தர் சுவாமியின் திருமுன்னிலையிலே கர்ப்பூரம் கொளுத்திக் கும்பிடும் துணிவினரானார். ஆச்சிரமத்தினின் றும் தேவாரப் பண்ணிசையும், இனிய கீர்த்தனங்களும் ஒலித்தன. பூசனைப் பொருட்களின் திவ்வியமான வாசனை வீசலாயிற்று. சுவாமி தம்முன்னிலையில் இருப்போரோடு இயல்பாகப் பேசினர். அவ்வியல்பான மொழியிலும் உயர் ஞானம் தெரியலாயிற்று. சுவாமி ஒரு சமயம் அன்பரொரு வரிடம் ''என்ன புதினம்'' என விசாரித்தார். அன்பரும் ''ஒரு புதினமுமில்லை சுவாமி'' எனும் வழமையான பதி லைச் சொன்னார். அப்பொழுது ''ஓம்! ஒரு புதினமுமில்லை; எல்லாம் இருந்தபடியே இருக்கின்றன.'' எனும் உயர்ஞா னத்தைச் சுவாமி அருளினர். சில வேளைகளில் தமது திரு முன்னிலையிலே அமர்ந்திருக்கும் அன்பரின் நாட்டத்தைப் பொறுத்து விவேகசூடாமணி, பகவற்கீதை முதலாய நூல் களிலிருந்து சில பகுதிகள் வாசிக்கப்படும். இப் பகுதிகளின் மெய்ப்பொருளை அறிய உதவும் திறவுகோல் போன்ற வா சகங்களைச் சுவாமி இடையிடையே மொழிந்தார். நாடோ றும் மாலை வேளையில் சிவபுராணம் ஓதப்பட்டது. சிவபுரா ணத்தின் பொருளான சிவபெருமானே போன்று அமர்ந் திருக்கும் சிவயோகசுவாமிகளின் திருமுன்னிலையில் சிவ புராணத்தை ஓதிமகிழும் பாக்கியத்திற்காக அன்பர் திர ளாய்க் கூடினர். ஒருசமயம் சுவாமி சிவபுராணம் பாடி முடிந்ததும், வீடு செல்வதற்காக விடைபெற நின்ற அடி யவர்களுக்குத் திருவருட் பிரசாதம் ஈந்து ''போய் வாருங் கள்'' எனச் சொல்லும்போது ''நாங்கள் போவதும் வரு

வதுமில்லை'' என அருளினர். அவ்வடியவர்கள் வீதியிற் செல்லும் போது விம்மிதமுற்றவராய் ''இவர் போக்கும் வரவும் இலாப் புண்ணியன்'' என நாக்குழறக் கூறிக் கொண்டு சென்றனர். இவ்வாறாய் அவ்வாச்சிரமம் நட மாடும் நம்பன் உறையும் திருக்கோவிலுக்குரிய பொலிவி னைப் பெறலாயிற்று.

நாடெங்கும் சென்று அன்பரை வளர்த்தல்

சிவயோகசுவாமியினது அடியவர் சிலர் அரசாங்க சே வையில் பணி புரிபவராயிருந்தனர். நாடெங்கும் பணி புரிந்த அவர்கள் அடிக்கடி கொழும்புத்துறை ஆச்சிரமத் துக்கு வந்து செல்ல இயலாதவராயிருந்தனர். அத்தகைய அன்பர்களின் இருப்பிடங்களைத் தேடிச் சுவாமி தாமே சென்றார். முக்கியமாக அவ்வடியவர்கள் ஏதேனும் வில் லங்கத்துள் அகப்பட்டு நொந்த உள்ளத்தினராய்ச் சுவாமி யை வேண்டுதல் செய்த வேளைகளில் சுவாமி அங்கு எழுந் தருளி அருள்பாலித்தனர். மாத்தளையில் தபாலதிபராகப் பணி புரிந்த திரு. கந்தசாமி அவர்களது இல்லத்துக்கும், பேரா தனையிலே தேயிலைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த திரு. வேலுப்பிள்ளை அவர்களது குடிமனைக்கும், கம்பளை முதலாய இடங்களில் வைத்திய அதிகாரியாகப் பணிபுரிந்த வைத்திய கலாநிதி இராமநாதன் அவர்களது இல்லத்துக்கும் சென்று வந்தனர். இரத்தினபுரியிலே ஓவசியராகப் பணிபுரிந்த திரு. தில்லையம்பலம் அவர்களது இல்லத்துக்கும், நாவலப்பிட்டி யிலிருந்து அரசபணிபுரிந்த அன்பர்கள் பலரது இருப்பிடங் களுக்கும் அடிக்கடி சென்று வந்தனர். இவ்வாறே இலங் கையின் பல பாகங்களிலும் வாழ்ந்த அன்பராளரது இருப் பிடங்களுக்கெல்லாம் சுவாமி எழுந்தருளினர். அவ்வன்பர் களும் தமது இல்லங்களில் அமைந்த பூசை அறையைச் சுவாமிக்கெனப் பக்குவமாகப் பேணி வைத்திருந்தனர். சுவாமி அடியவர் ஒருவரின் இல்லத்தில் எழுந்தருளியுள்ளார்

என்பதை மோப்பம் பிடித்து அறிந்து கொள்ளும் அன்பர் பலரும் அவ்விடம் சென்று சுவாமியைத் தரிசித்து வரலாயினர். இவ்வாறுய்ச் சுவாமி சென்று தங்கும் இல்லம் எல்லாம் திருக்கோயில் போலப் பொலிவு பெறலாயின. சுவாமி 1942 ஆம் ஆண்டில் ''இனி வெளியூர்களுக்குச் செல்வதில்லை; விரும்பியவர்கள் இங்கு வரட்டும்'' எனக் கூறிக் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் உறைந்தது வரை ஏறக் குறைய இருபது ஆண்டுகள் மாதம் ஒரு முறையாதல் மலை நாட்டுப் பகுதிகள், கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குப் பிரயாணம் செய்து அடியவர்களை வளர்த்து வந்தனர்.

சுவாமியைச் சூழ்ந்த திருக் கூட்டம்

கொழும்புத்துறை ஆச்சிரமத்துறைந்தும், அடியவர் இருப்பிடந்தேடி நாடெங்கும் சென்றும் நிகழ்த்திய அருளாடலாலே சிவயோக சுவாமிகளிடத்துப் பற்றுதல் பூண்ட பெரியதொரு திருக் கூட்டம் உருவாயிற்று. அத்திருக்கூட்டத்திலே சிலர் கொண்டும் கொடுத்தும் குபு குபு ஆட்செய்யும் தொண்டுள்ளம் படைத்தோராய்ப் பரிணமித்தனர். மேலும் சிலர்

''எவரேனும் நம்மை இடைவிடா தெண்ணில்
அவரே நமக்குநல் லன்பராங் கண்டீர்''

என்றவாறு சிவயோகசுவாமிகளை இடைவிடாது நினையும் பக்தர்களாக மலர்ந்தனர். கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், அண்ணை தம்பி, சிற்றன்னை சிற்றப்பா என்றவாறு குடும்பத்தவர் அனைவருமாகச் சேர்ந்து கொத்தடிமை பூண்டசுவாமி குடும்பங்கள் சிலவும் உருவாயின. இத்தகைய சுவாமி குடும்பத்தினர் ஊரவர் தம்மைப் பித்தர் என்று இகழ்வதையும் பொருட்படுத்தாது, சிவயோகசுவாமியைச் சிந்தை செய்வதற்கு வாய்ப்பாகத் தமது குழந்தைகளுக்குச்

சிவன் செயல், சிவதொண்டன், யோகரானந்தன், யோகரன்பன் என்பன போன்ற திருநாமங்களைச் சூட்டி மகிழ்ந்தனர். மற்றும் சிலர் தருமநெறி பிசகாத கருமயோகிகளாக ஒழுகினர். வேறு சிலர் சுவாமியை அண்டிவாழும் துறவியர் ஆயினர். இவ்வண்ணம் இங்கிலாந்துப் பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும் தமது சுகபோகமனைத்தையும் துறந்து சுவாமியின் அடியவராயினர். மார்க்கண்டு சுவாமி முதலாய பிரமச்சாரிகள் சுவாமிபயிற்றிய தன்னையறியும் ஞானத்தில் முதிர்ந்து சிவதொண்டர்க்கெல்லாம் திசைகாட்டியாய் ஒளிர்ந்தனர். ஞானநூற்பயிற்சியும், ஆச்சிரம நடைமுறை பற்றிய அனுபவ அறிவும், ஒழுக்கத்தால் வைரித்த வாழ்வும், பிரமச்சரிய விரதமுமுடைய சுவாமியின் ஞானப்புதல்வர் சுவாமிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினர்.

சிவதொண்டு

சுவாமியைச் சூழ்ந்த திருக்கூட்டமானது
''தொண்டர்காள் தூசிசெல்லீர் பக்தர்காள் சூழப்போதீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
நிண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே''
(திருவாசகம்)

என்றுங்கு ஒரு திருப்படை யெழுச்சிக்கேற்ற தொண்டர்களையும், பக்தர்களையும், யோகியரையும், சித்தர்களையும் இன்னும் ஞானவாள் ஏந்தும் ஐயர்களையும் கொண்டதாய் இருந்தது. இத்திருக்கூட்டத்தைக் கொண்டு, சிவன்செயலான இவ்வுலகை மண்ணுலகமாகத் தோற்றச் செய்யும் மாயப்படைகளை வென்று, சிவலோகமாகக் காணச்செய்யும் ஞானஒளிபரப்பும் சிவதொண்டிலே சுவாமி சுறுசுறுப்பாக ஈடுபடலாயினர். சுவாமியின் சித்தத்துள் முழு உலகுக்கும் ஞான சோதியைப் பரப்பும் நவீன சூழலில் அமைந்த 'பரத்

துவாச ஆச்சிரமம்' ஒன்று குடிகொண்டிருந்தது. அவர் தருமநெறி உலகிலே என்றும் நின்று நிலவும் வண்ணம் நிரந்தரமான பணிகள் சிலவற்றைச் செய்தனர்.

வாழையடி வாழையாகவரும் திருக்கூட்டம் ஞானசாதனை பயில்வதற்கு வாய்ப்பாகச் சிவதொண்டன் நிலையத்தை நிறுவினர். அத்திருக்கோயிலைத் தமது சாந்நித்தியம் நிலவும் ஞானப்பண்ணையாக்கினர். அன்பர்களுக்கு ஞான வித்தை பயிற்றும் சிவதொண்டன் இதழைத் தொடங்கினர். நித்தியாநித்தியந் தெரிந்த நிபுணனை அச் சிவதொண்டனைத் தமது நிழலுருப்போல் திகழச்செய்தனர். அவரது திருவாய்மொழி 'நற்சிந்தனை' எனும் நூலுருப் பெற்றது. அது சிவயோகசுவாமிகளது மந்திரரூபமாயிற்று. ஞானநாட்டமுடையார்க்கு உகந்த சாதனைமுறைகளான திருவடிவழிபாடு, பாதயாத்திரை முதலியவற்றில் தொண்டர்கள் சாதனை பயில்வதற்கான ஏற்பாடுகள் யாவற்றையும் செய்தனர். அவர் ''இங்கு நான் ஒருகுறையும் வைக்கவில்லை'' என்று கூறியபடி தம் சிவதொண்டை நிறைவுறச்செய்தனர். மெய்ப்பொருள் தான் அருள்மேனி தாங்கி வந்த கருமத்தை நிறைவுறச் செய்தது.

★

பல்லவி

ஞான தேசிகனே சரணம்
நற்றவனே நல்லூர் வித்தகனே வருக.

அநுபல்லவி

ஈனப் பிறவி நீக்கு மெழிலது கண்டேன்
என்னை யென்னுளறிந் தானந்தங் கொண்டேன் (ஞான)

சரணம்

காமக் குரோதமோகக் கடலைக் கடந்தேன்
சுங்குல் பகலற்ற காட்சியைக் கண்டேன்
கருதுஞ் சுவாமியோக நாதனுன் தொண்டன்
தருமொரு வரமுண்டு அதுவெங்கும் மங்களம்
தங்கும்படி யருள்தந்து இரட்சி. (ஞான)

-நற்சிந்தனை-



பகுதி II

அப்பனும் அடியார்களும்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்றே

- ஔவையார்.

இப்பகுதி சிவயோக சுவாமிகளே அண்டிவாழ்ந்த அன்பர்களது அடிக்குறிப்புக்களைத் தழுவி எம்மால் எழுதப்பட்டதாகும். அன்பர் சிலர் சுவாமியின் திருவடிக்கலப்புக்கு முன்னரே தமது குறிப்புக்களைத் தந்தனர். சிலர் இந்நூலாக்கம் பற்றி அறிந்தபின்னர் தாம் பக்குவமாசுப் பேணிவைத்திருந்த குறிப்புக்களைத் தந்துதவினர். சுவாமியினது மற்றும் அன்பர்களும் தமது சுவாமி நினைவுகள் பற்றிய உண்மை உரைகளைத் தருவராயின் அவற்றையும் இப்பகுதியிற்சேர்த்து அடுத்த பதிப்பில் வெளியிடுவோம்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

- திருமூலர்.



1 தாயினும் நல்ல தலைவர்

அவனே பரமும் அவனே குருவும்
அவனே அகில மனைத்தும் - அவனேதாம்
ஆனவரே சொன்னல் அவனே குருவெனக்கு
நான்அவனாய் நிற்பதெந்த நாள்

-தாயுமானவர்-

இத்தெய்வத் திருவாக்குக்கு இலக்கியமான பெரியார் எங்குளர் என்று பேதையேன், தேடித்திரிந்தேன். பொல்லாதவர்களும், நெறிநில்லாதவர்களும் ஐம்புலன்கள் தம்மை வெல்லாதவர்களும், பட்டப்பகலை இரவென்று கூறுபவர்களுமாகிய பெரும் பேதையர்கள் வாழுங் குடியிற் பிறந்தேன். எனினும் பூர்வசனன வாசனையினற் போலும், பெரியோர்கள் எங்குளர் என்று கேள்விப்பட்டதும் உடனே அங்கு சென்று அவர்களை வணங்கி வருவது என் வழக்கம். நான் சந்தித்த பெரியோர்கள் பிறர் வியக்கக் கூடிய வகையில் உரையாற்ற வல்லவர்களாகவும், வாய்ச் சொல்லில் வீரர்களாகவும், சமயாசார வேடநெறி வழி நிற்பவர்களாகவுமே காணப்பட்டனர். என் குறைகள் தீர்ப்பார் எவரையுமே காணாது கவலையுடன் பள்ளியிற் படிக்கும் நாளில், ஒரு நாள் எனது பாடசாலைத் தோழர்கள் சிலர், ஒரு சுவாமியாரைப் பற்றிக் கூறினர். தாங்கள் புத்தகம் வாங்கப் பட்டணம் சென்றோர்களாம். வண்ணையிலிருந்த சண்முகநாதன் புத்தகசாலையில் புத்தகங்களை வாங்கிக் கொண்டு மீளும்போது, ஒரு பெரியவர் வந்து உள்ளிடவே, அதிபர் பதைபதைப்புடன் கதிரையைத் தூக்கி வெளியே வைத்து இருக்கச் செய்தாராம். பின்னால் வந்த சிலர் வீழ்ந்து வணங்கினராம். யாரோ ஒருவர் மாம்பழம் கொடுக்க அதை வாங்கித் தங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார் என்றார்கள். உடனே அவரைக் காண வேண்டுமென்ற ஆசை மிகுதியினால் பாடசாலை அதிபரிடம் விடைபெற்றுக் கொண்டு, பட்டணம் சென்றேன். எனது

தோழர்கள் கூறிய குறிப்பின் பிரகாரம் விரைவுடன் நடந்து சென்றேன். சண்முகநாதன் புத்தகசாலை என்ற விளம்பரப் பலகை எங்குள்ளது என்று பார்த்த வண்ணம் சென்று, ஒருவாறு மாலை மூன்றரை மணியளவில் புத்தகக் கடையை அடைந்தேன். உள்ளே சென்று சுவாமியாரைக் காணுமல் ஏங்கினேன். என்ன பார்க்கிறீர் எனக் கடைச்சிப் பந்தி ஒருவர் கேட்டார். இங்கு ஒரு சுவாமியார் இருந்தாராம், அவரைத்தான் பார்க்கிறேன் என்றேன். அவர் போய் விட்டார் என்ருர். எங்கு போனவர் என்றதும், அவர் எங்கு போனுரோ தெரியாது என்ருர். அவருடைய இருப்பிடத்தைக் கேட்டு அறிந்து கொண்டு அங்கே போனேன். நேரம் ஐந்து மணியிருக்கும் படலையைத் திறந்து உள்ளே சென்றேன். கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. ஒருவரையும் காணுது தவித்தேன். வயது முதிர்ந்த வெள்ளைச் சேலை தரித்த ஒரு அம்மையார் பக்கத்து வீட்டு விருந்தையில் நின்று ''என்ன பார்க்கிருய்'' என்ருர். சுவாமியைப் பார்க்கிறேன்என்றதும், 'இப்போதுதான் அவர் இந்தியாவுக்குப் பிரயாணமாகிவிட்டார்' என்ருர். ஐயோ! என்ன பாவம் செய்தேன். கைக் கெட்டியது வாய்க்கு எட்டவில்லையேஎன்று எண்ணி எண்ணி ஏங்கினேன். மனவருத்தத்துடன் வீடு திரும்பினேன்; இவ்வாறு ஐந்துமுறை சென்றும் சந்திக்கவில்லை. ஒரு ஐப்பசி வெள்ளிக்கிழமை அதிகாலை நாலுமணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, ஸ்நானம்செய்து தோய்த்துலர்ந்த வேட்டி தரித்துக்கொண்டு, எனது வணக்கத்தையும் முடித்துக்கொண்டு, காங்கேசன்துறைவீதி வழியாகச் சென்று ஆச்சிரமத்தை அடைந்தேன். ஆச்சிரமவாயில் திறக்கப்பட்டிருந்தது. அடியார் பலர்சூழ, மான்தோல் ஆசனத்தின்மேல், விரிக்கப்பட்டிருந்த வெள்ளை விரிப்பின் மேல் ஓர் உருவம் வடக்குநோக்கி வீற்றிருப்பதைக் கண்டேன். முதற்சந்திப்பு நடைபெறுகிறது.

''வா மோனை வா; இவர் ஒரு நல்லபிள்ளை, இன்ன ஊரில் இருப்பவர். இதற்குமுன் ஐந்துமுறை தேடிச்சந்திக்க

வில்லை. இன்றுதான் சந்தித்திருக்கிறர். நானும்இப்பதான் வந்திருக்கிறேன்'' என்ற அவர்கூறிய இச்சொற்களைக் கேட்டதும் செய்வதின்னதென்ன அறியாது இடியேறுண்ட சர்ப்பம் போலானேன். திருவடிகளில் அடியற்ற மரம்போல வீழ்ந்தேன். எழும்பு என்ற சொல்கேட்டு எழுந்து, இரு என இருந்தேன். சுவாமி திருமுன்பு பலவித பழங்களும் பலகாரவகைகளும் இருந்தன, சந்நிதானத்தில் இருந்தோர் அனைவர்க்கும் பலகாரவகைகள் வழங்கப்பட்டன. அடுத்தாற்போலத் திவ்வியமான பானமும் வழங்கப்பட்டது. அங்கிருந்த அடியவர்களிடம் மற்றும் அன்பர்களைப்பற்றிய செய்திகளை விசாரித்தறிந்துகொண்டு, பழவர்க்கங்களைப் பகிர்ந்து பிரசாதமாக வழங்கி விடைகொடுத்து அனுப்பினர். எனக்கும் பழவகைகள் கிடைத்தன. எழுந்து பழங்களைப் பெறும்போது எனக்கும் விடைதந்து விடுவாரோ என எண்ணினேன். கண்டறியாத, சுவைத்தறியாத, கேட்டறியாதனவற்றைக் கண்டும், சுவைத்தும் கேட்டும் அறிந்த எனக்கு அவ்விடத்தை விட்டு நீங்கவே விருப்பமில்லை, ''தம்பி! மாதா பிதாவை வழிபடு. பெரியோரை வழிபடு, நாலுபேர் சொல்லுகிறபடிநட, நாலுமணிக்குமுன் நித்திரை விட்டெழும்பு. கைகால் முகங்கழுவி, திருநீறு தரித்துக் கடவுளைக் கும்பிடு. பாடம்படி. தூய உணவு உண். இராக்காலங்களில் கண்டபடி வெளியேறித் திரியாதே'' என்றுகூறி விடைதரப்போகிறர் போலத் தோன்றிற்று. நான் நினைத்ததைச் சொல்லவில்லையே என எண்ணினேன். நான் **E. S. L. C.** வகுப்பில் தவணைப்பரீட்சைகளில் முதலாம் மாணவன். எனது நண்பன் கனகலிங்கம் என்பவர் ஒருதவணை நான் முதலாக வந்தால் மறுதவணை அவர் முதலாகப்பணயம் வைப்பர். இருவருக்குமிடையே மொத்தப்புள்ளிகளில் பத்துக்குள்ளேயே வித்தியாசம் இருக்கும். இப்படி இருந்தும் (வருடாந்தச் சோதனையின்போது) பகிரங்க அரசினர் பரீட்சையின் போது மிகவும் விருப்பமான இலக்கிய பாடத்தில் முதலாம் பகுதி எழுதிக் கொண்டிருக்கும் போது ''இன்னும் எட்டு நிமிடங்கள் தான்

உண்டு; எழுதினவர்கள் விடைப்பத்திரங்களைக் குத்திக் கட்டலாம்'' எனப் பரீட்சை மேலதிகாரி கூறினர். அப்ப குதியை விரைவில் முடித்துவிட்டு இரண்டாம் பகுதியும் தெரியும் என்பதைக் காட்ட ஒரு வினவில் ஒரு பகுதி எழுதினதும், நிறுத்தலாம் எனக் கட்டளை பிறந்தது. மனம் உடைந்தது. ஆறு பாடங்கள் சித்தியெய்த வேண்டும். ஆறு பாடங்களும் எடுத்து விட்டேன். அடுத்த நாள் பாடத் திற்குப் போகவில்லை. இதன் பெறு பேற்றைப் பற்றியே எண்ணினேன். எண்ணியதும் ''எல்லாம் சரிவரும் நீ இடைக் கிடை வந்துபோ; அப்பவா'' என விடை கிடைத்தது. முதற் சந்திப்பிலேயே பரம ஏழையும் ''ஆங்காரமான குல வேடவெம்பேய் பாழ்த்த ஆணவத்தினும் வலிதுகாண்'' எனத் தாயுமானர் கூறியாங்கு, ஆங்காரம் பிடித்த குடி யிற் பிறந்தவனுமாகிய எனது வரலாற்றைச் சூழ இருந்த அடியவர்களுக்குக் கூறினரே, அது உண்மையாயிற்றே என்ற உவகையினாலும், ''எல்லாம் சரிவரும்'' என்றமை யாற் சோதனையும் சித்தி எய்துவேன் என்ற மனத்திடத்தி னாலும், களிப்பினாலும் பணக்காரருக்கு மாத்திரமல்ல, பரம தரித்திரர்க்கும் ஆதரவளிக்கின்றாரே எங்கள் குருநாதன் என்ற எண்ணத்தினாலும் உந்தப்பட்டுப் பரமானந்த பரவ சம் அடைந்தேன். ''அப்பா வா'' என்ற சொற்கேட்டு எழுந்து மறுபடியும் திருவடியில் வீழ்ந்து வணங்கி விடை பெற்றுச் சிங்கேறு போல வீடுபோய்ச் சேர்ந்தேன். ''தாய்'' தந்தையை வழிபடு, ஆசிரியரை வழிபடு. குருவை வழிபடு கடவுளை வழிபடு'' என்றாரே. கடவுளை வழிபடுகிறேனே ஏன் குருநாதன் அப்படிச் சொல்ல வேண்டும்? அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என எண்ணினேன். காரணத்தையும் உணர்ந்தேன். என் குடும்பத்தினரைப் பற்றி முன்னமே கூறி உள்ளேன். வெட்டுக் கொத்து என் றால் கொண்டாடுவர்; ஆறு தேறு என்றால் திண்டாடுவர். இவர்களுக்கும் ஊராருக்கும் இடையில் எங்கள் குல தெய்வம் காரணமாக ஒரு கலம்பகம் உண்டானது. விநாயகப் பெரு மானின் கருங்கற் சிலை தவிர்ந்த ஏனைய எழுந்தருளி

மூர்த்திகளும், கோயிலுக்குரிய பல வித பொருள்களும் கோட்டில் ஒப்படைக்கப்பட்டன. ஆலயக் கதவுகள் அடை பட்டுக் கிடந்தன. திறப்புத் தகப்பனாருடைய கையில் இருந்தது. திறப்பை வாங்கிச் சாயங்காலங்களிற் சென்று விநாயகப் பெருமானுக்கு விளக்கேற்றி வழிபட்டு வந்தேன். தாய் தந்தையை வழிபடு என்றாரே. நான் எப்படி அவர் களை வணங்குவது, வணங்கினதும் எனக்கு விசர் என்று விசருக்குரிய வைத்தியரிடம் அழைத்துச் செல்வர் என்ற பயத்தினால் மனத்தினால் அவர்களை வழிபட்டேன். அங்ஙனமே பெரியோரையும் மனத்தால் வணங்கினேன். ''இடைக்கி டை வந்து போ'' என்றமையின், பெருமானிடம் சென் றேன். தாய் தந்தை என்னிடம் வையாத அன்பு பெருமா னிடம் இருப்பதை நேரிற் கண்டேன். அன்பு கொண்டேன். என் சொந்த வீட்டில் இருப்பதைப்போலவே ஆச்சிரமத்தி லும் இருந்தேன். அங்கும் என் சுதந்திரத்துடன் நடந்தேன்; நான் தவறுதல் விடும் நேரங்களிற் குதிரைக்குச் சவுக்கடி விழுவது போல் எனக்கும் திருவருட் சொல்லடியும், திருக்கு றிப்புப் பார்வை அடியும் கிடைக்கும். அதனை உணர்ந்து கொஞ்சம் கொஞ்சமாய்த் திருந்தி வந்தேன். சுவாமிகள் திருவாய் மலரும் விலைமதிக்க முடியாத நவரத்தின மணி களிலும் சிறந்த மணிமொழிகளைக் கேட்டுச் செவி முதலிய பொறிகளும், மனமும் தினைத்திருக்கும் நேரத்தில் மெய்யடி யார்கள் அன்புடன் பெருமானுக்கும், சூழ இருக்கும் அடி யார்களுக்குமாகக் கொண்டுவரும் தேநீரும், கட்டிபட்ட கரும்பினும் இனிய திருவமுதும், உடலுக்கும் கிடைக்கும். கைலாயத்துச்சியில் உள்ள எம்பெருமான் பூலோகத்தில் மானிட உருவம் தாங்கிக் கற்பக தருவாய் இருந்து இன் பம் அளிப்பதை அடியேன் நேரிற் கண்டேன். இராக்காலங் களிற் கண்டபடி வெளியேறித் திரியாதே என்று கூறியிருக்க வும் அச்சொல்லைத் தட்டி நடந்து துன்பம் அடைந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது. அடியேன் கற்பித்த ஒரு சிறுமியை இராமநாதன் கல்லூ ரியில் சேர்த்து விடுமாறு தாயாரும் மாமனாரும் அடியே

னைப் பணித்தனர். அவ்வாறே செய்தேன். மாமனூர் தாயார் இருக்கவும் என்னை அப்பிள்ளையின் பாதுகாவலன் எனக் கருதி ஓர் பெற்றூர் தினவிழாவுக்கு எனக்கு அழைப்புக் கிடைத்தது. விழா ஆரம்பம் பி. ப. 6 மணிக்கு; 5. 50 மணி அளவில் கல்லூரி சென்று பூஞ்சோலையில் உலாவுகையில் ஓர் பூவின் அழகால் மனங்கவரப்பட்டு அதனைப் பறித்து மோந்தேன். பின்பு அதைக் கையில் வைத்திருந்தேன். முகத்தில் வலி எடுத்துக் கூட்டம் பூர்த்தியாகும் வரை நிற்க முடியாமல் 7. 30 மணியளவில் புறப்பட வேண்டி நேர்ந்தது. உதடுகள் வீங்கி வலிக்கத் தொடங்கின. உடன் வீடு வந்து சேர்ந்தேன். எனது நண்பன் ஒருவர் பொன்னம் பலம் என்னும் வைத்தியர். அவர் பார்த்து பூநாகம் தீண்டி விட்டது; அது கண்ணுக்குத் தெரியாது. காணுக்கடி எனப் பார்வை பார்த்துப் பூச்சு மருந்தும் பூசி விட்டார். இரண்டு மூன்று தினங்களில் குணம் அடைந்தேன். இது எனக்குக் கிடைத்த ஓர் தண்டனை என்றே உணருகின்றேன். நான் தவறுதல்கள் செய்த காலங்களில் எனக்கு உடனுக் குடன் தண்டனை கிடைத்திருக்கிறது. இன்னொரு சந்தர்ப் பத்தில் ''அங்கும் இங்கும் ஓடாதே, அலைந்து திரியாதே; நீகும்பிடுவதும் பிறருக்குத் தெரியாமல் இருக்கட்டும்'' என் றூர். நான் செல்வச்சன்னிதி முருகனை வணங்க ஆசைப் பட்டு அங்கு சென்றேன். மழை காலம். நிலம் ஈரமாய் இருந்தது. ஆலயத்தில் இருந்து ஆனந்தாச்சிரமத்திற்குச் செல்லும் வழியில் கிளுவம்முள் காலில் தைத்தது. உடனே முள்ளை இழுத்து எடுத்துவிட்டேன். விஷயம் முடிந்து வீடு சேர்ந்த இரண்டு தினத்தில் வீக்கமும் நோவும் உண்டாயின. பின் சத்திர சிகிச்சை செய்து முள் எடுக்கப்பட்டது. பெரு மான் வந்து ''நீ என் சொல்லைக் கேளாமல், ஒன்றும் தெரியாதவனைப்போல அலைந்து திரிகின்றமையால் நான் தான் அப்படிச் செய்தேன்'' என்றூர். கண்ணீர் விட்டேன். ''கவனமாய் நட, அது சுகம் வரும்'' என்றூர். மூன்று நாலு தினங்களிற் சுகமாகி விட்டது. சொல்லுக் கேட்டு நடந்த காலங்களில் உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை.

எட்டாம்தரச் சோதனை (E· S. L. C) மறுமொழியும் சித்தி என அறிந்து ஆனந்தம் அடைந்து சென்றேன். காலை வேளைகளிலேயே செல்வது வழக்கம். நான் செல்லும் நேரங்க ளில் பல அடியார்கள் இருப்பார்கள். தெருவோரத்தில் மோட்டார் வண்டிகள், இழுவை வண்டிகள், மாட்டு வண்டி கள் முதலியன வரிசையில் நிற்கக் காண்பேன். பலர் பழத்தட்டங்கள், பழங்கள், கடதாசிப்பைகள் ஏந்தியகையின ராய் வெளியே வருவர். பலர் பால் பழம் கைகளில் ஏந்தி உள்ளே செல்வர். வணங்குவார் ஒரு புறம், தமிழ் மறை ஓதுவார் ஒரு புறம். உள்ளே செல்லமுடியாது காத்து நிற்பார் ஒரு புறம், வெளியே உள்ள திண்ணையில் தியா னத்தில் இருப்பார் ஒரு புறம். உள்ளே மௌன நிலையில் இருப்பார் ஒரு புறமாக அடியார்கள் காட்சி அளிப்பார் கள். அவரவர்க்கு ஆவன சொல்லியும், கொடுத்தும் அருள் புரிவார். வெளியே போவோர் சென்ற பின், வெளியே நிற் போரை உள்ளே அழைப்பர். திருவருட் பிரசாதம் வழங் குவார். திருவமுதும் வழங்குவார். அடியேன் போன்றவர்க ளின் உடற் பசியையும் போக்குவார். அருட்டாகம் உடை யோரின் தாகத்தையும் போக்குவார். பெண்வேண்டுமென்ற வர் விரும்பிய பெண்ணைப் பெற்றனர், மண் வேண்டும் என்றவர் மண்ணைப் பெற்றனர். பொன் வேண்டும் என்றவர் பொன்னைப் பெறறனர். உத்தியோகம வேண்டும் என்றவர் உத்தியோகம் பெற்றனர்; எனவே பெருமான் வேண்டுவோர் வேண்டுவதை ஈபவர் என நேரில் உணர்ந்தேன். வெளியே காத்து நிற்பாரோடு நானும் நின்றேன். வெளியே நிற்ப வர்களை ''வாருங்கள்'' என்றதும் ஒவ்வொருவராக உள்ளே சென்றோம். பாதங்களில்வீழ்ந்து என் ஆசை தீரும் வரை வணங்கினேன். அவருடைய திருமேனியில் திண்டியதும் பேரானந்தத்தால் விழுங்கப்பட்டேன். எழும்புக என எழுந் தேன்; ஒரு புறமாக அமர்ந்தேன்; புன்முறுவல் பூத்த பேரா னந்தத்தினால் பொலிந்து விளங்குகிற அகத்தின் அழகு திகழ்கின்ற முகத்தின் பொலிவைப் பார்த்த வண்ணம் இருந்தேன். தன் முகத்தை ஏற இறங்க எதிரிட்டுப் பார்த்த

வன் ஒருதன் விசரனுய் விட்டான் என்றூர். சொல் எல்லாம் மோனமாய் இருப்பார்; பின் பாடுவார்; பக்கத்தில் இருக்கும் அடியவர்களையும் பாடச் சொல்லுவர். அவர்களும் பாடுவார்கள். பாலர், இளைஞர், வாலிபர்கள், கன்னியர் கள், முதியோர் முதல் பலரும் இருந்தனர். என்னைப் பார்த்து ஒரு புத்தகத்தை எடுக்கும் படி கூறினர். எழுந்து திரும்பிப் பார்த்தேன்; சுவரின்மேல் பல புத்தகங்கள் இருந்தன. எல்லாம் உன் செயல் எனக் கண்களை மூடிய வண்ணம் புத்தகத்தைத் திறந்தேன். திருக்குறள் பெரியா ரைப் பிழையாமை என்ற பகுதி வந்தது. அப்பகுதியையும் உரையையும் வாசித்தேன். இடையிற் சொற்பிழைகள் ஏற்படும் போது திருத்தினர். திருத்தி வாசித்தேன், அரை மணி நேரம் வரை வாசித்த பின், இனிப் போதும் வை என்றூர்; வைத்தேன், ''வீணருடன் கூடாதே மனம் போன போக்கெல்லாம் போகாதே, படி, கவனமாய்ப்படி, சாகாத கலையைச் சாகும்வரைகல். யூனியர் போதாது ''Junior'' என்றுல் you near. அது போதாது. ''Senior'' என்றுல் See near. சீனியர் வரை படி.' கர்ப்பூரத்தை எடுத்துக் கொளுத்து'' என்றூர். கொளுத்தினேன் ''விநாயகனே வெவ் வினையை வேரறுக்க வல்லான்'' என்ற பாடலுடன் வேறும் பல பாக்கள் பாடினர். கேட்கக் கேட்க ஆனந்தமாகவே இருந்தது. கள்வனேன் மனத்திற்குத் திவ்வியரசம் யாவும் திரண்டொழுகு பாகு அருந்தினது போன்றிருந்தது. தெய்வங்களுக்கெல்லாம் சாப்பாடு கொடுக்க வேண்டும். இலைகளைப் பரிமாறு என்றூர். இருந்தபடியே பெருமானுக்கு முன் ஓர் இலையை வைத்து லீட்டுச் சூழ இருந்தவர்களுக்கு முன்பாகவும் ஒவ்வோர் இலை வைத்தேன். எனக்கு ஓர் இலை போடச் சொன்னர், போட்டேன். திருமுன்னிலையில் இருந்த பலகாரங்களைப் பகிர்ந்து வைத்தேன். சுவாமி சாப்பிடத் தொடங்னதும், அன்பர்கள் உண்ணத் தொடங்கினர். புண் ணியமே வடிவெடுத்தாற் போல்று வடிவெடுத்தவரும் பெரு மானின்குடை நிழலில் இருந்து வருபவருமாகிய திநநாவுக் கரசு எனும் அன்பர் வந்து மேலும் இருந்த பலகாரங்களைப்

பகிர்ந்துவைத்தார். சாப்பாடு பூர்த்தியாகி வாயலம்பிக்கை கழுவிஇருந்த பின் தேநீர்ப் பானமும் கிடைத்தது. அதையும் பருகிய பின் அவரவர் இருக்கையில் இருந்தோம். சுவாமி தமது திருக்கரங்களால் ஒவ்வொருவருக்கும் பிரசாதம் தந்து விடை கொடுத்து அனுப்பினர். ''படிக்கிற பிள்ளைகள் கவ னமாய்ப் படிக்க வேண்டும் மாதமொருமுறை வந்துபோ நாங்கள் காடாறு மாதம், நாடாறு மாதம் சீவிப்பவர்கள். நானும் புறப்படப் போகிறேன், போய் வா'' என்றூர். திருவடிகளில் வீழ்ந்து வணங்கி விடைபெற்று வீடு சேர்ந்தேன்.

உம்பர்தம் பெருமான் ஊழி முதல்வன்
செம்பொ னம்பலத்தி லாடும் தேசிகன்
நம்புவார் தங்கள் நல்குர வகற்றுவோன்
இம்பரில் வந்தஅதிசயம் என் சொல்வேனே.

மானைக்காட்டி, மான் பிடிப்பவர் போல் மானிட வடிவத்தை எடுத்து மனிதரை அகப்படுத்த வந்த குருபர னிடம் அடியார்க்கும் அடியவனுகிய யான் அவர் பணித்த படி அடிக்கடி போய் வந்தேன். பல சந்தர்ப்பங்களில் ஆச்சிரமத்தில் இராக்காலங்களில் தங்கவும் நேர்ந்தது. சில காலங்களில் பாதிச் சாமத்தின் பின்பே பள்ளிகொள்ளவும் நேர்ந்தது. பின்னரும் நாலுமணிக்குக் குருபரன் விழித்தெழுந்து முகங்கழுவிக் கைகால் சுத்தி செய்து, விபூதி தரித்துத் தியானத்தில் அமர்ந்திடுவார். அடியேனும் எழுந்து உடல் சுத்தி செய்து விபூதி தரித்திருந்து தியா னிப்பேன். தியானம் முடித்துக் கடவுளைத் திவ்விய பாடல் களிஞல் அர்ச்சிப்பார். நமச்சிவாயமாலைப் பாடல்களை அக்கா லத்தில் அதிகமாகப் படிப்பார். அவற்றுள் ஒன்று அடியேன் மனத்தைக் கவர்ந்தது. அது மேல்வருமாறு ஆகும்:-

''நைந்துனை நினைப்பார்பாவம் நாசமதாக்கி நிற்பாய்
பைந்தொடி பாகங் கொண்ட பரமனே நமச்சிவாய''

''பெரியோருடன் கூடினுல் பாவம் நீங்கும், பலவித நன்மை களும், சித்திகளும் வரும், சுவனமாய் இருக்க வேண்டும்'' என்று கூறுவார். அடியேன் கஷ்ட நிலையை நீக்கக் கருதி அரசாங்கத்திற்கு, ஆசிரியராகத் தொழில் தருமாறு விண் ணப்பிக்குமாறு பணித்தார்; பணியைச் சிரமேற் கொண் டேன். சிறியேன் விண்ணப்பித்து இருவாரங்களின் பின் ''கண்டிப்பகுதியிலுள்ள அக்குறணை அரசினர் பாடசாலையில் உதவி ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளீர். அடுத்தமாதம் முதலாந் திகதி பொறுப்பேற்கவும்'' எனக் கடிதம் கிடைத்தது. குருபரனிடம் சென்றேன். ''உனக்கு நல்ல இடம் கிடைத்திருக்கிறது. நீ ஒன்றுக்கும் யோசியாதே, எல்லாவற்றுக்கும் நான் இருக்கிறேன். நீ அங்கே செல். நான் அங்கு வருகிறேன்'' என்றார். சாப்பாட்டு வசதிஎப்படி யாகுமோ என மனத்துள் எண்ணினேன். ''உன் விருப்பப்படி எல்லா வசதியும் உனக்காக நான் செய்து வைத்திருக்கி றேன்'' என்று மேலும் கூறினர். மனமார உடலார வணங்கினேன். நெடுநேரமானபின் 'இனி நீ வாவன்' என்று கூறக்கேட்டு வணங்கிக் கொண்டு எழுந்து சென்றேன்.

ஒரு சனிக்கிழமை புகைவண்டியில் ஏறிப் பொல்கா வலையில் இறங்கி வண்டிமாறி ஏறுவதற்காகக் காத்து நின் றேன். மனம் சற்றுக் கலைப்படைந்தது. முன் பின் தெரி யாது, எங்கு போவது, ஆரைத் துணைக்கு அழைப்பது என்ற ஆலோசனையுடன் நின்றேன். என்பக்கலில் இருவர் வந்து நின்றனர். ''எமது பாடசாலைக்கு இன்ன பெயருள்ள ஒரு ஆசிரியர் வருகின்றாராம். அவர் எப்படியோ? தொந்த ரவு தருவாரோ என்னவோ?''என ஒருவர் மற்றவருக்குக் கூறினர். உடனே தந்தையுமாய் குருவுமாய் உள்ள குருபரன் கூறிய வார்த்தைகள் என் இதயத்தை உருக்கின. ''அப்பனே! அடிநாயேனையும் ஒரு பொருளாகக் கருதி முன் கூறியாங்கு தோன்றுத் துணையாய் வந்தனையோ'' என எண்ணிக் கொண்டு என் வலக்கரத்தை நீட்டி நீங்கள் கூறிய போர் வழி இவர் தான்' என்று கைகுலுக்கி மகிழ்ந்தேன். என் கவலைகளெல்லாம், ஆதவனைக் கண்ட பனிபோல

மாறின. அவர்தான் அடியேன் செல்லும் பாடசாலைத் தலைமை ஆசிரியர். இருவரும் நன்கு அளவளாவினோம். வண்டி வந்தது. அவர் தன்னுடனேயே என்னையும் அழைத் துச் சென்றார். கண்டியில் இறங்கிச் சாப்பிடச் சென்றோம். ''எனக்குச் சாப்பாடு தேவை இல்லை'' என்றேன். தலைமை ஆசிரியர் சுத்தமான தாவர போசனம் பரிமாறும் இடம் உண்டு; அங்கே சாப்பிடலாம் என்றார். எனக்காகத் தானும் அங்கேயே சாப்பிட்டார். பின்னர் பாடசாலை போய்ச் சேர்ந்தோம். அங்கு தனது வேலைக்காரன் மூலம் எனக்குத் தாவரக் கறிகளுடன் உணவு அளிப்பார். பின்னர் தான் மாமிச உணவு சாப்பிடுவார். மகாவலி கங்கையின் ஓர் கிளையின் அருகாமையில் உள்ள குன்றின் பரவையிலேயே பாடசாலையும் விடுதியும் இருந்தன. குளிர் அதிகம். அட்டைக் கடியும் தாங்க முடியாது வருந்தி னேன். ஒரு மாதகாலத்தில் ஒரு அன்பர் வந்து, ''சுவாமி அம்பத்தனை ஓவசியர் வீட்டில் நிற்கிறார். உங்களை வரும்படி கூறச் சொன்னார்.'' எனக் கூறினர். இது தாயைப் பிரிந்த கன்று போல் இருந்த எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. அவர், தான் அரைமணி நேரத்தால் அவ்விடம் வருவதாக வும் வந்து என்னைக்கூட்டிச் செல்வதாகவும் கூறிச் சென்றார். அவருடனே சென்று சுவாமியைத் தரிசித்தேன். தாயினும் இனிய குருபரனுக்கு நான் அட்டைக் கடியினற் படும கஷ்டம் தெரிந்தது போலும்! அங்கு தரிசனத்திற்காக வந்து நின்ற ஓர் அன்பரைப் பார்த்து ''நீர் எங்கே இருக்கிறீர்'' என்று கேட்டார்.

அவர் '' நான் கட்டுகஸ்தோட்டையில் ஒரு அறை எடுத்து அதில் மூவர் வசிக்கிறோம்'' என்றார். ''இவரை யும் உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்றார். தான் அங்கு மேலும் இரண்டு தினங்களுக்கு நிற்பார் என்றும் என்னைவந்து போகலாம் என்றும் ஒரு பைநிறைய அப்பிள், இறம்புட்டான் முதலிய பழவர்க்கங்கள் உள்ள பிரசாதத் தைத்தந்தனர். மற்றும் அன்பர்களுக்கும் அப்படியே வழங்கினர். எங்கேசென்றாலும் அங்கேஅவர் கற்பகதருபோல்

காட்சி அளிப்பதைக் கண்டேன். ''இரு, சாப்பிட்டுக் கொண்டு போகலாம்'' என்றார். எல்லோருக்கும் சாப்பாடு கிடைத்தது. சாப்பாடாயின பின் ''கவனமாய்ப் படி. ஆசிரிய கலாசாலைப் பிரவேசப்பரீட்சைக்கு விண்ணப்பி'' என்று கூறி விடைதந்தார் வணங்கிக் கொண்டு பாடசாலை சென்றேன். கட்டுகாஸ்தோட்டையில்உள்ள அன்பரும் என்னுடன் வந்து எனது பெட்டிகளுடன் கட்டுகாஸ்தோட்டைக்கு வருமாறு அழைத்தார். தலைமை ஆசிரியர் விட்டுப் பிரிய மனம் இல்லாதிருப்பதை அறிந்து இது எனது விருப்பம் அல்ல, குருபரன் கட்டளை, என்னலும் ஒருவாறு மனம் இசைந்து விட்டார். அக்குறணையிலும், பார்க்கக் கட்டுகாஸ் தோட்டை சகல வசதிகளும் நிறைந்ததாகவே இருந்தது. அன்பர்களுடன் கூடிப் படிக்கவும் வசதியாய் இருந்தது. ஆசிரிய கலாசாலைப் பரீட்சைக்கு விண்ணப்பித்தேன். பரீட்சையில் தேர்ச்சியும் பெற்றேன். பல பல வேடமாக வுள்ள பரன், குருபரனாக வந்து எனக்குத் தோன்றுத்துணையாக இருந்து வேண்டிய வேண்டிய நேரங்களில் தேவையான புத்திமதிகளைக் கூறி என்னை நல்வழிப் படுத்துவதைக் கண்டேன். 1932ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் சேருவதற்கு உறுதுணையாயருளியவர் குருபரனே. கலாசாலையில் கற்கும் காலத்தில் அதிபர் அவர்களுடைய உத்தரவுடன் அநேகமாக வெள்ளிக்கிழமை மாலையில் குருபரனைச் சந்திக்கச் செல்வேன். பின் ஞாயிற்றுக் கிழமை மாலைதான் பாடசாலைக்கு செல்ல உத்தரவு கிடைக்கும். அனுப்பும் நேரங்களில் அறிவுக் கனலை வீசுவர். அருட்புனலைப் பரப்புவர். 'பெரியோர்களோடு சேர்ந்து நடப்பவர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாம். எல்லாச் சித்திகளும் உண்டாம்' என்பர் அவர்கள் தங்களுடைய அருட் பேடகத்திலுள்ள திரவியங்களை எல்லாம் தமது அன்பர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார்கள். அடியேன் புத்தகம் எடுத்துப் படித்தகாலம் குறைவு, எனக்குத் தெரியாத விஷயங்களைப் பிறரிடம் கேட்காமலே, கனவிலேயே, குருபரன் கற்பித்துள்ளார். திருக்குறள், கணிதம், உளநூல் முதலிய பல பாடங்களை

அடியேனுக்குக் கனவில் படிப்பித்துள்ளார். அவை தவணைப் பரீட்சைக்கும், வருடாந்தப் பரீட்சைக்கும் விளக்களாக வர நானும் மகிழ்ச்சியுடன் விடை எழுதிக் கூடிய புள்ளிகளும் பெற்றுள்ளேன். இதன் இரகசியத்தை எனது கலாசாலை நண்பன் ஒருவர் உணர்ந்து, ''நீ சுவாமியிடம் போவதன் பலனை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். ஒன்றும் படியாமல் சுவாமி சுவாமிஎன்று ஓடுகிறாய். நாங்கள் இராப்பகல் கஷ்டப்பட்டுப் படித்தும் உன்னைப் போல் புள்ளி பெற முடியவில்லையே. இது உனது சுவாமியாருடைய செயல்தான்' என்பார். அவரும் சுவாமியிடம் விரும்பி வந்தார். அவர் பெயரை வினவியபின் ''சிங்கம் போல நீ வாழ்'' என்றார். ''அன்பே சிவம். எல்லாரிடத்தும் அன்பாய் இரு. சூரியன் தனது கடமையைச் செய்கிறது. சந்திரன் தனது கடமையைச் செய்கிறது. அவை ஏதாயினும் பலன் கருதுகின்றனவா? அது போல் நீயும் பலன் கருதாது கடமையைச் செய்'' என்றார். பெரியோர் தரிசனத்துக்குப் போகின்றவர்கள் பல வித பொருள்களை அன்பளிப்பாக எடுத்துச் செல்வர். சுவாமியிடமும் பலர் பலவித கையுறைகளுடன் வருவார்கள். அவற்றையெல்லாம் ஏற்பார். சிலவற்றைத் திருப்பியும் விடுவார். ஆடுவார், பாடுவார், கைகொட்டுவார். கைகொட்டிச் சிரிப்பார். கெக்கட்டம் விட்டுச் சிரிப்பார்; கூவிப்பார், பின் அணைப்பார். இவர் செய்கையை யார் தான் விபரிப்பார். ஒரு தீபாவளிக்கு முதலாளி எனக்கு மாமனார் அளித்த 1703 இலக்க வேட்டியுடன் கலாசாலையில் இருந்து சென்றேன். பலரும் பலவித ஆடைகளுடன் வந்திருந்தனர். அவர் முன் வைத்தனர். நானும் கடதாசி மடிப்பை எடுத்து வைத்தேன். உடனே அதை எடுத்து விரித்தார். அதைக் கையிற் பிடித்தபடி ''இது இப்போது யாருடையது'' என்றார். எவரும் பேசவில்லை. ''இது இப்போது என்னுடையது, இதனை நான் அன்பாக ஏற்றுக் கொண்டேன். அதை நான் உனக்குத்தரப் போகிறேன்.'' என்று தந்தார். ஏற்றேன். பாரில் இவர் இராசாதி இராசா; ஆறிவார் இவர் பெருமை.

அமரர் ஆசிரியர் து. சங்கரப்பிள்ளை - திருநெல்வேலி

2 தோன்றுத் துணையாயிருந்தனன் தன்னடியோங்களுக்கே

''நால்வர்கள் தான் அற்புதம் செய்தார்கள், மற்றை யோர் அற்புதஞ் செய்ய முடியாது என்று நினைக்க வேண்டாம். நாங்களும் அற்புதங்கள் செய்து கொண்டே இருக்கிறோம். ஞான மின்சார நிலைக்களன்களாகிய மகான் களின் பார்வையால், இன்சொல்லால், ஸ்பரிசத்தால் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். அதை நீங்கள் அறிய வேண்டும்.'' இது கொழும்புத்துறைப் பெரியாரின் திரு அருள் மொழியாகும். வைதிகச் சைவர்கள் உணர வேண்டிய எவ்வளவோ உண்மை அதில் அடங்கியுள்ளது. சாதகர்கள் தமது சொந்த வாழ்வில் பெற்ற எத்தனையோ அனுபவங்கள் அதற்கு அத்தாட்சியாயுள்ளன. முக்கியமாக இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சில அற்புத நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக மனத்திரையில் புதுப் பொலிவுடன் காட்சியளித்தன. அவ்வற்புத நிகழ்ச்சிகள் 'தோன்றுத் துணையாயிருந்தனன் தன்னடி யோங்கட்கே' எனும் அப்பர் வாக்கை மெய்ப்பிக்கக் கூடியனவாயிருந்தன. அவற்றிலிருந்து இரண்டொன்றை மாத்திரம் சுருக்கமாகக் கீழே தருகிறோம்.

ஆன்மீக வாழ்வைப் பொறுத்தமட்டில், நூல்களிலி ருந்து எடுத்தாளப்படும் தத்துவ நுட்பங்களிலும் பார்க்கப் பெரியார்களின் வாழ்விலிருந்து எடுத்து விளக்கப் படும் அனுபவங்கள் மிகவும் சிறப்புடையன. ''சிவதொண் டன்'' உதயமாவதற்கு ஓராண்டுக்கு முன்னென எண்ணு கிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த அன்பர் ஒருவரைக் கொழும்புப் புகையிரத நிலையத்திற் சந்திக்க நேர்ந்தது. என்னைக் கண்டதும் ''நீங்கள் இந்த வேளையில் யாரைச் சந்திக்க வந்தீர்கள்? எப்படிச் சுகம்?'' என்பன போன்ற சாதாரண கேள்விகளை அவர் கேட்கவில்லை. ''யோகசுவா

மிகளைப் பொல்காவலைப் புகையிரத நிலையத்திற் கண்டேன். மலைநாட்டிற்குப் போகிறீர் போலும்'' என்று மாத்திரம் சொன்னார். அவருக்கு நன்றி கூறிவிட்டுச் சென்று கந்தோ ரில் ஐந்து நாள் ஓய்வு எடுத்துக்கொண்டு வீடு திரும்பி னேன். சுவாமிகள் மலைநாட்டுக்குச் செல்லும் போதெல்லாம், அக்காலத்தில் பேராதனைத் தெயிலைத் தோட்டமொன்றில் உத்தியோகம் பார்க்கும் ஓர் அன்பரின் இல்லத்திற்குப் போவது வழக்கம். அவரை நிச்சயமாக அங்கே தரிசிக்க லாமென்ற பூரண நம்பிக்கை உள்ளத்தில் இருந்தது. அடுத்தநாட்காலை புகையிரதத்தில் கிளம்பி விட்டேன். வைத்த பொருள் எடுக்கப்போகிறவன் போல நேரே குறித்த இல்லத்திற்குச் சென்று கதவைத் தட்டினேன். சுவாமிகள் தான் கதவைத் திறந்தார். ''கள்ளப்பயலே! நான் இங்கு நேற்றுத்தானே வந்தேன். கொழும்பில் வசிக்கும் உனக்கு எப்படி இந்தப்புதினம் கிட்டியது?'' என்ற கேள்வியைப் போட்டார். ''சுவாமிகள் அறிவிக்க யான் அறிந்தேன்'' என்று பதில் சொன்னதும், வழக்கமான சிரிப்புச் சிரித்தார்.

சிறிது நேரம் கழித்து, உத்தியோகத்திற்குப் போயி ருந்த வீட்டுச் சொந்தக்கார அன்பர் வந்தார். மனைவி மக்கள் யாழ்ப்பாணம் போயிருந்தபடியால், அவரே இந்த இடைவேளையில் வீடுதிரும்பிச் சமையல் வேலையைக் கவனிப்ப துண்டு. சுவாமிகள் அவரை நோக்கி ''ஒரு பிடி அரிசி கூடப்போடுவதுதானே'' என்று கூறிவிட்டு என்பக்கம் திரும்பி, ''இந்த ஆசாமி வானப் பிரஸ்தப் பயிற்சி செய்யும் வேளை பார்த்து நான் வந்தேன். நாய்போல மணம் பிடித்து நீயும் வந்து சேர்ந்து விட்டாய். இனி மூவரும் சேர்ந்து சந்நியாச ஆச்சிரமம் நடத்துவதுதானே'' என்று சொல்லி குலுங்கக் குலுங்கச் சிரித்தார். அன்பருக்குச் சிறிது உதவி செய்ய யானும் சமையலறைக்குப் போனேன். ஒரு மணித்தியாலத்துள் உணவு தயாராய்விட்டது. மூவரும் சேர்ந்து அமுதுண்டோம். அன்பர் மறுபடியும் வேலைத் தலத்திற்குப் போய்விட்டு நான்கு மணிபோல வீடு திரும்பி

வந்து தேநீர் தந்தார். அது முடிந்ததும், சுவாமிகள் ''பேராதனைத் தோட்டம் தியான சாதனைக்கு உகந்த இடம், இப்போது சனங்களும் வரமாட்டார்கள். அமைதி நிலவும். வா போவோம்'' என்று திருவாய் மலர்ந்தார். இருவரும் போய் கங்கைக் கரையை அடுத்துப் புற்றரையில் தியானம் செய்தோம். சூரியன் அஸ்தமிக்கும் வேளையில் வீடு திரும்பினேம். அன்பர் படுக்கையாய் இருந்தார். உடலில் கடுமையான சுரம் இருந்தது. கம்பளியால் போர்த்தபடியே நடுங்கினர். இரண்டு மணித்தியால எல்லைக்குள் இப்படி அவர் நோய்வாய்ப்பட்டிருந்தது எனக்கு வியப்பையும் விசனத்தையும் தந்தது. என்னை வெளியிலேயிருந்து படிக்கும்படி கட்டளை தந்துவிட்டு, சுவாமிகள் அன்பரின் படுக்கைக்கருகில் ஓர் கதிரையைப் போட்டு அதில் இருந்தபடியே நோயாளியின் நாடி பார்ப்பவர் போல் கையைப் பிடித்த வண்ணம் அமர்ந்தார். ஏழுமணியடித்தது, சுவாமிகள் வெளியேவந்து, ''நீ குசினிக்குப் போய் கேத்தலில் வெந்நீர் வை. மூவரும் இன்ஸ்ரன்ற் போஸ்ரம் (Instant Postumn ஓர் அமெரிக்கக்கபானம், நான் அதைச் சுவாமிகளிடமிருந்தே முதலில் கேள்விப்பட்டேன்.) குடிப்போம். நான் முழுகி விட்டு வருகிறேன்'' என்றார். கால்மணிநேரம் போல் வாளியால் பீப்பாவிலிருந்து தண்ணீர் எடுத்துக் குளித்த சத்தம் மாத்திரம் வெளியில் கேட்டது. சடாமுடியிலிருந்து தண்ணீரைத் துடைத்த வண்ணம் வெளிவந்தவர், அன்பர் படுக்கையை விட்டு எழும்பி வந்து பானம் பரிமாறுவதற்குப் பாத்திரங்கள் சுத்தஞ் செய்வதைக் கண்டு வியப்புற்றவர் போல், ''என்ன சாணும்! பெரிய நோயாளி போல் அடங்கி, ஒடுங்கி நடுங்கிவிட்டு, பத்து நிமிடம் செல்லுமுன் எழும்பி நடமாடுகிறீர்? என்ன பாசாங்கு இது?'' என்றார். நடந்த திருவிளையாடல் அன்பருக்கும் எனக்கும் நன்கு விளங்கிவிட்டது. ஆனந்தக்கண்ணீருடன் அப்பனின் கருணையை இருவரும் ஒருமனப்பட்டு வாழ்த்தினேம். முதனாள்போலவே இரண்டாவது நாளும் பேராதனைத் தோட்டத்தில் தியானயோகம் நடைபெற்றது; ஆனந்தம், மூன்றும்நாள் கொழும்பிலிருந்து மோட்டாரில், ஓர் நண்பர் வந்தார். அவருடன் காவியுடை தரித்த ஒரு சாதுவும் வந்திருந்தார். ஏறக்குறைய இரு மணித்தியாலமாகச் சம்பாஷணை நடந்தது. நண்பர் அரசாங்க உத்தியோகத்தர். அடுத்த நாள் கந்தோரில் நிற்கவேண்டியவர் என்பதை அறிந்ததும், சுவாமிகள் ''நேரத்துடன் வெளியேறினற்றான் இருட்டுக்குமுன் வீடு சேரலாம். போய்வாருங்கள்'' என்றார். நண்பர் கலங்கினர்; கண்ணீர் விட்டார். வாய்விட்டு ஒன்றுஞ் சொல்லவில்லை; சாது பேசினர். நண்பர் சுவாமிகளைக் கொழும்புக்கு அழைத்துப் போகவே வந்துள்ளார் என்பதைத் தெரியச் செய்தார். சுவாமிகள் மறுத்தார். ''கண்டிக்கும் கம்பளைக்கும் போக வந்தவழியில் இங்கு தங்கியுள்ளேன். இன்னொருமுறை பார்ப்போம், போய்வாருங்கள்'' என்றார். நண்பரின் கண்ணீர் பன்மடங்காகியது. சுவாமிகள் என் முகத்தையும் நண்பர் முகத்தையும் பார்த்தார். எனக்கு அநுமையாகக் கிடைத்த ஆனந்த வாழ்வுக்கு இது ஓர் கடையென்பதற்காக நான் உள்ளே விசனப்பட்ட போதிலும், நண்பரின் போக்கிலிருந்து அவரை ஏதோ பெரும் துயரம் வாட்டுகிறதென்பதை ஊகித்தறிந்து இரக்கங்காட்டினேன். வீட்டு அன்பரும் இரங்கிவிட்டார். என்னிலும் பார்க்க அவருக்குத்தானே கூடிய ஏமாற்றம்! நான் பேராதனையை விட்டுப் பிரிவதேயன்றி சுவாமிகளை விட்டுப் பிரியப்போவதில்லையே!

''சரிபுறப்படுவோம் நேரத்தோடு'' என்றார் சுவாமிகள். நண்பர் சாரதியின் ஆசனத்திலமர நான் அவருக்குருகிலுள்ள இடத்தை எடுத்தேன். சுவாமிகள் பின்புற வலப்பக்க மூலையில் அமர்ந்திருந்தார். சாது அவருக்கு இடப்பக்கத்தில் ஏறியிருந்தார். மோட்டார் புறப்பட்டு ஐம்பது அடிவரையில் சென்றது. சுவாமிகள் நண்பரை விழித்து ''நிற்பாட்டு காரை'' என்று உரத்தகுரலில் கட்டளையிட்டார். மோட்டாரை நிறுத்திய நண்பர் நடுக்கத்துடன் இறங்கித் திகைத்து நின்றார். சுவாமிகள் மனம் மாறிவிட்டார். அவர் கொழும்

புக்கு வரமாட்டார் எனக் கருதிவிட்டார் நண்பர். ஆனால் சுவாமிகள் இருந்த இடம்விட்டு அசையவில்லை; அருகிலிருந்த சாதுவை இறங்கும்படி கட்டளையிட்டார். என்னைப் பார்த்து, அவருக்கு அந்த இடத்தைக் கொடுத்துவிட்டு பின்னுக்குத் தன்னருகில் வரும்படி சொன்னார். ''இனிப் போகலாம்'' என்று உத்தரவு கிடைத்ததும் மோட்டார் மறுபடியும் ஓடத்தொடங்கியது. கேகாலை அஞ்சல் நிலையத்துக்கருகில், மேட்டுப்பக்கத்திலிருந்து பள்ளத்திற்கு வெள்ளம் ஓடுவதற்கு தெருவில் ஓர்வாய்க்கால் வெட்டியிருந்தார்கள். மழைவிட்டு வெள்ளம் வற்றியபின்னும், அதைமூடுவதற்கு மறந்துவிட்டார்கள். எங்கள் மோட்டார்க்கார் அதைத்தாண்டும்போது அதில் நீண்டுபடுத்திருந்த சாரைப் பாம்பு தலையொருபக்கம் வாலொருபக்கமாக நிமிர்ந்தது. அதன்மேல் எங்கள் நண்பரின் (சாரதியின்) மோட்டார் ஒட்டும் திறமை குறைந்துவிட்டது. சுவாமிகள் புறப்பட்ட நேரம்தொட்டு கண்ணைமூடித் தியானத்திலேயிருந்தார். சந்திகளைக் கிட்டும்போதெல்லாம் மோட்டாரைக் கவனமாய் ஓட்டுமாறு நண்பருக்கு எச்சரிக்கை கொடுத்தேன். நேரத்தோடு சுவாமிகளைத் தமது இல்லத்தில் சேர்த்து, அங்கே படுக்கையாயிருந்த மனைவிக்கும் குழந்தைக்கும் அவரது திவ்விய தரிசனத்தை அளிக்கவேண்டுமென்ற அவசரமும் ஆர்வமும் சேர்ந்து சாரதியின் நிதானத்தைக் குறைத்துவிட்டது. பெகலியகொடைச் சந்தியில் எதிர்ப்பக்கத்திலிருந்து சரியான முறையில் வந்து திரும்பிய மோட்டாருடன் மோதிக்கொண்டார். எங்கள் மோட்டாரின் இயந்திரம் உடைந்துவிட்டது. முன்பக்கக்கண்ணுடி உடைந்து சிதறிமுன்பக்கத்திலிருந்த இருவரின் முகம், கழுத்து, கைகளில் காயங்களை உண்டாக்கிவிட்டது. நானே முதல் இறங்கி எதிர்ப்பக்க மோட்டாரிலிருந்தவர்கட்கு ஏதாவது காயமோ என விசாரித்தேன். ஒரு ஆபத்துமில்லையெனச் சொல்லிக் கொண்டு மூன்று புத்தபிக்குகள் இறங்கினார்கள். எங்கள் மோட்டாரிலிருந்தும் காலியுடை தரித்தவர் ஒருவர் இறங்குவதைப் பார்த்ததும் அவர்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது; என்னாலும்

சிரிப்பை அடக்க முடியவில்லை, மிருதுவான குரலில் சுவாமிகள் என்னைக் கூப்பிட்டு ''முகத்திலிருந்து இரத்தமும் கண்ணீரும் இந்த இருவரும் சிந்தும் வேளையில் நடுச்சந்தியில் நின்று நீ சிரிப்பது அழகா?'' என்றார். அப்போது சும்மா ஆனந்தமாய் தியானஞ் செய்து கொண்டிருந்த எங்களை இவர்கள் வலிந்தழைத்துவந்து இந்த விளையைத் தேடிக் கொடுத்து விட்டார்கள் என்றேன். ''ஆம் அது சரிதான், தலையோடுபோவது தலைப்பாகையோடு போகட்டும்'' என்று சொல்லி அவரும் சிரித்தார். பொலீஸ் வந்தவுடன் சுவாமிகளைப் பிரிதோர் மோட்டாரில் ஏற்றினேன். வந்த இன்ஸ்பெக்டர் சுவாமிகளைப் பற்றி முன்னரே கேள்விப்பட்ட ஒரு சிங்கள கிறிஸ்தவர்; நல்ல பக்தர், சுவாமிகள் ''நடந்தது ஒன்றுமே எனக்குத் தெரியாது'' என்றார். எனவே அவரை மேலும் ஏதும் விசாரிக்கவில்லை. விபத்து நடந்த முறை, விபரம் ஒன்றுமே சுவாமிகளுக்குத் தெரியாதென்பது உண்மையே. அவர் ஆழ்ந்த சமாதியில் இருந்தார். ஆனால் இந்த விபத்தின் காரணகாரியம் முழுவதும் அவருக்குத் தெரியும். வாடகை மோட்டாரில் கொழும்பு சேர்ந்தோம். அடுத்த நாள் தனிமையில் சந்தித்த போது, ''எல்லோருக்கும் சாத்திரஞ் சொல்லுகிற நீ, இவர்களின் சாதகங்களைப் பார்க்கவில்லையோ?'' என்றுகேட்டார். ''ஆம் பார்த்ததுண்டு. நாயகனுக்குப் பூரண ஆயுள் இல்லை, மனைவிக்குப் பலத்த விதவாயோகம் உண்டு'' என்றேன். ''சரிதான், இன்னும் சில வருஷங்கள் கூடியிருக்கட்டும்'' என்றார். எனக்கு முழு உண்மையும் விளங்கி விட்டது. அடியார்களின் கர்மவினைகளை மகான்கள் எவ்வளவுக்குத் தாங்கள் ஏற்று, அவர்களின் துயரைத் தீர்க்கிறார்கள்!

மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட்டிரு சுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கொன்று சுண்டோத் திருப்பரிதிபுலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே''

- அப்பர் -

யது மல்லிகர் ஸ்ரீ இராமக்கிருஷ்ண தேவரின் பழைய நண்பர்களுள் ஒருவர். அவர் ஓர் தனவந்தர். அவரது

நந்தவனஞ் சூழ்ந்த மாளிகை கல்கத்தாவில் பதுறியா கட்டத்தில் இருந்தது. இராமகிருஷ்ணருக்கு அச்செல்வரின் அறிமுகம் அவரது தமையனாரான இராமகுமாரர் மூலமாகக் கிடைத்தது. மல்லிகர் தமையனை மூத்த பட்டாச்சாரியாரென்றும் தம்பியை இளைய பட்டாச்சாரியாரென்றும் அழைப்பது வழக்கம். மல்லிகர் பெரும் செல்வராயிருந்த போதிலும் மேலும் பணத்தைத் தேடிக் குவித்தலில் கண்ணுங் கருத்துமாய் வாழ்ந்தார். அத்தோடு அவர் தேவி வழிபாட்டிலும் அதிக சிரத்தையுள்ளவர். அவரது மாளிகையில் நவராத்திரி வைபவம் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படும். அந்த மாசம் முழுவதிலும் பல தான தர்மங்கள் செய்யப்படும். இந்தத் தர்மத்தை நம்பிப் பல பண்டிதர் புரோகிதர்களின் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இந்த முறையாகத் தேவி வழிபாடு நடைபெறுங் காலத்தில் ஒருமுறை பரமஹம்ஸதேவர் லட்டு (பின்னுளின் அற்புதானந்தர்) முதலிய அடியார்களுடன், அம்பாளின் அழகிய கொலுக்காட்சி காணவிரும்பி மல்லிகரின் அரண்மனைக்குச் சென்றார். அக்காட்சி பெற்ற பின் அச் செல்வர் வசிக்கும் அறைப்பக்கம் போனர். இராமக்கிருஷ்ணர் வருவதைக் கண்டு மகிழ்ச்சியுற்ற மல்லிகர் ''வருக! வருக! இந்தப்பக்கம் இளைய பட்டாச்சாரியார் வந்து நெடுநாளாயிற்று. தேவி எழுந்தருளிவிட்டாள் என்பதை அறிந்தபின் தான் நாங்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றோம் என்ற நினைவு வந்தது போலும்'' என்றார். அவர் படுத்த படுக்கையிலிருந்துகொண்டே கிண்டலாகக் கேட்ட கேள்விக்கு, இராமகிருஷ்ணர், ''என்ன சாதி மனுஷன்காணும் நீர்! தேவி வந்திருப்பதைப்பற்றி எனக்கு எவ்வித அறிவிப்புந்தரவில்லையே'' என்று பதிலிறுத்தார். மல்லிகர் விட்டுக் கொடுக்கவில்லை. ''தேவியைப் பற்றிய எல்லாப்புதினங்கட்கும் இருப்பிடம் தாங்கள் அல்லவோ! முந்தநாள் அவள் இங்கு வந்தாள். அவள் திருப்திகரமாக வீற்றிருக்குமுன் நீங்கள் வந்து விட்டீர்கள். உங்களுக்குச் செய்தி அனுப்பக் காலம் எங்கேயிருந்தது.''

என்று துடுக்காகச் சொன்னர். ''அது எல்லாஞ்சரி, இப்போ தேவியின் பிரசாதம் வரட்டும்.'' என்றார் பரமஹம்ஸர். மல்லிகர் படுக்கையிலிருந்தே பிரசாதம் கொண்டு வந்து கொடுக்குமாறு ஒரு பணியாளுக்குக் கட்டளை கொடுத்தார். பிரசாதம் வந்தது, அதில் சிறிது எடுத்துக்கொண்டு, வீதியில் காத்திருந்த குதிரைவண்டிக்கு நேரே சென்றார் தேவர். அதைக் கண்ணுற்ற மல்லிகர் ''என்ன! எனது தாயாரைப்பார்க்காமலா திரும்புகிறீர்கள்?'' என்று சத்தம் போட்டார். வண்டிக்கருகில் நின்றபடியே, ''தாயே! எனக்குக் குடிக்கச் சிறிது தண்ணீர் தரமாட்டாயா?'' என்றார். அதனைக்கேட்ட அம்மையார் ஒரு லோட்டா தண்ணீருடன் மேல்மாடியிலிருந்து ஓடிவந்தார். அதில் சிறிது பருகியதும், வண்டியில் ஏறிச் சென்றனர். இதுவரை நடந்தவற்றையெல்லாம் பார்த்து நெஞ்சம் புழுங்கிக் கொண்டிருந்த அடியார்கள் வண்டிபுறப்பட்டதும் கண்டனப் பேச்சை எழுப்பினர். அவர்களுள் ஒருவர் ''இப்படி இறுமாப்புற்ற செல்வர் வீட்டுக்கு வந்து நீங்கள் ஏன் அவமரியாதையைத் தேடவேண்டும்?'' என்றார். ''வீட்டுக்காரன் படுத்தபடுக்கையைவிட்டு அசையவில்லை; வந்த பெரியாரை இருங்கள் என்றுதானும் கேட்கவில்லை.என்ன கேவலம்!'' என்றார் இன்னொருவர். இவற்றையெல்லாம் கேட்ட இராமகிருஷ்ணர் கொல்லென்று நகைத்தார். ''இவர்கள் இரவும் பகலும் பணத்தைப்பற்றிய சிந்தனையில் வாழ்பவர்கள் என்பது உண்மையே. ஆனால் அவ்வித வாழ்வின் மத்தியிலும் தேவியை வழிபடுவதை மறக்கவில்லையே. உங்கள் உற்றார் உறவினர்களில் எத்தனை பேர் கடவுளைக் கணப்பொழுதாவது எண்ணுகிறார்கள்? அது நிற்க, நான் உங்களை இங்கு தேவி தரிசனத்திற்காக அழைத்து வந்தேனேயன்றி மல்லிகரைப் பார்க்க வரவில்லையே! அவர் ஆசனம் தந்து வரவேற்கவில்லை யென்ற பிரச்சனை எதற்கு? அதுவுமல்லாமல் சாதுவான உங்களுக்கு மானுபிமானம், இகழ்ச்சி, புகழ்ச்சி, மரியாதை, அவமரியாதை என்பவை குறித்த சிந்தனைகள் இருக்கவே கூடாது'' என்று கண்டித்து அறிவுரை கூறினர்.

இந்த நிகழ்ச்சியை நினைவூட்டும் ஓர் சம்பவம் கொழும்புத் துறைப் பெரியாரின் வரலாற்றிலும் உண்டு: பல வருஷம், புரட்டாதி மாசம் நவராத்திரிகாலம், கந்தோரில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, சுவாமிகள் கொழும்பு வந்து வெள்ளவத்தையில் தமது இல்லத்தில் தங்கியிருப்பதாக ஓர் அன்பர் தொலைபேசிமூலம் அறிவித்தார். ''சுவாமிகளின் போக்கை நாம் அளந்து கூறமுடியாது, எனினும் இன்று இரவை அவர் எங்கள் இல்லத்தில் கழிப்பாரென நம்புகிறோம். மாலையில் கந்தோரிலிருந்து நேரே வந்தால் அவர் தரிசனம் கிடைக்கலாம்.'' என்பது அவரது கடைசி வசனம். யானும் அப்படியே வெள்ளவத்தைக்குச்சென்றேன். எனக்கு முன் வேறு மூவர் வந்து விருந்தையில் இருந்தார்கள். அவர்களின் முகத்தில் தோன்றிய ஏமாற்றக்குறி சுவாமிகள் அங்கிருந்து கிளம்பிவிட்டாரென்பதைத் தெற்றெனவிளக்கியது. வீட்டு அன்பர் வெளியேவந்து, ''ஐயோ! உங்கள் அனைவருக்கும் வீண் சிரமம் தந்துவிட்டேன்; கறுவாத் தோட்டப் பிரபு ஒருவர் வந்து சுவாமிகளைக் கூட்டிப்போய்விட்டார்'' என்று கவலையுடன்கூறிமன்னிப்புக் கேட்டார். எனக்கு வியப்பாக இருந்தது ''நீங்கள் நல்ல நோக்கத்தோடு அழைப்புத் தந்தீர்கள்; வந்தோம். சுவாமிகளைத் தரிசிக்கக் கொடுத்துவைக்கவில்லை. அவ்வளவுதான்; இதில் மன்னிப்புப்பேச்சுக்கு இடமில்லை'' என்று பதில் கூறினேன். ''தரிசிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்தால் அவர் சென்றிருக்கும் வீட்டுக்குப் போவதுதானே'' என்று முன் வந்திருந்த மூவர்களுக்கும் சொன்னேன். அவர்களை அன்றுதான் முதன் முறையாகச் சந்தித்தேன், அவர்களில் ஒருவர் என்னிலும் மூத்தவர்; தமாசாகப் பேசக்கூடியவர்; என்னைப்பார்த்து ', தம்பி! சுவாமிகளுடன் நீண்டகால அனுபவம் உண்டோ உமக்கு?'' என்ற கேள்வியைப் போட்டார். ''இல்லை; இற்றைக்கு இரண்டரை வருடங்கட்கு முன் அவரது முதல் தரிசனம் பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது'' என்றேன். அந்த ஆசாமி தமது பேச்சை நிறுத்தவில்லை. ''புதுப்பழக்கம் எப்போதும் இப்படித்தான். பணக்காரர் வீட்டுக்குப் போயுள்ள சுவாமியைத் தேடி ஓட எங்களுக்கு மனமில்லை; விரும்பினால் நீர் போகலாம் என்று சொல்லி முடித்தார்''. மேலும் அங்கு தங்க விரும்பாமல் வீட்டு அன்பரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு கிளம்பினேன். தெருச்சந்திக்குச் சென்றதும், நுகேகொடையிலுள்ள எனது வீட்டுக்குத் திரும்புவதா அல்லது கறுவாத்தோட்டத்தில் சுவாமிகள் தங்கியுள்ள வீட்டுக்குச் செல்வதா என்ற பிரச்சனை உள்ளத்தில் தோன்றியது. நேரமும் பிந்திவிட்டபடியால் என் மனைக்குத் திரும்பி விட்டேன்

''பணக்கார வீட்டுச் சுவாமிமார், உத்தியோகத்தரின் உறவை நாடும் சாதுக்கள்'' என்ற வசனங்கள் பின்னலில் என் காதில் விழுந்ததுண்டு. ஆனால் நான் முதன் முதலாக அக்கருத்து அடங்கிய பேச்சைக் கேட்டது மேலே குறிப்பிட்ட தினத்தன்றுதான். சுவாமிகளைத் தரிசிக்காது திரும்பிய கவலை ஒரு புறம், அத்தோடர்பில் யான் கேட்ட சம்பாஷணை மறுபுறமாக என் மனத்தைக் குழப்பின. அன்றிரவு நித்திரை வரவேயில்லை. புழுக்கமும் இருந்தபடியால் வீட்டின்தெருப்பக்க விருந்தையில் பாய் போட்டு மனைவியும் யானும் படுத்திருந்தோம். அன்று காலை எங்கள் இருவரின் மன அமைதியைக் குறைத்த பிறிதோர் நிகழ்ச்சியும் இருந்தது. அதாவது, நுகேகொடையில் அந்த வாரத்தில் வாங்கிய காணியைப்பற்றிய விவாதம். நாங்கள் கொடுத்த விலைக்கு இருமடங்கு பணத்திற்கு அக்காணியைப் பிறிதொருவர் கேட்டிருந்தார். கடன்பட்டு வீடு கட்டுவதில் கஷ்டப்படுவதிலும் பார்க்க இலாபத்திற்குக் காணியை விற்றுவிட வேண்டுமென்பது எனது விருப்பம். ஆனால் எனது மனைவிக்கு அதில் வீடு கட்டவேண்டுமென்ற பூரண ஆசை. நித்திரை வராத வேளையில் அதேவிஷயத்தை மறுபடியும் விவாதித்தோம். இரவு சரியாக ஒன்றரை மணியாய் விட்டது. இமைகள் ஓட்டவேயில்லை. ஓர் மோட்டார்வந்து தெருவாசலில் நின்ற சத்தங் கேட்டுத் தெருக்கதவுக்குச் சென்றேன். ''என்னகாணும் உமக்கு நித்தி

வராவிட்டால் மற்றவர்களும் நித்திரை கொள்ளக் கூடாது என்பதா உமது சட்டம்?'' என்று சொல்லிக்கொண்டு சுவாமிகள் இறங்கினர். பரவசத்துடன் அவர் பாதங்களை யான் தொட்டதும், அவர் எனது இடக்கையைப் பிடித்த வண்ணம் வீட்டுக்குள் வந்தார். மனைவியின் வணக்கத்தைப் பெற்று விருந்தையில் விரித்திருந்த பாயின்மீது அமர்ந்தனர். ''ஆசாமி உன் நித்திரையையுங் குழப்பி விட்டார் போலத் தெரிகிறது.'' என்று என் மனைவியைப்பார்த்துத் திருவாய் மலர்ந்தருளினர். ''ஆம் சுவாமி! வீடுதிரும்பிய நேரந் தொட்டு உங்களைப்பற்றிய சிந்தனையும் பேச்சுமாகவே இருந்தது'' என்று என் மனைவி பதில் கூறினர். ''அதுதானே, என்னைக்கொழும்பிலோ வெள்ளவத்தையிலோ தங்காமல் தடுத்தது'' என்று சொல்லிய வண்ணம் ''பிள்ளைகளெல்லாம் நித்திரைபோலும், அவர்களைக் குழப்ப வேண்டாம். நல்ல ஒரு காணி வேண்டிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அதில் ஓர் வீடு கட்டுவதுதானே! கைவசம் பணம் இல்லாவிட்டால் அரசாங்க நிதியில் உதவி பெறலாமே'' என்றார். தனது கோரிக்கைக்கு ஆசி கிடைத்ததை உணர்ந்த என் மனைவி, ''காணியை விற்பதா அல்லது அதில் வீடுகட்டுவதா என்ற பிரச்சனை இன்றுதான் தெளிந்தியது. இவர் விற்க விரும்புகிறார்'' என்றார்.

இந்தத் தருணத்தில் வீட்டுக்குள் படுத்திருந்த எனது மாமனார், வெளியே விருந்தையில் நடக்கும் சம்பாஷணையால் நித்திரை குழம்பி எழும்பியபின் கதவைத்திறந்து வெளியே நாங்கள் இருந்த இடத்தை அடைந்தார். அவரை யான் சுவாமிகளுக்கு அறிமுகப்படுத்தினேன். வீடுகட்டும் விஷயத்தையே அவரும் பேசினர். கட்டிடம் ஆரம்பித்தால், தானே மேற்பார்வை செய்வதற்காகத் தங்கமுடியும் என்றார். இதைக்கேட்டதும், சுவாமிகள் என்னைப்பார்த்து ''தகப்பனும் மகளும் எல்லாம் பார்த்துக்கொள்ளுவார்கள். உமது பொறுப்பு பணத்தைக் கடன் எடுத்து அவர்களிடம் ஒப்படைப்பது தானே. ஆகையால் விஜயதசமியன்று அத்திவாரம் போடுங்கள்'' என்று ஆசிர்வதித்தார். வேறு குடும்ப

விடயங்களைப் பற்றியும் பேசிவிட்டு, மூன்றரை மணிபோல் சுவாமிகள் வந்த மோட்டாரிலேயே திரும்பிவிட்டார். சுவாமிகள் குறித்த நாளில் அத்திவாரம் போட்டுக் கட்டிடமும் தீவிரமாக எழும்பியது. நுகேகொடை வாசியான ஒப்பந்தக்காரர் ஒருவர் பொறுப்பெடுத்திருந்தார். அரசாங்கக் கடனின் முதல்பாகம் வருவதற்குக் குறைந்தது இரண்டு மாசம் எடுக்கும். ஆகையால் வேலையைத் துரிதப்படுத்த வேண்டாம் என்று அவரிடம் எச்சரிக்கை கொடுத்தேன். அதற்கு அந்த மனுஷன் செவிசாய்க்கவில்லை. ஆறுமாசம் எடுக்கவேண்டிய வேலையை மூன்று மாசத்துள் முடித்துக் கூரையும் போடும் நிலைக்கு கட்டிடம் வந்துவிட்டது. இது வரையில் பணத்தைப்பற்றிப் பேசாதிருந்த அந்தமனுஷன் என் மனைவி மாமனார் இருவரிடமும் தனக்கு ரூபாய் ஈராயிரம் மிகவும் நெருக்கடியாகத் தேவையென்று கூறிவிட்டார். என்னுடன் ஓர் மாலைப்பொழுது வந்து அவர் பேசிய போது இதுகாறும் முகத்திலிருந்த உற்சாகம் மறைந்து விட்டதைக்கவனித்தேன். அன்று காலைதான் கடன்தரும் நிதிக்கந்தோரில்போய்விசாரித்திருந்தேன். குறைந்தபட்சம் முற்பணம் தர மேலும் இருவாரம் செல்லும் என்றபதில் கிடைத்திருந்தது. இவற்றை ஒப்பந்தக்காரருக்கு விளங்கப்படுத்தி இருவாரம் சமாளிக்குமாறு கேட்டேன். அவர்எங்கள் நிலைபரத்தை நன்குணர்ந்த போதிலும், வாடிய முகத்துடனேயே தன்வீடு திரும்பினர்.

அந்த மனுஷனின் கவலையான முகத்தைப் பார்த்தபின் எனக்கு உணவு கொள்ள மனமேயில்லை. என் மனைவி மீது சீறிவிழுந்தேன். அன்னரின் ஆசையும் அவசரமுமே இந்த மனக்கஷ்டத்திற்குக்காரணம்என்பதுஎன்எண்ணம். கொழும்பில் அன்பர் எவரிடமாவது சென்று கடன் கேட்கவும் மறுத்து விட்டேன். ''சுவாமிகளின் ஆசியுடன் ஆரம்பித்தவேலை. இந்தச் சிறுநெருக்கடி நீரத் தெய்வம் ஓர் வழிவிடும். நீங்கள் சாப்பிடுங்கள்'' என்று மனைவி பரிந்து பேசினர். சிறிது உணவு கொண்டபின், உறங்கத்தெண்டித்தேன். நித்திரை வரவில்லை. ஒப்பந்தக்காரரின் கவலையும் கிலேசமும் நிறைந்த

தோற்றமே மனக்கண்முன் அடிக்கடி தோன்றி நித்திரை யைக் குழப்பிவிட்டது. விடியற்காலையில்தான் தூங்கினேன். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு கந்தோருக்குப் புறப்படும் வேளையில் தபாற்காரன் வந்து ஓர் கடிதம் தந்தான். அது அக்காலத்தில் இரத்தினபுரியில் வசித்த அன்பர் ஒருவரிடமிருந்து வந்தது. அக்கடிதத்தில் சுவாமிகள் தமது இல்லத்தில் தங்கியிருக்கிறாரென்றும், எமது வீட்டுவேலை எவ்வளவுக்கு வந்துவிட்டதென்றும், அரசாங்கக் கடன் வந்துவிட்டதோ என்றும் விசாரித்துக் கடிதம் போடுமாறு தமக்குக் கட்டளை விடுத்தாரெனவும் எழுதப்பட்டிருந்தது. உடனே யான் எல்லாவற்றையும் விபரமாக விளக்கிப் பதில் கொடுத்தேன். கடனின் முதற்பாகம்வர, இரு வாரஞ் செல்லுமெனவும் குறிப்பிட்டிருந்தேன். அடுத்த நாள்காலை அந்த அன்பரிடமிருந்து ஓர் தந்தி வந்தது. ''நாளை ஓர் பதிவுக்கடிதத்தை எதிர்பாருங்கள்.'' இதுவே அத் தந்தி கொண்டு வந்த செய்தி. குறித்தபடி பதிவுக் கடிதம்வந்தது. அதனுள், ஒப்பந்தக்காரர் கேட்ட ஈராயிரம் ரூபாய்க்கு ஓர் காசோலை இருந்தது. கண்ணீருடன் இருவருஞ் சேர்ந்து கடிதத்தைப் படித்தோம். அடியேங்களுக்குத் தோன்றாத் துணையாக இருந்த பெரியாரின் திருவடிகளுக்கு உள்ளத்தில் வணக்கமும் நன்றியுஞ் செலுத்தினேம். காசோலையைக் கொடுக்கும் போது எதிர்பாராத முறையில் தவைப்பட்ட பணம் வந்து சேர்ந்த விதத்தை என் மனைவி ஒப்பந்தக் காரருக்கும் விளக்கிவிட்டார். அன்னிய சாதியையும் பிற மதத்தையும் சேர்ந்த அந்த மனிதரும் ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

இவையெல்லாம் நடந்து ஒருவாரஞ் சென்ற பின் வெள்ளவத்தை அன்பரைச் சந்தித்த போது ''பணக்காரர் உள்ளும் பக்திமான்கள், பண்புடையவர்கள், உளர். உத்தியோகத்தர் கூட்டத்திலும் உத்தமர்கள் உளர். மகான்கள் ஏன் அவர்கள் உறவையும் விரும்புகிறார்கள் என்பதற்குக் காரணம் கண்டுபிடிக்க நமக்கு அறிவுமில்லை, உரிமையுமில்லை'' என்றுசொல்லி முந்தியதினம் அவர் இல்லத்

திற் சந்தித்து என்னுடன் சம்பாஷணை நடாத்திய மனுஷனுக்கு நல்லறிவு புகட்டுமாறு கேட்டேன். உடனே எனது நண்பர், ''அந்த மனுஷன் சுவாமி அவர்களின் வருகையை அறிந்து தரிசனம்கோரி வந்தவரல்லர். அவர் வேறு அலுவலாக எம்மிடம் வந்தவர். என்று பதில் கூறினர்.

வைத்த பொருள் நமக்கா மென்றுசொல்லி மனத்தடைதுச்
சித்த மொருக்கிச் சிவாயநம என்றிருக் கினல்லால்
மொய்த்த கதிர்மதி போன்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ அறிவிலாப் பேதை நெஞ்சே

-அப்பர் சுவாமிகள்

அமரர் திரு K. இராமச்சந்திரன்,
ஆசிரியர் **Religious Digest**

★

உண்ணு துறங்கா திருந்த வொருவனைப்
பண்ணு ரிசைபோல் பரிந்துநின் றூனை
அண்ணு மலையானை அம்புலி சூடியை
எண்ணுமெ லெண்ணி யெம்வினை தீர்ப்போமே
ஓதுக வதுநாம் ஓத்தத் சத்ஓம்.

உள்ளத்தி னுள்ளே யுலாவு மொருவனை
எள்ளத் தனையும் மறவா தேத்திநில்
பள்ளத்தில் வீழ்ந்து பரிதவி யோமே
உள்ளத்தைச் சொன்றே முயிர்த்துணை யிதுவே
ஓதுக வதுநாம் ஓத்தத் சத்ஓம்.

சுற்றூர் பெற்று நுடன்பிறந் தாரினும்
நற்றவத் தோரே நந்துணை யாகுங்
குற்றங் கடிந்து குணத்தை மேற்கொண்டு
செத்தவர் போலத் திரிவோம் நாமே
ஓதுக வதுநாம் ஓத்தத் சத்ஓம்.

- நற்சிந்தனை.

3. என்னைக் கணமும் பிரியா இறைவன்

எங்கள் குருமணி யோகசுவாமிகளின் பெருங்கருணைத் நிறத்தால் அடியேனுக்குக் கிடைத்துள்ள திருவருட் பிர சாதத்தின் மகிமையை மற்றவர்களும் அறிந்து நன் மைபெற வேண்டுமென்னும் நன்னெக்கத்தால் இதனை யெழுதத் துணிந்தேன். பெரியோர்களின் திருவருட் செயல் களைப் பற்றிப் பேசுவதும் ஓர் பெருந்தவமன்றே? அடி யேன் சிறுவயதாய் இருக்கும் காலத்தில் கொழும்புத்துறை யோகர் என்னும் பெரியார் ஒருவருளர் என்பதை எங்கள் வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் கூறக்கேட்ட துண்டு. அன்னார் தாம் எடுக்கப்போகும் சோதனையில் சித்தியெய்து வேனை என்று சுவாமிகளைக் கேட்பதற்காக அவர் பின்னே சென்றாராம். அப்போது சுவாமிகள் திரும்பி ''சீ! நாயே! சோதனையில் சித்திபெற வேண்டுமானால் போய்படியடா; என் பின்னால் ஏனடா வருகிறாய்? திரும்பிப்போய்படியடா; இனி வந்தாயானால் தெரியுமோ'' என்று வைதாராம். இதனை அவர் வாயிலாற் கேட்டிருக்கிறேன். எங்கள் வீட் டில் கடையிற் சாமியார், வாரிடப்பரதேசியார், தூத்துக் குடிச்சாமியார் ஆகிய பெரியோர்கள் வந்து தங்கி இருந்து சென்றமையைக் குறித்தும் அவர்களுடைய அருட்செயல் களைக் குறித்தும் எனது முன்னோர் சொல்லக் கேட்டிருக் கிறேன். ஆகவே இந்தக் கொழும்புத்துறை யோகர் என்ற பெரியாரையும் நான் காணத் தகுந்த ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமோ என்னும் அவாவானது என் உள்ளத்தில் இடம் பெற்றது.

பின்பு நான் கொழும்பில் வந்திருந்து வாழ்க்கை நடத் துங்காலத்தில் வெள்ளவத்தையில் ஒரு அன்பர்தம் இல்லத் தில் சுவாமிகள் தங்கியிருக்கிறார் என்னும் நற்செய்தியை யெனது நாயகர் வந்து கூறினர். உடனே யான் ''சுவாமி களைப் பார்க்கவேணும், சிறுவயதிலே அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று சொன்னேன். அதற்கு

அவர் வெள்ளவத்தையில் சுவாமிகள் தங்கிநிற்கும் இல் லத்திலிருந்து உடனே புறப்படுவதாகச் சொன்னார்கள். இப்போது எங்கு சென்றாரோ தெரியாது என்றார். ஆனா லும் அன்று இரவு முழுவதும் சுவாமிகளை யெப்படி நான் காண்பது என்ற சிந்தனையால் நித்திரையுமின்றி இரவைக் கழித்தேன். அடுத்தநாட்காலையில் அன்பர் ஒருவர்வந்துசுவா மிகள் வெள்ளவத்தைக் கடற்கரையில் நிற்கினறார் என்றும், இராஜசிங்க வீதிவழியாற் சென்று கடற்கரைக்குப் போனால் சுவாமிகளைக் காணலாம் என்றும் கூறினர். உடனே நாங்கள் இருவரும் உள்ளத்துவகையுடன் புறப்பட்டு மனோவேகத்தி லுமதிவேகமாகச் சென்று கடற்கரையை அடைந்தோம். காலை இளங்கதிர் தன் சிவந்த கிரணங்களைப் பரப்பிச் சகல ஆன்ம ராசிகளதும் உள்ளத் தாமரையை மலர்த் துகிறன். அஞ்ஞானமாகிய இருள் புறங்காட்டியோடுகின் றது.அந்த ஒளிப் பிழம்பின் மத்தியில் தோன்றும் ஞான சூரியன் போன்று சுவாமிகள் தரிசனம் கிடைத்தது. பால் போன்று வெளுத்த குஞ்சியும், இளங்கதிரின் ஒளிபடு தலால் வெள்ளிக்கம்பி போன்று மார்பிற் புரளும் தாடி யும், வெண்துகிலாடையும், கம்பீரமான தோற்றமும் பொ லிந்து விளங்கும் அருட்திருவுருவைக் கண்ணுற்றேன். கண் டதும் ''இன்றைக்கேயான் செய்த தவப்பயன் கிடைத்தது; இது அற்புதமோ, முருகன் திருவருளோ! யான் செய்த புண்ணியத்தின் பெறுபேறே!'' என அதிசயித்தேன். என்ம னமானது ஒருநிலைப்பட்டு அத்திருவுருவில் லயமாகியது.

சுவாமிகள் என்மேல் அருட் திரு நோக்கம் பாலித்து ''ஒன்றுக்கும் அஞ்சாதே, மனத்தைரியத்துடன் இரு. திரு வருள் உன்னைக் காக்கும். உன் கடமையைச் சரிவரச்செய்; உன் செய்கைகளின் பயனை எதிர்பார்க்காதே; உன்னுள்ளி ருக்கும் தெய்வம் வழிகாட்டும். இங்கே பார்! விடியற்புறத் தில் குருவிகள் காகங்கள் எல்லாம் எழுந்து ஆரவா ரம் செய்து எங்களையெல்லாம் துயில் எழுப்புகின்றன. காகங்கள் எல்லாம் எங்களைத் துயிலெழுப்பி யெங்களுக்கு

நன்மை செய்கின்றன வென்று சொல்லி நாங்கள் காலையில் அவைகளையழைத்து, நீங்கள் ஏங்களை யெழுப்பி யெங்களுக்கு நன்மைசெய்தீர்கள் என்று சொல்லி அவைகளுக்கு உணவு கொடுக்கின்றோமோ? அவைகளும் தங்கள் தொழிலைச் செய்கின்றன. நாமும் நமது வேலையில் செல்லுகின்றோம். அது போல நீயும் உன்வேலையைச் செய்து கொண்டு சும்மா இரு.'' என்று திருவாய் மலர்ந்தருளினர். குருநாதன் அன்று தந்த உபதேசமே இன்றும் என்னை வழி நடத்துகின்றது. சுவாமிகள் அநுமதி கொடுத்தபின் திரும்பி வீடு வந்து சேர்ந்தோம். அடுத்தநாள் காலையில் சுவாமிகள் அன்பர் ஒருவருடன் எங்கள் இல்லத்திற்கு எழுந்தருளினர். அப்போது அயல் வீடுகளிலிருந்தும் பல அன்பர்கள் வந்து சுவாமிகளைத் தரிசித்தனர். அவர்களில் ஒருவர் புத்திரப் பேற்றை விரும்பிச் சுவாமிகளிடம் வந்திருந்தவர் போலும். அப்போது சுவாமிகள் ''நான் சோமசுந்தரத்தின் வீட்டுக்கு, அன்னரின் சுகவீனமுற்றிருந்த குழந்தையைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவர்கள் அந்தக் குழந்தையில் அளவிறந்த ஆசை வைத்திருந்தார்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை. நான் உடனே திரும்பி விட்டேன்'' என்று கூறியருளி, அன்னரைப் பிள்ளைக்காக ஆசைப்படவேண்டாமென்பதைச் சொல்லாமற் சொல்லியனுப்பினர். இன்னும் அங்கு வந்த பலருக்கும் அவரவர் மனநிலைக்கேற்ற உபதேசங்களைச் செய்தனுப்பினர்.

அந்நாட்டொடக்கம் சுவாமிகள் கொழும்புக்கு வரும் வேளைகளில் எமது இல்லத்திற்கும் எழுந்தருளி அருளுபதேசங்கள் செய்து போகும் வழக்கமுடையவராயினர். இக்காலங்களில் சுவாமிகள் செய்த உபதேசங்கள் பல. அந்தக் காலங்களில் எனது அறியாமை காரணமாக அவற்றைக் குறித்துவைக்கத் தவறிவிட்டேன். ஆயினும் எனது ஞாபகத்தில் இருப்பவற்றை மட்டும் இங்கு எழுதுகின்றேன். ஒரு முறை நாங்கள் இந்தியாவுக்கு யாத்திரை செய்ய வேண்டுமென்னும் நோக்கத்துடன் சுவாமிகளைச் சென்று

தரிசித்தோம். அப்போது சுவாமிகள் ''இந்திய யாத்திரையை விட்டு விட்டு வாருங்கள்; நாங்கள் எங்கேயாவது பத்து நாட்களுக்கு நிற்போம்'' என்றார். நாங்கள் அன்று சாயந்தரமே புறப்பட்டுச் சுவாமிகளுடன் சென்றோம். எதோ போவோம், வசதியான இடத்தில் தங்குவோம், என்று சுவாமிகள் சொல்லிக்கொண்டு வந்தார்கள். போகும் வழியில் இரத்தினபுரியிலுள்ள ஒரு அன்பர் வீட்டில் பத்து நிமிஷம் வரை தங்கினோம். அவ்விடத்தில் தேநீரருந்தியபின் தாமதிக்காமல் விரைவில் புறப்படப் பணித்தருளினர். அங்கிருந்து நேரே பெலிகுல்லோயா என்னுமிடத்திற்குச்சென்றோம். அங்கே அக்காலத்திலிருந்த ஓவசியர் ஒருவர் எங்களுக்கு ஆகவேண்டிய வசதிகளைச் செய்து உபசரித்தார். நாங்கள் யாவரும் அங்குள்ளகிராமச்சங்கக் கட்டிடத்தில் இருந்தோம். அவ்விடத்தில் கொழும்பு, பலாங்கொடை, இரத்தினபுரி முதலிய இடங்களிலிருந்தும் பல அன்பர்கள் வந்து கூடினர். அவ்விடத்தில் காலை மாலை சிவபுராணம், தேவாரம், திருவாசகம் ஓதுவதிலும் எஞ்சிய நேரங்கள் சுவாமிகளின் அறிவுரைகளைக் கேட்பதிலுமாகக் கழிந்தன. நான் வெள்ளிக்கிழமை விரதமிருப்பதுண்டு. அத்தினத்தில் எங்கள் இல்லத்தில் முருகன் திருவுருவை மலர்களால் அருச்சித்து வணங்கிய பின்பே உணவருந்துவேன். அன்று யான் சுவாமிகளுடைய திருப்பாதங்களில் மலர் தூவி வணங்கலாம். ஆனால் அடியார் பலரும் சூழ்ந்திருக்கின்றார்கள். எப்படியான் சுவாமிகளுடைய திருப்பாதங்களில் மலரிட்டு வணங்குவது! எதற்கும், மலர்களைப் பறிப்போம். வசதியில்லாவிட்டால் சுவாமிகளைத் தியானித்து ஓரிடத்தில் இட்டு வணங்குவோம் என நினைத்துக்கொண்டு மலர்களைப்பறித்துக் கொண்டுவந்தேன். சுவாமிகள் அங்குத்தனியாக நின்றனர். திருவருளின் செயலே வியந்து என் வழிபாடை நிறைவேற்றினேன். அங்கு நின்ற பத்து நாட்களும் அடியார் கூட்டத்துடன் ஆனந்தமாகக் கழிந்தன. அங்கு வந்த அடியார்களுக்கெல்லாம் அவரவர் தகுதிக்கேற்ப உபதேசங்களைச் செய்தனர். சுவாமிகள் இங்குவந்து பத்து நாட்களாய் விட்டன. நாம் இனிமேல் கொழும்புக்குப்

போவோம் என்று பணித்தனர். உடனே நாங்கள் யாவரும் புறப்பட்டுக் கொழும்பு வந்து சேர்ந்தோம்.

பலவித இன்னல்களாலும் மன நிம்மதியற்று வாழ்க்கை நடத்திய எனக்கு இந்த யாத்திரையானது மன அமைதியையும் மனச்சந்தோஷத்தையும், மனத்தைரியத்தையும், மன ஒருமைப்பாட்டையுமெல்லாம் கொடுத்தது என்பதை யான் நன்குணர்ந்திருந்தேன். எவ்வித கஷ்டங்களையும் தாங்கி அசையாமல் நிற்கத்தகுந்த ஸ்திரபுத்தியையும் எனக்குக் கொடுத்தது. அக்காலங்களில் சுவாமிகள் அடிக்கடி கொழும்புக்கு வருவதுண்டு. வரும் பொழுதெல்லாம் சுவாமிகள் எமது இல்லத்திற்கும் எழுந்தருழும் பெரும்பேறு எமக்கும் கிடைத்தது. அச்சமயங்களிலெல்லாம் சுவாமிகள் எமக்குத் தந்த அறிவுரைகளும், அருட்பிரசாதங்களும் பல. அவற்றுள் எமது ஞாபகத்தில் உள்ளவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். ''யார் என்ன தீமை செய்தாலும் செய்யட்டும். ஒன்றுக்கும் அஞ்சாதே. மற்றவர் உனக்கு ஒரு தீமையும் செய்யமுடியாது. தீமையும் நன்மையும் நீ செய்த வினைப்பயன்களே. நீ யொருவருக்கும் தேடி வினை செய்யாதே. நீ செய்வனவற்றைச் சிவதொண்டு என்று நினைத்துக் கொண்டு செய். நீ சும்மா இரு. காலையும் மாலையும் கடவுளைத்தியானி. உனக்கு ஒரு பொல்லாப்புமில்லை. கடவுள் உனக்குத் தேவையான வெல்லாம் செய்வார்'' என்ற உபதேசத்தையே அறிவுறுத்தினர். சுவாமிகளின் உபதேசங்களை நினைத்து நினைத்து இயன்றவரையும் என் உள்ளத்திருத்தி நடந்து வந்தேன். ஆனலும் ஒரு சந்தர்ப்பத்தில் சுவாமிகளின் கட்டளையையும் பொருட்படுத்தாது அளவு கடந்த ஆத்திரத்தினலும் கோபத்தினலும் சில பல அபசாரமான வார்த்தைகளைப் பேசினேன். ''யார் எது சொல்லினும் எது செய்யினும் நீ சும்மாவிரு என்ற குருநாதனின் கட்டளையைமீறி என் செய்தேன்! இந்தப் பழியை யெப்படி நான் தீர்க்கப் போகிறேன் யாது செய்வேன்? பழிவந்து சூழ்ந்ததே'' என்று கலக்கமுற்றுச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். பகல் இரண்டு மணி நேரம் சுவாமிகள் வந்து

காட்சி கொடுத்தார். உள்ளே வந்த சுவாமிகள் ''சொல்ல வேண்டியதைச் சொல்வதால் பிழையொன்றுமில்லை. நீ யொன்றுக்கும் பயப்படாதே. நான் உன்னை பெலிகுல்லோயாவில் கொண்டு போய் பத்து நாள்களாக வைத்து அபிஷேகம் செய்துவிட நீயென்ன ஈ என்று கொண்டிருக்கிறாய்! ஒன்றுக்கும் பயப்படாதே. தைரியமாயிரு'' என்று சொல்லிக்கொண்டே வந்தார். சுவாமிகளின் மணி வாக்குகள் என் செவியில் பட்டதும் யானடைந்த சந்தோஷத்தை இங்கு எழுத்திலல் வருணிக்கமுடியாதென்பது சொல்லாமலேயமையும்.

இது இங்ஙனமாக, எனது தாயார் ஓர் கொடிய நோய்க்கு ஆளாகி வருந்தினர். நித்திய வருத்தக்காரியாய் இருந்த அவருக்கு இந்த விசேஷ நோயும் சேர்ந்தால் பின் பேசவும் வேண்டுமோ? சில நாட்களாக யான் பட்ட சிரமமோ இம்மட்டென்றில்லை. இதனல் மிகவும் மனக்கலக்கம் அடைந்த யான் இதற்கு என்ன செய்யலாமெனக் கவலையடைந்து தெய்வமே! நீயே துணையெனச் சிந்தித்த வண்ணம் தனியாகவிருந்தேன். காலை ஒன்பது மணியிருக்கும். சுவாமிகள் ''என்ன அம்மா எப்படி சுகமாயிருக்கிறூவோ'' என்று கேட்ட வண்ணம் உள்ளே வந்தனர். உடனே யான் திடுக்கிட்டெழுந்து ''ஓம் சுவாமி, அம்மா சுகமாயிருகின்றூர்'' என்று சொல்லிக்கொண்டே அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினேன். அன்றைக்கே எனது தாயாரின் கொடிய நோயும் மறைந்தொழிந்தது. அன்னூர் பல விதமான நோய்க்கு ஆளாகியும் அந்தக் கொடிய நோய் பின் ஒரு நாளாவது தலைகாட்டவில்லை. இதனேடு 'கடவுளை நம்பினேர் கைவிடப்படார்' என்ற உண்மை யென்மனத்தில் உறுதியாக நிலைபெற்றது. இன்னும், தெய்வ சங்கற்பமாக நோய்வாய்ப்பட்டு எனது நாயகர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இடம் பெற்றனர். வைத்திய நிபுணர்களுடைய வைத்தியத்திற்கும் கட்டுப்படாமல் நோய் மேற்பட்டுக் கொண்டே போனது. 'ஒருத்தர் துணையுமில்லையுன் துணை

யல்லால், என்று சுவாமிகளை நினைந்து மனமுருகி நித்திரை யுமில்லாது அன்றைய இரவைக் கழித்தேன். அடுத்த நாள் சாயந்தரம் ஆஸ்பத்திரிக்கு விரைந்து செல்ல வேண் டும் என்னும் எண்ணம் என்மனதில் உண்டாகியது. நான் சற்று முன்னதாகவே புறப்பட்டு ஆஸ்பத்திரிக்குச் சென் றேன். அங்கே யென்னத்தைக் கண்டேன்! சுவாமிகள் என் நாயகரின் பக்கத்தில் ஓர் நாற்காலியில் உட்கார்ந்தி ருக்கக் கண்டேன். என் கண்களையே நான் நம்பமுடிய வில்லை. சுவாமிகள் திருநோக்கம் பட்ட அந்த நேரத்திலி ருந்தே நோயும் ஆறத்தொடங்கியது. இது மட்டுமல்ல, யாழ்ப்பாணத்திலிருந்த ஒரு பிரபல ஆயுள்வேத வைத்திய ரையும் மருந்து அனுப்புமாறு பணித்தருளினர். அந்த மருந்துடனே நோயும் குணமடைந்தது. சுவாமிகள் பின் னேர் சமயத்தில் என்னைப் பார்த்து ''இவர், தான் கடுமை யான வருத்தமாய் ஆஸ்பத்திரியில் இருந்த பொழுது மனங் கலங்கவில்லை. டாக்குத்தர் ஆஸ்பத்திரியில் இருக்கச் சரி யாய்க் கலங்கிவிட்டார். ஒரு நாளும் ஆஸ்பத்திரிக்குப் போகாத நானும் ஆஸ்பத்திரிக்குப் போய் அவரைப் பார்க்க வேண்டி வந்துவிட்டது'' என்று அங்கு வந்திருந்த பல அன் பர்களுக்கும் சொல்லி நகையாடினர்.

ஒரு சமயம் எனது நாயகர் உத்தியோக முறையில் டெல்கிக்குச் செல்லவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களெல்லாம் செய்து முடிந்தன. இருந்தாற்போலிருந்து எனக்கோர் சுகவீனம் ஏற்பட்டதால்பிரயாணத்தைப்பின்போடத் தீர்மானித்தனர். புறப்படவேண்டிய நேரத்துக்கு இரண்டு மணித்தியாலங் களின்முன் சுவாமிகள் ஒரு அன்பருடன் ஒரு காரில்வந்து இறங்கினர். என் நாயகரைப்பார்த்து நகைத்து ''என்ன பயப்படுகிறீயோ? சந்தோஷமாய் போய்வா. அவளை நாங் கள் பார்த்துக்கொள்ளுவோம்'' என்றுகூறியருளினர். அவ ரும் அன்றுமாலை பிரயாணமானார். எனது நோயும் நீங் கியது. வெள்ளிக்கிழமைகளில் யான் கோயிலுக்குச் செல்லும் வழக்கமுடையேன். ஒரு வெள்ளிக்கிழமை மாலை நான்

வழக்கம்போல் ஆலயதரிசனத்திற்குச் சென்றிருந்தேன். திரும்பி வரும்போது எனது வீட்டில் ஆடவர்களும் மகளிரும் நிறைந் திருப்பதைக்கண்டு என்மனதில் பலவாறுவை சிந்தனையுடன் உள் நுழைந்தேன். அங்கே சுவாமிகள் அருளுபதேசஞ் செய்துகொண்டிருந்தார்கள். என்னைக்கண்டதும் ''என்ன ஒழுங்காகக் கோயிலுக்குப் போவதுபோலிருக்கிறது! அடிக் கடி கோயிலுக்குப் போகாதே. பிறகு எல்லாம் கோயில் கும்பிடுவதோடு முடிந்துவிடும். அதையும் முற்றாய் விடக் கூடாது. இருந்திட்டு ஒரு நாளைக்கு ஒரு விருப்பம் வந்தால் போகலாம்'' எனப்பணித்தனர்.

எனதுசுகவீனத்திற்கு ஆட்டுப்பால் குடித்தல் நல்லதென்று பலரும் சொல்வதைக்கேட்டு, ஆடுவளர்த்துப் பால் குடித் தேன். ஆடுகள் ஒன்று நாலாகப்பெருகி மூப்பது ஆடுகள் வரை அங்கு நின்றன. சுவாமிகள் அங்குவந்து ஆடுகளைக் கண்டதும் ''நீயோ இந்த ஆடுகளை வளர்க்கிறாய்? உனக் கிந்தவேலை வேண்டாம். ஆட்டுப்பால் குடிப்பதால் மண்ணீ ரல் நிலைப்படாது. ஆடு இதிலேயொருகடி அதிலேயொரு கடி கடிக்கும் வழக்கமுடையது. அதுபோல் உனக்கும் நேரம் ஒரு குணம்வரும் - வெள்ளாடு கள்ளிகடிப்பதுபோல் என்று சொல்வது தெரியாதோ? ஆடுகளை இறைச்சிக்குத் தான் விற்கவும் வேண்டிவரும். ஒருவர் ஆடுகள் வளர்த்துச் சனிக்கிழமை புதன்கிழமைகளில் இறைச்சியடிப்பதற்காக விற்பார் - அவர்தமது அந்தியகாலத்தில் பலநாட்களாகப் படுக்கையிலிருந்து கழுத்தைத் திருகும்போது ஆடுபடும் அவத் தையெல்லாம் பட்டுத் தாங்கமுடியாத வேதனையடைந்து இறந்தார்.உனக்கு இந்தவேலை வேண்டாம். ஆடுகளைவிற்றுப் போடு. வேண்டுமானால் பசுக்களைவளர்'' எனப்பணித்தருளி னர். அடுத்தநாளே ஆடுகளை அகற்றிவிட்டேன். அன்று தொடங்கி ஆட்டுப்பாலைத் தொடுவதுமில்லை. இங்ஙனமாக, யான் பிழையான வழிகளில் செல்லும் பொழுதெல்லாம் என்னைத்தடுத்து நல்வழிகாட்டி ஆட்கொண்ட எமது குரு நாதர் - இன்னும் என்னைப்பலவிதத்தாலும் ஒடுங்கச்செய்த

னர். ''பேருக்கும் புகழுக்குமாக ஒன்றும் செய்யாதே. உண்மையாக உன்மனத்தில் இதனை எழுதினுல் அல்லது பேசினுல் மற்றவர்களுக்கு நன்மையுண்டு என்ற எண்ணம் உதிக்குமானுல் அவ்வாறுசெய். அப்படி யில்லாது விட்டால் சும்மா இரு. மேடைமேலேறிப் பேசும் வழக்கத்தை முற்றுசு நிறுத்தி விடு- கடவுளைப் பூசைசெய்- தியானம்செய்- மற்றவர்களுக்குக் கேடு நினைக்காதே-கெட்ட எண்ணங்கள் மனத்தில் உதிக்குமானுல் கடவுளைத் தியானம்செய்து அந்த எண்ணங்களை மாற்றிவிடு - முப்போதும் உணவருந்தாதே. இருவேளை உண்டாள்போதும் - மிதமாவ உணவுதான் புலனடக்கத்துக்குவழி -இயன்றவரையும் வீண்வார்த்தை பேசுவதை நிறுத்திவிடு - உள்ளும் புறமும் தூய்மையுடனிரு- மனத்தில் அச்சம் குடிகொள்ளவிடாதே. மனத்தையித்துடன் வருவனவற்றையெல்லாம் தாங்கிக்கொள்ள ''அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை'' என்றபொன் மொழியைச் சிந்தையிற் பதித்துவிடு. மனிதன் எதற்காகச் சாகப் பயப்படுகிறுன்;! சாவென்றுல் என்ன? இந்தச் சட்டையைக் கழற்றிவிட்டு இன்னுமொருசட்டை போடுவதுதானே. எங்களுடைய உடைகிழிந்து போனுல் நாம் வேறெருரு உடையை உடுக்கின்றுமல்லவா? அதுபோலவேதான் இந்தச் சரீரம் கேடுற்றதானுல் ஆன்மா வேறெருரு சரீரத்தையெடுக்கும் - அதில் நூதனம் ஒன்றுமில்லை, உடம்பு அழிதலைக் குறித்து மனம் வருந்துதல் அறியாமையாகும். ஆன்மா நித்தியமானது; அழிவற்றது, ஆகவே உடம்பிலுள்ள பற்றை யொழித்துவிடு- உயிர்களெல்லாம் நடமாடும் தெய்வங்கள் எனச் சிந்தையிற் கொள்வாயாக - தெய்வம் எல்லோர் சித்தத்திலும் உண்டு. ஆகவே உடம்பைப் பொருட்படுத்தாது உயிருக்குயிரான பரமான்மாவை எல்லாரிடத்தும் காண்பாயாக.'' எனக்குவரவிருக்கும் தனிமையான நிலைமையை அறிந்தருளியவராகிய குருநாதர், என்னுடைய இந்த நிலையேற்படுவதற்கு நாலைந்து வருஷங்களுக்கு முன்னதாகவே தொடங்கி யாக்கை நிலையாமை முதலிய இந்த உபதேசங்களை யெல்லாம் பல முறையும் எனக்கு வற்புறுத்திக் கூறியருளினர் பின்பு

எனது தற்கால நிலைமையில் அன்னையிலும் மிக்க ஆதரவுடையவராய் யான் ஆச்சிரமத்திற்குப் போகும் வேளைகளிலெல்லாம் என்னைப் பல மணி நேரம் அங்கு தங்கச் செய்து நாவிற்கினிய போனகமும் ஞானபோனகமும் ஒருங்கே ஊட்டி யென்னை ஆதரித்தார்.

கடைசியாகச் சுவாமிகள் எனக்களித்த அருளுரை:- ''உலக விஷயங்களை இனிமேல் சிந்திக்காதே.. அவைகளை விட்டு விட்டு ஆன்ம ஈடேற்றத்துக்காகத் தவத்தைச் செய்- உனது மனம் இப்போது எவ்வளவோ பரிசுத்தமாகிவிட்டது. தவத்தைச் செய்'' எனப்பணித்தருளினர், இவ்வளவு பேரருளையும் பாலித்த குருநாதர் தமது உத்தரவை மீறி அவர்தம் ஆச்சிரமத்தில் நுழைந்தமைக்காக ஒரு நாள் என்னை மிகப்பலமாகக் கண்டித்தனர். யான் அச்சத்தால் நடுக்க முற்று அவ்விடத்தை விட்டு ஓடிச் சென்றேன். இதனுல் குருநாதன் கட்டளைக்கு அமைந்து நடக்கவேண்டும். கடுகளவேனும் கட்டளையை மீறக்கூடாது என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன். அன்று உகாந்தகால உருத்திரமூர்த்திபோற் சூர்பித்த சுவாமிகள் பின்பு யான் அவர்களிடம் சென்ற சமயங்களில் அன்னையிலும் தயையுடையராய் ஆதரித்தனர். ''அடிக்கடி இங்கே வா'' எனப்பணித்தார்.

சுவாமியைத் தரிசித்துப்பெற்ற அனுபவங்கள் சுவாமி என்னை என்னிலும் நன்கு அறிந்தவர் என்பதை உணர்த்தின. அவர் எனது உயிருக்குயிராக இருந்து வழிநடத்தி வருகிறார். அவர் என்னைக் கணமும் பிரியா இறைவன்.

பண்புதை திருமதி பத்மாசனி இராஜேந்திரா - புலோலி.

★

என்னைக் கணமும் பிரியா விறைவன்
அன்னை போல வன்பு சான்றவன்
பொன்னைப் பொருளைப் போகத்தைத் தள்ளி
உன்னு வோர்க ளுறுவர் பரகதி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம்.

— நற்சிந்தனை

4. மண்மேல் மலரடி வைத்தோன் காண்க

சுமார் பத்துவயதுப் பராயமுடையவனுய் யான் இருக்கும் போது, ஒரு நாள் என் தந்தையும் தாயும் என்னை அழைத்துச் ''சுவாமியார் அவர்களிடம் போ'' எனப் பணித்தனர். அப்படியே யான் போனேன். சுவாமிகள் என்னை ஆச்சிரம வாசலில் கண்டதும், ''மகனே வா'' என்றழைத்தார். யான் உள்ளே சென்று வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றேன். என்பெயரையும் என்தந்தை பெயரையும், கேட்டார். பின்என் கையில் ஓர் வெள்ளை மல்லிகைப் பூவைத்தந்தார். ''இந்தப் பூவைப்போல் உன்வாழ்விருக்கும் பயப்படாதே· கவனமாகப்படி. கோயிலை நன்முகக்கும்பிடு'' எனப் புத்திபுகட்டி, வீடு செல்ல விடை தந்தார். எனக்குக் கிடைத்த குருதேவருடைய முதல் தரிசனம் இதுவாகும். தருணம் கிடைக்கும் போதெல்லாம் அவருடைய ஆச்சிரமத்திற்குச் சென்று திருவடியைத் தரிசித்து வந்தேன். காலம் ஓடியது. எங்கள் குடும்பத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. வறுமை தாண்டவமாடியது; கஷ்டத்துள்ளும் யான் தொடர்ந்து படித்துக்கொண்டிருந்தேன். ஒரு நாள் யான் படிக்கச் சென்று கொண்டிருக்கும் போது, பாதையில் குருதேவர் காட்சி கொடுத்து ''மகனே! நீ பெண்களோடு கூடிப்பிறந்தாய்; ஏதாவது கொஞ்சம் உழைக்கவேண்டும்'' என்று கூறியருளினர். அவர் அப்படியருளிய ஒரு மாதத்துக்குள், தோட்டப் பாடசாலையில் இடம் பெறும் எண்ணத்தோடு யாழ்ப்பாணம் விட்டகன்றேன். தோட்டப் பாடசாலையில் இடம் பெற்று அங்கு சிலகாலம் கடமையாற்றியபின் அரசினர் பாடசாலையிலும் நியமனம் பெற்றேன். இப்படியிருக்கையில் ஒரு நாள் வீதியில் என் தந்தைக்குக் காட்சி கொடுத்தார் குருதேவர், குடும்ப நிலைமைகளை விசாரித்தபின், எனக்குச் சீக்கிரம் விவாகம் செய்து வைக்க வேண்டுமென வற்புறுத்திச் சென்முராம். இவ்விஷயத்தை விவாகத்தின் பின் தாயார் கூற அறிந்தேன்.

எங்கள் விவாகத்தின் பின் குரு தேவருடைய தரிசனத்துக்குத் தனியாகச் சென்றது மிகக்குறைவு. முதலில் இருவராகவும், பின் மூவர் நால்வராகவும் சென்று தரிசித்தோம். ஒருமுறை தரிசனத்துக்குச் செல்வதற்கு மனைவிக்குச் சிறிது வசதிக்குறைவாக இருந்தபடியால் யான் மட்டும் சென்றேன். தரிசனத்திலிருக்கும்போது ''மற்றவர்கள் எங்கே'' என்று குருதேவர் என்னிடம் வினவினர். அன்றேதனியாகத் தரிசனத்துக்குச் செல்வதை விட்டு விட்டேன். உலக வழக்கம்போல விவாகமாகி ஒருவருட காலத்தில் எங்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை. பொருளாதாரக் கஷ்டத்திலும், உடனே குழந்தை பிறவாததையிட்டு நாங்களும் கவலைப்படவில்லை. இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் குழந்தை பிறக்கவில்லை. இக்காலத்தில் ஓர் முறை தரிசனத்துக்குச் சென்றிருந்த போது, ''உங்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை; அப்படித்தானே?'' என்று குருதேவர் கேட்டார். ''ஆம் சுவாமி'' என்றேம். உடனே ஓர் திராட்சைக் குலையில் பெரிய பழம் ஒன்றைப் பிடுங்கி என் மனைவியிடம் கொடுத்து ''இதை ஒருவருக்கும் கொடுக்காதே; நீயே சாப்பிடு'' என்று பணித்தார். அவ்வாறே மனைவி செய்தாள். அடுத்த மாதம் என் மனைவி கருவுற்றிருந்ததை யுணர்ந்தோம். விவாகமாகிச் சில வருடமாகியும் எங்களுக்குக் குழந்தை பிறவாதபடியால், நாங்கள் மலடராக்கும் என்ற குசுகுசுப்பு எங்களுக்குத் தெரியாமல் ஊர் முழுவதும் பரவியிருந்தது. இதை எங்கள் குருதேவர் உணர்ந்து அதற்கு வைத்தியம் செய்துவிட்டார்.

வசதிகிடைக்கும் போதெல்லாம் குருதேவருடைய தரிசனத்துக்குச் சென்று வந்தோம். அக்காலங்களில் எங்கள் மனக்கவலைக்கு நேரடியாகவும் விடைதருவார். மறைமுகமாகவும் விடைதருவார். மறைமுகமாக வரும் விடைகள் கதையளவில் வேறு தொடர்பான விஷயம் போன்றிருக்கும். ஆனல் எங்களுடைய வேண்டுதலுக்கும் அதில் விடையிருக்கும். குருதேவருடைய தரிசனம் எங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திசை திருப்பிக்கொண்டே வந்தது. இவ்

வுலக வாழ்வில் பிறந்தவேயாமல், பிறவிக்கடலைத்தாண்ட உதவும் மன ஒடுக்கத்தையும், நிம்மதியையும் நாடியே குரு தேவரிடம் செல்லத் தொடங்கினேம். 1956ஆம் ஆண்டில் ஒருநாள் தரிசனத்துக்குச் சென்றிருந்த போது ''நீங்கள் சிவ தொண்டனை வாசிப்பது நல்லது'' என்று குருதேவருடைய கட்டளை கிடைத்தது. அறியவேண்டுமென்று நினைத்த விஷ யங்களையும் புதிதாகப் பல ஆத்மீக விஷயங்களையும் சிவ தொண்டனது துணையால் பெற்றுக்கொண்டோம்.

1963ஆம் ஆண்டில் இரண்டுதரம் மட்டும் குருதேவரு டைய தரிசனம் பெறத்தருணம் கிடைத்தது. முதல்சித்திரை மாதத்தில் சென்றேம். அப்போது இரு குழந்தைகள் இருந்தனர். மூன்றுவது குழந்தை கருவுற்றிருந்தது. அவ ருடைய அனுமதியோடுஆச்சிரமத்துக்குள்சென்றுஅவருடைய பாதாரவிந்தங்களை வணங்கி நின்றேம். இருக்கும்படி பணித் தார். பின் பிள்ளைகள் இருவரினது பெயர்களையும் கேட்டார் சொன்னேம். மற்றவன் எங்கே என்று கேட்டார். ''இரு குழந்தைகள்தான் சுவாமி'' என்றேம். ஆனந்தச் சிரிப் பொன்று சிரித்தார். ''மற்றவனும் இங்கே இருக்கிறானே'' என்றார். ஆம் கருவுற்றிருந்த குழந்தை ஆண் குழந்தை தான். அடுத்த ஆவணித்திருவாதிரையில் அவன் பிறந் தான். அவனைக் குருதேவருடைய தரிசனத்துக்குக் கொண்டு செல்வதற்கு எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அப் படியிருந்தும் அவன் குருதேவரை எப்படியோ அறிந்து கொண்டான் என்பதற்கறிகுறியுண்டு. குருதேவர் இரண் டறக்கலந்த பின் அவர் ஞாபகமாகச் சிவதொண்டன் சிறப்புமலர் வெளிவந்தது. அம்மலரின் பிரதி வீட்டைய டைந்த போது யான் வீட்டிலில்லை. மனைவியினுடைய கை யில்தான் அம்மலர் கிடைத்தது. அக்குழந்தை அம்மலரை வாங்கி அட்டையை நீக்கியவுடன் குரு தேவருடைய படத் தைக்கண்டான். தான் கும்பிட்டான். தன் அண்ணன் அக்காள் இருவரையும் கும்பிடச் செய்தான். பின் தன் அம்மாவையும் கும்பிடச் செய்தான். யான் வீட்டுக்கு வந்தபோது மலரை என்னிடம் தந்து படத்தைச்காண்

பித்துக் கும்பிட்டான். யானும் கும்பிட்டேன். அதன் பின் சுவரில் மாட்டப்பட்டிருக்கும் குருதேவருடைய படத்தை, தாடி அப்பன் என்று சொல்லிக் கும்பிடுகிறான். இக்குழந் தையுடைய செய்கை கடவுளுடைய அளவுகடந்த அருளை யும், குருலிங்கதரிசனம், பிறவித் தொடர்பு என்பவை களையும் எனக்கு உணர்த்துகிறது. இந்த ஆண்டில் ஆடியில் மறு தரிசனத்துக்குச் சென்றிருந்தோம். இம் முறை வழக்கம் போல் அழைக்கவில்லை. வாசலில் காத்து நின்றேம். அப்போது ''செம்மனச்செல்விக்கு மண் சுமக் கச் சென்று, பித்தன்போல் நடித்து அடிவாங்கியது போன்ற திருக்கூத்தே இன்று எங்களுக்கு நடப்பதும்'' என்று என் மனம் எண்ணிற்று. நாங்கள் வாசலில் காத்துக்கொண்டு நின்றதை அவதானித்த திரு. திருநாவுக்கரசு அவர்கள் ''உள்ளே வாருங்கள் என அழைத்தார். உள்ளே சென்று குருதேவருடைய பாதாரவிந்தங்களைத் தொட்டு வணங்கி எழுந்து நின்றேம். ''யார் நீ- போ வெளியே'' என்று சொல்லி என்னை அதட்டிக் கலைத்தார். என்தலை சுழன்றது. செய்வதின்ன தென்றறியாது, வெளியே வந்து விறைத்துப் போய் நின்றேன். உள்ளே மனைவியும் குழந்தைகளும் நின் றனர். குருதேவர் என் மனைவியைப் பார்த்து ''யார் உன் கணவனு?'' என்று கேட்டார் ''ஆம் சுவாமி என் றாள்.'' என்னை உள்ளே கூப்பிட்டார். ''வயது போய் விட்டது, தடுமாற்றம் ஏற்பட்டு விட்டது. அதனாலே கலைத்தேன், வருத்தப்படாதே'' என்று திருவருள் சுரந்தது. இந்தச் சிவனுக்குத்தகுந்த அடி விழுந்தது. அடித்த கை அணைத்து அருள் சுரந்தது. இதன் மலங்கள் கலைக்கப் பட்டன. புறத்தார்க்குச் சேயோனாய் அன்பர்க்கன்பனாகித் தோன்றித் துணையாய்த் திருவருள் புரிகின்றார் எங்கள் குரு தேவர்.

எங்கள் குருதேவர் திருவடிக்கலப்புறுவதற்கு ஒரு மாதத் துக்கு முன் கனவில் தரிசனங்கொடுத்து அருள் சுரந் தார். அதுவருமாறு:- குருதேவர் தமது ஆச்சிரமத்திலி ருந்து புறப்பட்டுக் கொழும்புத்துறை வீதியில் கிழக்கு

நோக்கி வந்துகொண்டிருந்தார். அதே நேரத்தில் யானும் ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். குருதேவர் கோயிற் கிணற்றடிக் கண்மையிலுள்ள வாகை மரத்தடியில் வந்ததும் கீழே உட்கார்ந்தார், உடனே யான் அவருடைய பாதாரவிந்தங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றி வீழ்ந்து வணங்கினேன். அப்போது அவர் வலக்கையிலிருந்த ஓர் சிறுகுச்சியால் ''விநாயகனைக் காட்டடா பார்ப்போம்'' என்று சொல்லி எறிந்தார். அந்த எறி எனது இடது கைப்பூட்டில் விழுந்தது. அந்த எறியின் தாக்கத்தால் கனவிலிருந்து விழித்துக்கொண்டேன். நேரம் மூன்று மணியாயிருந்தது. அந்த எறியால் ஏற்பட்ட உணர்ச்சி, அழியா உணர்ச்சியாய் எந்த நேரமும் குருதேவரை ஞாபகமூட்டிக் கொண்டேயிருக்கின்றது. உடனே விபூதி தரித்துக் குருதேவரைத் தியானித்துக் கொண்டு திரும்பத் தூங்கினேன். இந்தக்கனவு எனக்கு ஓர் நிகைப்பைக் கொடுத்தது. இதனுடைய அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. இதை மற்றவர்களுக்கு வெளியிடுவதலால் மாறுபட்ட கருத்தும் தோன்றக் கூடும் என்றும் எண்ண வேண்டியதாயிற்று. இதனால் நற்சிந்தனை, சிவதொண்டன் என்பவற்றில் குறிப்பிட்ட சில உண்மைகளை ஆராயத் தொடங்கினேன். ''சிவன் சிவனென்றுன் எங்கள் குருநாதன்; அவன் நானே- நான் அவனே; இப்புவி எல்லாஞ் சிவமே; உண்மையும் இன்மையும் நீயே, ஊனும் உயிரும் நீயே, இருவரும் தேடிக்காணு இறைவன் என்போல் உருத்தாங்கி'' என்பன போன்ற உண்மைகள் புலனுயின. கடவுளே குருதேவராகக் காட்சியளிக்கிறார் என உணர்ந்தேன். யான் பிள்ளைப்பருவத்தில் நெஞ்சிலிருத்திய விநாயகர் முகூர்த்தமே குருதேவர் என உணர்ந்தேன். அவர் அத்துவிதமாக விளங்கி இவ்வான்மாவை இயக்கிக் கொண்டிருக்கிறார். எந்தநேரத்திலும் எனக்குக் கைகொடுத்து உதவுகிறார்.

என்வாழ்க்கையில் குருதேவருடைய திருவருள் பல நடவைகளில் நேருக்கு நேராகச் சுரந்து அருள் செய்துள்ளது. அவற்றுள் ஒன்றையாவது குறிப்பிடாமல் விடுவது

சம்மதமில்லையாதலின் அறிக. இந்நிகழ்ச்சி குருதேவர் திருவடிக்கலப்புற்ற பத்துத்தினங்களுக்குள் நிகழ்ந்ததொன்றாகும். ஒருநாள் இரவு எட்டு மணியளவில் எனது மகளுடைய கைவளையல்களைக் காணவில்லை என்பது மனைவிக்குத் தெரிந்தது. அதன் பெறுமதி சுமார் நூற்றுநாற்பதுரூபாய். அது எப்படித் தொலைந்தது என்பதும் தெரியவில்லை. இந்த நேரத்தில் இப்படித் தொலைந்ததே என்று எண்ணி மனம் வருந்திக்கொண்டு அன்று இரவு உணவு உட்கொள்ளாமல், அதைக் கண்டுபிடிக்க அருள் செய்யும்படி குருதேவரை வேண்டிக் கொண்டு மனைவி படுக்கைக்குச் சென்று விட்டாள். ''நான் பிச்சைக்காரன் எனக்கு ஒன்றுந்தெரியாது. என்னை நினைத்து ஏன் வருந்துகிறாய்.'' என்று குருதேவர் கூறுவதாகக் கனவு கண்டு எழுந்து பார்த்தாளாம். நேரம் இரவு ஒரு மணியாயிருந்ததாம். எப்படியும் வளையல்களைக் கண்டு பிடிப்பதற்கு அருளை வேண்டிக் குருதேவரைத் திரும்பவும் தியானித்துக் கொண்டு படுத்துவிட்டாளாம். அதிகாலை ஐந்து மணியளவில் ''பிள்ளாய்! தூங்காதே, எழும்பு, உனது படலைக்குக் கிழக்கே முப்பது அடிதூரத்தில் வீதியிற் குறித்த வளையல்கள் இருக்கின்றன. போய் எடு'' என்று கூறும் சத்தம் கேட்டு விரைந்து சென்று பார்த்த போது வளையல்கள் மோட்டார்ச் சில்லிலகப்பட்டுப் பல துண்டுகளாக முறிந்து கிடக்கக் கண்டு எடுத்தாளாம். யான் வீடு வந்தபோது இவ்விஷயத்தைக் கண்கள் நீர் பெருக மனைவியுரைத்த போது எனக்கும் மெய்சிலிர்த்தது. நீர் பெருகியது. இனி இவ்வுலக வாழ்வையிட்டு அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. என் கன்மம் தேய்ந்து கொண்டிருக்கிறது. குருதேவராகிய பரம்பொருளை அணுகிக்கொண்டிருக்கின்றேன். பயமுமில்லை, அவசரப்படத் தேவையும் இல்லை.

குருவே திருவடி சரணம்

ஓம் சாந்தி

அமரர். ஆசிரியர் பஞ்சாட்சரம் - அரியாலை

6. பழங்குடில் தோறும் எழுந்தருளிய பரனே!

பண்ணிய வினையின் வெம்மைப் பற்றறப் பத்திவித்தின்
தண்ணிய ஞானப் பைங்கூழ் தழைத்தருள் விளைவுண்டாகக்
கண்ணிய வின்பம் பொங்கிக் கலந்துணக் கருணை பெய்யும்
புண்ணிய யோகநாதப் பொன்முகில் வாழி வாழி.

முதற்றரிசனம்

ஆயிரத்துத் தொளாயிரத்திருபத்தாரும் ஆண்டு தைத்திங்கள்

''அன்றொருநாள் பெங்களூர் மணியின் பாதம்
அன்புநிறை உள்ளத்தில் மலர வைத்தாய்
இன்றுமொரு தவமுனிவ ரிங்கே யுள்ளா
ரிருவருக்கும் பேதமில்லை யான் போய்க் கண்டு
சென்றடியில் வீழ்வேனைச் சுந்த ராநீ
சிவசுப்பிர மண்யனையே சேவிக் கின்றாய்
ஒன்றுமனத் தவனடியே போற்றி வாழ்வாய்
ஒருகுறையு மிங்கில்லை உண்மை காணே''

என்று சொல்லி எனக்காசீர்வாதம் செய்த தவப்பொருளை நீ வந்து வணங்கி அவர் திருவருள் பெறவேண்டும் என்று அன்பு நிறைந்த துணைவர் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அடிமைச் சிவியம் செய்தவெனக்கு உடனே சுவாமிகளைத் தரிசிக்க முடியாமையால் எனது மனைவியை அனுப்பினேன். அவர் சென்று சுவாமியின் திருவருள் பெற்று மீண்டார். சில நாட்களின் பின் நானும் மனைவியுமாக யாழ்ப்பாணம் வந்து அன்று காலை ஒரு மணிக்கு நீராடி புறவழுக்குப் போக்கிச் சுத்தமான உள்ளத்தோடு புறப்பட்டு நான்கு மணிக்குச் சுவாமியின் தவப்பள்ளிக்குச் சென்றோம். அப்போது அது ஒரு சிறுகுடிசை. வெளிக்கதவு பூட்டப்படவில்லை. நாங்கள் உள்ளே சென்று அவரையே தியானித்துக் கொண்டு நின்றோம். ஐந்து மணியாய்விட்டது. உள்ளேயிருந்து ''ஆர் அங்கே'' என்ற சத்தம் வந்தது.

சுவாமி! என்றேன். ''ஆர் என்னுல் சுவாமி என்கிறீர்: போரில்லையோ'' என்று சற்றே கோபத்தோடு கூறும் குரல் கேட்டது. நான் ஒன்றும் பேசாமல் நின்றேன். சுவாமிகள் ஒரு தகரமண்ணெய் விளக்கைக் கொளுத்திக் கொண்டு வெளியே வந்தார். கும்பிட்டோம்.

''நீங்கள் வந்து ஒரு மணிநேரமாய் விட்டது. இந்த ஒரு மணிநேரமும் செய்ததுதான் தவம். இதுபோல எப்போதும் கும்பிடுங்கள். ஒரு குறையுமில்லை. சரிபோங்கள்'' என்றார். நாங்கள் வீட்டிலிருந்து வரும் போது தட்டத்தில் பூ, பழம், தேங்காய் முதலியன கொண்டு சென்றோம். தட்டத்தையும் பழங்களையும் சுவாமியின் திருவடியில் வைத்து மீண்டும் கும்பிட்டோம். சுவாமிகளுக்குக் கோபம் வந்து விட்டது. ''இங்கே ஐயரில்லை - பூசைசெய்துதர-எடுத்துப்போ'' என்றார். நான்ஒன்றும்செய்யாமல்நின்றேன் ''எடுத்துக் கொண்டு வெளியே போ, இங்கே நிற்கவேண்டாம்'' என்று மீண்டும் கோபக்குறியுடன் சொன்னார். நான் தட்டத்தை எடுத்துக் கொண்டு தெருவுக்கு வந்தேன். மனைவி எனக்குப் பின் வந்தார். எனக்கு மிகவும் மனவருத்தம். எவ்வளவு அன்போடு சுவாமியைக் கும்பிட்டேன், இதுதானே பெற்றபலன். கோபத்தை அடக்க முடியாதவர்தானே சுவாமி! இவர்தானே சுப்பிரமணிய சாமிக் கொப்பானவர் என்று மனதில் எண்ணிக் கொண்டு நடந்தேன். வண்டிக்குக் கிட்டப் போனதும் தெருவாசலில் நின்று ''இங்கே வா'' என்று கூப்பிட்டார். அந்நேரம் என் ஆணவம் முறுக்கவிழாததால் நான் வரமாட்டேன், நீர் வந்து என்னைக்காணும் என்று எண்ணிக் கொண்டு வண்டியில் ஏறிவிட்டேன். சுவாமி மனைவியைக் கூப்பிட்டு ''உந்தப் பழங்களை மருதடிப்பிள்ளையார் கோவிலுக்குக் கொண்டு போய் அர்ச்சனை செய்விக்கச் சொல்லு'' என்று சொன்னார்.

நான் மனைவியுடன் தர்க்கித்துக் கொண்டு வரும் பொழுது ''ஐயா! ஒரு பெரியவர் சொன்னதைக் கேட்டு

நடக்கத்தானே வந்தீர்கள். அவர் என்ன செய்து போட்டார்; கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்துபோவோம், இதில் என்ன குற்றம்;'' என்று சொன்னாள் - அவ்வாறே அர்ச்சனை செய்வித்து, தமயனுரையும் கண்டு அவர் தம்முடன் போய்ச் சுவாமியைத் தரிசித்து வரலாம் என்றதற்கு மிணங்காது வீடு போய்ச் சேர்ந்தோம். நான்கு நாள் விடுதலையில் வந்தாலும் இரண்டாம் நாள் பின்னேரமே பயணத்திற்கு ஆயத்தஞ் செய்து சுன்னாகை நீலியத்திற்குப் போவதற்காக மானிப்பாய் வீதிவழியாக வண்டி வந்து கொண்டிருந்தது. மருதனார் மடச்சந்தியில் திரும்பும்போது ''ஐயா! சுவாமி நிற்கிறார், கும்பிடுங்கள்'' என்று மனைவி கூறினாள். அவர் கூற்று இத்தனைகாறும் திரோதான சந்தியாய்ப் பின் அருட்சத்தியாகி மாறிச் சிவபிரான் திருவடிகளைக் காண்பிக்கும் அருள்வாக்குப் போன்றிருந்தது. என் அகங்காரம் எல்லாம் போய்விட்டது. ஓர் ஆனந்த உணர்ச்சி ஊற்றெடுத்தது. பெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினேன். ''நீ நினைத்தபடி உன்னைத் தேடிவந்தேன். எழுந்திரு'' என்றார். எழும்பிக் கும்பிட்டு நின்றேன்.

'பணிசெய், விளங்குகிறதா' என்றார், ''இட்டகட்டளையைச் செய். நான் இட்ட கட்டளையைச் செய்து முடித்தாயா''? என்றார். ஆம் சுவாமி என்றேன். சரி இங்கும் வந்தேன்;நீங்கள் போகும் ஊருக்கும் வருவேன்; சுகமாய்ப் போய்வாருங்கள் என்று சொல்லிப் போய் விட்டார். இதுவே சுவாமிகளுடன் நான் கொண்ட முதல் தொடர்பு.

இரண்டாவது தரிசனம்

சுவாமி வருவார், இன்று வருவார் நாளை வருவார், தில்லைச் சிதம்பரத்திலே பெரியசாமி வருவார், வருவார் என்று பெத்தான் சாம்பன் என்ற பக்தன் கூறியிருந்து தவம் செய்தது போல நாங்களும் ஒவ்வொரு நாளும் கூறிக் கொண்டு தவம் செய்தோம். சிவனே! சிவனே!! என்றுள்

சிவன் வாராதிருப்பானே? ஒரு நாள் பத்து மணிபோல் 'சுவாமியும் என, தருமை நண்பன் M. S இளையதம்பியுமாக என் சிறு குடிலைத் தேடி முன்னைப்பிறவித் தொடர்பாலோ அன்றி என்னைத் தன் திருவடிக்காளாக்க வேண்டியோ நிலத்திலே வண்ணக் கமலத்திருவடிகள் நடந்து சிவப்பேற வந்தார். பாதங்களை விளக்கி வணங்கினேன். ''சுப்பிரமணிய சுவாமியும் நானும் ஒன்று என்பதிலுனக்கேன் சந்தேகம்! நீ அவருக்குச் செய்தவாறு இன்று எனக்குச் செய்'' என்றார். (சுப்பிரமணிய சுவாமி பதினைந்து நாட்களாக எங்கள் வீட்டிலிருந்த போது, சுவாமிகளுக்குக் குளிப்பாட்டவும், மடி தோய்க்கவும் பூசைத்திரவியங்கள் சேகரித்து வைக்கவும் அவர் பூசையைப்பார்த்துக் கும்பிடவும் எனக்குப் பெரும் வாய்ப்புக் கிடைத்தது.) உடனே சுவாமிகளுக்கு முழுக்காட்டி, ஈரம்புலர்த்தி வெண்துகில் உடுத்து நாற்காலியில் வீற்றிருக்கச் செய்து தேவாரம், சிவபுராணம் முதலிய அருள்பாடல்களைப் படித்துத் திருவடிப் பூசைசெய்தோம். சுவாமிகள் பூசை முடியும் வரை யோகநித்திரையிலமர்ந்திருந்தார். பின் கண் விழித்து ''இனிமேல் இவ்வித சேட்டை வேண்டாம்'' என்றார். மூன்றும் நாள் பிரயாணமாய் விட்டார்.

மூன்றாவது தரிசனம்

எங்களுக்கிரண்டு ஆண் குழந்தைகள் பிறந்திறந்துவிட்டார்கள். எம்மோடு அயலில்வசித்த ஒரு பௌத்த நண்பர் சிவனொளிபாத மலைக்குச் சென்று தரிசித்துவந்தால் ஆண் குழந்தை கிடைக்கும் என்றார். நாங்களும் நேர்த்திக்கடன் பூண்டு ஒரு வெள்ளிக்கிழமை யாத்திரைக்காயத்தம் செய்து நான்குநாள் விடுதலையும் பெற்றுக்கொண்டோம். வெள்ளிக் கிழமை மத்தியானம் சுவாமி வந்துவிட்டார். திருவமுது செய்துகொண்டிருக்கும்போது தாம் சிவனொளிபாத மலைத் தரிசனத்திற்காக வந்தவழியில் என்னைக்கண்டு செல்லுமாறு வந்ததாகக் கூறினார். எங்கள் ஆனந்தத்திற்களவில்லை. நாங்களும் சாப்பாட்டை முடித்தோம். பௌத்த நண்பரும்

வந்துவிட்டார். விசையூர்தியும் வந்துவிட்டது. ''சுவாமி! நாங்களும் சிவனொளிபாத மலைக்கு இன்றுசெல்ல எண்ணி யுள்ளோம். சுவாமியுடன் போகும் பெரும்பேறும் பெற் றேம்'' என்றேன். சுவாமிகளின் முகத்தில் ஒருவித பிரகா சம் உண்டாகியதைக் கண்டு மயிர்க்கூர்ச்சித்து நின்றேம்.

''சிவனொளிபாதம் கண்டீர்களா?'' என்றார். எனக்கு ஒன்றும் தெரியவில்லை. ''இந்தப்பாதங்களில் விழுந்து கும்பி டுங்கள்'' என்று உரத்த குரலிற் கூறினர். விழுந்து விட் டோம். ''இதுதான் சிவனொளிபாதம். அங்கும் இங்கும் எங்கும் அவன்தான்.'' என்று சொல்லித் தாம் பொல்கா வலைக்குப் போகச் சீட்டுப்பெற்றுத் தரும்படி சொன்னார். நின்ற விசையூர்த்தியில் சுவாமியை ஏற்றி அனுப்பிவைத் தேன் இன்றுவரை சிவனொளிபாத மலைக்குச் செல்லவில்லை.

நான்காவது திருவிளையாடல்

அன்று ''எங்களுக்குப் பெண் பிள்ளைகள் இருவர் இருக்க வீடில்லை; படிப்பிக்கவேண்டிய காலமாய்விட்டது. தாய் தந்தையர் வீடோ சிறுகுடிசை. அவர்களும் பெரிய குடும்பம், நாங்களும் அங்கே சீவிக்க வசதியில்லை. ஒருசிறு வீடு கட்ட வேண்டும்'' என்று மனைவியிடமிருந்து கடிதம் வந்தது. ஒப்பந்தமாக வீடு கட்டித்தரவும், மாதந் தோறும் சிறுதொகை பெறவும் இணங்கிய ஒப்பந்தக்காரர் இல்லை என்ன செய்வது? சுவாமியிடம் போய்வரலாம். அதுதான் எங்களுக்காறும் தலம். அவரைக் கண்டு வரும்படி மனை விக்கெழுதினேன். மனைவியும் தரிசிக்கப் போகும் நேரத்தில் தவப்பள்ளியில் ஒரு சந்நியாசியாரும் இருந்தார். மனைவி யை இருக்கச் சொல்லியபின் ''ஞானம் பெற்று வீடுபெற முயல்பவர்கள் என்ன செய்ய வேண்டும்? சொல்'' என்று மனைவியைக் கேட்டார். ''சுவாமி! ஏழைக்கென்ன தெரியும்- சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்கு படிகள் உள்ளன. அவற்றை முறையே ஏறிச் சென்றுள் முத்தியடை வார்கள் என நூல்கள் கூறுகின்றன'' என்று சொன்னார். நூறவியைப் பார்த்து ''ஒருவர் வீடு கட்ட வேண்டுமானால்

என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார். ''நிலம் வேண்டும்! பின் கல், மண், சீமேந்து முதலியன வேண்டும். இவற்றுல் விரும்பியபடி வீடு அமைத்தும் பின் மரவேலை செய்து முடிவிடவேண்டியதுதானே'' என்றார். ''சரி நீ போய் வா'' என்று மனைவியை அனுப்பி விட்டார். பின் நாங்களும் மறந்து சில மாதங்களாகிவிட்டன. ஒரு நாள் சுவாமி வந்து ''வீடு கட்டுவதாகக் கேள்விப்பட்டேன் நிறைவாகிவிட்டதா'' என்றார். 'இன்னும் தொடங்கவில்லை என்றேன். உடனே மடியில் இருந்து ரூபா ஐந்து தந்து ''இன்றே யாழ்ப்பாணம் போய் நாளைக்கு வேலை தொடங்கு'' என்றார். அவ்வாறு நிலம் வகுத்து வந்தேன். 7 மாதங்க ளில் 3 அறைகளும் 2 அறை அடுக்களையும் உள்ள ஒரு வீடு நிறைவாகி விட்டது.

நண்பர்கள் தந்துதவிய பணமும் பொருளும் சுவாமி யின் அன்பர்கள் கூட்டிய வீட்டு வேலையும் மரவேலையுமாகி நிறைவாகி விட்டது. இந்தவேளையில் வேலையை விடவேண்டி வந்தது. கடன் தந்த அன்பர்கள் நெருக்கினர்கள். ஒரு வர் மனம் வருந்தக் கூடியதாக ஒரு கடிதம் எழுதியிருந் தார். அவருக்கு ரூபா 500 கொடுக்க வேண்டும். தொட்டி லையும் ஆட்டித் தொடையையுங் கிள்ளுவதுபோல சும்மா விருந்த என்னை இப்படி இடர்பட விடலாமோ என்று நொந்து கொண்டேன். மறுநாள் சுவாமி வந்து விட்டார். இரத்தினபுரியிலிருந்து கடிதம் வந்தது என்று கேட்டார். இல்லையென்றேன். ''நாளை உனக்குக் கடிதம் ஒன்று வரும்'' என்றார். அடுத்த நாள் ரூபா 500 க்கு ஒரு பதிவு செய்த கடிதம் வந்தது. அனுப்பியவர் முன் என்னோடு பழகாதவர். சுவாமியிடம் சொன்னேன். நண்பனின் கடனையும் தீர்த் தேன். சிறிது நாட்களின் பின் இந்த அன்பர் இரத்தின புரியிலிருந்து நானிருந்த இடத்திற்கு வந்து தம்மை அறிமு கஞ் செய்து சுவாமியின் கட்டளைப்படி வந்ததாகவும், எனக்குள்ள கடன்களையெல்லாம் தீர்க்குமாறு தாம் வந்த தாகவும்கூறி அவ்வாறே ஒரு பெருந்தொகைக்கு ஒரு காசோ

லையும் தந்தார். சுடன்கள் நீங்கின. இந்த அன்பர் சுவாமியின் அணுக்கத்தொண்டராய், அப்பெருமானடியார்களுக்கு வரும் இடர்களை நீக்கும் வள்ளலாய் ஊர்ப்பொது நின்ற பழமரம் போன்றிருந்தவர்.

ஐந்தாவது அற்புதம்

இது பேராதனையில் நடந்த முதல் அற்புதம். இந்த இடத்தில் வேலைக்கமர்ந்த அன்று காலை கடுகண்ணவையிலிருந்து வந்து சாமான்களை இறக்கிக் கொண்டு எனக்குக் கொடுத்திருந்த வீட்டிற்குள் போனேம், நவீன வசதிகளுடன் கூடிய இடம். அடுக்களைக் கருகாக மலகூடம் மனைவிக்கு ஒத்துக்கொள்ளவில்லை; வெளியே ஒரு குழிவெட்டி மலகூடம் சமைத்துத் தரும்படி தோட்டத்துரையைக் கேட்டேன். அவர் மறுத்துவிட்டார். அப்படியே வேலையை விட்டுத் திரும்பி விடுவதுதான் செய்யக் கூடியது. என்ன செய்வோம் என்று வருந்தி நிற்க, சுவாமியின் குரல் கேட்டது. கதவைத் திறந்தேன். கும்பிட்டோம். ''என்ன கறுத்துப்போய் நிற்கிறுய்'' என்றார். நடந்தவற்றைச் சொன்னேம். கண்டி - கடுகண்ணவை வீதியில் ஓவசியர் ஆக வேலை பார்த்த நண்பர் ஒருவர். சுவாமி கடுகண்ணவைக்கு வந்த காலங்களில் எல்லாம் சுவாமியைத் தரிசித்து அவரருளை நிறையப் பெற்றவர். அவரைக் கூட்டிவரச் சொன்னார். அவரும் வந்து விட்டார். ''கந்தையா! இன்று இரவு விடியுமுன் எனக்கொரு மலகூடம் சமைத்துத்தா''. இடத்தையும் காட்டினர். அன்பனும் தம்முடைய ஆட்களை அழைத்து விடியும் முன் மலகூடம் முடித்துவிட்டார். குழிவெட்டி மலகூடம் செய்யமாட்டேன் என்ற துரை அழகாகச் சமைதுள்ள மலகூடத்தைக் கண்டால் உடனே ஓடிப்போ என்று சொல்வானே என்று தயங்கிக் கொண்டிருந்த என்னைப் பார்த்து ''கறுத்துப்புறப்பட்ட சூரனை வெட்டிக் கனகடலை வறுத்துக் கிரியைப்பொடி செய்து அமரர் சிறை விடுத்த நல்லூரான் கிருபை - ஒன்றுக்கும் அஞ்சாதே'' என்றார். இந்த இடத்தில் பத்து வருடங்கள் இருந்தோம். அன்று

முடியாதென்ற துரைமகனும் இருந்தான். அவன் கண்ணுக்கு இந்த மலகூடம் தெரியவில்லை.

சுவாமிகள் பத்துவருடங்களில் மாதந்தோறும் வராத மாதமில்லை. அவ்வாறு அப்பெருமானின் புனிதபாததூளியின் பலனைச் சிறந்த இடம் இன்று கலைமகள் நின்று திருநடம்புரியும் பல்கலைக்கழகமாய் விட்டது. துரைமகன் வேலைக்காரர்கள் வசித்த வீடுகளெல்லாம் இடிபட்டுத் தூர்க்கப்பட்டன. பெருமான் தவஞ் செய்த வீடு மாத்திரம் இன்றும் இருக்கிறது.

நோய்தீர்க்கும் வைத்தியநாதன்

பேராதனையிலிருந்த பத்து வருடங்களும் நான் தனிமையாயிருக்க வேண்டி வந்தது. மனைவி பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டி ஊரோடு நின்று விட்டார். அதனால் நல்ல உணவுக்குறைவால் தேகத்தில் நோய் ஒன்றுண்டாகி வருத்தியது. ஒரு நாள் ஒரு பௌத்த சன்னியாசியாரிடம் ஒரு மருந்து வாங்கி மேசையில் வைத்துவிட்டு வேலைத்தலம் சென்றேன்- சுவாமிகள் வந்து மருந்தையும் குடி நீர்ச்சாமான்கள் எழுதிய துண்டுக்கடிதத்தையும் பார்த்துவிட்டார். சுல்லைப் பிசைந்து கனி செய்தாங்கு நாயேனை ஆட்கொள்ளத் தன்னுள்ளத்துட் கொண்டு விட்டார். அந்த மருந்தை உட்கொள்ள வேண்டாமென்று சொல்லிப் பின் வரும் கடிதத்தைத் திரு. கதிரவேற்பிள்ளைக்கு (கஸ்தூரியார்) எழுதினர்.

15. 12. 33
பேராதனை

குப்பையைக் கிளறினேன் குன்மூமணி கண்டேன்
அப்பனு மம்மையு மவ்வழி யிருந்தனர்
செப்ப வரியது தேவரு மறியார்
முப்புர மெரித்த முதல்வனு ணையே

மூச்சந்திக் குப்பையிலே முடங்கிப் படுத்துக்கொள்
அச்சமு மில்லை அபாயமு மில்லை
இச்செய் தியறி வாரேவ ராயினும்
பச்ச முடைய பரஞ குவரே

கான்மே லாகிக் கமனஞ் செய்வார்
மான்போல் கண்ணியர் மயக்கிற் போகார்
ஆன்முது கேறு மப்ப ஞணை
நான்சொன்ன வாசகம் நாடிநீ பாரே.

தம்பி கதிரவேலு தயவு செய்து .....20ம்.....20ம்.....பத்து நாட்களுக்குரிய ..... சூரணமும் அனுப்பிவைக்கவும்.

இப்படிக்கு
என்றும் மறவாதவன்.

மருந்து வந்து விட்டது. முதற்குடிநீர் சுவாமிகள் சாப் பிட்டார். முதல் குளிகையையும் அவரே சாப்பிட்டார். 13 நாட்கள் பத்தியமாயிருந்தார். நோய் தீர்ந்தது. இன்னும் அந்த நோய் வரவில்லை. மூன்று நாட்களுக்கு மேலாக நின்றது இந்த முறைதான்.

திருமுகப் பாசுரம்

17.8.34ல் அப்புத்தளையிலிருந்து சுவாமிகள் எழுதிய திரு முகம்.

கண்ணைக் கவரும் காட்சியால் மாண்ட
விண்ணைத் தோண்டும் மலைகள் விளங்கும்
எண்ணிக்கை யில்லாப் பேரா தனையில்
நண்ணி வாழும் வேலவா! இன்று யான்
புண்ணிய பூமி எனப்புகல் இந்தியா
செல்லு கின்றேனுனைத் தெய்வம் காக்கும்
கல்லுங் கரையக் கவிமழை சொரிகுதி
வெல்லுவாய் மாயை விடுனைக் காதும்
அல்லு மெல்லியு மேகலை வணங்குதி

எல்லாம் வரும்
இடர்தனைக் களைந்து ஈண்டு வாழுதி
தொடரா துன்னைத் தொல்வினை யாமே.

இங்ஙனம்
யோகத்தகப்பனர்.

சிதம்பர நடராசர் நடனம்

ஒரு நாள் பிற்பகல் 3 மணியிருக்கும். ஒருவிதமான மயக்கம் ஏற்பட்டது. அது இரவு 7 மணிவரை தெளிய வில்லை. துரைமகன் இரு வைத்தியர்களை அழைப்பித்து மருந்து தந்தார். அறிவு வந்ததேயன்றி. என்ன செய்கிறேன் என்பதை அறியவோ எழும்பியிருக்கவோ முடியவில்லை. விடி யற்ககாலை எட்டுமணிக் கோச்சால் சுவாமி வந்து விட் டார். மூன்று மருந்து கொண்டுவந்ததாகக் கூறினர். வந்த அன்று என்பக்கத்திலிருந்து என் தலையைத் தமது அருமைக் கரங்களால் ''சிவாயநம'' என்று தடவினர். அடுத்த நாள் 'சிதம்பர தரிசனம் பார்' என்று சொல்லி ஒரு காலை ஊன்றி ஒரு காலைத்தூக்கிச் சிகையைவிரித்து ஐந்து நிமிசங்களாகக் கூத்தாடினர். மூன்றும் நாள் தாம் கொண்டு வந்த மருந்தொன்றை வெந்நீரில் உரைத்துத் தந்தார். நாலாம் நாள் சுகமாகிவிட்டது. இந்த அற்புதத் தை அன்று கம்பளை வைத்தியசாலையில் தலைவராயிருந்த வைத்திய கலாநிதி இராமநாதனுக்குச் சொன்னேன். இந்த நடனம் அற்புதமானது. மிருத்யுஞ்ஜய நடனம். தத்து ஒன்று நீங்கிவிட்டதென்றார்.

சடத்திலும் சிவத்தை அறிவால் காண்பதே சிவ சாயுச்சியம்

ஒரு நாள் மாலைப் பொழுதில் வீதி உலாவிவரப் போ னேம். தெருவினிரு மருங்கினும் கமுக மரங்களாக வளர்ந்திருந்தன. முத்தும் மரகதமும் பவளமுமாய்ப் பொ லிந்திருந்தன. சுவாமிகள் ஒரு இடத்தில் நின்று கைகளைக்

கூப்பிக் கும்பிட்டார். என்னையும் கும்பிடச் சொன்னார். கும்பிட்டேன் - என்ன கும்பிட்டாய் என்றார். சுவாமி சொன்னதால் கும்பிட்டேன் என்றேன். சிரித்துக் கொண்டு இந்தக் கழுகமரத்தில் நான் நெடுமாலைக்கண்டு கும்பிட் டேன். சடத்திலும் சிவத்தை அறிவால் காண்பதே சாயுச் சியம் என்று உபதேசித்தார்கள். இன்னும் எத்தனையோ திரு விளையாடல்கள் இங்கே எழுத இடம் தரமாட்டா. 1939ல் பேராதனையை விட்டுக் கண்டிக்குப் போனேன். அங்கும் சில நாட்கள் வந்தார். ஆனால் பேராதனையைப் போல அவருக்கு கண்டி வசதியான இடமாயில்லை. கடைசியாக 1943ம் ஆண்டு ஒரு நாள் வந்து தரிசனம் தந்தபின் ஒரு கடிதம் எழுதித்தந்து. ''இதில் எழுதியுள்ளதுதான் நான் உனக்குச் செய்யும் உபதேசம்; இதைக்கடைப்பிடித்தொ ழுகி வா. அங்குத் தெய்வம் இங்கே தெய்வம், அவர் பெரி யார், இவர் பெரியார் என்று அலையாமல் ஒன்றியிருந்து ஒன்றைப்பற்றி ஒன்றுகி வாழ்.''

சுவாமிகள் தந்த கடிதம்

''அன்புசால் வேலநா னறைகுவ கேண்மதி
என்பு நெக்குருக விறைவற் பணிந்து
அன்னை தந்தையர்க் காம்பணி யாற்றி
முன்பின் பிறந்தார் தம்மைப் பேணி
இன்சொற் புகன்று இழிதொழில் கீழ்ந்து
தன்போ லயலவர் தம்மைப் பேணி
செய்வன செய்து தவிர்ப்பன தவிர்த்து
மெய்மை பேசி மேதினி வாழ்வி
பொய்யென வெண்ணிப் புரைதீர் மனத்தனாய்
வையகம் தன்னில் வாழ்குதி
உய்யா வனமென வுலகினை மதித்தே

தன்னை யறிதல் தலையாலோர் தங்கடமை
என்னப் பெரியோ ரியம்புவரால் - மின்னனைய
பொய்யான வாழ்வைப் புதுமையென வெண்ணுவரோ
கைமேற் கனியாகக் காண்

தெரிந்து வினையாற்றுந் தீரர்களே மண்ணில்
அருந்தவர்க ளென்றுமுனே ராய்ந்தார்- பொருந்துவன
செய்து சிறுதொழில்கள் செய்யா தொழியவிட்டு
உய்வாய்நீ யென்னி லுறைந்து.

சாற்றுமுடல் பொருளு மாவியுந்தந் தோர்கனிந்த
மாற்றமாம் வையம் மதிப்பாரோ - தோற்றமெல்லாம்
தாமே யலவென்று தம்மையறிந் துய்வோருக்
காமாறென் வேலா வறை

இசையும் பொருளே யிரப்போருக் கீந்த
இசைபடவே வாழ்வார்க்கிப் பூமி - திசையறியப்
பூங்கோயி லாகப் பொருந்துமே யாதலினல்
நீங்காம லீந்தே நிலை

அமரர் திரு.க.வேலுப்பிள்ளை (சோமசுந்தரப்புலவரின்தம்பியார் அவர்களின் குறிப்புக்களைத் தழுவி எழுதியது).

★

தெய்வமே யானென தெனுஞ் செருக்கால் மனது
தீயவழி செல்லு தையோ
செய்வதொன் றறிகிலேன் தேவாதி தேவனே
திருவருட் பார்வை சாத்தி
உய்யவழி காட்டுவாய் உன்னையல் லாது துணை
யுலகத்தில் எவருமுண்டோ
வையகம் புகழ்நல்லை வாழும்வடி வேலனே
மயிலேறு தம்பிரானே

— நற்சிந்தனை

7. ஒழிவறநிறைந்த ஒருவர்

சிவயோக சுவாமிகளைக் காணும்பேறு சிறுவயதிலேயே எனக்கு வாய்த்தது. சுவாமி எங்கள் பேரனரான சிதம்பர நாத வைத்தியருடன் உரையாடியிருந்தது இன்றும் நன்கு நினைவிருக்கின்றது. எங்கள் பேரனர் ஞானியர் நட்பை விரும்புபவர். எனது உறவினரான செல்லாச்சியம்மையார் இல்லத்திலும் சுவாமியைத் தரிசித்திருக்கின்றேன். சுவாமி கொழும்புத்துறையிலிருந்து கால்நடையாகவே அம்மையார் இல்லத்திற்கு வந்து செல்வார். எங்கள்வீடு செல்லாச்சியம்மையாரில்லம் என்னும் இரு இடங்களிலும் யான் கண்ணுற் காணுமாறு சுவாமி தாமாகவே எழுந்தருளினர். அறியாப்பருவத்திலேயே சுவாமி தாமாக எழுந்தருளித் தரிசனம் தந்தது பெரும் பாக்கியமேயாம்,

நாவுகச் சுவாமியைத் தரிசிக்கச்சென்றது 1920ஆம் ஆண்டிலாகும். நல்லூரைச்சேர்ந்த வழக்கறிஞர் சோமசுந்தரம் அவர்களோடு சென்றேன். அந்நாட்களில் இளைஞனகிய நான் சீனடி, சிலம்படி விளையாட்டுக்களில் தேர்ச்சி பெற்றிருந்தேன். அதுபற்றி ஒரு பெருமையும் என்னிடம் குடிகொண்டிருந்தது. ஆச்சிரமத்தை அண்டிச் செல்லும் போது வீதியால் வந்துகொண்டிருந்த சுவாமி நடுவீதியிலே என்னைக் குப்புற வீழ்த்திய வண்ணத்தை மறத்தலியலாது. சீனடி சிலம்படிகளில் கைதேர்ந்த ஆசான்களாலும் அத்தகைய கைவண்ணத்தையும் கால்வண்ணத்தையும் காட்டவியலாது, என்னிடம் உள்ள ஒரு வல்லமை எனப்பெருமைப் பட்டிருந்ததொன்றை அவ்வல்லபத்தாலேயே மண்கவ்வச் செய்ததன் சாலம் பின்னட்களில் ஒருவாறு புரியலாயிற்று. விழுந்தெழுந்த என்னைச் சுவாமி ஆச்சிரமத்துள் அழைத்துச் சென்று ஆதரவு நல்கினர். பின்னர் யாழ்ப்பாணம் செல்லும் போதெல்லாம் கொழும்புத்துறை சென்று சுவாமியையும் தரிசித்துவந்தேன். சிலவேளைகளில் ஏசிக் கலைத்து விடுவார். வேறொரு நோக்கமுமற்றுச் சுவாமியைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஒரேயொரு நோக்கத்தோடு சென்ற போதெல்லாம் பரிவோடு ஆதரித்துக்கொள்வார்.

அரசாங்கத்தில் தொழில் புரிந்த காலத்தில் நான் பணியாற்றிய பல இடங்களுக்கும் சுவாமி வருகை புரிந்தார். கண்டி, கம்பளை, கறவானெல்லை ஆகிய இடங்களுக்குச் சுவாமி எழுந்தருளி எம்மோடு உடனுறைந்து உறவு செய்து உய்யக்கொண்டார். எமது சீலியத்தில் சுவாமிக்குப் பணி செய்யும் பாக்கியம் பெற்ற நாட்களே இன்பமான நாட்களாகும்.

பொருந்திய இடங்களில் சுவாமி செல்லப்பரைப் பற்றிக் கூறுவார். செல்லப்ப சுவாமியைப் பற்றிச் சுவாமி கூறும் போது சுவாமியின் வார்த்தைகள் அன்பிற் குழைந்தொழுகும். ஒருநாள் கறவானெல்லையில் அழுது செய்யத் தொடங்கும் பொழுது அன்று செல்லப்பரின் சமாதி நட்சத்திரம் என்று அன்போடு நினைவு கூர்ந்தார். அன்று பங்குனித் திங்கள் அச்சுவினி நட்சத்திரமாகும். செல்லப்பர் சில வேளைகளில் தீக்கைக் குறி வைத்துக் கொண்டுதான் சங்காராச்சாரி எனக் கூறுவாரெனவும், சில வேளைகளில் எவ்வித சின்னமுமற்று ஏகாந்தனாயிருப்பார் எனவும் சுவாமி கூறுவார், செல்லப்பரின் திருமேனி அழகையும் கூறுவார். ஒரு சமயம் தியானவேளையிலிருந்தெழுந்த செல்லாச்சியம்மையார் செல்லப்பரின் திருக்கோலத்தைக் கறுத்தமேனி, வெறித்தபார்வை, மிதந்தபல் என்றவாறு வருணித்துச் சென்றனராம். அதுசரியெனவும் சுவாமி அருளினர்.

சுவாமி தாம் மாவிட்டபுரத்தில் தோன்றியவரெனவும், தமது முன்னோர் சன்னதம் பூதவராயர் கோயிலுக்கு விளக்கு வைத்தவர்களெனவும் கூறினர். அவர் வைகாசி அவிட்ட நட்சத்திரத்தில் தோன்றியதாகவும், அன்று புதன் கிழமை எனவும் மொழிந்தனர். ஆண்டு பற்றி எதுவும் கூறவில்லை. சோதிடக் குறிப்புக்களைக் கொண்டு நுணுகிக்

கணிப்பிட்டதில் அது 1872 ஆம் ஆண்டு எனத்தெரிந்தது. சுவாமிக்குச் சதாசிவம் என்னும் பிள்ளைத் திருநாமம் வழங்கியது. சுவாமியின் தாடையில் ஒரு காய் வளர்ந்தது. அதை வெட்டினால் நல்லதெனப் பலதரம் வேண்டிய போதும் பல ஆண்டுகளின் பின்னரே சுவாமி சம்மதித்தார். வெட்டிய காயைப் பரிசோதனைக்காக அனுப்பிய பொழுது புற்றுநோய் உள்ளதென அறிக்கை வந்தது. காந்தக் கதிர் பிடிப்பதற்காகக் கொழும்பு செல்ல வேண்டுமெனக் கூறினேன். சுவாமியோ அதற்குச் சம்மதியாமல் பருத்தி அடைப்பாரின் எண்ணெய் தடவிப் பாலும், சோறும் பத்தியமாயிருந்தார். நோய் குணமடைந்தது பெரும் நூதனமே சுவாமி ''வெட்டிய காய்க்கு என்ன பெயர் குறித்து அனுப்பினீர்?'' என ஒரு சமயம் வினவியபோது ''சதாசிவம்'' எனப் பதிலளித்தேன். சுவாமி சிரித்து விட்டு 'அதுவும் ஒரு பெயர்தான்' என்றார். கத்தோலிக்கப் பள்ளிக் கூடத்தில் படிக்கும் பொழுது, 'வடலிப்பாதி ஜோன்' எனும் நாமம் வழங்கியதாகத் தெரிந்தது. ''யோகநாதன்'' எனும் நாமம் துறவுத்திருநாமம் போலும். முத்துப் பிள்ளை என்னும் அம்மையாரே சுவாமியை இளமைக் காலத்தில் வளர்த்த வரானவர்- சுவாமியின் தோற்றத்தைப் பெரிதும் ஒத்த அவர் சுவாமியின் மாமியாராவர். அவ்வம்மையாருக்கு வைத்தியம் செய்யும் பேறு எனக்கு வாய்த்தது. அவரின் இறுதிக் கிரியைகளுக்குச் சுவாமி செல்லவில்லை. அஃது சுவாமியின் சுற்றம் துறந்த பண்பு எனத் துணிகின்றேன்.

சுவாமி உடம்பைச் சுத்தமாக வைத்திருப்பார். அவர் நீண்ட நேரம் குளிப்பதில்லை. ஆனால் உடம்பை நன்றாகக் கழுவித் தூய்மையைப் பேணுவார். அவரது உடம்பினின்றும் மெல்லிய நறுநாற்றம் கமழும். சுவாமி காலையில் பால் கலந்த தேநீர் பருகுவார். நண்பகல் வேளையில் சாதம் உண்பர். அவர் அமுது செய்வது புனிதமாய் இருக்கும். சுவை பார்ப்பதில்லை; அவர் சாதம் உண்ணும் முறையைப் பலநாள் அவதானித்துக் கண்டதில் அவர் ஒரு பழக்கத்தினாலே தான் அமுதுசெய்கின்றாரெனவும், அவருக்கு அமுது

செய்யவேண்டியது அவசியமன்று எனவும் நுணுக்கமாகத் தெரிந்து. அவர் அமுது செய்யும் போது ''உண்ணுது உறங்காது இருந்தாய் போற்றி'' என்று மனதில் நினைத்து நிற்பேன். சாயங்காலத்தில் தேநீர் பருகுவார். இரவிலே பசியிருந்தால் இடியப்பம் அல்லது பாண் துண்டும் தேநீரும் உட்கொள்வார். சுவாமி தமது பாதங்களை மற்றவர்கள் கழுவவிடமாட்டார். காலில் நீரூற்றவும் அனுமதிக்க மாட்டார், அமுது செய்த இலையை எடுக்க விடமாட்டார்; தாமே எடுத்துச் சென்று வீசுவார்; படுக்கையில் மெத்தையை விரும்பார். தம்மைச் சுவாமியாகப் பிரித்துச் சேவனை செய்வதையும் விரும்ப மாட்டார், சும்மா சுவாமி பண்ணமல் விடுங்கள் எனக் கூறுவார்.

சிலவேளைகளில் சுவாமியுடன் கூடித் தேயிலைத் தோட்டங்களுக்குச் செல்வோம். சுவாமி இயற்கை எழிலில் ஈடுபட்டு இன்புற்று நிற்பது பார்ப்பதற்கு இரம்மியமாயிருக்கும். நவாலி தம்பையா உபாத்தியாயரும் சுவாமியுடன் சேர்ந்திருந்தால் பாட்டுப் பிறக்கும். ''**பேராதனைத் தோட்டத்திலே கொழுந்தெடுக்கும் பெண்களே**'' எனச் சுவாமி தொடங்குவார். ''**ஆராதனை செய்ய வாருங்களேன்**'' என உபாத்தியாயர் தொடர்வார். நாவலப்பிட்டி நவநாதசித்தர் சமாதியருகிலே சுவாமியும், தம்பையா உபாத்தியாயரும் வனபோசனம் செய்து மகிழ்ந்ததைக் காணும் பாக்கியம் எமக்கு வாய்த்தது. சுவாமி சந்நிதானத்திலே தம்பையா உபாத்தியாயரிருக்கும் போது இல்லமெங்கும் இன்னிசை முழங்கும். இவ்வாறான வேளைகளில் ஆனந்தமே அவரியல்பு என்று எண்ணத் தோன்றும். சிறுவர் மீது தாயினுமினிய அன்பைச் சொரிவார். நான் வைத்தியசாலைக்குச் சென்ற பின் எனது குழந்தை நடேசனுடன் கூடி விளையாடுவார். ஆடுமாடுகளுடன் அன்பாயிருப்பார். கன்றுக்குட்டிகளுடனும் விளையாடுவார்.

சுவாமி சரம்பார்க்கும் கலையை விளக்குவார். தமது அன்பருள் ஒருவரான மேல்மன்ற நீதிபதியாயிருந்த அக்ப

ருக்கு அதுபற்றித் தெரியும் எனக் கூறுவார். ஆனல் அவர் சோதிடம் பார்ப்பதில்லே; தம்மிடம் யாராவது அது போன்றவற்றை வினவினுல் தான் சாத்திரியல்ல என்று கூறுவார். சுவாமியின் கைரேகை துலாம்பரமாக இருப்பதைக் கண்டேன். சுவாமியின் கைரேகையைப் பார்க்கும் விருப்பத்தைத் தெரிவித்த போது மறுத்துவிட்டார். நாளே நடப்பதைச் சிந்தியாது எல்லாம் சிவன்செயல் என்ற தெளிவில் எதனேயும் எண்ணுது வரவரப்பார்த்துக் கொண்டிருப்பவருக்குச் சாத்திரம் முதலாய பலன் கூறும் முறைகள் எதற்குத் தேவையாகும்!

சுவாமி உலக நடையறிந்து ஒழுகுமாறு புத்தி கூறுவார். உலகத்தோடு ஒட்டி ஒழுகாது முரணிநின்ற இடங்களில் ஏசித் திருத்தினர். தலவாக்கொல்லேயைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருடைய புதல்வன் தீராநோய் ஒன்றினுல் பீடிக்கப்பட்டிருந்தான். பல வைத்தியர்களிடம் மருந்து செய்தும் பலன் கிடைக்கவில்லே. இறுதியாக அவ்வர்த்தகர் என்னிடம் வைத்தியம் செய்யும் எண்ணமுடையவராய்ச் சுவாமியிடம் வேண்டினர் போலும். சுவாமி என்னிடம் விடயத்தைக் கூறி அவர்கள் வந்தால் உனது கருத்தைக் கூறு என அருளினர். நான் அவர்களிடம் இன்னநோய் எனவும், எங்கு சென்று வைத்தியம் செய்தாலும் தீராது எனவும், சீக்கிரம் ஆளே முடிக்குமெனவுங் கூறினேன். அவர்கள் நான் வேண்டாவெறுப்பாய் நடந்து கொண்டதாகச் சுவாமியிடம் முறையிட்டனராதல் வேண்டும். சுவாமி எனக்குப் பிழைக்கத தெரியாது என்றும், ஆறுதலான வார்த்தை சொல்லி மருந்து கொடுத்துப் பார்க்க வேண்டும் எனவும் கண்டித்தார். அவர்கள் உண்மை நிலேமையை அறியவிரும்பியதால் அவ்வாறு கூறினேன். அந்நோயாளி மூன்று மாதத்திற் கலமானுர் எனச் சொன்ன என்னேப் பார்த்துச் சுவாமி மீண்டும் ''நீ பிழைக்கப் பழக வேண்டும்'' என்ருர்.

நாம் துயருற்று வாடிய போதெல்லாம் சுவாமியின் ஆதரம் பெருகும் அருள்மொழிகள் எமக்கு ஆறுதல் அளித்

தன. ''நீ ஏன் பயப்படுகிருய்? எல்லாவற்றையும் நடத்தும் ஒருவர் இருக்கிருரல்லவா? அவரிடம் ஒப்படைத்து விட்டுச் சும்மாவிரு. எவரிடமும் பகை வேண்டியதில்லே; பிறர்செய்யும் தீமைகளே மன்னித்து மறந்திரு. உலகப் பரிபாலனம் செய்யும் தெய்வம் எல்லாம் அறியும்; எல்லாம் வல்ல அத் தெய்வத்திலும் நீ பெரியவனே? உன்னல் என்ன முடியும்'' எனும் மொழிகளால் பரபரப்பின்றி அமைதியாயிருக்க அருள் புரிந்தார். யான் வழி தவறி நடக்கும் சந்தர்ப்பங்கள் பல நேரிட்டன. அவ்வாருன சந்தர்ப்பங்களில் எல்லாம் சுவாமியின் அருள் எம்மை நேர்வழிப்படுத்தியது. சுவாமி எமதில்லம் வரும்போதெல்லாம் எமக்கு வியக்கத்தக்க வகையில் வைத்திய சித்தி பெருகியது. அறுவைச்சிகிச்சை, மகப்பேற்று வைத்தியம் யாவும் வெற்றியளித்தன. எமது தந்தையார் சுகமின்றிக் கிடந்தபோதும் சுவாமி வந்து பார்த்தார். சுவாமியின் கருணே பூத்த முகத்தைத் தனது கண்களுக்கு அணித்தாக வைத்துப் பார்க்கும் ஆசை கொண்ட எனது தந்தையாருடைய கைகளின் அணேப்புக்குள் அகப்பட்டு அருளொழுக நோக்கினர். இணுவில் வைத்தியசாலேயில் சுகமின்றியிருந்த எனது சகோதரியைப் பார்க்கச் சென்ற பொழுது மருதனுமடம் வைரவர் கோயில் வாயலில் நின்று ''பயப்படாதே! எல்லாம் சுகம் வரும்'' என அருளி எனக்கு ஆறுதலளித்தார். எனது மைத்துனர் மரணப் படுக்கையிலிருந்த போது நீறுபூசி வழியனுப்பி வைத்தார். அவர் நற்கதி சேர்ந்தார் என்பதில் சற்றும் சந்தேகமில்லே. மருந்தெவற்றிற்கும் மாருத வயிற்று வலியால் உழன்ற எனது நண்பரொருவரிடம் ''பயப்படாதே, சாமானிதனுக்கு வருதல் நிச்சயம்; ஆண்டவனே வேண்டு'' என்று தைரியப்படுத்தினர். சுவாமி எனது உறவினரையும், உற்ருரையும் காத்தருள் செய்த திறத்தை நோக்கும் போது ''மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை ஆழாமே யருள் அரசே போற்றி'' என்று துதிபாடத் தோன்றுகிறது.

அடியார் பலர் சுவாமியின் அருள் பெற்றுய்ந்தனர். சிலர் தாம் ஒன்றும் பெறவில்லேயே என்று மனம் குழம்பினர். கருணே வள்ளலான சுவாமியின் அருட் கொடைக்கு

ஆளாவது எங்கனம்? சுவாமிக்கு அன்பர்க் அன்பரல்லாதார் என்ற பேதமில்லை. அவர், விருப்பு வெறுப்பை வேரறப் பறித்தவர். சுவாமியிடத்துப் பக்தி பூண்டிருந்த பிரபல கதாப்பிரசங்கியாகிய ஸ்ரீமத் சங்கர சுப்பையர் என்பவர் பிளவைப்புண் நோயினால் துன்புற்றார். வெள்ளவத்தை மாணிக்கப் பிள்ளையார் கோயில் மடத்தில் தங்கியிருந்த போது அவர், தம்மை அருண்மலையாகிய சுவாமி வந்து பார்த்துச் சென்றதும் தமது நோய் குணமடைந்ததாக ஆனந்தத்தோடு கூறினார். சுவாமி சங்கரசுப்பையரைப் பார்க்கச் சென்ற சந்தர்ப்பத்தில் நவாலி தம்பையா உபாத்தியாரும் உடன் சென்றனர். சுவாமி ஒரு மாதுளம் பழத்தை வைத்து ஏதோ செய்ததாகத் தம்பையா உபாத்தியார் கூறினார். துரியாதீதப் பொருளான சிவத்தில் இலயித்து நிற்கும் சுவாமி கருதுவதும் செய்வதும் நம்மனோரின் கருத்துக்கும் கண்ணுக்கும் எட்டுமா? சுவாமி சங்கரசுப்பையரின் வருத்தம் சுகமானது பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாது எனக் கூறினார். வந்தது போனது மனத்து வையாத சுவாமி எதனையும் எண்ணிச் செய்வதில்லை. கருணை வள்ளலான சுவாமியின் திருமுன்னிலையில் திருவுளப்படி அருள் சொரிந்தது. சற்பாத்திரரான அன்பர் அவ்வருளமுதை ஏந்திக் கொண்டனர். அல்லாதார் நழுவ விட்டனர். பல தடவைகளிலே சுவாமி எம்மோடு அழுது செய்யும் பாக்கியத்துக்காக நாம் ஏங்கிக் கிடந்த போதும் சுவாமி தம்மை அன்போடு நினைந்து அழுது பாகஞ் செய்த இடங்களுக்குச் சென்று திருவமுது செய்ததை அறிந்திருக்கிறோம். சுவாமி அன்பினீர்ப்புண்டு அழையாமலே தான் செல்வார் என்பதை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் பல நேரிட்டன. அன்பின் அதிசயம் ஆரறிவாரே! திருநெல்வேலிச் சிவன்கோயில் குருக்கள் பாயாசம், வடை என்பவற்றைப் பாகம் செய்து விட்டுச் செல்லப்பரை அன்போடு நினைந்தால் எங்கிருந்தோ செல்லப்பர் சென்று ஏற்றுக் கொள்வாராம். பின்னொரு நாள் இக்குருக்கள் பூசைக்குப் பழமின்றி வருந்திய போது கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்குத் தமது தோட்டத்தில்

பழுத்த நல்லதொரு வாழைப்பழக் குலையுடன் வந்த அன்பரிடம் "இதனைக் கொண்டு போய் திருநெல்வேலிச் சிவன் கோயில் குருக்களிடம் கொடுத்துவா" எனச் சுவாமி அருளினர். செல்லப்ப தேசிகர் குருக்களின் பூசையை உகந்தது போல குருக்களின் தேவையைச் சிவயோகக் குருமணி நிறைவேற்றினர். சுவாமியின் அருட்கொடைக்காலாவது அன்பின் திறத்தைப் பொறுத்ததே. ஒருமையுடன் சுவாமியின் திருவடிகளை நினைக்கின்ற உத்தமர், தாம் வேண்டியதைப் பெற்றனர். இவ்வாறாய் அருளமுதத்துக்கு ஆளான தமிழ், சிங்கள, முஸ்லிம் அன்பர் பலரை நானறிவேன். சுவாமியின் திருவருளுக்குப் பாத்திரரான சிங்கள ஏழை விவசாயியான அன்பரொருவர் தனது சீவியகாலம் வரையும் சிவதொண்டன் இதழை வாங்கிப் பூசிப்பதையும், யாகநாட்களின் போது வாழைக்குலை அனுப்பிவைப்பதையும் நியமமாகக் கொண்டிருந்தார்.

சுவாமி தம்மைச் சோதிக்க வருவோரையும், வேடதாரிகளையும் ஏசிக்கலைத்த போதும் எவரோடும் உட்பகை கொள்வதில்லை. யாழ்ப்பாண வைத்தியசாலையில் நான் பணியாற்றிய காலத்திலே அருகாமையிலிருந்த அரசாங்கக் குடிமனையில் வாழ்ந்தேன். சுவாமி அங்கு எழுந்தருளும் போது திருநெல்வேலிச் சந்தையில் வாங்கிய புதுக்கீரை காய்கறிகளுடன் வருவார். குடிமனைக்கருகிலிருந்த தொழிற்சாலைக் காவலாளி யாரோ சிலரின் சூழ்ச்சிகளுக்குட் பட்டுக் "கீரை தின்னிகள்" என்று எம்மை ஏசினன். இதனைச் சுவாமியிடம் கூறியபோது பெரியதொரு சிரிப்புச் சிரித்துவிட்டு சாந்தமாயிருந்தார்.

உலகிலே பல்வேறு மார்க்கத்தினர் உள்ளனர். அவரெல்லாம் தத்தம் மார்க்கம் சொல்லும் வழிதனிற் செல்லுகின்றனர். சுவாமி எச்சமயத்தோரையும் ஏளனம் செய்யமாட்டார். கண்டியில் தொழில் புரியும் காலத்தில், ஒரு நாள் பற்சோயிலைத் (தலதாமாளிகை) தரிசித்து விட்டு வீடு

சேர்ந்தபொழுது ''புத்தம் சரணம் கச்சாமி'' எனும் சுவாமி யின்குரல்வீட்டினுள் இருந்துஒலித்தது. நான்தந்ததாதுவைப் பார்த்துவந்த விடயத்தைக் கூறினேன். புத்தபகவான் தான் ஒரு மனிதன்; தெய்வமல்லன்; மற்றையோரும் தன்னைப் போன்று வரலாம். என்று கூறினரெனவும், சீலத்தைப் பெரிதும் போற்றினரெனவும், பெரிய மகான் எனவும் சுவாமி அவருக்குப் பெருமதிப்புச் செய்தார். நாகூரிலே சூரியனைப் பார்த்தவண்ணம் தவமிருக்கும் பக்கீர்மாரைப் பற்றியும், அங்கு கொடுக்கும் பெரியகந்தூரி பற்றியும் வியந்துரைப்பார். ''அல்லா கூ'' என்று சொல்லுவார். சிறந்த முஸ்லீமாக வாழ்ந்த நீதியரசர் அக்பர் சுவாமியிடத்து மிகுந்த பக்தி பூண்டிருந்தனர். சுவாமியும் அக்பரை ஓர் சிறந்த அன்பன் எனக் கூறுவார். அக்பர் அவர்கள் சுவாமியைமுதன் முதல் தரிசிக்கச் சென்ற சமயம் ''இப்பொழுது நேரமில்லை'' எனச் சுவாமி கூறிவிட்டார். அக்பர் ஒரு சொலிசிற்றராக உத்தியோகம் பார்ப்பவர் என்பது உணர்த்தப்பட்டபோது சுவாமி ''சொலிசிற்றராயினுமாக, உயர்நீதிமன்ற நீதியரசராயினுமாக; இப்பொழுது நேரமில்லை'' என மீண்டும் கூறினர். அது ஓர் மறக்கருணைமொழி என்பதை இல்லம் சேர்ந்த அக்பர் தான் உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டிருக்கும் கடிதத்தைக் கண்டு உணர்ந்துகொண்டார். சுவாமிகள் அக்பர் அவர்களைப் பார்த்து ''உயர்நீதிமன்ற நீதியரசரே'' என அழைத்த சில மணி நேரத்தினுள்ளே தமது நியமனக் கடிதம் கிடைத்ததைக் குறித்துப் பெரிதும் வியந்தார். அக்பர் யாழ்ப்பாணத்தில் உயர்நீதிமன்ற நீதியரசராயிருந்த பொழுது ஒருநாள் கோட்டைக்குள் அமைந்திருந்த சிறைச்சாலையைப் பார்க்கச் சென்றார். அங்கிருந்த தூக்குமேடையைக் கண்டு பயமும் துக்கமும் அடைந்தார். வீட்டிற்கு வந்த அவர் காய்ச்சலாகப் படுக்கையிற் கிடந்தார். சுவாமி அக்பரின் இல்லத்துக்கு எழுந்தருளி அவரது நெஞ்சிற் கைவைத்துப் ''பயந்து போனையா? ஏன் பயந்தாய்? அது ஒன்றும் செய்யாது; ஆறிவிடும்.'' என ஆறுதலளித்தனர். அக்பர் சுவாமியின் திருமுன்னிலையிலே தனது துணை

வியாருடன் இருந்ததை நான் பல தடவைகளிற் கண்டுள்ளேன். அவர் யாழ்ப்பாணத்திலே கூட்டங்களில் உரையாற்ற வேண்டியேற்பட்ட வேளைகளில் சுவாமியைப் பற்றிச் சிலவசனங்களாதல் சொல்லாமல் விடுவதில்லை. நான் களுத்துறையில் பணியாற்றிய காலத்தில் சுவாமி பக்தர்கள் என்ற முறையில் அவரும், நானும் கூடிக்கதைத்திருப்போம். ''யோகசுவாமியும், கதிர்காமப்பெருமானும் இருக்கும் போது தமிழ் மக்களுக்கு ஒரு குறையும் வராது'', என அவர் கூறுவார்.

சைவாசாரத்தைப் பேணுவதில் சுவாமி மிகுந்த கண்டிப்புடையவராயிருந்தார். சைவக் கோயில்களிலே பூசை, திருவிழா முதலியன நம்பிக்கையோடும், பக்தியோடும், முறைப்படியும் செய்வதனால் உலகிற்கு நன்மையுண்டு எனக் கூறுவார். எடுத்துக் காட்டாகச் சுவாமி ஒரு கதை கூறுவார். யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராக இருந்த டைக் (Dyke) என்பார் ஒரு கோடை காலப் பகுதியில் பூநகரிக்குச் சென்றார். அங்கு நீர்ப்பாசன வசதிகள் இல்லை. ''பாசன வசதியின்றி எவ்வாறு பயிர் செய்கிறீர்கள்?'' என அவர் கேட்டதற்கு அங்கு நின்றோர் கோயிலைச் சுட்டிக் காட்டிப் பிள்ளையாரை வேண்டினால் மழை கிடைக்கும், என்று கூறினர். அவ்வாறான அதிசயத்தைக்காண ஆசை வைத்த டைக் மழை பெய்விக்குமாறு கேட்டார். கோயிற் குருக்கள் நீராடி ஆசாரசீலராக வந்து தேங்காயுடைத்துப் பிரார்த்திக்க வெள்ளம் வரும் வண்ணம் பெருமழை பெய்தது. டைக் அவர்கள் வெள்ளம் வடியும்வரை காத்து மூன்று நாட்கள் அங்கேயே தங்கவேண்டியதாயிற்று. ஆகமங்களிற் கூறப்படும் அபிடேக ஆராதனையைச் சுவாமி பெரிதும் நயந்தார். சுவாமி சமாதியடைவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஒரு சம்பவம் மேல்வருவதாகும்:- அடியவரொருவர் தமது காணிக்கையைச் சுவாமியின் திருவடிகளில் சமர்ப்பித்துக் கும்பிட்டு நின்றார். சுவாமி அந்தக் காணிக்கைப் பொருளை எடுத்து தமது திருமுன்னிலையில

மர்ந்திருந்த தகைசான்ற அன்பரொருவரிடம் கொடுத்து ''இதனைக் கொண்டு சென்று நல்லூரானுக்கு அபிடேகம் செய்யுங்கள்'' என அருளினர். கோயில்களிலும், இல்லங்களிலும் கந்தபுராணத்தை ஒழுங்காகப் படித்து வருமாறு கூறுவர். சமாதி அடைவதற்குச் சிறிது காலத்துக்கு முன்னர் தமது அன்பர் ஒருவரின் இல்லத்தில் கந்தபுராண மார்க்கண்டேய படலத்தைப் படிப்பதற்கு ஒழுங்கு செய்தனர். அப்புராண படனத்திலே நவாலி தம்பையா உபாத்தியாயர் பயன் சொன்னர். சுவாமியும் இடையிடையே எழுந்தருளி ஊக்கப்படுத்திவந்தார். உயிர்ப்பலியைச் சுவாமி விரும்புவதில்லை. எங்கள் ஊரிலே வயல்களின் நடுவில் பழமையான ஒரு ஐயனார் கோயில் உண்டு. அங்கே ஆண்டு தோறும் மக்கள் பொங்கல் வேள்வியுடன் பெருவிழா எடுப்பர். வேள்வியில் ஆட்டுக்கடாக்களும், கோழிச்சேவல்களும் பலியிடப்படும். ஒரு நாள் சுன்னாகம் சென்று வந்த சுவாமி என்னை நோக்கி ''இன்று உனது ஊரில் அநேக சவங்களைப் பார்த்தேன்,'' என்று ஐயனார் கோயிலில் வெட்டப்பட்ட ஆடுகளையும், சேவல்களையும் குறித்துச் சொன்னர். அவ்வுயிர்கள் மீது கொண்ட சுவாமியின் இரக்கம் ஐயனார் கோயிலில் பலியிடும் வழக்கத்தை நிறுத்துமாறு செய்தது. முன்னர் பொதுமக்கள் திரண்டெழுந்த போதும் பலியை நிறுத்தச் சம்மதியாத கோயில் முதலிகள் பின்னர் தாமாகவே அவ்வழக்கத்தை நிறுத்தி விட்டனர்.

சுவாமி சமயாசாரத்தை ஒழுங்குமுறையாகப் பேணும் குறிப்பினராயினும், அவர் ஒரு சமயாதீதராவார். ஒரு நாள் சுவாமியின் திருமுன்னிலையிலிருக்கும் பொழுது மும்மூர்த்திகளுள்ளும் முதன்மையானவர் யார் எனும் வினா எனது உள்ளத்தில் தோன்றியது. அப்பொழுது சுவாமி கம்பராமாயணத்துக் கடவுள் வாழ்த்துப்பாவைப் பாடினர்.

''உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைநி றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே''

இப்பாடலைப் பாடி முடிந்ததும் கடவுள் ஒருவரேயெனவும் செயலின் நிமித்தம் வெவ்வேறு பெயர்கள் கற்பிக்கப்படுகின்றனவெனவும் விளக்கினர். ''ஒருவனே யொரு மூவருமானான்'' என்பதே சுவாமியின் கொள்கை என்பது தெளிவாகத் தெரிந்தது. சுவாமி சமயங் கடந்து நின்றது போலவே தத்துவப் பூசல்களுள் அகப்படாத தத்துவாதீதனாகவும் திகழ்ந்தனர். ஒரு நாள் கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்குச் செல்லும் பொழுது வேதாந்த சித்தாந்த வாதப்போர்களை எண்ணமிட்டவாறே சென்றேன். ஆச்சிரம முற்றத்தில் நின்ற சுவாமி என்னைக் கண்டதும் ''வேதாந்த சித்தாந்த சமரசனன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணம் நாமே'' என்று பாடிக் கொண்டு நின்றனர். தாயுமான சுவாமிகளின் இவ்வாசகத்தைப் பாடும் பொழுது தமது கையை நெஞ்சிற் பதித்து அது ஓர் உறுதி மொழி என உணர்த்தினர்.

சிற்சில சமயங்களில் சுவாமியின் தேசகாலம் யாவும் கடந்த விண்போன்ற வியாபகம் சுடர்விட்டொளிர்ந்தது. 1946 ஆம் ஆண்டு ஆடிமாதத் திருவிழாக் காண்பதற்கெனக் கதிர்காம யாத்திரை செய்ய எண்ணமிட்டேன். என் புதல்வனையும் அழைத்துச்செல்லும் விருப்பம் நிறைந்திருந்தது. கதிர்காம யாத்திரை புறப்படுவதற்கு முன் சுவாமியைத் தரிசிப்பதற்காக ஆச்சிரமம் சென்றேம். சுவாமி எனது புதல்வனைப் பார்த்து ''நீ நொண்டிக் கொண்டு தான் வருவாய்'' எனக் கூறினர். என்னைப் பார்த்து ''நீ அழுது கொண்டு தான் வருவாய்'' எனக் கூறினர். யாத்திரையை நிறுத்தி விடலாமோ என்ற எண்ணம் எழுந்தது. சுவாமி அதற்கும் அனுமதிக்கவில்லை. திரு. நவரத்தினம் அவர்களது மோட்டார் வண்டியிற் கதிர்காமஞ் சென்றோம். தீர்த்தத் திருவிழாவிற்கு முதல் நாளன்று கதிரைமலை ஏறச் சென்ற எனது புதல்வன் நொண்டிக் கொண்டு வந்தான். யாத்திரையை நிறைவு செய்யச் சுவாமியின் ஆச்சிரமத்துக்குச் சென்ற போது சுவாமி சொல்லிய வண்ணமே அழுது கொண்டும் நொண்டிக் கொண்டும் செல்ல

வேண்டியதாயிற்று. ஒரு சமயம் சுவாமி பேராதனையில் வேலுப்பிள்ளையவர்களது குடிமனையிலிருக்கும் பொழுது மலேரியாக் காய்ச்சல் பீடித்தது. அந்நோய்க்கு மருந்து செய்யும் பாக்கியம் எனச்கு வாய்த்தது. நோய் குணமடைந்தும், உடம்பிலுள்ள மலேரியாக் கிருமிகளை முற்றாய் ஒழிப்பதற்குத் தகுந்த நடைமருந்து ஒன்று உட்கொள்ள வேண்டுமெனப்பட்டது. தக்க நடைமருந்தைத் தெரிவு செய்வதில் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாமலிருந்தது. அப்பொழுது சுவாமி 'குயினினோப்ளாசம்' (Quninoplasam) எனும் மருந்து நல்லதெனக் கூறினர். அப்புதிய மருந்துபற்றி நான் அறிந்திருக்கவில்லை. இரண்டொரு நாட்களுக்கு முன்னரே அம்மருந்து மருந்துக்களஞ்சியத்துக்குப் புதிதாக வந்திருந்தது. வைத்திய நிபுணனை எனக்குத் தெரியாத அம்மருந்து சுவாமிக்குத் தெரிந்திருப்பதில் அதிசயமெதுவுமில்லை. அவர் வைத்தியநாதனுவார். இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் தாமே அப்போரை நடத்துவதாகச் சுவாமி சிலவேளைகளில் மொழிந்தார். தாம் சிலுவை யுத்தத்தின் போது போரிட்டதாகவும் கூறுவார். நாம் இச்சொற்களின் பொருளை எவ்வாறுணர்வது! ஆனால் அனைத்திலும் அவற்றின் வாழ்முதற் பொருளாய்க் கலந்து நிற்கும் ''அத்வைதாமிர்தநிலை'' சுவாமியிடம் அமைந்திருந்ததற்கான குறிப்புக்கள் தெளிவாய்த் தெரிந்தன. எமது வீட்டில் சிறுவர்கள் சுகவீனமுற்றிருந்த போதெல்லாம் சுவாமியிடமும் அவைபோன்ற சுகவீனக் குறிப்புக்கள் தெரிந்தன. சுவாமி மற்றையோர் குணமடையும் பொருட்டுத் தாமே மருந்தருந்தியதைப் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிந்தது. திரௌபதாதேவி அதிதியாய் வந்த துருவாச முனிவரை உபசரிக்க முடியாத நிலையில் கிருஷ்ண பகவானை நினைந்த போது, கிருஷ்ணபகவான் எழுந்தருளி ஒரு பருக்கையை உண்டு அதிதியின் வயிற்றை நிறைவித்த கதை பாரதத்தில் உண்டு. சுவாமியிடம் தன்னிடத்தில் எல்லாரையும் எல்லாரிடத்தில், தன்னையும் காணும் இந்நிலை அமைந்திருந்தது. அவரைப் பேதங்கள் எதுவும் பே

திக்கவில்லை. அவர் ''நமது அன்னை பார்வதிதேவி, தந்தை பரமேஸ்வரன், நாம் அனைவரும் உடன் பிறந்தோர். எமது குடும்பம் தேவர், அசுரர், மனிதர் மற்றும் அண்டசராசரம் அனைத்தையும் உள்ளடக்கியது. திரிலோகமும் எமது சொந்த நாடு'' என்று இடையிடையே கூறுவார். அவர் ஒன்றில் ஒன்றியிருந்தார்.

சுவாமி பங்குனி ஆயிலிய நட்சத்திரமும், ஏகாதசியும் கூடிய நாளில் மகாசமாதியடைந்தார். சோதிடக் கணிப்பின் படி அது சூரியன் வடவரைக் கோளத்தில் சஞ்சரிக்கத் தொடங்கும் உத்தராயணகால ஆரம்பநாளாகும். பீஷ்மாச்சாரியாரும் தமது உடலினைத் துறப்பதற்கு இத்தகைய உத்தராயண காலத்தையே எதிர்பார்த்திருந்ததாகப் பாரதம் கூறும் அன்றியும் அந்நன்னாள் சுவாமி திருவடி பூசை கொண்டாடி வந்த நாளாகவும் இருந்தது. சுவாமி தமது தேகக் கோலத்தின் தேவை முடிந்ததும் தக்க சமயத்தில் தாமாகவே அத்தேகத்தைத் துறந்து தமது நிசசொரூபத்தில் நிலைத்தனர்.

சுவாமி உலகத்தவர் போன்று இயற்கையோடு அளவளாவி வாழ்ந்தவர். அவர் சுவாமி பண்ணுதவராய் வாழ்ந்தார். ஆனால் அவர் நிலைத்து நின்ற இடமோ அந்தமும் ஆதியும் அகன்ற ஞானப் பெருவெளியாயிருந்தது. அவர் இயமநியமங்களில் எள்ளளவும் பிசகாத சைவாசாரசீலராகத் தோன்றினர். ஆனால் சகல சமயத்துக்கும் சம்மதம் கொடுப்பவராகவும், சமயம் யாவும் கடந்த சமயாதீத நிலையிலே பூண்டு கிடப்பவராகவும் இருந்தார். அவர் தத்துவ ஞானியாகவும், தத்துவம் யாவும் கடந்து சுத்த பரிபூரணத்தில் சுகிப்பவராகவும் அமைந்தார். இவ்வாறான இயல்புகளை நோக்கும்போது அவர் பாடிய

ஆதியு மந்தமு மில்லான் -தம்பி
ஆதியு மந்தமு முள்ளான்
சாதி சமயங்க ளில்லான் - தம்பி

சாதி சமயங்க ளுள்ளான்
ஓதி யுணர முடியான் - தம்பி
ஓதி யுணரும் வடிவான்
நீதி குருபர னுனன் - தம்பி
நீர்நிலந் தீகால் வானமு மானுன்
சந்திர சூரிய ராணுன் - தம்பி
தாரா கணங்களு மானுன்
மந்திர தந்திர மானுன் - தம்பி
மருந்து மருந்து மவர்களு மானுன்
இந்திர ராதியோ ராணுன் - தம்பி
எல்லா வுலகமும் தானே யானுன்
இந்த வுயிருட லானுன் - தம்பி
இருக்கு முதலிய வேதங்க ளானுன்
பந்தமும் வீடும் படைப்பான் - தம்பி
பந்தமும் வீடுந் துடைப்பான்
அந்தியுஞ் சந்தியு மிதனைத் - தம்பி
ஆரா தனைசெய் தறிவாய் சிவனை.

எனும் பாடலுக்குரிய இலக்கியம் அவரே யெனத்தோன்று கின்றது. அவர் அடிமுடியெங்கும் செறிந்து அப்பாலுக் கப்பாலும் உள்ள ஒழிவற நிறைந்த ஒண்பொருள்.

அமரர். வைத்திய கலாநிதி ஞானமுதன் அவர்கள்
(சுன்னாகம்)

★

ஆதியும் அந்தமும் இல்லா ஒருவன்
ஆதியும் அந்தமு மாய்வரு காரணம்
ஆதிதன் அருள்கொண் டறிவதே யன்றி
ஓதி யறிந்தவர் ஒருவரும் இலரே.

- நற்சிந்தனை

8 முழுதுமாய் நின்ற முதல்வன்

எனது தந்தையார் சுவாமியிடத்துப் பக்தியுண்ட ஒரு சிறந்த அடியவராக இருந்தார். தந்தையாரைப் போலவே எனது மூத்த தமையனரும் சுவாமியினது ஒரு சீரடியாராக இருந்து வருகிறார். மேலும் எனது குடும்பத்தவர் பலரும் சுவாமியின் மெய்யன்பராயுள்ளனர். யான் சிறுவனாயிருக் கும் பொழுது தந்தையாரது கையைப் பிடித்துக்கொண்டு கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்குச் சென்று வந்திருக்கி றேன். வைத்திய அதிகாரியாகப் பணிபுரியத் தொடங்கிய காலந்தொட்டு, கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்கு ஒழுங் காகச்சென்று சுவாமியைத் தரிசித்து வரும் ஓரடியவனு மானேன். சுவாமியிடத்துக் கொத்தடிமை பூண்ட எனது குடும்பத்தவர்களது அனுபவங்களும், எனது சொந்த அனு பவமும், மற்றும் எனக்கு நன்றாகத் தெரிந்த சுவாமியினது அடியவர் சிலரது அனுபவங்களும் சுவாமியின் சீர்மைகள் பலவற்றை என் மனத்தில் நன்றாகப் பதிய வைத்துள்ளன. அச்சீர்மைகள் பலவற்றுள்ளும் சுவாமி இருந்தவிடத்திலி ருந்து கொண்டே எல்லாவற்றையும் பார்ப்பதுடன் எல் லாவற்றையும் இயக்கும் சூக்குமப் பொருளில் பொருந்தி யுமுள்ளார் எனும் அம்சம் எடுப்புடன் தோன்றுகிறது.

எனது தமையனார் 1938 ஆம் ஆண்டிலும் 1939 ஆம் ஆண்டின் முற்கூற்றிலும் உயர்கல்வியின் பொருட்டு இங் கிலாந்தில் தங்கியிருந்தார். அக்காலத்தில் மேற்கு நாடுக ளிலே இரண்டாவது உலகப் பெரும்போர் ஆரம்பமாகியி ருந்தது. ஜெர்மன் நாட்டுக் ஹிட்லரின் நடவடிக்கைகள் நேச நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாய் அமைந்தன. இங்கி லாந்தின் தொழில் மையமாக விளங்கிய நகரங்கள் ஹிட் லரின் தாக்குதலுக்கு இலக்காகின. ஆதலால் இங்கிலாந் தில் தங்கியிருந்த எனது தமையனாரைக் குறித்துத் தந்தை யார் மிகுந்த கவலை கொண்டிருந்தார். இவ்வாறான கவ லையுடன் அவரோர் நாள் சுவாமியைத் தரிசிக்கச் சென்றார்-

சுவாமி தந்தையாரைப் பார்த்து 'நீ ஒன்றுக்கும் பயப்படாதே' எனக் கூறினர். தந்தையார் பத்திரிகைகள் பறை சாற்றிய பேராபத்துப் பற்றியே பயந்திருந்தார். தந்தையார் நினைத்துப் பாராத வேறு சில ஆபத்துக்கள் எனது தமையனரை எதிர் நோக்கியிருந்தன. அவ்வாபத்துக்கள் எல்லாவற்றிலிருந்தும் தமையனரைப் பாதுகாக்கும் அபயமொழியாகவே சுவாமியின் அருள் மொழி அமைந்தது. ஒரு சமயம் எனது தமையனர் தங்கியிருந்த அறையின் வெப்பவுலை வெடித்துப் புகை எழலாயிற்று. திடீரென்று நிகழ்ந்த இச்செயலைக் கண்டு தமையனர் செய்வதொன்று மறியாது திகைத்துப் போயிருந்தார். செயலற்றிருந்த அவர் கிட்டத் தட்ட நினைவிழக்கும் நிலையை அடைந்திருந்தார். அப்பொழுது 'தம்பி! உடையடா யன்னலை' எனும் சுவாமியின் சத்தம் கேட்டது. மிகத்தெளிவாக ஒலித்த சுவாமியின் குரல் தமையனருக்குப் புத்துயிரளித்தது. அவர் யன்னலை உடைத்து வெளியேறித் தமக்கு நேர்ந்த ஆபத்தினின்றும் தப்பினர். அடுத்தநாள் உதயமான போது கொழும்புத் துறை ஆச்சிரமத்திலே சுவாமியைத் தரிசிக்கச் சென்ற தந்தையாரைப் பார்த்துச் சுவாமி ''நான் உன் மகனைப் பார்த்தேன்'' எனக் கூறினர்.

தமையனர் பட்டயக்கணக்கராகத் தேர்ச்சி பெற்று இலங்கை திரும்பினர். அவர் இலங்கை அரசாங்கத்தின் வர்த்தகத் திணைக்களம் விளம்பரப்படுத்தியிருந்த கணக்கியலாய்வாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்தார். அப்பதவிக்குத் தமையனருடன் மற்றுமிருவரும் விண்ணப்பித்திருந்தனர். அவ்விருவருள் ஒருவர் கொழும்பு நகரில் வாழ்ந்த செல்வாக்கு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். மேனிலைப் பதவிகளுக்கு நியமனம் செய்யும் விடயத்தில் குடும்பப் பின்னணியைக் கவனத்திற் கொள்ளும் அக்காலத்தில், அந்தஸ்துமிக்க குடும்பத்தவரான அந்தக் கொழும்பு நகரத்தவரே தெரிவாவர் என்பதே பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. தெரிவு நடைபெறுவதற்குச் சில வாரங்களுக்கு முன்

கொழும்புத்துறைப் பிள்ளையார் கோயிலில் ஒரு பூசைவழிபாடு நிகழ்ந்தது, அவ்வழிபாட்டின் நிறைவங்கமாக நிகழ்ந்த மாகேசுர பூசையின்போது சுவாமியும் பந்தியில் அமர்ந்திருந்தார். தமையனர் அன்னம் பரிமாறுவோரில் ஒருவராக நின்றனர். அவர் சுவாமிக்கு நிவேதனம் செய்வதற்காகக் குனிந்தபோது சுவாமி அவரது கையைப் பிடித்தவாறு ''இதோ! இவர்தான் எனது விண்ணப்பதாரி'' என அருளினர். தெரிவு வெளியானபோது குடும்ப அந்தஸ்துமிக்க விண்ணப்பதாரர் ஆச்சரியப்பட்டு நிற்குமாறு சுவாமியின் விண்ணப்பதாரரான எமது தமையனரே தெரிவானர்.

1944ஆம் ஆண்டு முற்கூறில் ஒருநாள் எனது தந்தையார் சுவாமியுடன்கூடி யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதத்தில் வந்துகொண்டிருந்தார். அன்று சுவாமி தந்தையாரைப் பார்த்துக் ''குமாரசுவாமி, நான் உனக்கு விடுதலை கொடுக்கப்போகிறேன்'' எனக்கூறினர். அந்நாட்களிலே தந்தையாருக்குக் குடும்பப் பொறுப்பின் சுமை மிகுதியாயிருந்தது. ஆதலால் அவர் சுவாமியின் வாக்குக்குத் தமையனர் குடும்பபாரத்தைப் பொறுப்பேற்றுத் தமக்கு ஆறுதலளிப்பார் எனப் பொருள்கொண்டார். ஆனால் எல்லாச் சுமைகளுக்கும் காரணமான பிறவிச் சுழலினின்றும் விடுபட்டு மௌனமாயிருந்து இளைப்பாறும் இயற்கையை எய்துவதே சுவாமியின் திருவருட் குறிப்பாயிருந்தது போலும்! அவ்வாண்டின் இறுதியில் தந்தையார் காலமடைந்தார்.

யான் வைத்திய மனையில் படுக்கையாயிருந்த தந்தையாரின் பக்கத்தில் நின்ற சமயமொன்றில் அரை நினைவிலிருந்த தந்தையாரின் வாயிலிருந்து மேல்வரும் வார்த்தைகள் வெளியாயின. ''சுவாமி சொல்கிறார், பெட்டையள் 2nd Class எடுக்கிறார்கள். உன் மகன் என்ன செய்யப் போகிறான்?'' சுமார் பத்து நாட்களின் பின் வெளியான மருத்துவப் பரீட்சை முடிவில் ஒரு பெண்பிள்ளை இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்திருப்பது தெரிந்தது. யான்

அடுத்த ஆண்டு நிகழ்ந்த மருத்துவ இறுதித்தேர்வுக்குத் தோற்றினேன். அத்தேர்வில் என்னால் நூன சித்தியே அடைய முடிந்தது.

யான் 1945 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் நியமனம் பெற்றேன். எனது உத்தியோகப் பணியைத் தொடங்கிய நாளில் சாலைப் பொழுதிலே ஆச்சிரமஞ் சென்று சுவாமியைத் தரிசித்தேன். அன்றிலிருந்து பொருந்திய போதெல்லாம் சுவாமியைத் தரிசித்து வரும் நியமமுடையவனானேன். யான் சுவாமியைத் தரிசிக்கச் செல்லும் போதெல்லாம் வேறொரு நினைவுமில்லாமல் வெளியாயிருக்கும் உள்ளத்துடன் சென்றேன். வேதனையான செய்தியென்ன வெனில் ஆச்சிரமத்துக்குச் செல்லும் போது எவ்வாறு வேறொரு நினைவுமின்றிச் சென்றேனோ அவ்வாறே சுவாமியைத் தரிசித்து மீளும் போதும் சுவாமி நினைவினால் நிறைந்தவனாகாது வெறுமையனாகவே வெளியில் வந்தேன். அண்மைக் காலம் வரை சுவாமி நினைவுகளை இரை மீட்டுத் தெளியும் பழக்கம் என்னிடம் பொருந்தவில்லையாகையால் சுவாமி அருளிய ஆழநீளம் காணவரிய வாசகங்களின் பொருளையும், அருட்செயல்களின் மகிமையையும் உள்ளவாறே உணர முடியாதவனானேன். சாலையற்று ஆறுதலாயிருக்கும் இந்நாட்களிலே அவ்வாசகங்களினதும், அருட்செயல்களதும் பொருள் ஒருவாறு தெளிவாகிறது; சுவாமி விதைத்த வித்து அவம் போகாமல் பல்லாண்டுகளின் பின் முளைத்துப் பலன் செய்கின்றது.

யான் வைத்தியசாலையில் பணியாற்றத் தொடங்கிய சில மாதங்களின் பின் காலி வைத்தியமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டேன். காலிக்குப் புறப்படுவதற்கு முன் சுவாமியைத் தரிசித்து இச்செய்தியைக் கூறினேன். ''அப்படியானால் கொழும்புக்குப் போய் அங்கிருந்து காரில் போகலாமோ'' எனக் கூறினார். இரண்டாவது உலக மகாயுத்த காலத்தையொட்டிய அந்நாட்களில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவியது. பங்கீட்டுப் புத்தகத்துக்குச் சிறிதளவு

'பெற்றோலே' விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆதலால் காலி நகருக்குக் காரில் செல்வது பற்றிச் சுவாமி கூறியதைப் பொருட்படுத்தாமலிருந்தேன். யான் கொழும்புக்குச் சென்றதும் அங்கிருந்த எனது மாமனார் இல்லத்துக்குச் சென்றேன். மாமனார் அன்றிரவைத் தமது இல்லத்திற் கழிக்கும் படியும் அடுத்த நாட்காலை தமது காரிலே செல்லலாம் எனவும் கூறினர். சுவாமி அருளியவாறே காலி வைத்தியமனைக்குக் காரிற் சென்றேன்.

காலியிற் பணிபுரியத் தொடங்கிய சில நாட்களுள் கொலை வழக்கொன்றில் வைத்திய சாட்சியம் அளிப்பதற்காக யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு வரவேண்டியிருந்தது. யாழ்ப்பாணம் வந்த பொழுது வாய்ப்பு நேரிட்ட போதெல்லாம் கொழும்புத்துறை ஆச்சிரமஞ் சென்று சுவாமியைத் தரிசித்து வந்தேன். அவ்வாறு தரிசித்த ஒரு சமயம் சுவாமி என்னைப் பார்த்து 'விடுகாலி' எனக் கூறினர். அச்சொல் என் உள்ளத்தை உறுத்தியது. சுவாமி என்னை ஓர் ஊதாரியென ஏசினரே என்று மனம் நொந்தேன்; சிறிது நேரத்தின் பின் வந்த அலுவல் சம்பந்தமாய் பதிவேட்டிலிருந்து தக வல்கள் பெறும் பொருட்டு வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கு சுவாமியின் பழைய அடியார்களுள் ஒருவரான சத்திர சிகிச்சை நிபுணர் இராமனாதன் அவர்களைச் சந்திக்க நேரிட்டது. ''தம்பி! சுவாமியைப் பார்க்கப் போனீயோ?'' எனும் வழக்கமான வினவை அவர் கேட்டார். நான் எனது மனக்குறையை எடுத்துக் கூறினேன். அவர் உரத்துச் சிரித்தவாறே ''எட மடப் பொடியா! அது உன்னைக் காலிநகரை எல்லோ விடச் சொன்னது'' எனக் கூறினர். சில நாட்களின் பின் காலி வைத்தியசாலையிலிருந்து இடமாற்றம் கிடைத்தது. சுவாமியினது சிலேடைப் பேச்சு நினைக்க நினைக்க இன்பந்தேக்கும் மறை மொழியாயிற்று.

சுவாமி அன்பர்கள் சிலருடன் உரையாடியிருந்த ஒரு சமயத்திலே ஒரன்பர் எனது மைத்துனர் இருதயவியலில் நிபுணத்துவப் படிப்பை மேற்கொண்டு இங்கிலாந்துக்குச் செல்லும் விடயத்தைக் கூறினர். சுவாமி அதனைக் கேட்

டிருந்து விட்டு என்னைச் சுட்டியவாறு எனக்கருகில் இருந்தவரைப் பார்த்து ''இவரை அரசாங்கம் அனுப்புமாக்கும்'' என அருளினர். சிறிது காலத்தில் யான் அரசாங்கப் புலமைப் பரிசில் பெற்று அதே படிப்பினை மேற்கொண்டு இங்கிலாந்துக்குச் சென்றேன்.

யான் 1946 ஆம் ஆண்டு திருமணம் செய்தேன். 1950 ஆம் ஆண்டளவில் எனக்கு இரு குழந்தைகள் இருந்தனர். அவ்வாண்டிலோர் நாள் சுவாமி என்னை நோக்கி 'நித்தி! உனக்கு நான்கு குழந்தைகளோ' எனக் கேட்டார். நான் 'இல்லை சுவாமி! இரு குழந்தைகள்' எனக் கூறினேன். அன்று தொட்டு சுவாமியைத் தரிசித்து நின்ற பல சந்தர்ப்பங்களில் சுவாமி அதே வினவைக் கேட்டு வந்தார். யானும் சொன்ன பதிலையே சொல்லி வந்தேன். 1953 ஆம் ஆண்டளவில் எனக்கு மூன்றுவது குழந்தை கிடைத்தது. அப்பொழுதும் சுவாமி பழகிப்போன அதே வினவைக் கேட்டார். யான் எனது பதிலை மாற்றி மூன்று குழந்தைகள் எனக் கூறினேன். சிறிது காலத்தில் எனது மனைவியார் பெரும் நோய்வாய்ப்பட்டார். அவருச்குச் சிகிச்சை அளித்த மகப்பேற்று வைத்திய நிபுணர் நோயைக் குணமாக்கினர். ஆனால் மனைவியார் இனிக் கருத்தரித்தல் இயலாது எனக் கூறினர். வைத்திய நிபுணரின் வார்த்தையைப்பொய்ப்பித்துக் கொண்டு 1963 ஆம் ஆண்டு எனது நான்காவது குழந்தை பிறந்தது, சுவாமி வாக்கே மெய்யாயிற்று, அதன்பின்னர் பத்தாண்டுகளுக்கு மேலாகக் கேட்டுக் கேட்டுப் பழகிப் போன அவ்வினவினைச் சுவாமி ஒரு போதும் கேட்டதில்லை. எனது மூத்த மகள் மூன்று வயதுக் குழந்தையாயிருக்கும் போது சுவாமியிடம் தூக்கிச் சென்றேன். சுவாமி அக் குழந்தையிடம் அழகிய பூக்களை வழங்கினர். இனிப்பு வழங்கி மகிழ்வித்தார். பின்னர் அந்நாட்களில் பிரபலம் பெற்று விளங்கிய ஓர் கணக்கியலாய்வாளரின் பெயரைக்கூறி அவரைப் போன்று எனது மகளும் பிரகாசிப்பாள் எனக் கூறினர். எனது மகள் புகழ் பெற்ற

பட்டயக் கணக்கறிஞராகத் திகழும் இந்நாட்களில் பல ஆண்டுகளாக மறந்து போயிருந்த சுவாமி வாக்கு நினைவில் தோன்றி மகிழ்ச்சியளிக்கின்றது. ''அந்த வாக்கும் பொய்த்துப் போமோ''? எனது மூத்த மகனையும் குழந்தைப் பருவத்தினனாக இருக்கும் போது சுவாமியிடம் கூட்டிச் சென்றேன். சுவாமி குழந்தையைப் பார்த்து அவர் நன்றாக விளையாடுவார் எனக் கூறினர். இப்பொழுது நாற்பதாவது வயதைத் தாண்டிவிட்ட எனது மூத்த மகன் சிறந்த கிரிக்கட் ஆட்டக்காரராக உள்ளனர். இவர் பருவகாலத்தில் கிரிக்கட் ஆட்டத்திலும், ஆண்டுமுழுதும் 'ஸ்கோப்' (ஐவர் சேர்ந்து விளையாடும் ஒரு வகை மென்பந்து விளையாட்டு) எனப்படும் உள்ளக விளையாட்டிலும் ஈடுபடுபவராய் உள்ளார்.

எனது மாமனாருக்கு இரத்தினபுரியில் ஒரு தோட்டம் இருந்தது. அவர் அத்தோட்டத்தில் பழமரங்கள் மாத்திரம் பயிர் செய்திருந்தார். அப்பழமரங்களைக் காட்டுப் பன்றி அழித்து வந்தது. ஒரு நாள் சுவாமியின் திருமுன்னிலையிலிருந்த மாமனார் இப்பன்றித் தொல்லைபற்றிக் கூறினர். மாமனார் கூறியதைக் கேட்டுவிட்டு ''ஏன் வேலுப்பிள்ளை! போ என்று சொன்னால் பன்றி போய்விடும்'' எனச் சுவாமி அருளினர். அன்றிலிருந்து பழத்தோட்டத்தினுள் பன்றிகள் வருவதில்லை. சுவாமியினது நிறைமொழி மந்திரமாயிற்று.

சுவாமியின் அடியாரான ஒரு தம்பதியர் திருமணம் ஆகிப் பத்து வருடம் சென்றும் குழந்தைப் பேறில்லாதவராயிருந்தனர் அத்தம்பதியர் ஒரு சிவராத்திரி நாளில் சுவாமியின் திருமுன்னிலையிலமர்ந்து விரதமனுட்டித்துக் கொண்டிருந்தனர். சுவாமி தம் முன்னிலையிலிருந்த தாயாரைப் பார்த்து ஓர் ஆண்பாற் பெயரை உச்சரித்தார். ஓராண்டுக் காலத்தில் அத்தாயார் ஓர் ஆண்குழந்தையை பெற்றெடுத்தார். அக்குழந்தைக்கு சுவாமி திருவாய் மலர்ந்த நாமத்தைச் சூட்டி மகிழ்ந்தனர்.

புகையிரதத் திணைக்களத்தில் பணிபுரிந்த அன்பரொருவரை யான் நன்றாக அறிவேன். அவர் அப்புத்தளையில் பணியாற்றிய காலத்தில் ஒரு நாள் சுவாமி அவ்வன்பரின் இல்லத்திற்கு எழுந்தருளினார். சுவாமியின் வருகையை அறிந்திருந்த மற்றும் சில அன்பர்களும் அங்கு குழுமியிருந்தனர். அவ்வன்பரெல்லாம் குளிர் மிகுதியாயிருந்த அம்முன்னிரவுப் போதில் கம்பளிப் போர்வையோடு இருந்தனர். சுவாமி தம் மேலாடையால் நன்றாகப் போர்ப்பதும் செய்யாது தோளிற் போட்ட வண்ணம் வந்து ஆசனத்தில் அமர்ந்தார். இல்லத்தலைவியார் உள்ளே சென்று ஒரு கம்பளிச் சட்டையும், போர்வையும் கொண்டு வந்தார். சுவாமி அவ்வம்மையாரைப் பார்த்துச் சிரித்தவாறு ''எனக்கு வியர்க்கிறது'' எனக் கூறி நெற்றியிலிருந்த வியர்வையை வழித்துக் கொட்டினார். இக்காட்சியை மனத்திரையில் காணும் போதெல்லாம் ''காயத்தையும் என்றன் கைக்குள் வைத்தேனே'' எனும் சுவாமியின் பாடல் வரியையும் ஒப்பு நோக்கி மகிழும் பாக்கியம் இப்பொழுது வாய்த்திருக்கிறது. இவ்வடியவர் பொல்காவலைப் புகையிரத நிலையத்தில் பணி புரிந்த காலத்தில் புகையிரதத் திணைக்களக் குடிமனையில் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் அக்குடிமனைக்கு எழுந்தருளிய சுவாமி ''இன்று பலாக்காய் சாப்பிட ஆசையாயிருக்கிறது'' எனக் கூறினர். அவ்வடியார் தமது சிற்றாழியர் ஒருவரை அழைத்துப் பலாக்காய் வாங்கி வருமாறு அனுப்பினர். அச்சிற்றாழியர் துவிச்சக்கர வண்டியிற் சென்று நாலாதிக்கும் தேடியும் வெறுங்கையோடு திரும்பி வந்தார். அவர் அது ஓய்வுகாலம் எனவும், அக்காலத்தில் பலாக்காய் பெறுவது கஷ்டம் எனவும் கூறினர். அப்பொழுது பொல்காவலைநகரவீதியூடாகத் துவிச்சக்கர வண்டியில் வந்த கிராமவாசி ஒருவர் நேராக அடியவரின் குடிமனை வளவில் நுழைந்தார். அவர் தாம்கொண்டு வந்த பலாக்காயுடன் வீட்டினுட் புகுந்து அடியவரிடம் கொடுத்துச் சென்றார். அக்கிராமவாசியோ அடியவருக்கு முன் பின் தெரியாத ஒருவராக இருந்தார். ஆகவே இது

ஒரு உண்மையான அற்புதத்தின் உதாரணமாகவே எனக்குப் படுறகிது. எல்லாம் வல்லவர் செயலை யார் அறிவார்? அன்று சுவாமி பலாக்காயிற் பாகம் செய்த சுவையான அமுதினை அருந்தினர். அவர் தேவையெதுவுமில்லாமல் சும்மாயிருப்பவர். ஆதலால் அவர் வேண்டும் போது வேண்டுவது கிடைக்கிறது. அவ்வடியவர் கொழும்பில் பணியாற்றிய காலத்தில் வாடகை வீடொன்றில் வசித்து வந்தார். அவர் உத்தியோக வருவாயைத் தவிர வேறெருரு வருவாயும் இல்லாதவர், அவ்வடியவர் சுவாமியைத் தரிசித்து நின்ற வேளையில் ''உமக்குக் கொழும்பில் வீடு இருக்கின்றதா'' எனச் சுவாமி கேட்டனர். பின்னர் பத்து ரூபாய் நோட்டொன்றைக் கொடுத்து ''இதைக் கொண்டுபோய் ஒரு வீடு கட்டு'' என்று அருளினர். சிறிது காலம் சென்றதும் அவர் கொழும்பில் ஓர் காணித் துண்டை வாங்கி அதில் ஓர் அழகிய வீட்டைக் கட்டினர்.

சுவாமியின் அன்பரான உயர் குடிச் செம்மல் ஒருவர் தன்னைப் போன்ற குடிச் சிறப்புடைய குடும்பத்தில் தோன்றிய மங்கையொருத்தியைத் திருமணம் செய்தனர். இருவரும் இனிதாக இல்லறம் நடத்தினர். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனர். அக்குடும்பம் குறைவொன்றும் இல்லையென்று குதூகலிக்கும் குடும்பமாயிருந்தது. சுவாமி ஒரு சமயம் அவ்வன்பரைப் பார்த்து ''நீ தான் தனிக்கப் போகிறாய்'' எனக் கூறினர். அன்பரோ குடும்பத்தினின்றும் பிரிந்து தனித்து வாழ நேரிடும் என்பதற்கான ஒரு சிறு குறிப்பைக் கூட அப்போது அறிந்திருக்கவில்லை. ஆனால் முப்பது ஆண்டுகளின் பின் அவர் தனித்து வாழ நேர்ந்திருக்கின்றது. அவ்வாறு தனித்து வாழ நேர்ந்தமைக்குத் தக்க காரண காரிய சம்பந்தம் இருப்பதையும் அவரால் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது. மறைவாக இருக்கும் தெய்வசித்தம் சுவாமிக்குக் கையில் நெல்லிக்கனியெனத் தெரிந்தது.

இக்குறிப்புக்கள் பேராது நிற்கும் சிவயோகப் பெருவெள்ளத்தில் முகந்து கொண்ட சில துளிகளே. இவை

சுவாமியின் ஒழிவற நிறைந்த தன்மையை உள்ளவாறே உணர்த்தப் போதா. இவை விண்ணிலுள்ள நட்சத்திரம் ஒன்றை இலக்காகக் காண்பதற்கு உதவியாக மண்ணிலுள்ள மரக்கிளையைக் காட்டுவதைப் போன்றனவே. இக்குறிப்புக்கள் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் நிகழ்ந்த, நிகழ்கின்ற, நிகழவிருக்கின்ற செயல்கள் யாவற்றையும் இயக்கும் சூட்சுமப் பொருளிலே சுவாமி பொருந்தியுள்ளார் என்பதையும், அச்செயல்கள் யாவற்றையும் சாட்சியாய்ப் பார்த்திருக்கிறார் என்பதையும் ஒருவாறு சுட்டுகின்றன. அவர் தேசகாலம் யாவும் கடந்தவராதலால் அங்கும், இங்கும், எங்கும், அன்றும், இன்றும், என்றும் நிறைந்திருக்கிறார். அவர் சும்மா இருக்கும் சூக்குமப் பொருளில் பொருந்தியிருப்பதால் அவர் சந்நிதானத்தில் யாவும் இயக்கம் பெறுகின்றன. அவர் முழுதுமாய் நிற்கும் முதல்வன்.

வைத்திய கலாநிதி. கு. நித்தியானந்தா

காயமொரு சித்திரக் கோயில்- அது
கண்ணுதல்பெண் ணுமைவாழ் கோயில்
மாய மெனமதி யாதே- அடடா
மகத்துவஞ்சொல்ல மதிபோ தாதே
தூய குருவரு ளாலே- நானும்
சொல்லுவேன் கேண்மருள் போமே
மாய னயன்மக பதியும்- அடடா
மற்றுமுள்ள தேவர்களும் அரக்கர்களும்
தேயுவுடன் வாய் வப்பு- மண்விண்
சேர்ந்திருக்குஞ் சித்திரக் கோயில்
ஆதித்தனுஞ் சந்திரனும் இங்கே- இன்னும்
அளவற்ற அண்டங்களும் இங்கே
வேதியருஞ் சூத்திரரும் இங்கே- விளங்கும்
வேதமுஞ் சூத்திரமும் இங்கே (காயமொரு)

-நற்சிந்தனை

9 சென்றடையாத திருவுடையான்

நான் ஒரு சமயாசார சீலனல்லன். யாழ்ப்பாணத்தார் சிறுவயது தொட்டு மேற்கொள்ளும் கோயில் வழிபாட்டிலும் எனக்கு அவ்வளவு ஈடுபாடிருக்கவில்லை. ஆனால் பகவற் கீதையைக் கவனமாகப் படித்து வந்தேன். நாடோறும் காலைப்பொழுதிலே சிறிது நேரம் தியானத்தில் அமர்ந்திருக்கும் நியமமுடையவனுமிருந்தேன். மகாத்மா காந்தியிடத்தில் மிகுந்த மதிப்பு ஏற்பட்டிருந்தது. கிதாசிரியனைப் போன்ற பெரியாரொருவர் எனது வாழ்வில் எதிர்ப்படுவாராயின் .....எனும் எண்ணம் இடையிடையே எழுவதுண்டு. இவையெல்லாம் இளமையிலேயே என்னுள் உறைந்திருந்த ஞானநாட்டத்தின் அறிகுறி என இப்பொழுது படுகிறது.

புகையிரத நிலைய அதிபராகப் பணிபுரியத் தொடங்கிய பொழுது இந்தியாவிற் புகையிரதப் பயணஞ் செய்வதற்கு எமக்கிருந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி வட இந்தியாவரை பயணஞ் செய்தேன். சிறிது தூரம் பஸ்வண்டியிலுமாக ரிஷிகேசம் வரை சென்றேன். இப்பயணத்திலே பெரியாரொருவரைத் தரிசித்து அரிய உபதேசங்களைப் பெறலாம் எனும் உட்குறிப்பு இருந்தது. பயணத்தை முடித்துக் கொண்டு இலங்கைவந்து சேர்ந்த போது இக்குறிப்பு நிறைவேறாத ஏமாற்றமே மிகுந்திருந்தது.

இத்தகைய பின்னணியிலேதான் சுவாமியின் தரிசனம் சித்தித்தது. நான் அப்பொழுது அப்புத்தளை புகையிரத நிலையத்தில் பணிபுரிந்தேன். சுவாமி அப்புத்தளைக்கு வந்து நண்பரொருவரிடம் எனது விடுதியை விசாரித்தனராம். சுவாமியை ஏற்கனவே அறிந்திருந்த அந்நண்பர் அருகிலிருந்த தமது இல்லத்திற்குச் சுவாமியை அழைத்துச் சென்று உபசாரஞ் செய்து எனக்குச் செய்தி அனுப்பினர். எனது இந்நியப்பயணம் சாமிமார்களைப் பற்றிய மனக்கசப்பையே ஏற்படுத்தியிருந்தமையால் அத்துணை ஆர்வமும், நம்பிக்கையும்

இல்லாதவனுகவே நண்பரது இல்லத்திற்குச் சென்றேன். அங்கு நான் சந்தித்த சுவாமி தான் எல்லாரையும் போன்ற ஒருவன் எனும் எண்ணத்துடன் இயல்பாகப் பேசினர். அவர் பரிபாஷைகளிற் பேசாது பயிலும் மொழியிற் பேசினர். பலநாட் பழக்கம் பூண்ட நண்பரொருவருடன் உரையாடி மகிழ்வது போல் என்னுடன் வார்த்தையாடினர். யானும் உபசாரமெதுவும் இல்லாமல் இயல்பாக நடந்து கொண்டேன். அன்று நான் சுவாமியோடு பேசிய முறை பெரியாரொருவரின் முதற்றரிசனத்தில் பேசும் பயபக்தியும் கூச்சமும் நிறைந்த வார்த்தைகளாகாமல் பழகிய நண்பரொருவரோடு விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பேசுவது போன்றிருந்தது. சுவாமியின் இயல்பான போக்கும் எளிமையான நடத்தையும் நெருக்கமும் மனத்திற்குப் பிடித்தமாயிருந்தன. சுவாமியை எனது இல்லத்திற்கு வருதல் வேண்டுமெனக் கேட்டேன். இரண்டொரு நாட்களில் வருவதாகச் சுவாமி கூறினர்.

இரண்டு நாட்களின் பின் உச்சிப் பொழுதிலே சுவாமி எமது இல்லத்திற்கு எழுந்தருளினர். சுவாமியின் உணவு பால் பழமாக இருக்குமோ எனும் எண்ணத்தால் பழம் சாப்பிடலாமா எனக் கேட்டேன். அப்பொழுது மத்தியான நேரம் தானே, சோறு சாப்பிடலாம் எனச் சுவாமி கூறினர். அன்று நிவேதனம் செய்வதற்கென்ற எண்ணத்தோடு பக்குவமாகத் திருவமுது பாகஞ்செய்யவில்லை. எனது சமையற்காரர் எனக்கு வழமையாகச் செய்யும் உணவினையே தயாரித்திருந்தார். அவ்வுணவினைச் சுவாமிக்குப் பக்குவமாகப் பரிமாறினேன். அவர் அவ்வுணவில் ஒரு பகுதியை அருந்தி மீதியை வைத்தனர். உணவு முடிந்து எழும்புந் தருணத்தில் என்னையும் அறியாமல் மீதியை நான் அருந்தலாமா எனக் கேட்டேன். ஓம் சாப்பிடலாம் எனச்சுவாமி தலையசைத்தார். நான் பெரியோரின் பரிகலசேடம் பெரும் பேறு எனும் எண்ணத்துடன் அவ்வுணவினை உட்கொண்டேன். அன்று மூன்று மணித்தியாலங்கள் சுவாமியோடு உரையாடி மகிழ்ந்தேன். கிருஷ்ணபகவானுக்கும், அருச்சுனனுக்கும் உள்ள தொடர்பு பல பிறவிகளுக்கூடாகத் தொடர்ந்து வருவதாகக் கதைகள் கூறும். அது போன்ற ஒரு உறவுடன் சுவாமியோடு உரையாடினேன். நான் அறிந்தவற்றை உற்சாகமாகக் கூறினேன். அறியாத ஐயங்களைக் கூச்சநாச்சமின்றிக் கேட்டேன். அவையெல்லாம் இப்பொழுது நினைவாயில்லை. வெறும் நூலறிவினால் மாத்திரம் உளறியதறுகுறும்பான அவ்வார்த்தைகள் நினைவிழந்து போயினமை நன்றெனவே படுகிறது. ஆயினும் ஒரு விடயம் மாத்திரம் இன்னும் விளக்கமாகிக் கொண்டேயிருக்கிறது. ஒரு கணம் சுவாமி கடவுளைக் காணும் அறிவினைச் சொல்லித் தருவாரானால் .....எனும் எண்ணம் எழுந்தது. அவ்வெண்ணம் சொற்களில் வெளிவருமுன்னர் சுவாமி ''கடவுளைத் தானே கண்டு கொண்டிருக்கிறோம்'' எனக் கூறினர். இத்திருவாக்கே சுவாமி அன்று எனக் கீந்த திருமந்திரம் எனும் அறிவு பல நாட்களின் பின்னர் ஏற்பட்டது. ஆனால் அப்பொழுது அது சாமானியமாகவே பட்டது. ஆதலால் சுவாமி அன்று மாலையில் புறப்படும் பொழுது 'கடவுளை அறியும் அறிவைச் சொல்லித்தரவேண்டும் சுவாமி' என வெறும் விண்ணப்பம்போன்று வேண்டினேன். சுவாமி 'வரவரச் சொல்லித்தரலாம்' எனக் கூறினர். ஒரு மாதத்தின் பின் சுவாமியிடமிருந்து ஒரு திருமுகம் கிடைத்தது. அத்திருமுகத்திலே மேல்வருமாறு எழுதியிருந்தது:-

''
ஓ
சிவமயம்

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய் பதியக் கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியதொன்றுண்டு. அதாவது தரும நெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.

இப்படிக்கு
அவனே நானே''

இத்திருமுகத்திலுள்ள எழுத்துக்கள் கண்களில் உறையும் வரை மீண்டும் மீண்டும் வாசித்தேன். கீதையிலே பல அத்தியாயங்களில் பரந்து பட்டுக் கிடக்கும் விடயங்களில் இருந்து நான் கிரகித்துக் கொள்ள முயன்ற உண்மை மருந்து போன்று வடித்தெடுக்கப் பட்டிருக்கிறதெனும் உணர்வு ஏற்பட்டது. திருமுகம் நிறைவுறும் இடத்தில் பொறித்திருந்த சுவாமியின் கையெழுத்து என்னைக் கவிகொள்ளச் செய்தது. ''அவனே நானே'' என்ற அந்தக் கையெழுத்து எனது அந்தராத்மா தேடிக் கொண்டிருக்கும், கீதாசாரியனைப் போன்ற அந்த அவன் தானே என உணர்த்தும் அடையாளமாகப் பட்டது. குருஷேத்திரப் போர்க்களத்திலிருந்து உண்மையுரைத்த பகவான் எனது இல்லந் தேடி எழுந்தருளி வந்து மெல்ல மெல்லச் சொல்லித்தரச் சித்தம் வைத்திருக்கிறார் என எண்ணி உருகினேன். அப்பொழுது காந்தி, கிருஷ்ணர், சுவாமி என்றவாறு சுவாமியை ஒரு மகாஞுக மனம் நம்பியது.

சில வாரங்களின் பின் சுவாமி அப்புத்தளைக்கு வந்தார். எனதில்லத்தில் சில நாட்கள் ஊறைந்தார். உள் நடுக்கம் வெளித் தோன்றூ வண்ணம், முன்னர் போலச் சுவாமியுடன் நடந்து கொண்டேன். ஒரு நாள் மாலையில் ஒரு சமஸ்கிருத நூலைப் படித்துக் கொண்டிருந்த சுவாமி என்னை எழுதுமாறு கூறி அதிலுள்ள சுலோகங்கள் சிலவற்றை மொழி பெயர்த்துக் கூறினர். அந்த மந்திரங்கள் நாராயணனின் உள்ளும் புறமுமாய் நிறைந்த பரிபூரணத்துவத்தை உணர்த்துவன. எனது தியான சாதனைக்கு ஏற்றவையென எண்ணிச் சுவாமி அச்சுலோகங்களை மொழி பெயர்த்துக் கூறுகிறார் என என் உள் உணர்வு உணர்த்தியது. நாராயணனைப் பொங்கல் பூசனைக்குரிய மூலமூர்த்தியாகக் கொள்வதிலும் இது போன்ற மந்திர ரூபமாகக் கொள்வது எனது இயல்புக்குப் பொருத்தமான தொன்றுகப் பட்டது. ஆகையினால் தியான வேளையில் இம்மந்திரங்களை எண்ணி வரலாயினேன். அந்நாட்களிலே சுவாமியுடன் சாயங்காலப் போதில் உலாவச் செல்வேன். பசுமையான தண்ணென்ற அம்

மலைச்சாரற் பாதைகளிலே சுவாமியின் பின் உலாவச் செல்வது களிப்பு நிறைந்த அனுபவமாகும். சுவாமி மல்கு நீலச் சுடர் தழைப்பச் செஞ்சுடர்ச் சோதிகள் பூத்து நிற்கும் மரங்களைப் பார்த்து அவை திருமாலைப் போன்றிருக்கின்றன எனக் கூறுவார். கரிய மேகங்களும், பசுமை மலைகளும் கண்ணனையே நினைவூட்டுவதாகக் கூறுவார். நீண்டு வளர்ந்து பலநிறமான பழப்பாக்குகளுடன் பசுமையாக நிற்கும் கமுகு மரங்களைப் பார்த்து அவையும் நெடுமாலைப் போன்றேயிருக்கின்றன என்று கூறிக் குதூகலிப்பார். அந்நாட்களில் அப்புத்தளையைத் துவாரகையாகப் பாவனை செய்வது சுவைமிக்க அனுபவமாகப் பட்டது. சுவாமி எழுதிய மேல்வரும் அழகிய வசனங்கள் அவ்வினிய அனுபவத்துக்கு ஊக்கம் தருவனவாயிருந்தன:- ''நம்மைச் சூழவிருக்கும் மலைகள் திருமாலைப்போல் பச்சைப்பசேலெனக் காணப்படுகின்றன. இரைந்து விரைந்து செல்லும் அருவிகளின் இனிய சத்தம் திருமாலின் கரத்திலிருந்து இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்கும் பாஞ்சசன்னியத்தை ஒத்தன. சந்திரனுஞ் சூரியனுமிருபாகளிரு பக்கத்தும் விளங்குவது போலவும், மரக்கொம்பரிலிருந்து தீங்குரலாற் பாடும் பட்சிகள் அக்கண்ணன் புல்லாங்குழல் பாடுவதையும் ஒத்திருக்கின்றன. தேயிலை கொய்யும் மகளிர் திருமாலின் இனிய பக்தைகளான கோபிகாஸ்திரீகளை நேர்வர். இவ்விடத்துக் கறங்கும் முரசும் துரியோதனனுடனே போருக்குச் சென்ற பஞ்சபாண்டவர்களால் அடிக்கப்படும் பேரிகையை ஒத்தது. எப்படித் திருமால் சகல வளங்களுடனும் துவாரகையில்விளங்கினரோ அப்படியே இம்மலை இவ்விடத்து மிளிர்கின்றது. கண்ணனுடைய விருந்தினராக நாம் இவணிருக்கிறோம்''

சுவாமி இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாதல் எமது இல்லத்துக்கு எழுந்தருளுவார். அருகிலுள்ள தியத்தலாவையில் மார்க்கண்டுசுவாமிகள் தொழில் புரிந்தார். மார்க்கண்டு சுவாமிகள் சுவாமியின் உத்தம சீடர்களில் ஒருவராவார். அவரைச் சந்திப்பதற்காக ஏழு மைல் தூரத்துக்கு அப்பாலுள்ள தியவத்தலாவைக்குப் பெரும்பாலும் கால்நடையா

கவே சுவாமி செல்வார். சில வேளைகளில் அவருடன் சேர்ந்து நானும் செல்வேன். ஏற்ற இறக்கங்களையுடைய அப்பாதையிலே சுவாமி விரைவாய் நடந்து செல்வார். அவ்வாறு ஒருநாள் செல்லும் வழியில் நாயொன்று குறுக்கிட்டுச் சென்றது. அதனை நோக்கிய வண்ணம் சுவாமி ''இந்த நாயும் கிருஷ்ணனும் காந்தியும் ஒன்றே'' எனக் கூறினர். நெஞ்சைக்குத்தும் இச்சொற்கள் என்னைப் புண்படுத்தின. ஞானமொழிகளை உரைத்தருளிய திருஷ்ணபகவானையும், குரைக்கும் நாயையும் ஒன்றெனக் கூற முடியுமா. எனது தியானத்துக் கேற்ற நாராயண மந்திரங்களைத் தந்த சுவாமி அவ்வாறு கூறுகின்றனரே, மகாத்மாவும் நெருநாயும் ஒன்றுகுமோ? சுவாமி தொடர்ந்து ''இப்படிக் கூறுவது உனக்குத் துயரமாக இருக்குமென்பது எனக்குத் தெரியும். ஆனால் உண்மை அதுதான்'' என்றார். சுவாமியின் நிர்க்கமான அவ்வாசகம் எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்னும் எனது அறிவு வெறும் சொல்லிலும் படிப்பிலுமே உள்ளது என்பதைப் பிட்டுக் காட்டியது. கடவுளைக் குறித்த ஒரு உருவிலோ நெறியிலோ பார்க்கும் அறியாமையைக் குத்திக்கிளறி அகற்றியது. உல்லாசமாக உலாச் செல்லும் போது பச்சைமலையிலும் கார்மேகத்திலும் கண்ணனைப் பாவனை செய்வது மெத்தச் சுகமான காரியமாகும். இது பாவனையாயிராமல் உண்மை உணர்ச்சியாகப் பரிணமிக்க வேண்டும். மலைகளிலும், மேகத்திலும் மட்டுமன்றி நெருஞ்சிற்காட்டிலும் கடவுளையே காணுதல் வேண்டும். தருமசீலரிடத்துப்போன்றே கருமிகளிடத்தும் கடவுளைக் காணும் அறிவினைப் பெறவேண்டும் கடவுளை எங்கும் கண்டு களிக்கும் அறிவினைச் சுவாமி இவ்வாறுனதோர் உபாயத்தால் உணர்த்தினர் போலும்.

சுவாமி எமது இல்லத்தில் தங்கும் நாட்களில் சிலவேளைகளில் தியானத்திலிலமர்ந்திருப்பார். நான் வேலை விட்டு வரும் சமயங்களில் சுவாமி தியானமூர்த்தமாக அமர்ந்திருக்கும் கோலம் பரவசமூட்டுவதாக இருக்கும். அதிகாலையிலே துயிலெழும் போது சுவாமி தனது படுக்கையில் சாந்த

மூர்த்தியாய் அமர்ந்திருப்பது தெரியும் அக்கோலத்தைப் பார்க்கும் போது கடவுளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்னும் சுவாமி சொன்ன அரிய திருமந்திரத்தின் பொருள் விளக்கமாவதை உணர முடிந்தது. சுவாமி வீட்டில் இல்லாத சமயங்களிலும் அவரது திருமேனியினையும் வாக்குகளையும் நினைத்துக் கொண்டிருப்பது இயல்பாயிற்று. எமக்கருளிய திருமுகத்திலே இது மகான்களின் அனுபவ சித்தாந்தம், என ஒரு பகுதியிருந்தது. மகான்கள் எனும் பன்மைச்சொல் பொதுவாக ஞானியரனைவரையும் குறிக்கும் சொல்லேயாகும். நாளாக ஆக அந்தப் பன்மைப் பெயருள் சுவாமி ஒருவரே மறைந்திருப்பது தெரிந்தது. சுவாமி ஆன்மாவே நாமெனும் அறிவைச் சுவானுபூதியிலறிந்தவர் கடவுள், உள்ளும் புறம்புமுள்ளவர் என்பதை நேர் நேராய்க் காண்பவர் எனும் விளக்கம் ஏற்படலாயிற்று. சுவாமி ஒரு தடவை ''கடவுளைக் கடவுளாற்றுன் காணலாம்'' எனக் கூறியது நினைவு வந்தது. இந்நினைவு வரவே கடவுளை உள்ளும் புறமும் கண்டுகொண்டிருக்கும் சுவாமியிலும் பெரிய கடவுளுண்டோ எனும் உறுதி பிறக்கலாயிற்று. விக்கிரகம் ஒன்றைத் தொட்டும் அளந்தும் பரிசோதித்தும் ஆய்வாளன் ஒருவன் திடீரென அங்விக்கிரகத்தின் முந்தைய நிலையான ஆராதனைக்குரிய மூல மூர்த்தத்தின் முன் சிலிர் சிலிர்த்து நிற்கும் பக்தனுளல் எவ்வாறு கிடுகிடென நடுங்குவானை அவ்வாறனதோர் நடுக்கம் எனக்கு ஏற்படலாயிற்று.

இந்நிலையில் விடுமுறை காலத்தில் யாழ்ப்பாணம் வந்த போது கொழும்புத்துறை ஆச்சிரமத்திலிருந்த சுவாமியைத் தரிசிப்பதற்காகச் சென்றேன். அங்கு அன்பர் சிலர் திருமுன்னிலையிலிருக்க சுவாமி அமர்ந்திருந்தார். அன்று என்னையும் அறியாமல் சுவாமியின் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கினேன். அன்று தொட்டுச் சுவாமி சமாதியடையும்வரையும் சுவாமியைத் தரிசிக்கும் போதெல்லாம் ''பலருக்கு மத்தியில் கும்பிடவேண்டியதில்லை'' எனவும் ''மண்ணில் வீழ்ந்து கும்பிடத் தேவையில்லை'' எனவும் ''மனத்தில் கும்பிட்டால் போதும்'' எனவும் கூறியிருந்த

போதும் என்னுல் அவரது திருப்பாதத்தில் வீழ்ந்து கும்பி டாமல் இருக்க ஒருபோதும் முடியவில்லை. அன்று எனது பெயர் சொல்லியழைத்துக் ''கடவுளாற் செய்ய முடியாத ஒரு காரியம் என்ன'' என வினவினுர். நான் இவ் வினுவைக் கேட்டுத் திகைப்படைந்த வண்ணம் நின்றேன். கடவுளே எல்லாம் செய்ய வல்லவர் என்றிருக்கும் பொழுது அவரால் செய்ய முடியாததும் ஒன்றுண்டோ? சுவாமி ஆறுதலாக ''இரண்டு நாட்களின் பின் இங்கு வரும் போது மறுமொழி கூறலாம்'' என அருளினுர். வீட்டிற்கு வந்ததும் அவ்வினு வே எனது உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. அதே நினைவாய்த் திரியும் போது கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில் படித்த ஒரு பகுதி பளிச்சிட்டது. மாபாரதப் போர் வரா மல் தடுத்தற்கு யாது செய்யலாம் எனக்கிருஷ்ணர் வின வியதற்குச் சகாதேவன் பதிலுரைக்கும் பகுதியே அது. அப்பகுதியின் இறுதியில் ''நேராக உன்னையும் யான் கட்டு வனேல் வராமற் காக்கலாம்'' எனச் சகாதேவன் கூறிய தாக உள்ளது. தொடர்ந்து தன்னை அவர் கட்டுவதெவ்வாறு எனக் கிருஷ்ணர் கேட்ட போது அன்பினுற் கட்டுவது எனச் சகாதேவன் கூறிய பதில் எனக்குத் திருப்தியாகப் பட் டது. கடவுள் அடியவரின் அன்பினில் அகப்பட்டு நிற் பான். அதனின்றும் விடுபட அவரால் முடியாது எனும் பதிலைச் சுவாமியிடம் சொல்வதெனத் தீர்மானித்தேன். இரண்டு நாட்களின் பின் சுவாமிபைத் தரிசிக்கச் சென்ற சமயம் இப்பதிலைக் கூறினேன் எனது பதிலைக் கேட்ட சுவாமி அமோதிப்படியாகும், அன்பு கடவுளினின்றும் வேறுயி ருந்தாலல்லவோ அன்பைக் கொண்டு கடவுளைக் கட்டலாம். அன்பைக் கடவுளினின்றும் வேறுபடுத்த முடியாது எனக் கூறிவிட்டு 'கடவுளாற் செய்ய முடியாத காரியம் அவரால் எம்மைக் கணமேனும் பிரிந்து இருக்க முடியாது' என அரு ளினுர். கடவுள் இமைப் பொழுதும் எம்மை விட்டு நீங் காது உயிருக்குயிராக இருக்கிறுர் எனும் உறுதி மொழியினை இவ்விதமான யுக்தியாலே எமது நெஞ்சிற் பதியுமாறு சுவாமி அருளினுர். எனக்கு இப்பொழுது சுவாமியே கட

வுளாகையால் சுவாமியை என்னை விட்டுக் கணமும் பிரியாத இறைவனுகச் சிந்தித்து வரலானேன்.

கொழும்புத்துறையிலிருந்து அப்புத்தளைக்கு மீண்ட போது சுவாமி என்னைக் கணப் பொழுதும் பிரியமாட்டார் எனும் அறிவு என்னை விழுங்கியிருந்தது. சில நாட்களின் பின் சுவாமி அப்புத்தளையிலுள்ள எமது குடிமனைக்கு எழுந் தருளினுர், அம்முறை தொடர்ந்து சில நாட்கள் எம்மோடு உறைந்தார். அந்நாட்களில் ஒரு நாள்

''தான தருமங்கள் தவமும் புரியுங்கள்
ஞான வீடு நமக்கெளி தாமே''

எனத் தொடங்கும் பாடற்றொடரைச் சுவாமி சொல்ல சொல்ல எழுதும் பேறு வாய்த்தது. அப்பாடலைச் சுவாமி கூறிய முறையானது அவருடைய மனத்திலே ஏற்கனவே மன்னமாயிருந்த ஒரு பாடலைச் சொல்வது போன்றிருந்தது. இதனை எண்ணி வியந்தவாறு எழுதிக் கொண்டிருக்கையில்

''சொல்லாமற் சொன்ன சொல்லின் உறுதி
நல்லோர் ரறிந்து நாடுவர் முத்தியே''

எனும் செய்யுளைச் சுவாமி கூறினுர். அச்செய்யுளானது அகத்திலிருந்து இயல்பாக வெளிவரும் பாடலே அப்பா டல் எனும் எண்ணத்தை மெய்ப்பிப்பது போல அமைந் தது. அந்த நெடும்பாடலிலே

''பிறப்பிறப் பில்லாப் பெருமா னேநீ
மறப்பில் லாமல் மனனஞ்செய் நாளும்''

எனும் பகுதியைச் சொல்லும் போது சுட்டு விரலால் என் னைச் சுட்டிக் காட்டிய வண்ணம் கூறினுர். தொடர்ந்து வந்த செய்யுட்கள் மந்திர உச்சாடணம் போன்று விரைந்த கதியில் வெளிவந்தன.

''சிறப்பு மிதுவே செல்வமு மிதுவே
அறனு மிதுவே அருளு மிதுவே
உறவு மிதுவே உண்மையு மிதுவே
திறனு மிதுவே சித்தியு மிதுவே
சிந்தி சிந்தி சிந்தி சிவகதி
மந்திர மிதுவே மனத்திடை மதியே''

யான் பிறப்பிறப்பென்னும் பிராந்தியினின்றும் நீங்கிப் பிறப் பிறப்பில்லாப் பெருவாழ்வு வாழச் சுவாமி திருவுளம் பற்றிய பேரருட் டிறத்தை வியந்து கை தன்பாட்டில் எழுத அருளில் லயமாகி இருந்தேன். அப்பொழுது சுவாமி

''யோக நாதன் உரைத்த மொழியே
மோகந் தீர்த்து முத்தி நல்குமே''

எனும் திருக்கடைக் காப்புச் செய்யுளைக் கூறிப் பாடலை நிறைவு செய்தார்.

சுவாமி முதலில் அப்புத்தளைக் குன்றின் கைபுனைந்தியற் றுக் கவினிலும், மகாத்மாக்களிடத்தும் கடவுளைக் காணு மாறு பயிற்றினர். பின்னர் தெருநாய்களும், கருமிகளும் கூட அக்கடவுளின் அம்சமே என்பதைத் தெளிவுபடுத்தி னர். அடுத்து அக்கடவுள் இமைப்பொழுதும் எம் நெஞ்சை விட்டு நீங்காதிருக்கும் உண்மையை உணர்த்தினர். ஈற்றில் தாம் அக்கடவுளாகவே பரிணமித்துள்ளார் என்பதை உண ரச் செய்தனர். இந்த ஞான பாடத்தின் ஒவ்வோர் அங் கத்திலும் சுவாமியே கண்கண்ட சாட்சியாகத் திகழ்ந்தனர். அவர் எனது உள்ளத்துள்ளே உலாவும் ஒருவனாக இருந் தார். இன்னும் சொன்னால் அவர் நானாக நின்றார். இவ் வாறே அவர் எல்லா உயிர்களும் ஆனார். அருள்மேனிதாங் கிய நீதிகுருபரனாகவும் தோன்றினர். இவ்வாறான கோல மெதிலும் கட்டுப்படாது சுதானஉற்ற வெளியில் சுகப் பொருளாய்ச் சும்மா இருந்தார். அவர் அங்கு, இங்கு, என்று தேடிச் சென்று அடைய வேண்டிய அவசியமில்லாது எங்கும் செறிந்த பொருள்; சென்றடையாத திருவுடையான்.

திரு. சி. விநாசித்தம்பி
இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்

10 என்னைப் பணிகொண்ட குருமாமணி

ஏறக்குறைய 1925ஆம்ஆண்டளவில்யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலரும், யோகசுவாமியின் திருநாமத்தைப் பத்தி சிரத்தையுடன் கூறத் தொடங்கிவிட்டார்கள். 'அவர் ஒரு திரிகாலமுமுணர்ந்த ஞானி' எனவும், ''மலையில்லாத யாழ்ப் பாணக் குடாநாட்டிலே அவரோர் அருள்மலையாகத் திகழ் கின்றார்'' எனவும் மக்கள் பேசலாயினர். இப்பேச்சுக்களைக் கேட்டு எனக்கும் யோகசுவாமியைத் தரிசிக்க வேண்டும் எனும் ஆசை ஏற்பட்டலாயிற்று.

ஒருநாள் சாயங்கால வேளையில் யானும் எனது நண் பரொருவரும் ஸ்ரீலங்கா புத்தகசாலைக்குப் புத்தகம் வாங் கும் பொருட்டுச் சென்றோம். புத்தகசாலையைச் சேர்ந்ததும், எனது நண்பர் உள்ளே வராது வீதியில் நின்றதைக் கவ னியாமல் நான் உள்ளே சென்றேன். உள்திண்ணையின் ஒரு புறத்தில் அப்புக்காத்து இளையதம்பி.வழக்கறிஞர் சுப்பையா என்போரும், இன்னுஞ் சிலரும் அமர்ந்திருந்து, மறு புறத்திலே வாங்கொன்றின் மீதிருந்த பெரியாரொருவரு டன் உரையாடிக் கொண்டிருந்தனர். யான் இடைநடுவிலி ருந்த வழியூடாக, உரையாடிக் கொண்டிருந்தவர்களைக் குறுக்கறுத்துப் புத்தகங்கள் உள்ள இடத்துக்குச் சென்றேன். புத்தகம் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது ''இங்கே அமர்ந்திருக்கும் பெரியார் யோகசுவாமியாக இருப்பாரோ'' எனும் எண்ணம் தோன்றி நெஞ்சை உறுத்தியது. இப் பெரியார் யோகசுவாமியாயிருப்பாராயின், உரையாடிக் கொண்டிருந்த அவரின் குறுக்கே காலிற் போட்ட காலணி யும் கழற்றாமல் இறுமாந்து கொண்டு வந்தமை தவறு எனப்பட்டது. புத்தகங்களை வாங்கித் திரும்பும் பொழுது பெரும் தருமசங்கடமாயிருந்தது. காலணிகளைக் கழற்றிக் கையிலெடுத்துக் கொண்டு செல்வது சரியெனப்பட்டது. ஆனால் இப்படியான செயலை நினைக்க வெட்கமாயிருந்தது. ஆதலால் குற்றஉணர்வோடு மீண்டும் அதே தவறைச் செய்து

கொண்டு வெளியில் வந்தேன். வீதியை அடைந்தபோது ''அந்த வாங்கில் இருப்பவர்தான் யோகசுவாமி'' என நண்பர் சொன்னார். இதுவரையும் ''இப்பெரியார் யோக சுவாமியாய் இருப்பாரோ''எனும் ஐயமே சஞ்சலத்தைத் தந்தது. இப்பொழுது 'இவர் யோகசுவாமியே' எனத் தெளிந்ததும் பெரும் பாவகாரியத்தைச் செய்தேனே'' எனத் தளர்ந்துபோனேன். கழிவிரக்கத்தோடு யோசசுவாமியைத் திரும்பிப்பார்த்தேன். அப்பொழுது சுவாமி தன் முன்னிலையில் இருந்தவர்களுடன் உரையாடியவண்ணமே என்னைப் பார்த்துப் போய்வருமாறு தலையசைத்தார். சுவாமியினது செந்தண்மை பூண்ட இச் செய்கை ''இங்கு ஒன்றும் மாறுபாடாக நடக்கவில்லையே'' என உணர்த்தியது போல எனக்குப் புரிந்தது. மின்வெட்டுப் போதில் நோக்கிய சுவாமியின் அருட்பார்வை அதுவரையும் என்னுள் ஏற்பட்டிருந்த சஞ்சலம், தருமசங்கடம், தளர்ச்சி அனைத்தையும் போக்கி பெரும் ஆறுதலைத் தந்தது. இப்பெரியாரை அடிக்கடி தரிசித்து ஆசீர்வாதம் பெறவேண்டும் எனும் ஆசைபெருகியது.

அந்நாட்களிலே வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீலங்கா புத்தகசாலையில் சங்கீதபஜனை நிகழ்ந்தது. புகழ்பெற்ற பாடகரான புத்துவாட்டி இரத்தினம் என்பவரின் புதல்விகள் இந்நிகழ்ச்சியில் பாடினர்கள். யோகசுவாமியும் இந்நிகழ்ச்சியின் போது எழுந்தருளியிருப்பார். நான் இச்சங்கீத பஜனை நிகழ்ச்சியைச் சாட்டாகக் கொண்டு சுவாமியைத் தரிசிப்பதற்காக ஒரு வெள்ளிக்கிழமை மாலைப் பொழுதில் சென்றேன். மக்கள் புத்தகசாலையெங்கும் நிறைந்து வீதிக்கரையிலும் திரண்டு நின்றனர். வீதியோரத்தில் நின்ற திரளோடு கலந்து நானும் சுவாமியின் நினைவாக நின்றேன். நிகழ்ச்சி நடை பெற்றுக் கொண்டிருக்கும் பொழுது சுவாமி வெளியே தோன்றி என்னை நோக்கி நேராக வந்து கொண்டிருந்தார். என்னை நெருங்கி முகமுகமாகப் பார்த்து ''நீ யார்'' என அதட்டிக் கேட்டார். எனது மெய் சிலிர் சிலிர்த்து நடுங்கியது. பதட்டத்தோடு 'நான் இன்னார்' எனச் சொன்

னேன். சுவாமி வேறொன்றும் பேசாது உள்ளே சென்றார். நான் கிடுகிடென்ற உள்நடுக்கத்தோடு சுவாமியையே நினைந்த வண்ணம் நின்றேன். சிறிது நேரத்தில் சுவாமி மீண்டும் என்னை நோக்கி வந்தார். திரும்பவும் அதேவினாவினைக் கேட்டு ''நீ ஏன் நேரத்துக்கு ஒவ்வொரு விதமாய்த் தோன்றுகிறாய்?'' எனக் கேட்டு விட்டுச் சென்றார். சுவாமியின் வருகையும், பார்வையும், சொல்லும் எல்லாம் என்னைப் பேய் பிடித்தவன் போலாக்கின. சில நாட்களாக எப்பொழுதும் சுவாமியின் நினைவாகவேயிருந்தது.

அந்நாட்களிலே சுவாமி கொழும்புத் துறையில் உறைகின்றார் எனும் விடயத்தை நான் அறிந்திருக்கவில்லை. ஆதலால் வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீலங்கா புத்தகசாலையில் நிகழும் சங்கீத பஜனை நிகழ்ச்சியின் போது சுவாமியைத் தரிசித்து வரும் நியமம் பூண்டவனாக இருந்தேன். பஜனை நிகழ்ச்சி மாலைப் பொழுதிற்றொடங்கி இரவு பத்து மணி வரை நிகழும். அதன் பின்னர் சுவாமி தமது அன்பர்களை விடை கொடுத்து அனுப்பி விட்டுத் தாம் கஸ்தூரிமுத்துக் குமாரர் வைத்தியரில்லத்திற்குச் செல்வார். ''சுவாமியிடம் விடை பெற்றுச் செல்லும் பாக்கியம் ஒரு நாளும் வாய்க்கவில்லையே'' என எனக்கு மனவருத்தமாயிருந்தது. ஒரு நாள் சுவாமி விடை தந்தபின்னரே வீடு செல்வது எனும் பிடிவாதத்துடனிருந்தேன். அன்றும் வழமை போலச் சுவாமி தமதன்பர்களுக்கு விடை கொடுத்து விட்டு வீதி வழியாய்ச் சென்றனர். நான் சுவாமியைப் பின் தொடர்ந்து சென்றேன். சில அடிதூரம் சென்றதும் சுவாமி நின்று என்னைத் திரும்பிப் பார்த்தார். 'நான் போய் வா' என்று சொல்லாமையால் என் பின்னே வருகிறாயா? சரி இனி நீ போகலாம்' என அருளினர். சுவாமி ஒரேமையன்பனை எனது எண்ணத்தையறிந்து விடையீந்தனர் என்னும் பூரிப்புடன் யான் வீடு சென்றேன்.

சுவாமி கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் உறைகின்றார் என்பதை அறிந்த பின்னர் ஒரு நாள் சுவாமியைத் தரிசிக்

கும் ஆர்வத்தோடு ஆசாரசீலனாக அங்கு சென்றேன். சுவாமி ''சும்மா இருந்தாற் சோறுகுமோ, வாடா சித்தா காலாட்ட'' எனும் பாடலைக் குறுமுறுவலோடு பாடிக் கொண்டிருந்தார். சுவாமியின் புன்சிரிப்பும், இனிமையான பாடலும் என்னை மங்கலமாக வரவேற்பது போலிருந்தன. நான் சுவாமியினது திருவடிகளிலே வீழ்ந்து ஆசைதீரக் கும்பிட்டேன். சுவாமியின் பாடல் நினைக்க நினைக்கத் தித்திப்பாயிருந்தது. பின்னர் நான் ஆச்சிரமம் செல்லும் போதெல்லாம் சுவாமி இப்பாடலைத் தவறாமற் சொல்லி மகிழ்விப்பார்.

சுவாமி எனக்கு ஈந்த ''நீ யார்?'' எனும் முதல் வாசகம் ஞான வித்தை பயில்வோர்க்கான 'புகுமுகவினு' என்பது இப்பொழுது தெளிவாய்த் தெரிகிறது. செல்லப்பசுவாமி எங்கள் குருநாதனுக்கு முதலிற் சொன்னதும் ''யாரடா நீ'' எனும் அதட்டலேயாகும். அந்நாட்களிலே சுவாமியின் நினைவாய்ப் பேயாய்த் திரிந்த என்னிடம் ''என்னையறியும் பக்குவம்'' உள்ளதென்பதை அறிந்தோ அல்லது தம்மிடமுள்ள அருமருந்தை அவரிவரென்றில்லாது அனைவருக்கும் ஈயும் அருட் பெருக்காலோ சுவாமி இவ்வாசகத்தை எனக்கீந்தனர். ''சும்மா திரிந்தால் சோறுகுமோ? வாடா சித்தா காலாட்ட'' என்பதும் சித்தரின் பரிபாஷையேயாகும். (காலாட்டுதல் - பிராணயாமம்) சுவாமி இப்பாடலைப் பாடி என்னை 'வாசியோகத்தேர் என அழைத்தனரோ அல்லது தம்மை அண்டிவருவோரெல்லாம் சாதனையால் வேதனையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் எனும் அருட்குறிப்பால் பாடினரோ என நானறியேன். ஆனால் நான் வெகுவிரைவில் எனக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனத்துடன் என்னைப் பந்தித்துக் கொண்டேன். சிவயோகசுவாமி எனக்குச் சிவபோகம் புசிப்பிக்கச் சித்தம் வைத்திருந்த போதும் நான் உலகபோகத்தில் மோகங்கொண்டுவிட்டேன். அவர் வழி நின்று அருளாரமுதூட்டவும் யான் பொருளல்லாதவற்றைப் பொருளென மதிக்கும் மருளில் மயங்கிவிட்டேன் ஆயினும் சுவாமி வெறுப்பனவே செய்யும் என் சிறுமை

யைத் தனது பெருமையினால் பொறுத்துக் கொண்டார். அவர் எனது பந்தவாழ்விலும் என்னைப் புறம் புறம் திரிந்து தாய்போல் தலையளி செய்தார்! சுவாமியைக் கோபிப்பவர் எனச் சிலர் கூறுவதைக்கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் எனக்கோ சுவாமி ''முனிவிலாததோர் பொருள்'' என்பது தன் விளக்கமாகத் தோன்றுகிறார். சுவாமியின் கருணையை அனுபவிக்கும் பாக்கியத்தைத் தந்தமைக்காக இந்தப் பந்த வாழ்வையும் ''வாய்த்தது நம்தமக்கீதோர் பிறவி'' என்று மகிழும்படியாயுள்ளது.

ஒருநாள் வண்ணார்பண்ணையில் நிகழ்ந்த திருமண வீடொன்றில் கலந்து கொள்வதற்காக எனது நண்பரொருவருடன் சென்றுகொண்டிருந்தேன். சுவாமி ஸ்ரீலங்கா புத்தகசாலைக்குமுன் ஐயம்பிள்ளை உடையாருடன் நிற்பது தெரிந்தது. சுவாமியை அணுகிக் கும்பிட்டு நிற்கும்போது சுவாமி என்னைச் சுட்டியவண்ணம் ஐயம்பிள்ளை உடையாரைப்பார்த்து ''இன்று இவருக்கும் எனக்கும் திருமணம்'' எனக்கூறினர். 'தனக்கும் எனக்கும் பிரிவில்லை' என்பதை சுவாமி இவ்வண்ணம் கூறுகிறார் என நான் நம்பினேன். சுவாமி என்னுடை உடலையிருந்து அருள்பாலிக்கின்றார் எனும் உறுதி என்னுள் நிடப்பட்டது. நான் சுவாமியைத் தரிசிக்கவேண்டுமென்று திட்டமிட்டுச்சென்ற பல சந்தர்ப்பங்களில் சுவாமியின் தரிசனம் சித்திக்காது ஏமாற்றத்துடனேயே திரும்பவேண்டியிருந்தது. ஆனால் 'இன்று சுவாமியைத் தரிசித்தால் நல்லது' எனும் குறிப்புத்தோன்ற திடீரென வெளிக்கிட்டுச்சென்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் சுவாமியின் தரிசனம் தவறாது சித்தித்தது. அப்படியான வேளைகளில் 'நான் உன்னை நினைத்தேன்; நீ உடனே வந்து விட்டாய்' எனச்சுவாமி கூறுவார். சுவாமி என்னையும் ஒரு பொருட்டாக நினைக்கின்றனரே! தமது நினைவினால் என்னை ஈர்த்தெடுக்கின்றனரே! சுவாமியினது திருவுளப்படி சுவாமியின் திருமுன்னிலையில் வந்தமர்ந்திருக்கும் பேறு வாய்த்துள்ளதே! என்றெல்லாம் எண்ணி நான் உளம் உருகுவேன். அந்நாட்களிலே முத்துருஷி என்னும் ஓர் சித்த

புருஷர் இருந்தார். அவர் அளவெட்டியிலே பிறந்தவரென்பர். அவர் மிளகாயை அரைத்துத் தேய்த்துத் தோயும் வழக்கமுடையவர். சிவயோகசுவாமியும், முத்துருஷியும் ஒருவரையொருவர் அறிந்திருந்தனரெனக் கேள்விப்பட்டிருந்தேன். இருவரும் பெருமழை நேரங்களில் ஒருவர்தோளில் ஒருவர் கைபோட்ட வண்ணம் யாழ்ப்பாண நகரவீதியில் நடந்து செல்வார்களாம். சுவாமியோடு தொடர்புடைய பெரியார் என்ற வகையில் யான் மூத்திருஷி சுவாமிகளிடம் மிகுந்த மதிப்புடையவனாக இருந்தேன். அவர் சில நாட்கள் எமது வர்த்தக நிலையத்தில் தங்கினர். அந்நாட்களிலொருநாள் சுவாமியைத் தரிசிப்பதற்காகச் சென்ற பொழுது ''எப்படித் திருஷி சுகமாயிருக்கிறீரா?'' எனச் சுவாமி விசாரித்தார். சுவாமி எனது ஒவ்வோரசைவையும் கண்காணிப்பவராயிருக்கின்றார் என்பதை அறிந்து நான் மிகுந்த ஆச்சரியமும், ஆறுதலும் அடைந்தேன்.

நான் மோட்டார் வண்டியிற் செல்லும் போதெல்லாம் சுவாமியையும் ஏற்றிச்செல்லும் பேற்றிற்காக ஆசைப்படுவேன். ஆனால் சுவாமியை வீதியிற் கண்டு பணிவோடு இறங்கிச் சென்று வேண்டினாலும் சுவாமி அதற்கிசையாது சென்றுவிடுவார். ஒரு நாள் நல்லூர் வீதியால் சென்று கொண்டிருக்கும் போது சுவாமி தாமாக எனது மோட்டார் வண்டியை நிறுத்தி ஏறிக்கொண்டார். அன்று எனது நெடுநாளைய ஆசை நிறைவேறியதை நினைந்து பெரிதும் மகிழ்ந்தேன். ஆசனத்திலமர்ந்த சுவாமி அந்நாட்களில் பிரபலம் பெற்றிருந்த ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு ''அவர் ஒருநாள் என்னை வற்புறுத்தித் தனது காரில் ஏறும்படி செய்தார். அது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. நான் இன்று உனது காரில் விருப்பத்தோடு ஏறியிருக்கிறேன்'' எனக் கூறினர். சுவாமி குறிப்பிட்ட அப்பெயரினை உடையவருக்கும் எனக்கும் அக்காலத்தில் பெருந்தகராறும், வழக்குகளும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அவற்றிலெல்லாம் வெற்றி என்பக்கம் என்பதே சுவாமியின் சித்தம் என்

பதை இவ்வருளாடல் உணர்த்தியது. அவ்வாறே வெற்றியும் சம்பவித்தது.

எனக்குத் திருமணமாகிச் சிலவருடங்கள் சென்றும் குழந்தைப்பேறு வாய்க்கவில்லை. அது மிகுந்த மனத்துயராக இருந்தது. ஒருநாள் இதனைநினைத்து நொந்தமனத்துடன் சுவாமியின் திருமுன்னிலையிலமர்ந்திருந்தேன். அப்பொழுது சுவாமியின் நாவிலிருந்து ''உனது குழந்தைக்குப் பெயர் சூட்டப்போகிறேன்; **வடிவேற்கரசன்**'' எனும் அருள் வாக்குத் தோன்றியது. சுவாமியின் வாக்குப்படியே ஓராண்டு காலத்துக்குள் எமக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குச் சுவாமி சூட்டிய நாமத்தைப் பூண்டோம்.

சுவாமி எனது குடிமுழுதுக்கும் அருள் செய்யும் இரக்கமுடையவராக இருந்தார். எனது பெருமகன் இங்கிலாந்துக்குக் கல்விபயிலச் செல்லும் நாளன்று, எப்படியாயினும் சுவாமியைத் தரிசித்து விட்டே பயணத்தைத் தொடங்குவது எனும் மனவுறுதி கொண்டிருந்தார். அவர் இவ்வெண்ணத்தை என்னிடம் தெரிவித்த போது ''மாலை ஐந்து மணிக்கு முன் சுவாமியைத் தரிசிப்பது சிரமம்'' எனக் கூறினேன். அந்நாட்களிலே சுவாமி பகற்போதில் அடியவரிருப்பிடங்களை நாடி ஊரூராய்ச் செல்லும் வழக்கமுடையவராயிருந்தார். அன்றுமாலை நான்குமணியளவில் பெரியகடைப் பக்கத்திலோர்கடையில் சுவாமியிருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டுச் சென்றேன். சுவாமி வீற்றிருந்த கடையின் முன்பாக மூன்றுநான்கு மோட்டார் வண்டிகள் நின்றன. அவை சுவாமியை ஏற்றிச் செல்லும் பாக்கியத்துக்காகக் காத்துக் கிடந்தன என்பது தெரிந்தது. எனது மோட்டார் வண்டி சென்று கடைவாயிலில் நின்றதும் ''எனக்குக் கார் வந்துவிட்டது'' என்ற பெரிய சத்தத்துடன் சுவாமி எழுந்து வந்தார். வண்டியில் ஏறி ஆசனத்திலமர்ந்ததும் ''எங்கு வெளிக்கிட்டது?'' எனக் கேட்டார். நான் எனது பெருமகனின் ஆர்வத்தைச் சொன்னேன். சுவாமி ''அப்படியானால் காரை அவரது வீட்டுக்கு விடு'' எனப்பணித்தார். வீட்டிலே

ஆச்சிரமத்துக்குச் செல்வதற்காக ஆயத்தமாகி நின்ற மைந்தரையும் ஏற்றிக் கொண்டு கொழும்புத்துறை சென் ரேம். சுவாமி அம்மைந்தரோடு அன்பாகப் பேசிப் பிரசாத மீந்து விடைகொடுத்தனுப்பினர்.

என்னுடைய பிள்ளைகள் வளர்ந்த பிறகு நான் பெரும் பாலும் தனியாக ஆச்சிரமத்துக்குச் செல்வதில்லை. ஒருநாள் எனது இரு பெண்பிள்ளைகளுடன் சுவாமியைத் தரிசிப்பதற் காகச் சென்றேன். அப்பொழுது சுவாமி அரியாலை ஆச்சி ரமத்தில் இருந்தார். அரியாலை ஆச்சிரமம் திரு. S. R கந்தையா அவர்களது தென்னந் தோட்டத்தில் இருந்தது. அது ஒரு சிறிய கொட்டில். அடியவர் தொகையோ கூடுத லாக இருந்தது. தென்பகுதியிலிருந்து சிங்கள அடியாரும் வந்துசென்றனர். இவர்களெல்லாம் தரிசிப்பதற்கு வாய்ப் பாகச் சுவாமி தமது முன்னிலையிலமர்ந்திருப்போரை விடை கொடுத்தனுப்பிவிடுவார். பின்னர் வெளியிலிருக்கும் அன் பர்கள் உள்ளே செல்வார்கள். நான் பிள்ளைகளுடன் சென்று சுவாமியின் திருமுன்னிலையிலமர்ந்த பொழுது பிள்ளைகளு டைய படிப்புப்பற்றி விசாரித்தார். அவர்கள் சங்கீதம் படிப்பவர்கள் என்பதை அறிந்ததும் பாடுமாறு கேட்டார். பிள்ளைகள் வெட்கத்தினால் பாடத்தயங்கி நின்ற போது ''சங்கீதம் படிப்பவர்கள் வெட்கப்பட்டால் எப்படிப்பாடு வது'' எனச்சுவாமி வேடிக்கை செய்தார். பிள்ளைகள் வெட் கம் நீங்கியவர்களாய் ''உன்னைத் துதிக்க அருள்தா'' என் னும் கீர்த்தனத்தைப் பாடினர்கள். சுவாமி அப்பாடல் நன் றாகவிருக்கிறது எனக் கூறி மேலுமோர் பாடல் பாடுமாறு பணித்தார். பிள்ளைகள் உற்சாகத்தோடு மேல்வரும் பாடலைப் பாடினர்கள்.

பல்லவி

எங்கே தேடுகிறாய் - இறைவனை
இங்கே காணுமல்

அநுபல்லவி

கங்காதர கார்வண்ணா - முருகா
பங்கேருகத்துறை ஐயனே எனக்கூறி

சரணம்

மங்கும் பொழுதளவும் வாடித் தொழில்புரியும்
மக்களெல்லாம் இறைவன் வடிவல்லவோ
அங்கம் குறைந் தழுகி ஐயா எனக் கையேந்தி
அகத்தின் கதவருகே அழைப்போன் அவனல்லவோ''

சுவாமி இப்பாடலைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அன்றிலிருந்து பிள்ளைகள் ஆச்சிரமம் சென்று சுவாமியின் திருமுன்னிலையில் அமர்ந்திருக்கும் போதெல்லாம், இவ் விரு பாடல்களையும் பாடுமாறு கூறிச் சுவாமி தியானத்தில் ஆழ்ந்திருப்பார். சுவாமி எனது பிள்ளைகளின் கீதாஞ்சலி யைத் தமக்குகந்த அர்ச்சனையாகக் கொண்டனர் என எண் ணுந்தோறும், எண்ணுந்தோறும் மனம் நெகிழும்.

சுவாமியின் திருவடிக் கலப்புப்பற்றிய அறிவினை அன் பர் பலர் முன்னதாகவே அறிந்திருந்தனர் எனப் பின்னர் அறிந்தேன். சிலர் கனவுவாயிலாக அறிந்திருந்தனர். இன்னும் சிலர் சுவாமியின் திருவாய்மொழியாகவே அறிந்தனர். சிலர் தம்மிடத்தில் தோன்றிய மெய்ப்பாடுகளிலிருந்து அறிந்து கொண்டனர். சுவாமி தமது திருவடிக்கலப்பினை ஏழையன் பனை எனக்குக் கனவுமூலமுணர்த்தினர். ஒருநாள் நான் கண்ட நீண்ட கனவொன்றில் சுவாமி பாதயாத்திரைக்கு வருமாறு என்னை அழைப்பதாகவும், யானும் ஆர்வத்தோடு பாதயாத்திரையிற் கலந்து செல்வதாகவும், யாத்திரை செல்வச்சந்நிதியை அடைந்தபோது வள்ளியம்மன் கோயில் வாயிலில் அன்பரையெல்லாம் தம்மை அபிடேகம் செய்யு மாறு சுவாமி கேட்பதாகவும், அன்பர்கள் அபிடேகம் செய்து கொண்டிருக்கும் போது சுவாமி வீற்றிருந்த இடம்

வெட்ட வெளியாய்ப் போனதாகவும் தோன்றியது. அக் கனவு கண்டு ஒருவாரத்தில் சுவாமியின் திருவடிக் கலப்புச் சம்பவித்தமையை அறிந்தபோது சுவாமி தமது திருக் கூட்டத்தில் என்னையும் ஒரன்பனாக ஏற்று அருள் பாலித் தாரென எண்ணி உருகினேன்.

சுவாமி என்னையோர் தொழும்பனாக ஏற்றுகந்தார் என்பதே எனது பெரும் பேறாகும். சுவாமி ஒரு நாள் என்னை நோக்கி ''நீதான் இந்தத் தொண்டுக்குச் சரியான ஆள்'' எனக் கூறி யாழ்ப்பாணம் பன்றிக்கோட்டுப் பிள் ளையார் கோயிலடிக் கலைப் புலவர் க. நவரெத்தினம் அவர் களது ஆச்சிரமத்திலிருந்த ஜெர்மன் சுவாமி (கௌரிபாலா) அவர்களை அழைத்து வருமாறு பணித்தார். நான் ஆர்வத் தோடு சென்று ஜெர்மன் சாமியை அழைத்துக் கொண்டு வந்தேன். சுவாமி சமாதியடைந்து சிறிது காலத்தின் பின் எனது கனவிலே தோன்றித் திருநீற்றுத் தொண்டு செய்யு மாறு உணர்த்தி என்னை என்றும் தமது தொண்டனாக ஏற்றுக் கொண்டார். அக்கனவு மேல் வருமாறு:- சுவாமி பெருமழை பெய்யப் போவதாகக் கூறிச் சிறிது நேரத் தில் இடிமுழக்கத்துடன் பெருமழை பெய்தது. கொழும் புத்துறை ஆச்சிரமமெங்கும் வெள்ளம் பரந்தது. நவரத்தி னம் முதலியஅன்பர்கள் திருநீற்றுல் அணைகட்டிக் கொண்டு நின்றனர். சுவாமி எனது மோட்டார் வண்டியில் திருநீற்றுச் சாக்கொன்றை வைத்து ஸ்ரீ காந்தா அவர்க ளிடம் கொடுத்து வருமாறு பணித்தார். இவ்வண்ணமாக நீண்டு சென்ற அக்கனவு கலைந்ததும் விழித்தெழுந்து அக் கனவின் பலன் யாதாகலாம் எனச் சிந்தை செய்தேன். சிந் தையில் தோன்றிய ஓர் குறிப்பினைப் பதித்துக் கொண்டு அடுத்த நாட் காலை கொழும்புத் துறை ஆச்சிரமம் சென்று திரு. திருநாவுக்கரசு அவர்களிடம் கனவினைக் கூறிப் பொ ருள் யாதோ என வினவினேன். அவர் எதிர் வரும் ஆவ ணித் திங்களில் (9-9-64) சுவாமியின் அஸ்திப் பிரதிட்டை செய்ய இருப்பதாகவும் அதற்குத் திருநீறு வேண்டியிருகிக் றதெனவும் சுவாமி உங்களிடம் இப்பணியைப் பணித்திருக்

கிறார் போலும் எனவும் கூறினர். எனது குறிப்பும், திரு. திருநாவுக்கரசு அவர்களது விளக்கமும் பொருந்தியிருப்ப தைக் கண்டு நான் திருப்தியடைந்தேன். அந்நாட்களில் விபூதி பெறுவது அருமையாக இருந்தது. வவுனியா அர சாங்க அதிபராயிருந்த திரு. சிவஞானம் அவர்களது குறிப் பின்படி சென்று கடையொன்றிலிருந்த ஒரேயொரு பழனித் திருநீற்றுச் சாக்கினை வாங்கி வந்து குருபரன் அருட் பணி யாற்ற முடிந்தது. அஸ்திப் பிரதிட்டை நாளன்று நான் அன்போடு கொண்டு சென்ற திருநீற்றுச் சாக்குத் திறந்த வண்ணம் ஒரு மூலையிலிருப்பதையும், அச்சாக்கிலிருந்து எடுத் துப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த திருநீற்றை அள்ளி அன்பரெல்லாம் திருவடிக்கு அபிடேகம் செய்வதையும் கண்டு ஐம்புலனடங்கி நின்றேன்.

இப்பொழுது 'நீயார்?' எனும் வினவுக்கு 'நான் சிவ யோகசுவாமியின் அடியான்' என விடைகூறும் அளவுக்கு விளக்கம் பெற்றிருக்கிறேன். சிவயோகசுவாமி என்னை ஆளும் ஈசன், நான் அவருடைய அடிமை. அவர் என்னைக் கணமும் பிரியார். அவருடைய அருளே எனது வாழ்முத லாகிய பொருள். நான் எங்கெல்லாம் செல்வேனோ அங் கெல்லாம் அவரும் கூடவே வருவார். யானும் எத்தொழி லைச் செய்தாலும், ஏதவத்தைப்பட்டாலும சுவாமியின் வீழுத்தொழும்பில் பிழையாதவனாக இருப்பேன்.

திரு. V. இராசசேகரம்
74, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மந்திரமுந் தந்திரமும் வேண்டா மகத்துக்கள்
சுந்தரத் தாளே துணை

11 அன்பருக்கு அன்பன்

சிறுமியாயிருக்கும் பொழுதே சுவாமியை அறிவதற் கருளிய திருவருளைப் போற்றுகிறேன். ஒருநாள் எமது தந்தையார் சுகவீனமாயிருக்கும் தமது சகோதரிக்கு மருந்து வாங்குவதற்காகக் கஸ்தூரி முத்துக்குமாரர் வைத்தியரிடம் சென்றார். அவர் மருந்து வாங்கி வீட்டுக்கு வந்த சமயம் மிக்க மகிழ்ச்சியோடு சுவாமியைப் பற்றி மேல்வருமாறு கூறினர். யோகசுவாமி என்றொரு மகான் இருப்பதாகக் கேள்விப் பட்டிருந்தேன். இன்று அவரை நேரிற் கண்டேன். யான் வைத்தியரிடம் சென்ற சமயம் அவர் வைத்தியர் வீட்டிலிருந்து வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்த மாத்திரத்தில் இவர் யோகசுவாமியாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவரது பாதத்தைப் பார்த்து மனத்தினுல் வணங்கி நின்றேன். அவர் சில அடிகள் சென்று மீண்டு வந்து ''மருந்தை வாங்கிக் கொண்டு போ சுகமாகும்'' என்றருளினர். தந்தையார் வைத்தியரிடமிருந்து மருந்தும் சுவாமியிடமிருந்து அருளும் பெற்று வந்த களிப்பில் கதைத்துக் கொண்டு நின்றார். அவருடைய பக்திப் பரவசமான பேச்சுக்கள் சுவாமியைக் கருணை நிறைந்த ஒரு பெரியோராக எனது உள்ளக்கிழியில் எழுதிவிட்டன. இது நிகழ்ந்தது 1929 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலாகும்.

எட்டு ஆண்டுகளின் பின்னர் புகையிரதப் பிரயாணத்தின் போது சுவாமியை மீண்டும் தரிசித்தமை பற்றித் தந்தையார், கூறினர். தந்தையார் நாவலப்பிட்டியில் இருந்து கொழும்புக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். பேராதனைச் சந்தியிலேசுவாமி புகையிரதத்தில்ஏறினர். கூட வந்த ஒருவர் புகையிரதச் சீட்டினைக் கொடுத்துச் சுவாமியை வழியனுப்பி வைத்தார். சுவாமி தந்தையார் மாத்திரம் தனியாக இருந்த பெட்டியிலேறி அமர்ந்தார். எனது தந்தையார் ஏழெட்டு வருடமாக உலகத் தொல்லையில் மூழ்கியிருந்தமையால் சுவாமியின் திருமுகத்தை மறந்திருந்தார்.

இப்பொழுதுபழைய ஞாபகம் வர யோகசுவாமி தான் தம் முன்னிலையில் அமர்ந்திருக்கிறார் என எண்ணி மனத்தில் வணங்கினர். அப்பொழுது சுவாமி ''நீ நினைக்கிறது சரி'' எனக் கூறினராம். அன்று நீண்ட நேரம் சுவாமியின் திருமுன்னிலையில் இருப்பதற்கும், சுவாமியின் சொற்களைக் கேட்பதற்கும் திருவருள் கைகூடியமையை நினைந்து தந்தையார் மனம் நெகிழ்ந்திருந்தமையை உணர்ந்தோம். தந்தையார் எங்களைக் குறிப்பிட்டுப் ''பிள்ளைகளுக்கும் ஏதேனும் கூற வேண்டும் ஐயா'' எனச் சுவாமியிடம் வேண்டினராம். சுவாமியிடமிருந்து தந்தையார் மூலமாக எங்களுக்கும் கிடைத்த எளிமையானதும் உயர்வானதுமான முதற் செய்தி ''எல்லாஞ் சிவன் செயல்'' என்பதாகும்.

சுவாமியின் முதற்றரிசனம் எமது வீட்டுக்குக் கிட்டடியில் உள்ள ஓரில்லத்திற் சித்தித்தது. இது சுவாமியின் கருணையின் எளிமையேயாம். அப்பொழுது நாங்கள் வெள்ளவத்தை 42 ஆவது ஒழுங்கையிலுள்ள எமது வீட்டில் வசித்து வந்தோம். எமது நாயகர் மாத்தளையில் ஆசிரியப் பணிபுரிந்தார்கள். வார இறுதியில் வீட்டுக்கு வருவார். அவ்விதம் ஒரு வெள்ளிக்கிழமை வீட்டுக்கு வரும் பொழுது ''ஓவசியர் தில்லையம்பலம் அவர்கள் வீட்டில் சுவாமி வந்திருக்கிறார் போலத் தெரிகிறது''. எனக் கூறிக் கொண்டு வந்தார். வந்ததும் கால், முகம் கழுவித் திருநீறு தரித்துக் கொண்டு சுவாமியைத் தரிசித்து வருவதாகக் கூறிச் சென்றார். சிறிது நேரத்தில் மீண்டு வந்து என்னையும் அழைத்துக் கொண்டு சென்றார். செல்லும் வழியில் சுவாமி இருந்த திருக்கோலச் சிறப்பைக் கூறிக் கொண்டு வந்தார், அக்கோலத்தை நினைக்கும் பொழுது ''**அன்றுலின் கீழிருந்து அறமுரைத்த பெருமானே**'' எனும் பாடலடி ஞாபகம் வருவதாகக் கூறினர். தந்தையாரால் பெரிய மகானுகவும் எமது நாயகரால் அறமுரைத்த கடவுள் எனவும் மதிக்கப்படும் ஒருவரைத் தரிசிக்கப்போகிறோம் எனும் மன நடுக்கத்தோடு தில்லையம்பலம் அவர்களது வளவினுட் காலடி எடுத்து வைத்

தேன். சுவாமி திண்ணையில் வீற்றிருந்தார். நாங்கள் சென்று மனதுருகிக் கும்பிட்டு நின்றோம். அப்போது சுவாமி அன்போடு பார்த்து ''அறிந்த ஆட்களாய் இருக்கு'' என அருளினர்கள். இப்பொழுதும் இனிமையாக ஒலித்துக்கொண்டிருக்கும் இந்த முதல் வாசகம் சுவாமிக்கும் எங்களுக்குமுள்ள அத்தியந்த உறவை உணர்த்தும் மறைமொழி எனும விளக்கத்தை வரவர உணர்ந்து வருகிறோம். சுவாமி ''இங்கே இருக்கலாம்; அங்கே சென்று உள்ளேயும் இருக்கலாம்'' எனக் கூறினர்கள். உள்ளே சென்று திண்ணையருகே உள்ள மண்டபத்தில் அமர்ந்தேன். திண்ணையில் இருந்த பெண்பிள்ளை சுவாமி பாடுமாறு கூற

பல்லவி

எங்கள் குருநாதன் எழில் நல்லை வாசன்
இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன்

அநுபல்லவி

மங்கள கரமான வாக்யப்ர சாதன்
மாறுத மௌன தியானப்ர வேசன்

சரணங்கள்

அன்பர்ச காயன் ஆனந்த சாகரன்
அல்லும் பகலுற்ற நல்லை வீதியிற் சேகரன்
என்பிழை யாவும் பொறுத்தெனை யாண்டவன்
இரவும் பகலுமென்றன் மனத்தினில் தாண்டவன்

வஞ்சம் பொருமை கோபம் வைத்திடும் மாந்தர்க்கும்
அஞ்சாதே யென்றருளை யீந்திடுஞ் சுதந்திரன்
கஞ்சமலர்ப் பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்
பஞ்சாமிர் தம்போனெஞ்சிற் பண்புட னினிப்பவன்

எனும் கீதத்தைப் பாடினர். அக்கீதத்திலே ''மங்களகரமான வாக்யப்ர சாதன்'' எனும் பகுதி வரும் பொழுது 'அறிந்த ஆட்களாயிருக்கு' எனச் சுவாமி அருளிய மங்கள வாக்கியத்தை எண்ணி உருகியிருந்தேன். பாடி முடிந்ததும் இரவு வெகு நேரமாகிக் கொண்டிருந்தமையால் அன்பர்கள் விடைபெறுவதற்காகச் சுவாமியின் திருமுன்னிலையில் குழுமினர். நாங்களும் சென்று நின்றோம். கூட்டத்தில் நின்ற ஒருவர் முத்துலிங்கசுவாமியின் மகள் என என்னைச் சுட்டிக் காட்டிச் சுவாமியிடம் கூறினர். அப்போது சுவாமி 'அதுதானே சாமி முகமாயிருக்கு' எனக் கூறி எம்மைப் பழக்கமானவராக உறவு செய்து கொண்டார். எமது நாயகர் கைக் குழந்தையைத் தூக்கி வரும் கருத்தினராய்ச் சுவாமியை வேண்டி நின்றார். அதற்குப் பதிலாகச் சுவாமி பெரியதோர் சிரிப்புச் சிரித்தார். அடுத்த நாட் காலையில் எமது நாயகர் சுவாமியைத் தரிசிக்கச் செல்லுவதற்கு முன்பே அதிகாலை வேளையில் சுவாமி புறப்பட்டு விட்டதாக அறிந்து கவலை தோய்ந்த முகத்தோடு திரும்பி வந்தார்.

தில்லையம்பலம் அவர்களது இல்லத்தில் சுவாமியின் இரண்டாவது தரிசனமும் வாய்த்தது. இடையிலோர் நாள் எமது நாயகர் சுவாமியின் பாதங்களை மலர் தூவி வழிபடும் கருத்தினராய் பூக்கைக் கொண்டு சென்ற போது ''வீட்டிற் போய்க் கும்பிடு, இங்கு வரக் கூடாது'' எனச் சுவாமி ஏசியனுப்பி விட்டனர், ஆதலால் என்னை அழைத்துச் சென்று உள்ளே விட்டு நாயகர் வெளியே நின்றனர். சுவாமி மண்டபத்து யன்னலோரமாகப் பாயிலிருந்தார். நடுவே வழிவிட்டு இருபக்கமும் பாய்கள் விரிக்கப் பட்டிருந்தன. யான் சுவாமியை வணங்கி ஒரு பக்கத்திலே அமர்ந்தேன். அன்று சுவாமி எழுந்து நடந்து வரும் போது என்னருகில் நின்று ''தெய்வம் போலிரு'' என நன்மொழி கூறினர்.

1941 ஆம் ஆண்டு நாயகர் மாத்தளையிலிருந்து ஒரு கடிதம் எழுதினர். அக்கடிதத்திலே மாத்தளைத் தபால் நிலையத்துக்கு திரு. கந்தசாமியவர்கள் மாற்றமாகி வந்திருப்பதாகவும் அவர்களது இல்லத்திற்குச் சுவாமிகள் அடிக்கடி வருகை புரிவதாகவும் எழுதப்பட்டிருந்தது. நாயகர் பணி புரியும் இடம் என்பதையும் காரணமாகக் கொண்டு அவ்வாண்டு வைகாசித் திங்களில் மாத்தளையிலுள்ள ஓரில்லத்தில் குடி புகுந்தோம். மாத்தளையில் குடிபுகுந்து இரு தினங்களுள் ஒரு திவ்வீயமான சுவாமி தரிசனம் சித்தித்தது. கணவர் ஒரு நாள் மாலை வெளியிற் சென்று வந்த போது, தபாலதிபரின் இல்லத்திற் சுவாமி அவர்களைத் தரிசித்தமையையும், அன்றிரவு சுவாமி எமது இல்லத்திற்கு எழுந்தருளுவார் என்பதையும் கூறினர்கள். நீராடித் திருநீறு தரித்து பித்தளைத் தட்டிலே பூவாய்ந்தார்கள். யான் இராசவள்ளிக் கிழங்கை சருக்கரை, தேங்காய்ப்பால் சேர்த்துப் புனிதமாகப் பாகம் செய்தேன். இரவு எட்டு மணியளவில் சுவாமி கந்தசாமி அவர்களுடன் இல்லத்திற்கு எழுந்தருளினர். சுவாமி மண்டபத்திற் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்தார். கந்தசாமியவர்கள் மண்டபக் கதவோரமாக வெளியில் நின்றார். நாயகர் கைக்குழந்தையை ஏந்தியவண்ணம் நின்றார். மூன்று வயது நிரம்பிய அருளாம்பிகை அவர்களின் அருகே நின்றது. யான் பித்தளைத் தட்டிலிருந்த மலர்களைச் சுவாமியின் திருப்பாதத்திற் சமர்ப்பித்து வீழ்ந்து வணங்கி யெழுந்தேன். சுவாமி தனது பாதத்திற் பரவிக் கிடந்த மலர்களையெடுத்துத் தட்டத்தில் வைத்தார்நானும். பாதத்தருகில் சிந்திக்கிடந்த மலர்களை எடுத்துத் தட்டத்தில் சேர்த்தேன். அப்பொழுது சுவாமி ''இந்தப் பூக்கள் இன்றோ நாளையோ வாடிவிடும்; நீங்கள் இந்தப் பூக்கள் மணம் வீசுவதுபோல் எல்லாருடனும் எப்பொழுதும் அன்பாயிருத்தல் வேண்டும்'' என்றார். அப்போது சுவாமியை அன்போடு பார்த்து

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே

பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கிப்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

எனும் திருவாசகப் பாடலை மனதுருகி நினைந்து வணங்கி நின்றேன். சுவாமி ''முத்துலிங்கசாமிக்கு எத்தனை பிள்ளைகள்'' எனக்கேட்டார். ஆறுபிள்ளைகள் எனக் கூறினேன். ''அவருக்கென்ன குறை; முத்துலிங்கசாமி ஆறுமுக சாமியாயிருக்கிறார்!'' எனச் சுவாமி சுவைபடக்கூறினர். நாங்கள் சுவாமி அமுதுசெய்ய வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தோம். அன்று மத்தியானம் தயிர் சாப்பிட்டதாகவும், அப்போது பசியில்லையெனவும் கூறிக்கொண்டு சுவாமி புறப்பட்டார். சுவாமியை வீதிவரை சென்று வழியனுப்பி வைத்தபின்னர் நிறைந்தமனத்துடன்வீட்டினுட் புகுந்தோம் சுவாமியின் பாதங்களில் அர்ச்சித்துப் பித்தளைத்தட்டில் சேர்த்து வைத்த பிட்சிப்பூக்களும், ஊர் உலோசாப்பூக்களும் இல்லமெங்கும் பரிமளமாக வாசம் தங்கச்செய்தன. அப்பூக்களை ஒரு கிழமை வரைக்கும் கும்பிடுமிடத்தில் வைத்திருந்தோம். பின்னர் வாடியுலர்ந்த அம்மலர்களை ஒருமரச் செப்பிற் சேர்த்துப் பக்குவமாகப்பேணிவைத்தோம். சுவாமி எமதில்லத்துக்கு எழுந்தருளியதன் நினைவாக ஒவ்வொரு வியாழக்கிழமை இரவும் சுவாமியை மலர்தூவி வழிபட்டு வரவேண்டுமென எம்முள் தீர்மானம் செய்துகொண்டோம். எமது இல்லத்தில் ஓர் அறையைச் சுவாமி அறையாக ஒழுங்கு செய்தோம். சுவாமி அறையில் ஓரிடத்தில்கொத்து விளக்கு வைத்தோம். திருநீறு, மலர்தட்டம், தண்ணீர்ச் செம்பு எனும் மங்கலப் பொருட்களை ஒழுங்குபடுத்தி வைத்தோம், பஞ்சணையிட்ட சாய்மானக்கதிரை ஒன்றும் வாய்ப்பான ஓரிடத்தில் போட்டோம்.

சுவாமி தபாலதிபர் இல்லத்துக்கு வரும்போதெல்லாம் நாங்கள் தவறுமற் சென்று தரிசித்து வந்தோம். அவ்விடம் ஒரு நாட்காலே நிவேதனப் பொருட்கள் நிறைந்த தட்டுடன் சென்று வாயிற் கதவருகே காத்து நின்றோம். நாயகர் சிறிது நேரம் சென்ற பின்னர் வீட்டின் பக்கத்திலுள்ள ஓடைவழியாக உள்ளே போய்க் கதவைத் திறக்க வகைசெய்வதாகக் கூறிச் சென்றார்கள். தனியளாய் வாயிற் படியில் பூசைத்தட்டோடு நிற்கும் என்னைத் தெருவாலே போவார்வருவார்கள் ஒருவிதமாகப் பார்த்துச் சென்றனர். சிறிது நேரத்தில் சுவாமி கதவருகே வந்து நின்று 'ஆர்' எனக் கேட்டார்கள். 'நான், சுவாமி' எனக் கூறினேன். ''நான் என்பதெல்லாம் வீண்'' எனப் பெலத்துக் கூறிக் கொண்டே சுவாமி கதவைத் திறந்தார். விழுந்து கும்பிட்டு எழுந்து நின்ற என்னிடம் இது போன்ற ஞான மொழிகள் பலவற்றைக் கூறினர். கூறிமுடிந்ததும் ''உனக்கு இன்று அபிஷேகம் செய்துவிட்டிருக்கிறேன்'' என அருளினர்.

''தாரா அருளொன்றியே தந்தாய்'' என்றவாறு சுவாமி எமக்கு ஒரு குறையும் வைக்காமல் எல்லாம் அருளினர். ஒரு முறை சமையல் பற்றிச் சொன்னர். மூன்று கறி வைக்கலாம் எனவும், முன்னர் தாம் சமைக்கும் போது ஒரு குழம்புக் கறிவைத்து அதைக் கறிவேறு சாறுவேறு என இரு கறிகளாக்கி விடுவதாகவும் புத்தி கூறினர். வீட்டருகே வெங்காயம் நடலாம் எனக் கூறியபடி வெங்காயம் நட்டு நல்ல விளைச்சல் பெற்றோம். இன்னொரு முறை ''நீ பிராமணத்தி; யாகஞ் செய்கிறாய்'' எனக் கூறிச் சமையல் ஒரு யாகம் என விளக்கினர்.

மற்றொருமுறை ''நீங்கள் சிவனடியாராகவாழவேண்டும்'' என அருளினர். ''எல்லாரும் சிவனடியார் தான்; ஆனால் சிலர் பதராயிருக்கின்றனர். நீங்கள் (அறுபத்துமூன்று) சிவனடியார்கள் போன்று மணியாயிருத்தல் வேண்டும்'' எனத் தெளிவுபடுத்தினர். ஒருநாட்காலே தபாலதிபரின் சாப்பாட்டு மண்டபத்தில் எரிந்துகொண்டிருந்த பெரிய மின்விளக்கைக்

காட்டி ''இந்த விளக்கைப் போலப் பிரகாசமாயிருக்கவேண்டும்'' எனக் கூறினர். இன்னொருநாள் சுவாமியின் கிட்ட நின்றஎன்னிடம் சுட்டுவிரலை உயர்த்தி ''சாகிறதுக்குப் பயப்படத் தேவையில்லை இங்கே இருக்கிறது போலத்தான் அங்கேயும்'' என உறுதி மொழி கூறினர். மற்றொருநாள் எமது குழந்தையின் நெற்றியோடு தமது நெற்றியை முட்டி ''பறைச்சி'' என விகடமாகப் பேசினர். பறைகிறவள் பறைச்சி எனப் பின்னர் விளங்கப் படுத்தினர். ஒருநாள் அதிகாலைப் பொழுதில் தபாலாதிபரின் பூட்டிக்கிடந்த கதவோரத்திற் காத்துக்கிடந்து கதவு திறந்ததும் உள்ளே சென்று வணங்கி உரையாடிக்கொண்டிருந்தோம். அச்சமயம் கதையோடு கதையாக ''அண்டங்காக்கைகள்'' என எங்களை வேடிக்கை செய்தார். அன்று காலை சுவாமி புறப்பட்டபோது நாங்களும் கூடச் சென்றோம். தலைப்பாகை தரித்துக் கம்பளியால் போர்த்து, கோட்டினைக் கையில் இடுக்கிக் காலத்திற்கேற்ற கோலமாய்ச் செல்லும் தேசகாலம் யாவும் கடந்த அப்பெருமானின் பின்னால் நாங்கள் பாதயாத்திரை செல்லும் உணர்வில் நடந்து சென்றோம். வழியிலே பெலத்த குரலில் ''உங்களுக்கு ஒரு குறையும் இல்லை; நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்'' எனக் கூறிப் பெரிதாகச் சிரித்தார். அந்த அமைதியான காலைப் பொழுதில் சுவாமியின் வாக்கும், சிரிப்பொலியும் சொல்ல முடியாத சுகத்தைத் தந்தன.

ஒருநாள் சுவாமியைத் தரிசித்து வந்த எமது கணவர் என்னைக் கூட்டி வந்தால் செருப்படி கிடைக்கும் எனச் சுவாமி கூறியதாகச் சொன்னர். யான் அவ்வளவுக்கு என்ன பாவஞ் செய்தேன், என மிகவும் மனம் நொந்தேன். அன்றிரவு வெகுநேரம் வரை நித்திரையின்றி யோசித்துக் கிடந்தேன். திடீரெனச் சுவாமி செருப்புப் போடுவதில்லையென நாயகர் ஞாபகப்படுத்தினர்கள். எவ்வாறுயினும் சுவாமியைத் தரிசித்து தருகிற சுகுணையை ஏற்றுக்கொள்வதென்ற உறுதியுடன் கண்ணுறக்கங் கொண்டேன். அடுத்த நாட்காலையில் நாங்கள் சுவாமியைத் தரிசிக்கச் சென்றபோது சுவாமி

மண்டபக் கதிரையில் அமர்ந்து அடியார் சிலருடன் உரையாடி மகிழ்ந்திருந்தார். யான் சுவாமியின் பாதங்களில் வீழ்ந்து ஆராமையினாலே வழிபட்டுக் கிடந்தேன். சுவாமி கவனியாதவர் போன்று சிறிது நேரம் என்னை அவ்வாறே கிடக்க வைத்தார். இவ்விதம் சுவாமியின் கோபம் பாதத்தைக் கும்பிடும் பாக்கியமாக எமக்குச் சுரத்தது. 1941 ஆம் ஆண்டு விஜயதசமியன்று எனது மூத்தமகள் அருளாம் பிகைக்கு ஏடு தொடங்கினேம். தொடர்ந்து எவ்வாறு வாசிப்புப் பயிற்றுவது என யோசித்தோம். தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களை முறையாகப் படிப்பித்து வாசிப்பினைத் தொடங்குவது பழையமுறை, புதியமுறை வேறுயிருந்தது. இச்சங்கடத்தினை நாயகர் சுவாமியிடம் கூறியபோது 'அனு' அறஞ்செய்ய விரும்பு என்றவாறு சொல்லிக் கொடுக்கும்படி அருளினார்கள். அவ்வாறே செய்தோம். பிள்ளை ஆத்திசூடி முழுவதையும் மனனஞ் செய்து கொண்டது. விளையாட்டாகவே வாசிப்பிலும் தேர்ச்சி பெற்று வந்தது. மூன்று மாதத்தில் 'கோபால் முதலாம் வாசகம்' எனும் புத்தகத்திலுள்ள 'கடவுள் எங்கும் இருக்கிறார்' எனும் வாசகத்தை அருளாம்பிகை தானாகவே வாசித்தது. இதனைச் சுவாமியிடம் கூறிய போது சுவாமி ''இதற்கு மேல் என்ன படிப்பு, அவள் படியாமலே யாவும் படித்து விட்டாள்'' எனக் கூறினார்.

ஒரு மார்கழி மாத விடுமுறைக் காலத்தில் வெள்ளவத்தையிலிருக்கும் பெற்றோருடன் தங்கியிருக்க வேண்டுமென ஆசைப்பட்டேன். வெள்ளவத்தைக்குச் செல்வதற்கு முன்னர் தபாலதிபரின் வீட்டுக்கு எழுந்தருளியிருந்த சுவாமியைத் தரிசித்து வரும் எண்ணத்துடன் நாங்கள் சென்றோம். சுவாமியைக் கும்பிட்டு இருக்கும் போது கதைகளிடையே கொழும்புக்குப் போகவேண்டாம் எனச் சுவாமி பாடினார். திடீரென எழுந்த இப்பாடலடியைக் கேட்டு நாம் மனத்திகைப்புற்றிருந்த போது 'சும்மா பாடினேன். பூதத் தம்பி நாடகத்தில் வரும் பாடல்' எனச் சுவாமி சிரித்தார்.

தொடர்ந்து ''கும்பிட்டுக் கேட்டால் தெய்வம் சொல்லும், ஆனால் ஆசை முன்னிட்டு அதைப் புரியமுடியாதவாறு தடுக்கும். அது பற்றிக் கவனமாயிருத்தல் வேண்டும்'' என விளக்கமாகக் கூறினார்கள். ஆயினும் அந்த மார்கழி விடுமுறையில் வெள்ளவத்தையிலிருந்த பெற்றோர் மாத்தளைக்கு வந்து எங்கள் இல்லத்தில் தங்கியிருக்க வேண்டி நேரிட்ட போது தான் சுவாமி சொன்னதன் பொருள் தெளிவாகியது. உலக யுத்த நெருக்கடியின் காரணமாக வெள்ளவத்தையிலிருப்பதிலும் மாத்தளையிலிருப்பது நல்லதென எண்ணிப் பெற்றோர் எமது இல்லத்துக்கு வந்தனர். சுவாமி சும்மா சொல்வதும் மெய்யாகிப் போவதை அப்போது உணர்ந்தோம்.

யுத்த நெருக்கடி காலத்தில் ஒருநாள் சுவாமி திருமுன்னிலையிலே நாயகரும் யானும் தாயாரும் வணங்கிநின்ற போது

''பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி.''

எனும் பாடலைச் சுவாமி பாடினர். அன்று சுவாமி எம்பொருட்டு ஓர் அற்புத நாடகம் நிகழ்த்தினர். தமது வலக்கரத்தில் வைத்திருந்த தோடம்பழத்தைக் குறிப்பிட்டு மேல் நோக்கிய வண்ணம் ''இது வரவேண்டும் என்று நினைத்தால் வரும்'' எனக் கூறினர்கள். பின்னர் எங்கள் பக்கம் பார்த்து ''வர இருக்கும் பொழுது ஏன் அவசரப்பட்டுக் கேட்கவேண்டும்'' எனச் சொல்லி அத்தோடம்பழத்தை என்பக்கமாக உருட்டிவிட்டார். அதனைப் பக்தியோடு எடுத்து வைத்துக்கொண்டு நின்றேன். நாடோறும் சுவாமியைக் கும்பிட்டபிறகு ஓர் ஆண்குழந்தை வேண்டுமெனப் பிரார்த்தித்ததற்குச் சுவாமி ஈந்த வரமே அவ்வருளாடல் என்பது நன்றாக மனத்திற் பதிந்தது. அடுத்த ஆண்டு குழந்தைப்பேறு வேளையிலும் சுவாமியின் அற்புதமான ஒரு தரி

சனம் சித்தித்தது. மகப்பேறு நேரத்தில் மரண அவத்தை யில் நொந்து சிவதொண்டன் இதழில் வந்த

''ஒதுவார் நீவினை உடன்தீர்க்கும் தெய்வமே
மாதுமை பாகனே மான்மழுக் கையனே
பாதுகாப் பதுகடன் பாரேழு முன்னிடம்
மீதுநீ கிருபைவை வேலையிலங் கையானே''

எனும் நற்சிந்தனையை மனத்தில் நினைத்து அபயம் வேண் டிய போது சுவாமியின் திருக்கோலம் கண்முன்னே தோன் றியது. வெண்ணரை முடியும், தாடியும், அருள்நோக்கும் கருணைபூத்த முகமுமாய், பெரிதாய்த் தோன்றிய அவ்வருட் கோலத்தை உயிருள்ளவரை மறப்பதற்கில்லை. சுவாமியின் திருக் கோலத்தைக் கண்ணுற்றதும் சுகானந்தத்தில் மூழ் கினேன். நோவு நொம்பல மெதுவுமின்றிக் குழந்தை பிறந் தது. குழந்தைக்குப் பெயரிடுவது பற்றிச் சுவாமியிடம் கேட் டவற்றைக் குறிப்பாகக் கொண்டு அக்காலத்தில் பாலபண் டிதப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த எமது கண வர் மேல்வரும் பாட்டைப் பாடினர்.

''பேர்வைத் திடவென்று வேண்டலுமே
பேர்வைக்கப் பேரனுண்டு தாய்தந்தையருண்டு என்று
பேர் யோகர் சொன்னதனால்
பேர் யோகர் ஆனந்தனே தான்''

குழந்தைக்கு யோகரானந்தனெனப் பெயர் சூட்டினேம்.

''இன்பம் நும்மை ஏத்து நாள்கள்'' என்றவாறு சுவா மியை ஏத்திப் போற்றி வழிபடும் இன்ப நாளாக 1943 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி வாய்த் தது. அன்று காலையில் வீட்டிலே உணவுப் பொருட்கள் தட் டுப்பாடாயிருப்பது குறித்துச் சிறிதுயோசனையாயிருந்தது. தலை யிடியாகவுமிருந்ததால் தலைக்குப் பிரமியெண்ணெய்வைத்து நின்றேன். அப்பொழுது 'கவுதகெதர' (வீட்டில் யார்) என சுவாமி பெலத்த குரலில் அழைக்கும் சத்தம் வீட்டு வாயிலி

னின்றும் கேட்டது. விரைந்து சென்று கதவைத் திறந் தேன். எண்ணெய் வைத்திருந்ததனால் சுவாமியின் திருமுன் னிலையில் நிற்கத்தயக்கமாயிருந்தது. உள்ளே சென்று கை கால், முகம், கழுவி திருநீறு தரித்தேன். பூசை அறையி லுள்ள கொத்து விளக்கை ஏற்றுவதற்காக வெளித்திண்ணை வழியாய் வந்த பொழுது சுவாமி எமது இல்லத்துக்கு எழுந் தருளிய எளிமையை நினைந்து நடுக்கமாயிருந்தது. ''பயப் படாதே பிள்ளை! உன்னைப் போலத்தான் நான். என்னைப் போலத் தான்நீ'' எனச் சுவாமி அருளினர். அவ்வேளை நாய கரும் சுவாமியின் பின்னல் நிற்பது தெரிந்தது. கொத்து விளக்கேற்றி வந்து திண்ணைக் கரையில் அமர்ந்திருந்த சுவா மியை வீழ்ந்து வணங்கினேன். சிறிது நேரத்தில் சுவாமி எமது இல்லத்தில் அமுது செய்வார் எனும் குறிப்பு விளங் கியது. யான் அமுது பாகஞ் செய்வதற்காக எழுந்து உள் ளே சென்றேன். ''சமையல் ஒரு யாகம்'', ''நீ பிராமணத்தி, யாகம் செய்கிறாய்'' எனும் சுவாமி வாக்குகளை நன்றாக மனத்திற் பதித்திருந்தமையால் ஒரு வேள்விக் கருமமாக நினைந்து பயபக்தியுடனும் திவ்வியமாகவும் பாகம் செய்யத் தொடங்கினேன்.

(சுவாமிக்குத் திருமதி மயில்வாகனம் மாணிக்கம்மாள் அவர் கள் நிவேதனம் செய்த திவ்விய நிகழ்ச்சி அவரது சொந்த நடையில் மேலே தரப்படுகிறது)

பச்சை அரிசிதான் அளவாக இருந்ததை தண்ணீரில் ஊறப் போட்டு ஊறுவதற்கிடையில் கறி வைப்பதற்கு ஆயத்தம் பண்ணினேன். போஞ்சி, கத்தரிக்காய், வாழைக்காய் இன் னும் இருந்த மரக்கறி வகைகளும் பருப்பும், மிளகாய்த் தூள் கொஞ்சம் பச்சை மிளகாய், தேங்காய்ப் பாலும் விட்டு சாம்பார் போல் ஒரு கறிவைத்து வெங்காயம், கறிவேப்பிலை, தாளிதம் செய்தேன். இதற்கிடையில் பச்சை அரிசியைக் களைந்து உரலிலிடித்து மாவாக்கினேன். பானை உலையில் நீத்துப் பெட்டியில் அரிசிமாவை மூடிக் குண்டானால் மூடி அவித்து குழைக்கிற சட்டியில் மாவைக் கொட்டிய கூட்டுடன்

உப்பு நீரும் தண்ணீரும் அளவாக உடனே விட்டு குழைக்க நல்ல இடியப்பம் பதமாக வரும். மூன்று இடியப் பமாக ஒவ்வொரு தடவை தட்டுக்களில் பிழிந்து வைத்து அவிக்கிறது. இதற்கிடையில் கணவர் வாழையிலை கொய்து பரிமாற ஆயத்தம் செய்தார். சுவாமி அறையிலே சிறு உயரமுள்ள பீடத்தில் சுவாமி அமர்ந்திருக்க முன்னிலையில் தலைவாழையிலை வைத்துத் தண்ணீர் தெளித்து இடியப்பமும் கறியும் பரிமாறினேன். சாப்பிடத் தொடங்குமுன் சுவா மிக்கு வலப் பக்கத்து அருகில் பீடத்திலிருந்த திருநீற்றை சுவாமி வலக்கையால் தொட்டு ''நமச்சிவாய வாழ்க'' என்று சொல்லித் தரித்து சாப்பிடத் தொடங்கினர். கவ னமாகவேயிருந்த வண்ணம் உலையில் அவிய விட்ட இடியப் பத்தையும் எடுத்து வந்து சுவாமிக்குப் பரிமாறினேன். அடுப்பு உலையிலிருந்து இறக்கியவுடன் என்றதனால் இடியப் பங்கள் சூடாகவேயிருந்தன. சுவாமி சாப்பிட்டபடி, ''சுடச் சுட இடியப்பந் தந்த சுவாமிக்குத் திடப்பட மெய்ஞ்ஞானம் தெளி, தெளி, தெளி'' என்று முன்னிலையில் பயபக்தியுடன், கவனித்துக் கொண்டிருந்த என்னைப் பார்த்துப் பாடினர். வலது கையைச் சாப்பாட்டில் வைத்தபடி பாடத்தொடங்கி தெளி! தெளி! தெளி! என மூன்று முறைகள் சொல் லும் போதும் இடதுகைச் சுட்டு விரலை நீட்டியபடி மற்ற நான்கு விரல்களையும் மடக்கிய வண்ணம் ஒவ்வொரு முறை யும் கையை மேலுங் கீழுமாக உறுதியாக அசைத்துச் சொன் னர். சுவாமியின் குறிப்பைக் கண்ணுங் கருத்துமாகப் பார் த்துப் பார்த்து அளவளவாகக் கவனமாக வைத்துப் பரிமாறி னேன். கையமர்த்திப் போதுமென்று குறிப்பாக உணர்த் தியதை அடுத்து முன்னிலையில் பயபக்தியுடன் கவனித்து நின்றபொழுது சுவாமி சாப்பிட்ட இலையில் வைத்து மீதமிருந்தாலும் சரி அதைப் பிறகு நான் சாப்பிட வேண்டு மென்னும் எண்ணம் வந்தது. எழும்பும் போது உடனே இலையை எடுத்துச் சென்று பத்திரப்படுத்தி வரவேணுமென்ற ஒரே எண்ணம்; அதனால் தனது எஜமானர் சாப்பிட்டு மீதம் கிடைக்கும் என்று எதிர்நோக்கிக் காத்து நிற்கும்

விசுவாசமுள்ள நாய் போன்று நானும் அதிற் கவனமாக முன்னிலையில் நின்றேன். சாப்பிட்டு முடியும் தருணம் இருந் தாற் போல் 'அங்கே' என்று கையால் எதிர்ப்புறச் சுவர் மேல் சீலிங் மூலைப்பக்கங் காட்ட நானும் மறுந்து காட்டிய திசையில் திரும்பிப் பார்த்தேன். அந்நேரம் சுவாமி பெரிய சிரிப்புடன் இலையை எடுத்துக் கொண்டு எழும்பி விருந்தைக்குச் சென்று சுவாமி அறைமுன் விருந்தை எதிர்ப் பக்கத்தில் தென்பாம் மரங்கள் கூட்டமாயிருந்த நிலத்தில் இலையைப் போட்டு விட்டுச் செம்பில் நீர்கொடுக்கக் கைய லம்பித் தொண்டு வந்தார். பூசை அறையில் பஞ்சு மெத் தை போட்டிருந்த சாய்மனைக் கதிரையில் சுவாமி சாய்ந்து கால்களை நீட்டியும் இருந்தும் கதைத்த போது எல்லோ ரும் பயபக்தி வணக்கமாகக் கேட்டு நின்றோம். அப்போது சுவாமி முன்னிலையில் எங்கள் இரண்டாவது மகளாகிய மூன்று வயதுடைய திரு நிற்க ''இஞ்சே வாணை! நான் சாப் பிட்டதற்த நீ தான் சாட்சி'' என்று சுவாமி கைகளை நீட்டியபடி சொன்னர். சுவாமி பின்னேரம் 5 மணிக்குப் புறப்பட்டுச் சென்றார். அதன் பிறகு தான் பசி தோற்று விட்டாலும் சாப்பிட வேண்டும் என எண்ணினேன். தென்பாம் மரங்கள் நின்ற ஒதுக்குப் புறமான புற்றரை யில் சுவாமி சாப்பிட்ட வாழையிலை நீளப்பாட்டில் இரண் டாக மடித்தபடி ஈ, எறும்பு ஒன்றும் மொய்க்காமல் அப் படியே இருக்கக்கண்டு எடுத்து வந்து சாப்பிடும் இடத்தில் வைத்துவிரித்த போது அந்த வாழையிலையிலே பச்சை மிள காய் கறிவேப்பிலை இருந்தது. சுவாமி சாப்பிட்டு மீதமிருந்த பச்சைமிளகாய், கறிவேப்பிலையெல்லாம் சேர்த்து அந்த வாழையிலையிலே சாப்பிட்டேன்.

அன்று தனித் துணையாக இருக்கும் சுவாமியின் திருப் பாதங்களில் கிடத்தும் எண்ணத்துடன் தொட்டிலில் கிடந்த யோகரானந்தனைத் தூக்கி வந்தேன். சுவாமி வலக்கரத்தை உயர்த்திக் காட்டியமையைத் தடுத்த குறிப்பாக எண்ணி அவ்விதம் செய்யாது விட்டுவிட்டேன். பல வருடங்களுக்குப்

பின்னர் தான் இவ்விடத்திற்கு எழுந்தருளிய சிவதொண்டன் திலீயப் பெரியார் வாயிலாய் அது அபயமுத்திரை என அறிந்தேன்.

1945 ஆம் ஆண்டு கணவர் பட்டப் பின் படிப்புப் பயில்வதற்காக கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியிற் சேர்ந்தார். ஆதலால் நாங்கள் வெள்ளவத்தையிலுள்ள எங்களில்லத்தில் வசிக்கலானேம். அவ்வாண்டு யான் கடுமையான நோய் வாய்ப்பட்டேன். காய்ச்சலும் இருமலுமாகத் தோன்றிய நோய் பின்னர் காசநோய் எனத் தெரிந்தது. தந்தையார் கொழும்பு காசநோய் வைத்தியசாலையில் இருந்த வைத்திய நிபுணரை அழைத்துக் காண்பித்தார். அவர் நன்முகப் பரிசோதனை செய்த பின் விரைவாகப் பரவும் ஒருவகைக் காசநோய் எனக் கண்டறிந்தார். இவ்வகை நோயாளிகள் மூன்றரை மாதத்துக்கு மேல் சீவிப்பது அருமையெனவும் அவர் குறிப்பாயுணர்த்தியதாகப் பின்னரறிந்தேன். அவருடைய ஆலோசனைப்படி மார்பு நோய்ப் பரிசோதனை (XRAY) எடுத்துப் பார்த்த போது இடது சுவாசப்பை வெகுவாகப் பழுதடைந்திருப்பது தெரியவந்தது. அந்நாட்களில்கொழும்பு 'ஹவ்லொக் ரௌனிலுள்ள திரு. வாலுப்பிள்ளை அவர்களது இல்லத்தில் சுவாமி தங்கியிருக்கிறார் என்பதை அறிந்து கணவர் அங்கு சென்று சுவாமியைத் தரிசித்து வந்தார்கள். சுவாமி ''அது காசநோயல்ல, சொல்லுவார் சொன்னால் கேட்பார்க்குப் புத்தியெங்கே'' என்றவாறு கூறி நாமறிந்த தனைத்தும் பொய்யென நம்புமாறு செய்ததாகக் கூறினர். அடுத்தநாள் வைத்தியரையும் அழைத்துக் கொண்டு சுவா இல்லத்துக்கு வருவார் எனவும் நாயகர் கூறினர். சுவாமி அடுத்த நாட்காலை கஸ்தூரி முத்துக்குமாரர் வைத்தியரின் மகன் கதிரவேலு வைத்தியரை அழைத்துக் கொண்டு எமது இல்லத்திற்கு எழுந்தருளினர்கள். யான் சுவாமியின் பாதங்களில் வீழ்ந்து கும்பிட்டுக் கிடக்கும் ஆர்வத்துடன் சென்றேன். சுவாமி கையமர்த்தி ''வருத்தம்வருகிறதுதான், மாறுகிறதுதான் பயப்படத் தேவையில்லை'' என அருளினர்கள். சுவாமி கையமர்த்தியது வீழ்ந்து கும்பிடச் சென்ற

என்னைத் தடுத்த குறிப்புப் போலவும் அமருமாறு காட்டிய சாடைபோலவும் அபயக்குறிப்பு போலவும் விளங்கியது. சுவாமி வாக்கு நிராப்பிணியையும் தீர்க்கும் அருள் மருந்து எனும் உணர்வும் அப்போதே மனத்தில் ஆழப்பதிந்தது. அந்தப் பெரிய வைத்தியர் அழைத்து வந்த கதிரவேலு வைத்தியர் எனது நாடியைப் பிடித்துப் பார்த்துப் பத்திய பாகத்தையும், அநுபானத்தையும் கூறினர். யாழ்ப்பாணம் சென்று மருந்து அனுப்பி வைத்தார். அம்மருந்தினை முறைப்படி அருந்த நோய் படிப்படியாகக் குறைந்தது. ஆறுமாதங்களில் நற்சுகம் அடைந்தேன். நோய் மாறிய பின்பு சுவாமியைத் தரிசிக்கச் சென்ற போது நோயாளியாயிருந்த போது கொண்ட இரக்கம் சுவாமியிடம் இன்னும் மாறுதிருந்தமை கண்டு மனம் நெகிழ்ந்தது. மூன்று பஸ்வண்டிகள் ஏறிஇறங்கி என்னைச் சிரமப்பட வைத்ததற்காகச் சுவாமி நாயகரைக் கடிந்து கொண்டார். அன்று கதிரையில் அமர்ந்து கொண்டிருந்த பெருமானின் முன்னிலையில் தரையிலிருந்து

''அப்பனே ஆருயிரே அன்பே என் ஆதரவே
ஒப்பிலா வொன்றே ஊழியெலா மானவனே
வைப்பிலா வாழ்வே மவுனமணிப் பெட்டகமே
இப்புவியெ லாம்புகழு மிலங்கைநக ரீச்சுரனே''

முதலாய நற்சிந்தனை அபயப் பதிகப் பாடல்கள் பத்தையும் மனத்தினில் நினைந்து வணங்கும் பாக்கியம் கிடைத்தது.

சுவாமி வெளியூர்களுக்குச் செல்வதை நிறுத்திக் கொழும்புத் துறையில் உறைந்த காலத்தில் மட்டக்களப்பில் குடிபுகுந்திருந்த நாம் இடையிடையே சென்று தரிசித்து வந்தோம். இவ்விதம் செல்கையில் ஒருமுறை எமது இளைய மகனை யோகரன்னையும் கூட்டிக் கொண்டு சென்றோம். முதலில் யாழ்ப்பாணத்திலுள்ள எமது பிறந்த ஊருக்குச் சென்று அன்று பின்னேரமே கொழும்புத் துறைக்குப் புறப்பட்டோம். வழியிலே நல்லூர்ப் பதியையடைந்ததும் 'செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு'

எனும் சுவாமி வாக்கை நினைந்து பழம், பாக்கு, வெற்றிலை முதலிய பூசைப் பொருள்களுடன் கோயிலுட் சென்று சுவாமியின் பெயருக்கு அருச்சனை செய்தோம். பின்னர் கொழும்புத் துறையை அடைந்து வெளிக்கிணற்றில் கால் கழுவி ஆர்வத்தை உள்ளே வைத்து ஆச்சிரமத்துள் நுழைந்தோம். அப்போது சுவாமி 'வருக வருக பரம குருவே.....' என ஆச்சிரமத்துள் இருந்து பாடும் கீதம் மங்கலமாக வரவேற்றது.

இன்னொரு முறை ஒரு திருவாதிரை நாளை ஒட்டிச் சென்றோம். அம்முறை சுவாமியின் உத்தரவுப் படி சிவதொண்டன் நிலையத்தில் தங்கினோம். சிவதொண்டன் நிலையத்திலிருந்து காலைப் பொழுதில் சுவாமியைத் தரிசிக்கச் சென்ற போது ஆச்சிரமத்துள் அன்பரெல்லாம் நற்சிந்தனை பாடிக் கொண்டிருந்தனர். சுவாமி எங்களையும் சேர்ந்து பாடுமாறு பணிக்க நாங்கள் வேதமாகத் தினமும் தியானித்து வரும் அப்பாடல்களைப் பாடும் பணியிற் சேர்ந்து பாடினோம். பின்னர் சுவாமி ஈந்த காலை உணவை அருட் பிரசாதமாக அருந்தினோம். சிறிது நேரம் ஆச்சிரம வளவில் உலவிய பின்னர் திருக்கதவம் திறந்ததும் மீண்டும் சுவாமியின் திருமுன்னிலையில் சென்று அமர்ந்தோம். அன்று சுவாமியின் திருமுன்னிலையில் நேரெதிரில் அமர்ந்திருக்கக் கிடைத்தது. ஒன்றிய சிந்தையாயிருந்த அவ்வேளையில் சுவாமிசொல்லிய வண்ணம் ஒழுகுதல் வேண்டும். வேலைகளை மகிழ்ச்சியாக வணக்கம் மணக்குமாறு செய்தல் வேண்டும். துன்பம் நேர்ந்தால் அவற்றையும் கண்டு களிக்க வேண்டும். என்றவாறு சிந்தித்து அரைவாசி கண் மூடிய வண்ணம் என்னை மறந்த இலயத்தில் இருந்த பொழுது ''அந்தத் நிர்மானம் சரி'' என்னும் சுவாமியின் குரல் இடி போல் ஒலித்தது. நான் திடுக்கிட்டு விழிப்புற்று சிலிர் சிலிர்த்திருந்தேன். அன்று நண்பகல் அமுது பரிமாறத் தொடங்கியதும் ''மயில்வாகனம் செல்வமுள்ளவராயிருந்தும் மட்டக்களப்பிலிருந்து பிச்சைக்காரன் போலச் சாப்பாட்டிற்கு இங்கே வந்திருக்கிறார்'' எனச் சுவாமி மொழிந்

தனர். ''ஓம் சுவாமி! எம்மை ஊட்டி வளர்க்கும் பெருமானின் கிருபையை இச்சித்து ஆண்டி போல் வந்திருக்கிறோம் சுவாமி'' என மனத்தில் நினைந்து உருகியிருந்தேன். பரிமாறி முடிந்ததும்

''சிவபெருமான் கிருபை வேண்டும் வேறென்ன வேண்டும்
சீவன் சிவனென்று சிந்தித்துத் தெளிய வேண்டும்
சிவபெருமான் கிருபை வேண்டும்''

எனச் சுவாமி பாடினார். நாம் சுவாமி ஈந்த அருளாரமுதமாக நினைந்து அமுது செய்தோம். அருளாம்பிகை அமுது செய்து எழும் போது இலை சிறிது கிழிந்திருந்தமையால் எடுப்பதற்குச் சற்றுத் தாமதித்து நின்றார். அதனை நோக்கிச் சுவாமி ''மாய உலகை நம்பாதே'' எனப் பலத்துப் பாடினார். அமுது செய்து முடிந்து சுவாமியின் திருமுன்னிலையில் அமர்ந்திருக்கும் பொழுது

''காத்தென்னை ஆள்வ துன்றன் கடமை
கருணைக் கடலே நானுன் னடிமை''

எனப் பக்திப் பரவசத்துடன் நாக்குழறப் பாடி ஒப்புவித்து நிற்கும் பாக்கியம் வாய்த்தது.

இவ்வாண்டு (1988) சிவதொண்டன் நிலையத்துப் பெரியார், வந்தாறுமூலை வாசி சிவசுப்பிரமணியம் அவர்களுடன் இங்கு எழுந்தருளினார். அவரிடம் முதுமையினாலும் தளர்ச்சியினாலும் ஆச்சிரம வாழ்வு நாட்களிலாதல் சிவதொண்டன் நிலையத்திற்கு வந்து வணங்க முடியாமைக்கு வருந்தினேன். அவர்கள் ''இருக்கும் இடமும் சிவதொண்டன் நிலையமே'' என அருளினார்கள். யான் யோகமும் அறியேன், தவமும் அறியேன். சுவாமி பக்தியொன்றையே அறிவேன். சுவாமி என்னையுமோர் பொருட்படுத்தி மௌனமாயிருந்து இனிப் பாறும் பாக்கியத்தை ஈந்தார். ஆதலால் இருக்குமிடமெல்லாம் சிவதொண்டன் நிலையமாகலாம் என உணர்கிறேன். இனி என்னே! ''எல்லாம் சிவன் செயல் ஆகுமே.''

அமரர் திருமதி. மயில்வாகனம்- மாணிக்கம்மாள்
20 ஞானசூரியம் சதுக்கம்
மட்டக்களப்பு

12 அவரவர்க்கு அது அதுவாய் இருக்கின்ற தெய்வம்.

அடியேன் சிறுவயது தொட்டு முருகப் பெருமானே உபாசனாமூர்த்தியாக வழிபட்டு வந்தேன். அவ்வப்போது முருகப் பெருமானின் அருட்பேற்றிற்கு ஆளாகும்பாக்கியமும் வாய்த்தது. சிவயோகசுவாமிகளைப் பல முறையும் தரிசித்துப் பெற்ற அனுபவத்தால் முருகப் பெருமானே குருமூர்த்தங் கொண்டு சிவயோக சுவாமிகளாக நடமாடுகிறார் எனும் உறுதி ஏற்படலாயிற்று.

'அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம் பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டு'

ஒரு திருமுருகனாக உதித்தது போலவே கருணை பூத்த திருமுகமும், நால்வேதம் நவிலும் நாவுமாய்ச் சிவயோக சுவாமிகளாவும் நடமாடியது. அடியேன் முருகப் பெருமானும் யோகசுவாமிகளும் ஒருவரேஎனும் நம்பிக்கையோடுவாழ்ந்து வருகிறேன்.

அடியேன் யோகசுவாமிகளை நேரில் தரிசிக்கும் முன்னரே அவரது தோன்றாத்துணையாய் நின்று அருளும் கருணைத் திறத்தால் வழிபடுத்தப்பட்டே வந்தேன். அவர் மறைந்து நின்றருளிய அருட்டிறத்தை எண்ணும் போது

''அகரமாம் எழுத்துப்போல அனைத்திலும் கலந்து நின்று
இகபரம் இரண்டுமீந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க''

என்று பாடிப் போற்றுதல் செய்ய மனம் நாடுகிறது. அனைத்திலும் கலந்து நின்று அருள் செய்யும் எழிற் குருவே எங்கள் சிவயோகக் குருமணி. இதற்கு இரு அனுபவச் சான்றுகள் உள்ளன. ஓரனுபவம் 1956 ஆம் ஆண்டு கந்தசஷ்டி விரதகாலத்தின் போது ஏற்பட்டது. மற்றைய அனுபவம் 1918 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.

அடியேன் 1956ஆம் ஆண்டுக்கு முந்திய சில ஆண்டுகளாக, ஆண்டுதோறும் கதிர்காமத் திருத்தலத்திற்குச் சென்று கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கும் நியமம் பூண்டவனுயிருந்தேன். அவ்வாண்டும் கதிர்காமம் சென்று நீர் கூடப் பருகுவதில்லையெனவும், வாய் பேசாது மௌனமாயிருப்பதெனவும் சங்கற்பித்துக் கொண்டு விரதமிருந்தேன். அந்நாட்களிலே ஜெர்மன் சாமியும், சந்தசாமியும்★ கதிர்காமத்தில் தங்கியிருந்தனர். அவர்கள் அடியேனது கடும் நோன்பினைக் கேள்விப்பட்டனராதல் வேண்டும். அவர்களுள் ஜெர்மன் சாமியார் ''நீ வாய்பேசாத விரதம் பூண்டிருக்கிறாயே, உனது மனமும் அசைவற்றுச் சும்மா இருக்கிறதோ'' எனக் கேட்டார். எனது மனம் ஓயாது அங்கு, இங்கு, அது, இது என்று அலைவதை நான் ஒப்புக்கொண்டேன். ''சித்தசலனமுமற்றுச் சும்மா இருப்பதே மௌனம்'' என்பதை ஜெர்மன்சாமியார் வலியுறுத்தினர். நான் வாய் பேசாது ஊமையாயிருக்கும் வெளிவேடத்தை விட்டுவிடத் தீர்மானித்தேன். ஜெர்மன் சாமியார் கந்தரநுபூதி என்னும் திருநூலிலுள்ள

''செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே''

எனும் பாடலையும் பாடிக்காட்டினர். அவரது கொன்னைத் தமிழில் அநுபூதிப் பாடலைக் கேட்கச் சுவையாக இருந்தது. அவர் தமது கையிலும் 'சும்மாவிரு' எனும் மந்திரத்தைப் 'பச்சைகுத்திப்' பொறித்திருந்தார். ஜெர்மன் சாமி, சந்தசுவாமி எனுமிருவரும் என்னையோர் தனியிடத்திற்கு அழைத்துச் சென்று ஆறுதலாக உரையாடினர். அவர்கள் யோகசுவாமி எனும் திருநாமத்தைப் பக்தி சிரத்தையோடு கூறினர். இலங்கை ஒரு சிறிய தீவாயினும் யோகசுவாமிகள் அவதரிக்கப் பெற்றதால் பெரும் புண்ணியபூமி எனக் கூறினர். யோகசுவாமிகளைச் சென்று தரிசிக்குமாறு என்னை

★ செங்கலடி சிவதொண்டன் நிலையத் துவக்ககாலப் பரிபாலகராகவிருந்தவர்.

ஊக்கப்படுத்தினர். அவர்களது உரையாடலிலே செறிந்து கிடந்த உபதேசங்கள் நற்சிந்தனைத் திருநூலிலே மந்திரச் சொற்களில் வடித்து வைக்கப் பெற்றிருக்கும் உண்மையினைப் பின்னர் நற்சிந்தனைத் திருநூலை நாடோறும் பாராயணம் செய்யும் நியமம் பூண்டிருந்த நாட்களில் உணர்ந்து நயந்தேன். அவ்விருதுறவியரும் சிவயோகசுவாமிகளின் சகவாசத்தால் பெற்றுக் கொண்ட அறிவினையே அத்தனை எளிமையாகவும், தெளிவாகவும் கூறினர். ஜெர்மன்சாமி, சந்தசாமி எனும் இரு மேகங்களும் சிவயோகசுவாமிகள் எனும் ஞானக்கடலில் முகந்து கொண்டவற்றையே மாரிச் சொல்மழைத்துளி மாரியாக வழங்கின.

1958ஆம் ஆண்டில் அடியேன் கொம்பனி வீதியிலுள்ள பொலீஸ் குடியினையில் வாழ்ந்து வந்தேன். அந்நாட்களிலொருநாள் என்னைச் சந்தித்த நண்பரொருவர், வடுகையாசாமியாரைப் பற்றிக் கூறினர். அவர் ஓர் இல்லறயோகியெனவும், பம்பலப்பிட்டியிலுள்ள அன்பரொருவரது இல்லத்தில் எழுந்தருளியுள்ளாரெனவும், அவரைச் சென்று தரிசித்தல் நல்லதெனவும் நண்பர் கூறினர். எனது உத்தியோகப் பழக்கமானது எதனையும் சந்தேகிப்பதை அடிப்படையாகக் கொண்டது. ஆயினும் எனது தொழிற்பழக்கத்துக்கு மாறுன வகையில் சாதுக்கள் யாவரேயாயினும் அவர்களைத் தரிசித்துப் போற்றுதல் செய்யும் வழக்கம் என்னிடம் பொருந்தியிருந்தது. ஆதலால் நண்பருடன் கூடி வடுகையாசாமியாரைத் தரிசிக்கச் சென்றேன். வடுகையாசாமியாரின் முன்னிலையில் அமர்ந்திருக்கும் பொழுது சமயவிடயங்கள் பலவற்றைப் பற்றிய விளக்கங்களைக் கேட்டோம். இடையிலோர் கட்டத்தில் எனதுநண்பர் என்னிடமிருந்த புகைபிடிக்கும் பழக்கத்தைக் கூறி அப்பழக்கத்தை விட்டுவிடுவதற்கான புத்திபுகட்டுமாறு சாமியாரை வேண்டினர். நண்பர் மீண்டும் மீண்டுங் கேட்டபின்னர் வடுகையாசாமியார் என்னை நோக்கி புகைக்கும் பழக்கத்தை விட்டு விடுமாறு கூறினர். எனது உள்ளத்தில் பெரியாரொருவரைத் தரி

சித்ததன் நிமித்தமாக ஒரு தீயபழக்கத்தை விட்டுவிடுவது நல்லது எனும் எண்ணம் உதித்து மகிழ்ச்சிதந்தது. அப்பொழுதே எனது சட்டைப்பைக்குள் இருந்த சிகரட் பக்கெற்றை எடுத்துத் தூர எறிந்து எனது தீய பழக்கத்தை விட்டுவிடுவதற்கான உறுதிபூண்டமையை உணர்த்தினேன்.

சில நாட்களில் சிகரட்புகைப்பதை விட்டுவிடுவது அவ்வளவு சிரமமான காரியமல்ல எனும் உண்மை தெளிவாகியது. யான் பலசந்தர்ப்பங்களில் ஒன்றைத் தொடர்ந்து இன்னொன்று என்றவாறு தொடராகப் புகை பிடிக்கும் பழக்கத்தை உடையவனாக இருந்தேன். இவ்வாறான பழக்கத்தைச் சிரமப்பாடின்றி விட்டதற்குக் காரணம் வடுகையாச் சாமியாரின் வாக்கே என எண்ணினேன். அவரிடம் பற்றுதல் மிகுவதாயிற்று. அவரை அடிக்கடி தரிசித்து வரலானேன்.

சில நாட்களின் பின்னர் வடுகையாசாமியார் இலங்கையெங்கும் சென்று தலதரிசனம் செய்ய விரும்பினர். அன்பர் கூட்டத்துடன் சேர்ந்து தலயாத்திரைக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. அடியேனுக்கும் அந்தயாத்திரையில் கலந்து கொள்ளும் ஆர்வம் மிகுந்தது. ஆயினும் உத்தியோகத் தொந்தம் காரணமாக யாத்திரையில் கலந்து கொள்ள முடியவில்லை.

வடுகையாசாமியார் யாத்திரை சென்ற பின்னர் அவரது நினைவு அடிக்கடி வரலாயிற்று. அவர் தங்கியிருந்த பம்பலப்பிட்டி இல்லத்திற்குச் சென்று அவரைப்பற்றி விசாரித்து வரலாயினேன். திடீரென ஒரு சிவராத்திரி நாளன்று வடுகையாசாமியார் எனது குடிமனைக்கு எழுந்தருளினர். யான் பரவசத்தோடு அவரைப் போற்றி உபசரிக்கச் சென்றேன். அவரோ என்னை வீழ்ந்து கும்பிடும் குறிப்பினராயிருந்தார். ஆதலால் எனது போற்றுதலை மறந்து அவரை எனது காலில் விழாது பார்த்துக்கொள்ள வேண்டியதாயிற்று. ஒருவாறு அவரை அழைத்துக் கொண்டு வந்து மான்தோல்

விரிப்புடைய ஒரு சாய்மானக் கதிரையில் அமரச் செய்தேன். ஆறுதலடைந்த வடுகையா சாமியார் நிகழ்ந்தவற்றைக் கூறினர்.

தலதரிசனம் செய்யப் புறப்பட்ட வடுகையா சாமியார் தெற்கே கதிர்காமம், கிழக்கே கோணேச்சரம் என்றவாறு தரிசனம் செய்து வடக்கே சென்றனர். அங்கு யோகசுவாமிகளையும் தரிசிக்கும் கருத்தினராய்க் கொழும்புத்துறை சென்றனர். அங்கு ஆச்சிரமப்படலையை நெருங்கியதும் ''ஆரது'' எனும் சுவாமியின் அதட்டல் அவரைத் திடுக்கிடச் செய்தது. அவர் தமது பெயரையும் சுவாமியைத் தரிசிக்கும் கருத்தினராய் வந்திருப்பதையும் கூறினர். யோகசுவாமிகள் வடுகையா சாமியாரை நோக்கி ''நீர் கழிப்பறைக்குள் சென்று மறைவாகச் செய்யும் காரியத்தை (வடுகையாசாமியார் கழிப்பறைக்குள் சென்று சுருட்டுப் புகைக்கும் வழக்கமுடையவர்) உன்னை நம்பிவந்த ஓரன்பனிடம் விட்டுவிடுமாறு கூறுவது முறையாகுமா? ஆனால் அவ்வன்பன் வைராக்கியத்துடன் அப்பழக்கத்தை விட்டுவிட்டு உன் நினைவாகத் திரிகிறான். நீர் . முதலில் அவ்வன்பனைச் சென்று சந்தியும். இங்கு உனக்கு ஒரு வேலையுமில்லை'' என்று கூறினர். வடுகையாசாமியார் அவ்விடத்திலேயே தமது தலதரிசனத்தை முடித்துக் கொண்டு கொழும்பு மீண்டனர். கொழும்பிலே தாம்தங்கியிருந்த பம்பலப்பிட்டி இல்லத்தாரிடம் எனது இருப்பிடத்தை விசாரித்தறிந்து கொண்டு என்னிடம் வந்தனர்.

வடுகையாசாமியாரின் நேர்மையும் தாழ்மையாம் தன்மையும் மேலும் அவரிடத்தில் பற்றுதலை வளர்த்தன. யான் அவருடன் கூடிச் சிவராத்திரி விரதம் அனுட்டிப்பதைப் பெரும் பேறென எண்ணினேன். அன்றிரவு கொம்பனிவீதி சிவசுப்பிரமணியசுவாமி கோயிலில் நிகழவிருந்த பஜனை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது என்ற எனது திட்டத்தையும் மாற்றிக் கொண்டு வடுகையாசாமியாரின் முன்னிலையிலிருந்து விரதம் அனுட்டித்தேன். அவர் அன்று லிங்கோற்பவகாலத்தின் போது மின்விளக்குகளை அணைத்துக் கர்ப்பூர

சோதியிலே திருமந்திரங்கள் சிலவற்றை உச்சரித்துத் தீக்கை வைத்தனர்.

ஜெர்மன்சாமி, சந்தசாமி என்னும் இரு துறவியரினதும், வடுகையாசாமி எனும் இல்லறயோகியினதும் சந்திப்புக்களின் சூத்திரதாரி சிவயோக சுவாமிகளே எனத் தோன்றுகிறது. அவர் இச்சந்திப்புக்களாலே என்னைச் சற்குரு தரிசனத்துக்குத் தக்கவனாக ஆயத்தப்படுத்தினர் போலும். இவ்வனுபவங்களாலே, அடியேற்குச் சுவாமியைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஆர்வம் பெருகலாயிற்று.

சுவாமியைத் தரிசிக்க வேண்டும் என்ற எனது ஆர்வத்திலும், எனக்குத் தரிசனம் நல்கவேண்டுமென்ற சுவாமியின் அருட்பெருக்கு மிகுந்திருந்தது போலும். மிகவிரைவிலே சற்றும் எதிர்பாராத வகையில் யாழ்ப்பாணத்து நல்லூர் வீதியொன்றில் சுவாமி தரிசனம் சித்தித்தது. அன்று எனது நாயகியுடன் சேர்ந்து நகைக்கடையொன்றிற்குச் சென்று விட்டு வீதியூடாக வந்தேன். எனது நாயகி ''அதோ! சுவாமி போகிறார்'' எனக் கூறியவராய் என்னை முந்திச் சென்று சுவாமியை நெருங்கி ''சுவாமி'' என அன்போடு கூறினாள். சுவாமி ''நீ யார் பிள்ளை?'' என்று விசாரித்தார். நாயகி தம்மைபற்றிக் கூறினர். எனது நாயகி சுவாமியின் அன்பர்களில் ஒருவரான திரு. வெள்ளியம்பலம் என்பவரது மகளாவார். சுவாமி முன்னர் வெள்ளியம்பலம் அவர்களது இல்லத்துக்கு அடிக்கடி எழுந்தருளியதுண்டு. அப்போது எனது நாயகி சிறுமியாயிருந்தார். சிறுமியாயிருந்த எனது நாயகி சுவாமியின் வாத்சல்யத்துக்கு ஆளாகும் பேற்றினைப் பெற்றிருந்தார். நாயகி தன்னைப்பற்றிக் கூறியதும் ''ஓ சிறுமியாயிருந்தாய்! இப்பொழுது பெரிய பெண்ணாகி வளர்ந்து விட்டாய். பெரிய தாலிக்கொடியும் போட்டிருக்கின்றாய். யார் உனது மாப்பிள்ளை?'' என்று கேட்டார். நாயகி அருகில் நின்ற என்னைத் தொட்டுக் காட்டினர். சுவாமி என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டுப் ''போயும் போயும் இவனை உனக்கு மாப்பிள்ளையாக வாய்த்தான்; இவனை

நம்பாதே'' எனக் கூறிச் சிரித்தார். பின்னர் ''உனது கடமையில் தவறுதே'' எனப் புத்தி கூறினர். அருகேயிருந்த செட்டியார் கடைக்குள் அழைத்துச் சென்று குளிர்பானம் தந்தார். இவ்வாறுக யோகசுவாமியின் முதற்றரிசனமானது விரதமிருந்து பெரியாரொருவரைத் தேடிச் சென்று போற்றுதல் செய்யும் வழமையாக இல்லாது, பெரியாரொருவரின் உசபாரத்தைத் பெறும் புதுமையாக இருந்தது. அடியேன் யோகசுவாமியைப் பற்றி உள்ளக்கிழியில் எழுதியிருந்த உருவமோ துறவிகளின் துறவி என்பதாகவும், சுவாமிகளின் சுவாமி என்பதாகவும் இருந்தது. ஆனால் நேரில் தரிசித்த சுவாமியோ சிரித்துப்பேசி மகிழும் சந்தோஷமான மனிதராகவும், பாடறிந்தொழுகும் பண்பாளராகவும் தோன்றினர். சுவாமியின் எளிமை நீங்க நீங்க இன்பந் தேக்குவதாயிருந்தது. சுவாமியைக் கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்குச் சென்று தரிசிக்க வேண்டும் என்னும் ஆர்வம் பெருகியது. ஆயினும் எனது உத்தியோக அலுவல்களை நீங்கந்து கொழும்புக்குத் திரும்பி விட்டேன்.

கொழும்பிலே யோகசுவாமியின் அன்பராவோரைச் சந்திக்கும் போது அவர்களுடன் சுவாமியைப் பற்றிக் கதை தொடுப்பேன். சுவாமியைத் தரிசிப்பதற்குத் தகுந்த நேரம், கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்குச் செல்லும் வழி என்பன பற்றி விசாரித்து வைத்தேன். காலைப்பொழுது சுவாமியைத் தரிசித்தற்குத் தகுந்த நேரம் எனவும், புங்கன்குளம் புகையிரத நிலையம் ஆச்சிரமத்திற்குச் செல்வதற்குக் கிட்டிய புகையிரத நிலையமெனவும் தெரிந்தது.

விடுமுறையொன்றின் போது யாழ்ப்பாணம் வந்த பொழுது புங்கன்குளம் புகையிரத நிலையத்தில் இறங்கினேன். புலரிப் பொழுதாக இருந்தது. நேராகக் கொழும்புத்துறை சென்றேன். ஆச்சிரமத்தில் அன்பர் சிலர் முன்னிலையிலிருக்கச் சுவாமி அமர்ந்திருந்தார். சுவாமி என்னுடன் அன்போடு வார்த்தையாடினர். விடைபெறும் தருணத்தில் அருகிலிருந்த ஒருவரை நோக்கி என்னை யாழ்ப்பாணம் பஸ் நிலையம் வரை மோட்டார் வண்டியிற் கொண்டுபோய் விடுமாறு கூறினர். அன்றிலிருந்து யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் முதலில் ஆச்சிரமம் சென்று சுவாமியைத் தரிசித்த பின்னரே எனது இல்லம் செல்லும் நியமத்தைப் பேணி வந்தேன். ஒரு தடவை யாழ்ப்பாணம் வரும் வழியில் நாவற்குழிப் புகையிரத நிலையத்திலே புகையிரதம் சிறிது நேரம் தரித்து நின்றது. அப்பொழுது அருகேயிருந்த கடையொன்றில் பெரியதொரு வாழைப்பழக்குலை தொங்குவது கண்ணிற் பட்டது. சுவாமியிடம் செல்லும் போது வெறுங்கையுடன் செல்வது நன்றன்று எனும் எண்ணம் தோன்ற இறங்கிச் சென்று ஒரு சிப்புப் பழம் வாங்கி வந்து அதைப் பக்குவமாகப் பிரயாணப்பையில் வைத்தேன். யான் ஆச்சிரமத்துள் சென்ற போது ''என்ன பை பெரிதாக இருக்கிறது'' எனக் சுவாமி சிரித்தார். யான் பைக்குள் இருந்த பூசனைப்பொருளை எடுத்துச் சுவாமியின் திருமுன்னிலையில் வைத்தேன். சுவாமி ''பார்த்தீர்களா! இவர் ஒரு சீ ஐ. டீ. திறமான பழங்களாக வாங்கிவந்திருக்கிறார். இவர் அன்போடு கொண்டு வந்த பழங்களை நாம் உண்போம்'' எனக் கூறி முன்னிலையிலிருந்த அன்பர்களுக்குப் பகிர்ந்தளித்தார். தாமும் அருந்தினர். சுவாமி பல சந்தர்ப்பங்களிலே அடியவர் கொண்டு செல்லும் நிவேதனப் பொருட்களைத் திருப்பி அனுப்பிவிடுவதாகக் கேள்விப்பட்டிருந்தேன். எனது பூசனைப் பொருளைச் சுவாமி உகந்து கொண்ட முறையைப் பார்க்கப் பரமானந்தமாயிருந்தது.

ஒரு சமயம் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் முன்பாக இருந்த கடையொன்றில் நிகழ்ந்த களவு சம்பந்தமாய்ப் புலனுய்வு செய்வதற்கு யாழ்ப்பாணம் செல்லுமாறு பணிக்கப்பட்டிருந்தேன். பணிப்பினை ஏற்றுப் புகையிரத நிலையத்திற்கு வரும் வழியில் அந்நாட்களில் பிரபலமாயிருந்த ஆனந்தபவான் உணவுச்சாலையில் இளம் பச்சைநிறத்திலும், ஊதாநிறத்திலுமான அவுஸ்திரேலியத் திராட்சைப் பழக்குலைகள் தொங்குவது தெரிந்தது. அவை

சுவாமிக்கு உகப்பாகும் எனக்கருதினேன். அன்று மாதச் சம்பள நாளாகவும் இருந்தமையால் கையிற் போதிய காசும் இருந்தது. இரு வர்ணப்பழங்களையும் இருபைகளில் வாங்கிப் பக்குவமாக வைத்தேன். அவற்றை அடுத்தநாள் வைகறைப்போதில் சுவாமிக்கு நிவேதனம் செய்யலாம் என எண்ணி மகிழ்ந்தேன். புகையிரதம் அநுராதபுரத்தில் சற்று நேரம் தாமதித்து நின்ற போது நேரத்திற்கு யாழ்ப்பாணம் செல்லமுடியாமற் போமோ என்று எரிச்சலாக இருந்தது. புங்கன்குளம் புகையிரத நிலையத்தை அடைந்தபோது வெய்யில் காயும் வேளையாயிருந்தது. அவசரமாக ஆச்சிரமம் சென்றேன். ஆச்சிரமத்துள் புகுந்த போது சுவாமி கொட்டில் முற்றத்திலே அங்கும் இங்குமாய் உலாவுவது தெரிந்தது. யான் ஆர்வத்தோடு கிட்டச் சென்றேன். சுவாமி என்னைச் சின்னத்தனமான வார்த்தைகளால் ஏசுவதைக் கேட்கத் திகைப்பாக இருந்தது. யான் பக்குவமாகக் கொண்டு வந்த நிவேதனப் பொருளைச் சுவாமியின் திருவடியில் வைத்துக் கும்பிட முயன்றேன். ''உனது திராட்சைப் பழங்களைத் தின்ன இங்கு நாயோடா இருக்கிறது; எடு, கொண்டு போ'' எனச் சுவாமி சுடுசொற்களில் கூறினர். அப்பொழுது எனது ஈனநெஞ்சம் பாழ் எண்ணமொன்றை எண்ணியது. சுவாமி அவ்வெண்ணத்தை அறித்தவர் போன்று ''என்னைக் கிழவன் என்று எண்ணினையோடா'' எனக் கூறிச் சடையைவிரித்துக் காலைத் தூக்கிச் சூறைமாருதத்து எறியது வளியிற் கொட்கப் பெயர்க்கும் குழகனைத் தோன்றினர். திடீரென இடிபோன்ற குரலில் 'எபவுட்ரேண்' (மறுபக்கம் திரும்பு) எனக் கூறினர். சுவாமியின் ஆணை மீற முடியாததாக இருந்தது. தொடர்ந்து 'குவிக் மார்ச்' (விரைவாய் நட) லெவ்ற் றைற், லெவ்ற் றைற் (இடம், வலம் இடம்), எனக் கட்டளை தந்தார். யான் சுவாமியின் கட்டளைக்குத் தக இடம் வலமிட்டு முன்வாயில் வரை வந்தேன். வீதியை அடைந்ததும் 'ஸ்லோ மார்ச்' (மெதுவாய் நட) எனக் கூறிக் கட்டளை தந்தார். வீதியிற் செல்லும் போது மதிற் சுவரோரமாக நின்று எட்டிப் பார்த்துச் 'சும்மா போகாதேயடா; சிந்தித்துக்கொண்டு செல்லடா'' எனக் கூறினர். பின்னர் ''போகப் போகத் தெரியுமடா'' எனக் கூறினர். யான் ஆச்சிரம அனுபவத்தில் முற்றுப் மூழ்கிய வலுகக் கால் போனபோக்கில் போனேன். சுவாமி யான் அன்போடு கொண்டு சென்ற நிவேதனப் பொருள்களை நாய், நரி உகக்கும் புன் புலாலைப் போன்று வெறுத்து ஒதுக்கியதை எண்ண மனம் வெறுமையுற்று ஏங்கியது. காலைத் தூக்கிக் காலசங்கார மூர்த்தம் போன்று நின்றமையையும், ஆணையுரைகளின் ஆற்றலையும் எண்ணப் பயபக்தியாயிருந்தது. எனது பருத்த சரீரத்தாலே ஆச்சிரம முற்றத்தில் இடம் வலம் இட்டதை எண்ண இளநகை அரும்பியது. இவை எல்லாவற்றினும் பார்க்க அபிமான உணர்ச்சியே மேலோங்கியிருந்தது. கால் போன போக்கிற் போன யான் செண்ஜோன்ஸ் கல்லூரியின் முன்பாகப் பொலீஸ் உத்தியோகத்தர்ஒருவரின் மரியாதையை ஏற்றுக் கொள்ளும் வரை ஆச்சிரம நினைவுகளில் மூழ்கி என்னை மறந்த நிலையிலேயே சென்றேன்.

நாளாக நாளாக சுவாமி கருணையினாலே ஆதரம் பெருக அணைத்துக் கொண்ட அனுபவங்கள் பலவற்றினும், மறக் கருணையினாலே ஏசிக்கலைத்த இவ்வனுபவமே மனத்தில் நன்றாய்ப் பதிந்த பயன் மிகுந்த அனுபவம் என்பது தெளிவாகியது. சுவாமி சிந்திக்கச் சிந்திக்க மெல்ல மெல்ல வெளியாகும் ஞான வித்தையையே இவ்வருளாடலால் விளக்கியருளினர். பூசனைப் பொருளை வெறுத்தொதுக்கிய செய்கையானது, ஞானநாட்டங் கொண்டோர் அத்தகைய ஆடம்பரமான கைங்கரியங்களில் அகப்பட்டுக் கொள்ளாதவராய் இருத்தல் வேண்டும் எனும் உண்மையை உணர்த்தியது. அச்செய்கையானது, அகமுகமாகி உள்ளே உள்ளே சென்று தன்னையறிய முயலும் அடக்கமான சாதகர்களையே சுவாமி பெரிதும் உகப்பர் எனும் குறிப்பினையும் உணர்த்தியது. பொறிவழிச் செல்லும் பொய் நெறியினின்றும் திரும்பி அருள் வழிச் செல்லும் மெய்ந் நெறியில் செல்லப் பயிலுதல் வேண்டும் எனும் ஞானபாடத்தை 'எபவுட்ரேன்' எனும் பரிபாஷை உணர்த்தியது. சிலவேளைகளில் உளவறிந்து

உலகில் நிகழும் களவுகளை அறிவதைவிட்டு, உளவறிந்து எல்லாம் சிவன் செயல் என்று உணரும் பக்குவத்திற்குத் திரும்புதல் வேண்டும் எனும் பொருளையும் அப்பரிபாஷை உணர்த்தியது. இந்த ஞானசாதனையிலே மிகுந்த உற்சாகத்துடனும், விழிப்புடனும், விரைவுடனும் ஈடுபடுதல் வேண்டும் என்பதை இடம் வலமிட்ட செய்கை உணர்த்தியது. சுவாமியின் ஆற்றல் வாய்ந்த ஆணை மொழி அவர் ஒரு நிறை மொழியாளர் என்பதைத் தெளிவு படுத்தியது.

மெல்ல மெல்ல வெளியான இவ்வுண்மைகளுள் ஒன்றும் அந்நாளில் விளங்கவில்லை. அப்போது அபிமானஉணர்ச்சியொன்றே மேலோங்கியிருந்தது. ஆதலால் சுவாமிகளைத் தரிசிக்கச் செல்லும் வழக்கத்தை நிறுத்தி விட்டேன். ஆயினும் இவ்வபிமான உணர்ச்சி தணலின் மேல் படர்ந்திருக்கும் சாம்பர் போன்றதேயாகும். அச்சாம்பரினுள்ளே தகதகக்கும் தணல் இருப்பதைப் போல் சுவாமி பக்தி ஆழமாய் உறைந்திருந்தது. ஆதலால் சுவாமியை மனத்தினில் சிந்தித்து வழிபட்டு வந்தேன்.

இவ்வாறுய்ச் சிறிது காலம் செல்ல அவ்வாண்டுக் கந்த சஷ்டி விரதகாலம் நெருங்கி வந்தது. யான் அந்த வருடக் கந்தசஷ்டி விரதத்தைச் செல்வச் சந்நிதிக்குச் சென்று அனுட்டிப்பதெனத் திட்டமிட்டேன். விரதநாளுக்கு முன்னர் விடுமுறை எடுத்துக் கொண்டு புகையிரதம் ஏறினேன். அன்று பயணிகள் குறைவாயிருந்தனர். யான் இருந்த பகுதியில் எனது முன்னிலையில் ஒருவர் மட்டும் அமர்ந்திருந்தார். யானும் அவரும், முதலில் துயிலெழுபவர் மற்றவரை எழுப்புவது எனப் பேசிக் கொண்டு துயின்றோம். 'யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்' எனக் கூறுவதும் பிரயாணிகள் இறங்குவதும் புலனுகத் திடீரென விழித்து எனது பிரயாணப் பையையும் எடுத்துக் கொண்டு இறங்கினேன். யான் இறங்கவும், புகையிரதம் இயங்கத் தொடங்கவும் சரியாக இருந்தது. கதவைச் சாத்தி அடைக்கவும் முடியாத நிலையில்

புகையிரதம் ஓடத் தொடங்கியது. அப்பொழுது யான் இறங்கியிருக்கும் இடம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையமன்று எனவும், அது புங்கன்குளம் புகையிரத நிலையம் என்பதும் தெரிந்தது. அது ஓர் திருவருட் செயலே எனும் குறிப்புத் தோன்றி மகிழ்ச்சியளித்தது. காலை இளங்குளிர் உடலுக்கு உற்சாகத்தையளித்தது. எனது கால்கள் பழகிப் போன பாதையில் நடைபயின்றன. கொழும்புத்துறை சென்று ஆச்சிரமத்துக்கு முன்பாக உள்ள மதகுச் சுவரில் ஆறுதலாக அமர்ந்தேன். ஆச்சிரமத்துள்ளிருந்து சுவாமி கெக்கட்டம் விட்டுச் சிரிக்கும் ஒலிகேட்டது. சற்று நேரத்தில் ஆச்சிரமத்துள்ளிருந்து வெளிவந்த அடியவர் ஒருவர் நேராக என்னை நோக்கி வந்தார். அவர் சுவாமி என்னை அழைத்து வரும்படி கூறியதாகச் சொன்னர். யான் சுவாமி கூறியதைத் திடப்படுத்திக் கொள்ள விரும்பினேன். அவ்வடியவர் ''ஜீ.ஜி.டீ. வந்திருக்கிறார். அவரைக் கூட்டி வாருங்கள்'' எனச் சுவாமி கூறியதாகச் சொன்னர். அடியேன் ஆனந்தத்தோடு ஆச்சிரமத்துள் சென்றேன். சுவாமியின் திருமுன்னிலையிலே பரவசத்தனுய் வீழ்ந்து பாதங்களைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு ஆசைதீர வணங்கிக் கிடந்தேன். சுவாமி ''விடடா; வலிக்குதடா; நானும் மனிதனடா'' எனக் கூறி ''போதும், எழும்பு'' என அருளினர். அடியேன் சுவாமியின் திருமுன்னிலையிலமர்ந்து சுவாமியின் கருணை பூத்த திருமுகத்தைக் கண்களாற் பருகுதல் வேண்டும் எனும் சங்கற்பத்துடன் எழுந்து அவ்வாறே பனியரும் புதிர நோக்கியிருந்தேன். சுவாமி பார்வையை எடுக்குமாறு சாடை காட்டி வந்த காரியத்தை விசாரித்தார். எனது பதிலைக் கேட்டதும் ''நல்லூரும் நல்ல இடம். நல்லூரிலிருந்தும் விரதம் பிடிக்கலாம்'' என அருளினர். அடியேன் அவ்வாண்டு நல்லூரிலிருந்து விரதம் அனுட்டித்தேன்.

சுவாமி கால் வருத்தமாக யாழ்ப்பாணம் வைத்திய சாலையில் இருக்கிறார் என்பதைக் கேள்விப் பட்டவுடன் வைத்தியசாலைக்குச் சென்றேன். சுவாமி என்னைப் பார்த்து ''இவ்வேளையில் எப்படி வந்தாய்'' எனக் கேட்டார். அது

பார்வையாளரை அனுமதிக்காத வேளையாக இருந்தது. அடியேன் வாய் திறந்தால் அழுகை வரும் என்று அஞ்சி உத்தியோக அடையாள அட்டையைக் காட்டினேன். சுவாமி அருகில் வருமாறு சாடை காட்டினார். அடியேன் சுவாமியின் அருள் ஒழுகும் திருவதனத்துக்குக் கிட்டவாகச் சென்று உடல்கோட்டி நின்றேன். சுவாமி தமது கரத்தால் அடியேனது முதுகைத் தடவி ''உனக்கு எல்லாம் வெற்றி'' என நன்மொழி நவின்றார். அன்னையிலும் சால அன்புடையவரே எங்கள் சுவாமி.

ஒரு சமயம் உத்தியோக அலுவலாக யாழ்ப்பாண நகரை நோக்கிக் காங்கேசன்துறை வீதிவழியாய் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தேன். சிவதொண்டன் நிலையம் நெருங்கியதும் வழக்கம் போன்று வண்டியின் வேகத்தைக் குறைத்து இயலுமான வரை எழுந்து நின்று மரியாதை செய்த வண்ணமாக வந்தேன். சிவதொண்டன் நிலைய வாயிலில் நின்ற விசையூர்தியுள் சுவாமி அமர்ந்திருப்பது தெரிந்தது. வண்டியை வீதியருகில் நிறுத்தி விட்டுச் சுவாமியிடம் வந்து உத்தியோக உடையில் செய்யக் கூடிய மரியாதையைச் செய்தேன். சுவாமி அடியேன் செல்லும் கருமத்தை விசாரித்தார். விசாரித்தறிந்தபின் சீக்கிரமாய் செல்லுமாறு விடை தந்தார். விடை பெறும் பொழுது மீண்டும் அரசமரியாதை செய்தேன். அடியேனது உண்மையான ஆண்டான் யோகசுவாமிகளே. ஆதலால் எனது அரசமரியாதை உபசாரமானதாகவன்றி உண்மையானதாக இருந்தது. இத்தகைய உண்மையான அரசமரியாதையைச் சுவாமியின் திருவடிக் கலப்பு நிகழ்ச்சிகளின் போது ஆசைதீரச் செய்ய முடிந்தது. அன்று அடியேன் எனது உத்தியோகத்துக்குரிய முழு உடையை அணிந்திருந்தேன். திருவடிக் கலப்பு நிகழ்ச்சிகள் காணத் திரண்ட கூட்டத்தில், சுவாமி உகக்கும் ஒழுங்கு முறையை நிலை நாட்டும் பணியில் ஈடுபட்டதோடு, வேண்டும் போதெல்லாம் இராசாதி ராசாவான சுவாமிக்கு அரச மரியாதையும் செய்து திரிந்தேன்.

திருவடிக் கலப்பின் பின்னரும் சுவாமியின் திருமேனியைத் தரிசிக்கும் அற்புத அனுபவம் அடியேற்கு வாய்த்தது. சில ஆண்டுகளுக்கு முன் சிவதொண்டன் நிலையத்தில் நிகழ்ந்த குரு பூசையில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தேன். பூசை நிகழ்ச்சிகள் நிறைவுற்ற பின்னர் அன்று மாலைப் பொழுதில் செங்கலடிச் சிவதொண்டன் நிலையத்திலிருந்து வந்திருந்த செல்லத்துரைசுவாமிகளுடன் உரையாடியிருந்தேன். செல்லத்துரைசுவாமிகள் திண்ணையின் தென்கிழக்கு மூலையிலுள்ள தூணேரமாக அமர்ந்திருந்தார். தென் பக்கத்துத் திண்ணையிலும் கிழக்குப் பக்கத் திண்ணையிலும் அன்பர்கள் அமர்ந்திருந்தனர். யான் சுவாமியின் கிட்ட இருந்தேன். திடீரென்று மின்விளக்கு அணைந்து அந்தகாரம் சூழ்ந்தது. பின்னர் செல்லத்துரைசுவாமிகள் இருந்த இடத்தில் பெரும் சோதி தோன்றியது. அச்சோதியுள் சிவயோகசுவாமிகளின் திருக்கோலம் தெளிவாகத் தோன்றியது. அடியேன் ''இது என்ன சுவாமி! நாங்கள் உங்களது 23 ஆவது குருபூசை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் இங்கு உயிரோடிருக்கின்றீர்களே!'' என அலறினேன். சில கணப் பொழுதுகள் தோன்றிய சிவயோகசுவாமிகளின் திருக்கோலம் மறைந்து, அந்தகாரம் சூழ்ந்தது. மீண்டும் மின்விளக் கொளியில் செல்லத்துரை சுவாமிகள் இருப்பது தெரிந்தது. உரையாடலினிடையே சம்பந்தமில்லாமல் அலறிய இவ்வாசகத்தின் பொருளறியாது திண்ணையிலிருந்த அன்பர்களுக்கு நிகழ்ந்ததைக் கூறினேன். இந்நிகழ்ச்சியில் மனப்பிராந்தி ஏதுமில்லை. சுவாமியின் என்றுமுள்ள திருக்கோலத்தை அடியேன் விழிப்பு நிலையிலேயே காணப் பெற்றேன்.

திரு. S. இராசையா இளைப்பாறிய, பொலிஸ் அதிபர்
விடுதலை ஆச்சிரமம் சித்தன்கேணி.

★

கண்ணே உறங்குறங்கு கார்வண்ணு நீயுறங்கு
எண்ணேன் பிறதெய்வம் என்னிதயத் தேயுறங்கு

- நற்சிந்தனை

PUBLIC LIBRARY

13 பொன்னும் மெய்ப்பொருளும் தருவான்

யான் பிறந்து மொழி பயின்ற காலம் முதல் எம்மூர்க் கோயிலில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரைக் கும்பிடும் பாக்கியம் பெற்றவனுயிருந்தேன். சிறுவனுயிருக்கும் போதே சிற்றஞ் சிறுகாலையில் துயிலெழுந்து, சீதப்புனலாடி, நல்ல மலரெடுத்துச் சென்று நாடோறும் போய் வணங்கும் நியமம் பொருந்தியது. எமது ஊர்க் கற்பகப்பிள்ளையார் எனக்குக் கனியினும், கட்டி பட்ட கரும்பினும் இனியனுய்த் தோன்றினர். கோயிலை வலம் வருகையில் கருவறையின் பக்கலில் நின்று கும்பிடும் பொழுது அக்கருவறையானது, ஆனந்தத் தேனிருக்கும் பொந்தாகவே எனக்குப் பட்டது. இவ்வண்ணம் பக்தி செய்யும் பாக்கியம் பெற்ற எனக்கு இளமையிலே **விநாயகர்அகவல்**என்னும் தோத்திரம் கைக் கெட்டியது. அதனை இரண்டொரு தினங்களில் மனனஞ் செய்து விட்டேன். பெருமானின் திருமுன்னிலையில் நின்று அத்திருப்பாசுரத்தை ஓதுவது பெரிய மனநிறைவைத் தந்தது. அவ்வாறு ஓதுவதைப் பெருமான் தமக்குகந்த அர்ச் சனையாக ஏற்றருள்வார் எனும் நம்பிக்கையில் மனங்களித் தேன். நாளாகஆக விநாயகரகவலிலுள்ள

''குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென,
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி''

எனும்அடிகள்அற்புதசோபையுடன் மனத்தில் ஒளிரலாயின. பெருமான் என்னை ஓர் குருபரனுடன் கூட்டி வைப்பார் என்னும் நம்பிக்கை பிறந்தது. இந்நம்பிக்கை வளர்ந்து மனம் நிறைந்த வேளையில் கொழும்புத் துறையூரில் உறை யும் சிவயோகசுவாமிகளைப் பற்றிப் பலரும் பேசும் பேச் சுக்கள் என்னை அருட்டலாயின. இவ்வருட்டுணர்வால் விழிப் புற்றுச் சிவயோக சுவாமிகளைத் தரிசிக்க வேண்டும் என் னும் ஊக்கம் பெற்றேன். சிவயோக சுவாமிகளை அதிகாலை யிற் சென்று தரிசிப்பதே சிறந்ததென்பது பலரது கதைக ளினிருந்தும் தெளிவாகியது. ஆதலால் எமது குலதெய்வத்

தைக் கும்பிடச் செல்வது போலவே ஒரு நாள் விடியற் போதில் சுவாமியைத் தரிசிப்பதற்காகச் சென்றேன். அப் பொழுது சுவாமி ஆச்சிரம முற்றத்தைக் கூட்டிக் கொண் டிருந்தார். அவரது அங்கமெல்லாம் திருநீற்றுக் குறிகள் நிறைந்திருக்கவில்லை. புரிசடை தொங்கவில்லை. காவி உடுத் திருக்கவில்லை. எல்லோரையும் போன்ற இயல்பான கோலத் தில் நின்று பெருக்கிக் கொண்டு நின்றார். சுவாமி பெருக் கிய முற்றம் அலகுக் கோலத்தால் பொலிவு பெற்றிருந்த அழகினை நயந்த வண்ணம் சுவாமியின் அருகில் நின்றேன். அப்பொழுது சுவாமி ''இதோ நான் கூட்டுகிறேன், இதற்கு இறைவன் கூலி தருவார்.'' என அருளினர். சுவாமி தன் மேல் ஏற்றிச் சொன்ன இவ்வாசகம் உண்மையில் என் பொருட்டு அருளிய உறுதி மொழியேயாம். ''தொண்டு செய்வார்க்கு உண்டே ஞானம்'' எனும் உண்மையைச் சுவாமி இப்படி ஒரு நுட்பமான உபாயமாக அருளினர். உழ வாரப்படையாளியான திருநாவுக்கரசுநாயனர் தாம் பாடிய

''புக்க ணைந்து புரிந்தல ரிட்டிலர்
நக்க ணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்க ணைந்த சுடரொளி வண்ணனை
மிக்குக் காணலுற் றீரங் கிருவரே''

முதலாய இலிங்கபுராணக்குறுந்தொகைப் பாடல்கள் பதி னென்றிலும் திருமால், பிரமன் இருவரும் இறைவனைத் தேடிக் காணுது பட்ட கஷ்டத்துக்குக் காரணம் அவர்கள் தொண்டு செய்யாமையே என்பதை அங்கதச் சுவையுடன் அருளியிருக்கிறார். திருவலகு கைக்கொண்டு நின்ற கொழும் புத்துறைச் சுவாமிகளும் திருத்தொண்டு செய்து திருவடி ஞானம் பெறும் நெறியையே எனக்கு மேற்கண்டவாறு எளிமையாக அருளினர். அவ்வருள் வாசகம் உபதேச மொ ழியாகவன்றி வரமாகவே படுகிறது. இருபத்தைந்து ஆண் டுகளாக மாதந் தோறும் வரும் சிவதொண்டன் யாகநாட் களிலும், ஆயிலிய நாட்களிலும் தவறுது கலந்து கொண்டு திருத்தொண்டியற்றுதற்கான வல்லபத்தை அந்த வாக்கே

அளித்திருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் பயங்கரநீலி உச்சக் கட்டமாயிருந்த வேளைகளில்- இல்லங்களிலும், கோயில்களிலும் இருந்தவர்கள் பொது முகாங்களுக்கு அழைக்கப்பட்ட வேளைகளில்- சிவதொண்டன் நிலையத்தில் தங்கித் திருவடிக்குப் பூச்சாத்தும் பேற்றினையும் அந்த வாக்கேயருளியது. இவ்வண்ணஞ் சுவாமி அந்தமும் ஆதியும் இல்லா மறை ஞான மொழியொன்றை மிகவும் எளிமையான முதன்மொழியாக அருளிய பின்னர் எனது ஊர்போகளையும் விசாரித்தறிந்தார். அறிந்ததும் ''உனக்குப் பொரளை நாகலிங்கந் தாரைத் தெரியுமோ? நீயும் அவரைப் போல் நல்லாய்ப் பணத்தைச் சம்பாதி'' எனக் கூறினர். இந்த வாசகம் அப்போது எனக்கு மிகுந்த எரிச்சலூட்டியது. யான் என்னை வீட்டு நெறியில் நாட்டமுள்ளவனுகவும், துறவு பூணுவதில் விருப்பமுடையவனுகவும் எண்ணியிருந்தேன். சுவாமி என்னிடம் முத்திக்கு வழியை மொழிவார் எனவே யான் எதிர்பார்த்தேன். சுவாமியோ புடைவைக் கடை வைத்துப் பணம் சம்பாதிக்கும் ஒருவரை எனக்கு உதாரண புருடராகக் காட்டுகிறார். அருட் பிரசாதத்தை நாடிச் சென்ற அடியவருக்கு உலக போகமாகிய வாந்தியைக் காட்டுவதோ? இவரோர் சுவாமியோ? என்றவாறு மனத்துள் எண்ணினேன். ஆனல் சுவாமியின் வாக்கே உண்மையாயிற்று. என்னிடம் முகிழ்த்த துறவு மோகம் தகதகக்கும் தணலின் மேற்படர்ந்த சாம்பரைப் போன்றதே. என் உள்ளே சருகுண்ணி போல் தூங்கிக் கிடந்த பொருளாசையைச் சுவாமி கண்டு அவ்வாசையையும் அனுபவித்து இகசுகமடையட்டுமே என இரங்கி அவ்வாறு அருளினர் போலும் என்பதைப் பின்னர் உணரலானேன். அவ்வாறு இகசுகம் ஈந்த பின்னர் சுவாமி ''நாங்கள் உனலை வாய்க்குள் போடுகிறோம்; ஆனல்'' எனக் கூறி நிறுத்தினர். சில கணங்களின் பின் ''செமிப்பது பரம இரகசியம்'' என நிறைவு செய்தார் எமக்கென்ற இச்சா சுதந்திரம் சிறிதுமில்லை. எல்லாம் சிவன் செயலாய் உள்ளன என்னும் உயர் ஞானத் தெளிவை இவ்வாறனதோர் எளிதில் விளங்கும் உதாரணத்

தால் சுவாமி எடுத்துக் காட்டினர் என்னுந் தெளிவு இப்பொழுது உள்ளது. ஒரு பொழுது வாய்க்குள் உணவை இடுமாப் போன்று முற்றுக ஒப்படைக்கவும்; ஏனையவற்றை யெல்லாம் தாங்கள் பார்த்துக் கொள்வோம் என சுவாமி அருளியதாகவும் விளங்கியது.

சுவாமியின் முதற்றரிசன வரலாறு ஒரு சிறந்த மறை ஞான அனுபவமாயமைந்தது. சிவயோக சுவாமி செல்லப் பதேசிகரைத் தரிசித்த முதலனுபவத்தைக் கூறும் போது 'அன்றே யான் பெற்றேன் அருள்' எனக் கூறியிருக்கிறார். அருள் மேனி தாங்கி நின்ற சிவயோக வள்ளலும் ஏழை யடியனுகிய என்னைக் கண்ட அப்பொழுதே தமது அளப் பருங் கருணையை வரையாது வழங்கினர் எனப்படுகிறது. ஆதலால் சிவயோக சுவாமியின் அன்பர் சிலர் சுவாமி என்னைத் தழுவி ஆலிங்கனம் செய்தார்; சுவாமி என்னை நான் மறந்திருக்கும் வண்ணம் தன் கைகளால் தொட்டார்: என்னை அருளொழுகப் பார்த்துச் சிரித்தார்; என்றவாறு கூறி, ஆனல் இன்னும் ஞான சுகம் வாய்க்கவில்லையே என ஏங்கி நிற்கும் போது, அவர்களிடம் மேல்வருமாறு கூறக் கூடிய தைரியம் ஏற்படுகிறது. சிவயோக சுவாமி விதைத்த வித்து நல்ல வித்து; அது தக்க பருவத்தில் முளைத்து வளர்ந்து பலன் தரும் கார்த்திகைப் பூச்செடி. கோடை காலத்தில் நின்ற இடமே தெரியாத வண்ணம் மறைந்து விடும். ஆனல் அதன் கிழங்கு நிலத்தின் கீழ் ஜீவசக்தியோடு பக்குவமாயிருக்கும். கார்காலம் வந்து பருவ மழை பெய்ததும் முளைவிடத் தொடங்கும். கார்த்திகை மாதத்தில் செந்நிறமான கார்த்தூள் மலரைப் பூத்து நிற்கும்.

சுவாமியின் முதற்றரிசனம் பற்றிய இத்தகைய விளக்கம் சுவாமியுடனும் சுவாமியின் ஞான சம்பத்தை முதுசொமாகப் பெற்றுக் கொண்ட வழியடியாருடனும் பல்லாண்டு காலமாகக் கூடி வாழ்ந்த அனுபவத் தெளிவில் கண்டதாகும். முதற்றரிசன நாளன்று இத்தகைய மறை ஞான அனுபவமெதுவும் விளக்கமாகவில்லை. ஆதலால் அடுத்த சில

ஆண்டுகள் சுவாமியைத் தரிசியாத ஆண்டுகளாக வீணுப்க் கழிந்தொழிந்தன. இக்காலத்தில் நல்லாய்ப் பணம் சம்பாதிக்கக் கூடிய ஒரு தொழில் வாய்த்தது. போதுமளவும் பொருளீட்டினேன். நான் ஒரு பொருளாளியாய் மாறியிருந்த அந்நாட்களிலொருநாள் 'நாகலிங்கத்தாரைப் போல நல்லாய்ப் பணம் சம்பாதி' என்ற சுவாமி வாக்கு திடுமென நினைவு வந்தது. சுவாமி வாக்குப் பலித்துப் போயிருந்ததை எண்ணி ஒரு புறம் வெட்கமாக இருந்தது. இது, ஒழுக்கத்திற் சிறந்தவர்கள் எனத் தருக்கியிருந்த தாருகா வனத்து இருடிகள், மோகினி வடிவு கொண்டு வந்த விஷ்ணுவின் பின் இழுப்புண்டு சென்று வெட்கித்து நின்றமையை நினைவூட்டியது. இவ்வெட்கத்தினும் சுவாமி எனது அந்தரங்கத்தை நன்முயறிந்தவர்; அவரே எனக்கு நல்ல வழிகாட்டி எனும் எண்ணமே மேலோங்கி எழுந்தது. அப்பொழுதே மானசீகமாகச் சுவாமியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நின்றேன். அன்று சுவாமியின் சிறப்புக்களை அறிந்த நண்பரொருவரோடு சுவாமியின் பெருமைகளை உரையாடி மகிழ்ந்தேன். இருவரும் சுவாமிக்கு ஏதேனும் பணிசெய்தால் சிறப்பாயிருக்கும் என எண்ணினோம். அப்பொழுது சுவாமி யாழ்வை. சி. சி. கு. தேநீர்க் கடையில் பால் வாங்கி வந்தார். பாலுக்குரிய மாதாந்தப் பணத்தைத் தேநீர்க் கடைக்குச் செலுத்துவது ஒரு நல்ல பணியென இருவருக்கும் தோன்றியது. உற்சாகத்தோடு தேநீர்க் கடைக்குச் சென்று தேநீர்க் கடை முதலாளியிடம் எமது எண்ணத்தை வெளியிட்டோம். அவர் சுவாமி ஏசுவாரோ எனத் தயங்கினர். ஆயினும் எங்களது உறுதியின் முன் அவரது தயக்கம் தளர்ந்தது. நாங்கள் பணத்தைக் கொடுத்து விட்டுக் கொழும்புத்துறைக்குச் சென்றோம். சுவாமி ஆச்சிரமத்துக் கொட்டிலில் இருந்து எங்களை வாருங்கள் என அழைத்தார். நாங்கள் ஆர்வத்தோடு சென்று சுவாமியின் திருமுன்னிலையில் அமர்ந்தோம். உடனே சுவாமி ''இந்தா நாம் கணக்கு வழக்குப் பார்க்க வேண்டும்; இனிமேல் கொடுக்க வேண்டாம்'' எனக் கூறினர். சுவாமியின் இந்த வாசகம் என்னை அதிரப் பண்

னியது. ஒரு பழைய கொட்டிலிலுள்ள எளிமையான மனிதக் கோலத்தின் முன்னன்றி எல்லாம் அறிய வல்லவராஜ ஈஸ்வரனின் முன் அமர்ந்திருக்கும் எண்ணமே நிறைந்திருந்தது. அக்கணத்தில் என்னைத் தெய்வப் பித்தூப் பிடித்துக் கொண்டது. சில நாட்களுக்கு இத்தெய்வப் பித்து நீடித்திருந்தது. அன்றுடக் கடமைகளை வழமை போற் செய்த போதும் சுவாமியின் அந்த வாக்கே அந்தரங்கமாக நிறைந்திருந்தது. நான் உண்பது, உடுப்பது, உறங்குவது, தொழில் செய்வது, சோம்பியிருப்பது, எண்ணுவது, எல்லாவற்றையும் சுவாமி அறிந்து கொண்டிருக்கிறார் எனும் உறுதி பிறந்தது. சுவாமி என்னைக் கண் காணிப்பவராகவும் எனது பரிபாலகராகவும் உள்ளார் எனும் நம்பிக்கை வலுத்தது. எனக்கோர் தலைவன் உளன். அவருக்கிணங்க ஒழுக்கமானவனாகவும், உண்மையானவனாகவும் ஒழுக வேண்டும் எனும் தெளிவு பிறந்தது. ஆச்சிரமத்துக்கு அடிக்கடி சென்று சுவாமியின் திருமுன்னிலையில் அமர்ந்திருந்து ஆனந்திக்க வேண்டும் எனும் ஆசை பிறந்தது. வாரந் தோறும் சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் பூசைப் பொருட்களுடன் சென்று சுவாமியைத் தரிசித்து வரலானேன்.

யான் சிறு பிராயந் தொட்டுப் பிள்ளையார் உபாசகனாகவே இருந்து வந்தேன். இப்பொழுது தியான வேளையில் இடையிடையே பிள்ளையாருடன் சிவயோக சுவாமியின் திருமேனியும் முன்னிற்கலாயிற்று. குருமூர்த்தம் தியான மூர்த்தமாக அமைவது குறித்து மகிழ்ச்சியாயிருந்தது. ஆயினும் அறிவறிந்த காலம் தொட்டு வழிபட்டு வந்த பிள்ளையாருவை விட்டுவிடுவது உய்தியில் குற்றம் எனும் அச்சமும் எழுந்தது. ஆகவே பிள்ளையாரைத் தியானிப்பதா? சிவயோக சுவாமியைத் தியானிப்பதா எனும் தரும சங்கட நிலையில் யான் அகப்பட்டுக் கொண்டேன். இவ்வண்ணம் இருமாத காலமாகச் சஞ்சலமுற்ற பின்னர் குருபரனையே தியானிப்பது எனும் உறுதியுடன் ஒருநாள் ஆச்சிரமத்துக்குச் சென்றேன். சிவயோக சுவாமி கொட்டிலுள் அமர்ந்து அன்ப

ரொருவரிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். அவரது முன்னிலையில் எப்பொழுதும் போன்று ஒரு தண்ணீர்ச் செம்பு இருந்தது. சுவாமி என்னை உள்ளே வருமாறு அழைத்துத் தமது முன்னிலையில் அமருமாறு அருளி விட்டு அன்பருடன் பேச்சைத் தொடர்ந்தார். அன்பருடன் பேச்சைக் கொடுத்துக் கொண்டே எனது முகத்துக்கு நேராகத் தமது வலக்கைச் சுட்டு விரலையும் நடுவிரலையும் நீட்டி ஆட்டிக் கொண்டிருந்தார். இரு நிமிடங்களாக இச்சாலத்தையே நிகழ்த்திக் கொண்டிருந்தார். பின்னர் இருவிரல்களையும் ஆட்டம் அசைவின்றி நேராய்ப் பிடித்து என்னை நோக்கினார். சுவாமியின் அருள் நோக்குப் பிள்ளையார் தான் என்றிருவரும் ஒருவரே என்பதைத் திடமுற உணர்த்தியருளியது. இதன் பின் குருவேறு இறைவன் வேறு எனும் அறியாண்மை அகன்றது. குருவே சிவம் என்பர் பெரியோர்.

ஆன்ம சாதனை பயில்வார்க்குச் சாதுசங்கம் வாய்ப்பான தொன்றாகும். ஆதலால் அவரிவரென்று பாராது அடியாராயெல்லாரையும் வரவேற்று அவர்கட்கு உகந்த வற்றைச் செய்வது எனது இயல்பாயிருந்தது. ஒரு சமயம் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. முத்தையா அவர்கள் புங்குடு தீவிலே திவ்விய ஜீவன சங்கக் கிளையை அமைப்பது நல்ல தெனக் கடிதம் எழுதினர். பின் அவர் நேரிற் சந்தித்தும் கேட்டுக் கொண்டார். திவ்விய ஜீவன சங்கக் கிளை நிறுவும் நாளன்று அந்நாட்களில் பிரபலமாயிருந்த கண்டிப் பகுதியில் உறையும் சச்சிதானந்த யோகீஸ்வரர் வருகை புரிவாரெனவும் கூறினர். யான் யோகீஸ்வரரின் வருகையை நினைந்து மகிழ்ந்தேன். ஏற்பாடெல்லாம் பூர்த்தியாயிருந்த வேளையில் தமிழகத்திலிருந்து குன்றக்குடி அடிகளாரும் யாழ்ப்பாணம் வந்திருந்தார். யோகீஸ்வரர் எழுந்தருளும் இடத்தில் குன்றக்குடி அடிகளையும் கலந்து கொள்ளச் செய்வது சிறப்பாயிருக்கும் என அன்பரொருவர் கூறினர். இப் பெரிய சாதுக்களின் சந்திப்பு அன்பரானவர்கட்கு ஆனந்தமாயிருக்கும் என யானும் நம்பினேன். ஆயினும் கருத்து முரண்பாடுகள் தோன்றினால் ஒழுங்கினமாய்ப் போகும்

எனும் எண்ணமும் உதித்தது. கூட்டம் நடைபெறுவதற்கு முதல் நாளன்று நல்லூர் வீதியிலிருந்து யோகீஸ்வரருடன் கதைத்திருக்கும் போது உங்களுக்கும் அடிகளாருக்கும் வேதாந்த சித்தாந்த முரண்பாடு ஏற்படாதோ எனக் கேட்டேன். அப்படியொன்றும் நடவாதென அவர் கூறினர். அடுத்த நாள் கூட்டம் கோலாகலமாய் ஆரம்பமாகியது. இருபெரும் சாதுக்களின் வேடப் பொலிவினைக் கண்டு மக்கள் பரவசமாயினர். கூட்டத்திலே யோகீஸ்வரர் பேசிக் கொண்டிருக்கும் பொழுது குன்றக்குடியடிகளார் பொறுமையிழந்தார். பேச்சிடையே குறுக்கிட்டு ஆட்சேபம் தெரிவித்தார். யோகீஸ்வரரும் மறுப்புரை கூறவே கூட்டம் குழம்பலாயிற்று. பக்திப் பரவசமாயிருந்த சாமானிய மக்கள் மத்தியில் சாதுக்கள் இருவரும் தத்தம் சிறுமைகளைப் பறை சாற்றிக் கொண்டு நின்றனர். ஏற்பாடு செய்த நாங்கள் வெட்கித் தலை குனியும் வகையில் கூட்டம் கலைந்தது. அடுத்த நாள் மாலையில் சுவாமிகளைத் தரிசிப்பதற்காகச் சென்றேன். சுவாமி அமர்ந்திருக்கும் கொட்டிலினுள்ளே நேராகச் செல்வதற்குத் தயக்கமாக இருந்தது. வாசலில் கூச்சத்தோடு நின்றேன். சுவாமி என்னைக் கண்டதும் காலைத் தூக்கிப் பதுமாசனமிட்டு நேராய் நிமிர்ந்து அமர்ந்து 'என்ன வந்தது' எனக் கேட்டார். நான் பேசாமல் நின்றேன். பின்னர் ''இந்தா பார்! சச்சிதானந்தா, குன்றக்குடியார், இவர்களெல்லாம் ரிஷிபத்தினிகளை வைத்திருக்கிறார்கள்... நாங்கள் துறவிகள்'' எனச் சுவாமி கூறினர். சுவாமி எல்லாம் அறிந்தவர் என்பதில் இப்போது வியப்பேதும் தோன்றவில்லை. சாதுக்களென நம்பி கண்ட நின்றவர்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிடும் எனது வழக்கத்தை நினைந்தே வெட்கமாயிருந்தது. வேடதாரிகள் மீது கொண்ட மாயினைக் களைந்தெறிதல் வேண்டும் எனும் உறுதி பிறந்தது. குருநெறி செல்வார்க்குக் கொண்டானையல்லால் அறியாக் குலக்கொடி போன்ற கற்பெனும் திண்மை அணிகலமாகும் எனும் அறிவு பிறந்தது. முன்னோட்களில் பகவான் ரமண மகரிஷி, ராமக்கிருஷ்ணபரமஹம்சர் முதலாய மகான்

களின் மகத்துவத்தை மதித்த போதும், இதன் பின் சுவாமி மீது கொண்ட பக்திக்கும் இணையாக ஏதுமுருவாகவில்லை. பகவான் ரமண மகரிஷி முதலானவர்கள் பெரிய மகான் கள். ஆனால் சிவயோக சுவாமியோ எமக்குச் சிவபெருமான். அருங்குணமிக்க அன்னையர் பலரிருப்பினும் மைந்தனுக்கு ஈன்ற தாய் மீது உள்ள பாசம் இணையில்லாததன்றே!

சிவதொண்டன் வெள்ளிவிழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்ட போது இலங்கையின் பலபாகங்களி லும் பரந்திருந்த சுவாமியின் திருக்கூட்டம் யாழ்ப்பாணம் வந்து நிறைந்தது. திருக்கூட்டத்தினர் கொழும்புத்துறை சென்று வரிசையாய் நின்று ஒவ்வொருவராய்ச் சுவாமியைத் தரிசித்தனர். சுவாமியும் தம்மைத் தரிசித்த அன்பர்களை வருக்கும் அவரவர் பாத்திரத்துக்கேற்ப அருளாரமுதம் ஈந்தனர். யானும் வரிசையிற் சென்று சுவாமியின் திருமுன் னிலையில் நின்ற பொழுது ''இந்தாரும், என்னுடைய குறை யை உன்னிடம் தருகிறேன்; மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்'' எனச் சுவாமி அருளினர். இவ்வாசகத்தின் பொருள் சுவாமி சமாதி அடைத்த பின்னரே ஒருவாறு விளங்கலாயிற்று. சுவாமி ஏழைத்தொழும்பனுகிய என்னை யும் தனது திருக்கூட்டத்துள் ஒருவனையேற்று என்னைப்பணி கொண்ட கருணையை எண்ணி வியந்தேன். சுவாமியின் தனிப்பெருங்கருணை ''நாடறிய என்னை நல்ல தொண்டு செய்ய வைத்த, கேடுபடாத் திருவடியைக் கிளத்துதுங்காண் அம்மானுய்'' என்று பாடிப் போற்றும் படியாயுள்ளது.

ஒருமுறை சுவாமி ஏகாந்தமாய் இருந்த வேளையில் அவர் திருமுன்னிலையில் அமர்ந்திருந்தேன். சுவாமியின் உபசாந் தம் என்னையும் விழுங்கிக் கொள்ளும் உணர்வில் பேச்சேது மின்றி என்னை மறந்த ஒடுக்கத்தில் இருந்தேன். சுவாமியின் நாதம் கேட்டு நோக்கிய பொழுது சுவாமியின் திருவாய் மொழி மேல்வருமாறு மலர்ந்தது. ''இதோ நான் சும்மா இருக்கிறேன், நினைத்தவுடன் கார்மேகம், எல்லாம் வரும், நீயும்

சும்மா இருந்துபார், உனக்கும் எல்லாம் வரும்.'' இம்மறை மொழியின் பொருளை எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பது?

சுவாமி சமாதி அடைவதற்கு முந்திய ஓராண்டுக்கா லத்துள் விளக்கமில்லாத பலருஞ் சுவாமி 'மாறுட்டமாகப் பிதற்றுகிறார்' என எண்ணியிருந்த காலத்தில் மேலான அனுபவங்களையும் ஞானத்தெளிவில் மலர்ந்த வாசகங்களை யும் பெற்றேன். 1963ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப் பன்று சுவாமியைத் தரிசிப்பதற்காகச் சென்றேன். அன்று அடியார் கூட்டம் நிறைந்திருந்தது. சுவாமியைக் கதிரையி லிருந்து இறக்கி மண்டபத்திலிருந்த கட்டிலில் எழுந்தருள வைத்தார்கள். சுவாமி கட்டிலில் வீற்றிருந்தவாறு 'மா' என்று அழைத்தார். திருமதி இரத்தினம் நவரெத்தினம் அவர்கள் விரைவில் வந்து நின்றார். சுவாமி அவரிடம் வடை கொண்டு வருமாறு பணித்தார். சிறிது நேரத்தில் வடை யும், தேநீரும் வந்திருந்த அன்பர்க்கெல்லாம் பரிமாறப் பட் டது. பொழுது சென்றதும் ஒவ்வொருவராகச் சுவாமியி டம் விடை பெற்றுச் சென்றனர். சுவாமி என்னைக் கூப்பிட் டுத் தமது திருவடியைச் சுட்டியவாறே 'இதிலே இரும்' எனக் கூறினர். நான் அன்னையின்காலடியில் அமர்ந்திருப்பது போன்று நெருக்கத்தோடு சுவாமியின் அருகில் அமர்ந்தேன். சுவாமி 'இன்று நீர் வீட்டுக்குப் போகப் படாது' என அருளினர். இவ்வருள் வாக்கு எனக்கு மிகுந்த ஆனந்தத் தை அளித்தது. ஆச்சிரமவாசி திருநாவுக்கரசு அவர்கள் எங்களுக்கு உணவு அளித்தார். சுவாமியோடிருந்து அமுது செய்தேன். இரவானதும் தென்பக்கச் சுவரோரத்தைக் காட்டி 'அதில் கிடவும்' என அருளினர். சுவாமியின் இஷ் டப்படி சுவாமியின் திருமாளிகையில் கிடப்பது இணையில் லாச் சுகத்தைத் தந்தது. நான் நித்திரையின்றிச் சுவாமி யின் நினைவாகக் கிடந்தேன். நடுச்சாமத்தில் சுவாமியின் குரல் கேட்டது. பின் அதிகாலையில் அதில் கிடக்கிறது யார் எனச் சுவாமி அதட்டினர். சுவாமியின் நினைவாய் விழிப்பு டனிருந்தமையால் 'நான்' எனச் சொல்ல நா எழவில்லை. ''ஆக்கை நீயல்லை, நீயோ ஆன்மா என்னும் அறிவில் விழிப்

யிருப்பதற்காகவே சுவாமி அவ்வண்ணம் வினவுகிறார் என் பது உடனே நினைவு வந்தது. நான் ஒன்றும் பேசாது எழுந்து நின்ற போது தேநீர்ப் போச்சியால் எறிந்து விடப் போவதாகச் சுவாமி பாசாங்கு பண்ணினர். பின்னர் 'கிட்ட வா' என்று கூப்பிட்டுப் பிடரியிற் தட்டி மேற்கு வாயி லாற் சென்று வெளியில் நிற்குமாறு அருளினர். நான் மேற்கு வாயிலால் சென்று வெளியில் நின்ற சமயம் கிழக்கு வாயிலினூலே திரு. சிவபாதசுந்தரமவர்கள் பூக்கொண்டு வந்து சுவாமியைக் கும்பிட்டு நின்றார். சுவாமி அதிகாலைப் பொழுதில் யான், அபிடேகம் ஆட்டும் நிகழ்ச்சியையும், அன் பரின் பூசனையை ஏற்பதையும், ஓரிடத்து வேலையாய் ஒரு வ ரொருவரை யறியா வண்ணம் நிகழ்த்தி முடித்தனர்.

இவ்வாண்டிலோர் நாள் சுவாமியைத் தரிசிக்கச் சென்ற தருணம் முன்வாயில் சாளரமெல்லாம் சாத்தப்பட்டிருந் தன. பின்கதவு திறந்திருந்தது. திரு. இராசரெத்தினம் தம் பதியர் உள்ளேயிருந்தனர். சுவாமி துயில்கின்றார்; உள்ளே வர வேண்டாம் என அவர்கள் கூறினர். யான் திண்ணை யில் அமர்ந்தேன். சிறிது நேரத்தில் ''வெளியில் இருப்பவ ரைக் கூப்பிடு'' எனச் சுவாமி கூறுவது கேட்டது. யான் உள்ளே சென்றேன். சுவாமி இராசரெத்தினம் தம்பதியா ரை விடை கொடுத்தனுப்பிவிட்டுப் பேசாமல் அமர்ந்தி ருந்தார். யானும் பயபக்தியோடு சும்மா இருந்தேன் சற்று நேரத்தில் சுவாமி என்னைக் கூப்பிட்டு முதலில் தேவாரத் தைப் பாராயணம் பண்ணு என மொழிந்தார். யான் தேவா ரத்தில் எந்தப் பகுதியாகுமோ என எண்ணமிட்ட போது அதுதான் திருநீற்றுப் பதிகம் என அருளினர். பின்னர் வலக் கையைப் பிடித்து ''ஒரு கணமும் மறவாதிரு'' எனத் தீர்க் கமான குரலில் மொழிந்து 'இப்படிப் போ' என்றார். நான் வாயிற் படியைக் கடக்கும் பொழுது தம்மிடம் வரு மாறு அழைத்து இடக்கையைப் பிடித்து ''ஒரு கணமும் மறவாதிரு'' என ஓதி அனுப்பினர். வாயிலை நெருங்கும் பொழுது மீண்டும் அழைத்து வலக்கையைப் பிடித்து ''ஒரு

கணமும் மறவாதிரு'' என அருளினர். சுவாமி முக்காலும் அருளிய இம்மறை மொழியின் ஆழ்பூதிப் பொருளைப் பின் னர் சுவாமியின் ஞானப் புதல்வரிடமிருந்து உணர்ந்து கொண்டேன்.

மற்றுமோர் நாள் ஆச்சிரமஞ் சென்று சுவாமியின் திருவடிகளிலே வீழ்ந்து கும்பிட்டு எழுந்து நின்றேன். சுவாமி அமருமாறு அருளினர். சுவாமியின் திருமுன்னிலையில் அடி யார் பலர் அமர்ந்திருந்தனர். அப்பொழுது சேர். வை. துரைசுவாமி அவர்கள் வந்து நின்றார். சுவாமி 'யாரது' எனக் கேட்டுவிட்டு வலக்கையை உயர்த்தி நெற்றியிற் பிடித்து ''ஓ சேரோ'' எனக் கூறினர். பின்னர் என்னைப் பார்த்துக் கைவிரலை நீட்டினர். கதிரையை எடுத்துப் போ டுமாறு சுவாமி நினைக்கிறார் எனக் கருதிக் கதிரையொன்று கொண்டு வந்து 'சேரின்' அருகில் வைத்தேன். அவர் அதில் அமர்ந்தார். சுவாமி சுற்றியுள்ள அடியவரைப் பார்த்து ''பாருங்கள், தீவானுக்குத் தீவான் கதிரை போடுகிறான்'' எனக் கூறிச் சிரித்தார். பின்னர் என்னைச் சுட்டியவாறே சேரவர்களைப்பார்த்து ''இவன் பெரிய கள்ளன் காணும்'' என அருளினர். என் பக்கம் திரும்பி ''நீர் தருகிறதை நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என அருளினர். இவ்வருள் வாசகத்தைக் கேட்ட அக்கணமே எனதுடல்சிலிர்சிலிர்த்து விறைத்து விட்டது. ''அவனுடைய செயலெல்லாம் எமக் கினியனவாம்'' என்று கண்ணப்பர் அன்பை உகந்தது போல எனையுமோர் அன்பராக ஏற்றுக் கொண்ட சுவாமியின் கருணைதான் எனக்கு இப்பிறவியிற் கிடைத்த பெறுதற்கரும் பேறாகும்.

அவ்வாண்டு தைத்திருநாளன்று சுவாமி தாம் சிவபெ ருமானே என்பதைச் சொல்லாமற் சொல்லி உணர்த்தி னர். ஆண்டு தோறும் தைப்பொங்கல் நாளன்று சுவாமி யைத் தரிசித்து வரும் நியமப்படி அன்றும் சென்றேன். சுவாமியைத் தரிசித்த முதல் நாளன்று தொடக்கம் செய்து

வந்தது போலவே அன்றும் காகிதப்பையில் பழம் கொண்டு சென்றேன். யான் வாயிலில் கால் வைத்த பொழுது சுவாமியின் குரல் கடுமையாக ஒலித்தது. ''உது என்ன'' என்ற சுவாமியின் வார்த்தையைக் கேட்டு எனக்கு நடுக்கம் எடுத்தது. ''உங்களுடைய கடவுளுக்கும் இப்படித்தான் கொண்டு போவீர்களோ? கடவுளுக்கு என்ரூல் தட்டத்தில் வைத்துக் கொண்டு போவீர்கள்; இங்கென்ரூல் மீன்குடலை மாதிரிக் கொண்டு வருகிரூய்? கொண்டுபோ'' எனக் கடுஞ் சொற்களிற் கூறினர். யான் அழுது கொண்டு பழைய கொட்டிலுள் சென்று பழங்களை வைத்துக் கர்ப்பூரங் கொளுத்தி மௌனமாய்க் கும்பிட்டேன். அதுவரை காலமும் காகிதப்பையில் கொண்டு செல்வது பற்றி ஒன்றும் பேசாதிருந்த சுவாமி சமாதியை அண்டிக் கொண்டிருந்த காலத்தில் அதனை ஓர் சாட்டாகக் கொண்டு கோயிலில் வைத்துப் பூசனை செய்யும் கடவுளிலிருந்து தான் வேறல்லர் என்பதைத் தெளிவாயுணர்த்தினர்.

''தீதெல்லாம் நீக்கச் சிவபெருமான் என்போல்
பூதலத்தில் வந்தான்''

ஏ. தம்பு

தொண்டர் - புங்குடுதீவு

★

சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில்

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவ்தொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்

14 தன்னைத் தந்து ஆண்டுகொண்டான்

(இஃது கைதடி தெற்கிலுள்ள சிவதொண்டன் ஆச்சிரமத்தில் இருந்தவம் ஆற்றிய ஸ்ரீமத் மார்க்கண்டு சுவாமிகள் எழுதித்தந்த குறிப்புக்களை ஆதாரமாகக்கொண்டு வரையப்பட்டதாகும். யோகசுவாமிகள் அருள்மொழிகள் என்னும் நூலின் 1 ம் பகுதியில் இக்குறிப்புக்களுள.)

''பூரணஞானம் பெறும்வரை குருடனுகவும்,
செவிடனுகவும், ஊமையாகவும் இரு; மௌனம்''

இவ்வாசகம் சிவயோக சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளுக்கு அருளிய வாசகமாகும். இவ்வாசகத்திலே மார்க்கண்டு சுவாமிகளுக்குரிய ஞானசாதனை உணர்த்தப்பட்டிருக்கிறது. மௌனமே அந்த ஞானசாதனை. மார்க்கண்டு சுவாமிகள் சீவன் முத்தனுக மலர்ச்சியடைந்து வந்த வேளையிலும் அவர் மௌன நிலையில் நிற்றல் வேண்டும் என்னும் குறிப்பே சிவயோக சுவாமிகளால் உணர்த்தப்பட்டது. அக்குறிப்புணர்த்தும் வாசகம் மேல்வருமாறு:-

,,பூவில் வண்டு தேனைக்குடிக்கும்போது ஒருசத்தமும் போடமாட்டாது. சிலமுத்தர்கள் புத்திமதிகளைச் சொல்வார்கள். வேறுசிலர் மௌனமாய் இருந்துவிடுவார்கள்''

மார்க்கண்டு சுவாமிகள் உலகோபகாரமாக உபதேசம் செய்து திரியும் சீவன் முத்தர்களைப் போலல்லாது மௌனத்தில் நிலைத்து நிற்றல் வேண்டும் என்பதே சிவயோக சுவாமிகளின் திருக்குறிப்பாயிருந்தது. மார்க்கண்டுசுவாமியும் ஒரு மௌனியாகவே ஒழுகினர். அவர் சிவயோகசுவாமி எனும் பெருங்கருணைப் பேராற்றிலே ''நானென ஒரு முதலில்லை'' என்று சொல்லும் படியாய் மூழ்கித்திளைத்தவர். மார்க்கண்டு சுவாமிகளுக்குச் சிவயோக சுவாமிகள் மட்டுமே பொருளாகத் தோன்றினர். ஏனைய யாவும் அப்பொருளின் வடிவாகவே தோன்றின.

'' காண்பதும்பொய், கேட்பதும்பொய், காரியம்போ ,லேயிதமாய்ப்
பூண்பதும்பொய், எவ்விடத்துப் போகமும்பொய்-மாண்பாகத்
தோற்றியின்ப வெள்ளமாய்த் துன்னியென்னுள் யோகனர்
வீற்றிருப்ப தொன்றுமே மெய்''

என்று பாடுவது அவருக்கு முற்றும் பொருந்துவதாயிருந்தது. அவர் ஞானசாதனை பயின்ற காலத்தில் சிவயோக சுவாமிகளின் வாக்குகளை மாத்திரம் பொருளுரையாகப் போற்றினர். அவர் ஞானியாய் மலர்ந்து கைதடி ஆச்சிரமத்தில் அமர்ந்திருந்த போது தன்னை நாடிவந்த அடியவர்களுக்குச் சிவயோகசுவாமிகளின் நற்சிந்தனை எனும் நல்ல அமுதையே அருட் பிரசாதமாக ஈந்தார். அவர் சிவயோக சுவாமிகள் எனும் இன்னிசையை வெளியிடும் நல்லதொரு வேய்ங்குழலாக அமைந்தார் என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றுகிறது. அவர் குருபரனின் வாக்குகளைப் போற்றிய வண்ணம் இவ்வண்ணமாய் அமைந்தது. அவர் குருபரனின் திருமேனியைச் சிந்தித்த வண்ணமோ எனின் அச்சிந்தனைத் திறத்தால் அவரது மேனியே சிவயோக சுவாமிகளின் திருமேனியினது சாரூபத்தைப் பெறும் வண்ணமான ஆற்றல் வாய்ந்ததாயிருந்தது. பூரணஞானியான சிவயோகசுவாமிகளிடத்திலே ஏட்டில்எழுதிக்காட்டவொண்ணாத சிறப்பியல்புகள் பல செறிந்துகிடந்தன. அச்சிறப்பியல்புகள் சிலவற்றின் விளக்கமாக மார்க்கண்டுசுவாமிகள் திகழ்ந்தார். அவரைக் குருசீட ஒழுக்கம், குருநெறிச் செல்வார் பெறும் பேறு, குருபரம்பரை என்பவற்றுக்கோர் எடுத்துக் காட்டாகச் சிவயோகசுவாமிகள் மலரச்செய்தனர்.

மார்க்கண்டுசுவாமிகளுக்குச் சிவயோகசுவாமிகள் அருளிய முதல் வாசகம் ''வடதிசை காட்டும் கருவியைப் போல் இருக்க வேண்டும்'' என்பதாகும். அப்பொழுது மார்க்கண்டு சுவாமிகள் நியத்தலாவையிலுள்ள நிலஅளவைத்திணைக்களமுகாமில் எழுதுவினைஞராகப் பணிபுரிந்தார். அவர் ஆறுமுக நாவலரவர்களின் முயற்சியாலே யாழ்ப்பாணத்தில் மேலோங்கிய வைதிக சைவப்பெருக்கிலில் வளம்பெற்றுக், கரவிலா

நெஞ்சும், பிரம்மச்சரியவிரதமும். இச்சரீரத்தை எடுத்த தல் நோக்கத்தைப் பற்றிய விளக்கமும் உடையவராயிருந்தார் என்பதும் குறிப்பிட வேண்டிய விடயமாகும். ஆகவே பக்குவனை ஒரு சீடருக்கு அவரது தொழிலுறவுக்கும், குணவியல்புக்கும் ஏற்ற ஞானமொழியைச் சிவயோகசுவாமிகள் அருளினர். மார்க்கண்டுசுவாமிகளின் தொழிலுறவுக்குப் பழக்கமான திசையறிகருவியை எடுத்துக் காட்டாகக் கொண்டு அருளிய அவ்வுரை மிகவும் எளிமையானது. ஆனால் பிற்பட்டு அவருக்கு அருளிய எல்லா வாசகங்களையும் தன்னுள் அடக்கிக்கொள்ளக்கூடிய வியாபகம் வாய்ந்தது. இன்னும், அடிமுடி கடந்த ஆழநீளங் காணவரிய அநுபூதி வாசகமாகவும் உளது. ஈனப்பிறவிநீக்கும் எழிலறிந்த ஞானதேசிகன் ஒருவன் தனது சீடனைப் பார்த்த மாத்திரத்திலே அச்சீடனின் உள்ளும் புறம்புமான முழு அமைப்பையும் புரிந்து கொண்டு, என்றும் பொருந்துமாறு கூறும் முதல் வாக்கத்துக்குத் தக்கதோர் எடுத்துக் காட்டாக அவ்வாசகம் அமைந்திருக்கிறது.

மார்க்கண்டு சுவாமிகள் பதினெட்டு வருடகாலம் நியத்தலாவையில் தொழில் புரிந்தார். அப்பதினெட்டாண்டுகாலமும் தன்னையறியத் தவமியற்றிய காலம் எனக் கூறுவதே பொருந்துவதாகும். உத்தியோகம் அத்தவத்திற்கோர் உபகாரமாக இருந்தது. நியதலாவையானது அமைதியான போக்குடைய ஒருவர் ஞானசாதனை பயில்வதற்கேற்ற சாந்தியான இடமாகும். ஆகவே மார்க்கண்டு சுவாமிகள் என்னும் தெய்வச்சாலி ஆன்ம விசாரணை செய்து வளம் பெறுதற்கேற்ற ஞானப் பண்ணையாக அது அமைந்தது. சிவயோகசுவாமிகள் என்னும் கருணைமேகன் வேண்டிய போது அருள் நீர் பாய்ச்சி அப்பயிரை வளர்த்தார். அப்பதினெட்டாண்டுகாலமும் ஆண்டு தோறும் பல தடவைகள் மார்க்கண்டுசுவாமிகளின் தங்குமிடத்துக்கு எழுந்தருளிச் சுவாமி அருள் பாலித்தனர். கூட்டினுள் இருக்கும் பறவைக் குஞ்சின் பசி வேளையறிந்து இரையுடன் பறந்து வரும் தாய்ப்பறவை

போன்று சீடர் அருட்டாகம் கொண்ட போதெல்லாம் சிவயோக தேசிகர் அருளாரமுதத்தை ஏந்தியவராய் வந்து சேர்ந்தனர். மார்க்கண்டு சுவாமிகளின் இல்லம் எப்போதும் சிவயோக தேசிகருறைதற்கென்று பக்குவமாயிருந்தது.

மார்க்கண்டு சுவாமிகளைத் தன்னுடைய உத்தியோகத்திற் கவனமாயிருக்குமாறு சிவயோகசுவாமிகள் உணர்த்தினர். வேலையைச் செவ்வனே செய்வதால் ஞானமுண்டாகும் எனவும் கூறினர். மார்க்கண்டு சுவாமிகளுடைய உலக வாழ்வுக்கு இன்றியமையாததான இவ்வுத்தியோகத் துறையொன்றை மாத்திரம் மார்க்கண்டு சுவாமிகள் உலகோடு அளவளாவி வாழ்தற்கான வாயிலாகச் சிவயோகசுவாமிகள் உணர்த்தினர். மற்றைய உலக விவகாரங்களிலே ஆமை தன் தலையை உள்ளிழுத்து அடங்கியிருத்தல் போன்று விடுபட்டிருக்குமாறு கூறினர். மார்க்கண்டு சுவாமிகள் பிரமச்சரிய விரதம் பூண்டவராயிருந்தார். சம்சார சாகரத்தில் சிக்கவைக்கும் ஒரு வழியினின்றும் இயல்பாகவே விலகி வந்த அத்திரரின் பிரமச்சரிய விரதத்தின் பெருமையைச் சிவயோக சுவாமி பாராட்டி ஊக்கப்படுத்தினர். சிவயோகசுவாமிகள் தம்மிடம் பிரமச்சரிய விரதம் பூணும் சங்கற்பத்துடன் ஆசி வேண்டி நின்ற இளைஞர் பலரிடம், இல்லறத்தில் வாழ்ந்து ஞானியான பலரின் கதைகளைக் கூறி நயப்பான முறையிலே பிரமச்சரிய விரதம் பூணுது தடுத்து விட்டார். அவ்விளைஞர்களது உள்ளத்தில் அவ்விளைஞரையும் அறியாது கரந்து கிடந்த சிற்றின்ப வேட்கைகளைக் கண்டே சுவாமிகள் அவ்வாறு கூறினர். ஆனால் மார்க்கண்டு சுவாமிகள் பிரமச்சரிய விரதம் பூணுதற்கேற்ற உண்மையான வைராக்கிய முடையவராயிருந்தார். ஆதலால் சுவாமி அவரது பிரமச்சரிய விரதத்தை ஆசீர்வதித்தார். படித்த இளைஞர் பலரும் நாம் வாழும் சமூகத்தில் நிலவும் அதர்மங்களைப் பொறுக்காது தர்மாவேசம் கொள்வதும், அச்சமூகத்தைத் திருத்தக் கங்கணங்கட்டி நிற்பதும் இயல்பே. மார்க்கண்டு சுவாமிகளும் தாம்பிறந்த கிராமச் சனசமூகநிலையத்தின் பொறுப்புவாய்ந்த ஒருவராகவும் சீர்திருத்தவாதியாகவும் இருந்தார்.

சிவயோகசுவாமி மார்க்கண்டு சுவாமிகளை இவ்வாறான கருமங்களினின்றும் பிரித்தெடுத்தார். உலகம் நன்றும் தீதும் கலந்ததாகவே உள்ளது. இது அன்றுதொட்டேயுள்ள இயல்பாகும். இவ்வியல்பை எத்தனையோ பெரிய அவதாரங்கள் வந்தும் திருத்த முடியவில்லை. உலகம் அப்படியேதான் உளது. நாய் வாலை நிமிர்த்த முடியுமோ? என்றவாறு கூறி மார்க்கண்டு சுவாமிகள் அடையவிருக்கும் பெரிய பதத்துக்காகச் சீர்திருத்தக் கருமங்களினின்றும் விட்டுவிலகி நிற்கச் செய்தார். படித்தவர் பலரும் நாட்டில் நிகழ்வனவற்றையும் உலக விவகாரங்களையும் உடனுக்குடன் அறிந்து கொள்ள விழைவதையும், அந்நிகழ்வுகள் பற்றிய தமது அவதானங்களையும் நீர்க்க தரிசனங்களையும் மற்றையோர் மெச்சுமாறு கூறுவதையும் தமது படிப்பின் அணிகலமாகக் கொள்வது என்றுமுள்ள இயல்பேயாகும். அந்நாட்களில் பாரத தேசவீடுதலைப் போராட்டம் பலரது உள்ளங்களையும் ஈர்த்தது. அப்போராட்டத்தில் முன்னின்று உழைத்த காந்தியடிகள் மகாத்மாவாக மதிக்கப்பட்டார். விடுதலை இயக்கத்தின் பாலும் மகாத்மா காந்தியின் பாலும் பெரும் பித்துக் கொண்ட இந்நாட்டவர் சிலர் தமது உத்தியோகம், குடும்பம் முதலாய உறவுகள் பலவற்றையும் உதறித் தள்ளிவிட்டு இந்தியா சென்று விடுதலை இயக்கத்தில் சேர்ந்து பாடுபட்டு வரலாயினர். இவ்வாறான பொதுப்போக்கின் தாக்கங்கள் சில மார்க்கண்டுசுவாமிகளிடம் இருந்தன. சிவயோகசுவாமிகள் இவ்வுலக விவகாரத்துக்குப் புதுப்பொருள் கொள்ளுமாறு மார்க்கண்டுசுவாமிகளுக்கு உணர்த்தினர். நம்மிடம் உள்ள மேலான தெய்வதத்துவத்தில் நிலைத்து நிற்றலே சுயராச்சியம். அவ்வாறு நிலைத்து நிற்க முடியாது மயக்கும் கீழ்மைக் குணங்களாகிய பிசாசே நம்மை அடிமைப்படுத்தியிருக்கும் வேற்றரசன். கீழ்மைக் குணங்களாகிய வேற்றரசை வென்று தெய்வதத்துவத்தில் நிலைத்தலாகிய சுயராச்சியத்தை அடைய எவ்வளவு போராட வேண்டும். இவ்வானவிளக்கத்தையளித்த சிவயோகசுவாமிகளின் வாக்குகளை நன்றாகக் கிரகித்துக்கொண்டு அவற்றை மார்க்கண்டுசுவாமிகள் குறித்துவைத்திருக்கின்றனர். அவை மேல்வருமாறு:-

''எங்களுக்குள்ளேதான் சுயராச்சியம்;
எவ்வளவு போர்புரிய வேண்டும்''

''இந்தத் தேகத்திற்கு நானே அரசன்;
வேற்றரசப் பிசாசு வராதபடி பாதுகாத்தல் வேண்டும்''

இவ்வாறான வாக்குகளாலே பரமாச்சாரியரான சிவயோக சுவாமிகள் தன் சீடனைப் பற்றிய உயிர்ப்புள்ள உலக விவகாரமொன்றிலே, உலகோர் மயங்குவதற்குக் காரணமான சக்கைகளைத் தள்ளிவிட்டு ஆன்மீக வாழ்வுக்கு உதவியான சாராம்சத்தை மாத்திரம் கொள்ளுமாறு வழிகாட்டினர். ஆகவே சிவயோகசுவாமிகள் மார்க்கண்டுசுவாமிகளை உலக விவகாரங்களினின்றும் விடுபட்டு நிற்குமாறும் அற்றேல் இயல்பாகப் பற்றிய உலக விவகாரங்களை ஆன்மீக ஞானத்துக்கான ஊட்டமாகக் கொள்ளுமாறும் பயிற்றி வந்தார். அவருக்கு இன்றியமையாததாயிருந்த உத்தியோக வாழ்விற் கூட உத்தியோகவுயர்வு, பெருஞ் சம்பளம் ஆதிய இச்சைகளை விட்டு நிற்குமாறு சுவாமி உணர்த்தி வந்தனர். ''சிறு உத்தியோகம் இருக்கும்போது பெரும் உத்தியோகத்திற்கு ஆசை;பெரும் உத்தியோகம் வந்ததும் பெருஞ்சம்பளத்துக்கு ஆசை... இவ்வாசைகளுக்கு எல்லைதான் உண்டோ'' என்னும் மொழிகளாலே இவ்வாறான ஆசையற்று நிற்கும் இயல்பை மார்க்கண்டு சுவாமிகளிடம் வளர்த்து வந்தார். சிவயோகசுவாமிகள் தம்மிடம் ஞானவித்தை பயின்ற சீடர்களிலே, அகத்துறவுபூணவல்ல தீரரான சிலருக்கு உலகோடு ஒட்டி உறவாடி வாழ்ந்து கொண்டே தன்னை மறவாதிருக்கும் ஞானவித்தையைப் பயிற்றினர். மார்க்கண்டுசுவாமிகளுக்கோவெனின் உலகினின்றும் விட்டு விடுதலையாகி நிற்கும் புறத்துறவினையே குறிக்கொள்ளுமாறு உணர்த்தினர். பரமாசிரியரான சிவயோகதேசிகர் தம்முடைய சீடர் பலரையும் அவரவரது சொந்தப்பாத்தியில் வைத்தே வளர்த்தெடுத்தார். அவர் சீடர்களின் தனித்துவத்துக்கேற்ப ஞானவித்தை பயிற்றிய நுட்பத்தை நோக்கின் சாதகர் எத்தனையோ, நெறிகளும் அத்தனை என்று சொல்லும்படியாய் அமைந்துள்ளது.

சிவயோகசுவாமிகள் ஒருபுறம் மார்க்கண்டு சுவாமிகளின் பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனைத் தோன்றினர். இன்னெருபுறம் அப்பற்றுக்களை விடுவதற்குப் பற்றற்றான் பற்றினைப் பற்றச்செய்து, கருணை வெள்ளத்தழுத்தி வினைகடியும் வேதியனைத் தோன்றினர். கடவுட்பக்தி பூணுமாறு அவர்கூறிய வார்த்தைகள் ஆற்றல் வாய்ந்த நூதன வார்த்தைகள். அவர் ஒருசமயம் 'கடவுளால் ஒன்று செய்ய முடியாது; ஆன்மாவை விட்டுப் பிரிந்திருக்க முடியாது' என நகையுடன் கூறினர். இன்னெரு சமயம் 'நீயும் கடவுளும் பிரிக்கப்பட முடியாதபடி ஒன்றே' என்றருளினர். இதனைக் கூறி முடிக்கும் போது Inseparable என்று இடிபோன்ற குரலில் ஆங்கிலத்தில் கூறினர். மற்றெருசமயம் 'நான் உமக்குத் தரக்கூடிய முதற்சொம் எந்நேரமும் கடவுள் உம்முடனிருக்கிறார் எனும் உறுதி மொழியே'' என்று கருணைபூத்த திருமுகத்தால் நோக்கிக் கூறியருளினர். இவ்வாறான அருள் வாசகங்களாலே தன்னைக் கணமும் பிரியாது, வாழ்முதற் பொருளாய், உயிருக்குயிராய் இருக்கும் தனித்துணையான கடவுளிடத்துப் பக்திபூணுமாறு பயிற்றினர். மார்க்கண்டு சுவாமிகளும் கொண்டானெய்வலால் அறியாக் குலக்கொடி போன்றும், கதிரவனையே நோக்கும் தாமரைபோன்றும், இன்னும் வடதிசையையே காட்டும் திசையறி கருவியைப் போன்றும் ஈசனெருவனையே இடைவிடாது நினைந்துருகும் உணர்விற் பரிணமித்து வந்தார்.

மேலே சொன்ன உலக உறவுகளினின்றும் விடுபட்டு நிற்றல், ஈசன்மேல் அன்பு கொள்ளுதல் என்னும் இரு அம்சங்களையும் வடித்தெடுத்த திட்பநுட்பமான வாசகத்திலே மிக எளிமையாகச் சிவயோகசுவாமிகள் உணர்த்தினர். அது மேல்வருமாறு:-

''நிர்வாணம், பக்தி, இவ்வளவும் போதும்.''

சிவயோகசுவாமிகள் மார்க்கண்டுசுவாமிகளுக்கு உணர்த்திய சாதனை உபாயமார்க்கத்தினர் கைக்கொள்ளும் ஆசார

வழிப்பட்ட சாதகங்களிலும் மேம்பட்டது. அது உண்மை நெறிச் செல்வார் மேற்கொள்ளும் உயர்ஞான சாதனையாகும். யாத்திரை வழிபாடு, கோயில் வழிபாடு என்பவற்றில் அகப்பட்டு நில்லாது அப்பாலே செல்லுமாறு அவர் மார்க்கண்டு சுவாமிகளை வழிப்படுத்தினர். அவர் ஒருசமயம் ''யாத்திரைக்குப் போகவேணும் என்று அங்கும் இங்கும் அலைந்து திரியாதே'' எனக் கூறினர். இன்னொருசமயம் மார்க்கண்டுசுவாமிகளை நேர் நேராய்ச் சுட்டிய வண்ணம் ''இது தான் நல்லூர். இது தான் தேர்.'' என்று கூறினர். நல்லூர் என்பதன் மெய்ப்பொருள் எல்லாம் இழந்த இடமாகிய சுத்த நிலம் என்பதாகும். இந்தச் சுத்த நிலமாகிய நல்லூரிலே நீயாய் நிற்றல் வேண்டுமெனச் சிவயோகசுவாமிகள் உணர்த்தினர். மேலும் நீயொன்றும் நீயாமல் நிற்கும் இடமே அகம். இவ்வகமே அருள் நிலையுமாகும். இத்தகைய அருளம்பலமே அண்ணல் எழுந்தருளுதற்கேற்ற தேரும்ஆகும். இவ்வண்ணமாய் யாதொன்றுமில்லாத ஞானப்பெருவெளியாம் நல்லூரில் ஏதொரு எண்ணமுமற்ற சுத்த மௌனியாக ஒழுகுதல் வேண்டும் எனச் சிவயோகசுவாமிகள் சீடருக்கு உணர்த்தினர். மார்க்கண்டுசுவாமிகள் ஆரம்ப நாட்களிலே பிராணயாமப்பயிற்சியில் ஈடுபட்டனர். அந்நாட்களிலே சுவாமி பிராணனை அடக்கி ஆளப்பயில்தல் வேண்டும் எனக் கூறி அச்சாதனைக்கு ஊக்கங் கொடுத்தார் போலத் தோன்றியது. ஆனால் வெகு விரைவில் ''மூச்சைப்பிடித்துப் பிராணயாமம் செய்யத் தேவையில்லை. சிவத்தியானம் செய்ய அவையெல்லாம் வலிய வரும்'' என்று கூறி யோகமுறையினின்றும் விலகிநிற்குமாறு வழிப்படுத்தினர். பின்னர்,

''சும்மா இருக்கச் சுகம் உதயமாகுமே
இம்மாய யோகம் இனி ஏனடா'' என்று கூறி யோகமும் ஓர் மாயை என இழித்துரைத்தனர். முடிவில் ''சர்வம் பிரமமயம் என்றறிந்த ஞானி..... குண்டலினியின் எழுச்சியைப் பற்றிச் சிரத்தை கொள்வதுமில்லை'' என்றருளினர். பாடலும், படிப்பும் ஞான பூசனையே. ஆனால் ''வாக்கால் மனத்தால் வழுத்தொணு முதலைப் பாடியும், படித்து நினைந்தும் வழிபடுதல் சாலுமோ?''

''உரையிறந்தால் உன்னு முணர்விறந்தால் மாயைத்
திரையிறந்தால் காண்கின்ற தேவை- வரைபெருக
வாசிப்பதும் நாவால் வாழ்த்துவதும் நாடகமாய்ப்
பூசிப்பதும் சுத்தப் பொய்''

என்றவாறு உரை உணர்விறந்து நின்று சும்மாவிருந்து சுகிக்கும் சுகத்தில் பொருந்துவோர்க்குப் பாடலும் படிப்பும் சுத்தப் பொய்யாகவே தோன்றும். சிவயோகசுவாமிகள்

''சும்மா இருக்க முடியாத படியினற்றான்
பாடலும் படிப்பும் நடைபெறுகின்றன''

என்று கூறிச் சும்மா இருக்கும் சூட்சத்தில் பொருந்தியிருக்கும் ஞான சாதனையை மார்க்கண்டுசுவாமிகளுக்கு உணர்த்தினர்.

''சும்மா இருக்கின்ற சூட்சம் நீ
சும்மா இருக்கின்ற சூட்சம் நான்
சும்மா இருக்கின்ற சூட்சமே எல்லாம்''

என்று கூறி, எல்லாம் நன்மோன நிறைவில் நிலைத்திருக்கும் இயல்பை எடுத்துக்காட்டி அம்மோனமுதலில் ஒடுங்கிக் கிடக்குமாறு வழிப்படுத்தினர். அதற்காக அவர் உணர்த்திய ஓரே யொரு சாதனமார்க்கம் சிவத்தியானமேயாகும்.

சுவாமி ''சிவத்தியானம் செய் செய் செய்'' எனச் சிவத்தியான சாதனையை முக்காலும் வலியுறுத்தினர். சிவத்தியானம் என்று இறைவனை எண்ணிக்கொண்டிருத்தல் எனும் பொருளில் மார்க்கண்டுசுவாமிகள் சாதனை பயின்ற காலத்தில், அவ்வாறு ஒன்றை எண்ணிக்கொண்டிருக்கும் தியானசாதனையை 'ஒரு வேலை' எனச் சுவாமி வருணித்தார். அத்தகைய வேலையினின்றும் விடுபட்டு எண்ணமெல்

லாம் விட்டு ஏகாந்த மோனநிலையில் நிற்குமாறு வழிப்படுத்தினர். ''தியானம் செய்தால் அதுவும் வேலை; சும்மா பத்து நிமிடத்துக்கு இருக்கப்பழகு'' என்று கூறினர். நியானம் என்பது எதனையும் எண்ணிக்கொண்டிருப்பது அன்று; அது சும்மா இருத்தலாகும். சும்மாவிருக்கும் தியானசாதனையே சிவயோகசுவாமிகள், மார்க்கண்டுசுவாமிகளுக்கு உணர்த்திய உயர்ஞான சாதனையாகும். சிவயோகசுவாமியினது ஞானப்பண்ணையிலே அரிவரி வகுப்பு முதல் பி. ஏ. வகுப்பு வரையான மாணவர்கள் பயின்றனர். மார்க்கண்டுசுவாமிகள் மேல்வகுப்பில் பயின்றார்.

மார்க்கண்டுசுவாமிகள் தாம் மேற்கொண்டுள்ள ஞான சாதனையிலே மிக விழிப்பாயிருக்க வேண்டுமெனச் சிவயோக தேசிகர் வற்புறுத்தினர். அவர், தூண்டிற்காரன் தனது கருமத்தில் கண்ணுயிருக்கும் எடுத்துக் காட்டைச் சீடருக்கு மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தனர். மேலும், நிலஅளவை செய்கிறதற்குப் பாதைகளை வெட்டுகிறது போலவே ''எங்கள் பாதையில் வரும் தடைகளை நாங்களே வெட்டி நீக்க வேண்டும்'' எனக் கூறி ஆன்மீகப் பயணத்தில் எதிர் நோக்கும் தடைகளை நீக்குதற்குச்சுயமுயற்சியின் இன்றியாமையை வலியுறுத்தினர். ஆயினும் அவர் உணர்த்திய வழி வாடாமல் வழிபடும் நடுவழியாகும். அவர் ஆன்மீக ஞானமானது பூ, பிஞ்சு, காய், கனி என்பது போல் மெல்ல மெல்லவாக முதிரட்டும் என்றவாறு கூறி அவசரப்படாதிருக்குமாறு கூறினர். பாதையோ நீடித்தது; ஆதலால் மெல்ல மெல்லவாகச் செல்லுமாறு கூறினர். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் தனிப்பெருங்கருணை வழிநடத்திச் செல்லும் எனும் உண்மையை ''வேடுவசேரியிலகப்பட்ட வள்ளியம்மன் என்னும் ஆன்மாவைக் கடவுள் ஆட்கொண்டார்'' எனும் திறைமொழியால் அருளினர். சிவயோக சுவாமிகள் உணர்த்திய நெறி இடையரு விழிப்பும் அதே வேளையில் அவசரமின்மையும் கொண்டது. அது சுயமுயற்சியும், இறையருளும் சந்தித்துச் செல்லும் ஒன்றுகவும் இருந்தது.

மார்க்கண்டுசுவாமிகள் தியத்தலாவையில் உத்தியோகப் பணிபுரிந்த காலத்தைத் தன்னையறியத் தவமியற்றும் தவப் பொழுதாகப் பயன்படுத்திய பின்னர், ஈராண்டுகாலம் கொழும்பிலே பணிபுரிந்தார். அந்நாட்களிலே அவர் தெகிவளையிலே இரத்திணகரப் பிளேனில் உள்ள ஓரில்லத்தில் வாழ்ந்தார். சுவாமிகள அவ்வில்லத்துக்கும் அடிக்கடி எழுந்தருளினர். மார்க்கண்டுசுவாமிகள் சிவயோகசுவாமிகளின் ஓர் உத்தம சீடராக மதிக்கப்படும் நிலை அந்நாட்களில் உருவாகிற்று. பலராலும் போற்றப்படும் நிலை சாதகனது ஞானநெறியிற் குறுக்கிடும் பெருந்தடையேயாகும். இப்புகழ்மயக்கத்தில் இடறி வீழ்ந்த சாதகரும் பலராவர். மேலும் இந்நாட்களிலே சிவன் - கருணையபாண்டியனார் நடாத்திய சைவசித்தாந்த வகுப்புக்களுக்கும் மார்க்கண்டு சுவாமிகள் சென்று வந்தனர். அநுபூதிச் செல்வம் இல்லாதவர் சாத்திரங்களின் தத்துவ அமைப்பு, தர்க்கவாதம், சொல்நுட்பம் ஆகியவற்றில் ஈடுபட்டுத் தம் வித்துவத்தைக் காட்டுவதிலேயே வீண்காலம் போக்குவர். இத்தகைய சாத்திரஞானம், மெய்ஞ்ஞானத்திற்கோர் தடையேயாகும். ஞானியாய்த் திகழவிருக்கும் தன்சீடன் இம்மயக்கங்களினின்றும் விடுபட்டு மோனவரம்பில் நிற்றல் வேண்டும் என்பதைக் குறிகாட்டச் சிவயோகசுவாமிகள் மேல்வரும் மந்திரச் சொற்களால் எச்சரித்தனர். மருந்துபோல் வடித்தெடுத்த ''சுமருள்; சாந்திரமருள்'' என்பனவே அம்மந்திரச் சொற்களாகும்.

மார்க்கண்டுசுவாமிகள் அதுவரையும் உத்தியோகத்தை ஒரு கையிலும், கடவுளை ஒரு கையிலும் பிடித்தவராய்ச் சாதனைபயின்றனர். உத்தியோகத்தை விடுவதற்குரிய தருணம் வாய்த்ததும் அதினின்றும் ஓய்வு பெற்றார். உத்தியோகத்தினின்றும் இளைப்பாறியதும் ''உன்னுறவேயில்லாமல் ஒருறவுமில்லை'' என்ற உறுதியுடன் சிவயோகசுவாமிகளின் திருவடிகளே தனிச்சரண் எனச் சென்று சேர்ந்தார். அப்போது அவரோர் ஆண்டியாய் நின்றார். சிவயோகசுவாமிகள்

ஆண்டியாய் வந்து நின்ற மார்க்கண்டுசுவாமிகளை இரண்டு நாட்கள் நல்லூரில் வாசம் செய்த ஓர் அன்பரில்லத்தில் தங்கச் செய்தனர். அந்த அன்பரின் உள்ளத்தில் உறைந்து கிடந்த சுரவொன்றைக் கிளறிக் காட்டும் சாலமாகவே இவ்வொழுங்கைச் செய்தனர் எனத் தோன்றுகிறது. பின்னர் மார்க்கண்டுசுவாமிகளுக்கென ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்த கைதடி ஆச்சிரமத்தில் குடியமர்த்தினர். அன்று சுவாமிகள் மார்க்கண்டுசுவாமிகளையும், அவருக்கு வேண்டிய படுக்கை, சமையற்பாத்திரங்கள் ஆகிய வற்றையும் ஒரு விசையூர்தியில் ஏற்றிக் கொண்டு சென்று கைதடி ஆச்சிரமத்தைச் சேர்ந்தனர். சுவாமியின் அன்பரான கைதடிவாசி திருவாளர் மயில்வாகனம் அவர்கள் சுவாமியின் பணிப்பின்படி பதினேட்டு ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாச்சிரமத்துக்கான அத்திவாரத்தையமைத்தனர். இரு ஆண்டுகளின் பின் அவ்வாச்சிரமக் கொட்டிலிற் பால் பொங்கி நாடோறும் திருவிளக்கேற்றினர். இவ்வண்ணம் மார்க்கண்டுசுவாமிகளுக்கென்று அமைந்த அத்திருமாளிகையில் குருபரன் குடியமர்த்தினர். அன்று மயில்வாகனம் அவர்களை நோக்கி "நான் உனக்கேர்ந் நல்ல நண்பனைத் தந்திருக்கிறேன். அவன் போகும் போது உனக்கு எல்லாவற்றையும் தந்து விட்டுச் செல்வான். நீ அவனை நன்முகக் கவனித்துக்கொள்" என்றருளினர். சிவயோகசுவாமிகள் தம் உத்தமத்துறவியைக் கைதடி ஆச்சிரமத்தில் குடியமர்த்திய திறத்தை நோக்கும் போது பிறக்கும் குழந்தைக்காக ஏற்கெனவே தாயிடத்தில் பாலை ஏற்பாடு செய்திருக்கும் பெருமானின் கருணையே நினைவுவரும்.

மார்க்கண்டுசுவாமிகள் கைதடியாச்சிரமத்திற் குடிபுகுந்த இரண்டாவது ஆண்டில் நிகழ்ந்த மகாசிவராத்திரி விரதம் கைதடி ஆச்சிரமத்திலும் அனுட்டிக்கப்பட்டது. அன்று சிவயோகசுவாமிகளும், விரதிகளும் கைதடி ஆச்சிரமத்திற் குழுமினர். அன்று சாயங்காலப் போதில் சிவயோகசுவாமிகள் தமது ஒருமைமனம்படைத்த துறவிக்கு மேல் வரும் பாடலை அருளினர்:-

எட்டாத கொப்புக்கு ஏணிவைத்துப் பூப்பறித்து
முட்டாத பூசைசெய்தேன் - தங்கமே
முன்னுமில்லைப் பின்னுமில்லை.

அட்டாங்க யோகம்விட்டேன் ஆதாரம் ஆறும் விட்டேன்.
மட்டாருங் குழலாளே - தங்கமே
மருமமெல்லாங் கண்டேனடி.

கட்டாத மனத்தைக்கட்டிக் காலாலே கனல்வீசி
நிட்டையிலே நானிருந்தேன் - தங்கமே
நீநானங் கில்லையடி.

நட்டா விடத்துச் சென்று தங்கத்தாலே தாலிசெய்து
கட்டாமல் கட்டினேனடி - தங்கமே
காரணத்தைக் கண்டேனடி.

நட்டார் ஒருவரில்லா நாதாந்த மேடையேறிச்
சிட்டாய சிட்டனுக்கே - தங்கமே
திருவிருந் தானேனடி.

பட்டால் பாவாடை செய்து பதிபசு பாசமென்னும்
மொட்டாக்கைப் போட்டுக்கொண்டேன் - தங்கமே
முழுவதும் உண்மையடி.

இட்டார் இடாரென்னும் இகழ்புகழைத் தள்ளிவிட்டு
முட்டாத பூசைசெய்தேன் - தங்கமே
மூன்றுமொன் றுச்சுதடி.

எட்டாத பேரின்பம் என்னுளே முங்கிற்றடி
கிட்டாது முட்டாதடி - தங்கமே
கேட்டு மகிழ்ந்திரடி.

சுட்டாமல் சுட்டிடடி சோதிசிவ ரூபமடி
கிட்டாத பொருளென்று - தங்கமே
கீழ்நோக்கிப் பாராதே

எட்டாத கொப்பில் இருக்குதடி தேனமிர்தம்
தட்டாமல் சாப்பிடடி - தங்கமே
சமனுவார் ஒருவரில்லை.

பத்தும் படிப்போர்க்குப் பாக்கியமும் சிலாக்கியமும்
இத்தரையில் உண்டாமடி - தங்கமே
எல்லாஞ் சிவமயமே.

மார்க்கண்டுசுவாமிகளுக்கு அதுவரையும் பயிற்றிய ஞான சாதனையின் நுட்பமெல்லாம் செறிந்துகிடக்கும் நல்லதோர் சித்தர் இலக்கியமாக, அப்பாடல் அமைந்தது. சிவ யோகசுவாமிகள் தாம் சமாதியடைவதற்கு இரண்டொரு ஆண்டுகள் முந்திய மகாசிவராத்திரி நாளன்று ஒரு மருமான முறையில் கைதடியாச்சிரமத்திற்கு வந்து சேர்ந்தனர். அன்று மார்க்கண்டுசுவாமிகளை நோக்கி ''இன்று நீ மட்டும் விழித்து நின்றுற் போதும்'' எனக் கூறித் தாம் கட்டிலிற் கிடந்தனர். சிவயோகசுவாமிகளுடன் கூடிச் சிவராத்திரி விரதமனுட்டிப்பதன் சுவை கண்ட அன்பர் சிலர் எங்கும் தேடித் திரிந்தும் சுவாமியைக் காணுதவராய்க் கைதடிக்கு வந்தனர். அவர்கள் ஆச்சிரமத்துள் நுழையும் போது சுவாமி அவர்களுக்கு முதுகுப்புறத்தைக் காட்டியவண்ணம் கட்டிலிற் புரண்டு கிடந்தார். காத்துக்கிடந்து சலித்துப் போன அவ்வன்பர்கள் சிறிது நேரத்தில் தமதிருப்பிடம் சென்றனர்.

தாம் பயிற்றிய துறவியின் மாண்பினை மற்றொரு சந்தர்ப்பத்திலும் சிவயோகசுவாமிகள் உணர்த்தினர். சுவாமிகள் தொடக்கிய சிவப்பணிகளில் ஈடுபட்டுக் கிடந்த சிவதொண்டர்களை நோக்கிச் சுவாமிகள் கூறிய ஒரு வாசகத்தில் அது தெளிவாய்த் தெரிந்தது. ''சிவதொண்டு செய்யும் நீங்கள் உலகத்தவரோடு ஒட்டி ஒழுகவேண்டியவர்கள். அப்படி உலகத்தவரோடு ஒட்டி ஒழுகும் போது தவறுதல் நேரிடவும் வழியுண்டு. அவ்வாறு தட்டுக் கெட்டுப் போகாமலிருத்தற் பொருட்டு அவனை (மார்க்கண்டுசுவாமிகளை) உங்களுக்கு ஒருதிசைகாட்டியாக அமர்த்தியிருக்கிறேன்'' என்பதே அவ்வாசகமாகும். அப்பொழுது சுவாமிகள் முதன்முதல் அருளிய வாசகம் மாற்றமெதுவுமில்லாமலே இன்

னொரு பொருளையும் தந்தது. அதாவது மார்க்கண்டுசுவாமிகள் தாம் திசையறிகருவி போன்று பிரமசொரூபமொன்றையே பார்ப்பவராக உள்ளதுடன் மற்றைய சிவதொண்டர்க்கெல்லாம் ஒரு திசைகாட்டியாகவும் திகழ்கின்றார் என்பதே அப்பொருளாகும்.

சிவயோகசுவாமிகள் சமாதியடைந்த பின்னர், சிவதொண்டர் சிலர் கைதடி ஆச்சிரமம் சென்று மார்க்கண்டுசுவாமிகளது திருவடிகளிலே கர்ப்பூரம் கொளுத்திக் கும்பிட்டு நின்றனர். அவ்வன்பர்களுக்கெல்லாம் அவரவர் பக்குவத்துக்கேற்ற அருள்மொழிகளைத் தமது மனத்தில் முழுதும் மனனமாயிருந்த நற்சிந்தனைத் திருநூலிலிருந்து எடுத்துரைத்தனர். அவர் நற்சிந்தனை என்னும் நறுமலர்களைச் சொரியும் கற்பகதருவாக நின்றார். அவர் சிவயோகப்பா விசைக்கும் கீதம் இனிய பூங்குயிலாக, இருந்தார்.

சிவயோகசுவாமிகள் சமாதியடைந்து இருபது ஆண்டுகளின்பின் (1984 ஆம் ஆண்டு வைகாசி மாதம் கார்த்திகை நட்சத்திரம்) மார்க்கண்டுசுவாமிகள் சமாதியடைந்தார். அவர் உறைந்த கைதடி ஆச்சிரமத்திலே திருவடி பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாடாற்றப்படுகிறது. மாதந்தோறும் கார்த்திகைநாள் பூசையும், ஆண்டுக்கார்த்திகைக் குருபூசையும் சிறப்புடன் நடைபெறுகிறது.

★

தன்னைத் தன்னுள் அறிந்திட வேண்டுமே
தானை யெங்குஞ் செறிந்திட வேண்டுமே
பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே
புவியி னுசையை நீக்கிட வேண்டுமே
கண்ணைப் போலறங் காத்திட வேண்டுமே
கமல பாதந் தொழுதிட வேண்டுமே
எண்ணம் யாவு மிறந்திட வேண்டுமே
என்கு ருபர! புங்கவ சிங்கமே!



யோகசுவாமிகள் - ஞானத்திருவுரு

பகுதி III

ஞானத்தின் திருவுருவும் நம்மனோர் அருள்உருவும்.

சிவயோகசுவாமிகள் உலகத்தோடு ஒட்டி வாழ்ந்த ஒப்புரவாளர். இன்னன் இவனென ஒருவருமறியாதவண்ணம் கூடியுலாவித்திரிந்த அவரைப் பலரும் தம்போலொருவர் எனவே எண்ணியிருந்தனர். ஆனல் அவர் இத்தேகமாயையைக் கடந்த பெரியோன் என நம்பி அவருடைய பாதங்களில் பணிந்துநின்ற அன்பர்கள் அவரின் விண்ணும்மண்ணுமான வியாபகத்தை உணர்ந்தனர். "உன்னிலேவல்லால் இல்லே உயிர்த்துணேயோனே" என்றுங்கு அவரை இடையருது நினைந்துருகிய அடியார்கள் அவர், தம்சித்தத்தில் பஞ்சாமிர்தம் போல் இத்தித்திருப்பதை உணர்ந்தனர். "எண்ணேம் பிறதெய்வம், என்றவாறு சிவயோகசுவாமிகளேயே கடவுளாக எண்ணிவாழ்ந்த அன்பர்களுக்கு அவர் சிவபெருமானுகவே தோன்றினர். அவரது நிசசொரூபமோ ஆறுறுததுவத்திற்கு அப்பாலுள்ள ஆனந்தமான மோன பரமாகும்.

1. ஒப்புர ஒழுகிநின்ருன் எங்கள்குருநாதன்

''சாமி என்றிருக்கின்றவன் தான் எல்லாரையும்
போலவே என்றிருக்க வேண்டும்''

- எங்கள் ஆசான் அருள்மொழிகள்

சிவயோகசுவாமிகள் தாம் சமாதியடைவதற்கு முந்திய ஒருவருடத்தில் சில மாதங்கள் சிவதொண்டன் நிலையத்தில் உறைந்தார். இன்று சுவாமியின் நினைவுச்சின்னங்கள் பேணிப் போற்றப்படும் அறையிலே அவர் உறைந்தார். அப்பொழுது அவரது வலதுகால் நோவுற்றிருந்தது. அவருக்குச் சேவகம் செய்வதற்காக அன்பர் சிலர் சிவதொண்டன்நிலையத்தில் தங்கியிருந்தனர். சிலவேளைகளில் அவ்வன்பர்களைச் சுவாமி ஏசுவார். இரவுவேளையானால் சிலநூறுயார்கள் தூரத்திற்கு அப்பாலுள்ள இந்துக்கல்லூரியிலுள்ளோர்க்குக் கேட்குமளவு உரத்தகுரலில் ஏசுவார் இவ்வண்ணமாக ஒரு நாளிரவு அன்பரொருவரையும் அண்டவிடாதவராய்க் கடுமையானகுரலில் கர்ச்சித்துக் கிடந்தார். அண்டைஅயலிலுள்ளார் சுவாமி இருந்த அறையின் பக்கத்தேயுள்ள இருப்புப் படலையருகில் கூடிவிட்டனர். அவ்வாறு புதினம்பார்க்கக் கூடிநின்ற திரளிலிருந்து ஒருகுரல் மேல்வருமாறு ஒலித்தது- ''எல்லாம் மாறுட்டக்கதை; கிழவர் முடியப்போகிறார்.'' இப்பழிப்புரை சிவதொண்டன் நிலையத்தின் அண்டைஅயலில் வாழ்தோர்கூடத், தம்மைப்போன்று கொடுங்கூற்றுக்கு இரையெனமாயும் வேடிக்கைமனிதருள் ஒருவராகவே சிவயோகசுவாமிகளையும் எண்ணியிருந்தனர் என்பதற்கோர் எடுத்துக்காட்டாகும். சிவயோகசுவாமிகள் ஏறக்குறைய அரைநூற் றாண்டுகாலம் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் உறைந்தனர். ஆயினும் அவ்வூரைச் சேர்ந்த விடயமறிந்தோர்கூட சுவாமியைஅறிந்துகொள்ளமுடியாததுர்ப்பாக்கியசாலிகளாக இருந்தனர். சுவாமி சமாதியடைந்த சில ஆண்டுகளின் பின்னர்தான் சுவாமியின் திருவாய்மொழியான நற்சிந்தனைத் திருநூலைப் படித்துநயந்து ஏக்கத்தோடு தலையிலே

கைவைத்தனர். ''இத்தகைய மகான் ஒருவர் நம்மத்தியில் வாழ்ந்தனரே! அவருடைய திருப்பாதங்களைக் கும்பிட்டுக் கோடானுகோடி பாவத்தைப் போக்கும் பாக்கியத்தை இழந்து விட்டோமே'' எனக் கழிவிரக்கப் பட்டனர். சிவதொண்டன் நிலையத்தின் அண்டைஅயலில் வாழ்ந்தோரும், கொழும்புத்துறையில் வாழ்ந்த விடயமறிந்த சிலரும் சுவாமியைத் தம்போல் ஒருவராக எண்ணியதில் தவறேதுமில்லை. ஏனெனில் சுவாமி, பார்த்தால் உலகத்தவர் போற்றிநிந்த பற்றற்ற மூர்த்தியே யாவர்.

சிவயோகசுவாமிகள் உலகத்தோடு ஒட்டி வாழ்ந்த ஞானியரைப் பற்றிக் கூறவேண்டி நேரிட்ட வேளைகளிலே மேல்வரும் பட்டினத்தடிகள் பாடலைப் பாடுவார்.

''மாத்தான வத்தையும் மாயாபுரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ நித்தனன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர் பற்றற்றவரே''

இப்பாடலைச் சுவாமி பாடிக்கொண்டிருந்த வேளைகளிலே அன்பர் சிலர் மேல்வருமாறு எண்ணி உள்ளூர மகிழ்ந்தனர் இந்தப்பாடலை எந்த நாளும் பாடிக்கொண்டிருக்கிறதோ அந்த நாவுக்குரியவரே இந்தப் பாடலுக்குத் தக்க எடுத்துக்காட்டுமாவார். அவர் காவி உடுக்கவில்லை; உருத்திராக்கமணி தரித்திருக்கவில்லை; வேடமெதுவும் போடவில்லை. அவர் வேளையில் குளித்து உடம்பைத் தூய்மையாகப் பேணினர். அவருடைய வெண்கற்றை மயிர் ஒன்றுடனொன்று பற்றுத வண்ணம் அத்துணைத் தூய்மையாக இருந்தது. அதனை அவர் நன்றாகக் கோலி முடித்திருந்தார். ஒருசமயம் அவர் சுகவீனமாக வைத்தியசாலையில் இருந்தார். அப்போது அவர் தாமாகவே உடையைச் சீர்செய்து கொள்ள முடியாதவராக இருந்தார். பார்வையாளரை அனுமதிக்கும் வேளை நெருங்கி வந்ததும் தமது அருகிலே நின்ற அன்ப

ரைப் பார்த்துச் சுவாமி மேல்வருமாறு சொன்னார்:- ''இந்தப் போர்வையைச் சரிசெய்து விடும்: பார்ப்பவர்கள் பட்டிக் காட்டான் என்று நினைப்பார்கள்.'' அவர் மற்றையோர் மாறுபாடாக நினைப்பதற்கு இடங்கொடாத வகையில் அவதானத்துடன் நடந்து கொண்டார். சுவாமி சிவதொண்டன் நிலையத்தில் உறைந்த நாட்களில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி மேல்வருவதாகும். ஒரு நாள் காலை 'இன்று குளித்தால் நல்லது' என்னும் குறிப்பினைச் சுவாமி உணர்த்தினர். அக் குறிப்பினை உணர்ந்து கொண்ட நிலையத் தொண்டர் வெந்நீரில் நனைத்த மென்துணியினால் உடலினைத் துய்மைசெய்து திருநீறு தரிப்பித்து உடைமாற்றி எழுந்தருளுவித்தார். சற்றுநேரத்தில் பேராசிரியர் ரீ. எம். பி. மகாதேவன் அவர்கள் அமரர் அம்பிகைபாகனுடன் நிலையத்திற்கு வருகை தந்தார்கள். பேராசிரியர் அவர்கள் அத்துவித தத்துவத்தை நன்குபயின்ற கலைஞானி. அதனைச் சுவானுபவமாக்கிக் கொள்ளச் சாதனை பயிலும் ஒழுக்கமான பிரமச்சாரி. அவர் மகாநாடொன்றில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வந்தபொழுது சிவயோக சுவாமியைத் தரிசிக்கும் தாகத்துடன் சிவதொண்டன் நிலையத்துக்கு வந்தனர். சுவாமி தாகமாக நாடிவந்த அந்த அன்பரின் தகவுக்குத்தக தாமும் தம்மை ஆயத்தம் செய்துகொண்டார். அவர் பாடறிந்தொழுகும் பண்பாளர்.

சுவாமியினது உணவு சைவஉணவு என்பதைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. ஆயினும் அது கால தேசங்களுக்கு அமைவதாக இருந்தது. சிலநாள்களிலே அவரது இரவுணவு பாண்துண்டும் தேநீருமாக இருந்தது. அவர் வடஇந்திய ஊர்களில் பிரயாணஞ் செய்த போது மாலையில் இரு சப்பாதிகளை அருந்தித் தேநீர் பருகினர். அவர் பல்வண்டியிற் பிரயாணஞ் செய்த ஒருநாள் மதவாச்சி என்னும் இடத்திலுள்ள கடையொன்றில் சாப்பிடநேரிட்டது. உணவில் பர்மாறப்பட்ட சம்பல் சைவஉணவாக இருக்கவில்லை. அதனை அவர் ஒருபுறமாக ஒதுக்கி வைத்துவிட்டு மற்றையவை

களைச் சாப்பிட்டுவிட்டு எழுந்தார். அவரது சமயாசாரம் உயிரற்ற வெற்று ஆடம்பரமாக இருக்கவில்லை. அவர் ஒரு சமயம் நீண்டநாளாக வயிற்றுவலியால் வருந்திய அன்பரொருவரிடம் ஒருவகைக் கணவாய்மீன் சாப்பிட்டால் அந்நோய் சுகமாகிவிடும் எனக் கூறினர். அவ்வன்பரும் அவ்வாறே செய்து சுகமடைந்தார். யாழ்ப்பாணத்திலே மதுவிலக்குப் போராட்டத்தில் முன்னின்று உழைத்த பலர் சிவயோகசுவாமியின் அன்பர்களாயிருந்தனர். ஆனால் பெரிய தொரு மதுவியாபாரி சுவாமியின் அன்பராயிருந்தார். இதில் முரண்பாடெதுவும் இல்லை. அவர் எவரையும் பாவியெனக் கொள்ளவில்லை. பல்வேறுபட்டவர்களையும் சிவபெருமான் என்னும் நூலிலே கோக்கப்பட்ட பல்வேறு மணிகளை ஒப்பவராகவே அவர் கொண்டார். சுவாமியின் அணுக்கத்தொண்டரொருவர் மதுவருந்துவோருடனும் ஒப்புரவாய் நடந்து கொள்ள வேண்டும் என்னும் உண்மையை அறிந்து கொண்டமுறை மேல்வருவதாகும். அவர் பாடசாலைத் தலைமையாசிரியராகப் பணிபுரிந்தபோது தமது பாடசாலை முன்னேற்றத்துக்கு உதவி வந்த ஒருவரோடு மிகுந்த நட்புடையவராக இருந்தார். ஒழுக்கத்தால் வைரித்த தாம் நண்பு பூண்டிருப்பவர் மதுவருந்துபவர் என்பதை அறிந்த பின்னர், அவரோடு கொண்டிருந்த தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டார். ஆயினும் அப்பாடசாலையிலே கட்டிடத் திறப்புவிழா ஒன்று நிகழவிருந்த போது அக்கூட்டம் அமைவதற்குப் பல்லாற்றானும் உதவி செய்த அந்நண்பரின் நினைவு இடைவிடாது எழலாயிற்று. அவ்வாறான ஒருநாள் அவர் சுவாமியின் திருமுன்னிலையில் இருந்தபொழுது சுவாமி மேல்வருமாறு கூறினர். ''இங்கே பார்! குடிகாரரும் நமக்கு வேண்டும் 'கூடாதவன்' என்று நினைக்கிறவனிடத்திலே மகாத்மாகாந்தியிடமும் இல்லாத சில நல்லியல்புகள் இருக்கும்; ஆதலால் எவரையும் எள்ளாது எல்லாருடனும் ஒப்புரவாய் ஒழுகுதல் வேண்டும்'' என்பதே சிவயோகசுவாமிகளின் கருத்தாயிருந்தது.

சிவயோகசுவாமி உலகத்தவரோடு ஒட்டிவாழும்போது உபாயமாக நடந்துகொண்டார். சுவாமி அந்நாட்களிலே

யாழ்ப்பாணத்திலிருந்து அயலூர்களுக்குச் செல்லுவதானால் பெரும்பாலும் அப்புக்குட்டி என்பவருடைய மாட்டுவண்டியிற் பிரயாணம் செய்தார். ஒருநாள் பிரயாணத்தை முடித்துக்கொண்டு இறங்கும் பொழுது தம்முடன் கூடிவந்த அன்பரைச் சுட்டிக்காட்டி 'இவர் காசு தருவார்' என வண்டிக்காரரிடம் கூறினர். ஒரு சதக்காசும் வைத்திராத அன்பரோ செய்வதறியாதவராய் வண்டியிலிருந்தும் இறங்கிச் சுவாமியின் பின்னே சென்றார். சுவாமி சிறிதுதூரம் சென்று சனநடமாட்டம் இல்லாத ஓரிடத்தை அடைந்ததும் ''சந்தியில் வைத்து முடிச்சு அவிழ்க்கக் கூடாது.'' என்று கூறிய வண்ணம் வேட்டி முடிச்சினை அவிழ்த்தார். அதில் மிகுதியான காசு இருப்பது தெரிந்தது. ''இவ்வளவுகாசையும் அப்புக்குட்டி கண்டால், சுவாமியிடம் பெருந்தொகை பணம் இருக்கிறதே; கூலியாகத் தரும் பணத்தைக் கூடுதலாகத் தந்தாலென்ன என்றவாறு நினைப்பான். நாம் அவருக்குரிய கூலியைக் கொடுத்தாற் போதும்'' எனக்கூறி வண்டிக்காரருக்குரிய நியாயமான பணத்தை அன்பரிடம் கொடுத்தார். ஒருநாள் சுவாமியும், அன்பர்சிலரும், மார்க்கண்டுசுவாமியும் விசையூர்தியில் பிரயாணம் செய்தனர். விசையூர்தி சாவகச்சேரிச் சந்தையை அடைந்ததும், சுவாமி மார்க்கண்டுசுவாமியைக் கத்தரிக்காய் வாங்கி வருமாறு பணித்தார். சந்தைக்குச் சென்ற மார்க்கண்டுசுவாமி விலையைப் பொருட்படுத்தாது நல்லகாயாக வாங்குவதில் கருத்தாயிருந்தார். நல்லகாயாக வாங்கி வந்த மார்க்கண்டு சுவாமியிடம் சுவாமி அவற்றின் விலையை விசாரித்தார். அவர் பேரம்பேசாது கூடுதலான விலைகொடுத்து வாங்கி விட்டார் என்பதை அறிந்ததும் கத்தரிக்காயைக் கொடுத்து விட்டுக் காசைத் திரும்ப வாங்கி வரும்படி சுவாமி கண்டிப்புடன் கூறினர். சுவாமியின் கட்டளையை மீறமுடியாதவராய் மார்க்கண்டுசுவாமிகள் மீண்டும் சந்தைக்குச் சென்றனர். அவர் கத்தரிக்காய் வியாபாரியிடம் ஏச்சுவாங்கித் திரும்பியபோதும் சந்தைக்குச் செல்லுமொருவர் சந்தை நடைமுறைப்படி நடந்துகொள்ளல் வேண்டும் என்பதே சிவயோகசுவாமிகள் கருத்து என்பதைத்தெளிந்து கொண்டார்.

சிவயோகசுவாமி ஒருநாள் அன்பரொருவர் பின்னேவர வீதிவழியே சென்றுகொண்டிருந்தார். வீதியினருகில் நின்ற மனிதரொருவர் சுவாமியைப்பார்த்து உருக்கத்தோடு கும்பிட்டு நின்றார். சுவாமியோ அம்மனிதர் கும்பிடுவதைச் சற்றும் கவனியாதவராகச் சென்றார். சுவாமியின் பின்னல் வந்த அன்பர் அந்தத் துர்ப்பாக்கியசாலிமீது இரக்கங்கொண்டு அவரைப்பார்த்துத் தானும் உருக்கத்துடன் கும்பிட்டு விட்டுச் சுவாமியைப் பின்தொடர்ந்து சென்றார். சிறிது தூரம் சென்றதும் சுவாமி அவ்வன்பரை நோக்கிக் ''கண்ட நின்ற வரையெல்லாம் கையெடுத்துக் கும்பிடாதே, அது உனக்குக் கேடு விளைவிக்கும்'' என்று கூறினர். சுவாமி அடிக்கடி ''அவரவருக்குத்தக அவரவருடன் நடத்தல் வேண்டும்'' என்றும் ''தாயைத் தாயிடத்தும், நாயை நாயிடத்தும் வைத்துப்பார்க்க வேண்டும்'' என்றும் கூறுவார். அவர் எங்கும், எல்லாவற்றிலும், எப்பொழுதும்சிவத்தையே கண்டவர்; சிவத்தைவிடப் பிறிதொன்றுமில்லை. எனும் தெளிந்த ஞானத்தில் நிலைத்துநின்றவர். ஆனால் மரத்திற் செல்லும் சக்தி ஒன்றேயாயினும் இலை, மலர், பட்டை, வேர் எனப் பல கோலவேறுபாடுகள் தோன்றுகின்றன. இது போன்ற வேறுபாடான தோற்றங்களை அனுசரித்து ஐயா என்பவரை ஐயா என்றும் தம்பி என்பவரைத் தம்பி என்றும் உலகதருமத்தைப் பேணுவதே சிவயோகசுவமிகளின் ஒழுங்காக இருந்தது.

எல்லாருடைய தேகத்திற்கும் நோய் வருவதுபோலச் சுமாமியினது தேகத்துக்கும் சுகவீனம் வந்தது. சிலவேளைகளிலே அவர்தம் உடம்பில் சிறுபரு வந்தாலும் ''இப்பரு வலிக்கின்றதே! இதற்கு என்ன செய்யலாம்?'' என்று அன்பர்களிடம் கேட்பார். அவர்களும் தமக்குத் தோன்றியதைச் சொல்வார்கள். அவர்கள் சொல்லிய வண்ணம் செய்வதற்கும் சுவாமி கூசுவதில்லை. தமது சிறுபருவுக்கு மருந்து கேட்பவரோ, தீராப்பிணியைத் தீர்க்கும் அருமருந்து நல்கும் தேசிகமூர்த்தியுமாவார்.

அவர் நாண் எனும் சால்புடையவராய் ஒழுகினர் என்பதற்குச் சான்றாக அமையும் சம்பவம் மேல்வருவதாகும். ஒருநாள் சுவாமி சுன்னகத்திலிருந்து வந்துகொண்டிருந்தார். வழியிலே பண்டிதர் ஒருவரும் சேர்ந்து கொண்டார். இருவரும் வழிநடந்து வருகையில் மழைபெய்யலாயிற்று. சுவாமியிடம் குடை இருக்கவில்லை. பண்டிதருடைய குடையில் இருவரும் வந்தனர். இடையிலே மழைவிடாது பெய்யுமாயின் சுவாமியைக் கொண்டு விடுவதற்காகக் கொழும்புத்துறைவரைச் செல்லவேண்டி நேரிடுமோ எனப் பண்டிதர் சிந்தை செய்தார். அது அவருக்குச் சிரமமாகப்பட்டது. அச்சிரமத்தினின்றும் தப்பித்துக் கொள்ளும் யோசனையுடன் அவர் வந்தார். இந்துக்கல்லூரி எல்லையைத் தாண்டியதும் பண்டிதர் நடையின் வேகத்தைக் குறைத்துக்கொண்டு தான் நாவலர்பாடசாலைப் பக்கம் செல்ல வேண்டியிருப்பதாகக் கூறினர். அத்துடன் ''இனி என்ன செய்யப் போகிறீர்கள்'' எனச் சுவாமியைக் கேட்டார். சுவாமி அக்கணமே பண்டிதரது குடையினின்றும் வெளியில் வந்து மழையில் நின்றார். நனையும் உடலைச் சுட்டி ''இது ஒரு உப்புக்கட்டியோ'' எனப் பண்டிதரை நோக்கிக் கேட்டார். சால்வையை எடுத்துத் தலைப்பாகை கட்டிக் கொண்டு சிங்காரமாக நடந்து சென்றார். சுவாமி மானபிமானமில்லாச் சுதந்திரன். அச்சுதந்திர நிலையே அவரது உண்மைநிலை. ஆனால் ''நாணம் உயிரினும் சிறந்தது'' எனும் கோட்பாடுடைய உலகில் உலவியபொழுது அவர் நாண் எனும் அணிகலம் பூண்டவராய் உலவினர்.

''பார்வையென மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணுர் புவி''

என்பது திருவருட்பயன். மனிதரை ஆட்கொள்ளுவதற்காக மண்மேல் மனிதனாகவந்த சிவயோகவள்ளல் தாம் போர்த்திருந்த மானிடச் சட்டையை நேர்த்தியாகப்போர்த்திருந்தார். செல்லப்பதேசிகர் 'நாற்பது வருடகாலமாகத் தாம்போட்ட வேடத்தை எவரும் சந்தேகிக்காதவகையில் நடித்துவிட்டுப் போனர்'' என முன்னர் கூறப்பட்டது. சிவயோகசுவாமிகள் அரைநூற்றாண்டுகாலமாக ஒப்புரவாளர் எனும் இயல்பான் மனிதக்கோலத்தில் உலகோர் எவரும் சந்தேகிக்காத வகையில் மறைந்து வாழ்ந்தார். உலகவயப்பட்ட மோகியர் மானிடச்சட்டை அணிந்து திரியும் சிவயோகியின் அறிவு சொரூபத்தைக் காணவல்லரோ?

''ஆசைக் கடலில் அலைந்து திரிவார்கள்
ஆசை கடந்தவனை யாரறிவார் - மாசற்ற
மேகத்தைச் சந்திரனை மின்மினிதான் மூடுமோ
மோகத்தை யின்றே முனி

- நற்சிந்தனை

*

2 விண்ணும் மண்ணும் ஆகிநின்ருன் எங்கள் குருநாதன்

அண்டமும் பிண்டமும் அகத்திற் கண்டேன்
அண்டமும் பிண்டமும் அகமாய்க் கண்டேன்
அண்டமும் பிண்டமும் அகத்திற் கண்டிலேன்
அண்டமும் பிண்டமும் ஆயிருந் தேனே

-நற்சிந்தனை

சிவயோகசுவாமிகள் கொழும்புத்துறை எனும்சிற்றூரில் சிறியதோர் ஆச்சிரமக் கொட்டிலிலே எளிமையான கோலத்தினராய் அமர்ந்திருந்தார் என்பதைப் பலரும் அறிவர். ஆனால் உலகில் ஒரு மூலையிலே உடற் கூடளவினராய்க் கட்டுப்பட்டுக் கிடந்தவரோ யோகசுவாமிகள்? அவருள்ளே உலகம் அணுவாய்க் கிடந்ததென்பதே உண்மையாகும்.

சிவயோகசுவாமிகள் ஒருநாள் கொழும்புத்துறை ஆச்சிரமத்திலே வடதிசை நோக்கியவராய் அமர்ந்திருந்தார். அவரது திருமுன்னிலையிலே அன்பர்சிலர் அமர்ந்திருந்தனர். அன்பரொருவர் கொண்டுவந்த காணிக்கைப் பொருள்களான தோடம்பழங்கள் அவரதுதிருப்பாதத்தருகிலே இருந்தன. சுவாமி அன்பர்களுடன் உற்சாகமாக உரையாடிக்கொண்

டிருந்தார். உரையாடலினிடையே அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த உரையாடலுடன் எவ்வித தொடர்புமற்ற வாசகமொன்றைச் சுவாமி மொழிந்தார். ''பாவம் பிராமண சந்நியாசி'' என்பதே அவ்வாசகம். அவ்வாசகத்தை மொழியும் போது சற்று விலகியிருந்த தோடம்பழம் ஒன்றை எடுத்து ஒழுங்காக வைத்துக்கொண்டார். பின்னர் ஒன்றும் நடவாததைப் போன்று உரையாடலை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார். விடயசம்பந்தமற்ற அவ்வாசகத்திலே கருத்தூன்றுவதற்கு அன்பர்களுக்கு வாய்ப்பிருக்கவில்லை. அவ்வாசகத்தைப் பலமைல் தூரத்துக்கப்பால் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த சங்கரசுப்பையர் எனும் அன்பரைக் காக்கும் கவசமொழியாகவே சுவாமி மொழிந்தனர். சுவாமி தோடம்பழத்தை எடுத்து ஒழுங்கு செய்த அக்கணத்திலே அந்தப் பிராமணசந்நியாசி பயணஞ் செய்த விசையூர்தி விபத்தொன்றினின்றும் தப்பியது. இது பற்றிச் சங்கரசுப்பையரே கூறியிருக்கின்றார். அது மேல்வருமாறு;- ''ஒருமுறை நான் சித்தங்கேணி மகாகணபதி ஆலயத்தில் புராண உபந்நியாசம் செய்தபின் நல்லூர்விடுதிக்குத் திரும்பும்போது இரவு கடும்மழை பெய்துகொண்டிருந்தது. சீரணி வீதியில் பெரிய தண்ணீர் வாய்க்கால் நிரம்பித் தெருவையும் மூடிப் பாதை தெரியாமல் வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. அப்பொழுது வாய்க்கால்ப்பக்கமாக மின்னல் போன்ற வெளிச்சம் ஒன்று தெரிந்தது. இதனால் நாங்கள் தெருவை அடையாளங் கண்டுகொண்டு எமது காரை மெதுவாகச் செலுத்திய வண்ணமாக நல்லூர் விடுதியை வந்தடைந்தோம். அந்த மின்னல் போன்ற வெளிச்சம் தெரியாதிருந்தால் அன்று அவ்வாய்க்கால் வெள்ளத்தில் கார்விழுந்து பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும். இப்படியான அந்தச் சொல்லப்பட்ட நேரத்தில் சுவாமிகள் ''பாவம் பிராமணசந்நியாசி'' எனச்சொல்லித் தமக்கு முன்னுக இருந்த தோடம்பழத்தை எடுத்து வேறு பக்கம் வைத்தார்கள் என்று அன்பர்மூலம் பின் அறிந்தேன். எம்பெருமான் கருணை இருந்தவாறென்னே!'' சுவாமி

இருந்தவிடத்தில் இருந்துகொண்டே எல்லாவற்றையும் பார்ப்பவர். எல்லாம் அவர் கைவசமாயுமிருந்தன.

இணைபிரியாத நண்பர் இருவர் சுவாமியின் அடியவர்களாக இருந்தனர். அவர்கள் ஒரு நாள் பொழுது போக்காகத் தேநீர் தயாரித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது ''தம்பி அடோய்'' எனச் சுவாமி அழைப்பது கேட்டது. அவர்கள் தமது கருமத்தை அப்படியே விட்டுவிட்டு வீதிப் பக்கம் வந்தனர். வீதியில் சுவாமியைக் காணவில்லை. சுவாமியின் அழைப்பொலியோ இருவர் காதுகளிலும் தெளிவாய் ஒலித்தது. அதனால் அவர்கள் பெரிதும் தடுமாற்றம் அடைந்தனர். கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்குச் சென்று வந்தால்தான் மனம் ஆறுதலடையும் போல் தோன்றியது. ஆதலால் இருவரும் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் ஆச்சிரமப் படலையைத் திறந்து உள்ளே நுழைகையில் சுவாமி மேல்வருமாறு கூறினர். ''பாருங்கள் இங்கிருந்து நினைக்க அவர்கள் வருகிறார்கள்''

சுவாமியினது திருவுளம் ஒலியை மாத்திரமன்றித் திருக்கோலத்தையும் விரும்பிய இடத்தில் தோற்றுவிக்கவல்லது. சுவாமி தனதில்லத்தில் தங்கியிருப்பதைப் பெரும் பேறாகக் கொண்ட அடியவர் ஒருவர், தன்வீட்டு முன்வாயிலினுல் இறங்கி முற்றத்தில் உலாவும் சுவாமி, அக்கணமே அவர் தங்கியிருந்த அறைக்கதவைத் திறந்து கொண்டு வருவதைப் பார்த்து அங்கும் இங்குமாய் மாறிமாறி நோக்கி வியந்து நின்றார். சுவாமியோ வியப்பதற்கு ஒன்றுமில்லை என்றவாறு இயல்பாக நடந்து கொண்டார். அப்புத்தளையிலும், கம்பளையிலும் ஒரேநாளில், ஒரேநேரத்தில் சுவாமியைத் தரிசித்த அன்பர்கள் இருவர் தமது அனுபவங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்ட போது மெய்சிலிர்த்து நின்றனர். சுவாமியின் அணுக்கத் தொண்டர்கள், சுவாமி தொலை தூரத்தில் இருந்து கொண்டே தமக்குக் காட்டும் அருள்வேடங்களைத் தம்போன்ற விளக்கமுடையவரிடந்துக் கூறுவதல்லாது பிறரிடம் கூறுது பக்குவமாய்ப்

பேணிவந்தனர். யாழ்ப்பாணத்திலே சுவாமி ஒரேநேரத்தில் பலஇடங்களில் தோற்றுவது குறித்துச் சுவாமியின் அடியவர் களான பகுத்தறிவுவாதிகள் சிலர் பல்வேறு நியாயங்களைக் கற்பிக்க முயன்றனர். ஆனல் நால்வேதமும் காணமுடியாத ஞானியர் மனவுலக அறிவுக்குட்பட்ட பகுத்தறிவுக்கு அகப் படுவரோ? நரிவாலால் கடலாழம் காணமுடியுமோ? வாதி யரும் காணவொண்ணன் எங்கள் குருநாதன்.

திருக்கேதாரத்திலே சிவயோகசுவாமிகளின் திருக்கோ லக் காட்சியையும் அருள்வாக்கையும் பெற்றுக் கொண்ட சிவதொண்டரொருவரின் அனுபவம் மேல்வருவதாகும். அவர் ஆண்டுதோறும் மார்கழிமாத விடுமுறையின்போது இந்தியா சென்று சிதம்பரத்தில் திருவாதிரைநாள் காண் பதையும், பின்னர் திருவண்ணுமலே சென்று சிலநாள்கள் ரமணமகரிஷிகளின் திருமுன்னிலையில் இருப்பதையும் நியம மாகக் கொண்டிருந்தார். பகவானின் திருமுன்னிலையில் இருக்கப்பெற்றதால் பெரியாரொருவரின் சகவாசசுகம் அவ ருக்கு விளக்கமாயிற்று. ரமணமகரிஷிகளின் சமாதிக்குப்பின் னர் அச்சுகத்தினே இழந்து வாழும் வாழ்க்கை ஒரு வரட்டு வாழ்க்கையாகப்பட்டது. அவருக்குக் கொழும்புத்துறை அடி களின் நினைவு வந்தது. ஆனல் சுவாமி எவரையும் எளிதில் அண்டவிடுவதில்லே என்பதை அறிந்திருந்தமையால் சுவா மியை நாடிச்செல்ல அஞ்சினர். இமயமலேச்சாரலிலே எத் தனேயோ சாதுக்கள் வாழ்கிறார்கள்; அங்கு சென்றால் அவர் களில் ஒருவர் ஆதரித்துக் கொள்வார் எனும் துணிவோடு வடஇந்தியா சென்றார். அங்கு திருக்கேதாரத்தில் தங்கியி ருந்த போது சுவாமி நேர்நேராகத் தோன்றி Come home immediately (வீட்டிற்கு விரைந்து வா) என அருளினர். சிவதொண்டர் அப்பொழுதே திருக்கேதாரத்திலிருந்து புறப் பட்டு இலங்கை வந்து நேராகக் கொழும்புத்துறை ஆச்சி ரமத்துக்குச் சென்றார். அங்கு ''தம்பி வந்து விட்டாயா! வா'' எனும் சுவாமியின் மங்கல மொழிகள் அவரை வர வேற்றன.

1962-ஆம் ஆண்டு ஐந்து பேர் கொண்ட சிவதொண் டன் கலாசாரத் தூதுக்குழு உலகநாடுகளுக்குச் சுற்றுலாச் சென்றது. இத்தூதுக்குழுவைச் சுவாமி யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டே வேண்டும் போதெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். சிங்கப்பூரிலே சுவாமிபக்தரான சிவப்பிர காசம் அவர்களைத் தலைவராகக் கொண்ட வரவேற்புக்குழு அங்கு வருகை புரியும் தூதுக்குழுவை வரவேற்பதற்கு ஏற் பாடாகியிருந்தது. சிவப்பிரகாசம் அவர்கள் விமானநிலையம் சென்று சிவதொண்டன் குழுவினரை வரவேற்றார். சிங்கப் பூரில் வரவேற்பு உபசாரம் நடந்துகொண்டிருந்த வேளை யில் சுவாமி யாழ்ப்பாணத்து வீதியொன்றிலே விசைபூர்தி யில் பயணம் செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது வழி யிலே எதிர்ப்பட்ட சிவப்பிரகாசம் அவர்களது சகோதரி யைக்கண்டு ''சிவப்பிரகாசம் கண்டுவிட்டான்'' என்னும் வாசகத்தைக் கூறிச் சென்றனர். இங்கிலாந்துக்குச் சென்ற தூதுக்குழுவினர் அங்கே தம்பணியினை முடித்துக்கொண்டு அமெரிக்கா செல்லத் திட்டமிட்டனர். அமெரிக்காவிற்குச் செல்வது தூதுக்குழுவினரின் திட்டத்தில் ஏற்கனவே இடம் பெறுதலொன்று. அன்றியும் தூதுக்குழுவில் இடம்பெற்ற தனியொருவரின் செலவிலேயே எல்லாரும் செல்லத் தீர் மானித்ததும் விரும்பத்தக்கதாக இருக்கவில்லே. இவற்றை யெல்லாம் இருந்தவிடத்தில் இருந்துகொண்டே பார்த்துக் கொண்டிருந்த சிவயோகசுவாமிகள் சிவதொண்டன் நிலையம் வந்து நிலையப் பொறுப்பாளரிடம் மேல்வருமாறு கூறினர். ''அவர்களே உடனே இங்குவருமாறு தந்திகொடு'' அவரும் அப்படியே செய்தார் .

''முன்பெல்லாம் 'கீழே இறங்கு'' (Come down) என் றால் மழைபெய்யும்; இப்பொழுது பெய்யமாட்டேன் என் கிறது'' எனப் பொருள்பொதிந்த சிரிப்புடன் சுவாமி கூறு வார். ஆனல் வானமாய் நின்று இன்பமழையாய் இறங்கு வது அவருக்கு மிகவும் இயல்பானதே. மறவன் புலவுப் பிள் ளையார் கோவிலிலே சுவாமியும் அன்பர்களும் சிவராத்திரி விரதம் அனுட்டித்த நாளில் மேல்வரும் சம்பவம் நிகழ்ந் தது. அன்று பகற்போதில் வெய்யில் மிகக்கடுமையாக

இருந்தது. கோயில் மண்டபத்திலிருந்து முற்றத்தைப்பார்க்க முடியாதவாறு கண்கூசியது. சுவாமி முற்றத்தில் நீர் தெளிக்குமாறு அன்பர்களிடம் பணித்தார். அன்பர்கள் அருகிலிருந்த குளத்தினின்றும் நீரள்ளிவந்து தெளித்தனர். ஆயினும் அனல் அடங்கவில்லை. சுவாமி மண்டபத்தில் சாய்ந்து கிடந்தவாறு சிறிதுநேரம் விண்ணை நோக்கிய விழியினராயிருந்தார். பின்னர் வெளியிற் சென்று வானத்தைப் பார்க்குமாறு கூறினர். வெளியிற் சென்று பார்த்த அன்பர்கள் வானிலே கார்மேகம் ஒன்று படர்வதைக் கண்டனர். சிறிது நேரத்தில் நிலம் குளிருமாறு பெருமழை பெய்தது.

இங்கு கூறப்பட்ட குறிப்புகளும், அப்பனும் அடியார்களும் எனும் பகுதியிலே ஆங்காங்கு வந்துள்ள இவை போன்ற குறிப்புக்களும் 'சமிக்ஞை' போன்றனவே, இச் சமிக்ஞைகள் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் சிவயோகசுவாமிகளது ஒளிவறநிறைந்த நன்மையை ஒருவாறு உணர்த்துகின்றன. அவர் யாதொன்றும் இல்லாத ஞானப்பெருவெளியில் நிலைத்து நின்றமையால் யாவும் தமது திருமுன்னிலை என்பதை உணர்ந்துகொண்டும் யாவுமாகி, யாவையும் தமது அகத்திலே கண்டுகொண்டும் இருந்தார்,

'அண்ட சராசார மெல்லாம் - சிவசிவ
அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேன்
முண்டக மலர்ப்பாதம் கண்டேன் - சிவசிவ
மூவரும் தேவரும் முனிவரும் கண்டேன்''

உருகி உருகி உணர்ந்தேன் - சிவசிவ
ஒன்றையும் காணுமை லேங்கிநான் நின்றேன்
மருமமிது பெரும் மருமம் - சிவசிவ
மகத்துக்க ளாலும் சொல்லொணு மருமம்

என்பது அவரது திருவாய்மொழியாகும்.

3. சித்தத்துள் திகழுகின்றான் எங்கள் குருநாதன்

''கஞ்சமலர்ப் பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்
பஞ்சாமிர்தம் போல்நெஞ்சில் பண்புடன் இனிப்பவன்''
- நற்சிந்தனை

பகவான் ரமணமகரிஷிகளைத் தரிசிப்போர் அவருடைய திருமுன்னிலையில் இருத்தல் மாத்திரத்தாலே எதனையும் வாய்திறந்து கேட்காமலேயே தாம் வேண்டிச் சென்ற விளக்கங்களைப் பெற்று வந்தனரெனப் பலருங் கூறுவர். நன்கு படித்தவரான அமெரிக்கப் பத்திரிகையாளரொருவர் ரமண மகரிஷிகளிடம் கேட்டுத் தெரிவதற்கென, நன்கு ஆராய்ந்து ஆயத்தஞ் செய்த கேள்விகளுடன் திருவண்ணாமலை வந்தார். பகவானுடைய திருமுன்னிலையிலமர்ந்திருந்த சிறிது நேரத்தில் அவர் ஆயத்தஞ் செய்திருந்த நூலறிவாளரைத் திணறடிக்கக் கூடிய நுட்பமான விஞ்சைகளெல்லாம் மெல்ல மெல்லக் கரைந்து இல்லாமற் போயின. அவ்வினாக்களுக்குரிய தெளிவான விடைகளால் அவரது உள்ளம் நிறைந்து திரையற்ற நீர்போல் உபசாந்தமுற்றுக் கிடந்தது. பிற்காலத்தில் பகவான் ரமணரின் சீடரான இவ்வமெரிக்கர் குறித்து வைத்திருக்கும் இது போன்ற அனுபவங்களைப் பகவானின் முன்னிலையிலமர்ந்திருந்த பலரும் ஏதோ ஒரு வகையிற் பெற்றனர். சந்நிதான மகிமையாலே விடயவிளக்கஞ் செய்யும் இந்த ஞானியரியல்பு ரமணமகரிஷியிடத்தில் மகிமேற்றிபமாய்த் தெரிந்தது.

சிவயோகசுவாமிகளிடத்து அன்பு பூண்ட ஞானநாட்டங் கொண்ட அடியவர் பலர், சிவயோகசுவாமிகளின் அடியராகற்கு முன்னரும், அடியரான பின்னரும் கூட ரமணமகரிஷிகளையும் ஓர் மகானை மதித்துத் தரிசித்து வந்தனர். அத்தகைய அடியவர்கள் ரமணமகரிஷிகளிடம் தாம் வெளியாய்க் கண்ட விடயவிளக்கஞ் செய்யும் சந்நிதான மகிமையைச் சிவயோகசுவாமிகளிடமும் காண்பதற்கு இயல்பாகவே ஆர்வங் கொண்டனர்.

சைவப்பெரியார் மு. திருவிளங்கம் அவர்கள் சிவயோக சுவாமிகளின் சீரிய அடியார். அவர் சிவஞானசித்தியார் என்னும் சித்தாந்தசாத்திர நூலுக்குச் சிறந்ததோருரை எழுதியுள்ளார். அவ்வுரையை எழுதி வருங்காலத்து ஐய மேற்பட்ட போதெல்லாம் சிவயோகசுவாமிகளின் திருமுன்னிலையில் வந்தமர்ந்திருப்பார். தற்செயலாக வெளிவரும் சுவாமி வாக்குகளிலிலோ, அல்லது அந்த நிகழ்ச்சி ஏதேனு மொரு நிகழ்விலுலோ, அல்லது உள்ளுணர்விற்றோன்றும் உதிப்பிலுலோ ஐயந்தீர்ந்து தெளிவு பெற்றுச் செல்வர்.

சைவப்பெரியார் திருவிளங்கம் அவர்கள் தற்செயலாய் வெளிப்படும் சுவாமி வாக்குக்களால் எவ்வாறு ஐயம் நீங்கித் தெளிவு பெற்றார் என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சுவாமியின் சீரடியார் ஒருவர் பெற்ற அனுபவங்கள் சில அமைந்தன. அத்தகைய அனுபவங்களுள் ஒன்றை இங்கே குறிப்பிடுவோம்.

1960ஆம் ஆண்டு மார்கழித் திங்களில், சிவதொண்டன் நிலையத்தில் நிகழவிருந்த திருவாதிரைத்தின அபிஷேகத்தைத் தரிசிப்பதற்காக மட்டக்களப்பிலிருந்து சுவாமியின் அன்பரொருவர் வந்திருந்தார். அவர் சுவாமியிடமிருந்து தாம் பெற்ற பாடலொன்றைப் பற்றிக் குறுப்பிட்டார். அப்பாடலை 1940ஆம் ஆண்டு, மாத்தளையில் தபாலதிபராகக் கடமையாற்றிய திருவாளர் கந்தசாமியவர்களது இல்லத்தில் வைத்துப் பெற்றுக் கொண்டார். அப்பாடலைச் சுவாமி சொல்லச் சொல்லத் திரு. கந்தசாமி அவர்கள் எழுதினர். பதினெட்டாம் பாடலைச் சொல்லி முடிந்ததும் சுவாமி தூக்கம் வந்தவர் போலத் தோன்றினர். சிறிது நேரத்தின் பின் கண் விழித்து, இவ்வளவும் போதும் எனக் கூறித் துயிலச் சென்றார். துயிலச் செல்லும் போது பாடலைக் குறிப்பிட்ட அன்பரிடம் சேர்த்து விடுமாறு குறிப்பாலுணர்த்திச் சென்றனர். இப்பிறப்பிற் பெற்ற பெறற்கரும் பேறென எண்ணி ஏறக்குறைய இருபது வருடங்களாகப் பேணிவரும் அப்பாமாலையைச் சிவதொண்டன் இதழ் மூலமாக வெளிப்படுத்த வேண்டுமென அவர் எண்ணினர். தமது நினைவிலிருந்த அப்பாமாலையை எழுதிக் காட்டினர். சிவதொண்டன இதழில் வெளியிடுவதற்காக அதனைக் கவனமாகப் பரிசோதித்துப் பார்க்க வேண்டியிருந்தது. அந்தச் 'சின்னத்தங்கப்பாமாலை' முழுவதுமாக வன்றி அதிலுள்ள சில சொல்மலர்களே சாதகன் ஒருவனை மேனிலைக்குக் கொண்டு வரப் போதுமாயிருந்தன. ஆயினும் இறுதிச் செய்யுளிலே - ''ஈந்நுருவும் மித்நுருவும் தானென்றும் போகுமெடி'' என்றிருந்த ஈற்றடியில் தானென்றும் என்றிருப்பது பொருத்தமாகும் எனப்பட்டது. இதனை அன்பரிடத்து எடுத்துக் கூறினேன். அன்பரோ மூலப்பிரதியில் 'தானென்றும்' என்றேயிருக்கிறது; அதனை எப்படி மாற்றுவது எனவாதிட்டார். அடுத்த நாள் காலையில் நாடோறும் போலச் சுவாமி சிவதொண்டன் நிலைய வாயிலில் வந்து நின்றார். சுவாமியைக் கண்ணுற்றதும் சின்னத்தங்கப் பாடல் நினைவு வந்தது. ஆனல் சுவாமியின் திருமுன்னிலையில் வந்து நின்ற போது எல்லாவற்றையும் மறந்து அவர் சொல் வழியே நிற்கலானேன். சிவதொண்டன் நிலைய நிலைமைகளை விசாரித்துச் சில சொற்களைக் கூறிக் கொண்டிருந்த சுவாமியின் நாவிலிருந்து ''தானென்றும்'' போகும் எனும் வாசகம் விடயசம்பந்தமில்லாததாய் வெளிவந்தது. யான் கேட்க மறந்து போன எனது எண்ணத்திலிருந்து விடயத்தைச் சுவாமி நினைவாயிருந்த கூரியமையை நினைந்து வியந்தேன். சுவாமி சென்றதும் அன்பரிடம் வந்து நிகழ்ந்ததைக் கூறினேன். சின்னத்தங்கப்பாடலின் ஈற்றடிப்பகுதி 'தானென்றும்' எனும் அதன் உண்மை வடிவத்தில் சிவதொண்டன் இதழில் வெளியாயிற்று.

சிவயோக சுவாமிகளோடு கூடிவாழ்ந்த மெய்யடியார் ஒருவரது அனுபவங்கள் மேல்வருமாறு:- ரமண ஆச்சிரமம் உருவாகிய ஆரம்பநாட்களில் ஆச்சிரமத்துச் சாதுக்கள் மலையடிவாரத்திலுள்ள ஊர்மனைகளுக்குப் பிச்சை ஏற்கச் செல்வார்கள். அவ்வாறு செல்லும்போது ரமணமக

ரிஷிகள் பாடியளித்த 'அருணசல அக்ஷரமணமாலை' எனும் பாடலைப் பாடிச் செல்வார்கள்.

''அருணை சலசிவ, அருணை சலசிவ
அருணை சலசிவ அருணை சலா''எனும் குழு இசையோடு
''ஐம்புலக்கள்வர் அகத்திலில் புகும்போது
அகத்தில் நீ இலையோ அருணசலா''

ஆகிய பொருள் பொதிந்த கண்ணிகளைப் பாடிக்கொண்டு சாதுக்கள் செல்வது உருக்கமாயிருக்கும். இப்பாடலிசையைக் கேட்கும் ஊர்மனையிலுள்ளோர் ரமண ஆச்சிரமத்துச் சாதுக்கள் வருகின்றனரென மதித்துப் பேருஞ் சிறப்புச் செய்வர். ஒருநாள் சிவயோகசுவாமியின் திருமுன்னிலையில் அமைதியாக அமர்ந்திருக்கும்போது இப்பாடல் நினைவுக்கு வந்தது. சுவாமி அதுபோன்ற கூட்டாகப் பாடுதற்கேற்ற ஒரினிய பாடலைப் பாடித் தருவாராயின்..... என்பதுபோல எண்ணம் உதித்தது. அக்கணமே எழுதுமெனக்கூறிச் சுவாமி,

''கடவுளை எங்கும் கண்டு களிப்பார் மெய்யடியார்கள் ஓம்''

எனத் தொடங்கும் மெய்யடியாரியல்புகளைக் கூறும் நற்சிந்தனைப் பாடலையருளினர். மற்றொருநாள் சுவாமி வரும் தருணமறிந்து சிவதொண்டன் நிலைய வாயிலில் வந்து நின்ற பொழுது சுவாமி வீதியில் வருவது தெரிந்தது அவரது நடையைக் கண்ட மாத்திரத்திலே அது ஒரு சிங்காரமான நடையாகத்தான் இருக்கிறது எனும் எண்ணம் மனத்தில் உதித்தது. சுவாமி நிலையத்தை அணுகும் போது

''சிங்காரந்தனைப் பாரீர் - சிவதொண்டன் நடந்துவரும்
சிங்காரந்தனைப் பாரீர்''

எனும் பாடலைப் பாடிக்கொண்டு வந்தார்.

அன்பரொருவர் சுவாமியைத் தரிசிக்கச் செல்வதற்காக நீராடி, நனைந்துலர்ந்த வேட்டியுடுத்து ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். எவ்வாறு தான் புறந்தூயராய போதும் அகத்தூய்மைக்குறைவை நினைந்து அவ்வன்பர் மனங்குன்றினர்.

கடந்த சில நாட்களாக தனது கள்ளச்சிந்தையானது மீண்டும் மீண்டும் நீசநினைவிலே சென்று மொய்த்து நிற்பதை நினைந்து அவர் மனம் வெதும்பினர். அந்நீச நினைவுகளோ வெனின் தன் நண்பனிடம் கூட மனந்திறந்து கூறமுடியாத அத்துணை இழிந்தனவாயிருந்தன. அந்தபுன்சக எண்ணங்களை அறிவாராயின் பெற்றோராயினும் வெறுப்பார்கள் என அவர் எண்ணினர். அத்தனை அழுக்கு மனத்தோடு சுவாமிமுன் செல்வதை நினைக்க அவருக்குக் கூச்சமாயிருந்தது. ஆயினும் சுவாமி பத்தரான அவ்வன்பருக்கோவெனின் சுவாமியைத் தரிசிக்க முடியாமலிருப்பதை எண்ண, பெரும் ஏக்கமாகவும் இருந்தது. ஆதலால் எவ்வாறுயினும் சென்று சுவாமியின் திருவடியிற் கிடந்து அழுதுகதறி ஆறுதல் பெறுவது எனும் எண்ணத்தோடு அவ்வன்பர் புறப்பட்டுச் சென்றனர். இடைவழியிலே சுவாமி தியானநிலையில் இராவிட்டால் நன்றாயிருக்கும் எனும் எண்ணம் எழுந்து ஆறுதலையளித்தது. சுவாமி தியானநிலையில் அமர்ந்திராவிட்டால் தனது கள்ளச்சிந்தையை அறிந்து கொள்ளமாட்டார் என அவர் எண்ணினர். இவ்வாறு எண்ணமிட்டவராய் ஆச்சிரமத்துள் நுழைந்தபோது சுவாமி அடியவர் பலருடன் அளவளாவி மகிழ்ந்திருப்பது தெரிந்தது. தப்பிவிட்டேன் எனுந்தையித்தோடு சென்று அவ்வன்பர் சுவாமியைக் கும்பிட்டார். அப்போது புன்னகையோடு அவ்வன்பரை நோக்கிச் சுவாமி மேல்வருமாறு கூறினர்:- ''உனது உச்சி முதல் உள்ளங்கால் வரை சகலதுமறிவேன். உனது எண்ணமனைத்தும் அறிவேன். உனது எண்ணங்களை மட்டுமல்ல, எல்லோரதும் எண்ணங்களையும் அறிவேன்;ஏனெனில் எல்லாருள்ளும் நானே இருக்கிறேன். இதை நீ அறியாய்; ஏனென்றால் நீ உன்னை மற்றையவரினும் வேறுகப் பார்க்கின்றாய். வேறுகப் பாராது ஒன்றுகப் பார்த்துப் பழகு'' எனக்கூறிப் பின்னர் தம்முன்னிலையிலெரிந்து கொண்டிருந்த கர்ப்பூரதீபத்தைக் காட்டி ''இத்தீபத்தை ஏந்தி இங்குள்ள எல்லாரையும் சிவமென எண்ணி எல்லாருக்கும் காட்டு'' என அருளினர்.

சுவாமி அன்பரின் மறைந்து கிடக்கும் எண்ணங்களை

மட்டுமன்றி அன்பர்கள் சில ஆண்டுகளுக்கு முன் எண்ணிய எண்ணங்களையும் அறிபவராயிருந்தார். ஒருநாள் சுவாமி தம்மைக் கும்பிட்டு நின்ற அன்பரின் முன்னே கையை நீட்டி முன்கையைப் பிடித்துப் பார்க்குமாறு கூறினர். பின்னர் தமது கை கல் போன்று திண்ணியதாக இல்லையா எனக் கேட்டார். தொடர்ந்து தம்மைச் சுட்டிய வண்ணம் 'இது உள்ளும் புறம்பும் ஒரு தன்மைத்தான பிரம்மச்சரியம்' எனக்கூறினர். திடீரென அவ்வடியவருக்கு சில வருடங்களுக்கு முன்னர் சுவாமியின் பிரமச்சரிய விரதத்தில் ஐயுற்ற நீசநினைவு ஞாபகத்திற்கு வரலாயிற்று. உள்குவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்து அறிபவரே சிவயோகசுவாமிகள் என்பதை அறிந்து அவ்வன்பர் பெரிதும் வெள்கிப் போயினர். ஒருசமயம் வெள்ளவத்தை வாசியான சுவாமியின் அன்பரொருவர் 'ஐந்துமணி' எனச் சுவாமி உணர்த்தியது கனவோ, நனவோ என்று தெரியாத நிலையில் அதிகாலையில் துயிலுணர்ந்தெழுந்தார். கை, கால், முகம் கழுவிச் சுவாமியைக் கும்பிட்ட பிறகு ஏதோ ஒரு நினைவில் மோட்டார் வண்டியை எடுத்துக் கொண்டு கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்தை நோக்கிச் சென்றார். காலை ஐந்துமணிக்கு அவரது மோட்டார் வண்டி புகையிரத நிலைய வாயிலை அடையவும் சுவாமி யாழ்ப்பாணப் புகையிரதத்தினின்றும் இறங்கி வெளியே வரவும் சரியாயிருந்தது. இச்சம்பவத்திலிருந்து சிவயோகசுவாமிகள் தனது உள்ளத்திலே நுண்ணியதொரு உலவும் வண்ணத்தை அவ்வன்பர் உணர்ந்து கொண்டார்.

சிவயோக சுவாமியோடு உடனுறைந்து சுவாமி எண்ணுவாரெண்ணமெலாம் அறியும் நுணுக்கமிய நுண்ணுணர்வு என்பதை உணர்ந்து கொண்ட சிவதொண்டரொருவரின் அனுபவக் குறிப்புக்கள் மேல்வருவனவாகும். ''1958 மேமாதம் சிங்களவர், தமிழர் கலகம் நடக்கும் நாட்களில் வழமை போல் ஒருநாள் சுவாமிகளுடன் கூடிச் சென்று கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் தங்கியிருக்கையில் நண்

பகல் உணவு உண்டபின் சுவாமிகள் சிறிது வேளை கண்ணயர்ந்தார்கள். அந்த வேளை தனியே சந்நிதானத்திலிருந்த எனக்கு மனத்துடிப்பாக உள்ளே கொந்தளிப்புண்டாயிற்று. எத்தனையோ பெண்கள் ஊண் உடையின்றி அவமானப்படுத்தப்பட்டும், எண்ணில்லாத மக்கள் வீடுவாசல் பொருள்கள் யாவற்றையும் இழந்தும் அகதிகளாகத் தத்தளித்து யாழ்ப்பாணத்துக்கும், மட்டக்களப்பிற்கும் வந்து தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். இப்படியான அவமானம் இச்சாதி அடையும் போது எம்மைப் போன்றவர்கள் கோழைகள் போல் ஒதுங்கியிருந்து தத்துவமும் சமயமும் சாதனை செய்திடுவோம் எனும் போர்வையில் சாந்தமாகவா இருக்கிறோம். இதனிலும் இன்னுயிர் நீத்தல் சாலச்சிறந்ததே. எம்மைப் போன்ற சிலரைத் திரட்டிப் பதில் தாக்குதலுக்குப் பயிற்சி செய்து யப்பான் மக்களின் தற்கொலைப்படை போல் இயன்ற மட்டும் சிங்களவரைத் தாக்குதல்தான் சரியாகும்'' என்றிவ்வாறு எண்ணங்கள் அலைமோதின. இந்நிலையில் சுவாமிகள் தூக்கத்தால் விழிப்பவர் போலப் படுக்கையிலிருந்து அசைந்து கொண்டு ''உபாத்தியார்! பகைவர்களை அன்பினால் வெல்ல வேண்டுமென்றே ஆன்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள்'' என்று கூறினார்கள்.

1958 ஆம் ஆண்டளவில் எம்முடன் கற்பித்த ஓர் உதவியாசிரியர் அவரது அத்தரங்க ஆசையொன்று முற்றுப் பெறுது இருந்ததற்காக எம்முடன் அகப்பகை கொண்டு பல தப்பான முறைகளில் காரியப்பட்டு வந்தார். 1954ஆம் ஆண்டிற்கு முன் எம்முடன் மாறுபட்டு எதிர்க்கும் எவருக்கும் எதிராகப் பதில் நடவடிக்கை எடுக்கும் போதெல்லாம் திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்துச் செய்யலாம் என்ற முடிவின் பின்பே எடுப்பது வழக்கம். 1954 ஆம் ஆண்டு முதல் சுவாமியின் ஆளுகைக்குட்பட்டிருந்ததால் என்ன காரியம் செய்யினும் அவர்களின் திருவாக்கினை எதிர்பார்த்து அதன்படியே நடப்பது வழக்கமாயிற்று. ஆசிரியர் எதிர்ப்பினை யான் பெரும் பிரமாதமாகக் கருதாதபடியால் ஒன்றுமே செய்திலேன். அப்படியான போது ஒரு சனிக்கிழமை

இந்த ஆசிரியர் செயலைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு சுவாமிகளுடன் கூடிக் காரொன்றிற் சென்று கொழும்புத் துறை ஆச்சிரமவாயிலை அடையுந்தருணம் சுவாமி என்னை நோக்கி ''உபாத்தியார்!

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியிற் றங்குதல் தீது.

எனும் குறளைக் கூறிக்கொண்டு காரிலிருந்து இறங்கினார்கள். உடனே காரியத்தைப் புரிந்து கொண்டேனெயினும் அடுத்த வாரம் முழுவதும் அவ்வாசிரியருக்கு மாறுக ஏதும் செய்யாது வாளாவிருந்தேன். அடுத்த சனிக்கிழமையும் முன்னர் போலக் காரிற் கூட்டிச் சென்று இறங்கும் தருணத்தில், சுவாமிகள் முன் சொன்ன குறளையே மீண்டும் அழுத்தமாகச் சொன்னார்கள். இதன் பின் எவ்வித தாமதமுமின்றி உரிய மேலிடத்திற்கு முறையிட்டு அவ்வாசிரியரை வேறிடத்திற்கு மாற்றஞ் செய்வித்தேன். சுவாமி எனது எண்ண அலைகளையும், அவ்வெண்ணங்களிலிருந்து முடிவு கொள்ளும் புத்தியையும், அந்தப் புத்தியைச் சீர்தூக்கிச் சரிகாணும் சித்தத்தையும், சித்தத்தினுள் நின்று அறிகின்றார் என்பது இவ்வருளாடல் மூலம் என்னிடத்திற் தெளிவாய்ப் பதிந்தது.

சிவயோகசுவாமி எண்ணுவார் எண்ணம் எதுவரை அறியும் என்பதையும் அறிவார். சுவாமி ஆண்டுதோறும் அமைதியாகக் கொண்டாடி வந்த திருவடிநினப் பூசையைத் தரிசிப்பதற்காகச் சென்றிருந்தேன். பூசை முடிந்ததும் சிறிது நேரம் சுவாமியின் திருமுன்னிலையில் ஆறுதலாக அமர்ந்திருந்தேன். பின்னர் சிவதொண்டன் நிலையம் செல்வதற்காக விடைபெறும் எண்ணத்தோடு எழும்புகையில் சுவாமி ஒரு தொகைப் பணத்தைத் தந்து பணத்திற்கு பற்றுச்சீட்டு அனுப்பி வைக்குமாறு பணித்தார். பற்றுச்சீட்டு அனுப்பப்பட வேண்டியவரின் பெயரைக் கூறவில்லை. சுவாமி தாமாகக் கூறுதபடியால் உரியவரின் பெயரைக் கேட்டறிவதற்கும் அச்சமாயிருந்தது. அன்றியும் சுவாமி

ஒருவருக்கு இயலுமான பணியையே அவரிடம் ஒப்படைப்பாராதலால் பெயரை அறியவேண்டியதில் ஒரு பரபரப்பும் காட்டவேண்டியதில்லை என அமைதியாய் நிலையத்திற்கு வந்தேன். அன்றிரவு சிறிது நேரம் ஆறுதலாயிருந்துவிட்டு பற்றுச்சீட்டை எழுதித் தபாலுறையில் சேர்த்து முகவரியிட முடிந்தது. அது உரியவர் பெயருக்கே எழுதப்பட்டது என்பதில் அணுவும் ஐயமில்லை. அடுத்தநாட் காலையில் நிலையவாயிலில் வந்து நின்ற சுவாமிகள் கதையோடு கதையாக, ''இங்கே பார்! மற்றவருடைய எண்ணங்களை அறிவதும் ஒரு மயக்கம்; நாம் அதிலிருந்தும் விடுபட்டு நிற்கவேண்டும்'' என அருளினார். சிவயோகசுவாமி எண்ணும் எண்ணமெல்லாம் அறிந்து கொள்வார் என்பதிலும் அவ்வறிவும் மாயையே எனத் தெளிந்திருந்தார். எண்ணங்களுக்கெல்லாம் ஆதாரமாக எது உளதோ அந்த எண்ணுவார் எண்ணந்தோன்றும் இடமே சுவாமி நிலைத்துநின்ற இடமாகும்.

எண்ணுவாரெண்ணந்தோன்று மிடனெப் பெரியோருன்னித்
திண்ணமாய்ச் சொல்லும்நல்ல தெய்வமே நமச்சிவாய''

★

4. தத்துவாதிதனைன் எங்கள் குருநாதன்

''ஆறுறு தத்துவத்துக் கப்பாலே யுள்ளவனை
மாறுக் கருணையனை மருவவா என்மனமே''

-நற்சிந்தனை-

சிவயோகசுவாமி கொழும்புத்துறை ஆச்சிரமத்திற் குடிபுகுந்த ஆரம்பநாட்களில் வாரத்தின் முதல் மூன்று நாள்களும் தியானத்தில் அமர்ந்திருப்பார். நான்காம்நாள் சிறிது ஆறிய பின் இறுதி மூன்று நாள்களிலும் மீண்டும் தியானத்தில் மூழ்கியிருப்பர். இவ்வாறே தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கு நிட்டையில் இருப்பார். ஆச்சிரமத்திற்கு அடியவர் தொகை கூடுதலாக வரத்தொடங்கிய பின்னரும்

வேண்டும்போதெல்லாம் தியானத்தில் ஆழ்ந்திருப்பார். சிவராத்திரியின் போது, விடியும்வரை தியானத்தில் மூழ்கியிருப்பதே அவரியல்பு. இத்தகைய தியானகாலங்களில், சுவாமியோடு உடனுறையும் பேறுபெற்ற அன்பர்களிற் சிலர், சுவாமியின் திருமேனி இருக்குமிடத்தில் சுடரொளி ஒன்று ஒளிர்வதைக் கண்டனர். சிலகணங்களுக்குத் தோன்றிநிற்கும் இச்சுடரொளி, சுவாமியின் நிசசொரூபமான மாசற்ற சோதியில் மலர்ந்த மலர்ச்சுடரேயென அவ்வன்பர்கள் நம்பினர். இத்தகைய மலர்ச்சுடரைக் காணும்பேறு பெருதோரும், சுவாமியினது தேகக்கோலம் உயிர்ப்பேதும் இன்றி ஓவியம் போன்றிருப்பதைக் கண்டு வியப்பெய்தி நின்றனர். தங்கப்பொம்மை போன்ற அக்கோலம் சுவாமியினது குடை ஒரு மூலையில் இருப்பது போலவே அசைவேதுமின்றி வீற்றிருந்தது. ஒருசமயம் சுவாமி தியானத்தமர்ந்து துண போன்று இருந்தபோது பறந்து வந்த காகமொன்று அவரது தலையில் சிறிது நேரம் இருந்துவிட்டுப் பறந்து சென்றது. இக்குறிப்புக்கள் அவர் ஆன்மசொரூபத்தில் நிலைத்து உடம்பை மறந்துபோயிருந்தார் என்பதை உணர்த்துவனவாகும். இல்லும் சுவாமி பிறப்போடு இறப்பென்னும் சித்தவிகாரக்கலக்கம் தெளித்தவராயிருந்தார் என்பதற்கான சிலகுறிப்புகளும் உள்ளன. ஒருநாள் கொழும்புத்துறை இலந்தையடிப் பிள்ளையார்கோயில் வீதியூடாகச் சுவாமியும், அவரது சீரடியாரொருவரும் சென்றுகொண்டிருந்தனர். மற்றோரன்பர் சுவாமியின் பின்னல் தொடர்ந்து வருவது தெரிந்தது. சுவாமி அவ்வன்பரைத் திரும்பிப்பார்த்து ''எங்களோடு நெடுக வருகிறாய் போலும்'' என்றார். அவ்வன்பர் ''சுவாமி எனக்கு ஒரு வாக்குச் சொல்லுங்கள்'' எனப் பிடிவாதமாகக் கேட்டார். சுவாமிகள் தான் சொல்லும் வாக்கை என்றும் மறவாதிருப்பாயா என்றார். அதற்கு அன்பரும் உறுதி கூறினர். அப்போது சுவாமி ''நீ ஒருநாளும் சாகமாட்டாய்'' எனத் திருவாய் மலர்ந்தார். ஒருசமயம் தமது அணுக்கத் தொண்டர் ஒருவரிடம் நாம் என்றும் உள்ளோம் எனும்தலையங்கத்தில் ஒருகட்டுரைஎழுதப்

பணித்தார். அச்சிலதொண்டரும் சிலநாட்கள் அதேநினைவாயிருந்து எழுதிமுடித்துச் சுவாமியிடம் சென்றார். சுவாமி அக்கட்டுரையை வாசிக்குமாறு கேட்காமல் ''நெடுக எழுதுக'' எனக் கூறினர். சிலநாட்களின் பின்னர் அவ்வணுக்கத்தொண்டர் சுவாமியுடன் விசைவண்டியிற் செல்லும் போது நாம் என்றும் உள்ளோம் என்பது மறந்துபோகாமலிருப்பதற்காக ஒரு காகிதத்துண்டில் எழுதிச் சட்டைப்பைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் மொழிந்தனர். தாம் நித்தியர் எனும் நினைவு தடுமாறுதிருந்தது போலவே தமது தொண்டர்களும் தாம் என்றும் உள்ளோம் எனும் அறிவில் நிலைத்திருக்க வேண்டுமெனச் சுவாமி நாடினர். சிவயோகசுவாமி நித்தியர் என்பதற்கு

''அன்று மின்றும் என்றும் ஆன்மா
இருந்த படியே இருக்குஞ் சீரை
அருந்தவ யோகர் அறிந்தாங்கு...''

என அவர் பாடிய நற்சிந்தனையையும், திருமுகமொன்றிலிட்ட இறவாதவன் பிறவாதவன் என்னும் அவரது சொந்தக் கையொப்பத்தையும் விடச் சிறந்த சான்றுகள் வேறும் வேண்டுமோ? அவர் மண்ணில் பிறந்ததும் வாழ்ந்ததும் மாமாயையென்பதை அறிந்த மாதவர்.

சிவயோகசுவாமி தியானகாலங்களிலே உலக நினைப்பும் மறப்பும் இன்றித் தானேதானாகவே இருந்தார். அவர் இந்தச் சொல்லும் பொருளுமற்ற சும்மாவிருக்கும் உபசாந்தமோனத்திலிருந்து உலக அந்தகாரத்துக்கு மீளும் பொழுது தம்மைச் சூழவுள்ள மாயாவிகாரத் தோற்றங்களை ஞாபகப்படுத்த முடியாதவராய்ப் புலம்புவார். அப்போது சுவாமியோடு உடனுறையும் அன்பர்கள் ''இது கொழும்புத்துறை சுவாமி, இது திருநாவுக்கரசு வீடு சுவாமி' இது ஜன்னல் சுவாமி'' என்றவாறு ஒவ்வொன்றாக ஞாபகப்படுத்த நேரிடும்.

''போக்கொடு வரவுமில்லை பூமிவான மிங்கில்லை
நீக்கற வோங்கி நிற்கும் நின்மலன் தன்னையன்றிக்

காக்குமோர் தேவுமில்லை காலதே சமுமில்லை
நோக்குவார் தங்கட்கெல்லாம் நுணுக்கமாய்த்
தெரியுமன்றே''

எனும் நற்சிந்தனைப் பாடலில் உள்ளவாறு அவர் பூமி, வானம் முதலானவற்றைக் காணுதவராய், பொருளொன்றும் அறியாதவராய் எங்கும் சிவபிரான் ஒருவரையே நுணுக்கமாய்க் கண்டுகொண்டிருந்தார்.

உலகின் ஐம்பூதத்தியற்கை அவருக்குக் கனவாய்ப் போயிருந்தது. அவ்வாறே இவ்வுலகின் சாதி சமயம், நன்று தீது, வேண்டுதல் வேண்டாமை ஆகிய நிபந்தனைகளில் அகப்படாதவராகவும் இருந்தார். ''தமிழா! விவசாயத்தைச்செய் அற்றேல் சிங்களவருக்கு அடிமையாவாய்'' என்றவாறு கூறியபொழுது அவர் சாதியபிமானமுள்ளவர் போன்று தோன்றினர்.

''சிங்களவர் எங்களதுசெல்வம்- இந்த...
தமிழரும் எங்களதுசெல்வம்''

எனப் பாடிய போது தமிழரைப்போல் சிங்களவரையும் தம்மவராகவே கொண்டார். ''சிங்களவர் தமிழரைக் காணமாட்டேன்'' எனப் பாடிய போதோவெனின் சாதிபேதம் யாவும் நீங்கிய பெரியவராகத் தோன்றினர். அவரை இயமதியமம் சிறிதும் பிசகாத சைவாசாரசீலர் எனவே பலரும் நம்பினர். அவர் ''அல்லாகூ என்று அரற்றவேண்டும்'' எனவும், தம்மிடம் ஆறுதல் வேண்டி வந்த ஒரு கிறிஸ்தவ அன்பரைக் காணும்போதெல்லாம் ''ஆண்டவன் நிருவடி வேண்டிக் கொண்டால் என்றும் ஆறுதல் உண்டாகும்'' எனப் பாடியபோதும் சகலசமயத்துக்கும் சம்மதம் கொடுப்பவராகத் தோன்றினர். ''சின்னம் ஒன்றும் போடமாட்டேன்'' என்று பாடியபோதோவெனின் சமயம் என்னும் சங்கடத்துக்கு உள்ளாகாத சமயாதீதராகத் திகழ்ந்தார். ஒருநாள் மெய்யன்பர் ஒருவர் சுவாமியின் திருமுன்னிலையில் இருக்கும் பொழுது மேல்வருமாறு எண்ணமிட்டார். பெரும்பாலான மதத்தவர்கள் தங்கள் மதங்களைப் பரப்புவதற்காகக்

கப்போதகர்களையும், குருமார்களையும் பயிற்சி பெறச்செய்து ஆங்காங்கு அனுப்பிச் சமயப்பிரசார வேலைகளில் ஈடுபடுத்துகிறார்கள். சைவசமயத்துக்குத்தான் இவ்வாறு பயிற்சியும், பிரசாரமும் உள்ளவர்கள் குறைவாகக் காணப்படுகிறது. ஆதலால் சிவதொண்டன் நிலையம் இவ்வகையான முயற்சிகளில் ஈடுபடுதல் நன்மைகளிருக்கும். இதற்குச் சுவாமியின் அருள் நோக்கும், அநுமதியும் இருந்தால் மிகவும் நல்லது.'' இவ்வாறு எண்ணமிட்டு நின்ற அவ்வன்பரைப் பார்த்துச் சுவாமி ''சிவபெருமான் இருக்கிறாரோ'' எனக்கேட்டார். ''ஓம் சுவாமி'' என்ற அவ்வன்பரிடம் அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் எனச் சுவாமி மொழிந்தார். அவர் சமயம் எனும் சங்கற்பத்தைக் கடந்து எல்லாம் சிவன் செயல் எனும் ஞானத்தில் நிலைத்து நின்றார். சுவாமி நன்று தீது எனும் நாட்டத்தின் நீங்கியவராயுமிருந்தார். ஒருமுறை சுவாமிமார்க்கண்டு சுவாமிகளது கொட்டிலுக்கு எழுந்தருளிய போது, அந்நாட்களில் கைதடி நெற்கு விநாயகர் கோயிலில் நடந்த களவொன்றைப்பற்றியே யாவரும் கதைத்துக் கொண்டிருந்தனர். களவு போன செல்வத்தைக் குறித்து அநுதாபத்தோடும், கள்ளனைப் பற்றி ஆத்திரத்தோடும் சுவாமியிடம் முறையிட்டார்கள். யாவற்றையும் மிக அவதானத்தோடு கேட்டுக்கொண்டிருந்த சுவாமி சிறிதளவேனும் சித்த சலனமற்றவராய் ''பாருங்கள்! களவு எடுத்தவனைக் குற்றவாளி எனக் கூறுதீர்கள்; அக்களவினைச் செய்தவனுக்கு அந்த எண்ணத்தை யார் உண்டாக்கினாரோ அவரே குற்றவாளியாவார்; ஆகையால் அவரைத்தான் தண்டிக்கவேண்டும்'' என்று கூறினர். சுவாமி ''அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' எனும் அறிவிலே நிலைத்து நின்றாராதலால் நன்மைதீமையைக் கடந்த நாதனைத் திகழ்ந்தார். சுவாமி வேண்டுதல் வேண்டாமை யில்லாத பரமபுருடன் என்பதை உணர்த்தும் குறிப்பு மேல்வருவதாகும். சுவாமியின் சிரடியாரொருவர் சிலநாட்கள் சுவாமியின் சந்நிதானத்திலிருந்து பகவற்கீதை படிக்கும் பிள்ளைகளுக்குப் பொருள் விளக்கம்

செய்து கொண்டிருந்தார். ஒருநாள் ''ஆஸாத் பவதி சம் மோஹ:'' என்னும் தொடருக்கு விளக்கம் சொல்லும்போது ''எப்பொருளையாவது விரும்பி இதுவேண்டும் அதுவேண்டும் என்று ஆசைப்படுதல்கூடாது. ஏனெனில் ஆசையே மோகத் துக்கு வித்தாகும்'' என்றார். இதனைக் கவனித்துக் கொண் டிருந்த சுவாமிகள் ''இதுவேண்டாம், அதுவேண்டாம் என் றும் இருக்கப்படாது'' எனக் கூறினர். அவர் விருப்பு வெ றுப்பை வேரறப்பறித்தவர். சுவாமி சாதனைக்குள் அகப் படாத ஒருவராகவும் இருந்தார். அவர் 'அகம்பிரமாஸ்மி' எனும் உபநிடதமந்திரத்தை அனுதினமும் சொல்லவேண் டுமெனக் கூறியிருக்கிறார். ஒருபொல்லாப்புமில்லை எனும் ஒப்பற்ற மந்திரத்தை ஓயாமல் ஓதவேண்டுமெனவும் கூறி னர். குருவடி ஒருபோதும் சும்பிடமறவாச் செல்வச் சிவயோ கன், எனத் தம்மைக் கூறுவதில் களிகூர்ந்தார். எனினும் வேறுசில சமயங்களில் அகம்பிரமாஸ்மி என அனுதினம் நையேன், ஒருபொல்லாப்புமில்லை என ஓரவும் மாட்டேன், குருவென்றும் சீடனென்றும் கொள்ளவும் மாட்டேன் என்றவாறும் பாடியிருக்கிறார். அவர் அன்புநெறி, அருள் நெறி, இன்பநெறி, ஞானநெறி என்றெல்லாம் கூறியிருக் கிறார். ஆனால் நெறியெலாங் கடந்து நிற்கும் சென்றடை யாத திருவுடையாரைப் பெரிதும் உகந்தார். இவ்வியல்பு கள் சுவாமி மந்திரம், தந்திரம், மகத்துக்களின் சுந்தரப் பாதம் ஆய எவற்றிலும் தட்டாது முட்டாது நின்றனர் என்பதை உணர்த்துகின்றன.

சுவாமியிடத்தில் மனமெனும் மாயை இல்லாதிருந்த மைக்கான குறிப்பையும் அன்பர்கள் உணர்ந்திருந்தனர். ஒருநாள் வயல்வெளியிலே வரம்பின்மீது நடந்து கொண் டிருந்த சுவாமி திடீரெனச் சிலிர்போன்று சிறிதுநேரம் நின் றார். பின்னர் திகைத்துப் போய் நின்ற கூடச்சென்ற அன்பரிடம் ''மனம் என்று ஒன்று இருக்கிறதா எனப் பார்த்தேன்'' எனக் கூறினர். அவரது மனம் எண்ணங்க ளாகிய இரையற்றுப் போக ஒய்ந்து ஒடுங்கிப் போயிற்று.

ஒடுங்கிய மனம் ஆத்மாவில் லயித்துத் தன்னை இழந்து போயிருந்தது. ஆதலால் சுவாமிக்கு மனமாயை தெரிய வில்லை. ஆனால் உலகநியமங்களுக்கமைய உலகத்தவர்போல ஒழுகுதற்கு மனமெனும் பணியாளின் உதவிதேவைப்பட்டது. ஆதலால் ஆத்மாவில் துயிலும் அப்பணியாளனைக் கண்டு பிடித்துப் பணிகொள்வதில் சுவாமி விழிப்பாயிருக்க வேண் டியிருந்தது.

சுவாமி 'நான்' எனும் ஆணவத்தில் அகப்படாத வராகவும் இருந்தார். அவர் தமது அன்பர்களிடம் ''நான் என்பதெல்லாம் வீண்'' என அடிக்கடி கூறிவந்தார். ஆத லால் அவ்வன்பர்கள் சுவாமி ''யார்?'' எனக் கேட்கும் போது ''அது நான் சுவாமி'' எனும் பழக்கப்பட்டுப் போன பதிலைக் கூறமாட்டார்கள். சுவாமி தமது அன்பர் களுடன் உரையாடும் போது We is (நாம் உளேன்) என மிக இயல்பாகக் கூறுவார். பலருக்கு வேடிக்கையாகத் தோன்றும் இவ்விடயத்தைத் தலையங்கமாகக் கொண்டு சிவ தொண்டன் இதழுக்குக் கட்டுரை எழுதுமாறும் சுவாமி அன்பரைப் பணித்தனர். அவ்வாறே சிவதொண்டன் இத ழிலும் இத்தலைப்பினைச் சூடி ஆங்கிலத்திலும், தமிழிலும் கட்டுரைகள் வந்தன.

அன்பர் சிலர் சிவயோக சுவாமிகளைத் தாம் கோயில் களிலே கும்பிட்டு வந்த மூர்த்திகளாகவும் இன்னும் சிதம் பரத்து ஆடல்வல்லானாகவும் கண்டனர். சீரடியார் ஒருவ ரது அனுபவங்கள் கிலமேல்வருமாறு:- ''1940 ஆம் ஆண்டு தொடக்கம் மார்கழி மாதத்தில் நடைபெறும் திருவாதி ரைத் திருநாளில் சிதம்பரத்தில் தங்கியிருந்து வழிபாடாற் றிவருவதை வழக்கமாக்கிக் கொண்டேன். 1954ம் ஆண்டு சுவாமிகளின் ஆளுகைக்குட்பட்டிருந்தேனாகையால் அவ் வாண்டு சிதம்பர தரிசனத்துக்குப் பதிலாகச் சுவாமியினைத் தரிசித்தாற் போதுமென்று எண்ணியிருந்தேன். சிவதொண் டன் நிலையத்தில் வழக்கம் போலவே அபிஷேக ஆராதனை கள் நடைபெற்றன. பங்குபற்றியபின் சுவாமிகளிடம் செல்

லாம் என்றிருக்கும் போது கொழும்புத்துறையில் அன்று சுவாமிகள் இல்லையென்றும், பூநகரி சென்று விட்டார்க ளென்றும் ஓர் அன்பர் மூலம் அறிந்தேன். கைக்கெட்டி யும் வாய்க்கெட்டவில்லையே என்றது போன்றவனுயிருக்கை யில் வேலொரு நண்பர் என்னைப்பார்த்து ''நீங்களும் நாளு மாகப் பூநகரிக்குப் போய் சுவாமி தரிசனம் செய்வோம் வருகிறீர்களா'' எனக் கேட்டார். என் அகமகிழ்வுக்கள வில்லை. சம்மதத்துடன் இருவருமாகப் புறப்பட்டுச் சென் ருேம். பூநகரியில் சுவாமிகள் தங்கியிருக்கும் இடத்தைக் கிட்டியதும் இருவர் தூரத்தில் வருவதைக் கண்ணுற்ருேம். அவர்கள் சுவாமி தரிசனம் முடித்து விடு திரும்புகிருர்கள். காலையில் எங்களோடு நின்று அபிஷேகம் பார்த்தவர்கள். அவர்களிலொருவரான அமரர் V. A. கந்தையா M.P என் னைப்பார்த்து ''சுவாமி உங்களைப்பற்றி விசாரித்தார்'' என் ருர். இச்செய்தியும் எமக்கு ஊக்கம் அளித்தது. நாங்கள் இரு வரும் நடந்து சுவாமியின் இருப்பிடத்தை அடையும் போது மாலை ஐந்தரை மணியிருக்கும். வீட்டுமுன் வயல்வெளியிலுள் ள கிணற்றில் கால் கை கழுவிக்கொண்டு பெருந்திரளும் ஆர் வமும் பொருந்தியவர்களாய்ச் சென்று படலையைத் திறந் தோம். சுவாமி வீட்டுமுன் விருந்தைத் திண்ணையிலிருந்தார். எங்களைக் கண்டவுடனே கோபங்கொண்டவர் போலெழுந்து நின்று ஒருகாலைத்தூக்கி எம்மை உதைக்க நிற்பவர் போலக் காட்டிக்கொண்டு ''உங்களை இங்கே யார் வரச்சொன்னது? உதைத்துவிடுகிறேன், பாருங்கள்! உடனே திரும்பவேண்டும். இங்கே தங்கப்படாது'' என்று கூறினர்கள். படலை திறந் ததும் தூக்கியபாதத்தில் சுவாமியின் நடராஜலீலை என் கண்ணுக்குப்பட்டது. எவ்வித தாமதமுமின்றி யான் விரைந் துசென்று பாதங்களில் வீழ்ந்து வணங்கினேன். அப்போது தான் மேற்சொன்ன வார்த்தைகள் என் செவியில் விழுந் தன. நிலத்திற் கிடக்கும் போது முதுகில் உதைக்கிருரோ என்றவோர் ஏக்கம் எழுந்தது. அந்த ஏக்கத்தின் பயனை எத்தனையோ சாதனைகள் செய்தும் அசையாதிருந்தவோர் தடை நிவிர்த்தியாயிற்று. குண்டலினி மேலெழுந்து நாசி

நுனிநோக்கு விழித்தது. தடனந்தெரிந்தது. என்னையறியாத தோரின்பம் என்னுள் எழுந்தது. உபசாந்தத்தால் நிறைந்த உள்ளத்தினளுய்ப் பூரணதிருப்தியோடு எழுந்தேன். கொண்டு சென்ற தோடம்பழப்பையை நிலத்தில் வைக்கவிடாமல் தன் கைகளில் வாங்கிய சுவாமி ''இந்தா; இதையுங்கொண் டு இப்பவே போய்விடுங்கள்'' என்ருர். பிரசாதத்தைப் பெற் றுக் கொண்டு பரமதிருப்தியோடு இருவரும் மீண்டு அத் தினத்தைச் சிவராத்திரியாகக் கழித்த வண்ணம் நாவற் குழியை வந்தடைந்தோம். அடுத்தநாள் சுவாமிகள் என்னைக் கண்டபோது ''பிடிக்குப்பிடி நெய்விட வேண்டுமா?'' எனக் கேட்டார்கள். இருந்தவிடத்திலேயே சிதம்பரதரிசனம் சித்தி க்கச் சுவாமி திருவுளங்கூர்ந்தனர் எனப் புரிந்தேன். அதன் பின் தேடிச்செல்லாமல் மகாசமாதிவரையும் சுவாமிகள் திருவாதிரை நாட்களிலே தரிசனம் தந்தார்கள்.

''சுவாமியோடு கூடிச் சிவராத்திரி விரதமனுட்டிப் பது பெரும்பேறு'' எனச் சுவாமியின் அன்பர் பலருங் கூறுவர். சிவதொண்டன் நிலையத்து நடு நாயகமான விழாவாக அமைந்து விட்ட சிவராத்திரி விரதத்தைச் சிவ தொண்டன் நிலையத்திலிருந்தே அனுட்டிக்க வேண்டியது எமது நியமமாயிற்ருதலால் சுவாமியோடுகூடி அநுட்டிக் கும் பேறு எமக்கு வாய்க்கவில்லை! சுவாமி இரவுமுழுவதும் தியானமூர்த்தமாய் அமர்ந்திருக்க அவர் முன்பு பாடியும், பணிந்தும், தியானத்தில் மூழ்கிச் சும்மா இருந்தும் சுகம் பெறமுடியவில்லையே எனும் ஓர் உள்ளக்கிடக்கை எம்மிட மிருந்தது. இல்வாருன ஓர் உள்ளக்கிடக்கையுடன் நாமி ருக்கும் போது சுவாமி சிறிதுகாலம் சிவதொண்டன் நிலை யத்தில் உறையும் நிலை வாய்த்தது. இக்காலத்திலோர் நாள் இரவு சுவாமியின் திருக்குறிப்புணர்ந்து சுவாமியின் திருமேனியை வெந்நீரில் தோய்ந்த தூயதுணியினுல் தடவித் திருநீறு தரித்துக் கொண்டு நின்றேன். சுவாமி தியானத்தில் மூழ்கியிருந்தார். சுவாமியின் தியானமூர்த்தம் என்னிற் பதிந் ததும் எனதுகைகள் பணிசெய்துகொண்டு நின்றன. நீண்ட நேரத்தின்பின் அதுவரையும் சிவராத்திரிவிர தகாலத்தின்முக்

கியவேளையான லிங்கோற்பவவேளையின்போது லிங்கோற்பவ மூர்த்தத்திற்குப் பூசனைபுரிந்துகொண்டு நின்றேன் எனும் நினைவு விளக்கமாகியது. சுவாமியின் தேகக்கோலம் முற்றும் மறைந்திருந்தது. சுவாமியின் தேகக்கோலம் இருந்த இடத்தில் லிங்கோற்பவமூர்த்தமொன்றேயிருந்தது. பின்னிரவு வெளியே வந்து அடுத்தநாள் வேலைக்குப் போகவிருந்ததால், சிறிது நேரம் தூங்கலாம் எனப்படுத்தேன். தூங்கவிடாது சுவாமி என்னை அழைத்து ''என்ன கலியாண நித்திரையோ'' எனக்கேட்டு விடியும்வரை விழித்திருக்கவே செய்தார். இதுவே எமது சிறந்த சிவராத்திரி விரதமாயிற்று.

ஒருநாள் சிவயோகசுவாமிகளும், உயர்நீதிமன்ற நீதியரசராயிருந்த அப்பர் அவர்களும் மோட்டார் வண்டியொன்றிற் சென்றுகொண்டிருந்தனர். மோட்டார்வண்டி நல்லூர் வீதியை அடைந்த நேரம் நல்லூர்ப் பெருமானின் பூசைத் தருணமாயிருந்தது. அப்பரவர்கள் நல்லூரானைத் தொழுது வரும் குறிப்புடையவராயிருந்தனர். அக்குறிப்பினையுணர்ந்த சுவாமி வண்டியை நிறுத்தச்சொல்லி அப்பரைக் கோயிலுக்குச் சென்று வணங்கிவருமாறு பணித்தார். அப்பர் கோயில் வாயிலினின்றும் வணங்கினர். நல்லூர்க்கருவறையிலே திகழ்ந்த சிவயோகசுவாமியின் திருக்கோலத்தைத் தரிசித்துச் சிலிர்சிலிர்த்தவராய் சிறிது நேரம் விறைப்பெய்தி நின்றனர். பின்னர் உளம் குளிர்ந்தவராக வந்து மோட்டார்வண்டியிலேறி அமர்ந்தபோது ''அங்கு யாரைப்பார்த்தீர்'' எனச் சிவயோகசுவாமிகள் வினவினர். அப்பொழுது கண்களில் பனியரும்புதிரச் 'சுவாமியையே பார்த்தேன்' என அப்பர் நாக்குழறக் கூறினர். சிவயோகசுவாமிகள் நல்லூர்க்கருவறையில் வீற்றிருக்கும் வேலவனையும், தேர்முட்டிப்படியிலெழுந்தருளியிருந்த செல்லப்பதேசிகரையும் ஒருவராகக் கண்டதுபோலவே சிவயோகசுவாமியின் அன்பர் பலரும் சிவயோகசுவாமியையும், நல்லூர்ப்பெருமானையும் ஒருவராகவே கண்டனர்.

சுவாமியின் அன்பரான விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியரொருவரின் அனுபவம் மேல்வருவதாகும். அவர் சிறுவயது தொட்டு நாடோறும் வல்வைச்சிவன்கோயிலுக்குச் சென்று வழிபடும் நியமம் பூண்டவராயிருந்தனர். மாத்தளையில் ஆசிரியத் தொழில் புரிந்தகாலத்திலே அங்கு தபாலதிபராகப் பணிபுரிந்த திருவாளர் கந்தசாமியவர்களது இல்லத்திற்கு அடிக்கடி எழுந்தருளும் சிவயோகசுவாமியை ஆர்வத்துடன் சென்று சரிசித்து வந்தார். அவ்வண்ணம் ஒருநாள் சுவாமி தபாலதிபரில்லத்திற்கு எழுந்தருளியுள்ளார் என்பதைக் கேள்வியுற்றுச் சென்றார். வீட்டுவாயிலில் நின்று பார்த்தபொழுது சுவாமி முன்மண்டபத்துக் கதிரையொன்றிலே ஒருகாலை மடித்துத் தொடையில் வைத்து, ஒருகாலைத் தரையில் தொங்கவிட்ட வண்ணம் அமர்ந்திருப்பது தெரிந்தது. அவ்வன்பர் சிலகணங்கள் அந்த வீட்டுச் சுமையை மறந்தவராய் வல்வைச் சிவன்கோயிலில் தகஷிணாமூர்த்தியைத் தரிசித்துக் கும்பிட்டு நிற்கும் நிலையிலே நின்றார். பின்னர் நினைவுவந்தவராய்ச் சுவாமியை நெருங்கிச் செல்லும்போது சுவாமி ''மறைபேசும் வாயான் மனிதனை வந்திருக்கிறான்'' என்னும் வாசகத்தைக் கூறிக்கொண்டிருப்பதைக் கேட்டு உளம் உருகினர். அவ்வன்பர் ''அன்றுலின்கிழிருந்து அறமுரைத்த அவனே'' இன்று சிவயோகசுவாமியாக மண்மேல் மனிதனை நடமாடித்திரிகிறார் எனும் உறுதி உடையவரானார்.

ஆனால் சிவயோகசுவாமி காத்தும், படைத்தும், சுரந்தும் விளையாடும் சிவதத்துவத்துக்கும் அப்பாலானவர். அவர் நிலைத்துநின்ற பரவெளியில் முத்தொழிலின் கர்த்தாக்களான பிரமா, விட்டுணு, உருத்திரன் ஆகிய மூவரும் கூட இல்லாதிருந்தனர். அவர் மூவர் முனைத்தமையையும் கண்டவராவர். மோனமுதலாய் ஒரு செயலும் இல்லாது சும்மாவிருப்பதே அவரியல்பு. அவர் செயலறியாத சிவத்தினைக் கற்றவர்.

''அயலறி யாத ஆனந்தம் பெற்றேன்
மயல்றி யாத மௌனத்தி லுற்றேன்
செயலறி யாத சிவத்தினைக் கற்றேன்
இயம தியமாதி யாவையு மற்றேன்'' என்பது அவரது திருவாய்மொழி.

ஆகவே சிவயோகசுவாமி தேகம்தானல்ல எனுந்திடம் பொருந்தியவர்; அவர் மண்ணுதி பூதத்தினின்றும் விடுபட்டவர்; சாதிசமயம் யாவும் கடந்தவர்; மனமான பேய் இல்லாதவர்; நான் எனும் ஆணவத்தை அடியோடு கல்லி எறிந்தவர். அவர் சிவதத்துவத்தையும் கடந்தவர். இவை யாவும் இல்லாத இடத்தில் ஏதும் ஒன்றற நிற்பதே அவரது நிசசொரூபமாகும். இந்த ஆறுறு தத்துவத்தையும் கடந்து அப்பாலே நிற்கும் மேல்நிலையை எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பது?

ஒருநாள் சிவயோகசுவாமியின் திருமுன்னிலையில் வந்து அமர்ந்திருந்த அன்பரொருவர் தாம் வாழ்வாவது மாயம் என்பதைத் தெளிந்து கொண்டதாகவும், இந்தமாய வாழ்வினின்றும் நீங்கித் துறவுபூணத் துணிந்து விட்டதாகவும் கூறிக்கொண்டிருந்தார். அவர் சுவாமியின் ஆசீர்வாதத்தைப் பெறும் கருத்தினராய்ச் ''சுவாமி! நான் இரக்கத் துணிந்து விட்டேன்'' எனக் கூறினர். அன்பர் வாய் ஓயுமுன்னர் ''நீ இரக்கத் துணிந்து விட்டாய். நாம் இருக்கத் துணிந்து கொண்டோம்'' எனச் சுவாமி கூறினர்.

''இருக்கு மிடந்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன் - பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே யென்றேகம்
இளைத்தாலும் போகேன் இனி''

எனும் பட்டினத்தடிகளின் முற்றத்துறந்த துறவொழுக்கம் வாய்ந்தவர் சுவாமி. அவர் தம்மை ''ஆண்டிகளுள் அரசன்'' (I am the king of the beggars) எனக் கூறினர். அவர் தத்துவம் யாவும் சடமெனக்கண்டு அவற்றினின்றும் விடுபட்டு சுத்த பரிபூரணத்தில் சுகிர்த்து சும்மா இருந்தார்.

அவர் சும்மா இருக்கும் கூட்சம்.

பகுதி iv

சிவதாண்டு.

''அவனே தானே யாகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலம்மாயை தன்னொடு வல்வினை இன்றே''
- சிவஞானபோதம்

சிவயோகசுவாமிகள் திருமுகங்கள் சிலவற்றிலே **அவனே நானே** எனவும், **அவனேதானே** எனவும் கையெழுத்திட்டிருக்கிறார். நற்சிந்தனை ஒன்றிலே ''சிவபெருமான் அத்துவிதமாக இருக்கிறார். அடியேன் அவரே எனத் தியானிக்கும் மகிமை எனக்குண்டு'' என அருளியிருக்கிறார். அவர் சிவன் சிவன் எனும் சிவஞானத் தெளிவில் நிலைத்து ஏகனாகி நின்றார். ஏகனாகி நின்ற அவரிடத்திலே யான் எனது எனும் செருக்கொழிந்து போயது. ஆதலால் தன்செயலாவது யாதொன்றுமின்றி எல்லாம் சிவன்செயலாய் நிகழ்ந்தன. அவர் சங்கற்பமேதுமின்றிச் சும்மா விருந்தார். அவர் சந்நிதான மகிமையாலே நிகழ்வன நிகழ்ந்தன.



தூங்காமல் தூங்குஞ் சுகம்வந்து வாய்த்தது
சும்மா விருந்தேனடி - குதம்பாய்
சும்மா விருந்தேனடி.

ஆங்காரம் போச்சுது ஆனந்தம் போச்சுது
அவனேநா னேயடி - குதம்பாய்
அவனேநா னேயடி.

1 சிவதொண்டன் நிலையம்

சிவயோகசுவாமி சமாதியடைவதற்குச் சுமார் பத்து ஆண்டுகள் இருக்கும் பொழுது, அவரது சந்நிதானம் உலகிலே என்றும் நின்று நிலவும் வண்ணம், ஒரு ஞானச்சுடர் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. தமது முன்னிலையில் இருக்கும்பொழுது அன்பர்கள் மெய்ஞ்ஞான விளக்கம் பெற்றது போலவே தமது திருவடிக்கலப்பின் பின்னரும் விளக்கம் பெறவேண்டுமென்ற சுவாமியின் எல்லையற்ற கருணை, இந்த ஞானச் சுடர்விளக்காக மலர்ந்தது. இம்மலர்ச்சுடரே சிவதொண்டன் நிலையமாகும். தாம் இந்த ஞானப்பண்ணையை அமைத்தது, தமக்குப் பின்னர் தமதன்பர்கள் 'தட்டுக் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக' எனக் கூறிச் சுவாமி தெளிவுபடுத்தினர். முதலில் தோன்றிய சிவநிலையம் இலங்கையின் வடபால் வண்ணார் பண்ணையில் மலர்ந்தது. சுவாமி திருவடிக்கலப்புற்ற அதேதிங்களில் இலங்கையின் கீழ்த்திசையிலே சித்தாண்டி - செங்கலடியில் இன்னெரு சிவதொண்டன் நிலையம் உதித்தது.

சிவதொண்டன் நிலையம் சிவயோகசுவாமியின் திருமுன்னிலை எனும் குறிப்புணர்த்தும் சுவாமி வாக்கு உளது. ஒருசமயம் சிவதொண்டன்நிலையத்தில் சிவராத்திரிவிரதம் அனுட்டித்த அன்பரொருவர் சுவாமியைத் தரிசித்து விரதத்தை நிறைவு செய்யும் கருத்தினராய்க் கொழும்புத்துறை சென்றார். சுவாமி அவரைச் சிலசொற்கூறி ஆதரித்த பின்னர் ''நான் இரவு சிவதொண்டன் நிலையத்தில் இருந்தேன்'' எனக் கூறினர். அதுவரையும் சிவதொண்டன் நிலையவளவில் சுவாமி தமது பாதச்சுவடுகளைப் பதிக்கவில்லை என்பதை நன்குயறிந்த அவ்வன்பர் இம் மொழியினைக் கேட்டு வியந்து நின்றார். வியந்து நின்ற அவ்வன்பரை நோக்கிச் சுவாமி ''விரதமிருந்த ஒவ்வொரு அன்பருடனும் கூட இருந்தேன்'' என மொழிந்தார். அந்தமும் ஆதியும் அகன்ற சிவயோகச் செல்வர், தமக்கியல்பான செந்தண்மையின் காரண

மாகத் தம்மைச் சரணடைந்தோரைத் தாமாகச் செய்தற் கெனக் கோயில் கொண்டிருக்கும் திருப்பதியே சிவதொண் டன் நிலையமாகும்.

சிவதொண்டன்நிலையத்தின் முதன்மையான அங்கம் திருவடி பிரதிட்டைசெய்யப்பட்டிருக்கும் தியானமண்டபம் ஆகும். மற்றைய பிரதான அங்கம் புராணமண்டபம். யாழ்ப் பாணம் சிவதொண்டன் நிலையத்திலே சுவாமி உறைந்த அறையும் பூசனைக்குரிய இடமாகும். இவ்விடங்களிலே நா டோறும் காலையும், மாலையும் திவ்வியமான பூசனைபுரியப் படுகிறது. தியானமண்டபத்திலே நிகழ்வது மௌன பூசை யாகும். புராணமண்டபத்திலே மாலைக்காலப் பூசையின் போது தீபாராதனையின் பின் விநாயகரகவல், திருவெழு கூற்றிருக்கை, சிவபுராணம் எனும் தெரிந்தெடுத்த அருட் பாக்கள்ஓதப்படும். இவற்றுடன் சைவத் திருமுறைப்பாடல் களும், நற்சிந்தனைப்பாடல்களும், பெரியபுராணம், கந்தபு ராணம், திருவிளையாடற்புராணம் ஆகிய சைவபுராணங்களு மன்றி வேறெதுவும் ஓதப்படுவதில்லை.

''சிவதொண்டன் நிலையத்திற் சேர்ர்
தியானஞ் செய்துகடைத் தேறீர்
மௌனமா யிருந்திவைப் பாறீர்
மந்திர மிதுவெனக் குறியீர்'' என்பது சிவயோகசுவாமி களது திருவாய்மொழி. இத்திருவாய்மொழியிலே சிவ தொண்டன் நிலையத்தின் தாரகமந்திரம் உளது. சிவத்தி யானமே அத்தாரகமாகும். தியானம் என்பதன் பொருளும் இத் திருவாய்மொழியில் தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. மௌனமாயிருந்து இளைப்பாறுதலே தியானம் என்பதன் பொருளாகும். தியான மண்டபத்திற் புகுவதற்காகப் படி யேறிச் செல்லும் ஒருவர், நுழைவாயிலிலே

''சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம் நன்மோன நிறைவே''
எனும் சொற்கள் ஒளிர்வதைக் காண்பர். மோனநிறைவிற் பொருந்தியிருத்தலே தியானமண்டபத்திற் பெறும் போ

கும். இப்பெறற்கரும் பேற்றினைப் பெறுப் பெரும்பாடெ துவும் தேவையில்லை. குருபதமே தஞ்சமென்று சுமைய னைத்தையும் இறக்கி விட்டு, இருப்பதே அன்பின்பணி. அன் பரைச் சோதிசொரூபமாக்குவது சுவாமியின் சந்நிதானத் தின் மகிமையாகும். சுவாமி யாக நாளொன்றில் ''உங்களை இன்று கொளுத்தி எரிக்கப்போகிறேன்'' என்றதன் பொரு ளிதுவே. தியான மண்டபத்திலும், சுவாமி உறைந்த அ றையிலும் சிரமப்பாடெதுவுமின்றித் தியான அனுபவம் சித்திப்பதன் நுட்பமும் இதுவே. தியானமண்டபம், சுவாமி உறைந்த அறை என்றவரையறையின்றிச் சிவதொண்டன் நிலையமனைத்துமே தியானபூமி என்பதே பொருந்துவதாம். சுவாமி தமது முதுமையடைந்த ஓரடியவரைநோக்கி ''நீர் சிவதொண்டன்நிலையத்துக்குச் செல்லும்; அங்கே வேறென்ற றும் செய்யவேண்டியதில்லை; திண்ணைக்கட்டில் ஒரு மணித் தியாலம் அளவிற்கு ஆறுதலாய் இருந்து விட்டு வந்தாற் போதும்'' என்று கூறினர். சுவாமிவாக்கை மந்திரமா கக் கொண்ட அவ்வடியவர் நாள்வாய் மாலைப்பொழு தில் சிவநிலையம் சென்று ஒருமணித்தியாலமளவிற்குத் தின் ணையிலிருந்து விட்டுச் செல்லும் நியமம் பூண்டிருந்தார். அந்தத் தவப்பொழுதிலே அவ்வடியவரடைந்த பேற்றினை யாரே அறியவல்லார்! அவர் அமரராகும்வரை அந்நிய மத்தைக் கைவிடாதிருந்தார். சுவாமி சிவதொண்டன் நிலை யம் மலர்ந்த ஈன்னர் கொழும்புத்துறைக்குத் தம்மைத் தேடிவரும் அன்பர்களிடம் ''இங்கு ஏன் வருகிறீர்கள்? சிவதொண்டன் நிலையத்துக்குச் சென்று தியானம் செய்யுங் கள்'' எனவழிப்படுத்தினர்.

மாதந்தோறும் முதல் ஞாயிறு வாரத்தில் நிகழும் யாகநாளின் ஒழுங்குமுறையும், தியானசாதனையை உயிர்நா தமாகக்கொண்டதேயாகும். யாகநாள் ஆரம்பநிகழ்ச்சியான புராணமண்டபத்தில் நிகழும் படிப்பும், வழிபாடும் தியான சாதனைக்கு ஆயத்தப்படுத்துவனவாக அமையும். ''சும்மா விருக்க முடியாதபடியாற்றான் பாடலும், படிப்பும் நடை பெறுகின்றன'' எனும் சுவாமிவாக்கு இவ்விடத்தில் மனங்

கொள்ளத்தக்கதாகும். சும்மாவிருந்து, சுட்டிறந்துநிற்கும் ஆதியந்தமற்ற அகண்ட மோனமான தன்னியல்பை உணர்ந்து சோதிமயமாய்ப்பிரகாசித்து நிற்பதே யாகமாகும். இதனையே முன்னர் குறிப்பிட்டவாறு ''கொளுத்தியெரித்தல்'' எனச் சுவாமி கூறினர். தன்னையறியும் இப்பெருத்த வேலைக்கோர் ஒய்வாகவே பிரசாதம் அருந்துதல் முதலிய சுருமங்கள் உள்ளன. ''உண்ண உண்ணத் தெவிட்டாத நல்லமுது அண்ணல் செல்லப்பன்'' என்றபடி குருபதத்தின் திருமுன்னிலையிலிருத்தலே சுவை மிக்க நல்லமுதாகும். சுவாமியின் திருமுன்னிலையிலிருத்தலே ஆறுதலுமாகும். இவ்வியல்புகள் பொருந்தாத உண்டியும், உறையுளும் உள்ளீடற்ற பதரே. இவ்விதபதராகச் சீர்மைகுன்றும் நிலை ஏற்படுமாயின் இந்நிலையத்தை உடைத்துக் கொட்டிப் போடுங்கள்; அதனால் ஒரு நட்டமுமில்லை எனச் சுவாமி ஒருசமயம் கூறினர்.

சுவாமி சமாதியடையும் வரை ஆண்டுதோறும் ஆண்டு விழா, ஆருத்திராதரிசனம், சிவராத்திரி, திருவடிபூசை என்னும் விழாக்கள் எளிமையாகக் கொண்டாடப்பட்டு வந்தன. இவற்றைவிட மேலதிகமான விழாக்கள் எதனையும் புகுத்தாதிருக்குமாறு சுவாமி எச்சரித்தனர். சிவதொண்டன் சபையைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தமது செலவிலே மேலும் ஒரு விழாவினைக் கொண்டாடும் விருப்பத்தைத் தெரிவித்தபோது ''உந்தரவில்லைக்காணும்'' எனும் சொற்களால் சுவாமி அவரது விருப்பத்தை நிராகரித்து விட்டார். மோனத்தில் மூழ்கி உபசாந்தமுற்றுக் கிடப்பதற்கு உதவியான கிரியைகளாகவே சிவதொண்டன் நிலையத்துப் பூசைகளும், விழாக்களும் உள்ளன. இவை அளவிலும் தரத்திலும் இடம்பமான வேள்விகளாகப் பெருகாதிருக்குமாறு சுவாமி கவனமாகப் பார்த்துக் கொண்டார். சுவாமி சமாதியடைந்தபின் இன்றியமையாததெனக்கருதிக் குருபூசையும் கொண்டாடப்படுகிறது.

சிவதொண்டன்நிலையத்திலே தன்னைத்தன்னால் அறியத்தியானத்தில் மூழ்கும் பெரியவேலை நடைபெறுகிறது. இந்தநற்கருமத்திற்கேற்ற சகலவசதிகளும் ஒருகுறைவுமின்றிச் சிவநிலையத்திற் பொருந்தியுள்ளன. வசதிகளைப் பேணுதற்கும், இடையூறுகளைத் தவிர்ப்பதற்குமாகக் கண்டிப்பான ஒழுங்குமுறை பேணப்படுகிறது. ஒருநாள் சுவாமி வருகை புரிந்த விசைவண்டி சிவதொண்டன் வீதியில் நின்றது. அவர் தம்மோடு கூடவந்த அன்பரை உள்ளே சென்று வழிபட்டு வருமாறு பணித்தார். சுவாமியின் பணிப்பினைப் பெற்ற அன்பர் பரவசத்தராய் உள்ளே சென்றார். சுவாமி அவ்வன்பரை அழைத்து ''இரும்புப் படலையை இருந்தவாறு சாத்திவிட்டுச் செல்'' எனக் கூறினர். சுவாமி நிலையவாயிலினின்று உணர்த்திய ஒழுங்கு சிவதொண்டன்நிலையமெங்கும் தெரிந்திருக்கின்றது. ''ஒருபொருள் இருக்கவேண்டிய இடத்திலில்லாமல் இன்னேரமிடத்தில் மாறியிருப்பதுவே அழுக்காகும்'' என்னும் காந்தியடிகளின் வரைவிலக்கணத்தைப்படிக்க நயந்தோர் சிவதொண்டன்நிலையம் அவ்வாறன அழுக்கின்றித் துப்புரவாய் இருப்பதைக்கண்டுவியப்பர். தாம் சிவதொண்டன் நிலையத்துக்குச் செல்லுமாறு வழிப்படுத்திய அன்பர்களிடம் அங்கே அவதானத்துடன் நடக்குமாறும் அங்குள்ளவர்கள் ''பொறுப்பானவர்கள்'' என்றும் எச்சரித்தனர். சுவாமி தாம் சிவதொண்டன் நிலையத்துள் வராததன் காரணத்தை விளக்கும் பொழுது ஆண்டியான தம்முடன் பலதிறத்தவரும் சேர்வர் எனவும், தாம் உள்ளே வந்தால் அவர்களும் வருவரெனவும், அது நிலைய ஒழுங்குக்கு நல்லதல்ல எனவும் கூறினர். காவி உடுத்தவர்களை நிலையத்தில் அனுமதிக்கும் விடயத்தில் மிகவும் சாவதானமாக இருத்தல் வேண்டுமெனச் சுவாமி எச்சரித்தனர். கணமேனும் சும்மா இருக்கும் கருத்தில்லாதவர்கள் காவி உடுப்பதனாலாம் பயன் யாது? அவர்களால் கருமமாற்ற முடிவதுமில்லை; சும்மா இருக்க முடிவதுமில்லை; எப்பொழுதும் கருமமாற்றிக்கொண்டே சும்மா இருக்கவல்லவர்கள் தான் சிவதொண்டன் நிலையத்துக்கு இயைந்தவர்கள்.

சந்தசுவாமிகள் யாழ் - சிவதொண்டன் நிலையத்தில் உறைந்த பொழுது அவருடன் சிலநாட்கள் ஜெர்மன் சுவாமியும், மற்றொரு வெள்ளைக்காரரான சுவாமியும் தங்கினர். அவர்கள் ஒழுக்கம் ஆச்சிரம ஒழுங்குமுறைக்கு இயைந்ததாயிருக்கவில்லை. அன்றியும் அவர்களின் உறவு சந்தசுவாமியின் சாதனை வாழ்வுக்கும் இடையூறாக இருந்தது. ஆதலால் அவர்களை வெளியேற்றுவதில் சுவாமி மிகவும் கடுமையாக நடந்துகொண்டார். சுவாமி ஒரு சமயம் தம்மைச் சிவதொண்டன் நிலையத்தின் 'காவல் நாய்' எனக் கூறியதன் பொருள் இத்தகைய சந்தர்ப்பங்களிலே தெளிவாக விளங்கலாயிற்று.

சிவதொண்டன் நிலையத்தில் மேலாண்மை புரிபவர் எவருமில்லை. நாடோறும் நிலையவாயிலில் நின்று ஏதேனும் கூறிச்செல்லும் சுவாமி ஒருநாள் வழமைபோன்று வாயிலில் நிற்காது நேரே சென்றுகொண்டிருந்தார். சிலநாட்கழித்து வந்துநின்றபோது தாம் வராதிருந்தமைக்கான காரணத்தை ''அன்று இவ்விடத்திற்கு வந்தபோது இந்நிலையத்தின் புரவலன் யானே எனும் எண்ணம் எழுந்தது. அப்படியான எண்ணத்துடன் நிற்க வெட்கமாயிருந்தது. ஆதலால் நேரே சென்றுவிட்டேன்'' என்றுகூறித்தெளிவுபடுத்தினர். நிலையத்திலுள்ளோர்க்கு ஒரு படிப்பினையாகவே சுவாமி இச்சாலத்தினை நிகழ்த்தினர். தன்னை அறிதற்காகத் தற்போதத்தை ஒழிக்கும் இடமே சிவதொண்டன் நிலையம். அது தன்முனைப்பிற்கு இரைபோடும் இடமன்று.

சிவதொண்டன் நிலையம் வழங்கும் முதன்மையான தானம் ஞானதானம் ஆகும். கண்டிப்பான ஒழுங்கு நியமம், எளிமையான பூசை - விழாக்கிரியை, தியானயோகம் என்பன அந்த ஞானபோனகத்தை ஊட்டுவதற்கு உபகாரமாகவே அமைந்தன. சிவதொண்டன் வழங்கும் மற்றைய இருதானங்கள் அன்னதானமும், வித்தியாதானமுமாகும். மாதந்தோறும் வரும் ஆயிலிய நாள்களில் நல்லூர்த் தேரடியிலும், திருவாதிரை, சிவராத்திரி முதலாய விழாநாள்களில்

சிவதொண்டன் நிலையங்களிலும் அன்னதானம் அளிக்கப்படுகிறது. சுவாமி சமாதியடைவதற்கு முந்திய சில ஆண்டுகளில் ''கஞ்சி குடிப்பதற்கும் கஷ்டப்படவேண்டிய காலம் வரப்போகிறது; உணவுற்பத்தியில் கவனமெடுத்துப் பசித்தோருக்கு அன்னமிடுங்கள்'' எனக் கூறினர். அன்னதான மகத்துவம் பற்றிச் சிவதொண்டன் இதழ்களிலே தொடர்ச்சியான கட்டுரைகள் வெளிவந்தன. இவ்வன்னதானத்தொண்டிற்கென வளமான வயல்நிலங்களைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு பெற்ற வயல் நிலத்தின் முதல் அறுவடையை அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்துப் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் தொண்டினைச் சுவாமி உணர்த்தினர். சிவதொண்டன் நிலையம் நிறுவப்பெற்று மூன்று ஆண்டுகளுக்குள் சிவதொண்டன் இதழில் இரு விளம்பரங்கள் வெளியாகின. ஒன்று சிவதொண்டன் கல்விநிதி பற்றியது. மற்றது அக்கல்வி நிதி பெற்றுக் கற்கச்செல்வோர் பற்றியது. சிவதொண்டன் கல்விநிதி பெற்று இந்தியப் பல்கலைக்கழகங்களிலே பண்ணிசை, சமயஞானம், தமிழ் என்பவற்றைப் பயிலச் சென்றோர் தமது படிப்பை முடித்துக் கொண்டு வந்து ஐந்து ஆண்டுகள் சிவதொண்டன் நிலையத்தில் தங்கிப் பணிபுரிய வேண்டும் எனவும், அவர்கள் விரும்புமிடத்து வாழ்நாள் முழுதும் சிவதொண்டன் நிலையத்தில் தங்கிப் பணிபுரியலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இவ்வாறான சிவதொண்டன் திட்டம், தகைசான்றோரைக் கொண்டு நன்னெறிகாட்டும் சிறந்த கல்வியைப் புகட்டும் சிவதொண்டன் நிலைய நோக்கத்தைச் சிறிதளவு வெளிக்காட்டியது. சுவாமி நிலையத்தில் ஏற்பாடு செய்த சைவசித்தாந்த வகுப்புகளும், கோயில்களிலே தமது அடியவர்களைக் கொண்டு நிகழ்த்திய பெரியபுராண விரிவுரைகளும், வழக்கறிஞர் சுப்பையா முதலாய செந்தமிழிலும், ஆங்கிலத்திலும் வல்ல நூற்புலவோரைக் கொண்டு ஊட்டேறிவ் என்பார் இயற்றிய குண்டலி சக்தி முகவுரையை மொழிபெயர்த்ததும், இன்னும் விவேக சூடாமணி, நியானகாலம் ஆதிய நூல்வெளியீடுகளும் இந்நோக்கத்தை ஒருவாறு வெளிப்படுத்துவன.

யாழ்- சிவதொண்டன் நிலையம்" தியானசாதனைக்கு முதன்மை கொடுக்கும் அமைப்பினைக் கொண்டது போலச் செங்கலடிசிவதொண்டன்நிலையம் சிவதொண்டுக்குமுதன்மை கொடுக்கும் இயல்பினது. சிவயோகசுவாமியின் சித்தப்படி அமைக்கப்பட்ட இச்சிவநிலையத்தின் வரைபடத்திலே கோயிற் கூட்டிடத்தைப் போன்ற இன்னொரு கூட்டிடம் ஆச்சிரம வளவின் மேற்குப்புறத்தில் அமைக்கும் திட்டம் இருந்தது. அக்கூட்டிடத்தில் நிலையத்திற் பயிலும் பிரமச்சாரிகளும், நிலையத்துத் துறவிகளும் உறைவர். சமயாசாரமும், ஒழுக்கமும், சுலஞானமும், அனுபூதிச்செல்வமுமுடைய துறவிகள், ஆசாரசிலமும் தவச்சுவையுணர்வும், ஞானதாகமும் கொண்ட பிரமச்சாரிகளுக்குப் பொதுவான உலகியற்கல்வியும், சிறப்பான ஞானநூற் பயிற்சியும், நூதனமான ஞானசாதனைகளும் ஊட்டுவர். இவ்வாறான பிரமச்சாரிகளுக்கென்றே வளமான வயல் நிலங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் அவ்வயல் நிலத்தில் பாடுபட்டு வேளாண்மை செய்வர். வேளாண்மை என்பதன் உண்மைப் பொருள் உபகாரம் என்பதாகும். அடியவர்களின் அன்பளிப்புக்களால் ஏற்படுத்தப்பட்ட நிலபத்து வசதிகளைப் பயன்படுத்தும் பிரமச்சாரிகள் இவ்வேளாண்மைத் தொழில் மூலம் தம்மால் இயன்ற அளவு மற்றவர்கட்கு உபகாரமாயிருக்கின்றனர். அன்றியும் இவ்வித உபகார உணர்ச்சியுடைய தொழிலானது 'நான் நான்' என்று அகங்காரத்தை சுயநலத்தை ஒழிப்பதற்கும் அகண்டநாம எனும் ஒருமையில் ஒன்றிப்பதற்குரிய பரநலத்தை வளர்ப்பதற்கும் வாய்ப்பாக அமைவதால் ஞானசாதனையான சிவதொண்டாகவும் அமைகிறது. இவ்வாறான ஞானப்பண்ணையில் மலர்ந்த சமயாசாரத்தால் பொலியும் உடலும், வீரசாந்தம் விளங்கும் திருமுகமுமுடைய பிரமச்சாரிகளும், துறவிகளுமியானமண்டபத்தும், நெல்லிமரக்கீழும், சண்பகமரத்தடியிலும் வயற்பரப்பிலும் மௌனமாய் அமர்ந்தும், உலவியும் உழைத்தும் எழுப்பும் ஞானசோதி உலகுக்கெல்லாம் வழிகாட்டியாக அமையும். சிவயோகசுவாமிகளின் சிவதொண்டன் நிலையம்

பற்றிய இத்திருக்குறிப்பின் மலர்ச்சி தம்மைப் பூரணமாக அர்ப்பணிக்கும் சிவதொண்டர்களில் தங்கியுள்ளது. இதற்காக அவசரப்படுவதும், பிரசாரம் செய்வதும் சிவதொண்டனின் கொள்கையன்று. ''அவசரக்காரர்களோடு நாம் இருப்பதில்லை'' என்றும், பிரசங்கம் எதற்கும்! போகவேண்டாம் என்றும் சுவாமி அறிவுறித்தினர்.

★

2. திருவாய்மொழிகள்.

சிவயோகசுவாமி திருநூல் ஏதும் இயற்றும் சங்கற்பம் இல்லாதவர். ஆயினும் அவரைநாடித் தாகமாக வந்த அன்பர்களின் பொருட்டு அவரிடமிருந்து இயல்பாகவே வாக்கியப்பிரசாதம் சுரந்தது. அத்திருவாய் மொழிகளைப் பெற்ற அன்பர்கள் அவற்றைப் பக்குவமாகப் பேணிச் சாதனை செய்துவரலாயினர்; அவை ஒப்பற்ற மறைஞானச் செல்வத்தைப் பொதிந்து வைத்திருக்கும் மறைமொழிகள் என்பதையும், காதலித்தோதுவார்க்கு இகபரசுகம் இரண்டும் ஈயவல்ல திருமந்திரங்கள் என்பதையும், சுவானுபவமாகக் கண்டனர். தாம் பக்குவமாகப் பேணிவந்த அவ்வரும் பெறல் மணிகளை மற்றையோரும் அறிந்து இன்புறும் பொருட்டு மெல்ல மெல்லவாய் வெளிப்படுத்தினர். அவை சிவதொண்டன் இதழ்வாயிலாகத் திங்கள் தோறும் நற்சிந்தனைவெனவும், இடையிடையே திருவருளமுதம் எனவும் மலர்ந்தன. அவற்றையும், இன்னும் அடியர் பக்குவமாய்ப் பேணிவைத்திருந்தவற்றையும் தொகுத்துத் தமக்குதவவும், வருங்காலத்தில் வீடுகாதலிக்கும் அன்பர்களுக்குதவுமென நற்சிந்தனையாகவும், எங்கள் ஆசான் அருள்மொழிகளாகவும் நூலுருவாக்கி வெளியிட்டனர். இவ்விரு திருநூல்களும் உலகெங்குமுள்ள ஞானநாட்டங் கொண்ட அனைவருக்கும் பயன்படுதல் வேண்டும் எனக்கருதி Natchintanai. Words of the Master என ஆங்கிலத்திலும் மலர்ந்தன.

நற்சிந்தனை என்னும் சொற்பொருளைத் துணிந்து கொள்வதற்கு உதவியாக, நற்சிந்தனை எனும் முடிசூடி முதன் முதல் மலர்ந்த அருள்வாசகத்திலிருந்து ஒருபகுதி மேலே தரப்படுகிறது:-

''நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே.
ஆகையால் நாம் அவருடைய உடைமை.
அவருடைய அடிமை.
நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே.
நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது.
நமக்கு ஒரு குறைவுமில்லை
நாம் என்றுமுள்ளோம்
எங்கு மிருக்கின்றோம்
எல்லாமறிவோம். இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக''

இவ்வுரையில் உள்ளவாறு கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வதத்துவத்தை அடையச் செய்யும் சிந்தனையே நற்சிந்தனையாகும்.. நல் என்பதற்கு இவ்வாறான உயர் பொருள் கொள்வதே ஆன்றோர் மரபாகும். திருக்குறள் கடவுள் வாழ்த்திலே வரும் நற்றாள் என்பதற்குப் பெரியோர் மேல்வருமாறு விளக்கமளித்தனர்:- ''துன்பமனைத்திலும் பெருந்துன்பமாகிய பிறவிப்பிணியைப் போக்கி வீடுபேறுகிய பேரின்பத்தைத் தரவல்லது திருவடியே. அதனால் அத்திருவடியைவிட மிக நன்மையைச் செய்யவல்லது வேறொன்று மேயில்லையென்பதை உய்த்துணர வைப்பதற்காகவே வாளா தாளெனக் கூறாது நற்றாள் எனக் கூறினர்.'' நற்றாள் என்பதில் வரும் நல் என்பதற்குப் பெரியோர் எப்பொருள் கொண்டனரோ அப்பொருளே நற்சிந்தனை என்பதில் வரும் நல் என்பதற்கும் கொள்ளத்தக்க பொருளாம். ஆகையால் சிவயோகசுவாமிகளின் திருவாய் மொழிகளை நல்லமருந்து எனக்கொள்வதே பொருந்துவதாகும். சுவாமிகளும் 'நற்சிந்தனையெனும் நல்லமுதம்' எனவே மொழிந்தனர். இந்த நன்மருந்தைப் புண்ணியயோகர் வல்லவணுகிய செல்லப்பரிடமிருந்து பெற்றனர். அம்மருந்தினைப் புசித்துப் பெருவாழ்வு பெற்றனர். தமக்கு வாழ்வளித்த அம்மருந்தையே பல்வேறு வடிவங்களில் இனிமையாக்கித் தம்மை நாடிவந்த அன்பர்களுக்கும் அளித்தனர். அவ்வன்பர்கள் பலரும் ஆர்வமாயருந்தி நல்வாழ்வு பெற்றனர். நம்பிக்கையோடு ஓரும் அனைவருக்கும் நற்கதியளிக்கும் 'வாராவரவினில்வந்த சஞ்சீவியே' நற்சிந்தனையாகும்.

சுவாமிகளினது திருவாய் மொழிகளனைத்தினதும் திரண்ட பொருள் 'என்னை எனக்குரைத்தான் எங்கள் குருநாதன்' எனும் நற்சிந்தனையில் செறிந்திருக்கிறது. எங்கள் குருநாதன் குருநெறிச்சென்று தன்னைத்தன்னுலறியும் ஞானவித்தையையே, தமது அருள்வாக்குகளால் பயிற்றி வந்தார். அதற்காகவே அவர் மண்மேல் மனிதனுப் நடமாடினர். ஒருசமயம் சுவாமி தமது அடியாரொருவரிடம் அவ்வடியவரோடடியவராகத் தம்மையும் பாவித்து ''நமக்கிந்த ஒரேயொருவேலையே உளது. அது தன்னையறிதல்'' எனமொழிந்தார். அடியவரின் ஒரேயொருவேலை தன்னைபரிப்பில்லையாம். சிவயோகசுவாமியின் ஒரேயொருதொண்டு தன்னையறியப்பயிற்றுவித்தல். தன்னையறியும் ஞானவித்தை பயில்வார்க்கு 'நாம் யார்' என்பது முதன்மையான அறிபொருளாகும். 'நாம் யார்' எனும் உண்மையைச் சுவாமி நன்குகமனத்தில் பதியத்தக்க வகையில் தமது திருவாய்மொழிகளில் கூறியுள்ளார். நற்சிந்தனைத் திருநூலின் நுழைவாயிலில் தோரணம் போன்றமைந்திருக்கும் சுவாமியின் கையெழுத்திலான திருமுகத்தில் இவ்வுண்மை தெளிவாகத் தெரிகிறது. குருவருளானது தக்கதோரிடத்தில் பொறித்துவைத்துள்ள அத்திருமுகத்தின் ஒருபகுதி மேல்வருவதாகும்:-

''நாம் உடம்பன்று, மனமன்று புத்தியன்று, சித்தமன்று, நாம் ஆத்மா.'' நாம் ஆத்மா எனும் உண்மையைப் பல்வேறு உபாயங்களைக்கையாண்டு சுவாமி கூறியிருக்கிறார். தம்பிமாரே எனவும், பாங்கிமாரே எனவும் தங்கமே, கிளியே எனவும் அன்பொழுக விளித்து நாம் ஆத்மா என

ஆதரம் பெருகக்கூறியிருக்கிறார். 'சங்குப்பாட்டிலே' நாம் ஆத்மா எனக் காது செவிடுபடக்கூறுகிறார். 'அடுத்தடுத்துச் சொல்லுவதனால் ஆம் பயனில்லை' என்று அலுத்துக் கொள்ளும் அளவிற்கு மீட்டும் மீட்டும் கூறியிருக்கிறார்.

இந்த ஆத்மா பெரியதிற்பெரியது. சிறியதிற்சிறியது. அங்கும் இங்கும் எங்கும் செறிந்து அப்பாலுக்கப்பாலாய்ப் பரந்து செல்வது. அன்றும் இன்றும் என்றுமாய் நிறைந்து காலங்கடந்து நிற்பது. தனக்கு அயலாக ஏதுமில்லாதபடி அனைத்தையும் தன்னுள் அணுவாம்படி அடக்கி அண்டமாய் ஓங்குவது நான், நீ, அவன், இவன், அது, உறவோர், பகைவோர் எனும் பேதங்களைக்கடந்த ஒரு பொருளாய்த் தானேதானாய்த் தனித்து நிற்பது. போக்கு வரவில்லாதது. அன்புமயமானது. அறிவே வடிவானது. இன்பமாய்த் திகழ்வது. சோதியாய் ஒளிர்வது. சுத்த பரிபூரணமாய் நிறைந்துநிற்பது. இவ்வாறு எல்லாம் சொல்வதற்கு இடம்தந்து நிற்பதுடன் சொல்ல முடியாத மோன முதலாய்ச் சும்மாயிருப்பது.

இந்த ஆத்மாவே நாம். ஆகவே நாம் ஆழித்துரும்பென அங்குமிங்குமாயலையும் அற்பசரீரியல்லர். மனை, மக்கள், உறவென்பதெல்லாம் மாயாவிகாரத்தோற்றங்கள். நாம் மண்ணிற்பிறந்ததும் வாழ்ந்ததும் மாமாயை. நாம் பிறப்பிறப்பில்லாப் பெம்மான். தேசகாலம் யாவும் கடந்த நித்தியர். சுவலேயேதுமற்ற நிராமயர். தன்மை முன்னிலை படர்க்கையைக்கடந்து சுட்டிநின்று நிற்பவர். மாறிலா மகிழ்ச்சியே நமது இயல்பு. இது நமது என்றுமுள்ள இயல்பாகும். வீடு நமக்கு எப்போதும் சொந்தமானது. ஆதலால் நமக்கு ஒரு குறைவுமேயில்லை. நாம் இயமநியமாதி யாவுமற்றவர். செயலறியாத சிவமாய் நிற்பவர். ஏதும் அறியாத மௌனத்தில் நிலைத்து நிற்பவர். சுவாமியின் திருவாய்மொழிகளிலிருந்து ஒழுங்குசெய்து கொண்ட இந்த ஞானம் 'ஆத்மாவே நாமெனும்சேதி தெரிந்ததடி' எனச் சுவாமி கூறியுள்ளவாறு அவரது சுவானுபவமாகும்.

சிவயோகசுவாமி தன்னையறிவதற்காகத் தம்மைநாடிவந்த அன்பர்களுக்கு அவ்வன்பர்களின் ஆற்றலுக்கும் நாட்டத்திற்குமேற்ப, பல்வேறு சாதனைமுறைகளை அறிவுறுத்தினர். அவற்றுள் தியானசாதனை முதன்மையானது. நாம் ஆத்மா என்பதே உண்மை. அவ்வுண்மையை மறந்துவிட்டதே அறியாமை. அவ்வறியாமை நீக்குதற்குரிய நேர்வழி அவ்வுண்மையை மீண்டும் நினைவுபடுத்துதலேயாம். இதனை ஞாபகப்படுத்தலே பெரியசாதனை என அவர் மீகவும் எளிமையாகக் கூறியிருக்கிறார். எவன் எதை நினைத்துக்கொண்டிருக்கிறானே அவன் அதுவாகிறான். ஆத்மாவே நாம் என அநுதினம்சாதனை செய்பவர் ஆனந்தமான மோட்சவீட்டையடைவர். இதிலோர் ஐயமுமில்லை. சுவாமி ஓர் நற்சிந்தனையில்

ஆன்மா நித்தியம் ஆன பொருளென
ஆசான் சொல்லக் கேட்டிருந்தோம்,
அதையே மறந்தோம் பிறந்தோம் இனிநாம்
அதுவே நாமென எண்ணிடுவோம் - எனப்பாடியிருக்கின்றனர். அது நான் எனும் அகலாத் தியானத்தால் மதுவுண்வண்டுபோலாயினர் பலரே என இத்தியான சாதனையின் சித்திக்கு அநுபவசித்தாந்தமும் கூறியிருக்கின்றனர். அது நாம் எனும் தியானசாதனை பயில்வதற்கேற்ற தியான மந்திரங்கள் பல நற்சிந்தனையிலுள்ளன. அவற்றுள் மிகவும் தெடுபது ''ஓஉக அது நாம் ஓம் தத்சத் ஓம்'' எனும் மந்திரமாலையாகும். இம்மந்திரமாலையின் பாடல்கள் வண்டொன்று மலரைச் சுற்றி இரீங்காரம் இசைத்து மலருள் நுழைந்து மதுவுண்டு மயங்கிக்கிடக்கும் பாவனையில் அமைந்துள்ளன. பாடலொவ்வொன்றினதும் முதல் நாலடிகளும் மனத்தைச் சிவசிந்தனையில் பயிலச்செய்கின்றன. இதனால் ஏகாக்கிரகம் அடைந்த மனம் ''அது நாம் ஓம் தத்சத் ஓம்'' எனும் மந்திரத்தை உயிரைளழுப்பி ஓதுகிறது. இவ்வாறு ஓதுவதால் இப்பெருமந்திரத்தின் பொருளான ஆத்மசுகத்தில் மூழ்கிக்கிடப்பதே மந்திரத்தின் உயிராகும். முதல் நான்கடிகளாலும் பரவசமெய்தி அதுநாம் எனும் மந்திரத்தை உருவேறச் செபிப்பவர்க்கு மோனசுகத்தை அளிக்கும் ஆற்றல் அம்

மந்திரத்தில் அமைந்துகிடக்கிறது. நற்சிந்தனையிலுள்ள இன்னெரு நெடிய பாடல் இருபத்தைந்து பாடல்களாலான நியான மாலையாகும். இம்மந்திரமாலையிலுள்ள திருமந்திரம் 'ஓம் நமசிவாய' என்பதாகும். மாலையின் ஒருபக்கம் பிரணவப்பொருளிலே பயில்வதற்கு வாய்ப்பான பாமலர்களால் தொடுக்கப்பட்டிருக்கிறது. உயிர்வருக்கக் கோவையாகவுள்ள அப்பாமலர்களை விழிப்புடனெதுவோர் அவை ஓங்காரக்கம்பத்தின் உன்னதமேடையின் பாங்கான வீட்டின் பள்ளியறையைத் திறக்கும் திறவுகோலே என்பதை உணர்வர். அப்பள்ளியறையிற் புகுந்து நீங்காச் சிவகதியில் சுகித்துக்கிடப்பதே, இப்பாமலர்களிற் பயின்று ஓங்காரமந்திரத்தை நினைப்பதனுலாம் பயனுகும். இம்மந்திரமாலையின் மற்றையபக்கம் நமசிவாய மந்திரத்தில்பயில்வதற்கு வாய்ப்பான பாமலர்களால் தொடுக்கப்பட்டிருக்கிறது. அவை நகரவருக்கக் கோவையாக அமைந்திருக்கின்றன. இத்தியான மாலையை அந்தியும் சந்தியும் அன்பினில்நினைவோர் நந்தாவின்ப நாடவைரெனத் திருக்கடைக்காப்புச் செய்யுள் கூறுகிறது. 'நமசிவாயமாலை' எனும் நற்சிந்தனை இரவுவேளையிலே நித்திரை செய்யுமுன்னர் சிறிதுநேரம் தியானத்தமர்ந்திருக்கும் வழக்கமுடைய ஒரடியவர் பொருட்டு அருளப்பட்டதாகும். அம்மந்திரமாலையை ஓதித்துயிலச்செல்லும் அடியவர் 'துரியநிலையில் தூங்காமல் தூங்கும் சுகத்தில் சுகிக்க வேண்டும் எனும் கருணையினலே அப்பாடல் அருளப்பட்டதாகையால் அதனை ஓதுவோர் அடியவர் மனதை நீங்கா அப்பனின் அரவணைப்பில், புன்னகை தவழத்துயிலும் பாலர் போன்று உபசாந்தம் தவழத் துயின்று கிடப்பர். ''ஒரு சொல்லால் உளம் தூய்மையாச்சே'' எனத்தொடங்கும் சிறியபாடல், ஒன்றையுங் காணுமல் தானன தன்னிலையில் தனித்திருக்கும் இடத்திலே மாட்டிவைக்கவல்ல தியான மாலையாகும். இவைபோன்ற தியானமாலைகள் வீட்டுநெறியில் நாட்டங்கொண்டோரை முத்திக்கரை சேர்க்கும் புனைகளாயமைந்த தொன்றுதொட்ட திருமந்திரங்களைப் பொருளாயுடையன. செல்லப்பதேசிகரது காட்சியிற் புகுவதாகக்கண்ட 'உண்மை முழுதும், ஒரு பொல்லாப்புமில்லை. எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம்' எனும் மகாவாக்கியங்களைப் பொருளாகக் கொண்ட மந்திரமாலைகளும் நற்சிந்தனையிற் செறிந்துள்ளன. இம்மகாவாக்கியங்களின் விரிவுரையே நற்சிந்தனைப் பாடல்களென்று சொல்லுமளவுக்கு அவை பரந்து கிடக்கின்றன.

தியானசாதனையே சிவயோகசுவாமிகள் வலியுறுத்திவந்ததாகும். ஆயினும் அவர் யோகநெறியில் நாட்டங்கொண்ட அன்பர்கள் யோகசாதனை பயில்வதற்கு வாய்ப்பான பாடல்கள் சிலவற்றையும் அருளினர். அத்தகைய பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக ''இடைபிங்கலை இரண்டும்'' எனத்தொடங்கும் யோகநெறிப்பாடலுள்ளது. இப்பாடலிலே யோகசாதனை பயிலும் முறையும், யோகசாதனையில் முன்னேறிச்செல்லும்போது ஒவ்வொருபடியிலும் தோன்றும் மலர்ச்சியின் அடையாளங்களும் பாடப்பட்டிருக்கின்றன.

கோயில் வழிபாட்டில் வழிப்படுத்தும் பாடல்களும் நற்சிந்தனையில் உள்ளன. நல்லூர் முருகன்மீது பாடிய பாடற்றொகுதி நல்லூர்த் தலத்திலே அன்பர்களால் பத்திரத்தையுடன் ஓதப்பட்டுவருகிறது. அப்பாடல்களுள் கிளிக்கண்ணிப் பாடல் இலக்கிய நயம்செறிந்த நெடியபாடல். அப்பாடலில் நிலைப்போர் இருந்த இடத்தில் இருந்துகொண்டே சிவயோகசுவாமிகளுடன் கூடச்சென்று நல்லூர் பூசைபார்க்கும் பாக்கியம் பெறுவர்.

மந்திரமுந் தந்திரமும் வேண்டா மகத்துக்கள் சுந்தரத்தாளே துணை என்பது சிவயோக சுவாமிகளின் திருவாய்மொழி. மாதவருமறியாத மகத்துவரான செல்லப்பாசுவாமிகளை நினைந்து பாடிய குருதோத்திரங்கள் குருதோத்திரமாலை என்னும் சிறியதொரு நூலாக வெளியிடுமளவுக்கு நற்சிந்தனையிற் பரந்துகிடக்கின்றன. நற்சிந்தனைப்பாக்கள் பலவற்றிலே சிவயோகசுவாமி கானகத்தில் உறுதியுடன்

திரியும் சிங்கத்தைப்போன்று ஞானவீதில் திரியும் சித்த னைருவனைப் போலவும், வீரசாந்தம் தவள அமர்ந்திருக் கும் வேதாந்தியைப்போலவும் தோன்றுகிறார். ஆனல் குரு தோத்திரப்பாடல்களிலே குருவின் திருவடியைத்தனிச் சர ணைகக்கொண்டு மண்டியிட்டுக்கிடக்கும் ஏழைத்தொழும்ப னைப்போல குழைந்துருகிக்கிடக்கின்றார். இப்பாடல்கள் பத் திக்கவைகொழிக்கும் ஞானமணிகளாகும். ஞானநாட்டமு டைய குருநெறிச்செல்வோர்க்கு ''குரு தோத்திரம்'' எனப் படும் வடமொழிப்பாடல் வாய்ப்பாடமாக இருக்கும். அவ்வா று வாய்ப்பாடமாக இருக்கத்தக்கபாடல்கள் சில நற்சிந்தனை யிலுள்ளன. ''அகரமாம் எழுத்துப்போல அனைத்திலும் கலந்து நின்றே, இகபரம் இரண்டும்வந்த எழிற்குரு திருத்தாள்வாழ்க' முதலிய குருவணக்கப் பாடல்கள் அத்தகையனவாகும். இறைவனும் குருவும் ஒருவரேயெனுங்கருத்து ஞானநூல் களில் பரக்கப்பேசப்படுகிறது. சுவாமியின் குரு தோத்திரப் பாடல்கள் இறைவனே குரு என்னும் கருத்தைக் கையிற் கனியெனக்காட்டும் மந்திரங்களாகும். சிவபெருமான் மண் மேல் மனிதனய் நடமாடுவது எவ்வாறு சாலும்? மனித ரொருவரின் காலடியில் வீழ்ந்து கிடப்பது நகைவினை யாதா? என்றெல்லாம் வாதிடுவோர் நற்சிந்தனையிலுள்ள குருதோத்திரப் பாமலர்களைப் பயின்மூல் தமது திண்ணிய நெஞ்சு நெகிழ்ந்துருக, நம்போன்ற உருவில் மனிதனய் நடமாடித்திரியும் சற்குரு ஒருவர் நமக்குத்தரிசனம் தர மாட்டாரா! ''அக்குருவின் பாதத்தைக் கும்பிட்டுக் கோ டாநுகோடி பாவத்தைப் போக்கும் பாக்கியம் எமக்கு சித் திக்காதா'' என்றவாறு ஏக்கமுறுவர்.

தியானம், யோகம், குருபக்தி யாவும் சாதனை அளவி னவே. இச்சாதனைகளால் தன்னையறிந்து மோனசுகத்தில் சுகித்துக்கொண்டு கிடப்பதே பெரும்பேறகும். இப்பேற்றி லே பொருந்திக்கிடக்கும் ஞான நிட்டையினர்க்குத் தியான மில்லை. யோகமில்லை. சீலமில்லை. தவமில்லை. மூலமில்லை, முடிவுமில்லை, ஒருபொல்லாப்புமில்லை முதலிய ஒப்பற்ற மந்

திரங்களை நினைவதும், குருசீடமுறைமை என்பனவுமில்லை. இந்த ஞானவரம்பான மோனமே நற்சிந்தனைப்பாடல்கள் அனைத்தினதும் குறியாம். இந்த ஞானசிகரம் பனிமூட்ட மில்லாத அரிதான சில காலைப்பொழுதுகளில் பொன்வண் ணமாய் ஒளிரும் கைலைச் சிகரம் போல ''ஒன்றென இரண்டென எண்ணவும் மாட்டேன், தன்னையறிந்தால் தவம் வேறில்லை'' முதலான சில பாடல்களில் பூரணப் பொலிவோடு தோன்றுகிறது. பொன்வண்ணமாய் ஒளி ரும் கைலைச்சிகரம் மலையேறிக்குக் களிப்பூட்டுவதுபோல இப்பாடல்கள் ஞானநாட்டங் கொண்டோனுக்கு தாகத் தையாச் கிவிடுகின்றன.

நற்சிந்தனைத் திருநூலின் இறுதியிலே உரைநடைப் பகுதி, திருமுகங்கள் எனும் இருபகுதிகள் உள்ளன. இவை சிலபக்க அளவினவே. ஆயினும் இவையும் மிகை; இவற்றி லுள்ள சிலசொற்களே ஒருவரை மேனிலையடையச் செய்யப் போதுமானவை என்று எண்ணக்கூடிய மந்திரச்சொற்க ளால் நிறைந்திருக்கின்றன. ''நாம் சிவபெருமானென்ற நூலிலே கோக்கப்பட்ட பலநிறமணிகளையொப்பவர்; நூல றுவதுமில்லை. நாங்கள் சிதறிப்போவதுமில்லை''. ஆகிய வாசகங்கள் அக்கணத்திலேயே அத்துவிதசுகத்தில் மாட்டி வைக்கும் ஆற்றல் வாய்ந்தவை. இவ்வுரைநடைப்பகுதி சிவதொண்டன்நிலைய யாகநாள்களின் போது புராணமண் டபத்திலே வாசிக்கப்படுகிறது. விரதிகளாய்வந்து ஒன்றிய சிந்தையோடு இவ்வாசகங்களைக் கேட்டிருந்துவிட்டு, தியான மண்டபத்தில் நுழைவதற்காகப் படியேறிச்செல்லும் அடி யார் உண்மையில் மோனசுகத்திற் புகுவதற்கேற்ற திறவு கோலுடன் செல்லுகின்றார் எனக் கூறுவது பொருந்து வதேயாகும்.

எங்கள் ஆசான் அருள்மொழிகள் என்னும் நூல் சிவ யோகசுவாமிகள் அவ்வப்போது தமது அன்பர்களுக்கீந்த வாக்கியப்பிரசாதங்களது தொகுதியாரும். இவ்வருள்மொழி

களைப் பக்குவமாய்ப் பேணிவந்த அணுக்கத்தொண்டர்கள் வெவ்வேறு நிலைக்களனில் நின்றவர்கள். அவர்களை அவரவரது சொந்தப்பாத்திகளில் வைத்தே சுவாமி வளர்த்தெடுத்தனர். உதாரணமாக மேற்குநாட்டுக் கிறிஸ்தவ பாரம்பரியத்தில்ஊறிய சந்தசுவாமிகளுக்கு(அருள்மொழிகள் பகுதி vi) ''ஆதியில் அச்சொல் இருந்தது...'' என்ற பைபிள் வாசகத்தையே முதன்மொழியாக அருளினர். மேலும் அவரது பட்டறிவிற்குப் பழக்கமான ''காண்டாமிருகத்தைப் போல் தனித்திரு'' போன்ற வாசகங்களால் உண்மை உணர்த்தினர். அன்பர்களது நிலைக்களனுக்கேற்ப அருள் மொழிகள் சுரந்தது போலவே அவர்களது ஆன்மீக வளர்ச்சிப்படிநிலைகளுக்கேற்பவும் மலர்ந்தன. மார்க்கண்டுசுவாமிகளுக்கு (அருள்மொழிகள் பகுதி-1) அருளிய மனம்பற்றிக் கூறப்பட்ட விடயங்களை நிரலாகத் தொகுத்து நோக்கும் ஒருவர் இதனைத் தெளிவாகக் காண்பர். மார்க்கண்டுசுவாமிகள் முதலிற் குறித்துள்ளவைகள் மனத்தைக்கட்டுப்படுத்துவது, பலப்படுத்துவது, ஒருமுகப்படுத்துவது என்பன பற்றியும், அவற்றிற்கான வழிமுறை பற்றியும் உணர்த்துகின்றன. பின்னர் குறித்துள்ளவை மனத்தின் அசைவுகளைக் கவனித்துக்கொண்டு அதினின்றும் பிரிந்து சாட்சியாய் நிற்கும் சாதனைகள் பற்றிக் கூறுகின்றன. எண்ணங்கள் வராமல் தடுக்கும் முறையை ஆரம்பசாதனையாகவும், எண்ணங்கள் வந்து போகட்டும் என்று அவற்றுள் தாக்குண்ணாது சும்மாவிருந்து பழகும் முறையை உயர் ஞான சாதனையாகவும் சுவாமி மொழிந்தனர். ஆதலால் ஆன்மீக நாட்டங்கொண்ட பல்வேறு நிலையினர்க்கும் பொருந்துவதான அருள்வாக்குகள் இந்த ஞானக்களஞ்சியத்திலே உள்ளன.

சுவாமியின் திருநூல்கள் வியத்தகு எளிமை வாய்ந்தவை. பயிலும் மொழியில் அமைந்த இத்திருநூல்களைப் படிப்போர் பலரும், இவற்றின் தெளிந்தநீர் போன்ற மேற்பரப்பை மட்டும் பார்த்துவிட்டு ஆழத்தை அளந்தறியத் தவறுகின்

றனர். இதில் வியப்பதற்கொன்றுமில்லை. சிவயோகசுவாமியின் இயல்பு அவரது திருவாய்மொழிகளிலும் அமைந்து கிடக்கிறது. சுவாமியின் மேனியை மாத்திரம் பார்த்தோர் அவரை எல்லாரையும் போன்ற ஒருவராகவே எண்ணினர். ஆனால் அவருடன் பலநாள் பழக்கம் பூண்டவரும் அவரை இடையறாது நினைந்தோரும் சிந்தனைக்கரிய சிவத்தின் அருள் வடிவே சிவயோகசுவாமி எனக்கண்டனர். அதுபோலவே இத்திருநூல்களைப் பலகாலும் பயின்றோரும் மனனஞ்செய்து சாதித்துவருவோரும் இவை பேசாநுபூதியையே பேசுகின்றன என்றுணர்கின்றனர். இத்தகைய அனுபவம் பெற்றோர் நற்சிந்தனையை வேதம் எனவே கொள்வர். ஆராரென்ன அறைந்த போதிலும் சிவதொண்டர்க்குச் சிவயோகசுவாமி சிவபெருமானிலும் வேறல்லர். அவரது திருவாய் மொழிகள் வேதமேயாகும்

★

3. சிவதொண்டன் இதழ்

சிவதொண்டன் என்னும் செல்வக் குழந்தை பவ வருடத்து (1934) மார்கழித் திங்களில் திருவவதாரம் செய்தனன். அவன் ஓம் எனும் தாரகம் ஒன்முடி தரித்திருந்தான். அவனது மேனியிலே 'எண்ணுவார் தெஞ்சில் நண்ணுவான் ஈசன்' என்னும் சுலோகம் எழிலாய் ஒளிர்ந்தது. அவன் உள்ளுறையாகக் கொண்டிருந்ததோ உயர்ந்த அநுபூதி ஞானமாகும். அந்த அநுபூதிச் செல்வத்தை அவன் செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொல்லிய வண்ணம் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் எழுதியவரின் பெயர், ஊர், பட்டம், பதவி என்னும் பொருளல்லாதவற்றைப் பொருளென மயங்கி வித்தாரம் புரியவில்லை. தாளமேளமில்லாத தாழ்மையாந் தன்மையோடு நின்றான். அவன் வயதிற் சிறியவனாயினும் மதியிற் பெரியோனையும், நித்தியாநித்தியம் தெரியும் நிபுணனையும், நியதிமார்க்கம் கடவாதவனையும் திகழ்ந்தான். ஞானமணிப்பூடணத்தை உள்ளுறையாகக்

கொண்ட அவனது வண்ணமும், வடிவும் கண்டாரால் விரும்பப்படும் திருவுடையதாக அமைந்தன.

சிவயோகசுவாமி, சிவனருளால் உதித்த சிவதொண்டன் என்னும் சின்னக் குழந்தையைக் கண்ணே இமை காப்பது போல வளர்த்து வந்தனர். அந்நாட்களிலே அவர் நாடோறும் சிவதொண்டன் தொட்டிலான கமலாசினி அச்சகத்தில் காட்சி தந்தார். இதழாசிரியருடன் நிலைமைகளை விசாரித்தறிந்தார். இதழாசிரியரும் சிவயோகசுவாமிகளது சந்நிதானத்திலே உயிரை எழுப்பிச் செயல்பட்டனர். தமது அன்பர்களான சுலோசனையரிடம் இனிய கட்டுரைகள் எழுதுமாறு பணித்தார். அவ்வன்பர்களும் தாம் எழுதும் விடயம் கனவிலுந் தோன்றும் வண்ணமாய் இரவும் பகலும் சிந்தித்துத் தெளிந்து சிறந்த கட்டுரைகளை எழுதினர். அவ்வுரைகள் சிவயோகசுவாமிகளின் முன்னிலையில் அமர்ந்து ஆர்வத்தோடு கேட்டறிந்த விடயங்களையே சுலோவண்ணத்துடன் கட்டியுரைத்தன. அவை பெரும்பாலும் சிவயோகசுவாமிகளது திருவாய் மொழிகளாலேயே இழைக்கப் பட்டிருந்தன. பெர்ருட் செல்வரிடம் திங்கள் தோறும் உங்கள் இல்லத்திற்கு எழுந்தருளும் சிவதொண்டனுக்கு ஆம் பொருள் வழங்கி ஆதரியுங்கள் என வேண்டினர். அவர்களும் போதுமளவும் பொருளீந்தனர். சிவதொண்டனும் தளர்ச்சியின்றி வளர்ந்தனன்.

சிவசிந்தனையே சிவதொண்டனின் இலட்சியமாகும். இந்த இலட்சியம் 'எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்' எனும் மகுட சுலோகத்தில் தெளிவாகத் தெரிகிறது. நாம் சிவம் என்பதே உண்மை. அவ்வுண்மையை மறந்தமையே பெருந்தீங்காகி விட்டது. மறதியைப் போக்குவதற்கான நேரானவழி மறந்து போனதை மீண்டும் ஞாபகப்படுத்தலே என்பது தெளிவு. ஆகவே சிந்தி, சிந்தி, சிந்தி, சிவகதி என்பதைச் சிவதொண்டன் இலட்சியமாய்க் கொண்டனன். இதனைச் சிவயோகசுவாமிகள் நுட்பமாய் உணர்த்தினர். ஒரு சமயம் தொண்டர் சிலர் சிவதொண்டன் இதழை அங்கத்தவர்களுக்கு அனுப்பிவைப்பதற்காக முகவரியிட்ட உறைகளை ஒட்டிக் கொண்டிருந்தனர். அதனை அவதானித்துக் கொண்டிருந்த சுவாமிகள், ''சிவ'' (இதழ் அட்டையில் உளது) என்பதை முறையா வண்ணம் ஒட்டுதல் வேண்டும் எனவும், 'சிவ' என்பது மாத்திரம் பார்ப்பவர் மனதில் பதிந்தாலே பெருங்காரியம் எனவும் கூறினர். இவ்வண்ணம் சிவத்திலே மனம் பயில்தலே சிவதொண்டன் குறிக்கோள் என்பதனைச் சிவயோகசுவாமிகள் தெளிவுபடுத்தினர்.

சிவதொண்டன் மூன்றாவது இதழ் சிவயோகசுவாமிகளின் திருவாய் மொழியாக மலர்ந்த, கீழ்மைக்குணங்களைப் போக்கி, மேலான தெய்வதத்துவத்தை அடையச் செய்யும் நற்சிந்தனையைச் சித்திரக்கோட்டுக்குள் ஏந்தி வந்தது. தொடர்ந்து திங்கள் தோறும் நற்சிந்தனைப் பாக்கள் மலர்ந்தன. சில ஆண்டுகளின் பின்னர் அன்பர்கள் குறித்துவைத்திருந்த சுவாமியின் அருள் மொழிகள் திருவருள் அமுதம் எனும் தலைப்பில் வெளியாயின. இந்த நற்சிந்தனையும், திருவருள் அமுதமும் இன்னும் சிவசிந்தனையுமே சிவதொண்டனின் உயிரோசையாகும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய தேவாரத்துடன் இசைந்தொலித்த திருநீலகண்டயாழ்பாணரின் யாழிசை போன்று சிவதொண்டனின் உயிரோசையோடு இசைந்தொலிக்கும் அம்சங்கள் சில உள. அவ்வாறான யாழிசையின் ஒரு சுரம் செல்லப்பதேசிகரின் மகாவாக்கியங்களை விளக்கி அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகள் ஆகும். சிவயோகசுவாமிகளுடன் பல நாட்பழக்கம் பூண்ட அன்பர் சிலர் அவரருகே அமர்ந்திருந்து கேட்டறிந்த விடயங்களை இன்பம், குருவாகும் முதலிய தலையங்கங்களில் எழுதிய கட்டுரைத்தொடர்கள் அதன் மற்றொரு சுரமாகும். பெரும்பாலும் சுவாமி கூறிய விடயங்களை விரித்துரைத்த ஆசிரியர்

கருத்துரைப்பகுதிகளும், நாம் என்றுமுள்ளோம் முதலாய கட்டுரைகளும் அதன் இன்னொரு சுரமாகும். நற்சிந்தனைத் திருநூல் வெளிவருமுன்னரே ஏழை அடியான் ஒருவர் எழுதிய நாம் ஏன் நற்சிந்தனையைப் படிக்க வேண்டும் எனும் கட்டுரைத்தொடர் அதன் மற்றொரு சுரமாகும். நோன்றுத் துணையாயிருந்தனன் தன்னடியோங்கட்கே எனும் சுவாமி சரிதைப்பகுதிகளும் இன்னும் சிவதொண்டன்ஞானப்பண்ணையிலே மலர்ந்த என் ஆசான், எப்பொழுதும் தரிசனமே ஏனுனக்கு விண்ணப்பம் ஆகிய கட்டுரை இலக்கியங்களும் அதன் மற்றைய சுரங்களாகும்.

நற்சிந்தனை, திருவருள் அமுதம், சிவசிந்தனை, எனும் உயிரோசையும், மகாவாக்கியங்கள் முதலாய துணையிசையுமே சிவதொண்டனின் சிறப்பியல்பான பாகமாகும். அவன் இந்தத் தனித்துவமான பாகத்தைத் தன்னடக்கத்துடன் பக்குவமாகப் பேணிக்கொண்டு தன்னை எதிர்கொள்ளும் அன்பரின் தகவுக்கும், பட்டறிவிற்கும், நாட்டத்திற்கும் ஏற்ற வாறு உலகளாவிய ஞானக்களஞ்சியத்திலிருந்து பொருத்தமான ஞானவாசகங்களை எடுத்துரைப்பான். அவன் முதன்மையான உபநிடதங்கள் அனைத்தையும் எளிமையும், தெளிவும், இனிமையும் பொருந்த அவற்றின் மேட்டிமையைப் பேணும் பீடுடைய நடையிலே மொழி பெயர்த்துத் தந்துள்ளான். உபநிடத ஞானத்தை ஓர் ஒழுங்கமைப்பில் விரித்துரைக்க முயலும் பகவற்கீதை, சுருக்கமாக விளங்கமுயலும் பிரமசூத்திரம் எனும் திருநூல்களில் உள்ளவற்றையும் ஏந்தி வருவான். பிரபலமான இந்நூல்களிலுள்ளவற்றுடன் சிலரே அறிந்ததும், உயர்ஞான சாதனை பயில்வோர் என்றும் கொண்டாடுவதுமான அஷ்டாவக்கிரர் கீதை முதலிய ஞானநூல்களை மீட்டும் மீட்டும் எடுத்துரைப்பான். நக்கீரர் முதல் பாம்பன் சுவாமிகள்வரை அருளிய பரந்து பட்ட தமிழ் நூற்களஞ்சியத்திலுள்ள ஞானமணிப் பூடணங்களைக் காண்பிப்பதில் சிவதொண்டன் எப்பொழுதும் களிப்படைவான். திருமுறை மலர்களைத் திவ்வியமாக ஏந்திநிற்பான்.

தோத்திரமும் சாத்திரமுமாயுள்ள தாயுமானார் பாடற் றிறத்தைப் பெரிதுத்துடன் விரித்துரைப்பான். சிவபோகசாரம், ஒளவைகுறள் முதலிய சிலரே அறிந்த அருநிதியங்களைப் பலரும் அறியக் காண்பிப்பான். சிவதொண்டன் தத்துவ நாற்புலவோர் முன்னிலையிலே வாதுகள் பேசி யாவரையும் வெல்லும் வல்லபத்துடன் தோன்றுவான். வேதாந்த சித்தாந்தங்களை மாத்திரமன்றிப் பௌத்ததத்துவம், பண்டைய கிரேக்க தத்துவஞானம், விவிலிய வேதத்தின் ஞானபாகம், இஸ்லாமிய சூபித்துவக்கலை என்பவைகளையும் எடுத்துரைப்பான். இவற்றையெல்லாம் கூறும்போது சிவதொண்டன் ஒரு அநுபூதிச் செல்வனதலால் எந்த விடயத்தையும் திரிபுபடுத்தாமலும், அவற்றின் மாண்புக்குப் பங்கமேற்படாத வகையிலும் கூறுவான். அவன் ஓர் பிரசாரகர் போன்று விரிவுரை செய்வதில்லை. ஆன்றவிந்தடங்கிய சான்றோரைக் சிலசொற்களில் கூறுவதையே பெரிதும் உகப்பான். தமிழ்மொழி தெரியாத ஞானநாட்டங் கொண்ட தன் அன்பர்களுக்காகவும், ஆங்கிலமொழியிற் பயின்று பழகிய அன்பர்களுக்கு வாய்ப்பாகவும் ஆங்கிலத்திலும் ஞானவிடயங்களைக் கூறுவான்.

ஆனால் வியாபகமான தனது ஞானநூலுணர்ச்சியையிட்டுச் சிவதொண்டன் சிறிதும் பெருமை கொள்வதில்லை. கங்கைநதிபற்றிப் பக்கம் பக்கமாக எழுதப்பட்டநூலை எவ்வாறுதான் சுசக்கிப்பிழிந்தாலும் ஒரு துளி நீரையேனும் பெறமுடியாது. நூலறிவாளர் நுணுகியுமறியார்; சாதனை செய்யும் சத்துக்கள் காண்பார் என்பதே சிவதொண்டனின் துணிபாகும். அவன் விரிந்து கிடக்கும் நூற்பொருளையெல்லாம்எடுத்துக் கூறுவது விடய அறிவுக்காகவன்று; அவை சிந்தித்துச் சிந்தித்துச் சாதனை செய்தற்கேற்ற சாதனை மணிகள் என்பதனாலேயே அவற்றைத் திரட்டிக் கூறுகின்றான்; சிவதொண்டன் ஒரு சுவடிச்சாலை போன்றவன் அல்லன்; அவன் ஒரு சாதனைகூடத்தைப் போன்றவன் என்பதே சரியாகும். சிவதொண்டன் இதழ் எனும் சாதனைகூடம் உபாய

நெறியிற்சாதனை பயில்வாருக்கும், உண்மை நெறியிற்சாதனை பயில்வார்க்கும் ஏற்ற சாதனங்களையுடையதாகத் திகழ்கிறது. யோகசாதனை பயில்வோருக்கு அத்துறையில் நவீனமும் சிறப்பும் பொருந்திய சாதனைகள் சிவதொண்டனில் உள்ளன. அத்தகைய சாதனைகளுக்கு, இந்துமத தந்திர சாத்திரங்களை மேற்குநாட்டு அறிவியற்கண்கொண்டு அறியும் வரை அறிந்து, பின்னர் கீழைத்தேய ஆன்மீக சாதனைகள் மூலம் உணர முடிந்தளவு உணர்ந்து சேர் ஜோன் வுட்ரோவ் என்பார் இயற்றிய குண்டலிசக்தி முன்னுரை ஒர் எடுத்துக்காட்டாகும். இத்தகைய முன்னைப் பழமைக்கும் முன்னையதும், பின்னைப்புதுமைக்கும் புதுமையானதுமான ஞானசாதனைகளும் சிவதொண்டனில் உள்ளன. அவையெல்லாம் கையாளுவதற்கு மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும் தரவல்லன. வெவ்வேறு மார்க்கத்தினர்க்கும், ஆன்மீக மலர்ச்சியின் வெவ்வேறு படிநிலையிலுள்ளவர்க்கும் ஏற்றனவையாகவும் உள்ளன.

சிவதொண்டன் உணர்த்தும் அநுபூதிஞானம், அவனது வியாபகமான கலைஞானம், அவன் பயிற்றும் சாதனைகள் ஆகியவற்றை நோக்க, சிவயோகசுவாமிகளின் இன்னொருகோலமே சிவதொண்டன் என எண்ணத்தோன்றுகிறது. சிவயோகசுவாமியும் சிவதொண்டனைச் சிவனடியாரை உபசரிப்பது போலவே உபசாரம் செய்யுமாறு உணர்த்தியிருக்கிறார். .....உங்கள்

மங்களம் பொலியும் மாளிகை தனக்கு
திங்கள் தோறுஞ் சிறப்புடன் வருவான்
ஆங்கவன் றன்னை யார்வமோ டணைத்துத்
தூங்கநீ றணிந்து சொர்ணத்தா லாய
பூம்பட் டாடை பொலிவுறப் புனைந்துடுத்து
ஆம்பொருள் வழங்கி யகமழ் வித்து
நாம் சிவ மென்று
நாத கீத வாத்தியம் முழங்கக்
காத லாற்கசிந் தாடல்நங் கடனே.

*

4. திருவடி வழிபாடு

சிவயோகசுவாமிகள் கொழும்புத்துறை ஆச்சிரமத்திலே திருவடி பிரதிட்டை செய்து வழிபாடாற்றி வந்தார். அவர் ஆண்டுதோறும் பங்குனிமாதத்து இரண்டாவது திங்கட்கிழமையைத் திருவடிபூசைத்தினமாகக் கொண்டாடி வந்தனர். யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் சிவதொண்டன் நிலையம் நிறுவப்பட்டபோது முதலிற் சிலநாட்கள் ஒரு சிறு வாளி பூசனைக்குரிய பொருளாயிருந்தது. பின்னர் திருவடி பிரதிட்டை செய்யப்பட்டது. செங்கலடியில் சிவதொண்டன் நிலையம் நிறுவப்பட்டபோது அங்கும் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்திலிருந்து நீண்டதொரு பாதயாத்திரையிற் கொண்டு வரப்பட்ட திருவடியே பிரதிட்டை செய்யப்பட்டது.

சிவயோகசுவாமிகள் மலர்ச்சியடையச் செய்த திருவடி வழிபாடு விக்கிரக வழிபாட்டிலே பழகிப்போன பாமரமக்களுக்கு நூதனமான வழிபாடாகத் தோன்றுதல் கூடும். ஆலில் திருவடிவழிபாட்டுப் பாரம்பரியத்தையும், திருநூல்களிலே போற்றப்பட்டிருக்கும் திருவடிச்சிறப்பையும் அறிந்தோர்க்குத் திருவடிவழிபாடு தொன்றுதொட்டு வரும் வழிபாட்டு முறையே என்பது தெளிவாகும்.

சைவப்பெருங்கோயில்களுள் முதன்மையும் மேன்மையும் ஒருங்கே பெற்றுத் திகழும் சிதம்பரம், திருச்செந்தூர், பழநி, மதுரை ஆதிய ஆலயங்களில் பள்ளியறையிலிருந்து மூலத்தானத்திற்குத் திருவடி எழுந்தருளி வந்தபின்னரே நாட்பூசை முதலியன ஆரம்பமாகும். நாள்முடிவிலும் திருவடி பள்ளியறைக்கு வந்தபின்னரே அர்த்தசாமப் பூசை நடந்துமுடிகிறது. இந்துசமய ஆசாரியர்களுள் பிரபலமிக்கவரான ஆதிசங்கராச்சாரியர் நிறுவிய மடங்கள் யாவற்றிலும் திருவடிக்கே அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. சிதம்பரத்திற்கு அருகேயுள்ள சிங்காரத்

தோப்பு என்னுஞ் சோலையில் மறைஞானசம்பந்தர் சமாதி விளங்குமிடத்திலும் திருவடி வழிபாடே நிகழ்கின்றது. சைத்திரு நூல்களிலே திருவடிச்சிறப்பு பலவாறுகப் போற்றப்பட்டிருக்கிறது. அப்பரடிகள் அருளிய 312 பதிகங்களில் 720 முறை திருவடி சிந்திக்கப் பெற்றிருக்கிறது. திருவடிவணக்கத்துக்கேற்ற சிறந்ததோர் அர்ச்சனையாகத் திருவடித்திருத்தாண்டகத்தை அருளிய அந்நாயனர் ஓர் பாடலிலே ... கூடவொண்ணைச் சயம்புவென்றே தகுதாணுவென்றே ''சதுர்வேதங்கள் நின்றியம்புங் கழலின'' எனப் பாடியிருக்கின்றார். பரிபாடலிலே ''நின்னிற் சிறந்த நின் தாளிணை'' எனப் போற்றப்பட்டிருக்கிறது. திருவடியைப் பரக்கப் போற்றியிருக்கும் திருமந்திர மாலையிலுள்ள ஒரு பாடல் மேல்வருவதாகும்:-

''மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்க ளாவதும்
சுந்கர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்றன் இணையடி தானே''. சைவசித்தாந்த சாத்திரம் கூறும் முடிந்த முடிபான ஞானம் ''செம்மலர் நோன்றாள் சேர்தலே'' யாகும்.

திருவடியைக் குருபதமாகக் கொள்வது ஓர் இலதுவான விளக்கமாகும். திருப்பெருந் துறையிலே மணிவாசக சுவாமிகளை ஆட்கொள்ளத் தோன்றிய பரமாசிரியர் திருவடியைத் தாமாகக் கண்டு வழிபாடாற்றுமாறு பணித்தனர். சிவயோகசுவாமிகளும் திருவடியைத் தாம் கண்ணுற் காணுமாறு மண்மேற்றோன்றிய குருமூர்த்தமாகக் கண்டு வழிபாடாற்றினர் என்பதை மேல்வரும் நற்சிந்தனைப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

காலை யெழுந்திருந்து கைகால் முகங்கழுவி
கோல மலரெடுத்துக் - கொண்டே
குருபதந்தைக் கும்பிடுவோம்
அந்நுவா மார்க்க மறும் அகற்றியே அடியனேனைத்
தந்நுவா நீநனக்கும் சற்குரு தாள்கள் வாழ்க. ஆனால்

குருபரனைவர் எளியனுய் மண்மேல் நடமாடுவதுடன், அண்டம் யாவுமாய் வியாபித்து அப்பாலுக்கப்பாலாய் குறிகுணமற்று நிற்குமாறு போல நீள்கழல்களும் வியாபகமானதாய் வழுத்தொணு நிலைவரைப் பரந்து செல்வது திருத்தொண்டர் புராணத்திலே கழறிற்றறிவாரைக் கழறிற்றறிபுந்திருவடி என்று போற்றியுள்ளபடி திருவடியானது அடியாரை உணர்த்துகிறது. இணையடி நீழலென்னும் அருள் (திருநாவுக்கரசு நாயனர் தேவாரம்) எனவும், திருவருட்சக்தி உருவாம் பொற்பதம் (வள்ளலார் அநுட்பா எனவும் வருவனவற்றுல் பெரியோர் திருவடியைத் திருவருளாகவும் கண்டனர் எனத் தெரிகிறது. 'செங்காட்டங் குடிமேய திருவடி' எனச் சம்பந்தப் பெருமானும், திருவடியே சிவமாவது நேரில் எனத் திருமூலநாயனரும் பாடியிருப்பவற்றுல் திருவடியாவது சிவபெருமானே எனவும் தெளியப்படுகிறது. ஞானநூல்களிலே 'யான் எனதென்றற்ற இடமே திருவடி' (கந்தர்கலிவெண்பா) எனவும், 'பரையுமிரி யாமை தெரிற நின்ற தடியாம்' (உண்மை நெறிவிளக்கம்) எனவும் பாடப்பட்டிருக்கிறது இணையடியுள் வலது திருவடி முற்றறிவினையும், மற்றையது முற்றுத் தொழிலையும் உணர்த்துவதாகவும் பெரியோர் கூறினர். சிவஞானபோதத்துப் பதினேராவது நூற்பாவிலுள்ள அருள்கழல் எனும் பகுதிக்கு உரைகண்ட பெரியோர் 'முதல்வன் திருவடியாகிய சிவாநந்த அநுபூதி'' எனக் கூறினர். அநுபூதிஞானம் திருவடியென்பதைச் சிவயோகசுவாமிகள் தமதன்பரொருவரிடம் மேல்வருமாறு கூறித் தெளிவுபடுத்தினர். 'தன்னைத் தன்னலறிந்து தானே தானுயிரு; இதுவே திருவடி' திருவடியுண்மையின் முடிந்த முடிபான பொருள் பற்றியும், முழுமையான திருவடி வணக்கமுறை பற்றியும் துணிந்து கொள்வதற்கு வாய்ப்பாகச் சிவயோகசுவாமிகளின் திருவாய் மொழிகள் இரண்டு மேலே தரப்படுகிறது-.

''ஆதாரத் தாலே நிராதாரஞ் சென்றபின்
பாதார விந்தமென் றுந்தீபற...'
''பாதார விந்தத்தைக் காணுமற் கண்டு
பணியாமற் பணிந்தேனடி...'' ஆதேயம் அனைத்துக்கும்

ஆதாரமான நிராதாரமே திருவடி நின்ற இடமாம். மோனமுதலான இத்திருவடி வழுத்தொணு மலரடியேயாம். பார்த்துப் பணியொணுத திருவடியைக் கோலமலரெடுத்துக் கும்பிடுதல் முழுமையான கும்பிடுதலாகுமோ? நீங்காத நின் மல நிட்டையில் மூழ்கி, நீ நானில்லாத இடத்தில், சும்மா விருந்து சுகிப்பதே முழுமையான திருவடி வணக்கமாகும். இதனையே சுவாமி காணுமற் கண்டு, பணியாமற் பணிந்தேன் என மொழிந்தனர். திருவடி எழுந்தருளியிருக்கும் தியானமண்டபத்தில் மௌனபூசை நிகழ்வதன் நுட்பமும் இதுவே.

சிவபெருமான் மண்மேல் மலரடி வைத்து அடியவர்க்கு உணர்த்திய சிறந்த சாதனை திருவடி வழிபாடு என்பதினும் பெரிய சிறப்புளதோ? திருவாத வூரடிகள் புராணத்திலே இவ்வுண்மை கூறப்பட்டிருக்கிறது. திருப்பெருந்துறையிலே பரமாசிரியராகத் தோன்றிய சிவபெருமான் தர்மாடிய ஞானநாடகத்தை முடித்துக் கொண்டு கைலை செல்லும் கருத்தை அடியவர்களுக்கு அருளிய வேளையில் பரமாசாரியனின் பிரிவினை நினைந்து அன்பர் ஆழுத்துயருற்றனர். அப்போது

> ''பரிந்தழு மடியார் தம்மேற் பரமனு மன்புகூர்ந்து
> வருந்துவ தொழிமி னிந்த மணமலி குருந்த நீழல்
> பொருந்திய தெய்வபீடம் பொலிவொடு குயிற்றிமீதே
> திருந்திய மறையுந் தேடும் நம்பத மாகச்செய்து
> தாங்கரு மரந்தை நீங்கி யாமெனுந் தன்மைகண்டு
> நீங்கரு மன்பினாலே நித்தலு நயந்திறைஞ்சி
> ஈங்கிரு மன்பரெல்லா மமர்ந்திரும் ...''

எனப் பரமாசாரியர் அருளித் திருவடிப் பிரதிட்டை செய்து வழிபாடாற்றுமாறு உணர்த்தினர். பரம்பொருள் முன்னுளில் திருப்பெருந் துறையில் தோன்றித் திருவடி வழிபாட்டை உணர்த்தியது போலவே இந்நாளில் கொழும் புத்துறையிலே சிவயோக மூர்த்தியாய்த் தோன்றி, திருவடி வழிபாட்டை மலர்ச்சியடையச் செய்திருக்கிறது.

5 சிவராத்திரி விரதம்

சிவவிரதங்களெல்லாவற்றுள்ளும் தலைசிறந்ததெனச் சிவராத்திரிவிரதம் போற்றப்படுகிறது. இவ்விரதமிருப்போருக்கு அருள்சுரக்குமாறு உமையம்மையாரே சிவபெருமானை வேண்டிப்பிரார்த்தித்ததாக ஆகமம் கூறும். ஆதலால் சிவனருள்பெருகுதற்கேற்ற ஒரு நல்லிரவுப்போதே சிவராத்திரி விரதகாலமாகும்.

சிவயோகசுவாமிகள் தம்மைச் சூழ்ந்து வந்த அன்பர்களைச் சிவராத்திரிவிரதமனுட்டிக்குமாறு ஊக்கப்படுத்தி வந்தார். அவ்வன்பர்களுக்கு முன்மாதிரியாயிருக்கும் பொருட்டுத் தாமும் அவர்களோடு சேர்ந்து விரதமனுட்டித்தார். விரதமெல்லாம் மாண்டமனத்தினராகிய சிவயோகசுவாமிகள் இவ்வாறு செய்வதற்குத் திருவுளம்பற்றியதற்கான காரணத்தை நாமறியோம். ஆயினும் செல்லப்பாசுவாமிகள் சிவயோகசுவாமிகளுக்கு உபதேசித்த இரு மந்திரவாசகங்களின் விளக்கமாகச் சிவராத்திரிவிரதம் அமைந்திருப்பதை அறியமுடிகிறது. அவற்றில் ஒரு மந்திரம் ''ஏதுமொன்றறநில்'' என்பதாகும். மற்றையது ''நாமறியோம்'' எனும் மகாவாக்கியமாகும். சிவராத்திரிவிரதத்தோடு தொடர்புபடுத்திக்கூறும் உமையம்மையாரின் சிவஸ்துதிப்பாட்டுக்கதை ''ஏதுமொன்றறநில்'' எனும் மந்திரப்பொருளின் விளக்கமாகவுள்ளது. அடிமுடி தேடியகதை நாமறியோம் எனும் திருவாய் மொழியின் விளக்கமாக அமைந்திருக்கிறது. உமையம்மையார் ஊழிக்காலத்திறுதியிலே சிவபெருமானை வழிபட்டார். அந்த உகாந்தத்திலே பூமி வானம் இல்லை. காலதேசமில்லை. பொருட்பிரபஞ்சம் சொற்பிரபஞ்சம் யாவும் இல்லை. காத்தற்கடவுளான விஷ்ணுவும் படைப்புக்கடவுளான பிரமாவும் இல்லை. பரமசிவம் ஒன்றைத்தவிர யாதொருபொருளுமில்லை. அந்த ஏகாந்தமான மோன வெளியினிலே உமையம்மையார் 'சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருந்து' சிவ

பெருமானைப் பூசித்தார். உமையம்மையார் நிகழ்த்திய இப் பூசனை முழுமையான வழிபாட்டின் முன்மாதிரியாகும். ஏதும் ஒன்றற நிற்கும் நிலையும் இதுவே. யாதொன்றும் அற்றவிடத்திலேயே ஏதொன்றுமற்று நிற்கும் நிலையும் இயல்பாகும். செல்லப்பசுவாமிகள் சிவயோகசுவாமிக்கு உபதேசித்தது இந்த ஏதுமொன்றறநிற்கும் ஞானபூசனையே யாகும். சிவயோகசுவாமிகள் தமது அன்பர்க்கு உணர்த் திபதும் இப்பூசனையே. இந்த ஞானபூசனையை உணர்த்து தற்குச் சிவராத்திரி விரதகாலம் தக்க தருணமாக அமைந் தது. சிவராத்திரிவிரதத்தோடு தொடர்புபடுத்தப்படும் மற்றொரு கதை அடிமுடிதேடிய கதையாகும். விஷ்ணு அடியினை அறியும் பொருட்டுப் பூமியை இடந்து பன்றி யாய்ச் சென்றமையை நானெனும் முனைப்பின் அறிகுறியா கவும், பிரமா முடியினை அறியும் பொருட்டு அன்னமாய்ப் பறந்தமையை அறிவின் அடையாளமாகவும் கொள்வது ஞானியர் மரபாகும். அரியும், அரனும் அடிமுடிதேடித் தோற்றுச் சலித்துநின்றநிலை நானெனும் முனைப்பிலுலும், எனது அறிவிலுலறிவேன் எனும் மமதையாலும் இறை வனை அறியவொண்ணாது எனுங் குறிப்பினதாம். இவ்வாறு நம்மால் அறியொணாது எனத்தெளிந்து நான் எனதெனும் செருக்கறுத்தவராய் இறைவனை நீயே அருளாதி என இரந்து மன்முடி நிற்தம் பொழுது சிவதரிசனம் பெறு தலே 'நாமறியோம்' எனும் நல்லறிவாகும். ஏதும் ஒன்றற நில், நாமறியோம் எனும் பெருமந்திரங்களிலே நெஞ்சு செலுத்தி உயர்ஞான சாதனை பயில்வதற்கு வாய்ப்பாக இருந்ததனாற் போலும் சிவயோகசுவாமிகள் சிவராத்திரி விரதம் அனுட்டிப்பதற்கு அன்பர்களை வழிப்படுத்தி வந்த னர்.

சிவயோகசுவாமிகள் ஆரம்பகாலத்திலிருந்தே அன்பர் களைச் சிவராத்திரி விரத அனுட்டானத்தில் வழிப்படுத்தி வந்தார். முதலில் அன்பர்களது இல்லங்களிலும், பின்னர் சிவயோகசுவாமியின் அன்பர்கள் பலர் பயின்று வந்த திரு

நெல்வேலி சைவாசிரியர் கலாசாலையிலும் சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்பட்டு வந்தது. ஆண்டுகள் செல்லச் செல்ல அன்பர் தொகை பெருகுவதாயிற்று. ஆதலால் கோயில்களும், ஓர் ஆச்சிரமம் போன்றமைந்த இடமகன்ற அரியாலைத் தோட்டமும் விரதம் நிகழுதற்குரிய இடங்க ளாக ஒழுங்கு செய்யப்பட்டன. ஆண்டு தோறும் வெவ் வேறு இடங்களிலே விரத அனுட்டானம் நிகழ்ந்தது.

பொதுவாக ஒரு சிவராத்திரிநாள் ஒழுங்கு மேல்வரும் முறையிலமைந்திருந்தது. அன்று நண்பகல் வரை விரதி களனைவரும் விரதம் நிகழுமிடத்திலே திருத்தொண்டு செய் வர். ஆலய வீதியைப் பெருக்கித் துப்பரவு செய்தல், கோயி லுக்குச் செல்லும் வழியைத் துப்பரவு செய்தல் என்றிவை போன்ற பணிகளில் அன்பர்கள் ஈடுபடுவர். ஏகமனத்தின ராய் வந்த திருக்கூட்டம் இப்பணிகளிலே ஆர்வத்துடன் முனைந்து நிற்கும். சிவயோக சுவாமியும் இத்திருக்கூட்டத் தில் கலந்திருப்பார். ஒரு சமயம் இவ்வாறான ஒரு திருப் பணிவேளையிலே சிவயோக சுவாமிகள் ஒரு குருந்த மர நிழலிலமர்ந்து பிழாத்கோலிக் கொண்டிருந்தார். பின்னர் நாட்டாரிசிக் கஞ்சியைப் பிழாவில் வார்த்து தொண்டு செய் யும் அன்பர்களுக்குக் கொடுத்தார். அன்று நண்பகல் வேளையிலே ஒருவேளை உணவுண்ணுவோரை அமுது செய் யுமாறு சுவாமி கூறுவார். சிறிது நேரம் ஓய்வெடுத்த பின் னர் அன்பரெல்லாம் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைய ணிந்து திருநீறு தரித்து அந்தச் செல்வம் நிறைந்த இரவுப் போதை எதிர்நோக்கியிருப்பர். வேளையானதும் தருப்பை யெதனையும் காப்பாக அணியாமலேயே சிவயோகசுவாமி களை நினைத்தவராய் மேல்வருமாறு சங்கற்பம் செய்து கொள்வார். ''சுவாமி நீவிர் இம்மனிதக் கோலமளவின ரல்லர். இருவருந்தேடிக் காண அரியையாகிய நீரே இன்று மனிதவுருத்தாங்கி எம்முன்னே எளியையாய் நடமாடுகின் றீர். என்பதற்கான தெளிவான குறிப்புகளை நாம் அறிந் திருக்கிறோம். சுவாமி இந்த அருள் இரவிலே உமது

நிசசொரூபத்தைக் காட்டி அருள்வாய்''. விரத ஆரம்பத்திலிருந்து முடிவுவரைச் சிவயோகசுவாமி தியான மூர்த்தமாய் ஓரிடத்திலமர்ந்திருப்பார். இதுபற்றி வியப்பதற்கெதுவுமில்லை. தமக்கியல்பான தானான தன்னிலையிலே சுவாமி லயித்திருக்கிறார் என அன்பர்கள் அறிவர். மோனமுதலாயமர்ந்திருக்கும் சிவயோகசுவாமி உகாந்தப் பாழ்வெளியில் சலிப்பற்றிருக்கும் சுத்த சிவத்தையே உத்தம பத்தர்க்கு உணர்த்தி நின்றனர். அவ்வுத்தம பத்தர்களும் உமையம்மையாரைப்போன்று வழிபாடாற்றும் உறுதியடைந்தனர். சிவயோக சுவாமியோடு முன்னும் பின்னும் திரிந்து தியான சாதனை பழகிய அன்பர்கள் சிலர், சுவாமியோடு சேர்ந்து தியானத்தமந்திருப்பர். மற்றைய விரதியர் புராண படனம் திருமுறை ஓதல் போன்ற சிவபிரானுக்கு உகப்பான அர்ச்சனைகளிலீடுபடுவர். துவக்க காலங்களில் சிவராத்திரி புராணம் படிக்கப்பட்டது. பின் கந்தபுராணம் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் போன்றவற்றிலிருந்து அடிமுடிதேடும் படலம் முதலிய பொருத்தமான பகுதிகள் படிக்கப்பட்டு பயன் சொல்லப் பெற்றுவந்தன. தேவார திருவாசகப்பாடல்களை ஓதும் அன்பர்கள் அப்பாடல்களின் பொருள் விளக்கமாக அமர்ந்திருக்கும் சிவயோகசுவாமிகளை நினைந்துகொண்டே பாடுவதால் அப்பாக்கள் மிகுந்த உருக்கமாக ஒலித்தன. வீரசாந்தம் தவழும் முகத்துடன், உயிராவணம் அமர்ந்திருக்கும் சிவயோக மூர்த்தத்தின் ஆனந்த மோனமான தெய்வீக அலை அந்தச்சூழல் முற்றும் கவிந்திருந்தது. அந்தப் பரிசுத்தமான பேராது நிற்குப் பெருங்கருணைப் பேராறு விரதிகளைத் தீர்த்த நீராட்டித் தூயதாக்கியது. சிவயோக சோதியின் திருமுன்னிலையிலே விரதிகள் களிம்பகன்ற பொன்போல வேதிக்கப்பட்டனர். அவரெல்லாம் தத்தம் பக்குவத்திற்கேற்ப மலர்ச்சியடைந்தனர். அன்பர் சிலர் சிவயோகசுவாமி வீற்றிருந்த இடத்தில் லிங்கோற்பவ மூர்த்தத்தையே கண்டு மெய் சிலிர் சிலிர்த்து நின்றனர். சில அன்பர்கள் சிவயோகசுவாமியைச் சோதி சொரூபமாய்த் தரிசித்தனர். வேறு சிலஅன்பர்கள் தன்னை மறந்தருளில் தான் நிலைக்கும் அனுபவத்

தில் திளைத்து நேரங்கழிவதிலும் நினைப்பின்றியிருந்தனர். சிலர் இவ்விதமான அற்புத அனுபவமேதுமின்றி தம்முன்னே வீற்றிருக்கும் குரு மூர்த்தத்தையே கண்களாற்பருகி இதயத்தில் குடியிருக்கச் செய்து, பின் கண்களை இறுகமூடி தம் சித்தத்தில் குடியிருக்கும் சிவயோக சுவாமிகளை அகமுகமாக நோக்கி ஆனந்தத்திருந்தனர். இவ்விதமான இறைகளோடிசைந்த இன்ப அனுபவங்களைக் கொண்ட அச்சிவ இரவு சிலவிநாடிகள் போல் கழியப் பொழுது புலரும் போதிலே அன்பரனைவரும் மௌன தியானத்தில் சும்மாயமர்ந்திருப்பர். பொழுது விடிந்ததும் இடையறுத விழிப்பினராய் மாறுத மௌனத்தியானத்திலிருக்கும் சிவயோக சுவாமிகள் திருமுன்னிலையில் வீழ்ந்து கும்பிட்டு, இவ்விரவு போல் எவ்விரவும் ஆகப்பணியாய், என வேண்டி விரதத்தை நிறைவு செய்வர். அன்பர் சிலர் அன்று பகற்போதும் சிவயோக வள்ளலின் திருச்சமூகத்தில் பணிசெய்து திரிவர்.

ஆண்டுதோறும் வரும் மகாசிவராத்திரி விரத நாட்களிலே சிவயோகசுவாமியின் திருமுன்னிலையிலமர்ந்து விரதமனுட்டிக்கும் பேற்றினுக்காக ஏங்கித் தொலைவிடங்களிலே தடையுண்டு கிடந்த சவலையிளங்கன்றுகள் போன்ற அன்பர்களுக்காக ஒருவருஷம் மாத சிவராத்திரி கொண்டாடுவதற்கான ஒழுங்கினைச் சிவயோகசுவாமிகள் செய்தனர். யாழ் சிவதொண்டன் நிலையத்தில் ஒரு வருடம் மாதந்தோறும் நிகழும் சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்பட்டது. மகா சிவராத்திரி, மாத சிவராத்திரி இரவுகளில் மாத்திரமன்றி நாள்வாய் அல்லும் பகலும் சிவநினைவாயிருத்தலே இச்சிவவிரதக் குறியாம்.

ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக இவ்வண்ணம் அனுட்டித்த சிவராத்திரி விரதத்தின் காரணமாக நாடெங்குமுள்ள பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் சிவராத்திரி விரதத்தின் மகத்துவத்தை உணர்ந்திருந்தனர். இப்பெருந்தொகையினரில் பல்வேறு தரத்தினரும் இருந்தனர். அவர்களுள் சிலர் பிரமுகர்களாயிருந்தனர். அப்பிரமுகர்களிற் சிலர் திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையில் அங்கத்துவம் பெற்றிருந்தனர். அவர்கள் பழையதொரு லிங்

கோற்ப மூர்த்தமும் பொருந்தப் பெற்றிருந்த திருக்கேதீச் சரத்திலே, சிவராத்திரி விழாவினை நடுநாயகமான விழா வாகத் திகழ ஏற்பாடு செய்தனர். திருக்கேதீச்சரச் சிவ ராத்திரி விழாவுக்காக நாடெங்குமிருந்து விரதிகள் வெள் ளம் பெருகலாயிற்று. திருக்கேதீசரத்து விரதிகள் வெள்ளத் தின் ஊற்று சிவயோக சுவாமிகளிடமிருந்து சுரந்ததென்ப தை அறிவார் அறிவர். ஞானிஒருவரின் தாளமேளமில்லாத சமயப்பணிக்கு இது தக்கதோர் எடுத்துக்காட்டாகும். சிவ தொண்டன் நிலையம் நிறுவப்பட்ட பிறகு சிவராத்திரிவிர தத்திற்காகச் சிவயோகசுவாமிகள் வேறேரிடத்தும் செல்ல வில்லை. அவர் அமைதியாகக் கொழும்புத்துறைக் கோட் டிலிலிருந்தார். தம்மிடம் தாகமாய் வரும் அன்பர்களைச் சிவதொண்டன் நிலையத்திற்குச் சென்று சிவராத்திரி விர தமனுட்டிக்குமாறு வழிப்படுத்தி வந்தார். சிவதொண்டன் நிலையத்து மௌனமான தியானசாதனைக்கு அனுசரணையா கவும், அத்தியானசாதனைக்கு அடங்கி நடக்கத் தக்க வண் ணமாகவும் சிவயோகசுவாமி ஏற்பாடு செய்த எளிமையான சிவதொண்டன் நிலையத்து விழாக்களுள், சிவராத்திரி விழா நடுநாயகமானதாக அமைந்திருக்கிறது. சிவயோகசுவாமிகள் அனுட்டித்துக்காட்டிய மூன்மாதிரியைப் பின்பற்றிச் சிவ தொண்டன் நிலையங்களிலே சிவராத்திரிவிரதம் அனுட்டிக் ப்பட்டு வருகிறது.

6 பாதயாத்திரை

சிவயோகசுவாமிகளின் பழைய அடியார் ஒவ்வொருவ ரும், நீண்டகாலமாகத் தாமே சுவாமியின் தனியடியார் என்றவாறு எண்ணிக் கொண்டிருந்தனர். சுவாமியும் அவ் வடியவர்கள் ஒன்றுசேர்வதற்குரிய வாய்ப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டனர். அது நல்லாசான் ஒருவர் ஞான வித்தை புகட்டுவதன் ஒரு வண்ணம் போலும். சிவதொண் டன் நிலையம் மலர்ந்ததும் நாடெங்கும் பரந்து கிடந்த

அடியவர்கள் மெல்ல மெல்லவாக நிலையத்தில் சேரத்தொ டங்கினர். அப்பொழுது, தாம் பெருந்திருக்கூட்டம் என்பதை உணரத்தலைப்பட்டனர். சிவதொண்டர்கள் பெரும் திருப் படையாய் எழுச்சி பெற்ற அத்தருணம், பாதயாத்திரை யைச் சிறந்ததொரு ஞானசாதனையாக உணர்த்துவதற்கு வாய்ப்பான தருணமாக இருந்தது. இத்தருணத்திலே-சுவாமி சமாதியடைவதற்கு ஈராண்டு காலத்துக்குள்ளாக பாதயாத் திரைத்திட்டம் சுவாமியின் திருவுளத்தில் உதயமானது.

23-9-62 தொடக்கம் 22-10-62 வரையான ஒரு திங்களில் ஐந்து பாதயாத்திரைகள் ஒழுங்கு செய்யப்பட்ட டன. இப்பாதயாத்திரைத் தொடர் சிவதொண்டன் நிலை யத்தை மையமாகக் கொண்டு அமைந்தது. முதலாவது பாதயாத்திரை 23-9-62 உதயவேளையில் சிவதொண்டன் நிலையத்தின் கிழக்குத் திசையிலிருந்த கைதடி சித்திவிநா யகர் கோயிலிலிருந்து ஆரம்பமாகியது. விநாயகர் ஆலயம் ஒரு நற்கருமத்தைத் தொடங்குவதற்குப் பொருத்தமான இடமேயாகும். அன்றியும் அது சுவாமியினது அன்பரான ஓர் உத்தமத்துறவி அமைதியாயிருந்து இளைப்பாறும் ஆச் சிரமம் ஒன்றையுடையதாகவும் இருந்தது. ஒருவாரத்தின் பின் இரண்டாவது பாதயாத்திரை வடபாலுள்ள சுன்ன கம் சுதிரைமலைச் சிவன் கோயிலிலிருந்து ஆரம்பமாகியது. அத்தலம் செல்லாச்சியம்மையார் எனும் தவமூதாட்டியார் வாழ்ந்த சிறப்பினையுடையதாகவும் அமைந்தது. மூன்றுவது பாதயாத்திரை (14-10-62) மேற்றிசையிலுள்ள ஆனைக் கோட்டை மூத்தநயினர் கோயிலிற்றொடங்கி சிவதொண் டன் நிலையத்தைச் சேர்ந்தது. தென்திசையிலுள்ள மண்கும் பான் பிள்ளையார் கோயிலிலிருந்து நான்காவது பாதயாத் திரை (21-10-62) ஆரம்பமாயது. அடுத்த நாட் காலை இப்பாத யாத்திரைத தொடரின் தீர்த்தத் திருவிழா போ ன்ற யாத்திரை கொழும்புத்துறை ஆச்சிரமத்திலிருந்து தொடங்கியது. அன்பரெல்லாம் அதிகாலைப் பொழுதிலே தீர்த்தங்களாடித் திரிகரணம் தூய்மை செய்து ஆச்சிரமத்

நிற் கூடினர். அவர்களிற் பலர் சிவயோகசுவாமியின் திரு முன்னிலையிலே மௌனமாய் அமர்ந்திருந்தனர். சிலர் நற் சிந்தனைப் பாக்களை ஓதிக்கொண்டிருந்தனர். பழைய அடிய ரான ஒருவர் திருவடிகளை ஏந்திவந்து சிவயோகசுவாமியின் திருமுன்னிலையில் வைத்து வணங்கினர். பின்னர் சிவயோ கசுவாமியின் அருள்குறியான திருவடிகளைத் தலைமிசைச் சுமந்து நடந்து சென்றார். அவரைத் தொடர்ந்து அடியவ ரெல்லாம் சிவபுராணம் ஓதிக்கொண்டும், நற்சிந்தனை பாரா யணம் செய்து கொண்டும் சென்றனர். சிறிது தூரம் சென் ற பின்னர் திருவடி ஒரு மோட்டார் வண்டியில் எழுந்த ருளிவிக்கப்பட்டது. அமைதியான பாதயாத்திரை சிலமணித் தியாலங்களில் நல்லூர்த் தேரடியை அடைந்தது. தேரடி யில் சிறிது நேரம் தரித்து நின்ற பின்னர் கோயில் தம்ப மண்டபத்திலே திருவடி வைக்கப்பட்டது. அங்கு சிறப் பான அபிடேக ஆராதனைகள் செய்யப்பட்டன. சிறிதுநேர நண்பகல் ஓய்வின்பின் சிவதொண்டன் நிலையத்தை நோக் கிப் பாதயாத்திரை நகரத்தொடங்கியது. அழகிய ரதமொன் றில் எழுந்தருளிய திருவடி தோரணங்களால் அலங்கரிக்கப் பட்ட வீதியிலே நிறைகுடம், திருவிளக்கு, பூமாலை முத லியவற்றோடு பொலிந்த இல்லவாயில் தோறும் நின்று பூச னைகளை ஏற்றுச் சென்றது. பரவசத்தரான பக்தர் வெள் ளமாய்ச் சேர்ந்து கொண்ட அப்பாதயாத்திரை நல்லூரிலி ருந்து ஏறக்குறைய இருமைல் தூர அளவினதான சிவதொண் டன் நிலையத்தை அடைய நீண்ட நேரமாயிற்று. விளக்கேற் றிய மாலைப்பொழுதில் திருவடி புராண மண்டபத்தை அடைந்தது. திருவடி மறவாச் சீருடையாளரான அடிய வர்கள் தியான மண்டபத்திற் சென்று மௌனசுகத்தில் மூழ்கினர்.

சிவயோகசுவாமியின் சித்தத்துள் மலர்ந்த இப்பாத யாத்திரை மாரிகாலத்துப் பல்வல் மழையை நினைவூட்டியது. ஒரு மழை பெய்து தரைகாய்வதற்கு முன்னரே கார்மேகக் கூட்டம் திரண்டு கவிந்து மற்றொரு பாட்டம் மழையைப்

பொழிவது போல ஒருபாதயாத்திரை நிகழ்வு நீங்குமுன் னரே மற்றொரு பாதயாத்திரை அனுபவம் மனத்தை நிறைத் தது. பல்வல்மழை பெருவெள்ளத்துக்கு ஏதுவாதல் போல இப்பாதயாத்திரைத் தொடரும் பெரும் மலர்ச்சியை உண்டு பண்ணுவதாயிருந்தது.

இப்பாதயாத்திரைகளிலே தொன்று தொட்டு வந்த ஓர் ஒழுங்கு நியமம் பேணப்பட்டது. யாத்திரையின் முதற் பொருளாகத் திருவடி திகழ்ந்தது. திருவடி மோனமுதலா கும். மண்மேல் மனித உருத்தாங்கி நடமாடும் குருபதமும் அதுவே. அது எமது உயிருக்கு உயிரானது. அதன் அசை வே நமது அசைவு. அதனைக் கணமும் பிரிந்திருக்க நம்மால் இயலாது. மேடோ பள்ளமோ, கல்லோ முள்ளோ அச்சூட் சிப் பொருளின் வழியே இழுப்புண்டு செல்வதே எமதியற் கை. அந்த வாழ்முதலாகிய பொருளை வடதிசை நோக்கும் திசையறிகருவியைப் போல நோக்கி நிற்கும் திருவடி ஞா னமே பாதயாத்திரையின் முதன்மைப் பண்பாகும். திருவ டியை ஒட்டி சிவயோக சுவாமிகளால் ஆளாக்கப்பட்ட துறவிகள் சென்றனர். இவர்கள் சுவாமியின் ஞானசம்பத் தை முதுசொமாகப் பெற்றவர்கள். தன்னை அறிந்த பெரி யோர்கள். இந்நற்றவத்தோரே உற்றார், பெற்றார், உடன் பிறந்தாரினும் நனிசிறந்தவர். உண்மையுணர்ந்த இவரே எம்தலைவர். இவரை முன்பின் நாடாமல் தொடர்ந்து செல்வதொன்றே நம்செய்கை. சிவபுரத்தவரான இவர்கள் நம்மை அங்கே இட்டுச்செல்லும் முறையை அறிவார்கள். திருவடியை ஒட்டி திருவடிமறவாச் சீருடையாளரான துற வியர் சென்றதன் உண்மை இதுவே. துறவியரைத் தொ டர்ந்து அந்தணரும், யோகியரும், தொண்டரும் சென்றனர். இவ்வொழுங்கே பெரியோர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த பாதயாத்திரை ஒழுங்காகும்.

பாதயாத்திரையில் கலந்து கொண்ட அன்பர்கள் அதனை வானவூர் கொள்ளும் திருப்படையெழுச்சியாகவே கொண் டனர். அவர்கள் பசியையும், தாகத்தையும் பொருட்படுத்

தாதவர்கள். புகழையும் இகழையும் எண்ணி மலையாதவர் கள். அவர்கள் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுவழியூ டாகச் செல்லவில்லை. மார்பினுல் உந்தியும், பழுவத்தால் உருண்டு புரண்டும் செல்லவில்லை. ஆனுல் அத்தனைய துன் பங்கள் எதிர்ப்பட்டால் அதனைத் தாங்கிக் கொள்ளும் வை ராக்கிய சித்தத்துடன் திருவடியைத் தொடர்ந்து சென்றனர். அவர்கள் வேட்கைநோய், வெகுளி என்று எல்லா அல்லல் களையும் விட்டுவந்தவர்கள். 'நிற்பார் நிற்க நில்லாஉலகில் நில்லோம் நாம்' எனக் கூவும் உணர்வினராய், அந்திக் காலத்தில் கூட்டை நாடிப் பறந்து செல்லும் பறவையைப் போன்று சேவடி படரும் செம்மல் உள்ளத்தினராய்ப் பாத யாத்திரையிற் சென்றனர்.

ஒருமைமனதோடு பாதயாத்திரையிற் கலந்து கொண்ட ஒவ்வோரன்பரும் தத்தம் பக்குவத்துக்கேற்ப அற்புத அனுபவங்களைப் பெற்றனர். அனைவரும் அறியும்படியான் அற்புதங்கள் சிலவும் நிகழ்ந்தன. அப்படியானதொரு அனு பவம் பண்ணைப் பாலத்தில் நிகழ்ந்தது. மண்கும்பான் பிள் ளையார் கோயிலில் தொடங்கிய பாதயாத்திரை பண்ணைப் பாலத்தையடைந்த பொழுது உச்சிப்பொழுதாயிற்று. யாவு ம் உச்சமான வெளிச்சத்தைப் பெற்று விளக்கமாகத் திகழும் நண்பகற் பொழுது அறிவும் விளக்கம் பெறுதற்கேற்ற நேரமேயாகும். அந்நேரத்தில் பண்ணைப்பாலத்தில் வந்து நின்ற மோட்டார் வண்டியிலிருந்து சிவயோகசுவாமி இ றங்கி நின்றார். அவர் எதுவும் பேசவில்லை. எல்லார் உரு வையும் தன்னுருவாகக் கொண்ட அவர் மோனமாய் நின் றார். பண்ணை வெளியிலே வெளியனுய் நின்ற சிவயோக மூர்த்தியைத் தரிசித்தோர் யாவரும் அவரைப் போன்று ஆடாது அசையாது நின்றனர். அணியாக வந்த அடியவர் வரிசை 'சித்திரப்பத்தி' யாய் நின்றது. நீலவானிலே வெண் மேகத் திரள்கள் அப்படி அப்படியே நின்றன. பண்ணைக் கடல் அலையேதுமின்றி எழுது சித்திரம் போலாயிற்று. 'கண்டனவெல்லாம் மோன உருவெளியதாக' எனத் தாயு

மான சுவாமி உணர்த்தும் அநுபூதி அன்பர் யாவர்க்கும் சுவாநுபூதியாயிற்று. அந்த ஆட்டக்காரரால் எந்தமாயந் தான் செய்ய இயலாது! சிவயோகசுவாமி சிறிது நேரம் நின்ற நிலையிற் பிரியாது நின்றார். அவர் தமது உபசாந் தமாய் நிற்கும் அருள் மேனியாலே, பரவெளியாய் நிற்கும் தமது நிசசொரூபத்தை உணர்த்திக் கொண்டு நின்றார். அவரது சந்நிதான மகிமை ''எல்லாம் நன்மோன நிறைவே'' எனும் நிறைஞானத்தை உணர்த்தியது. பின்னர் மோட் டார் வண்டியிலேறிச் சென்றனர். அவர் சென்ற சற்று நேரத்தில் கீழ்வானிற் றோன்றிய கார்மேகம் வானெங்கும் பரந்து கவிந்து நல்ல மழை பொழிந்தது. உச்சிவெய்யிலைப் பொருட்படுத்தாது வழிநடந்த அன்பர்கள், மீதிவழியை அருண்மழையில் குளிர்ந்து நடந்தனர். சிவபுரமெனக் கொண்டாடும் சிவதொண்டன்நிலையத்தைப் பாதயாத்திரை சென்றடைந்த போது பரவசத்தரான அன்பர் பல்பறை கொட்ட நின்று பாடியாடினர்.

சிவயோகசுவாமியினது திருவுளத்தினின்றும் மலர்ந்த இப்பாதயாத்திரைத் தொடரில் ஒருமை மனத்தினரான மெய்யன்பர்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டமையால் உண்மையும், செம்மையும் பொலிந்தது. ஆதலால் இப் பாதயாத்திரைகளிலே நல்லோருள்ளங்கள் ஈர்ப்புண்டன. அவர்கள் தாமாகவே இப்பாதயாத்திரைகளிற் பங்கு கொ ண்டு திருமுறைப் பாடல்களையும், நற்சிந்தனைப் பாக்களை யும் ஓதியவராய்ச் சென்றனர். கைதடிப்பிள்ளையார் கோயி லில் முதற்பாத யாத்திரை ஆரம்பமான போது ஒருநூற் றளவினரான அன்பர்களே பங்கு கொண்டனர். கொழும் புத்துறை ஆச்சிரமத்திலிருந்து காலைப்பொழுதில் ஆரம்ப மாகிய ஐந்தாவது பாதயாத்திரை மாலைப்பொழுதில் சிவ தொண்டன் நிலையத்தைச் சேர்ந்தபொழுது பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் கலந்த திருவிழாவாக அமைந்து விட்டது. அது நீதிபதியொருவரைத் தலைசாய்ந்து போகு மாறு செய்த ஸ்ரீ சைதன்ய தேவரின் நாமசங்கீர்த்தனத் தோடு கூடிய பாதயாத்திரையை நினைவூட்டி நின்றது.

✠✠

7. சைவத் திருமுறை

யாழ்ப்பாணத்திலுள்ள கோண்டாவில் எனும் ஊரிலே நாகலிங்கப் பரதேசியார் எனும் ஓதுவார் ஒருவர் இருந்தார். அவர் தேவாரத்தைப் பண்ணோடு பாடுவதில் வல்லவர் எனப் புகழ் பெற்றிருந்தார். அவர் ஒருநாள் யோகசுவாமி கனைத் தரிசிக்கும் எண்ணம் கொண்டார். யோகசுவாமி கள் அந்நாள்களிலே அரியாலை ஆச்சிரமத்தில் உறைந்தனர். முதுமையினால் அரியாலை வரை நடந்து செல்ல முடியாதி ருந்த பரதேசியாரை அவரது நண்பர்கள் விசைவண்டி யொன்றை வாடகைக் கமர்த்தி அனுப்பி வைத்தனர். ஆச்சிரமம் வந்த ஓதுவாரைச் சுவாமி வரவேற்று மான் தோல் ஆசனம் அளித்துச் சிறப்புச் செய்தார். பின்னர் ''சம்பந்தப் பெருமான் பதிகம் பாடிப் பொன் பெற்றூர் அல்லவா? நாமும் ஏன் பதிகம் பாடிப் பொன் பெறமுடி யாது.? பாடுங்கள் பார்ப்போம்'' என்றருளினர். பரதே சியார் ''சுவாமிதான் அடியெடுத்துத் தரவேண்டும்'' எனப் பணிவுடன் வேண்டினர். சுவாமி 'இடரினும் தளரினும்' என அடியெடுத்துக் கொடுத்தனர், ஆவடுதுறை அரனே கொழும்புத்துறை அடிகளாக எழுந்தருளுள்ளார் எனும் உறுதியுடன் ஓதுவார் பதிக இசைபாடலானார். பாடல்கள் ஒவ்வொன்றுய் நிறைந்து சென்றன. திருக்கடைக் காப்புப் பாட எடுத்தபோது ஆச்சிரமத்துப் படலையருகில் விசை வண்டி ஒன்று வந்து நிற்பது தெரிந்தது. வண்டியிலிருந்து கணவனும் மனைவியுமான இருவர் பூசைத்தட்டுடன் இறங்கி வந்தனர். அவர்கள் பணிவோடு வந்து பதிகம்பாடி நிறை வுறும் தருணத்தில் சிவயோகசுவாமிகளது திருப்பாதத்திலே பூசைத்தட்டினை வைத்து வீழ்ந்து கும்பிட்டு நின்றனர். அவர்கள் சிங்கப்பூரில் உத்தியோகம் புரிபவர்கள். மாதந் தோறும் தமது உழைப்பிலிருந்து ஒவ்வொரு தங்கப்பவு னைச் சுவாமியின் காணிக்கையாகச் சேகரித்து வந்தனர். விடுமுறையில் இலங்கை வந்த போது தமது காணிக்கை யைச் சமர்ப்பித்து நிறைந்த மனத்துடன் நிற்கின்றனர்.

சுவாமி அவர்களை அமருமாறு பணித்துப் பூசைத்தட்டிலி ருந்த பட்டுமுடிப்பை எடுத்தார். அதனை அவிழ்த்து ஒரு பவுனை எடுத்து பரதேசியாரை ஏற்றி வந்த விசைவண்டிச் சாரதிக்கு அளித்தார். பரதேசியாருக்கும் போதுமளவு பொன் ஈந்தார். இயல்பாக நடந்தேறிய இவ்வற்புத நிகழ்ச்சி திருமுறையின் அருள்மாட்சிக்குத் தக்க சான்றாக அமைந் தது. பரதேசியாருக்குப் பொன் ஈந்த சந்தர்ப்பத்தில் மட் டுமன்றி வேறுபல சந்தர்ப்பங்களிலும் இப்பதிக இசையின் அற்புத ஆற்றல் வெளிப்பட்டது. ஒருசமயம் இப்பதிகம் பாடிய வேளையில் அன்பர் ஒருவர் சுவாமியிடம் காகித உறை ஒன்றைக் கொடுத்தனர். சுவாமி அக்காகித உறை யைப் புன்னகையுடன் பிரித்துப் பெருந்தொகைப் பணத் தை எடுத்துக் காண்பித்தார்.

திருமுறைப் பாடல்களை மனனமாக வன்றி சிவசிந்தனை யோடு பாடினால் குறித்த பலன் தவறாது சித்திக்கும் என்பத ற்கு மேல்வரும் சம்பவம் எடுத்துக்காட்டாகும். சிவயோக சுவாமி ஒருநாள் தமது சுகவீனமாயிருந்த அன்பரொருவ ரைப் பார்ப்பதற்காகச் சென்றார். அவ்வன்பர் படுத்த படுக் கையாகக் கிடந்தார். அவர்தமது உணர்ச்சி எதனையும் வெளிக்காட்ட முடியாத வெளுத்துப் போன கண்களால் சுவாமியைப் பார்த்தார். சுவாமி 'பயப்படாதே எல்லாம் சுகம்வரும், எனக்கூறினர். பின்னர் சூழ்ந்துநின்ற சுற்றத் தவர்களின் பக்கம் திரும்பிப் பாடக்கூடியவர்கள் திருவெழு கூற்றிருக்கை பாடுங்கள் என அருளினர். இருபிள்ளைகள் சேர்ந்து திருவெழு கூற்றிருக்கை பாடினர். திருவெழுகூற் றிருக்கை திருஞான சம்பந்தமூர்த்தி நாயனரால் சிவபாத விருதயரின்பொருட்டு ஓதப்பட்ட தமிழ் மந்திரமாகும் சிவபாதவிருதயர் நாடோறும் சிவபூசை வேளையின்போது திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாடியருளிய தமிழ்மறை களை ஓதும் நியமம் பூண்டவராயிருந்தார்.நாளாக நாளாக திருப்பதிகங்கள் பலவாகப் பொலிந்தமையால் அவற்றை யெல்லாம் சிவபூசைவேளையில் பாடிமுடிக்க இயலாதிருந் தது. இதனால் மனந்தளர்ந்திருந்த தந்தையாருக்காகத்

தாம் பாடிய திருப்பதிகங்கள் யாவற்றுக்கும் ஈடானதாயிருக்கும் வண்ணம் இத்திருவெழு கூற்றிருக்கையைச் சம்பந்தப் பிள்ளையார் பாடிக்மகாடுத்தனர். ஆதலால் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் பாடிய மற்றைய பதிகங்கள் பலவும் தரும் பலனையெல்லாம் திருவெழுகூற்றிருக்கை ஒன்றுமாத்திரமே தரவல்லதாகும். இதனுல் இத்தமிழ் மறையை வேண்டுவார் வேண்டுவதை நல்கும் கற்பகதரு எனக் கூறலாம். இந்த நன்மருந்தையே இருபிள்ளைகள் ஓதிக் கொண்டிருந்தனர். ஆனுல் அவர்கள் ஓதியமுறை நெக்குளார்வமிக நிறைந்தோதும் முறையாக அமையவில்லை. ஆதலால் அவர்கள் பாடிமுடிந்ததும் சிவயோகசுவாமி தாமே திருவெழுகூற்றிருக்கை ஓதினர். சுவாமி ஓதி நிறைவுசெய்யும் வேளையில் சிலநாட்களாக படுக்கையிற் கிடந்த அன்பர் எழும்பி அமர்ந்தார். இப்பொழுது அவ்வன்பரது கண்கள் வருத்தம் பார்க்கவென வலிய வந்து இல்லம் புகுந்த வைத்தியநாதனின் கருணைக்கு உருகும் உள் உருக்கத்தை வெளிக் காட்டி நின்றன. சுவாமி மீண்டும் 'பயப்படாதே சுகம் வரும்' என அருளிச் சென்றனர்.

விக்கினங்களால் நொந்து போயிருந்த வேறு சில அன்பர்களில்லங்களுக்குச் சென்ற வேளைகளில் கோளறு பதிகத்தைப்பாடுங்கள் என்றே,திருநீற்றுப்பதிகத்தைப் பாடிவாருங்கள் என்றே, சுவாமி அருளினர். அவ்வன்பர்களும் சுவாமி சொல்லிய வண்ணம் செய்து விக்கினம் நீங்கினர்.

திருமுறை பொன்னும் பொருளும் தரவல்லது: சோறும் கூறையும் அருளவல்லது; நாளையும் கோளையும். நல்லனவாகச் செய்வது; கொடுநோய்கள் நலியா வண்ணம் கவசமாயமைவது. இவை போன்றன திருமுறை ஓதுவதால் உண்டாகும் உலகசுகங்களாகும். திருமுறையை அருளிய அருளாளர்கள் உலகிலே உயிர்கள் குறைவிலாது வாழவேண்டுமெனவும், என்றும் இன்பம் பெருக வேண்டுமெனவும் எண்ணியவர்களாயினும் சிவபோகத்தையே குறிக்கோளாகக்

கொண்டனர். அவர்கள் பரமானந்தப் பழங்கடலில் படிந்தவர்களாதலால் அச்சிவானந்த வெள்ளத்துள் நினைக்க வருமாறே உலகோரைக் கூவியழைத்தனர். நாயன்மார்களைப் போலவே சிவயோகசுவாமிகளும் எங்கும் மங்களம் தங்க வேண்டும் எனும் எண்ணம் உடையவராயினும் திருவடியின்பமே பெரும் பேறு எனக் கொண்டவர். ஆதலால் திருமுறை ஓதி உலகசுகங்களைப் பெறுவதிலும் திருவடி ஞானம் கைகூடப் பெறுவதே சிறப்பென உணர்த்தினர். திருமுறையின் பொருள் சிவம். அது புகட்டும் நெறி வீட்டு நெறி. அதனை ஓதுவதாலாம் பயன் வீடடைதல். அதனை ஒரு வீட்டின்ப நூல் எனக் கூறுவதே பொருந்துவதாகும். ஆதலால் ஞானநெறி காட்டுதற்காக நடமாடித் திரிந்த சிவயோகசுவாமிகள் திருமுறை ஓதுதலைச் சிறந்த ஞான சாதனை எனத் தம்மை அண்டிவந்த அன்பர்களுக்கு உணர்த்தினர். ஓர் அன்பரிடம் அலைகிற மனதை அடக்கத் தேவாரம் பாடுவது ஒருவழி எனக் கூறினர். தேவாரத்தை நன்றாகப் பெலத்துப் பாடுமாறு அவரிடம் அருளினர். நாமார்க்கும் குடியல்லோம் முதலாய பாடல்களைப் பாடுவதால் மனம் பலமடையுமெனவும், திருவாசகத்தைப் பாடுவதால் ஏகாக்கிரக சித்தம் பொருந்தும் எனவும் அருளினர்.

திருமுறையின் எடுப்பான அம்சம் ஈசன் மேல் அன்பு எனப் பலரும் எண்ணுவர். ஈசன்மேல் அன்பே ஞானமூலமாகும். ஆதலால் திருமுறைப் பாடல்களை இருதய மலரக் கண்களிகூர நுண்துளி அரும்பச் சாயா அன்புடன் ஓதுவதுடன் அவற்றின் உட்பாகமான வைரித்த ஞானத்தில் நிலைத்து உபசாந்தமுற வேண்டுமெனவும் சுவாமி கூறுவார். ஒருநாள் சுவாமி தமது முன்னிலையில் அமர்ந்திருந்த அன்பரொருவரிடம் மேலே சுவருக்குக் குறுக்காகப் போடப்பட்டிருந்த பலகையில் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்த நூல்களைக் காட்டி அவற்றிலார் புத்தகத்தை எடுத்துப் படிக்குமாறு பணித்தார். அன்பர் எடுத்தது திருவாசகப் புத்தகமாகும். புத்தகத்தை விரித்து வருகிற பகுதியைப் பாடு எனச் சுவாமி

அருளினர். அவ்வாறே பாடிச் செல்லும் பொழுது

''புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனவ னெனவே தேறினன் காண்க'' என்னும் அடிகளைப் பாடுகையில் அன்பருக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அவர் வாய்குழறிப் பாடிக் கொண்டிருந்தார். சற்றுநேரத்தின் பின் சுவாமி ''அழுகையும் கிழ்ப்படி அழுவதற்கும் நினைவிலாமல் நினைப்பற நின்றுநிற்க வேண்டும்'' என அருளினர்.

சிவயோகசுவாமி தமது திருமுன்னிலையிலே திருமுறை ஓத வல்ல அன்பர்கள் அமர்ந்திருக்கும் பொழுது அவர்களைக் கொண்டு திருமுறை ஓதச் செய்தனர். தாண்டகம் பாடுவதில் வல்லவரை திருத்தாண்டகம் பாடுமாறும், பண்ணிசை பாடவல்லவரை பண்கனிந்த தேவாரம் பாடுமாறும் கேட்பார். திருவாசகத்தில் பிரியமானவரையும், திருமந்திரத்தில் வாலாயமானவரையும் முறையே திருவாசகம் பாடுமாறும் திருமந்திரம் ஓதுமாறும் பணிப்பார். சிலவேளைகளில் அன்பர்கள் பாடிமுடிந்ததும் தாமும் அவை போன்ற தாண்டகங்களையும், திருமந்திரங்களையும் திருவாசகங்களையும் பாடுவார். சிவதொண்டன் நிலையத்தினர் தொகுத்து வெளியிட்ட 'வாசகத்திருமுறைத்திரட்டு' என்னும் நூலிலுள்ள பாடல்களுள் பெரும்பாலும் யாவும் சுவாமி அவ்வப்போது தமது நினைவிலிருந்து பாடிய பாடல்களேயாகும்.

'காண்பரிய பேரொளியாய்ப்' பரந்து நிற்கும் திருமுறையின் சோதியை உலகோர்க்கு ஒருவாறு உணர்த்துவதற்காகச் சிவயோகசுவாமி எடுத்துக் கொண்ட சிறந்த எடுத்துக் காட்டு சிவபுராணம் என்னும் ஞானச் சுடர் விளக்காகும். சிவயோக சுவாமிகளின் திருமுன்னிலையிலே நாள்தோறும் மாலைவேளையில் சிவபுராணம் ஓதப்பட்டு வந்தது. தம்மிடம் வரும் அன்பர் பலரிடம் ஒருநாளைக்கொரு முறை சிவபுராணம் ஓதி வாருங்கள்; அது ஒன்றே போதும் என்று சுவாமி கூறினர். அணுக்கத் தொண்டர்களான சிலரிடம் இரகசியம் கூறுவது போலச் 'சிவபுராணத்திலுள்ள

ஒரு சொல் போதும் ஒருவனை ஈடேற்றுவதற்கு' எனவும் அருளினர். சிவயோகசுவாமிகளின் திருமுன்னிலையிலிருந்து சிவபுராணம் ஓதும் அன்பர்கள் சிவபுராணத்தின் விளக்கமாகச் சிவயோக சுவாமிகள் திகழ்வதை உணர்ந்தனர். இதனால் சிவபுராணத்தின் எளிமையான வாசகங்களில் ஆழமாய் மறைந்து கிடக்கும் அநுபூதிப் பொருள் அன்பர்களுக்கு விளக்கமாயிற்று. மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே என்பதன் மறைபொருள் சோதிசொரூபமான பரம் பொருள் சிவயோகசுவாமிகளாய் மலர்ந்து நிற்கும் அருட் கோலத்தில் விளக்கமாகியது. சிவயோகசுவாமிகள் தமது மாதவராலும் அறியவொண்ணுத மகத்துக்களுக்கும் மகத் தாயிருக்கும் மாண்பால் நோக்கரிய நோக்கே எனும் மணி வாசகப் பொருளை விளக்கமாக்கிக் கொண்டு வீற்றிருந்தார். அவருடைய கருணையின் பெருமையைக் கண்ட அன்பர்கள் தாயிற் சிறந்த தயாவான என்று ஓதும் போது இயல்பாகவே வாய் குழறினர். இத்தகைய அடியார்கள் பலர் ஒன்று சேர்ந்து சிவபுராணம் ஓதும் பொழுது அதன் ஆற்றல் கேட்போரை வரையும் ஆட்கொள்ளும் தகைமையதாயிருந்தது. ஓதுதலை மறந்து அருளில் நிலைத்து நிற்கும் அனுபவம் ஓரிரு கணப் பொழுதாதல் அன்பர்களுக்குச் சித்தித்தது. அந்தக் கணப்பொழுதுகளில் பெற்ற நித்திப்பான அனுபவத்தை மென்மேலும் பெறத் தாகங் கொண்டு சிவபுராணம் ஓதும் வேளைகளில் ஆர்வத்தோடு அன்பர் வந்து கூடினர்.

இவ்வண்ணம் சிவயோக சுவாமிகளின் முன்னிலையில மர்ந்து சிவபுராணம் ஓதுதலின் சுகங்கண்ட அன்பர்கள் ஊரெங்குஞ் சென்று தத்தமக்கு வாய்ப்பான இடங்களில் சிவபுராணம் ஓதுமாறு ஊக்கப்படுத்தி வந்தனர். கோயில்களிலும், பாடசாலைகளிலும், வீட்டு வைபவங்களிலும் சிவபுராணம் ஆர்வத்தோடு ஓதப்பட்டது. இதனால் இலங்கை நாடெங்கும் சிவபுராணத்தின் சோதிபரவலாயிற்று. இந்தியாவையும் விட ஈழத்தில் சிவபுராணத்தின் சோதி பரந்திருப்பதன் காரணம் சிவயோகசுவாமியின் அருட்பெருக்கே என்பதை அறிவார் அறிவர்.

✠✠

8 புராணபடனம்

யாழ்ப்பாணத்துச் சைவப்பண்பு கந்தபுராணக் கலாச்சாரம் என வருணிக்கப்பட்டிருக்கிறது. கந்தபுராணம் மட்டுமன்றி பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் எனும் மற்றைய சைவபுராணங்களும் ஈழத்துச் சைவப்பண்பில் செறிந்துள்ளன. ஈழத்தில் சைவமறுமலர்ச்சியை உண்டு பண்ணிய நாவலரவர்கள் இச்சைவ புராணங்களைப் பதிப்பித்து வெளியீடு செய்வதைத் தமது பணியின் ஓரங்கமாகக் கொண்டிருந்தனர்.

சிவயோகசுவாமி மாயவித்தை காட்டாமல் ஞானவித்தை பயிற்றிய நல்லாசான். அவர் சந்நிதானத்தில் மலர்ந்த ஞானவிளக்கம் சமூகவியல் ஒழுங்குமுறைகளை அநுசரித்ததாக அமைந்தது. புராணஉணர்ச்சி செறிந்த ஒரு சமுதாயத்தில் அப்புராண உணர்ச்சியைச் சாதனமாகக் கொண்டு ஞான விளக்கம் செய்தல் ஏரியல்பான வழிமுறையேயாம்.

சுவாமி தம்மையண்டி அன்பர்கள் வரத் தொடங்கிய ஆரம்ப காலத்திலிருந்தே அவ்வன்பர்களைப் புராணபடனத்தில் ஈடுபடுமாறு ஊக்கப்படுத்தி வந்தனர். சுவாமியின் பழைய அடியார்களுள் ஒருவரான வழக்கறிஞர் சுப்பையா அவர்கள் தமது இல்லத்தில் புராணபடனம் நிகழ ஏற்பாடு செய்தனர். வைத்திச்சுரர் கோயிலுக்கு அருகாமையில் விதியோரமாக அமைந்திருந்த அவரது வீட்டின் நீண்ட திண்ணை புராணப்படிப்புக்கு வாய்ப்பானதாக இருந்தது. அந்நாள்களிலே சுவாமி அநேகமாக வைதீச்சுரர் கோயில்பக்கமாக போக்குவரவு புரிந்தனராதலால் அப்பகுதியிலே சுவாமியை அறிந்திருந்த அடியார் பலர் இருந்தனர். அவரெல்லாம் புராணம் கேட்பதற்காக ஆர்வத்தோடு கூடினர். சுவாமியும் சிலவேளைகளில் எழுந்தருளியிருந்தனர். யாழ்ப்பாணத்திலே அந்நாள்களில் பிரபலம் பெற்றிருந்த புராணம் படிப்போரும், பயன் சொல்வோரும் அங்குவந்து புராணபடனம் நிகழ்த்தினர். சுப்பையா அவர்களைப்போன்றே சுவாமி

யின் அன்பர் பலரும் தத்தம் இல்லங்களிலே புராணப் படிப்பு நிகழ ஒழுங்கு செய்தனர். சுவாமி சமாதியடைவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் திருவாளர் நவரத்தினம் அவர்களது இல்லத்தில் கந்தபுராணத்து மார்க்கண்டேயப் படிப்பு தொடங்கியது. சுவாமி நடமாடித் திரியமுடியாதிருந்த நிலையிலும் அத்தொடக்க விழாவுக்கு எழுந்தருளி ஊக்கப்படுத்தினர். கொழும்புத்துறை ஆச்சிரமத்திலும், சுவாமி சிறிது காலம் உறைந்த அரியாலை ஆச்சிரமத்திலும் பெரும் பாலும் மாலைவேளைகளில் புராணபடனம் நிகழ்ந்தது. நவாலி தம்பையா உபாத்தியார், கொக்குவில் குமார சுவாமிப் புலவர் ஆதியோர் இந்நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர். புராணபடனம் முடிந்ததும் சுவாமி கதையோடு கதையாக ஏதேனும் கூறுவார். திருவிளையாடற் புராணத்து மாபாதகம் தீர்த்த படலம் படித்து முடிந்த சமயத்திலே ''தாயைப் பெண்டாண்டவனுக்கும் அருள் செய்தவன் தானே உங்கள் சோமசுந்தரப் பெருமான்'' என அருளினர். 1958 ஆம் ஆண்டிலே அரசியல் ரீதியான நெருக்கிடை யொன்றில் தமிழ் மக்கள் அவதியுற்றனர். அவ்வேளையில் ''இனி ஒருகதியும் இல்லை; கோயில்கள் எல்லாவற்றிலும் கந்தபுராணம் படியுங்கள்'', எனச் சுவாமி அருளினர். அவ்வாறே யாழ்ப்பாணத்துக் கோயில்கள் பலவற்றிலும் கந்தபுராணப் படிப்பு ஒரு காமிய கருமமாகத் தொடங்கப்பட்டது. அவ்வாறு தொடங்கிய படிப்பு நிறைவுறும் தருணத்தில் தமிழ் மக்களுக்கு இடையூறுமைந்த அரசியல் சூழ்நிலை தற்காலிகமாகவேனும் நீங்கும் நிலை ஏற்பட்டது.

சிவதொண்டன் நிலையம் மலர்ந்த போது அதன் பிரதான அங்கமொன்று **புராணமண்டபம்** எனும் பெயர் சூடித் திகழச் சுவாமி திருவுளம் பற்றினர். சுவாமி இவ்வாறு திருவுளம் பற்றியமை சிவதொண்டர் மனத்தில் புராணப் படிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துதற் பொருட்டே யாகும், புராணமண்டபத்திலே சாயங் காலப்பூசையின்

போது புராணபடனம் நிகழ வேண்டும் என்பது சுவாமி யின் சித்தமாகும். சுவாமியின் சித்தப்படி கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் எனும் மூன்று சைவபுராணங்களும் ஒன்று நிறைவுற்றதும் இன்னென்று எனும் ஒழுங்கில் ஆண்டு முழுவதும் படிக்கப்படும் நியமம் பேணப்படுகிறது. திருவாதிரை நாளை ஒட்டிய பத்துநாள் களிலும் திருவாதவூரடிகள் புராணப்படிப்பையும் சேர்த்துக் கொள்ளுமாறு சுவாமி அருளினர். புராணம் படிப்பதிலும் பயன் சொல்வதிலும் வல்லவர்களைச் சிவதொண்டன் நிலை யம் சென்று சிவகதை சொல்லும் திருத்தொண்டு புரியு மாறு பணித்தனர். அவ்வாறு திருத்தொண்டு புரிவோர்க்கு பெருஞ் சன்மானமளித்துச் சிறப்புச் செய்தல் வேண்டுமென நிலையத்துச் சீரடியார்களுக்கு உணர்த்தினர்.

சிவயோகசுவாமிகளது அருள் நோக்கின் நெறியாளு கையால் சிவதொண்டன் நிலையத்துப் புராண படனம் செம்மை நலம் கனிந்து விளங்குகின்றது. புராணபடனம் செய்யும் சைவாசாரசீலர் காவிய நலன் கனிந்த உயிர்ப் புள்ள கதையூடிருக்கும் ஞானமிர்தத்தை உள்ளது உள்ள வாறே வழங்கும் உபகாரியாகவே தோன்றுகிறார். அவர் இவ்வுபகாரத்தைச் செம்மையாகச் செய்வதற்கு மறை வாக இருந்து சேவகஞ் செய்வனவாகவே இலக்கிய இலக் கண சமய ஞானப்புலமைகளைக்கொள்கிறார். ஆ த லா ல் புராணப்பயனை மறைக்கும் வித்துவம் எதுவும் இங்கு முன் னிற்பதில்லை. புராணங் கேட்க வரும் அன்பர்கள் தமது உலக அல்லல் எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு, ஆறுதலாயமர்ந்து வேண்டிய நேரம் மட்டும் இறைகளோ டிசைந்த இன்பத்தில் திளைக்கும் சங்கற்பத்துடன் வருகின் றனர். ஆதலால் ஒன்றிய சிந்தையராய்ச் சிவன் புகழைச் செவிமடுக்கின்றனர். சிவத்திலே பயில்வது சிறந்ததொரு ஞானசாதனையெனின், அச்சாதனையை நீண்ட நேரத்திற்கு உயிரையெழுப்பிப் பயில்வதற்கு சிவதொண்டன் நிலையத் துப் புராணபடனம் வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

★ ★

9 சிவதொண்டு

சிவதொண்டு என்பது சிவபீரானுக்குச் செய்யும் கைங் கரியம் என்னும் விளக்கத்துடனேயே தொடக்கத்தில் மேற் கொள்ளப்படுகிறது. இவ்விளக்கப்படி அது சரியைத் தொ ண்டு எனக் கொள்ளற்குரியது. சுவாமி ''சிவதொண்டு செய் தல் செகத்தில் சரியை'' எனப் பாடினர். சுவாமி கொழும்புத் துறை ஆச்சிரமத்திற் குடிபுகுந்த ஆரம்ப நாள்களில் ஆச்சிர மத்துக்கு முன்பாக அமைந்திருந்த கோயிற் பூந்தோட்டத் தில் நீரூற்றுதல் முதலாம் பணிகளைச் செய்து வந்தனர். இலங் கை இராமக் கிருஷ்ண மடத் தலைவராயிருந்த சுவாமி பிரே மாத் மானந்தாஜீ அவர்கள் தான் பள்ளிச் சிறுவனாயிருக் கும் காலத்திலே மாலைவேளையிலும், விடுமுறை நாள்களி லும், சிவயோக சுவாமிகள் சொல்லும் நந்தவனப் பணி களைச் செய்ததாகக் கூறினர். சுவாமி விடியற் போதில் ஆச் சிரம முற்றத்தைப் பெருக்கிக் கொண்டும், வேம்பு விதை களைச் சேகரித்துக் கொண்டும் இருப்பதை அன்பர்கள் காண் பர். சுவாமியின் முன்மாதிரியைக் கருத்திற் பதித்துக் கொண்ட அடியர் பலரும் சிவதொண்டன் நிலையத்தொண்டு செய்வதில் முந்தி நின்றனர்.

''பணிதலைக் கொள்ளல் பாரினில் இன்பம்''

''பணிமுயன் முற்றி முற்றுதல் இன்பம்'' என்பதற்கேற்ப அவர்கள் தொண்டுகள் அமைந்தன. ஆயினும் பணியை முற்றுவிப்பதிலும் பணிசெய்யும் மனப்பாங்கே முக்கியமா னதாகும். சுவாமி சிவதொண்டன் நிலையத்தில் உறைந்த நாள்களில் ஒருநாள் சீரடியார் ஒருவர் கோயில் தரையைக் கழுவித் தூய்மை செய்து கொண்டிருந்தார். தன்னந்தனி யனாகத் தியானமண்டபம், புராணமண்டபம் திண்ணை யாவற்றையும் கழுவித் தூய்மை செய்து விட்டு வந்து சுவா மியின் அருகில் நின்றார். அப்பொழுது சுவாமி 'வேலையில் மாளப்படாது' என்றருளினர். வேலையைப் பூரணமாக்குவ திலும் தன்னைப் பூரணனாக்குவதற்கு வேலையை ஒரு சாதக மாகக் கொள்ள வேண்டும் என்பதே சுவாமியின் கருத்தா

கும். தொண்டின் மறைவில் கரவுடை நெஞ்சம் ஒளிந்திருக்குமாயின் அது கள்ளத் தொண்டாகி விடும். கிளையாளக் கிட்டங்கியாக அமையும் கருத்துடன் கோயில் கட்டுவதனாலாம் பயன் யாது? இத்தகைய கருமிகளைப் பற்றி ''கோயில் மடங்கள் நிறுவி விடுதலை பெற்றோர் எத்தனை பேர்? அகந்தையுற்று அழிந்ததேயல்லாமல்'' எனச் சுவாமி கூறினர்.

எல்லாம் சிவரூபம், யாவும் சிவதொண்டாற்றுகின்றன, யானும் என் தொண்டைச் செய்கின்றேன் எனும் ஞானத் தெளிவில் நிலைத்து யார் யாருக்கு எந்தெந்தவேலை கொடுக்கப்படுகிறதோ அது ஆண்டவனுக்குக் காணிக்கை என்ற உளப் பாங்குடன் செய்வதே சிவதொண்டு என்பது இன்னொரு விளக்கமாகும். இதனை ''அண்ட பிண்டமெங்கும் அதுவெனக் கண்டு தொண்டு செய்வது தகுதி'' எனச் சுவாமிகள் திடபநுட்பமாகக் கூறினர். பார்ப்பதெல்லாம் சிவமாகப் பார்ப்பவர் செய்வதெல்லாம் சிவபூசையாகுமன்றே! 'தந்தையும், தாயும் மைந்தரும் நமரும் எந்தையே! நீயென்றெண்ணியெப் போதும் விந்தையே ரவர்பணி வேண்டியாற்றி' என்றுங்கு குடும்ப கருமங்களும் வணக்கம் மணக்கும் வேலையாகும். உலக வாழ்க்கைக் கடமைகளும் ''கை வினைசெய்து கழலடி போற்றுக'' என்றுற் போன்று திருவடி வழிபாடாகச் சிறக்கும். சுவாமி பாடசாலை வேளைகளிலே தம்மைத் தரிசிக்க வந்த ஆசிரியர்களை ஏசிக் கலைத்தனர். அவர்களிடம் 'கந்தபுராணம் படிப்பதற்காயினும் கடமையை அலட்சியம் செய்ய வேண்டாம்'' என எச்சரித்தனர். ஒரு சமயம் தந்தைக்கு உதவியாற்றுத மைந்தனொருவன் தமது கால்களில் வீழ்ந்து கும்பிட முயன்ற போது ''போய்க் கொப்பனைக் கும்பிடு'' என உரப்பிக் கலைத்தனர். மாதரார் சிலரிடம் ''வீடும் ஒரு கோயில்; கோயிலைப் போன்று வீட்டையும் தூய்மையாகப் பேணவேண்டும் எனவும், நீங்கள் பிராமணத்திகள்; கோயிலில் அமுது பாகம் செய்து சுவாமிக்கு நைவேத்தியம் செய்வது போலக் கண

வராகவும் அதிதி பரதேசிகளாகவும், தோன்றுவோருக்குப் பக்குவமாகப் பாகஞ் செய்து அன்னமிடுகிறீர்'' எனவும் அருளினர். யாவும் சிவதொண்டாற்றுகின்றன எனத் தெளியுமிடத்து எள்ளுதற் கேதுமுண்டோ? சுவாமி ஒரு சமயம் கழிப்பறை கழுவும் ஒசையை அவதானித்து விட்டு 'அது சிவபூசை' என்று கூறினர். அன்பரொருவரிடம் ''கொலையை நீயும் செய்யாய்; நானும் செய்யேன்; ஆனல் கொலையில்லாமல் உலகம் நடைபெற மாட்டாது. அது கடவுளது பஞ்சகிருத்தியங்களில் ஒன்று'' என அருளினர். சுவாமி தமது மெய்யன்பர் ஒருவருக்கு அருளிய வாசகம் மேல்வருவதாகும். ''கை தன்வேலை; கால் தன்வேலை; எல்லாம் தன்தன் வேலை செய்ய மரங்கள் தங்கள் வேலை; கூலிதன் வேலை; உபாத்தியாயர் தன்வேலை; ஞானிதம் வேலை செய்ய, யாவுக்கும் சாட்சியாக மகாராசாவாக இறைவன் வீற்றிருக்கிறார்''. இவ்வாசகத்தைத் தெளிவோர் தாமும் சாட்சியாக இருந்து கொண்டு தமக்கென்றமைந்த கடமைகளைச் செய்வர். சாட்சியாய்ப் பணி செய்யுமிடத்து நான் எனும் அகம்பாவம் இல்லையாதலால் அவர்களது செயலில் செயற்கரு இல்லை. செயற்கரு இல்லையாதலால் அச்செயல்கள் செய்பவனைப் பந்திக்கும் வினையாகா. ஆதலால் அவன் செயல் செய்தும் செய்யாதவனுகின்றன். இத்தகைய சிவதொண்டர் நிலையும் முற்றத் துறந்த துறவியர் நிலையும் ஒன்றே. ஒருவர் செயலிற் செயலின்மையையும், மற்றவர் செயலின்மையிற் செயலையும் அடைகின்றனர்.

சிவமாம் தன்மை பெற்ற சீவன் முத்தர் உலகோபகாரமாகச் செய்யும் சேவகம் சிவதொண்டு என்பது சிவதொண்டின் முடிந்த முடிபான பொருளாம். இதனை 'ஏகனெ இறை பணிநிற்றல்'' எனச் சிவஞானபோதம் கூறும். சிவயோகசுவாமிகளின் தொண்டு இத்தகையதே. இத்தகைய தொண்டின் அடையாளம் யாதெனின் எப்பொழுதும் சும்மா இருந்து கொண்டு எப்பொழுதும் செயல் செய்தல் ஆகும். சிவயோகசுவாமிகள் ஒருசதக் காசும் வைத்திராத ஆண்டியாக இருந்தார். அவருக்குப் பெருஞ் செலவிலே சிவதொண்

டன் நிலையங்கள் நிறுவும் சங்கற்பமும் இருந்ததில்லை. யாவும் அவர் சந்நிதான மகிமையாலே நடந்தேறின. அவர் எங்கள் குருநாதன் பாடலைப் பற்றிக் கூறவேண்டியேற்பட்ட சந்தர்ப்பமொன்றில் ''இப்பாடலை நாம் பாடினதாகச் சொல்ல முடியாது'' என்றருளினர். சுவாமி சிவதொண்டன் நிலையப் பொறுப்பாளராக அமர்த்தியவரிடம் உணர்த்தியதும் இத் தகைய சிவதொண்டே. ''பிரசங்கம் ஒன்றுக்கும் போக வேண்டாம். சிவதொண்டன் நிலையத்தில் சும்மாவிருந்து தியானஞ்செய். அது யாழ்ப்பாணம் முழுவதும் பரவும், என்பது அவருக்கு அருளிய வாசகமாகும். சும்மா இருக்கும் நிலை சும்மா வாய்ப்பதோ? அங்கு இங்கு என்று அசைவதற்கு அணுப்பிரமாண இடமும் எஞ்சியிராதவாறு எங்கும் நிறைந்து நிற்பதோடு யாதொன்றுமல்லாத மோன உருவெளியதாகவும் நிற்பதாலல்லவோ அந்நிலை சித்திக்கிறது. ஆகவே சும்மா இருப்பவர் ஓரிடத்திலிருந்து தியானிப்பதொன்றுலேயே வேண்டுவதெல்லாம் நடைபெறுகின்றன. சும்மா இருப்பவரே உலகின் உண்மையான புரவலர். அத்தகைய புரவலரே பூரணமான சிவதொண்டர்.

10 சிவத்தியானம்

பத்மாசன இருக்கை, தூய்மையான இடம், அமைதியான வேளை ஆதியன தியான சாதனைக்கு ஏற்ற ஆயத்த நிலைகளாகவும், வாய்ப்பான சூழல்களாகவும் கொள்ளப்படுகின்றன. சுவாமிகளும் ''பத்மாசனத்தில் பரிவுடனிருந்து சித்த விருத்தியைத் தீர்த்திடுவோமே'' எனவும், செல்வச் சந்நிதி மூலத்தானத் தருகேயுள்ள பூவரசமர நிழல் போன்ற இடங்கள் தியான சாதனைக்கு வாய்ப்பான இடங்களெனவும், அதிகாலைப் பொழுது தக்கபொழுது எனவும் கூறியிருக்கிறார். ஆயினும் நற்குண நற்செய்கைகள் வாய்ந்த பண்பட்ட வாழ்க்கையே தியானசாதனைக்கு மிகவும் வாய்ப்பானதாகும். சிவத்தியான வேளையில் மாத்திரம் சிவசிந்தனையுடன் இருந்து விட்டு மற்றைய வேளையில் நான் எனது

எனும் செருக்குடன் அவப்பொழுதாய் கழித்தால் தியானப் பயிர் வளருமோ? சுவாமி தமது நற்சிந்தனையொன்றிலே சிவத்தியானம் எனும் அருமருந்தின் அநுபானமாக நாவடக்கம், இச்சையடக்கம் என்னும் சரக்குகளையும், பத்தியபாகமாக மிதமானவுண், மிதமானநித்திரை, மிதமானதேகாப்பியாசம், என்பவற்றையும் கூறியுள்ளார்.

சிவத்தியானம் என்பது சிவநினைவு எனப் பொருள்படும். சிவத்தியானம் எனும் நற்சிந்தனையிலே 'நீ சிவத்தின் அம்சமல்லவா? மறந்து போனாய். ஓம் தத் சத் ஓம் என்று ஓயாமற் சொல்லு'' எனவும்; 'ஓ சிநேகிதா! நீ சிவனடியானென்று முழுமனத்தோடு நினை' எனவும் வருவனவற்றால் இது தெளியப்படும். இவ்வாசகங்களிலே மறந்து போன உண்மை நிலையை மீண்டும் ஞாபகப்படுத்தும் பொருட்டு முழுமனத்தோடும் நினைத்தல் சிவத்தியானம் எனும் குறிப்பு உளது. சிவநினைவை உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியின் உருவெழுதி உணர்தற்கு உதவியாக ஓம் தத் சத் ஓம். நாம் சிவனடியார் ஆதிய திருமந்திரங்களும் இன்னும் பல தியான சுலோகங்களும் நினைக்கப்படுகின்றன. சிவயோக சுவாமிகள் அருளிய நற்சிந்தனைகளில் பலவும் தியான சாதனைக்கு வாய்ப்பான தியான சுலோகங்களேயாம். அருளாளர்களின் தியான சுலோகங்களைச் சிந்தையில் நினைந்து செய்யும் சிவத்தியானம் ஆற்றல் வாய்ந்ததாய் இருத்தல் வேண்டும் என்பதற்காக ஆழநினை, நீள நினை, உயிரை எழுப்பிச் சிவத்திலே மனம் பயில் என்றவாறுகச்சுவாமி அருளியுள்ளார். இவ்வாறான சிவநினைவு ஒருபாவனை எனும் குறிப்பும் சுவாமிகளது திருவாய் மொழிகளிலே உளது. ''சிவபெருமான் அத்துவிதமாக இருக்கிறார். அடியேன் அவரே எனத்தியானிக்கும் மகிமை எனக்குண்டு. ஒருவன் எப்படிப் பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான். ஆகையால் நான் அவனே என்று தியானஞ்செய்'' எனும் உரைப்பகுதியில் அக்குறிப்பு உளது. இதனை 'ஆதி அந்தமில்லாத ஆன்மாவே நாமென்று அடிக்கடி நீபடி துடி துடிப்பாய் நடி' எனவும் சுவாமி தெளிவுபடுத்தியுள்ளார்.

இப்பாவனை இல்பொருள் பற்றிய வீண்பாவனையன்று. சிவமே நாமெனல் மெய் மெய் மெய் எனச் சுவாமி முத்காலும் உணர்த்திய உண்மை நிலையை உணர்ந்து கொள்ளும் ஓர் உபாயமாகும்.

எவ்வாறுதான் ஆழநீள நினைந்த போதும் அவன் அருள்தான் விழுங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஆதலால் திருவருளை முன்னிட்டே சிவத்தியானம் செய்யப்படுகிறது. நான் என ஒரு முதலில்லை; சிவபிரான் ஒருவரே உள்ளார் எனும் உண்மையை உணரமுயலும் சிவத்தியானத்திலே, நான் எனது சாதனையாற்றலால் அறிவேன் எனச் செருக்குறலாமோ? பரம்பொருளிடத்தே தன்னைக் கையடையாக ஈதலே சிவத்தியானத்தின் நடைமுறையாகும். சுவாமிகளது சிவத்தியானம் பற்றிய உரைப்பகுதி ஒன்றிலே 'உன் முழுமனத்தோடும் இறைவனுக்கு உன்னை ஒப்புக்கொடு' எனும் வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

திருவருளை முன்னிட்டு உயிரை எழுப்பிச் சிவத்திலே பயிலும் சிவநினைவானது சிவானந்த அனுபவமேயாம். ''வண்டுகள் பூவைக் கிண்டித் தேனை உண்டு ஒன்றுமறியாது கிடப்பது போல் பக்குவசித்தமாகிய பூவைச் சிவத்தியானத்தினுள் கிண்டி ஆங்குவருமானந்தத் தேனையுண்டு ஒன்று இரண்டு நன்று நிதென்றறியாமல் தேக்கிக் கிடக்கின்றான் எனவும் (சிவத்தியானி) 'அந்நராத்மாவிலே சுகிப்பான்' எனவும் வரும் சுலோகயம் வாய்ந்த நற்சிந்தனை வாசகங்கள் இதனை தெளிவுபடுத்துகின்றன. இத்தகைய சிவபோகத்தைப் புசித்த சிவத்தியானியினது இந்திரியங்கள் உலகபோகத்தை வாந்தியென வெறுக்கின்றன. அவனது மனமும் கானல்நீராகிய உலக சுகங்களை நாடாது ஆத்மாவில் இலயிக்கிறது. ஆதலால் சிவத்தியானம் இந்திரியங்களை வெல்லும் தவமாகவும், மனக்குரங்கை அடக்கும் நன்மருந்தாகவும் வருணிக்கப்பட்டிருக்கிறது. ''தவத்திலே மேம்பட்டவர்களைக்கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்கின்றன. ஆதலால்

அவற்றை வெல்வதற்குச் சிவத்தியானஞ் செய்க; அதனால் மாத்திரந்தான் புலன்களைத் தன்வசப்படுத்தத் தக்கது'' எனவும் ''மனத்தை ஒருவன் அடக்கி வெற்றிகொள்ள முழுமனத்தோடு விரும்புவானானால் சிவத்தியானத்தைத் தினந்தோறுஞ் செய்துவரக் கடவன்'' எனவும் சுவாமி அருளியுள்ளார்.

சிவத்தியானம் என்பதன் முடிந்த முடிபான பொருளைச் சுவாமி தமது அணுக்கத் தொண்டர் இருவரிடம் தெளிவாய்க்கூறினர். சுவாமி சமாதியடைவதற்குச் சிலமாதங்களுக்கு முன்னர், தமது திருமுன்னிலையிலிருந்த சிவதொண்டன் நிலையப் பொறுப்பாளரையும், சந்த சுவாமியையும் நோக்கி ''இவரிடம் கேட்கப்போகிறீர்கள்! ஏதேனும் சந்தேகமிருந்தால் கேளுங்கள்'' எனக்கூறினர். சந்தசுவாமிகள் தியானம்பற்றித் தெளிவுபெறவே விரும்பினர். அப்பொழுது சுவாமிகள் Meditation is not thinking of anything. It is remaining SUMMA ''தியானம் என்பது எதனையும் எண்ணிக் கொண்டிருப்பதல்ல; அது சும்மா இருத்தல்'' என அருளினர். எண்ணம் எதுவுமற்றுச் சும்மா இருத்தல் உறக்கம் போன்ற நிலையன்று; அது எமது உண்மை இயல்பான ஞானத்தின் தன்மையைத் தொடர்ந்து சிந்திக்கும் உறங்காத பேருணர்வு ஆகும். அஃதாவது என்றும் தன்னை மறக்காதிருத்தல். இதுவே சும்மா இருத்தலுமாம்.

''சித்திரக்காரன் தீட்டிய தீபம் போல்
நித்திய வஸ்துவில் நினைப்பும் மறப்புமற
முத்தியி லிருக்கும் முறை...'' என்பது சுவாமி திருவாய் மொழி.

சிவத்தியானஞ் செய் செய் செய்
சிவமே நாமெனல் மெய் மெய் மெய்
அவனி யனைத்தும் பொய் பொய் பொய்
அதனை யறிந்து உய் உய் உய்.

11 மகாவாக்கியங்கள்

மகாவாக்கியங்கள் என்றுமுள்ளவை. அவை அவ்வப் போது ஞானியர் காட்சியில் தரிசனமாகின்றன. உபநிடத இருடிகளுக்கு அகம்பிரமாஸ்மி ஆதிய மகா வாக்கியங்கள் தரிசனமாயின. அண்மைக்காலத்திலே செல்லப்பாசுவாமிகளுக்கு முழுவதும் உண்மை, ஒரு பொல்லாப்புமில்லே, எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம் எனும் நான்கு மகாவாக்கியங்களும் தரிசனமாயின. செல்லப்பா சுவாமிகள் ஓர் ஆண்டு முழுவதும் ஒரு மகாவாக்கியத்தை ஓயாமற் சொல்லிக் கொண்டிருப்பது என்ற ஒழுங்கில் ஒவ்வோராண்டும் ஒவ்வோர் மகாவாக்கியத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சமாதியடைந்த ஆண்டிலே நாமறியோம் எனும் மகாவாக்கியத்தை ஓதிக்கொண்டிருந்தார்.

முழுவதும் உண்மை

முழுவதும் உண்மை எனும் மெய்ம்மொழியின் சொற் பொருள் எல்லாம் சிவம் என்பதாகும். பயிலும் தமிழில் அமைந்த இவ்வாசகம் படித்த இந்துக்கள் நாவிற் பயிலும் சர்வம் பிரமமயம் எனும் வடமொழி வாசகப் பொருளைப் பயப்பது. உபநிடதத்திலுள்ள பிரக்ஞானம் பிரமம் எனும் மகாவாக்கியத்திற்கு இணையானது இப்பெரும் பெயராகும். இப்பழுதில் வாசகத்தின் அநுபூதிப் பொருளோ மோனந் திகழும் சிவயோகியராலும் அறியொணாதது. சிவயோக சுவாமிகள் அவ்வநுபூதிப்பொருளை முகமுகமாகக் கண்டுணர்ந்திருந்தார்.

முழுவதும் உண்மை எனும் ஞானமொழியைச் சுவாமிகள் அநுபூதியாய் உணர்ந்திருந்தமையால் அதனை வியந்தகு எளிமையோடும், தெளிவோடும் அன்பர்களுக்கு உணர்த்தினர். ஒருசமயம் சுவாமி ''இவ்வறையில் எத்தனை பேர் உள்ளனர்?'' என ஓர் அன்பரைக் கேட்டார். அவ்வன்பர்

ஒவ்வொருவராக எண்ணிக் கணக்கிட்டுக் கூறினர். அப்பொழுது சுவாமி 'அஃதெப்படி ஆகும் எல்லாருள்ளும் இறைவன் ஒருவரே இருக்கிறார். ஆகவே இங்கே ஒருவர் தான் உள்ளார்' என அருளினர். காட்சியை மட்டும் பார்க்கும் திறனுடைய அன்பர் மனிதக்கோலங்களை எண்ணிக் கணக்கிட்டுக் கூறினர். காட்சியை விட்டுச் சூட்சியைத் தொட்டு நின்ற சுவாமி கடவுள் ஒருவரையே கண்டார். இன்னொரு சமயம் தமது முன்னிலையிலிருந்த 'குழந்தைக்கும், அக்குழந்தையின் தந்தைக்கும், தமக்கும் ஒரே வயதே' என்றருளினர். மற்றொரு சமயம் வீதியில் மீன்விற்றுச் சென்ற ஒருவரது பாதத்தைச் சுட்டிக் காட்டிய வண்ணம் 'அது திருவடி' எனக் கூறினர். சுவாமி பெரியோர் சிறியோர், இளையோர் முதியோர், உறவோர் பகைவோர், மடையர் ஞானியர் என்ற பேதமின்றி அனைவரையும் சிவமாகவே கண்டார். மனிதரை மாத்திரமன்றி மற்று உயிருள்ளவும் அல்லவுமான எல்லாவற்றையும் கண்ணுதற் பெருமானின் கோலங்களாகவே கண்டனர். அவர் ஒரு சமயம் ''உன்னுள்ளும், என்னுள்ளும், அந்தப் பசுவுள்ளும், இந்தச் சுவருள்ளும் இருப்பது ஒன்றே'' என்று அருளினர். நிறைதரு சித்தாய் நின்ற சுவாமிக்கு சடம் என்ற பேதமுந் தோன்றவில்லை. மண்முதற் பூதங்களைப் பரமரகசியமான மெய்ப்பொருள் தன்னைப் பகிரங்கப் படுத்தியிருக்கும் கோலங்களெனச் சுவாமி போற்றினர். 'பூதாதி ஐந்துமாய்ப் பொலிந்த புண்ணியன்' என்பது சுவாமியின் திருவாய்மொழி. அன்னையென்றும் அரியென்றும் சமயகோடிகள் வழங்கும் கடவுளரும் அம்மெய்ப்பொருளின் அருள் வடிவங்களே. மெய்ப்பொருள் ஒன்றே உலகு, உயிர், பரம் என முழுதுமாய் ஒளிர்கின்றது.

முழுதும் உண்மை எனும் ஞானமொழியைத் தெளிவதால் நான் எனும் வீண்பாவம் அகலும். உண்மை முழுதும் எனும் கண்திறக்கும். நான் எனும் உணர்வே சகமாயை விரிவதற்கு மூலமாதலால் அவ்வுணர்வு அகல உலக விசித்திரங்களும் வெறும் எழுது சித்திரங்களாய்ப் போகும்.

ஆதலால் முழுதும் உண்மை எனும் பெரும் பெயர் மூடிய மாயவிருள் ஓட அருள்வது; மோகம் தீர்ப்பது. உண்மை முழுதும் எனும் கண்திறப்பதால் அண்ட பிண்டம் அனைத்தும் சிவரூபமாய்த் தோன்றும் பார்ப்பதெல்லாம் சிவமாகப் பார்ப்பதால் நெஞ்சப் பதைப்பு அகலும்; பதைப்பகல்வதால் மோனசுகம் கிட்டும்.

ஒரு பொல்லாப்புமில்லை

அருள் வெளிக்குள்ளேயே அனைத்தும் உள்ளன அவ்வருள் வெளியைத் தெளிந்த துவெளி யெனவும், பேரின்பப் பெருக்கெனவும் கூறலாம் ஆனால் அவ்வருளொளிக்குள் புகுந்து செல்லும் ஆன்ம சாதகர் அங்கே (வேதனை சாதனை ஆதிய) இருள் சூழ்ந்திருப்பதையும் காண்கிறார். இதன் பொருளறியாது திகைத்து நிற்கும் சாதகர்க்குக் குருபரன் அருளும் வாக்கு அதனால் ஒரு பொல்லாப் புமில்லை என்பது.

ஒரு பொல்லாப்புமில்லை எனும் மகாவாக்கியம் உலக வாழ்வில் உழல்வோருக்கு ஓர் ஆன்றோர்காலாய் அமைவது. ஒரு நாள் சிவதொண்டன் நிலைய வாயிலில் ஒரு விசையூர்தியில் வந்து நின்ற சுவாமி நிலையத்து அன்பரையும் அழைத்துக் கொண்டு ஆச்சிரமஞ் சென்றார். அங்கே ஒருவர் அங்கும் இங்குமாக உலவிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவரைக் கண்டதும் சுவாமி "இங்கு உன்னை யார் வரச் சொன்னது?" என்ற கர்ச்சனையோடு சீறிப்பாய்ந்து சென்று அடித்துப் பிடரியை பிடித்துத் தள்ளினர். தள்ளுண்டவரோ தள்ளுமளவு சென்று பின் ஓரடியும் நகராமல் அப்படியே நிற்கலானார். சுவாமி அவரை மேலும் மேலும் ஏசி அடித்துத் தள்ளினர். சுவாமியின் உடம்பெல்லாம் வியர்க்குமளவு நீண்டநேரமாக இக்கூத்து நடந்தது. கடைசியாக அவரைப் படலிக்கப்பால் தள்ளி விட்டு வந்த சுவாமி நிலையத்து அன்பரையும் சென்று வருமாறு கூறினர். அவரும் சுவாமியின் சொற்கேட்டு ஆச்சிரமத்து வாயிலில்

காத்து நின்ற விசைவண்டியிற் சென்று ஏறினர். அப்பொழுது, சுவாமியால் கலிக்கப்பட்ட அந்தமனிதர் ஓடிவந்து தன்னையும் ஏற்றிச் செல்லுமாறு வேண்டினர். அவர் மிகுந்த அமைதியும், மகிழ்ச்சியும் உடையவராய்த் தோன்றினர். அவரையும் ஏற்றிக் கொண்டு செல்லும் பொழுது நிலையத்து அன்பர் நிகழ்ந்தது பற்றிக் கதை தொடுத்தார். அதிலிருந்து அறிந்து கொண்ட விடயம் மேல்வருவதாகும்: அவர் சுவாமியிடம் வரும் போது சுவாமியிடம் ஏச்சு, அடி உதை எல்லாம் வாங்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே வருவார். சுவாமியும் அவர் வேண்டிய வண்ணமே தீக்கை செய்து அனுப்புவார். சுவாமியின் ஏச்சு முதலானவை அவரைப் பீடித்த துன்பங்களை ஓட்டும் சாலமாக அமைந்தன. இந்து வருந்தல் வரப்பிரசாதம் என்பதை உணர்த்தும் ஓர் அழகிய ஓடலேயாகும். துன்பம் நன்மையடையும் ஒரு வாழ்வை முழுத என்பதையும், துன்பத்தையும் இன்பத்தைப் போலவே இன்முகத்தோடு எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் இச்சம்பவம் உணர்த்துகிறது சுவாமி துன்பமும் ஓர் உனவெனவும், கரும்பை இறுக நசித்தாற்றான் சாறுவரும் எனவும், வில்லங்கத்துள்ளே விளங்கும் நல்லருள் எனவும், கூறியிருக்கிறார். துன்பம் கன்மம் தொலையும் வழி எனவும், குப்பைகள் கொளுத்தி எரிக்கப்படுகின்றனவன்றி அதனால் ஆன்மாவுக்கு ஒன்றும் இல்லை எனவும் அருளியுள்ளார். இத்தகைய தெளிவு பெற்றோர்க்குத் துன்பம் பொல்லாப்பாக அமைவதில்லை அவர்கள் இடும்பைக்கு இடும்பை படுப்பர். ஆதலால்ஒரு பொல்லாப்புமில்லை எனும் திருமந்திரம் மனத்துயரை மாற்றும் மருந்தாக அமைகிறது. அன்றியும் துன்பத்தைத்தைரியத்துடன் எதிர்கொள்வதாலும் வீரத்துடன்தாங்கிக்கொள்வதாலும்கொண்டகொள்கையில் தவறாது ஒழுக்க நெறியில் செல்லமுடிகிறது. ஆதலால் இப்பெரும் பெயர் தருமநெறி காட்டும் திருவாய் மொழியாகவும் உளது.

மாயாபுரியின் மயக்கத்தினின்று நீங்கியோர்க்கு ஒரு 'பொல்லாப்புமில்லை' என்பது ஒப்பற்ற அநுபூதி ஞான

மாகும். நாம் நித்தியர்: அன்றும், இன்றும் என்றும் இருந்தபடியே இருக்கிறோம். நாம் தேசகாலம் யாவும் கடந்தவர்; நாம் நிறைதரு சித்து, சின்மயர், தூய அறிவினர். எம்மிடம் உவமை கடந்த இன்பம் உண்டு. மாறிலா மகிழ்ச்சியே எமது இயல்பு; வீடு நமக்கு எப்போதும் சொந்தம். இந்தச் சச்சிதானந்தமே எமது நிசசொரூபம். இதில் பொல்லாப் புக்கிடமுண்டோ? இந்த உண்மை நிலையில் நிலைத்திருப் போருக்கு மாயவாழ்க்கையிலும் ஒரு பொல்லாப்புமில்லை. அவர்கள் மாயாவிசித்திரங்களில் மயங்குவதில்லை. இங்கு வியப்பதற்கு ஒரு நூதனமுமில்லை என்று ஆறுதலாயிருப் பர். அவர்கள் மாற்றமாம் வையகத்திலும், ஒருமாறுத லும் இல்லாது இருந்தபடியே இருக்கும் உண்மைப் பொ ருளையே காண்பர். அவர்கள் கடவுளை என்றும் மறவாதவ ராகையால் உலகையும் கடவுளாகவே காண்பர். அவர்க ளுக்குப் பிறவிப் பெருங்கடல் என்பதொன்றில்லை. எங்கும் முத்திக்கரையையே காண்பர். இருவினை என்பது இரும் புத்தளையன்று, இருவினை என்பதும் பேச்சே எனச் சுவாமி பாடுவார். கருவிகரணங்கள் அவர்களின் கட்டளை கேட் கும் நல்ல பணியாள்களாகும். காடும் மலையும் கால்விட் டோடும் மனக் குரங்கென்பதெல்லாம் அவர்களுக்கில்லை. சுவாமி 'நில்லென்று சொல்லி மனத்தை நிறுத்துவேன்'எனக் கூறுவார். ஆதலால் கானகத்தில் உறுதியுடன் சிங்கம் உலவி வருதல் போல உலகமாகிய நந்தவனத்திலே ஞானியர் உல்லாசமாய்த் திரிவர். அவர்கள் சனகரைப் போன்ற சக் கரவர்த்திகளாகவோ, சுகரைப் போன்ற பிறவிச் சந்நியா சிகளாகவோ பொருந்திய வண்ணம் வாழ்வார்கள். அவர்கள் ஆதாயமாக்குவதும் ஒன்றுமில்லை. இழந்து போவதும் ஒன் றுமில்லை 'ஒரு பொல்லாப்புமில்லையடி தங்கமே தங்கம் உறுதி எழுதிக்கொள் தங்கமே தங்கம்.'

எப்பவோ முடிந்த காரியம்

'.....இருந்த இருக்கின்ற இருக்கும் யாழ்ப்பாணத்தாரெல்லா ருக்குமாகக் கருமாதிகளெல்லாஞ் செய்து முடிந்து விட்டன.'

இந்து சுவாமிகள் காசியிலிருந்து எழுதிய திருமுகத்திலுள்ள ஒரு வாசகம் இவ்வாசகம் எப்பவோ முடிந்த காரியம் எனும் மகாவாக்கியப் பொருளுக்கு ஓர் எடுத்துக்காட்டா கும். கருமாதிகள் மட்டுமன்றிக் கண்ணிமைப்பது வரை யான யாவும் எப்போதோ முடிந்திருக்கின்றன. இவ்வுலகி லே புதுமையென்பதற்கு எதுவுமில்லை. இத்திருமுகத்திலே 'நூதனமான காரணமொன்றும் பூதல மீதிலில்லவே இல்லை' என்னும் ஒரு வாசகமும் உளது. சுவாமி 'ஒருபுதினமுமில்லை' எனப் பயிலும் தமிழிலே அடிக்கடி கூறுவார். செல்லப்பா சுவாமிகள் இவ்வுண்மையை வற்புறுத்திக் கூறும் பொருட்டு முடிந்தமுடிபு என இடிபோன்ற குரலில் கூறினர். சுவாமி இன்ப இறையே எனவிளித்துச் செய்த விண்ணப்பம் ஒன்று நற்சிந்தனை உரை நடைப்பகுதியிலே உள்ளது. அவ்விண்ணப் பத்தின் முற்பகுதியிலே உலகில் நிகழும் சாதிசமயப் போராட் டங்களைக் குறிப்பிட்டு மேல்வருமாறு எழுதப்பட்டுள்ளது. 'இந்த வித்தியாசமான போராட்டங்கள் முன்னுமுள்ளன. நூதனமான காரியங்களல்ல; இவைதான் இந்தப் பிரகிருதியின் தோற்றங்கள்; எத்தனையோ முறைகளில் பெரிய பெரிய அவ தாரங்கள் வந்து எவ்வளவோ வேலைகளைச் செய்தும் மீண்டும் இந்த உலகம் அப்படியே இருக்கிறது. இதுவொரு பெரிய இரகசியம். நாம் தேவ சந்நிதானத்தில் இருக்கிறோம். பிரகிருதியின் தோற்றங்களும் இருந்து கொண்டே இருக்கின்றன. 'பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியீனப்போல் பசு பாசம் அநாதி.

இவ்வுண்மையில் நிலைப்போர் வந்ததிலும்போனதிலும் மனம்வையார். வருபவை பற்றிய சங்கற்பங்களும் கொள் ளார். சங்கற்பவிகற்பங்களெனும் சித்தவிகாரக் கலக்கங்கள் ஒழிய சிந்தைத் தெளிவு பிறக்கும். ஆதலால் எப்பவோ முடிந்ததெனும் பெரும் பெயர் சிந்தைத் தெளிவு தரும்திரு மந்திரமாகும். 'எப்பவோ முடிவான தென்றெங்கட்கூச் செப்புவாரவர் சிந்தை தெளிந்திட' என்பது சுவாமிகளது திருவாய்மொழி. தெளிந்த சிந்தை பாசத்தை விட்டுப் பதி

யிற் படியும். 'முடிந்த முடிபென்று முன்னின்று சொல்லப் படிந்ததென்னுள்ளம் பதியில்'' எனச் சுவாமி பாடுவார். மனம் பதியிற் படிவதால் ஏகாந்த மோனநிலை வாய்க்கும். ''எப்பவோ முடிந்ததடி தங்கமே தங்கம் ஏகாந்தமாயிரடி தங்கமே தங்கம்'' என்பது சுவாமியின் அருள் வாக்கு.

இறைவனுக்கும் எமக்கும் உள்ள உறவு எப்பவோ முடிந்த காரியமாகும். இவ்வுறவு இன்று நேற்று வந்த உறவல்ல; என்று நீ அன்று நாம் என்றவாறு என்றுமுள்ள உறவு. ஒழிக்க ஒழியாத உறவு

''அப்பா பரம சிவம்
அன்று தொட்டின்று மட்டும் அடியேனும் தேவரீரும்
அத்துவிதமாயிருந்த வித்தைதனை யாரறிவார்''

என்றுங்கு இறைவனோடு எமக்குள்ள உறவை அறியா மலறிந்து சுத்த அத்துவித சுகத்தில் பொருந்துவதே எப் பவோ முடிந்த காரியம் எனும் மகாவாக்கியத்தின் முடிந்த முடிபான பொருளாம்.

நாமறியோம்

உண்மை ஒன்றே உளது. இந்த ஒரே உண்மை எண் ணிறந்த கோலங்களாகத் தோன்றுவதேன்? சுத்த சுகம் ஒன்றே உளது. இதில் பொல்லாப்பான தோற்றங்கள் தோன்றுவதெவ்வாறு? எல்லாம் நன்மோன நிறைவே, ஆனால் அலகிலா ஆடலும் நிகழ்வதேன்? இவை போன்ற விஞக்கள் மெய்ப்பொருளறிவின் மூலமுடிச்சினைத் தொட்டு நிற்கும் விஞக்கள். இவ்விஞக்களுக்கு விடைகாண முயன்ற மெய்யியலறிஞர் ஒன்றோடொன்றொவ்வாத விடைகளையே கூறிச் சென்றனர். இவ்வொவ்வாமை ஒன்றே அவர்கள் முழு உண்மை அறியாத யானை பார்த்த குருடர்போலாயி னர் என்பதற்குச் சான்றாகும். செல்லப்பதேசிகரோவெனின் 'நாமறியோம்' என்று சொல்லக் கூசார். அவர் 'அது அப் படியே உள்ளது காண். ஆரறிவார், என்று சொல்வார்.

மாயை வல்லானை இறைவன் தன் மாசாலத்தின் பொ குட்டு மறைத்து வைத்திருக்கும் அந்த இரகசியத்தை யாரே அறியவல்லார்?

'ஒருவரும் அறியாரென்றுன் எங்கள் குருநாதன்
ஒங்கார வழியென்றுன் எங்கள் குருநாதன்
என்பது சுவாமியினது திருவாய் மொழி.

உண்மை மனவாசகம் கடந்தது. இறைவனது பெருமை களிலொன்று தோன்றுப் பெருமை. இறைவனை ஓரிக்கும் சோரன் எவரும் பெரியோர் கூறினர். ஆகவே மறையோ னை அவனை அறிதல் எவ்வாறு சாலும்? அன்றியும் அறி பவன் அவன் ஒருவனே. அறிபவனை யாரே அறிவார்? இறைவனை அறியும் நெறி பற்றித் தந்திர சாத்திரங்கள் கூறுகின்றன. ஆனால் அவனை எத்தந்திரத்தில் தேடிப் போனாலும் அத்தந்திரத்தில் ஒளிந்து நிற்பான். அன்றியும் சென் றடையாத திருவுடையவனே எம்மிறைவன் எங்குஞ் செறித் த அவனைச் சென்றடைவதற்கு வழியேதும் இருத்தல் இய லுமோ? ஆகவே இறைவனையோ, இறைவனை அறியும் நெறி யையோ நாம் அறியோம். மேற்கு நாட்டுப் பல்கலைக்கழ கங்களிலே தத்துவ ஞானம் பயின்ற கலைஞானியர் சிலர் உண்மையறியும் தாகத்தினராய் உலகெலாம் திரிந்து சுவா மியிடம் வந்தனர். ஞானபண்டாரத்தை வெளவிக் கொள் ளும் எண்ணத்துடன், அறிவாயுதத்தை ஏந்தி, யுத்தசன் னத்தராய் நின்ற அவ்வெள்ளைக்காரர்களிடம் சுவாமி மேல் வருமாறு அருளினர். 'நேரடியாகப் போரிட்டால் அதுவராது. இயல்பான ஒப்படையே வேண்டுவது; நான் அறிவேன் என்ற எண்ணமும் ஒப்படைக்கப்படல் வேண்டும்.'

நாமறியோம் எனும் ஞானமலரின் மதுவனைய பாகம் மேல்வருவதாகும்;- நாம் பந்தமறும் பளிங்கனைய சித்து. இந்தத் தூய அறிவுநிலையை எந்த அழுக்கும் பற்றமாட் டாது. தந்தை, தாய், மைந்தர் ஆதிய சுற்றப்பற்றெதுவும் அதனைப் பற்றமாட்டா. ஊர் தேசம் முதலாய அபிமான

உணர்ச்சியொன்றும் அதற்கில்லை. சாதி சமயம் ஆதிய சங்கற்பங்களும் இல்லை. நாம் இந்த நாறுமுடலல்லர். நமக்கு மனமான பேயுமில்லை. அறிவு அறியாமையுமில்லை. நாம் நாமே நாமாக- அயலறியாத அந்தணராயிருக்கிறோம். தானை தன்னிலையில் தனித்திருக்கிறோம். யாதொன்றுமற்ற ஞானப்பெருவெளியிலே ஏதுமொன்றற நிற்கிறோம். நாம் ஏன் அறியோம் எனில் அறிவதற்கு ஒன்றுமில்லை யாதலால் நாம் அறியோம். இது அறிவேதுமற்ற சூனியநிலையன்று; நாம் அறிவென்று எண்ணியிருந்த அறியாமையாகிய ஞாதுரு ஞானத்தை இழந்து நிற்கும் நிலையே அது. இந்த ஞாதுரு ஞானமே எமதியல்பான மெய்ஞ்ஞான நிலையைத் திரையிட்டிருந்தது. திரையகன்றதும் எமது மெய்ஞ்ஞான நிலை விளக்கமாகிறது. அது அல்லும் பகலும் அறிவாக நிற்கும் உறங்காத பேருணர்வாகும். இதனையே சுவாமி நாமறியோம் எனும் தல்லறிவு என அருளினர்.

இம்மகா வாக்கியங்கள் நந்தனையிலே நூற்றுக்கு மேற்பட்ட இடங்களிலே விவரணமேதுமில்லாமல் தனி மந்திரங்களாகவே பொறிக்கப்பட்டுள்ளன. அவை விவரிக்க இயலாதவை;

"செப்ப முடியாத திரு தங்கமே தங்கம்
செல்லப்பன் திருவாக்குத் தங்கமே தங்கம்"

என்பது சுவாமி திருவாய்மொழி. அவை சாதனையிலே உணர்ந்துணர்ந்து இன்பத்தில் தேக்கும் அநுபூதி மொழிகளாகும்.

6694 C.C

*

தயவு செய்து பிழைகளைத் திருத்திக்கொண்டு நூலை வாசியுங்கள்.

பிழை திருத்தம்

பிழை	திருத்தம்	பக்கம்	வரி
பஞ்சாமிர்தம்	பஞ்சாமிர்தம்போல்	34	10
சிவயோகப்சு	சிவயோகப்பசு	34	17
திகத்திக்கும்	தித்திக்கும்	35	8
பேன்றதாக	போன்றதாக	36	25
ரை	வேரை	43	1
பார்க்கிருய்	பார்க்கிருய்	43	20
அன்றிறவு	அன்றிரவு	45	24
பக்குவமாசுப்	பக்குவமாகப்	59	5
திவருடி	திருவடி	106	16
என,தருமை	எனதருமை	107	2
சமைதுள்ள	சமைத்துள்ள	110	25
விடியற்க்காலை	விடியற்காலை	113	11
அன்பர்க்	அன்பர்	122	1
சேவல்களேபும்	சேவல்களேயும்	126	18
பேராபதது	போராபத்து	132	3
கேட்மதாகவும்	கேட்பதாகவும்	159	28
1918	1958	180	27
மானசிருமாக	மானசிகமாக	198	15
பக்திக்கும்	பக்திக்கு	202	2
சப்பாததி	சப்பாத்தி	226	28
பணியயே	பணியையே	245	1
பாருளாயுடைய	பொருளாயுடைய	272	33
புகுவ	புதுவ	272	33
எழுந்தருயுள்ளார்	எழுந்தருளியுள்ளார்	298	18